# சித்த மருத்துவ மணிகள்




பதிப்பாசிரியர்
முனைவர் டி. மகாலட்சுமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

# சித்த மருத்துவ மணிகள்


பதிப்பாசிரியர்

முனைவர் டி. மகாலட்சுமி

உதவி

டாக்டர் கெ. பழனிச்சாமி

ஆ. சுப்பையா

ம. வெண்ணிலா



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.பி.டி. வளாகம், தரமணி

சென்னை - 600 113.

# BIBLIO GRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **SIDDHA MARUTTUVA MANIGAL** |
| Editor | : | **Dr. T. Mahalakshmi,** M.A., M.Phil., Ph.D.,<br>International Institute of Tamil Studies,<br>Madras - 600 113. |
| Publisher | : | **International Institute of Tamil Studies,**<br>Madras - 600 113. |
| Publication Number | : | 238 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | December 1996 |
| Paper used | : | Cremove |
| Size of the Book | : | 21 x 14 cms |
| Printing Types Used | : | 10 point |
| Laser Typesetting by | : | **Shri Vignesh Prints**<br>No.158/5, Lake View Road<br>West Mambalam, Madras - 600 033.<br>Phone : 4848486 |
| Number of Pages | : | XI + 261 |
| Number of Copies | : | 2000 |
| Price | : | Rs.75/- |
| Printers | : | **Shri Vignesh Prints,** Ms-33.<br>Ph: 4848486 |
| Binding | : | **Shri Vignesh Prints,** Ms-33. |
| Artist | : | **K.V. Balaji** |
| Subject | : | Siddha Medicine |

வெள்ளிவிழா வெளியீடு

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி.வளாகம், அடையாறு, டி.டி.டி.ஐ. அஞ்சல்,
(தரமணி) சென்னை-600 0113.

முனைவர்: **ச.சு. இராமர் இளங்கோ**
இயக்குநர்


10.12.95

## அணிந்துரை

புத்தம் புதிய கலைகள் பஞ்ச பூதத்தின் செயல்கள் மிகுந்து வரும் இந்நவீன யுகத்தில் தமிழ்மொழி ஆழமும் அகலமும் தொன்மையும், இளமையுட் அருமையும் பெற்றுத் திகழ்கிறது. என்றுமுள தென்தமிழின் அறிவுப் புதையல்கள் இன்னும் உலகத்தார்க்கு முழுமையாகப் புலப்படுத்தப்படவில்லை. மறைந்து நிற்கும் இதன் புகழையும் திறத்தையும் வெளிக் கொணரும் புதையல் வேட்டையினை இந்நிறுவனத்தின் சுவடியியல் துறை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக இத்துறையின் அண்மைக் காலச் செயல்பாடுகள் அகமகிழ்ந்து பாராட்டுதற் குரியன. அருமையான பல் நூல்கள் இத்துறையின் வாயிலாகப் பதிப்பிக்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் இத்தகைய பணிகள் நடைபெற வேண்டும் என்றும், அதன் வழி தமிழர்களாலும், உலகத்தவர்களாலும் அறியப்படாத பல செய்திகள் அறிவிக்கப்பட வேண்டும் என்றும் விரும்புகிறேன்; வாழ்த்துகிறேன்.

'சித்த மருத்துவ மணிகள்' என்னும் இந்நூல் மருந்து, நோய், மருந்து செய்முறை இவற்றோடு பிற துறைகளான கணிதம், இலக்கியம், சோதிடம் ஆகியனவற்றையும் உள்ளடக்கியுள்ளது. மருத்துவர்கள் கரங்களிலும், இல்லந்தோறும் இருக்க வேண்டிய கையேடு போல் இந்நூல் அமைந்திருக்கிறது.

இந்நூல் நூலாக்கம் பெற பொருளுதவி நல்கிய **மூலிகைமணி** முனைவர் **க. வேங்கடேசன்** அவர்களை அகமகிழ்ந்து பாராட்டுகிறேன்.

சுவடித் துறையில் பொறுப்பாளராக இருந்து துறை சிறக்கப் பல்வேறு பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவதுடன் இந்நூல் வெளிவருவதற்குப் பல்லாற்றானும் உழைத்து, உடனிருப் போரை ஊக்குவித்து நூலாக்கம் பெறுவதற்குக் காரணமாக இருந்த

முனைவர் டி. மகாலட்சுமி அவர்களைப் பாராட்டுவதுடன் தொடர்ந்து இத்தகைய பணிகளில் ஈடுபட வேண்டுமென விழைகிறேன்.

இந்நூல் பதிப்பிற்கு உடனிருந்து உதவிய ம. வெண்ணிலா அவர்களையும் திரு.ஆ. சுப்பையா அவர்களையும் நன்றியுடன் பாராட்டுகிறேன்.

சித்த மருத்துவர் டாக்டர் கெ. பழனிச்சாமி அவர்களுக்கும் டாக்டர் லலிதாபாய் பழனிச்சாமி அவர்களுக்கும், வழக்கறிஞர் பால சீனிவாசன் அவர்களுக்கும் உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் நிறுவன வளர்ச்சிக்கும் பெரிதும் உதவிபுரிந்து வரும் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களையும், தமிழ் சிறக்கப் பாடுபடும் மாண்புமிகு ஆட்சிமொழி பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களையும், நிறுவன வளர்ச்சியில் ஈடுபாடு காட்டுகின்ற தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலாளர் திரு வை. பழனிச்சாமி அவர்களையும் இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூர்கிறேன். வெள்ளிவிழா வெளியீடாக இந்நூல் வெளிவருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இயக்குநர்

**Dr. க. வேங்கடேசன்** எம்.ஏ., பிஎச்.டி., ஆர்.எம்.பி.(சித்தா)
ஆசிரியர்: 'மூலிகைமணி'

# கருத்துரை

வெள்ளிவிழா காணும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழின் பல்கலைச் செல்வங்களை அவ்வப்போது தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு நல்கி வருகின்றது. அண்மையில் **முனைவர் இராமர் இளங்கோ** அவர்கள் இயக்குநராகப் பொறுப்பேற்றபின் **'மண் வாசனையுடன்'** ஆராய்ச்சி நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. குறிப்பாக, தமிழ் மண்ணில் தோன்றி வளர்ந்து ஈராயிரமாண்டுக் காலமாகத் தமிழ் மக்களை நலமுடன் வாழ வைத்துக் கொண்டிருக்கும் சித்த மருத்துவத்தின்பால் இந்த ஆராய்ச்சி அமைப்பு தன் கவனத்தைத் திருப்பியிருப்பது காலங்கருதிச் செயற்படும் அதன் திறனை வெளிப்படுத்துகிறது.

தமிழனின் அறிவியல் சொத்து, சித்த மருத்துவம்'. உலகால் அறியப்படாத இரகசியம் என்று தமிழில் ஒன்று இருக்குமேயானால் அது சித்த மருத்துவம் தான். இரகசியம் என்று சொல்லியே நம்முடைய முன்னோர்கள் மறைபொருளாக இந்தத் துறையை வைத்திருந்தனர். அதனாலேயே இது உலக அரங்கை எட்டவில்லை. நாற்பதாண்டுகளுக்கு முன்பு எமது தந்தையார் **வேலூர் டாக்டர் ஏ.ஆர். கண்ணப்பர்** அவர்கள் மருத்துவர் களிடையே இரகசியமாக இருந்த சித்த மருத்துவத்தை மக்கள் மன்றத்திற்குக் கொண்டுவர வேணடும் என்ற வேட்கையினால் அரும்பாடுபட்டு **'நம்நாட்டு மூலிகைகள்'** எனும் நூல்வழி சித்த மருத்துவத்தின் இரகசியங்களையெல்லாம் வீதிக்குக் கொண்டு வந்தார். அதற்குப்பின்னர்தான் இத்துறை வெளியுலகத்திற்கே வந்தது. அதே ஆர்வத்தின் உந்துதலால் 1964 ஆம் ஆண்டு சித்த மருத்துவத்தின் புகழ்பாட **'மூலிகைமணி'** எனும் மாத இதழினை அவர் தொடங்கி வைத்து, பன்னிரண்டு ஆண்டுக்காலம் விடாமுயற்சியுடன் நடத்தி வந்தார். அவருக்குப்பின் இந்தப் பணியை 1974 முதல் நான் ஏற்று இன்றுவரை தொடர்ந்து வருகிறேன். உலக அரங்கில் சித்த மருத்துவம் இன்று பேசப்படுகிறது என்றால் கண்ணப்பரின் அளப்பரிய அர்ப்பணிப்புகளே காரணமாகும்.

குறிப்பாக, சித்த மருத்துவம் முழுவதும் தமிழில் பாடல்களாக இருப்பதால், தமிழ்ப்புலமை பெரிதும் வேண்டப்படுகிறது. தமிழைத் தவிர்த்தால் சித்த மருத்துவத்தை அறியவோ ஆராயவோ இயலாது. இன்றைய சித்த மருத்துவ மாணவர்கள் தமிழில் புலமையின்றி இருப்பதால்தான் அவர்கள் சித்த மருத்துவத்தைப் பூரணமாக அறியமுடியாமல் திணறுகின்றனர். சித்த மருத்துவப் பட்டப்படிப்பில் **'தமிழ்மொழிப் பண்பாட்டுப் பிரிவு'** ஒன்றினை

முதல் இரண்டாண்டுகளுக்குப் பாடப்பகுதியாகச் சேர்ப்பது ஒன்றே இந்தக் குறையை நீக்க உரிய வழியாகும். 2000 ஆண்டுக்கால வரலாறு கொண்டுள்ள தமிழ் இலக்கியங்களிலும், பதிப்பிக்கப்படாத, தொகுக்கப்படாத ஏராளமான நாட்டுப்புறப் பாடல்களிலும், பழமொழிகளிலும் மக்களின் அன்றாடப் பழக்க வழக்கங்களிலும், நம்பிக்கைகளிலும் மரபுவழியாக சித்த மருத்துவம் இன்றும் தமிழ் மண்ணோடு இரண்டறக்கலந்து சீரிளமைத் திறனோடு வாழ்ந்து வருவதை எவரும் மறுக்கவியலாது.

விடுதலைக்குப்பின் அமைந்த இந்திய அரசும், மாநில அரசும் சித்த மருத்துவத்தை வளர்க்கத் தவறிவிட்ட காரணத்தால் ஆயுர்வேதம் வளர்ந்த அளவிற்குச் சித்த மருத்துவம் வளரவில்லை என்பது வருந்தத் தக்க செய்தியாகும். இந்த வருத்தத்தினைக் களையும் வகையில் அண்மையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆக்கப்பூர்வமாகச் சில செயல் திட்டங்களை அமைதியாக நிறைவேற்றி வருவது கண்டு பெருமையடை கிறேன். ஆண்டுதோறும் இந்த நிறுவனம் கோடை விடுமுறையில் 'சுவடியியல்' வகுப்புகளை நடத்தி அதில் மருத்துவம் தொடர்பான சுவடிகளைப் படியெடுத்து, கருத்தரங்கின் வாயிலாக அவற்றைத் தொகுத்து, பகுத்து, ஆய்ந்து, பதிப்பிக்கின்றது. சித்த மருத்துவத்தில் போதிய பாடநூல்கள் இல்லை என்ற குறையை இப்படிப்பட்ட பதிப்புப் பணிகள் நிச்சயம் போக்கும். அந்த வகையில் 1995 ஆம் ஆண்டு இந்நிறுவனச் சுவடிப் பிரிவின் பொறுப்பாளர் **முனைவர் டி. மகாலட்சுமி** அவர்கள் மெய்வருத்தம் பாராது, கண் துஞ்சாது சித்த மருத்துவம் தொடர்பான இந்தச் சுவடியைத் தேர்ந்தெடுத்து கருத்தரங்கின் வாயிலாக இதனைத் தொகுத்துப் பதிப்பித்துள்ளார்.

இந்நூல் இன்றைய சூழலில் சித்த மருத்துவக் கல்வித் துறைக்கு இன்றியமையாது தேவைப்படுவதாகும். இந்நூலினைப்பற்றிய கருத்தரங்கில் என்னை அழைத்து சிறப்புச் சொற்பொழி வாற்றுமாறு முனைவர் **மகாலட்சுமி** அவர்கள் என்னைக் கேட்டபோது, இத்துறையின் வளர்ச்சிக்கு நான் உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அந்தநேரம் நல்ல நேரம்! அப்போதுதான் என்னுடைய மூத்த மகள் **செல்வி. க.வே. அபிராமி** **'ஆனந்த விகடன்'** நடத்திய மாணவப் பத்திரிகையாளர்ப் போட்டியில் பங்கேற்று 3 பரிசுகளைப் பெற்றிருந்தாள். அதில் தனித் திறமைக்கான பரிசுத்தொகை ரூ.10,000/-ஐ என்னிடம் கொடுத்து, இந்தத் தொகையினைத் தாங்கள் விரும்பும் வகையில் சித்த மருத்துவத்திற்கு நிலையான பயன்பெறத்தக்க ஏதாவது ஒரு பணிக்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்றாள். ஏனென்றால், அவள் பயிலும் சித்த மருத்துவக் கல்லூரியும் இப்பரிசு பெற ஒரு காரணமாகும். எனவே, 'சித்த மருத்துவத்திற்குப்

பயன்படவேண்டும்' என்று அவளாக விரும்பி அளித்த இந்தத் தொகையை நான் அன்றைய விழாவிற்கு முன்நாள் பெற்றிருந்தேன். இந்த விழாவில் முனைவர் மகாலட்சுமி உதவி கேட்டதும், 'சித்த மருத்துவ மணிகள்' எனும் இந்த நூலினை வெளியிட இந்தத் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளலாமே என்று கருதி, இந்நூலை வெளியிட உதவி செய்வதாக வாக்களித்தேன். சுடச்சுட கைவசமிருந்த அந்த ஏட்டினை முனைவர் மகாலட்சுமி திருத்தி, தட்டச்சு செய்து, 15 நாட்களில் கொண்டுவந்து என்னிடம் கொடுத்து, 'ஐயா இனி நூலை வெளியிடுவது உங்களுடைய பொறுப்பு' என்று சொல்லிவிட்டார். முனைவர் மகாலட்சுமி மாதிரி சித்த மருத்துவத்துறைக்கு நான்கு பேர் அமைந்துவிட்டால், ஆண்டுக்கு 10 நூல்களைக் கொண்டு வரலாம். அவ்வளவு ஆர்வம். சுறுசுறுப்பு. அதற்கும் மேலாக அவருடைய இயக்குநர் முனைவர் இராமர் இளங்கோ அவர்கள், தட்டச்சுப் பிரதியைக் கொடுத்த 16 ஆவது நாளிலிருந்து தினமும் தொலைபேசியில் 'என்ன தம்பி, நூலைப் படித்து முடித்துவிட்டீர்களா? எப்போது அச்சுக்கு அனுப்பப்போகிறீர்கள்?'' என்று கேட்டுக் கொண்டேயிருந்தார்.

இந்த நூலினை முழுவதுமாகப் படித்துப் பார்த்த நான் சில பகுதிகளை நீக்குவது நல்லது என்ற கருத்தில், சற்றுக் காலதாமதம் செய்தேன். அதுபற்றி முனைவர் மகாலட்சுமி அவர்களிடம் விவாதித்தேன். முனைவர் மகாலட்சுமி மிகவும் திறமைசாலி. 'ஐயா, மூலநூலில் நாம் கை வைப்பது பீடன்று; அதனால் அப்படியே வெளியிட்டுவிடுங்கள்; அறிஞர் பெருமக்கள் படித்து, அதற்குப் பின் அவர்கள் அளிக்கும் கருத்துக்களைத் தொகுத்து, இரண்டாம் பதிப்பில் சேர்த்து வெளியிடுவதுதான் நல்லது' என்று சமாளித்துவிட்டார். அதனால் இந்நூலில் 'என் கைவரிசையைக் காட்ட' இயலவில்லை. மூல நூல் அப்படியே பதிப்பிக்கப் படுகின்றது.

இந்நூலில் கூறப்பட்டுள்ள செய்முறைகளில் சில ஏற்கனவே பல்வேறு நூல்களில் கூறப்பட்டுள்ளன. சில செய்முறைகள் சித்த மருத்துவ மரபுகளுக்கு மாறுபட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக 281 ஆவது பாடலில் கூறப்பட்டுள்ள 'நாகசர்ப்ப கண்டத் தைலம்' மிகக் கடும் நஞ்சுமயமான செய்முறையாகும். சித்த மருத்துவத்தில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களுக்கே இது சிக்கலான செய்முறை. இந்த ஒரு செய்முறையைப் புரிந்து, அதனைச் செயல்படுத்துவதே அரிய செயலாகும். மேலும், பாமர மக்களுக்கு இது புரியாத புதிராகும். இப்படிப்பட்ட செய்முறைகளைக் காலத்தின் போக்குக் கருதி, மேற்கொள்ளாதிருப்பதே நல்லது என்பது என் கருத்து, இப்படிப்பட்ட செய்முறைகள் சில தவிர்க்க முடியாமல் இடம்பெற்றிருப்பதை வாசகர்கள் கருத்தில் கொண்டு எளிய

செய்முறைகளைத் தேர்ந்த சித்த மருத்துவர்களின் மேற்பார்வையில் பின்பற்றுவது நல்லது. இரசித்துப் படிப்பதற்கு இது இலக்கிய நூல் அல்ல... நோயினால் வாடி வதங்கும் மக்களுக்கு அதிலிருந்து விடுபட வழிகாட்டும் நுட்பமான செய்முறைகளைக் கொண்ட ஓர் அரிய ஆராய்ச்சி நூலாகும். இது முதற் பதிப்பு என்பதால், மூல நூலாக இதனைப் பதிப்பித்துள்ளனர். எதிர்கால சித்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் இந்நூலினை ஆய்ந்து, பழையன கழித்து, நல்லனவற்றை ஆய்ந்து பதிப்பிக்க வேண்டுமென விரும்புகிறேன்.

இந்நூலில் கூறப்பட்டுள்ள செய்முறைகளில் 'செம்பாகம்' நேரடிப் பயன்தரத் தக்கவை மற்றொரு பாதி ஆராய்ச்சிக்கும் அனுபவத்திற்கும் உரியவையாகும். எனவே, இதனைப் படிப்பதற்குரிய ஒரு நூலாகக் கொள்வதுடன், பயன்படுத்தத்தக்க வகையில் மேலும் தரப்படுத்த சித்த மருத்துவ ஆராய்ச்சி மாணவர்கள் இந்நூலினைக்... 'கையேடாகப்' பயன்படுத்தலாம். இந்நூலினைப் போன்று இன்னும் பதிப்பிக்கப்படாத பல நூல்களை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கொண்டுவர வேண்டும். ஏனென்றால், **தமிழுக்குக் கிடைத்த அறிவியல் சொத்து சித்த மருத்துவம்**. இந்தச் சொத்து அரும்புதையலாகத் தமிழ்ப் பாடல்களில்தான் புதைந்து கிடக்கின்றது. பள்ளி, கல்லூரி மற்றும் தனியார் அமைப்புகள் தமிழை இலக்கிய ஆராய்ச்சி என்ற அளவிலேயே நிறுத்தியுள்ளன. அதற்கும் மேலாக, மறைந்துள்ள இத்தகு சித்த மருத்துவப் பாடல்களை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் போன்ற அமைப்புகள்தான் வல்லுநர்களின் துணையுடன் பதிப்பிக்க முடியும். இந்த அரிய பணியை ஆற்றிவரும் இப்போது இயக்குநராகப் பொறுப்பேற்றிருக்கும் **முனைவர் ச. சு. இராமர் இளங்கோ** அவர்களுக்கும், மற்றும் முனைவர் டி. மகாலட்சுமி அவர்களுக்கும், இந்நூல் சிறப்புற உருவாகக் காரணமான அனைவருக்கும் போற்றுதலையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்வரும் ஜூலை 19ஆம் தேதி எமது தந்தையார் வேலூர் **Dr. A.R.** கண்ணப்பர் அவர்களின் 75 ஆவது ஆண்டு பிறந்தநாள் நினைவாக, இந்நூலினை அச்சிட்டுத்தரும் பணியை உவகையுடன் எமக்களித்த இயக்குனர் முனைவர் இராமர் இளங்கோ அவர்கட்கு நெஞ்சார்ந்த நன்றி. வணக்கம்

என்றும் மூலிகை மணத்துடன்
**டாக்டர். க. வேங்கடேசன்**

25-12-95
சென்னை-17.

# முன்னுரை

சீரிளமைத் திறத்தோடு விளங்கும் நம் செந்தமிழ் மொழிக்கு ஆய்வுகள்வழி அணி சேர்த்து வருவது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

பாங்குடன் வளர்ந்து வரும் இந்நிறுவனத்தில் பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்கது சுவடியியல் துறை. இத்துறையின் பன்முகச் செயல்பாடுகளால் நிறுவனம் மேலும் மெருகு கூடியுள்ளதென்றால் மிகையாகாது.

ஆண்டுதோறும் மாணாக்கர்களுக்குச் சுவடியில் பயிற்சி கொடுத்து வருவதோடு மூன்று குறுங்காலப் பயிலரங்கங்களை நடத்தி நூற்றுக்கும் மேற்பட்டவர்களைச் சுவடியில் திறனுடையவர்களாக்கியுள்ளது இத்துறை.

தமிழின் அழிந்து போன நூல்கள் தவிர இன்னும் வெளிப்படாமல் மறைந்து கிடப்பவை ஏராளம். இவற்றை வெளிக் கொணர்வதன் மூலம் அன்னை மணித்தமிழை அனைத்துத் துறைகளிலும் அரியணையில் ஏற்றலாம். இந்த நோக்கத்தோடு பல்வேறு சுவடியியல் திறமுடையோரை இத்துறை உருவாக்கி வருகிறது. சுவடிகளைப் பதிப்பித்தல் என்பது புதியதாகப் படைத்தல் போன்றதேயாகும். இன்னும் சொல்லப் புகுந்தால் அதனினும் சிக்கல்கள் நிறைந்த மேம்பட்ட பணியிதுவே. இவ்வகையில் அண்மைக் காலமாகப் பல்வேறு நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

தரணியின் தலை சிறந்த மருத்துவ முறைகளுள் ஒன்று சித்த மருத்துவம். இம்மருத்துவ முறை இடையில் மறைக்கப்பட்டு இருந்தாலும் தற்காலத்தில் அதன் மேன்மையினை உணர்ந்து முறையான வகையில் மருத்துவமனைகளில் பின்பற்றப்பட்டு வருகிறது. அத்தகைய மருத்துவத்திற்குத் துணைபுரியும் வகையில் தொன்மையான பல சுவடிகள் பதிப்பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பதிப்பு முயற்சிகளுள் ஒன்றாக மலர்வதே இந்நூல் மலர்.

சித்த மருத்துவத் துறையில் பெரும் புகழ் பெற்று விளங்கும் முனைவர் க.வேங்கடேசன் அவர்கள் சித்த மருத்துவத் துறைக்கு ஆற்றி வரும் பணிகள் அளவிடற்கரியன. இம் மருத்துவ முறையின் சிறப்பினை உலகோர் அறியும் வண்ணம் ஆக்கப் பணிகளில் ஈடுபட்டு வருவதுடன், 'மூலிகை மணி' என்ற பத்திரிகையை நடத்தி வருகிறார். குறுகிய கால, கோடைக் காலப் பயிலரங்குகளின் உரையாளராகவும், நிறைவு விழாவின் சிறப்பாளராகவும் நிறுவனம் அழைத்தபோது, பங்கேற்றதோடு மட்டுமல்லாமல், பயில்வோருக்கு மதிய உணவு வழங்கியதும், இந்நூல் வெளிவருவதற்கு முழுமையான நிதியுதவியும் வழங்கத் தாமாகவே முன்வந்த இவர்களின் செயல் போற்றிப் பாராட்டுதற்குரியது.

சித்த மருத்துவத் துறையின் வளர்ச்சியில் ஈடுபட்டுச் செயலாற்று பவர்களை ஆர்வமுடன் ஊக்குவிக்கும் இயல்புடையவர். எங்களது நூலாக்கப் பணிக்கு மனமுவந்து பொருளுதவி வழங்கி இருக்கிறார். ஒவ்வொரு தமிழரும் நினைந்து போற்றற்குரிய இச்சிறப்பு மிகு பண்பினை நினைந்து வாழ்த்துவதுடன், தொடர்ந்து எம் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு, சுவடித் துறையும், சித்த மருத்துவத் துறையும் ஒருங்கே பயன்பெறும் வகையில் செயலாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

நிறுவனத்தின் வளர்ச்சி கருதி துறைகள் தோறும் மேற்கொள்ளும் செயல்பாடாயினும், ஆக்கமும், ஊக்கமும் நல்கி உறுதுணையாக விளங்கும் இயக்குநர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சித்த மருத்துவ வல்லுநர்களான டாக்டர் கெ.பழனிச்சாமி அவர்களுக்கும் டாக்டர் லலிதாபாய் பழனிச்சாமி அவர்களுக்கும் மூல நூலுக்குப் பொருள் எழுத உதவி புரிந்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு தொடர்ந்து இந்நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு ஆக்கப் பணிகளில் ஈடுபட்டு, சுவடித்துறை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நிற்க வேண்டுமென விரும்புகிறேன்.

நூலின் சிறப்புக் கருதி இப்பதிப்பு சிறப்புப் பெற பல்லாற்றானும் உடன் இருந்து உதவிய நண்பர் வழக்கறிஞர் பாலசீனிவாசன் அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலின் பதிப்பிற்கு உடனிருந்து பணிபுரிந்த சுவடியியல் ஆய்வு மாணவரும், சுவடியியல் பட்டம் பெற்றவருமான திரு ஆ.சுப்பையா அவர்களும், பட்டய வகுப்பு மாணவி ம.வெண்ணிலா அவர்களும் எனது பாராட்டுக்குரியவர்கள்.

எங்களோடு இணைந்து சுவடியினைப் படியெடுக்க உதவி புரிந்த மாணவர் அ. பிச்சுமணி, வே.இராமையா, மு.யாஸ்மினா, செல்வி வெண்தாமரைச் செல்வி, செல்வி பிரதிபா, கௌரி, செல்வி மு.ஜெயலட்சுமி ஆகியோருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூல நூலினை அச்சுக்குச் செல்லும் வகையில் அன்போடு தட்டச்சு செய்து உதவிய முனைவர் வே.நெடுஞ்செழியன் அவர்களுக்கும், தெளிவான முறையில் ஒளி அச்சுக்கோர்வை செய்து (எழுத்து) தந்த ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ் நிறுவனத்தாருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒத்துழைப்பு நல்கிய அனைவரும் கோடைக்காலச் சுவடிப் பயிலரங்கில் பங்கேற்றவர்கள் என்பதில் பெருமை கொள்கிறேன்.

பழந்தமிழ்ச் சுவடிகளை வைத்திருப்போர் எங்களது நிறுவனத்திற்கு வழங்கி, அவற்றை நூலாகப் பதிப்பிக்கும் வாய்ப்பினை எங்களுக்கு நல்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**டி.மகாலட்சுமி**

# பொருளடக்கம்

பக்கம்

**அணிந்துரை** . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . iii

**கருத்துரை** . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . v

**முன்னுரை** . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ix

**பதிப்புரை** . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 1

**நூலாய்வு** . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 15

சித்த மருத்துவம் . . . . . . . . . . . . . . . . . . . . 15

நூல் நுவலும் செய்தி, . . . . . . . . . . . . . . . . . . 27

நூல் நடையும் நயமும் . . . . . . . . . . . . . . . . . . 29

**மூலமும் பொருளும்** . . . . . . . . . . . . . . . . . . . . . 58

பொருள் முறை அட்டவணை . . . . . . . . . . . . . . . 218

செய்யுள் முதற்குறிப்பகராதி. . . . . . . . . . . . . . . 220

சொல்லடைவு . . . . . . . . . . . . . . . . . . . . . . . 226

அருஞ்சொற் பொருள் . . . . . . . . . . . . . . . . . . 247

விளக்கக் குறிப்பு . . . . . . . . . . . . . . . . . . . . 251

அளவு - காலம் . . . . . . . . . . . . . . . . . . . . . 258

துணை நூற்பட்டியல் . . . . . . . . . . . . . . . . . . 260

# பதிப்புரை

இடம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சுவடித்துறைச் சார்ந்த நூலகத்தில் '73' என்ற எண் இடப்பட்ட சுவடிக் கட்டில் '159' ஏடுகள் உள்ளன. அவற்றின் முதல் '62' ஏடுகளில் 'குணவாகடம்' என்ற பெயரில் இருந்த நூல், அச்சாகி நூலாகப் பதிப்பிக்கப்பட்டு விட்டது. '62' ஆவது ஏட்டின் பின்புறத்தில் ஆறாவது வரியிலிருந்து பின்னர் உள்ள '159' ஆவது ஏட்டின் இறுதிவரையிலான பகுதியே இந்நூலாக அச்சிடப்படுகிறது (159-62=97).

நூல் பெயர்

சில மருத்துவ நூல்களிலிருந்து இந்நூல் தொகுக்கப்பட்டதாக அமைவதாலும், இதற்கென ஒரு பெயர் ஆசிரியரால் இடப்படாததாலும் இந்நூலுக்குச் 'சித்த மருத்துவ மணிகள்' என்று பெயர் இடப்பட்டுள்ளது. மாலை என்பது நல்ல மணிகளின் சேர்க்கை. இந்நூல் சித்த மருத்துவம் குறித்த செய்திகளின் தொகுப்பாக அமைவதால் இப்பெயர் இடப்பெற்றது (கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் திரிகடுகம், நான்மணிக்கடிகை ஆகியவற்றுக்கு உரையெழுதியபோது முறையே 'மும்மணிகள்', 'நான்மணிகள்' என்று பெயர் இட்டமை ஒப்பு நோக்கத்தக்கது).

நூலும் எண்களும்

ஒரு நூல் சிறப்பாக அமைந்து படிப்போர் தெளிவுபெற நூலின்கண் கூறப்பெற்ற செய்திகள் பாடல்களாகவோ உரைநடையாயின் பத்திகளாகவோ பிரிக்கப்படுவது சிறப்பு. இந்நூலின்கண் கூறப்பட்டுள்ளவை பெரும்பாலும் பாடல்களாயும் மிகச்சில நெடும்பாடல்களாயும் ஒருசில உரைநடைகளாயும் எழுதப் பெற்றுள்ளமையால் சுவடியில் காணும் வண்ணமே பிரிக்கப்பட்டு அவற்றிற்கு ஒன்று முதல் 510 வரை தொடரெண் தரப்பட்டுள்ளன.

புற அமைப்பு

சுவடியின் இருபுறமும் மூங்கில் சட்டம் உள்ளது. ஏடுகள் நாட்டுப் பனை வகையைச் சார்ந்தவை. சுவடியின் நீளம் 37.5 செ.மீ., அகலம் 3 செ.மீ. பெரிய எழுத்துக்கள் உள்ள ஏட்டுப் பகுதிகளில் 7 வரிகளும், சிறிய எழுத்துக்கள் கொண்ட பகுதிகளில் 8 வரிகளும் உள்ளன.

சுவடியின் நீளம் அதிகமாக இருப்பதால் நன்றாகக் கட்டி வைத்தற்கு ஏற்ப இரண்டு துளைகள் உள்ளன. ஏடுகள் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக ஓரப்பகுதிகள் தேய்ந்தும் சில இடங்கள் உடைந்தும் உள்ளன. இடையிடையே செல்லரிக்கப்பட்டு எழுத்துகள் சிதைந்த நிலையிலும் உள்ளன. ஏடுகளின் நடுப்பகுதிகளில் வெடிப்புகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இக்குறைபாடுகளினால் சுவடியில் சில பகுதிகள் படியெடுக்க முடியாத நிலையிலும், மிகவும் மோசமான நிலையிலும் உள்ளன.

அக அமைப்பு

பல நூல்களிலிருந்து பாடல்களை எடுத்துத் தொகுத்து எழுதியுள்ளதால் நூல் தொடங்குமிடத்தில் நூல் பெயர் சுட்டப்பெறவில்லை. 'குணவாகடம்' என்ற நூலைத் தொடர்ந்து அமையும் இந்நூலில் காப்புப் பாடல்கள், கடவுள் வாழ்த்து ஆகியன இல்லை. இருந்த போதிலும் இறைவனைத் துணை நிறுத்தி,

''தவழமலை ஆண்டவன் பாதம் போற்றி
வெற்றிவேல் உற்ற துணை
சொக்கர் துணை
காமாட்சி அம்மன் பாதமே துணை''

என்று நூல் தொடங்கப்படுகிறது.

இதனையடுத்து 'மலசலம் கட்டுப்பட்டதற்கு மருந்து' என்ற உரைநடைப் பகுதி தொடங்குகிறது. அதன்பின் பாடல்கள் தொடர்ச்சியாக எழுதப்பட்டுள்ளன.

ஏட்டின் இடதுபக்கத்திலும் வலது பக்கத்திலும் இடைவெளி உள்ளது. இடதுபக்க இடைவெளிகளில் ஓரிரு இடங்களில் 'அரி ஓம்' 'நன்றாக', 'அரிஓம்' 'நன்றாக' 'குரு வாழ்க' என்ற சொற்றொடர்கள் காணப் படுகின்றன.

இடதுபக்க இடைவெளியில் உட்தலைப்புகள் இடம் பெற்றுள்ளன. சொற்கள் இடைவெளியின்றித் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன.

எழுத்தமைப்பு

1. ஏடு எழுதியோரின் மொழியறிவுக் குறைபாட்டினால் எழுத்துப் பிழைகள் மிகுதியாக உள்ளன.

2. நூலில் ஒரேவகையான கையெழுத்து இருந்த போதிலும் எழுத்துக்கள் தெளிவில்லாமல் பலவிடங்களில் கிறுக்கல்களாக எழுதப்பட்டுள்ளன.

3. சுவடியின் இறுதிப் பகுதியிலுள்ள எழுத்துக்கள் சிறியதாகவும் மிகவும் கிறுக்கல்களாகவும் எழுதப்பட்டுள்ளதால் சிலவிடங்களில் கூர்ந்து நோக்கியே எழுத்துக்களை அறியவேண்டியுள்ளது.

4. தவறாக எழுதப்பட்ட எழுத்துக்களும், சொற்களும், தொடர்களும் அடிக்கப்பட்டு மேலே, கீழே, அருகில் என்றவாறு சரியான எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன.

அ. பிழையை அடித்து அருகில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது (26).

ஆ. தவறாக எழுதியதை அடித்து அதன் மீதே திருத்தி எழுதப்பட்டுள்ளது (4).

5. விடுபட்ட எழுத்துக்கள் நேர்கீழாகவோ (44), நேர்மேலாகவோ எழுதப்பட்டுள்ளன (27).

6. ஒற்றெழுத்துக்கள் புள்ளியிடப் பெறாமல் உள்ளன.

7. உயிர் எழுத்துக்களிலும், உயிர்மெய் எழுத்துக்களிலும் குறில் நெடில் வேறுபாடு பேணப்படவில்லை.

**சுவடியின் காலமும் மூலமும்**

சுவடியின் காலத்தைப் பொறுத்தவரை ஏடுகளின் அமைப்பைக் கொண்டு இது இன்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு உட்பட்டது எனக் கொள்ளலாம். ஆயின் அதில் கூறப்பட்டுள்ள செய்திகள் அதற்கும் முந்தைய 2, 3 நூற்றாண்டுகள் கொண்டதாக அமைந்துள்ளது எனலாம். நூல் எழுதப் பெற்ற காலம் குறிக்கப் பெறாமையால் காலத்தை அறுதியிட்டுக் கூறுதல் இயலாது. ஆயினும் முன்பு பதிப்பிக்கப்பெற்ற இச்சுவடியில், முன்பகுதியான 'குணவாகடம்' என்ற நூலின் பதிப்பாசிரியர் சுவடியின் காலத்தைக் கணக்கிடுகின்றபோது "குரோதன வருடம் மார்கழி மாதம் 5ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்ற சுவடியின் இறுதிக் குறிப்பை வைத்துக் கொண்டு இச்சுவடி 1925ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20ஆம் தேதி எழுதி முடிக்கப் பெற்றது என்பது பெறப்படுகிறது" (குணவாகடம், பக்.26), என்று குறிப்பிடுவதிலிருந்து அதைத் தொடர்ந்து வரும் இச்சுவடியும் அதையொட்டிய காலத்தைச் சேர்ந்தது எனக் கொள்ளலாம்.

இந்நூல் மூலநூல்தானா என்று நோக்குமிடத்து இந்நூல் முழுமை பெறாதிருத்தலே இது மூலநூல் அல்ல என்பதைக் காட்டுகிறது. தவிர இது மூலநூல்களையோ வழி நூல்களையோ பார்த்து எழுதப் பெற்றிருக்கலாம். மேலும், இந்நூலில் கூறப்பெற்றுள்ள செய்திகள் ஒன்றிரண்டு பட்டறிவின் பாற்பட்ட செய்திகளாயும், வாய்மொழி போன்று அமைந்திருத்தலாலும், பலதரப்பட்ட செய்திகளின் தொகுப்பாக இந்நூல் அமைவதாலும் இது மூலச்சுவடியன்று என்று தெளியலாம். இச்சுவடியை எழுதியவர் யார் என்ற குறிப்பு எதுவும் சுவடியில் காணப்பெறவில்லை.

**பாடல்**

உரைநடை தவிர்த்த செய்யுள் நடையிலான இந்நூலில் பெரும்பாலும் பாக்கள் எண்சீர், அறுசீர் விருத்தங்களாக அமைகின்றன. இடையிடையே சில நெடும்பாடல்களும் வருகின்றன. சில எழுசீர் விருத்தங்களும், சில அகவல்களும் சில கலிவிருத்தப்பாக்களும் காணப்படுகின்றன. குறிப்பிட்ட பாடல்கள் சில அகவல்பாக்களையே சேர்ந்தன என்ற குறிப்புகளும் காணப்படுகின்றன.

**கற்றாழை எண்ணெய் - அகவல் (280)**

அசை, சீர், அடி என்ற பாகுபாடுகள் இன்றி, தொடர்ந்து எழுதப்பெற்ற பாடல்களின் இறுதியில் எண்கள் கொடுக்கப்படும் போது எண்களின் இருபுறமும் உகஉ, ௨க௨ என்ற வகையில் குறியீடுகள் காணப்படுகின்றன. பாடல்களில் முன்தரப்பட்டுள்ள தலைப்புகளை

வேறுப்படுத்திக் காட்டும் வகையில் தலைப்பை அடுத்து இத்தகைய குறியீடுகள் இடப்பட்டுள்ளன.

பாடல்களில் அடிபிரியும் இடம், அடி மடங்குமிடம் ஆகிய இடங்களில் சிறுகோடு காணப்படுகிறது. சில இடங்களில் இக்குறியீடு இடப்படவில்லை. ஒருசில இடங்களில் தவறாக இடப்பட்டுள்ளது. அடி மடங்கும்போது ஒற்றெழுத்தினை அடுத்து இடப்பட வேண்டிய இக்கோடு ஒற்றிற்கு முன்பாகத் தவறாக இடப்பட்டுள்ளது.

**போல-ச சட்டமாய்** *(41)* போலச்-சட்டமாய் சில இடங்களில் அடிமடங்கும்போது தேவையற்ற வகையில் ஒற்று, குறியீட்டைத் தொடர்ந்து வந்துள்ளது.

வந்தால் - ச் சொன்னவை (60) (பிழை)
வந்தால் - சொன்னவை

இச்சுவடியில், நான்கடிகள் கொண்ட பாடல்கள் சிலவற்றில், அடிகள் மூன்றாகக் குறைந்தோ *(404, 484)*, ஐந்தும், அதற்கும் மேல் மிகுந்தோ *(256, 344)* காணப்படுகின்றன.

நான்கு அடிகளில் முடிய வேண்டிய 65ஆம் பாடல் மூன்று அடிகளில் முடிவு பெற்ற போதிலும் அப்பாடல் தரும் பொருளில் குறையேதும் காணப்படவில்லை. இப்பாடலைச் சரிச்செய்ய 'அகத்தியர் நாடி' என்ற நூலிலுள்ள பாடலுடன் ஒப்புநோக்கும் போது, அப்பாடலிலும் மூன்று அடிகளில் பொருள் முற்றுப் பெறுவதாயினும், 'கானமா முனிவர் சொன்ன காரிகை வேத நூலே' என்ற நான்கடியுடன் பாடல் முடிவு பெறுகின்றது.

பிறிதொரு பாடலில் (2) மூன்றாவது அடி விடுபட்டுள்ளது. பாடலில் அமைந்துவரும் எதுகையும் பாடலின் முடிவும் இதைத் தெளிவுபடுத்துகின்றன.

இன்னும் சில பாடல்களில் *(333, 341)* இரண்டாமடிலேயே பொருள் முற்றுப் பெறுகின்றன. எனினும், இது தொடர்பான வேறு செய்திகளோ, யாப்பமைதி கருதி அமைந்த அடிகளோ இடம் பெற்றிருக்க வேண்டுமெனக் கருதத் தோன்றுகிறது. இப்பாடல்களில் சீர்கள் ஒத்துவரா நிலையும் காணப்படுகின்றது. மேற்சொன்ன அடிக்குறைவுகள், பாடலின் பொருள் தொடர்பான செய்திகள் அறியப்படாததாலோ, படியெடுத்தவரின் அனுபவக் குறைவாலோ, கவனக்குறைவாலோ, மடித்தனத்தாலோ ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளதெனத் தெளியலாம்.

அடி மிகுதல்

முறையாக அமைந்துள்ள 176ஆம் பாடலில் இடைச்செருகலாக 'இதல்லாமல் பிட்டவியல் பாவில் சுத்தி' என்ற அடி நுழைக்கப்பட்டிருத்தலைப் பாடலின் அமைப்புத் தெளிவாகக் காட்டுகிறது.

69ஆம் பாடலில் பயின்று வந்த முதல் நான்கடிகளில் முதல் சீர்களான 'நோக்கு, மூக்கு, நாக்கு, ஆக்கு' என்பனவற்றை அடுத்து வந்துள்ள 'அயம்பித்' என்று தொடங்கும் 5ஆவது அடி மிகுந்திருத்தலை நன்கு அறிய முடிகிறது.

256ஆம் பாடலில் 'கடிதாய், வடிதாய், குடித்தால், எடிதாய், கடிதாய்' என்று எதுகைகள் ஒத்து வருவதோடு பொருளும் இடர்ப்பாடில்லாமல் தொடர்ந்து வருவதாக அமைந்துள்ளது. படிப்பவர்கள் இப்பாடலைப் பார்க்குமிடத்து, அடிகளின் எண்ணிக்கையில் ஒன்று மிகுந்திருத்தலை அறியினும், அது எவ்வடி என்பதை அறிய முடியாததாக அமைந்துள்ளது. இருப்பினும் 'குடித்தால்' என்பதில் ஒரு மாற்றம் தெரிகிறது.

சில பாடல்களை நோக்குமிடத்து, இரு பாடல்களை ஒன்றாக்கியது போல் தோன்றுகிறது (484 வது பாடலில் 7 அடிகள் காணப்படுதல்).

மேற்கூறப்பட்ட அடிமிகுதல்கள், அனுபவங்களை இடைச்செறுகளாக இணைத்ததாலும், இரு பாடல்களை ஒன்றாக்கிய குழப்பத்தாலும் நேர்ந்துள்ளது எனக் கொள்ளலாம்.

அடிகளைப் போலவே சில பாடல்களில் சீர்கள் குறைந்தும் (257, 264, 271, 287, 324, 458, 464), மிகுந்தும் (231, 233, 289, 300, 302, 312, 335, 337, 339) வருகின்றன.

மேற்கூறப்பட்டவற்றை நோக்குமிடத்து, பொருளும் பாடலும் முற்றுப் பெறாமலும், பாடல் முற்றுப் பெற்றிருப்பினும் இடையே செய்திகள் (சொற்கள்) விடுபட்டும், பொருள் முற்றுப் பெற்ற போதிலும் அடிகள் குறைந்தும் காணப்படுவதை அறிய முடிகின்றது.

மூல நூல்களில் யாப்பு பெரும்பாலும் சரியாய் அமைந்து, அவை வழிநூல்களாக அமையும்போது பல யாப்புக் குறைபாடுகள் தோன்றுகின்றன என்பதை, இந்நூலில் அமையும் பல பாடல்களை நோக்குமிடத்து உணர முடிகின்றது.

### பாடல்களுக்கு எண் இடல்

சுவடியில் பாடல்களின் இறுதியில் தொடர்ந்து எண்கள் இடப்பட்டிருப்பினும், சில பாடல்களுக்கு எண் இடப்படவில்லை (250, 345, 354). அவ்வகைப் பாடல்கள் அனைத்தும் கடவுள் வாழ்த்துப் பாடல்களாக உள்ளன. 18ஆம் பாடல் இறைவணக்கப் பாடலாயிருப்பினும் எண் இடப்பட்டுள்ளது. நூல் நுவலும் செய்தியைக் கூறும் 407ஆம் பாடலுக்கும், விடுகதைப் பாடல்களான 408, 409ஆம் பாடல்களுக்கும் சுவடியில் எண்கள் இடப்படவில்லை.

முதல் மாதம் தொடங்கி பத்து மாதங்கள் முடியும் வரையிலான கரு உற்பத்தி தொடர்பான செய்தி கொண்ட பத்துப் பாடல்களுக்கும் (245-254) எண்கள் தரப்படவில்லை.

எண் தரப்படாதிருத்தலைப் போல, எண் விடுபட்டு, ஒரே எண் இருமுறை இடப்பெற்றுக் காணப்படுகின்றன. ஆனால் தொடர் எண் சரியாக உள்ளது (12ஐ அடுத்து 13 என்பதற்குப் பதிலாக 12 எனவும் தொடர்ந்து 14 எனவும் இடப்பெற்றுள்ளது). இருமுறை பயன்படுத்தப்பட்ட ஒரே எண்ணைத் தொடர்ந்து அடுத்து வரும் பாடலின் தொடர் எண் சரிப்படுத்தப்படாமல் உள்ளது. இவை அனைத்தும் இப்பதிப்பில் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளன.

**உட்தலைப்பு**

ஏட்டின் இடதுபுற ஓரத்தில் உட்தலைப்புகள் எழுதப் பெற்றுள்ளன. இத்தலைப்புகள் ஏட்டினுள் தரப்பட்டுள்ள பாடல்களுக்கு முறையாகப் பொருந்தி வருகின்றன. இங்ஙனம் அமைந்த தலைப்பில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுவதால் அவை பதிப்பில் ஒழுங்கு படுத்தப் பெற்றுள்ளன.

1. இடது பக்க ஓரத்தில் தலைப்புகள் இருக்க, ஏட்டின் உட்பகுதியில் பாடலுக்குரிய தலைப்புகள் இல்லாதிருக்கின்றன.
2. ஏட்டின் உட்பகுதியில் பாடல்களுக்குத் தலைப்புகள் இருந்து, இடதுபுற ஓரத்தில் தலைப்புகள் தரப்படாமல் இருக்கின்றன.
3. பாடல்கள் தலைப்புகள் இன்றி வருகின்றன. எனவே புதிய தலைப்புகள் தரப்பட்டுள்ளன. ***மரணக் குறிகள்*** (7-9).
4. சில பாடல்களுக்குத் தரப்பட்டுள்ள தலைப்புகள் தவறாக இருப்பதால் பொருத்தமான தலைப்புகள் தரப்பட்டன.

| பிழை | திருத்தம் |
|---|---|
| ***அவுசத சத்திர சுத்தி (175)*** | ***பாதரச சுத்தி*** |
| ***என்றமளிக சன்னியின் குணம் (492)*** | ***கண்டகு சன்னியின் குணம்*** |

5. ஒன்றிற்குக் கொடுக்கப்பட்ட தலைப்பை இன்னொன்றிற்குரியதாக எழுதிவிடுதல் (122ஆம் பாடலுக்குக் கொடுக்கப்பட்டிருந்த தலைப்பு 124 ஆம் பாடலுக்குரியது; 135இன் தலைப்பு 136க்கும், 289இன் தலைப்பு 290க்கும் உரியன).
6. சில தலைப்புகள் சுருக்கமாக அமைவதால் பாடலின் பொருளை மேலும் உணர்த்தும் விதமாக விரிவு செய்யப்பட்டுத் தரப்பட்டுள்ளன.

   கள்ளி எண்ணெய் (278) - புரை கழலைக்குக் கள்ளி எண்ணெய்
   நூறு பச்சிலை (295) - நூறு பச்சிலை பக்குவ மருந்து

7. சில விரிவாக்கமும் திருத்தமும் செய்யப்பட்டுள்ளன.
   பித்த சுர குணம் (359) - பித்த கபசுர நோய் குணம்

8. திருத்தங்களில் சேர்க்கை, விடுகை செய்யப்பட்டுள்ளன.

**சேர்க்கை**

**வாத நோய் குணம் - வாதசுர நோய் குணம்**

**விடுகை**

***குளுத்திக்கு கற்றாழை எண்ணெய் (279) - கற்றாழை எண்ணெய்***

**உரைக்குறிப்பு**

நூல் தொடக்கத்திலும் இடையிலும் சில உரைநடைச் செய்திகளும் சொற்றொடர்களும் இடம் பெற்றுள்ளன.

சன்னிக்கு ஒத்தடம் (498)
'நம்பியூர் அச்சேயன் மகன் சொன்ன
பரங்கிப் பட்டை இரசாயனம்' (283)
மலசலங் கட்டுப்பட்டதற்கு மருந்து (தொடக்கம்)
பற்பம் செய்முறை வேறு (218)

என்பன உரைநடையாக வருகின்றன.

'இது பற்பமாம்' (188, 189, 190)
'சுர காதல் முற்றும்' (499)
'சார சங்கிரகம் முற்றும்' (403)
'உளமாந்தை முற்றும்' (126)

என்ற சொற்றொடர்களும் உரைநடையில் அமைகின்றன.

**வடமொழிச் சொற்கள்**

வடமொழிச் சொற்கள் சில நூலினுள் காணப்படுகின்றன.

திவசம் (137)
பிரமாணம் (150)
பிரளயம் (324)
ரசபூபதி (167)
ரேணுகம் (263)

வடமொழி எழுத்துக்கள் இடம் பெற்ற நிலையில் அவை தமிழ் மொழி அமைப்பிற்கு ஏற்பத் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

| வடசொல் | தமிழ்ச் சொல்லாக்கம் |
|---|---|
| அகஸ்தியர் (486, 487) | அகத்தியர் |
| கோஷ்டம் (280) | கோட்டம் |
| புஷ்பராகம் (215) | புட்பராகம் |

**வழக்குச் சொற்கள்**

சுவடியில் பல இடங்களில் வழக்குச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. பதிப்பில் அவை இலக்கிய வழக்காக மாற்றம் பெற்றுள்ளன.

அரச்சு (254, 255) - அரைத்து
குளுந்து (44, 51) - குளிர்ந்து
வெடிச்சு (72) - வெடித்து
வேவிக்க (89) - வேகவைக்க

ஒரு சில இடங்களில் யாப்பு கருதியும், பயன்பாடு கருதியும் வழக்குச் சொல்லாகவே தரப்பட்டுள்ளன.

உப்பிசம் (9)
கொட்டமுத்து (498)
பிசறி (203)
மொண்டு (447)
மொத்தி (220)
மறுவிசம் (40)

வழக்குச் சொற்கள் மட்டுமின்றி இலக்கிய வழக்குச் சொற்கள் சிலவும் காணப்படுகின்றன.

கைப்பு (364)
கோசலம் (181)
தாமரை வளையம் (தண்டு) (392)
தெங்கின் எண்ணெய் (255)
தெரிவை (328)

**கூட்டு எழுத்துக்கள்**

சுவடிகளில் ஒருசில எழுத்துக்களை ஒன்றோடொன்று சேர்த்து கூட்டெழுத்துக்களாக எழுதியுள்ளனர். எழுத்துக்களைச் சேர்த்து எழுதுகின்ற இவ்வழக்கு மிகுந்து காணப்படுகின்றது.

இ̈ருள்ளி (405) - ஈருள்ளி
கதி̤டும் (280) - கதித்திடும்
குடம் (507) - குட்டம்
சித்̤மட்டி (291) - சித்தாமுட்டி
வார்து (286) - வார்த்து

'க்கு' என்ற இரண்டெழுத்துகளும் ஒன்றிணைக்கப் பெற்று, கூட்டெழுத்தாக எழுதப் பெற்றுள்ளன. இப்பயன்பாடு உட்தலைப்புகளில் மிகுதியும் இடம் பெற்றுள்ளது. 'ஊ' என்ற எழுத்து 'உள' என்ற வடிவில் எழுதப்பட்டு உள்ளன.

உளதி (150) - ஊதி
உளமத்தை (186) - ஊமத்தை

'ஐ' கார எழுத்து ஐ, அய் என்ற இருவடிவங்களிலும் எழுதப்பட்டுள்ளது. உயிர் மெய் எழுத்தாக எழுதப்படும் போதும் இம்முறை பின்பற்றப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ஐசரிப் பித்தம் (362) | - | - |
| அய்ப்பசி (64) | - | ஐப்பசி |
| கய் (4, 10) | - | கை |

மீட்டுருவாக்கம்

சுவடியின்கண் விடுபட்டனவும் சிதைவுற்றனவுமாகிய எழுத்துக்களும் சொற்களும் மீட்டுருவாக்கம் செய்து தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக 32ஆம் பாடலில் 2ஆம் அடியில் 'இச்சையாகி' என்ற சொல்லில் முதல் இரண்டு எழுத்துகள் தவிர மற்றவை செல்லரிக்கப் பட்டுவிட்டது. அதே பாடலின் 4ஆம் அடியில் 'ளிச்சையாகி' என வந்த சொல்லைக் கொண்டு இரண்டாம் அடியில் விடுபட்ட சொல் நிரப்பப்பட்டுள்ளது.

''களிப்புட ளிச்சை யாகில் (2ஆம் அடி)
பழிப்புட ளிச்சை யாகில்'' (4ஆம் அடி)

மிகுதி

சுவடியில் ஒரே சொல் கவனமின்மை காரணமாகத் தவறுதலாக இரண்டு முறை எழுதப்பட்டுள்ளது. இவை எருக்கம் வேர் எருக்கம் வேர் (233), சதாவேரி சதாவேரி (284), சாதாரண வேர் சாதாரண வேர் (234) என்று அமைந்துள்ளன. பேதமாகவே என்ற சொல் மீண்டும் வரும்போதும் போதமாகவே என்று வந்துள்ளது. இத்தகைய மிகுதியான சொற்கள் நீக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

சுவடியில் சில இடங்களில் மூலிகைப் பெயர்களின் பெயர்கள் முதல் மாற்றம் பெற்றும் இறுதி மாற்றம் பெற்றும் காணப்படுகின்றன.

முதல் மாற்றம்

| | | |
|---|---|---|
| குரோணித சுரம் (434) | - | சுரோணித சுரம் |
| கொடிசப்பாலை (218) | - | குடசப்பாலை |
| சிங்கணி நாடி (430) | - | சங்கனி நாடி |
| பெர்மட்டி (105, 241) | - | பேராமுட்டி |

இடைமாற்றம்

| | | |
|---|---|---|
| கூவளை (358, 368) | - | கூவிளை |
| மாதளம் (197) | - | மாதுளம் |

கடை மாற்றம்

| | | |
|---|---|---|
| கரிக்கொன்னை (295) | - | கரிக்கொன்றை |
| திரிபலா (176) | - | திரிபலை |
| பொன்னாங்காணி (286) | - | பொன்னாங்கண்ணி |
| மிளக்குரையான் (408) | - | மிளகரணை |

### சொல் மாற்றம்

ஒரு சொல் பிறிதொரு சொல்லாக மாறி இருத்தலையும் காண முடிகிறது.

| | | |
|---|---|---|
| கொடி சப்பானி (218) | - | குடசப்பாலை |
| திக மெருக்கம் (105) | - | திகழ் எருக்கம் |
| முடக்கொட்கை (295) | - | முடக்கொற்றான் |

### எழுத்துத் திரிந்திருத்தல்

ஓர் எழுத்து மற்றொரு எழுத்தாகத் திரிந்து பொருள் மாற்றமுறுவதைக் காண முடிகிறது.

| | | |
|---|---|---|
| கடிகை அந்தி (51) | - | கடிகை ஐந்தில் |
| தரம் (452) | - | சுரம் |
| தோட்டம் (294) | - | கோட்டம் |
| மலங்கணந்தன்னா (494) | - | மலம், கண், தன்னா (நாக்கு) |
| மலமுந் தீரும் (118) | - | மலமும் நீரும் |
| வலயிறும் (494) | - | மலம் இறுகும் |

அகர, இகர உகரங்கள் சில இடங்களில் யகரமாகத் திரிந்துள்ளன. ('யகர' உடம்படுமெய்யாகத் திகழவில்லை)

| | | |
|---|---|---|
| யான தோர் (230) | - | ஆனதோர் |
| யிருமை (6) | - | இருமை |
| யுடல் (430) | - | உடல் |

குறில் நெடிலாதலும், நெடில் குறிலாதலும் சுவடியில் மிகுந்து காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| எகிடும் (137) | - | ஏகிடும் |
| எதமுடன் (226) | - | ஏதமுடன் |
| கடூப்பது (456) | - | கடுப்பது |
| கம்மீடும் (112) | - | கம்மிடும் |

### மெய் மாற்றம்

ஒரு மெய் வரவேண்டிய இடத்தில் பிறிதொரு மெய் வந்து மயங்கும் நிலைமையப் பல இடங்களில் காண முடிகிறது.

| | | |
|---|---|---|
| அம்பாய் (169) | - | அன்பாய் |
| உசிர் (457) | - | உயிர் |
| தாபம் (493) | - | தாகம் |
| பசுப்பால் (254) | - | பசும்பால் |

### மெய் எழுத்துக் குறைதல்

| | | |
|---|---|---|
| தாந்தே (70) | - | தாழ்ந்தே |
| புணந்து (456) | - | புணர்ந்து |
| புலந்திடும் (26) | - | புலர்ந்திடும் |

'ந'கரம் 'ன'கரமாகத் திரிதல்

| | | |
|---|---|---|
| னரம்பு *(70)* | - | நரம்பு |
| னாழி *(254)* | - | நாழி |
| னித்திரை *(83)* | - | நித்திரை |
| னீதி *(128)* | - | நீதி |
| னெட்டை *(71)* | - | நெட்டை |
| னோய் *(43)* | - | நோய் |

ஒற்று மிகுதல்

ஒற்று மிகக் கூடாத இடங்களில் மிகுதலைக் காண முடிகிறது.

| | | |
|---|---|---|
| குயில் போலச் சத்தம் *(146)* | - | குயில்போல் சத்தம் |
| தோல்ப் போக்கி *(188)* | - | தோல் போக்கி |

ஒற்று குறைதல்

ஒற்று வர வேண்டிய இடங்களில் ஒற்று வராத நிலை உள்ளது.

| | | |
|---|---|---|
| இல்லாம *(10)* | - | இல்லாமல் |
| செவ்வென பரிசம் *(115)* | - | செவ்வெனப் பரிசம் |
| போல தொங்கியே *(75)* | - | போலத் தொங்கியே |

திரிதல்

சுவடியில் ஓர் எழுத்து மற்றொரு எழுத்தாகத் திரிந்து ஒலிமாறுபாடு அடைதலைப் பரவலாகக் காண முடிகிறது.

அகரம் எகரமாதல்

| | | |
|---|---|---|
| கெர்ப்பிணி *(345)* | - | கர்ப்பிணி |
| கெர்ப்ப சுரம் *(104)* | - | கர்ப்ப சுரம் |

இகரம் அகரமாதல்

| | | |
|---|---|---|
| தவசம் *(137)* | - | திவசம் |
| வயறு *(447)* | - | வயிறு |

இகரம் உகரமாதல்

| | | |
|---|---|---|
| கொடுவேலி *(281)* | - | கொடிவேலி |
| நளுந்து *(446)* | - | நளிந்து |

உகரம் இகரமாதல்

| | | |
|---|---|---|
| பிடலை *(2)* | - | புடலை |
| நீர்ப்பிடம் *(189)* | - | நீர்ப்புடம் |

**உகரம் ஒகரமாதல்**

| | | |
|---|---|---|
| ஒடஞ்சு *(358)* | - | உடைந்து |
| ஒடம்பு *(68)* | - | உடம்பு |

**எகரம் இகரமாதல்**

| | | |
|---|---|---|
| சிகத்து *(38)* | - | செகத்து |

**ஏகாரம் எகரமாதல்**

| | | |
|---|---|---|
| செதமதாய் *(452)* | - | சேதமதாய் |

**ஐகாரம் அகரமாதல்**

| | | |
|---|---|---|
| பதினஞ்சாம் *(81)* | - | பதினைந்தாம் |
| மலத்துவரை *(210)* | - | மலைத்துவரை |

**ஐகாரம் இகரமாதல்**

| | | |
|---|---|---|
| செருப்படி *(169)* | - | செருப்படை |

**ணகரம் னகரமாதல்**

| | | |
|---|---|---|
| தன்சாமம் (2) | - | தண்சாமம் |
| தனியும் (43) | - | தணியும் |

**தகரம் சகரமாதல்**

| | | |
|---|---|---|
| எரிச்சு (5) | - | எரித்து |
| வெடிச்சு (72) | - | வெடித்து |

**ரகரம் றகரமாதல்**

| | | |
|---|---|---|
| விறகி (9200) | - | விரகி |
| விறாகன் (500) | - | விராகன் |

**ழகரம் ளகரமாதல்**

| | | |
|---|---|---|
| சூளல் *(281)* | - | சூழல் |
| தாளை (405) | - | தாழை |

**றகரம் தகரமாதல்**

| | | |
|---|---|---|
| பிதத்தி (87, 438) | - | பிதற்றி |
| முழத்தி (443) | - | முழற்றி |

**றகரம் ரகரமாதல்**

| | | |
|---|---|---|
| விரகு (55) | - | விறகு |
| வெரிக்க (456) | - | வெறிக்க |

னகரம் ணகரமாதல்

| | | |
|---|---|---|
| திணவு (319) | - | தினவு |
| தூதண் (54) | - | தூதன் |

## பதிப்பில் நிகழ்ந்தவை

1. சுவடியில், பாடல்களின் இறுதியில் தரப்பட்டுள்ள தமிழ் எண்கள், இப்பதிப்பில் பாடல்களின் இறுதியில் வலப்பக்கத்தில் அராபிய எண்களாகத் தரப்பட்டுள்ளன.

2. பாடல்களின் இடதுபுறத் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள தொடர் எண்கள் பதிப்பில் சேர்க்கப்பட்டவை.

3. உரைநடை தவிர்த்த ஏனைய பாடல்கள் அனைத்திற்கும் பொருள் உரைக்கப்பட்டுள்ளது.

4. சுவடியில் புள்ளியிடப்படாத மெய்யெழுத்துக்கள் பதிப்பில் புள்ளியிடப் பெற்றுள்ளன.

5. மிகுந்துள்ள ஒற்றுகள் நீக்கப் பெற்று, அவசியமான இடங்களில் ஒற்றுகள் இடம் பெற்றுள்ளன.

6. யாப்புக்கு ஊறு நேராத இடங்களில் மட்டுமே வழக்குச் சொற்கள் மாற்றம் பெற்றுள்ளன.

7. தொடர்ச்சியாயுள்ள பாடல்கள், அடிகளும் சீர்களும் பிரிக்கப் பெற்றுப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

8. யாப்புக் குறைபாடுடைய பாடல்கள் உடுக்குறியிட்டுக் காட்டப் பெற்றுள்ளன.

9. அடி, சீர் விடுபட்ட, சிதைந்த இடங்கள் புள்ளியிட்டுக் காட்டப் பெற்றுள்ளன.

10. மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட, சொற்களின் கீழ் கோடிட்டுக் காட்டப் பெற்றுள்ளன.

11. சுவடியில் சரியாக வழங்கப்பட்ட உட்தலைப்புகளைத் தவிர, புதிதாகச் சேர்க்கப்பட்ட, திருத்தம் பெற்ற, மாற்றம் செய்யப்பட்ட உட்தலைப்புகள் அனைத்தும் இப்பதிப்பில் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.

12. ஓர் அடியின் ஈற்று மெய், அடுத்த அடியின் முதல் எழுத்தான உயிரோடு இணைந்து வழங்கும் நிலையில், அவை பிரித்துத் தரப்பட்டு உள்ளன.

13. யாப்பு மாறும் போதும் (தலைப்பின் கீழ்), வந்த செய்தி மீண்டும் வரும்போதும் (தலைப்பையொட்டி) 'வேறு' என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

14. விருத்தப் பாடல்களின் இறுதியில் இப்பாடலுக்கான உரையும், நெடும் பாடல்களுக்கு அவற்றின் இறுதியில் உரையின் தொகுப்பும் தரப்பட்டுள்ளன.

15. சுவடியில் 'ஈ' என்ற உயிர் நெடில் 'ஈ' என்ற வடிவ அமைப்பில் எழுதப்பட்டுள்ளது. இக்காலப் பயன்பாட்டிற்கு ஏற்ப 'ஈ' என்று மாற்றிப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

16. எழுத்துத் திரிதல்

ஓர் எழுத்து, பிறிதொரு எழுத்தின் வரிவடிவத்தினை ஒத்திருத்தல்.

**திரிபு - உயிர்மெய் எழுத்து**

| | | | |
|---|---|---|---|
| க - ச | கு - து | த - ந | மு - மு |
| க - த | கு - ரு | ப - ம | ர - ந |
| கு - டு | டு - ரு | ப - வ | |

**திரிபு - உயிர் எழுத்து**

| | | |
|---|---|---|
| அ - இ | ஆ - ஓ | உ - ந |
| அ - எ | இ - உ | ஓ - ஏ |

**திரிபு - துணை எழுத்து**

ஓர் ஒலியெண்ணுக்குரிய (Phonemes) எழுத்து வடிவத்தினை அதற்குரிய மாற்றொலிகளின் (Alaphones) எழுத்து வடிவத்தில் எழுதல்

ழ - ல - ள, ண - ந - ன, ர - ற

மேற்குறிப்பிட்ட குறைபாடுகள் இப்பதிப்பில் திருத்தம் பெற்றுப் பொருத்தமான எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

# நூலாய்வு

## சித்த மருத்துவம்

தொல்காப்பியர் தொடங்கி வள்ளுவர், திருமூலர், சித்தர் என மெய்ப்பொருளறிந்தார், ஆய்ந்தார் கூட உலக வழக்கில் பொய்ப் பொருள் என்றுரைத்த உடம்பை 'மெய்' என்றே உரைத்தார் என்னில் அஃதன் பெருமைதான் என்னே? உடலே எல்லாவற்றிற்குமான உலக வாழ்வின் அடிப்படை என்ற உண்மையை இதுகாறும் யாரும் மறுத்துரைப்பார் இலர்.

''மன்னுமிந்தப் பூவுலகில் மாண்புற்ற பல்பொருளு
ளுன்னுடம்பிற் கொப்பிலையா லூக்கியதைப் - பன்னும்
பிணியெஃதுஞ் சாராது பேணி-வளர்த் தென்றும்
பணியுமா றாள்வாய் பரிந்து''

(வ.உ.சி. - மெய்யறிவு - உடம்பை வளர்த்தல், ப.27)

சமுதாயப் போராட்டத்திலும், நாட்டு விடுதலையிலும், புரட்சியிலும், புறமாற்றுச் செயல்பாடுகளிலும் ஈடுபட்ட வ.உ.சி., மறைமலையடிகள், பாரதி, சுத்தானந்த பாரதி போன்ற அறிஞர்கள் வலியுறுத்தி வந்த கருத்து உடற் பேணுதலேயாகும்.

''விசையுறு பந்தினைப் போல் - மனம்
வேண்டியபடி செல்லும் உடல் வேண்டும்'' (பாரதியார்)

மானுடற்கு உலகில் தன் உடலே ஒப்பிலாத பொருள் என்பதை இவை தெளிவாக்குகின்றன.

**உணவும், நோன்பும்**

உடம்பினை ஓம்புதற்கான முதற்படி உணவே. உணவுதான் உடல் எனும் இயந்திர இயக்கத்திற்கான எரிபொருள். முறையாக அளந்து, பகுத்துண்டால் இடையூறின்றி உடல் இயங்கும். உணவில் மாற்றமோ, அதிகரிப்போ நோயை உருவாக்கக் காரணமாக அமையும்.

இதைக் கருதியே,
'பொருந்தும் உணவும், பொருந்தா உணவும்'
'நூறாண்டு வாழ்வதெப்படி?'

என்ற நூல்கள் மறைமலையடிகளால் எழுதப்பட்டன.

''பார்த்துநன்கு பின்னர் பதார்த்தகுண மேற்பவற்றை
யோர்த்துணர்ந்து கொள்ளென்று முன்னலத்தைப் - பேர்க்கும்
பிறபொருள்கள் கொள்ளாய் பிணியுற்றாற் கொள்வாய்
பல பிணிகள் தீர்த்தானைப் பார்த்து''

(மெய்யறிவு, உடம்பினை வளர்த்தல், ப.30)

என்கிறார் வ.உ.சி. இதனையே, பட்டுணர்ந்த பாடகன் கண்ணதாசன்,

''உடம்பு தன் சக்தியை இழந்து விடும்போது
உலகமே மயங்கித் தெரிகிறது''

''உணவைக் குறைத்துச் சாப்பிடுவது போன்ற
ஆரோக்கியம் வேறு எதுவும் கிடையாது''
(கண்ணதாசன், கடைசிப் பக்கம் - உடம்பார் அழியின்) என்று வழிமொழிந்தான்.

''உண்ணாவிரதம் உடலின் பிணி போக்கித்
திண்கருத்து மீயும் திறன்''

(சுத்தானந்த பாரதியார், அறநூல்)

என்ற பாடல் வரிகள் நோன்பின் திறம் குறித்து எழுந்ததாகும்.

## வருமுன் காப்போம்

முன் எச்சரிக்கை நடவடிக்கைகள், எல்லாவற்றுக்கும் பொருந்துமாப் போல உடல் பேணுதற்கும், நோய் வராது தடுத்துக் காக்கவும் உதவுகிறது.

நோய் வாராதிருக்கும் வழியைக் காட்டவும் பாடல் ஒன்றுண்டு.

''பாலுண்போம் எண்ணெய்பெறின் வெந்நீரில் குளிப்போம்
பகல் புணரோம் பகல்துயிலோம் பருவமூத்த
வேலஞ்சேர் குழலியரோடு இளவெயிலும் விரும்போம்
இரண்டடக்கோம் ஒன்றைவிடோம் இடதுகையிற் படுப்போம்
மூலஞ்சேர் கறிநுக ரோம் மூத்ததயிர் உண்ணோம்
முதனாளில் சமைத்தகறி அமுதெனினும் அருந்தோம்
ஞாலந்தான் அடைந்திடினும் பசித்தொழிய உண்ணோம்
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்குமிடத்தே''

என்பதே அப்பாடல்.

''நாளுக்கு இருமுறை; வாரம் இருமுறை; மாதம் இருமுறை; வருஷம் இருமுறை'' என்றொரு பழமொழி சொல்வார்கள்.

நாளுக்கு இருமுறை - காலை, மாலை மலஜலம் கழித்தல்
வாரம் இருமுறை - புதன், சனி எண்ணெய் நீராடல்
மாதம் இருமுறை - மனைவியோடு உடலுறவு கொள்ளுதல்
வருஷம் இருமுறை - பேதிக்கு மருந்து அருந்துதல்

(கண்ணதாசன், கடைசிப்பக்கம் - உடம்பார் அழியின்)

மேற்கூறப்பட்ட கண்ணதாசனின் பட்டறிவு வரிகள் பயனுடைத்தனவே.

இவற்றையும் மீறி வருகின்ற நோயைக் குணமாக்கப் பயன்படுவது மருந்து.

## மருத்துவம்

மருந்து தரப்படும் முறைமைக்கு மருத்துவம் என்று பெயர்.

உலக வழக்கில் 'மருத்துவம்' என்ற சொல் உடல் நலம் பேணும் வகையினையே உணர்த்துவதாய் அமைந்தது.

மருந்து

'மருந்து' என்பது பிணி போக்கும் பொருள். குறையை நீக்கி ஈடுசெய்யும் காரணியாகும். அக, புற நிலையில் எவ்வகையாயினும் மருந்து ஒன்றே வழி.

''வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள்செய்தான்
ஆதி மருந்தென் றறிவார் அகலிடஞ்
சோதி மருந்திது சொல்லவொண் ணாதே''

(திருமந்திரம் - அமுரிதாரணை, பா. 348)

என்ற திருமூலரின் பாடல் வரிகள் மருந்தின் தன்மையையும் அதன் தகைமையையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது.

கம்பராமாயணத்தில் யுத்தகாண்டப் பகுதியில் மருந்து மலைப்படலத்தில், மருந்தினைக் கொண்டுவர அனுமன் புறப்பட்டபோது அதன் தன்மைகளை இராமன் சொல்வதாக,

''மாண்டாரை உய்விக்கும் மருந்து ஒன்றும்
உடல்வேறு வகிர்களாகக்
கீண்டாலும் பொருந்துவிக்கும் ஒருமருந்தும்
படைக்களங்கள் இளைப்பது ஒன்றும்
மீண்டே யும்தம் உருவை அருளுவது
ஓர்மெய்ம் மருந்தும் உள' (8729)

என்ற பாடல் வரிகளும், அம்மருந்தைக் கண்டு தெளிய அடையாளமாக,

''நாகம் முற்ற எல்குன்ற எறியும்
தெய்வ மருந்து அடையாளம்'' (8762)

என்னும் அடிகளும், அம்மருந்தாற்றினும் குணத்தியல்பால் அதற்கான அடைமொழியும், இம்மருந்து அமைந்த குன்றின் சிறப்பினையும்,

''உய்த்த மாமருந்து உதவ'' -
''தெய்வ மாக்குன்று தாங்கி'' - (8817, 8818)

எனும் தொடர்களாலும், கம்பன் காட்டிச் செல்வதே மருந்தினை அவன் போற்றிப் பரவும் விதமாக எண்ணி வியக்கலாம்.

பாரதியாரும், காற்று என்னும் தலைப்பிலான வசன கவிதையில்,

''மாலை நேரம்...
குளிர்ந்த காற்று வருகிறது
நோயாளி உடம்பை மூடிக் கொள்கிறான்
பயனில்லை

.....
காற்று நம்மீது வீசுக
அது நம்மை நோயின்றிக் காத்திடும்
மலைக்காற்று நல்லது.
கடல்காற்று மருந்து,
வான்காற்று நன்று
.......
காற்றுத் தேவனை வணங்குவோம்
அவன் வரும் வழியில் சேறு தங்கலாகாது
நாற்றமிருக்கலாகாது
எவ்வித அசுத்தமும் கூடாது
காற்று வருகின்றான்
அவன் வரும் வழியை நன்றாகத் துடைத்து
நல்லநீர் தெளித்து வைத்திடுவோம்
அவன்வரும் வழியே சோலைகளும்,
பூந்தோட்டங்களும் செய்து வைப்போம்
அவன் வரும் வழியிலே கர்ப்பூரம் முதலிய
நறும் பொருள்களைக் கொளுத்தி வைப்போம்
அவன் நல்ல மருந்தாக வருக!'' (பா.443)

நல்ல காற்றே நல்ல மருந்து என்று பாடுகிறார். நம்மைச் சூழ்ந்திருக்கும் இயற்கைச் சூழலின் சுத்தமே நல்மருந்து என்பதையும் அறியலாம்.

### மருத்துவ வகைகள்

மக்கள் வாழும் இயற்கைச் சூழ்நிலையின் வழியே உலகின் பல பகுதிகளில், பலவகை மருத்துவ முறைகள் தோன்றின. அவை அவ்வப்பகுதி மக்களுக்கும், உணவு கொள்வோர் முறைமைக்குமாகத் தீர்வினைத் தந்தன.

### ஆயுர்வேதம்

வடஇந்தியாவில் பின்பற்றப்பட்ட முறையிது. உடலில் உள்ள பொருட்களான வாயு, பித்தம், கபம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த இம் மருத்துவ முறை உணவில் குறை, மனத்தடுமாற்றம், அசுத்தம், பழக்க வழக்கம் இவற்றால் நோய் வருவதாகக் கூறுகிறது.

உடல் நச்சுத்தன்மையைப் போக்குவது இதன் குறி. விடியும் முன் எழுதல், முறையாகக் காலைக்கடன் முடித்தல், பல் முதல் உடல் உறுப்புகளைச் சுத்தமாக வைத்திருத்தல், ஆசனம், பிராணாயாமம் செய்தல் ஆகியவை சிகிச்சையின்போது கடைப்பிடிக்க வேண்டிய கடப்பாட்டை உணர்த்துகிறது. மூலிகைகளிலிருந்தே இதற்கான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

நாடி பார்க்கும் முறையைச் சித்த மருத்துவர்களிடமிருந்து தெரிந்து கொண்டனர் என்பர். மூலிகை முறை, இரசவர்க்க, உலோக வர்க்க முறை என்னும் இவை ஆயுர்வேதம், சித்த மருத்துவம் என்ற இரண்டிலும் உண்டு. ஆயினும் சித்த மருத்துவத்தில் உலோக வகைகள்,

இரசவகைகளைப் பயன்படுத்தும் தாந்திரீக முறைகளுக்கு வேறுபட்ட தாகக் காணப்படுகிறது (கலைக்களஞ்சியம், தொகுதி 4. பக்.643, 645). நாடி பார்த்து நோய் அறியும் தன்மை இதற்கே மிகுதி.

மனிதனுடைய உடல் நலத்தைக் கட்டிக் காத்து, அவனுடைய ஆயுளை வளர்த்துக் கொள்ள வழிகாட்டிய மருத்துவம் 'ஆயுர்வேதம்'. இதுவே மருவி 'ஆயுர்வேதம்' ஆயிற்று. ஆயுர்வேதம், நான்கு வேதங்களுள் ஒன்றான அதர்வண வேதத்தில் ஒரு பகுதியாக அமைந்தது என்பர்.

இளங்கோவடிகள் தமிழ் மருத்துவர்களை "ஆயுள் வேதரும்" என்று சுட்டுவதிலிருந்து (சிலம்பு 1:5:44) அவர் தமிழ் மருத்துவத்தை ஆயுர்வேதம் என்று கருதியமை தெரிகிறது.

"ஆயுர் வேதமாகிய வைத்திய நூல்கள் தமிழில் அளவிறந்தன உண்டு. அகத்தியரும், சித்தர்கள் பதினெண்மரும் பிறரும் ஆயுர்வேத நூல்களை இயற்றி அருளினர். அவற்றிற் பெரும்பாலானவை இப்போது உள்ளன. ஸம்ஸ்கிருத பாஷையிலும் ஆயுர்வேத நூல்கள் மிகுதியாக இருக்கின்றன; தமிழ் ஆயுர்வேத நூல் பலவற்றை இன்றும் தஞ்சை அரண்மனையிலுள்ள ஸரஸ்வதி மஹாலிற் காணலாம்" (டாக்டர் உ.வே.சா., சங்கத் தமிழும், பிற்காலத் தமிழும், - 'கலைகள்' ப.137, 10-12-1927) என்ற கருத்து டாக்டர் உ.வே.சா. அவர்களும் சித்த மருத்துவ முறையை ஆயுள்வேதம் என்று கருதியும், வழங்கியும் வந்துள்ளமையைக் காட்டுகிறது.

ஆகவே 1927 வரை சித்த மருத்துவம் என்ற பெயர் இன்மையால் இன்றைய 'சித்த மருத்துவம்' என்னும் பெயர் 'ஆயுர் வேதம்' என்றே வழங்கப்பட்டிருத்தலை அறிய முடிகிறது.

**யுனானி**

கிரேக்க, அரேபிய முறைகளின் இணைப்பு முறையே யுனானி எனப்படும். முகமதிய அரசர்களால் நம் நாட்டில் புகுத்தப்பட்டது. உடலின் தன்மையினை இரத்தம், சளி, பித்தம், சோர்வு ஆகிய நான்கு குணங்களாகப் பிரித்து நாடித் துடிப்பின் மூலம் அறிந்து மூலிகை தாது உப்புக்கள் மூலம் சிகிச்சை அளிப்பதே இம்முறையின் நிலை. உயிரினங்களின் தசைச் சத்துக்கள், தாவர இனங்களின் வித்துக்கள் ஆகியவை மிகுதியாக இம்முறையில் பயன்படுத்தப் படுகின்றன. இந்த முறைக்கு வித்திட்டவர் ஹிப்போகிரேட்ஸ் (கி.மு.460-377) என்றும், தொடர்ந்து நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் அபு-அலி-சின்னா (கி.பி.980-1037) என்றும் அறிய முடிகிறது.

**ஹோமியோபதி**

இம்மருத்துவ முறை ஒரு கலப்பு மருத்துவ முறை. ஜெர்மன் நாட்டு டாக்டர் சாமுவேல் - ஹானிமேன் என்பவரால் ஹோமியோபதி முறை கண்டுபிடிக்கப்பட்டது. முள்ளை முள்ளால் எடுக்கும் முறையே இதன்

கோட்பாடு. இம்முறையில் மிகச் சிறிய அளவிலேயே மருந்து கொடுக்கப்படுகிறது. இம்மருந்துகள் இருக்கும் இடத்தில் வாசனை தரும் எப்பொருளும் (திரவியங்கள்) வைக்கக் கூடாது. இம்மருந்து உட்கொள்வோர் தேனீர், காபி போன்றவை அருந்தவே கூடாது.

அலோபதி (ஆங்கில மருத்துவ முறை)

கடந்த 200 ஆண்டுகளில் விரைவாக வளர்ந்த மருத்துவம். முதன் முதலில் கிரேக்க நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் மருத்துவமுறை. உடலைச் சோதனை செய்து, உடல் உறுப்பு இயக்கத்திலும் அமைப்பிலும் ஏற்பட்ட மாறுதல்களைக் கொண்டு மருந்து வழங்கப்படுதல், உடலின் நோய் தடுப்புச் சக்தியை உண்டுபண்ணுதல், நோய் பரவாது தடுத்தல் ஆகியவையே இதன் நோக்கம். இன்று பெரும்பாலான நாடுகள் இதனையே பின்பற்றுகின்றன. இதன் வளர்ச்சி உடல் உறுப்பின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு துறையை ஏற்படுத்தியுள்ளது. அந்த அளவிற்கு நோயும் நோயின் தன்மையும் பெருகியுள்ளன.

அக்யு பஞ்சர்

போகர் என்ற சித்தரால் 'வர்மாணி' என்ற முறை தோற்றுவிக்கப்பட்ட பின், சீனர்களிடம் கொண்டு செல்லப்பட்டு, 'அக்யு பஞ்சர்'. 'அக்கு-பிரஷர்' என்கின்ற பெயர்களில் வழங்கப்படுகிறது. இம்முறையில் நோயுள்ள இடங்களில் ஊசி குத்தி மருந்து செலுத்துதல் மூலம் குணப்படுத்தப் படுகிறது.

சித்த மருத்துவம்

நம் தமிழ் நாட்டவரால் பிறப்பிக்கப் பட்டும், போற்றிப் பாதுகாத்தும் இன்றளவிலும் பயன்படுத்தி வரும் மருத்துவ முறை சித்த மருத்துவ முறையாகும். இம்முறை, யோகா உள்ளிட்ட இயற்கை மருத்துவ முறைகளோடு சிறப்புற்று வரும் மருத்துவ முறையாகும்.

உலக மருத்துவ முறைகள் அனைத்திற்கும் முன்னோடியாகத் திகழுமுகத்தான் 'சித்த மருத்துவம்' 'தாய் மருத்துவம்' என்று போற்றப்படுகிறது. சித்த மருத்துவ நூல்கள் தமிழில் மட்டுமே அதிகமாகக் காணக் கிடைப்பதாலும், சித்த மருத்துவ முறை பண்டை நாள் முதல் இன்றுவரை தமிழ் நாட்டிலேயே பயிலப்பட்டு வருவதாலும், சித்த மருத்துவத்தைத் தமிழ் மருத்துவம் என்பர் (கலைக்களஞ்சியம், தொகுதி. 4, ப.642).

மேனாட்டு நாகரீகம் தோன்றுவதற்குப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே நாகரிக வளர்ச்சியில் முதலிடம் பெற்ற தமிழர், மக்களிடையே சிறந்த மருத்துவக் கலையை வளர்த்திருத்தல் வேண்டும். ஆரியர்களின் வருகைக்கு முன்பாகவே நாகரிக வளர்ச்சி பெற்று விளங்கிய தமிழர்களின் சித்த மருத்துவம் தனித் தன்மையுடன் சிறப்பிடம் பெறுவதை அறிஞர் சுட்டுவர்.

மக்களிடையே மூலிகை மருத்துவமே சித்த மருத்துவம் என்று வழங்கப்படினும், மூலிகை மருத்துவம் சித்த மருத்துவத்தின் ஒரு பகுதியே யன்றி அதுவே முழுமையானதல்ல. உணவுப் பழக்கத்தில் உலகின் வேறு எங்கும் இல்லாத வகையில் இந்தியா குறிப்பாகத் தமிழகம் விளங்குகிறது. காரணம், அன்றாட உணவே (அறுசுவை) மருந்துச் சரக்குகளோடு கூடியவை. ஆகவே நோயே வராத வகையில் மேற்கொள்ளும் உணவு முறை சித்த மருத்துவத்தில் அடங்குகின்றது. கடுகு, மிளகு, சீரகம், வெந்தயம், கொத்தமல்லி, பெருங்காயம், மஞ்சள், இஞ்சி, எலுமிச்சை இப்படிப் பல பொருட்கள் மருந்தாக அன்றாட உணவில் சேர்க்கப்படுகின்றன. நோய் வந்தால் இவையே சூரணம், கசாயம், இரசம், உபரசம், உப்பு, உலோகம், பாசாணம் போன்றவைகளாகும். நிறைவாக இரத்தினங்களாகவும் ஆக்கி வழங்குவர்.

சித்த மருத்துவம் இவ்வளவு சிறப்புடையதாயின் இம்முறையைக் கண்டவர்களின் சிறப்பு எத்தன்மையதாக இருக்கும்?

'சித்தம்' என்பது 'அறிவின்மயம்' என்றும் 'மனத்தைத் தன்பாற் படுத்தும் திறம்' என்றும் பொருள்படும். பயிற்சி அறிவின் முழுமை பெற்றோரும் உடல் உறுப்புகள் அனைத்தையும் மனம் அடக்க, அந்த மனத்தைத் தாம் அடக்கி ஆளும் திறம் படைத்தவர்களுமான சித்தர்களால் இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்தி உருவாக்கம் பெற்ற மருத்துவ முறை என்பதால் இது சித்த மருத்துவம் என வழங்கப்படலாயிற்று.

'சித்தி' என்பது நினைத்தவை கைவரப்பெறும் திறன் ஆகும். இத்திறன் பெற்றவர் சித்தர் எனப்பட்டனர்.

## சித்தமருத்துவ முறை

### உடல் பகுப்பு

சித்த மருத்துவ முறை, நிலவியல், சூழ்நிலையியல் அடிப்படையில் பின்பற்றப்பட்டு வருவதால் மனித உடலின் பகுப்பும் அதன் வழியிலேயே ஆய்வு செய்யப்பட்டது.

உலகப் பகுப்பில் மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பவை ஐம்பெரும் பூதங்கள். ஆகவே உடலும் ஐஞ்சேர்க்கை உடையது.

| | |
|---|---|
| என்பு<br>தசை<br>நரம்பு<br>தோல்<br>மயிர் | இவை மண்ணின் தகுதிகள் |
| பித்த நீர்<br>இரத்தம்<br>சுக்கிலம்<br>வியர்வை<br>சுரப்புநீர் | இவை நீரின் தகுதிகள் |

சுருங்கல்
விரிதல்
அசைதல் இவை காற்றின் தகுதிகள்
நடத்தல்
கிடத்தல்

உறுப்புகளிடையே உள்ள வெளிகளே ஆகாயம் என்று பகுத்துரைக்கப்பட்டது.

உடலை நிலை நிறுத்துவதற்குப் பயன்பட்ட பொருட்கள் உடல் தாதுக்கள் எனப்பட்டன. ஐம்பூதப் பொருட்களின் சேர்க்கையே இவ்வுடல் தாதுக்கள்.

உயிரைப் பேணிப் பாதுகாக்கப் பயன்பட்டவை மூன்று. அவை வாதம், பித்தம், கபம் ஆகும். இவையும் சரியான விகிதத்திலேயே இணைந்திருக்க வேண்டும். *4:2:1* என்பதே சரியான அளவு. உயிர் தாதுக்களும் ஐம்பூதக் கூட்டுறவால் ஏற்பட்டவை.

வாதம் = தாதுவாயு + ஆகாயம்
பித்தம் = நெருப்பு
கபம் = மண் + நீர்

இந்த உயிர்த் தாதுக்களின் நிலை அகப்புறத் தன்மைகளால் மாறுபட்டாலோ, உணவு வேறுபாட்டினால் மாறுபட்டாலோ ஏற்படுதல் நோய் என்று கூறுகிறது சித்த மருத்துவம்.

**நோய் காணல்**

வாத பித்த கப மாறுபாடுகளாலும், உணவு மாறுபாடுகளாலும், கிருமிகள் போன்றவற்றாலும் உணவு, ஓய்வு, உழைப்பு ஆகியன ஒன்றையொன்று மிஞ்சும் போதும் உடலில் பல வகையான நோய்கள் தோன்றுகின்றன.

நோயைச் சோதனை செய்ய, சித்த மருத்துவத்தில் எண்வகைத் தேர்வுகள் செய்யப்பட்டன. அவையாவன.

| | | | |
|---|---|---|---|
| நாடி | நா | மொழி | மலம் |
| பரிசம் | நிறம் | விழி | மூத்திரம் |

இது தவிர எளிய வழியாக,

ஒரு கண்ணாடிக் குடுவையில் (குவலை) விடியற்காலைச் சிறுநீர் பிடித்து அதில் இரண்டு சொட்டு எள் எண்ணெய் விடவேண்டும்.

1. எண்ணெய்த் துளி பாம்பு போல் தோற்றம் கொண்டால் - வாத நோய்

2. மோதிரம் போல் இடைவிட்ட வட்டம் கொண்டால் - பித்தநோய்

3. மூத்துப்போல் திரண்டு நின்றால் - கபநோய்

என்று முடிவு செய்யலாம். விடப்பட்ட எண்ணெய்த் துளி சிறுநீரில் வேகமாகப் பரவினால் உடலிலுள்ள நோய் விரைவில் குணமாகும். மெதுவாகப் பரவினால் தாமதமாக நோய் குணமாகும். துளி அப்படியே இருப்பின் நோய் தீராது. எண்ணெய்த்துளி சிதறினாலோ அமிழ்ந்து விட்டாலோ மரணமே முடிவு என்பதை அறிந்து கொள்ளலாம்.

### மருத்துவத் தொடக்கமும் மருந்துகளும்

தாதுக்களின் குறைவைப் பொறுத்தே மருத்துவம் பார்க்கப்படுகின்றது.

மருத்துவம் தொடங்கும் காலத்தில் நினைவில் கொள்ள வேண்டியவை வேர் பார்த்தல், தழை பார்த்தல், மிஞ்சினாக்கால் பற்பச் செந்தூரம் பார்த்தல், வேர், தழை இவற்றால் சரியாகா விட்டால் தான் தாதுக்களால் செய்த பற்பச் செந்தூரம் தர வேண்டும்.

### மருந்து செய்வதில் சித்த மருத்துவச் சிறப்பு

மற்ற முறைகளில் இல்லாத வகையில் பாதரசம் 5 முறைகளில் தயாரிக்கப்படுவது சித்த மருத்துவ முறையில் மட்டுமே.

1. இரசம் செய்முறை
2. இரசச் செந்தூரம் செய்முறை
3. வீரம் செய்முறை
4. பூரம் செய்முறை
5. அரிதாரம் செய்முறை

### சித்த மருத்துவ மருந்துகளின் மூலங்கள்

1. உப்புக்கள் - 25
2. உபரசங்கள் - 120
3. உலோகம் - 12
4. பாசாணங்கள் - 64
5. மூலிகைகள் - 1008

இவ்வளவு எண்ணிக்கைகள் கொண்ட மூலப் பொருட்கள் வேறு எந்த மருத்துவ முறையிலும் இல்லை எனத் துணிந்து கூறலாம். இதேபோல், எல்லா மருத்துவ முறைகளும் பொதுவாக 4 வகைகளில் மட்டுமே மருந்துகள் தயாரிக்கின்றன. ஆனால், சித்த மருத்துவத்தில் 1. உப்பு 2. பாசாணம் 3. உபரசம் 4. இரசம் 5. உலோகம் 6. கந்தகம் என ஆறு முறைகள் பின்பற்றப்படுகின்றன. மேலும் கட்டு, செந்தூரம், களங்கு, மெழுகு, தேன் போன்றவை 400 ஆண்டுகள் ஆனாலும் வீரியம் கெடாமலே இருக்கும் மருந்துகள் ஆகும்.

அறுவைச் சிகிச்சையில் பயன்படுத்தப் பெறும் 26 வகைக் கருவிகளைப் பற்றி 'அகத்தியர் சத்திராயுத விதி' என்னும் நூல் குறிப்பதாக அறிய முடிகிறது. இந்நூலை 'நயன விதி' என்று அழைப்போரும் உண்டு.

சித்த மருத்துவத்தில் பித்த காச நோய்க்கு அறுவைச் சிகிச்சை செய்வதற்கான ஆவணமாக,

''குத்துங் காச முத்துப்போல்
கூடிப் பிரியும் குன்றாமல்
சற்றுங் களிம்பொன் றில்லாமல்
தாம்பிரச் சலாகை முப்பட்டம்
முற்றும் ஆறு விரல்நீளம்
மூன்றும் பின்னும் விரல்நீக்கி
மற்ற நிலையை வைத்தனைத்தும்
வைத்துக் கட்டிக் குறைத்தீரே''.

எனும் பாடல் விளக்குகிறது.

**சித்த மருத்துவம்**

காய கல்ப மூலிகை மருந்துகளாலும் யோக முறைகளாலும் உடலை உயிரை அழியாமல் வைத்திருக்கும் முறைகள்.

யோக முறைகள் எண்வகை அங்கங்களையுடையது.

1. இயமம்: நல்ல எண்ணங்களைக் கடைப்பிடிப்பது.

2. நியமம்: நன்னடத்தைக் கொண்டு வாழ்வது.

3. ஆதனம் : அசையாமல் அமர்ந்தபடி மனத்தை ஒருநிலைப்படுத்துவது.

4. பிராணாயாமம்: மூச்சுப் பயிற்சி செய்வது.

5. பிரத்தியாகாரம்: ஐம்புலனடக்கி மனத்தை ஒருவழிப்படுத்தி பிறவற்றில் எண்ணம் போகாதிருக்கச் செய்தல்.

6. தாரணை: மனத்தைத் தன்வயமாக்குதலும் ஒரு பொருளைப் பற்றியே எண்ணுதலும்.

7. தியானம்: ஒரு குறித்த பொருள் பற்றியே இடைவிடாது சிந்திப்பது.

8. சமாதி: முற்றும் உணர்ந்த அசைவற்ற நிலை.

அதேபோல் கற்பம் அருந்திய உடல் அழியாது என்பதைச் சித்த மருத்துவம் நிலைபெறச் செய்வதாக,

''கட்டிட சித்தியாங் காயப் பரீட்சை
நட்டிடு கத்தியை நடுவில் வீசினால்
சுட்டி கத்தி ஒன்பது துண்டாகும்
முட்டிடு காயத்தில் முள்ளுங் கிழியாதே''

என்ற சட்டை முனிவரின் பாடல் தெளிவுபடுத்துகின்றது.

கற்பப் பொருள் ஒன்றுங் கிடைக்காததல்ல, அதியமான் ஔவைக்குக் கொடுத்த நெல்லிக்கனி, கடுக்காய், எலுமிச்சை, இஞ்சி, தேன், வேம்பு ஆகியவை கற்பப் பொருள்களே என்கிறது சித்த மருத்துவம்.

### சித்த மருத்துவ நூல்

சித்தர்கள் தங்கள் கருத்துக்களை மற்றவர்கட்கு வெளிப்படுத்தவோ உபதேசிக்கவோ வரவில்லை. அவற்றைத் தாங்களே பயன்படுத்தினர். அவர்கள் பயன்படுத்தியதை அனுபவ வாயிலாகப் பிறர் அறிந்து கொண்டனர். மறை பொருளாக இருந்துவிடக் கூடாது என்று எண்ணிய ஒருசிலரே அவற்றைப் பிற்காலத்திற்குப் பயன்படும் வகையில் வெளிப்படுத்தினர். வாய்மொழி வழியாக அவை பாதுகாக்கப்பட்டு பின் வந்தவர்களால் எழுதி வைக்கப்பட்டன. அவ்வாறு எழுந்தவைகளே சித்த மருத்துவ நூல்கள்.

### சித்த மருத்துவச் சிறப்பு

பன்னெடுங் காலத்துக்கு முன்பே மருந்து செய்முறை, நோய் கணிப்பு, நோய் அணுகா முறை ஆகியவை சித்த மருத்துவ முறையில் பழக்கத்தில் இருந்து வந்தன.

நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்ற ஐம்பெரும் பூதங்களின் அடிப்படையில் தோன்றும் நோய்களைக் கண்டறிதல் சித்த மருத்துவத்தின் சிறப்பு.

சித்த மருத்துவத்தில் ஒரு நோய்க்கு ஒரே மருந்து என்ற நிலை எந்த நோய்க்கும் கிடையாது. ஒரு நோய்க்குப் பல மருந்துகள் கூறப்பெறுவதே சித்த மருத்துவத்தின் தனிச்சிறப்பு. அவ்வமயம், ஒரு மருந்து பல நோய்களைக் குணப்படுத்தும் திறம் வாய்ந்தது.

நோயைப் போக்குவதோடு மீண்டும் அந்நோய் வராமல் தடுத்து உடல் நலத்தைக் காக்கும் பெற்றியது.

இயற்கையோடு இயைந்த சித்த மருத்துவம் மாற்றம் பெறாத மருத்துவ உண்மைகளைக் கொண்டதாக உள்ளது.

இரசவாதம் பற்றிய உண்மைகள் மிகுதி.

அப்பிரகம் போன்றவற்றைச் சித்த மருத்துவ முறையில் 100 முறை புடத்திலே பற்பமாக்க முடியும். ஆனால் வேறு எந்த மருத்துவ முறையிலும் இவ்வாறு செய்தல் கடினமான ஒன்றாகும்.

உலோகம், பாடாணம் போன்ற உயர்ந்த மருந்துகள் சித்த மருத்துவத்திலே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### சித்த மருத்துவ முறையின்<br>தேக்க நிலையும், நீக்கும் முறையும்

மேற்கூறப்பட்ட சிறப்புகள் அனைத்தும் பெற்றிருக்கும் சித்த மருத்துவம் தேக்கநிலை பெற்றதற்குக் காரணங்கள் பல.

1. சித்த மருத்துவத்தைச் சித்தர்கள் ஒரு சிலருக்கே உணர்த்தியிருக்கின்றனர். அனைவரும் எளிதில் அறிந்தால் அதனால் கேடுகள் விளையும் என நினைத்தமை நல்ல நோக்கமே எனினும், அது வளர்ச்சிக்குத் தடை ஏற்படுத்தியது.

2. மக்களின் அடிமை நிலை, மனத்திடமின்மை, பொறுமையின்மை.

3. பிறர் (ஆங்கில, இசுலாமிய) ஆட்சியில் அவர்களது மருத்துவ முறை புகுத்தப்பட்டமை.

4. மருத்துவர்கள் மருந்து செய்யும் முறையில் அவசரப்பட்டது, பணத்தையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டது, மனம் ஒன்றாதது, சரியான பயிற்சியின்மை, முயற்சியின்மை என்ற பலதரப்பட்ட நிலைகள்.

''உயிர்தரு மேற்றிசை நெறிகளை உவந்துநீர்
தழுவிடா வண்ணம் தடுத்திடும் பெருந்தடைபல
அவை நீங்கும் பான்மையவல்ல என்றருள் புரிவர்''

*(பாரதியார், தமிழ்ச்சாதி)*

இதன் பொருள்

'சீமை மருந்துகள் கற்ற மருத்துவர் தமிழச் சாதியின் நோய்க்குத் தலையசைத் தேகினர்' என்பதேயாகும் என்றும், கலியின் வலியை வெல்லலாகாதென விளம்புகின்றனரென்றால் நாசங்கூறும் 'நாட்டு வைத்தியர்' இவராம். இங்கிவ்விருதலைக் கொள்ளியின் இடையே நம்மவர் எப்படி உய்வர்? விதியே! விதியே! தமிழச்சாதியை என்செயக் கருதியிருக்கின்றாயடா? என்றும், மருத்துவரின் குறைபாட்டைச் சுட்டிக் காட்டுகின்றார்.

5. சித்த மருத்துவ மருந்துகள் எளிதில் கண்டு, எடுத்துப் பயன்படுத்தும் பொருள்களையும் அன்றாடம் நடைமுறைப் பயன்பாட்டில் உள்ள பொருள்களையும் கூறுவதாயிருந்தாலும், கூறும் முறையில் உள்ள சிக்கலும், பொருள் புரியா பாடல் நிலைகளும் அவை பயன்பாட்டிற்கு வரத் தடையாக இருக்கின்றன. அல்லது தவறாகச் செயலாக்கம் பெறுகின்றன.

மருத்துவச் சுவடிகளில் இருந்து பெறப்படும் மருத்துவக் கருத்துகளின் பிழை இதன் குறைபாட்டிற்கு வழிவகை செய்து கொடுக்கிறது. எனவே டாக்டர் உ.வே.சா. அவர்கள் 1927 ஆம் ஆண்டு சென்னைப் ப்ல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய 'கலைகள்' என்னும் தலைப்பிலான உரையில், 'மலையிலிருந்து கல்லை எடுத்துவந்து தலையில் போட்டால் தலைவலி போமென்று ஒரு பாடலில் சொல்லப்பட்டிருக்கின்றது. அசந்தாபமாக இது தோன்றும். ஆனால் தலைவலியை நிவர்த்திக்கக் கூடிய ஒரு செடிக்கு 'கல்லை' என்பது பெயரென்று அறிய வேண்டும். இங்ஙனேமேயுள்ள தமிழ் வைத்தியப் பரிபாசைகள் மிக அதிகம்' என்று கூறுகின்றார்.

6. இடவசதி பற்றாக் குறைகளினால் மூலிகை விளைச்சல் குறைவும், விலையின் நிலையும் சித்த மருத்துவ முறையின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன.

7. ஆட்சியாளரும், அரசும் வகுக்கும் திட்டங்களில் இவற்றிற்குத் தரப்படும் முக்கியத்துவக் குறைபாடும் தன் பங்களிப்பின் குறைபாடும் இதன் வளர்ச்சியைக் குன்றச் செய்துள்ளது.

மேற்கூறப்பட்டுள்ள குறைகள் நீக்கப்பட்டால் இம் மருத்துவ முறை தன் தாய்மை நிலைப்பேற்றை அடையும்.

# நூல் நுவலும் செய்தி

தமிழில் நூலை மங்களமாகத் தொடங்குவது என்ற மரபின் வழி, இந்நூலில் மஞ்சள், வெண்ணிற ஆடைகளைப் பற்றிக் கூறும் பாடல்களை (*313, 314*), மருத்துவ நூலுக்குக் கடவுள் வாழ்த்தாக அமைக்கக் காரணம் இத்தகைய மங்கள நிறங்கள் நலம் பயக்கும் என்பதாக இருக்கலாம்.

நாடியின் இயல்பு, நாடி பார்க்கும் முறைமை, நாடி யார் யாருக்குப் புலப்படாது, ஆணுக்கும் பெண்ணுக்கும் நாடி பார்க்கும் முறை, நோயுள்ள நோயில்லா நாடி, பொதுவாக நாடி அதிகரிக்கும் காலம், நாடி நடக்கும் நாழிகை, பருவம், திங்கள், நாடியைக் கொண்டு நோயின் குறிகுணம் அறிதல், வளி, அழல், ஐய நாடிகள் முதலியன பற்றித் தெளிவாக எடுத்தியம்பப் பட்டுள்ளன.

முச்சுரங்களாகிய வளி, அழல், ஐயம் ஆகியவற்றின் தன்மை, இம்மூன்றின் வேறுபாட்டால் தோன்றும் நோய்கள் தெளிவான முறையில் கூறப்பட்டுள்ளன. இம்மூவகை நாடிகள் ஒன்றின்மேல் ஒன்றாகக் கலந்து வருதல் தொந்தித்தல் எனப்படும். இத்தகைய தொந்தித்தல் பற்றியும் நூலினுள் பரவலாகக் காண முடிகிறது. தோடசுரம் என்பதும் முச்சுரங்களைக் குறிப்பதே ஆகும். பதிமூன்று வகை சன்னிக்கும் எவ்வளவு நாழிகை தோடம், இவை உடலில் இருப்பதற்கான நாட்கள் முதலானவை விளக்கப் பெறுதல் சிறப்பாகக் காணப்படுகிறது. சன்னி வகைகளின் சில பெயர்கள் புதிதாகக் கூறப் பெற்றுள்ளன.

பெண்களுக்கு வரும் கர்ப்பப்பை தொடர்பான நோய்கள், கர்ப்பக் காலத்தில் தோன்றும் நோய்கள் ஆகியன குறிப்பிடப் பட்டுள்ளன. ஆண்களுக்கு வருகின்ற பால்வினை நோய்கள் குறித்தும் சொல்லப்பட்டுள்ளன.

அதிசாரம், தோடம், குட்டம், மூலம், மூத்திரரோகம், பவுத்திரம், எலும்புருக்கி, பெரும்பாடு, விப்புருதி, குமரகண்டம், வாத பாண்டு, நீர்ப்பிசிரி குணம் முதலிய நோய்களும் பேசப்படுகின்றன.

வாகடக் கோட்பாடு, நோயின் வகைகள், நோயின் முக்கியப் பிரிவுகள் ஆகியனவும் எடுத்தியம்பப்படுகின்றன. மனித உடம்பு ஐம்பூதங்களின் கூறுகளோடு தொடர்பு படுத்தப்படுகின்றது. தசவாயுக்களைப் பற்றியும் அவை உடல் உறுப்புகளின் எப்பாகத்தை இடமாகக் கொண்டுள்ளது என்பது பற்றியும், வாழ்நாள் விபரம் பற்றியும் கூறப்பெறுகின்றன.

மருத்துவரின் இலக்கணம், மருத்துவனை அழைக்க வந்த தூதுவன் இலக்கணம், மருத்துவம் பார்க்கச் சகுனம் ஆகியனவும் சுட்டப் பெறுகின்றன.

நோய்களின் குறிகுணங்களைப் பற்றி இந்நூலில் தெளிவாகப் பேசப்பட்டுள்ளது. நோயுற்றவனுக்கு நாடியின் தன்மை, உடலில் ஏற்படும் மாறுபாடுகள், செயலில் தோன்றும் மாறுபாடுகள் ஆகிய

யாவும் குறிகுணங்களைப் பற்றிப் பேசும்போது தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. வாத, பித்த, கபம் ஆகியவற்றின் குறிகுணங்கள், தொந்தச் சுரங்களின் குறி குணங்கள், அதிசாரம், குமர கண்டம், கர்ப்பக்கிரந்தி போன்ற பல்வகையான நோய்களின் குறிகுணங்கள் விரிவாகக் கூறப்படுகின்றன.

ஒரே நோய்க்குப் பலவகைக் குறிகுணங்கள் கூறப்பெறுவதும் பயன்பாட்டிற்கு மிகவும் தேவையான செய்தியாக அமைகின்றது. காட்டாக, பித்தச் சுரத்தின் குறிகுணம் கூறப்பட்ட பின் (438) 'இன்னுமொரு வகை' என்று நான்கு உட்தலைப்புகள் இடப்பட்டு நான்கு பாடல்களில் அதே சுரத்திற்குக் குறிகுணம் கூறப்படுகிறது (439-442).

சன்னி, சுரம், தோடம், தொந்தச் சுரம், நீர்ப்பிசிரி முதலியன பற்றிய செய்திகள் நூலுள் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இடம் பெறுகின்றன. ஆயின் கூறப்பெறும் செய்திகள், பாடல் வடிவிலும், பொருளிலும் வேறுபட்டதாய் அமைவதால் அனைத்தும் பயனுடைய செய்திகளாகவே அமைகின்றன. எனவே சில நோய்களைப் பற்றியும் மருந்து செய்முறைகளைப் பற்றியும், திரும்பத் திரும்ப வரினும் அவையும் பயனுடையனவாகவே அமைகின்றன.

எத்தன்மையுடைய குறிகள் தோன்றின் உறுதியாக ஒருவன் பிழைக்க மாட்டான், எத்தகைய குறிகள் தோன்றிடின் மிகவும் மோசமான மரண அறிகுறியாயினும் ஒருவன் பிழைத்துக் கொள்வான் என்பன போன்ற நுட்பமான வேறுபாடுகள் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன. நாடிகள் மரணத்தை ஏற்படுத்தும் நிலையும், நாடி கொண்டு மரணத்தை உறுதி செய்தலும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

**மருந்து**

ஒரு நோய்க்கு ஒரு மருந்து, ஒரு நோய்க்குப் பல மருந்து, பல நோய்க்கு ஒரு மருந்து என்ற முறையில் மருந்துகள் கூறப்பெறுகின்றன. நோயைக் கூறி நோய்க்கு மருந்து கூறல் (பெரும்பாடு. இதற்கு மருந்து), மருந்து செய்முறையைக் கூறி மருந்தினால் தீரும் பலவகையான நோய்களைக் கூறுதல் (கள்ளி எண்ணெய், 278) என்ற முறையில் மருந்து பற்றிய செய்திகள் அமைகின்றன. அரிதாரம், மனோசிலை, சாதிலிங்கம், நாபி, பெருங்காயம், எவட்சாரம், கெசதிப்பிலி, இரு சீரகம், ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி முதலிய மூலிகைகள், கௌரி பாடாணம், வெள்ளைப் பாடாணம் ஆகிய பாடாணங்கள், பவழம், முத்து, வயிரம், மரகதம், நீலம், மாணிக்கம், புருசராகம், கோமேதகம் முதலிய நவமணிகள், லோகம், அப்பிரகம், தங்கம், வெள்ளி, வெள்ளீயம் முதலிய உலோகங்கள் ஆகியவை சுத்தி செய்யும் முறைகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. நவமணிகளினாலும், உலோகங்களினாலும் தயாரிக்கப்படும் பற்பம், செந்தூரம் ஆகியவை சிறந்த மருந்துகளாக அமைகின்றன.

எண்ணெய் (சர்வ வியாதிக்கெண்ணெய்), நெய் (குக்குலக்கிருதம், பூசணி நெய்), இரசாயனம் (கந்தக இரசாயனம், பரங்கிப்பட்டை இரசாயனம்), மாத்திரை (ராசசண்டேசுரன், பிரதாப லங்கேசுரன்)

முதலானவற்றைச் செய்யும் முறைகளும், அதனால் தீரும் நோய்களும் விளக்கப் பெறுகின்றன. சுரம், சன்னி, தொந்தச் சுரம் முதலியவற்றிற்குத் தரப்படும் கசாயம் பற்றியும் விரிவாக எடுத்தியம்பப்பட்டு உள்ளது.

சன்னிக்கும், சுரத்திற்கும் கூறும் மருந்துகளில் அதிகமாகக் கசாயம் பற்றித்தான் கூறப்பட்டுள்ளது. கசாயம் செய்முறையில் அளவுகள் நுண்ணிதின் கூறப்பெற்றிருத்தல் பெருஞ்சிறப்பு. நூறு பச்சிலைகளின் பெயர்களைக் கூறி அவற்றால் செய்யப்படும் மருந்துகளைப் பற்றி கூறியிருப்பதுவும் சிறப்பான ஒன்றாகும். சுக்கு, மிளகு, திப்பிலி முதலிய பொருட்களுக்கும் பலவழிகளில் சுத்தி செய்யும் முறை கூறப் பெற்றிருத்தல் சிறப்பாக அமைகிறது. மூலிகையால் செய்யப் பெற்ற மருந்துகள் மிகுதியாக உள்ளன. பாம்புக் கடிக்கு கூறப்பட்ட மருந்தும், கூறிய முறையும் சிறப்பாக அமைகின்றது.

## நூல் நடையும் நயமும்

### அவையடக்கம்

பொதுவாக நூலாசிரியர் தம் நூற் கருத்தை வெளியிடும்போது 'என் அறிவுக்கெட்டிய வரை எடுத்தியம்பியுள்ளேன், குறை பொருத்தல் வேண்டும்' என்ற தமது உணர்வை வெளிப்படுத்த நினைக்கும்போது தம்மை மிகவும் அடக்கமுள்ளவர்களாகக் காட்டிக் கொள்வது இயல்பு. அந்நிலையில் இந்நூலிலும்,

''சிறுவனுக் குதவி செய்வீ ரென்றெண்ணி
பெருமையென் றவிசதம் பேருரைப்பேனே'' (500)

என்று கூறுவதன் வழி நூலாசிரியர்கள் அவையடக்கமும் தன்னடக்கமும் ஒருங்கே பெற்று விளங்கும் பண்பினர் என்பது பெறப்படுகின்றது.

### கடவுள் வாழ்த்து

இச்சுவடி நூலின் தொடக்கத்தில் இறைவணக்கம் உரைநடையில் உள்ளது. இதனையடுத்து 18, 313, 314, 406, 431, 432, 433 ஆகிய எண்களையுடைய பாடல்கள் இறைவணக்கப் பாடல்களாக அமைந்துள்ளன. இவற்றுள் 18ஆம் எண்ணுள்ள பாடல், ஒன்றிலிருந்து அறுபத்தொன்றுவரை என்று எண்ணிடப்பட்டுள்ள பகுதியில் இடையில் அமைந்துள்ளது. பொதுவாகக் கடவுள் வாழ்த்து, நூல் தொடக்கத்திலும் இறுதியிலும் காணப்படும். இந்நூல் தொகுப்பு நூலாகக் காணப்படுவதால் நூலின் இடையில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் காணப்படுகின்றன.

மேலும் 18 ஆம் பாடல் தவிர்த்து ஏனைய கடவுள் வாழ்த்துப் பாடல்களுக்கு எண் இடப்படவில்லை. இப்பாடல் எண்ணுடன் இடையில் வந்திருப்பதால் பாடல்களைத் தொகுத்த ஆசிரியர் கடவுள் வாழ்த்து என்ற சிந்தனையின்றித் தந்திருக்கலாம்.

313ஆம் எண்ணுள்ள ''வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்'' என்ற பாடல் ஔவையாரின் ''வாக்குண்டாம்'' (1) என்ற நூலிலுள்ள விநாயகர் துதிப்பாடல் ஆகும். கடவுள் வாழ்த்துப் பாடலை நூலாசிரியர் அல்லது ஏடு எழுதியவர் எழுதிச் சேர்க்காத நிலையில் வேறு நூலிலிருந்தும் எடுத்துக் கொடுப்பர். இந்த நிலையிலேயே 'வாக்குண்டாம்' என்ற பாடல் ஒரு மருத்துவச் சுவடியில் வாழ்த்துப் பாடலாக எழுதப்பட்டு இருக்கிறது. அம்மருத்துவச் சுவடியின் பகுதிகளைப் படியெடுத்தபோது இதுவும் எடுத்து எழுதப்பட்டிருக்கின்றது.

**கலைமகள் வாழ்த்துப் பாடல்களாக,**

''மஞ்சள் கலையுடுத்தி மஞ்சள் பணிபூண்டு'' (314)
''வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு'' (432)
''பட்டுக் கலையுடுத்திப் பட்டுப் பணிபூண்டு'' (433)

என்று தொடங்கும் இப்பாடல்கள் அமைப்பு நிலையில் ஒத்துக் காணப்படுகின்றன.

இந்நூலின் இடையில் கடவுள்வாழ்த்துப் பாடல்களாக வருபவை ஒருசில மருத்துவ நூல்களின் முடிவுப் பகுதியாக இருத்தலை நூல் அமைப்புக் காட்டுகின்றது.

**இறைவணக்கப் பாடலில் மருத்துவச் செய்தி**

''வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு'' (313)

என்ற ஔவையாரின் பாடலைப் படிக்கின்ற போது விநாயகரை வணங்குவோருக்கு நல்வாக்கும் நற்சிந்தனையும் திருமகளின் அருட்பார்வையும் கிட்டும் என்ற பொருள் கிடைக்கிறது. இப்பாடல் மருத்துவநூல் ஒன்றில் கடவுள் வாழ்த்தாக இடம் பெற்றிருத்தலால் இப்பொருளே அன்றி பிறிதொரு பொருள் இருத்தல் கூடுமோ என்று நோக்குமிடத்து,

மாமலர் - தாமரைப்பூ
மேனி - குப்பைமேனி
பூக்கொண்டு - எருக்கம்பூ, தும்பைப்பூ
திருமேனி - துளசி

எனக்கொண்டால் கபத்தைப் போக்கக்கூடிய இந்த மூலிகைகளைக் கொண்டு விநாயகரை அருச்சித்து அதனை உட்கொண்டால் நோய்க்கு மூல காரணமாகிய கபம் தணிந்து நோய் அணுகாமல் தடுக்கும் என்ற கருத்து புலனாகிறது. ''மஞ்சள் கலையுடுத்தி மஞ்சள் பணிபூண்டு'' (314) என வரும் பாடலும் மஞ்சள் கிருமி நாசினியாதலால் அதனைச் சிறப்பித்து வணங்கும் தன்மையினையே வெளிப்படுத்துகிறது.

### மருத்துவப் பாடல்களில் விடுகதை அமைப்பு

408, 409 என்ற இரு பாடல்கள் விடுகதை அமைப்பில் அமைந்துள்ளன. முதல் பாடலின் விடையை ஆண்டவர் பெயரோடு அடங்கிய பூண்டின் வேர் - சிவனார் கொம்பு, தாண்டவர் சிரத்தின் மீது தரித்த வெண்பூ - தும்பை, பாண்டவர் மரத்தின் வேர் - வாகை வேர் என்றவாறு பாடலைப் படிப்பவர் கண்டறிய வேண்டியுள்ளது. அடுத்த பாடலில் முப்புறத்தை எரித்தவன் பெயர், ஈசன் உண்ட ஊனின் பெயர், வெண்ணை உண்டவன் பெயர் ஆகிய இம்மூன்றையும் கொண்ட ஒரு பூண்டினையுடைய பெயர் என்ன என்பதைக் கேள்விக் குறியாக்கி இறுதி அடியில் 'மிளகரையான் என்று சாற்றலாமே' எனப் பாடலிலேயே விடை தரப்பட்டுள்ளது. இரண்டு விடுகதையிலுமே பாடலின் பொருளை உய்த்து உணர வேண்டி இருப்பினும் ஒன்றில் பொருள், பாடலுக்கு வெளியேயும் மற்றொன்றின் பொருள், பாடலுக்கு உள்ளேயும் அமைவது விடுகதையின் அமைப்புச் சிறப்பினை வெளிப்படுத்துகின்றது.

விடுகதையின் இந்த இரண்டு அமைப்பில் முதல் அமைப்பு வழக்கில் மிகுதியும் காணப்படுகிறது. அடுத்த அமைப்பிற்குச் சான்றாக அமையும் விடுகதையில்,

> ''காயுங் கோணக்காயு கொள்ளுடா மைத்துனா
> கதையும் விடுவிச்சாச்சு சொல்லுடா மைத்துனா''

என்பதில் 'கொள்ளு' என்ற அதன் விடை அவ்விடுகதையிலேயே பொதிந்துள்ளது.

### தொகுப்பு நூல்

தன்னுடைய பயன்பாட்டிற்காக பல நூல்களிலுள்ள செய்திகளைத் தொகுத்து வைப்பதும் உண்டு. மருத்துவ நூல்கள் பல இவ்வகைகளில் அமைந்துள்ளன. அவ்வகையில் இந்நூல் மருத்துவர் ஒருவர் தன்னுடைய பயன்பாட்டிற்காகத் திரட்டிய ஒரு தொகுப்பு நூல் என்பது கீழ்க்கண்ட செய்திகளால் நிறுவப்படுகிறது.

### வாகடம்

வாகடம் எனும் சொல்லானது நூல் முழுவதும் பரவலாகக் காணப்படுகிறது. அவ்வாறு காணப்படுவதால் மருத்துவர் தங்கள் நூல்களில் வாகடர் இயம்பியதாகக் கூறுவதை ஒரு மரபாகப் பின்பற்றினர் என்று அறியலாம். மருத்துவம் என்ற சொல்லுக்கு இணையாக வாகடம் என்ற சொல்லை வழங்கும் மரபு பல மருத்துவ நூல்களில் காணப்படுகின்றன.

> ''என்றே இயம்பினார் வாகடநூல் இயம்பினாரே'' (317)
> ''என்றே வழுத்தினார் வாகடநூல் வல்லோர் தாமே'' (320)
> ''சாத்திய வாகட மறியும் செகத்துள் ளோரே'' (491)
> ''தையலே வாகடத்தின் சாத்திரப் படிகள் தானே'' (413)

''நெறியுறு புவியில் தானே நிகழ்த்து வாகட மதன்றே'' (24)
''மாதவத்தோடு வாகடரும் பண்டுல குருமுனி
மாந்தராய்ந்து வடமொழி யதனால் திடமுடன்
மந்த வைத்திய சாத்திரந் தன்னை
மகடு முன்னிலையாய் யுகப்பலப் பாவலராய்'' (407)

வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது என்ற கருத்து நூலில் சில பாடல்களில் காணப்படுகின்றன (*18, 141, 276, 281, 407, 472,* **500**).

''சீலமர் வேதத் திரமுடன் மொழிந்தா ரங்கே'' (66)
''மொழிந்தனர் மறை வல்லோரே'' (74)
''சாற்றுவர் வேதாந்தம் வல்ல தக்கோர் தாமே'' (141)
''வடமொழியி னாலுள்ள மகாபூரணத் தைலம்'' (297)

வாகடம் என்ற சொல் வடமொழி ஆயுர்வேத முன்னோர் ஆன 'வாக்படர்' என்பவரின் பெயரினின்று உருவானதே என்பர் (த. கோவிந்தன், பண்டைய மருத்துவமும் பயன்தரும் மூலிகைகளும் ப.52). உடலுக்குற்ற நோயைப் போக்கி வாழ்வளிக்கும் மருத்துவத்தை வட இந்தியாவில் வேதமாகப் போற்றி ஆயுர்வேதம் என்று வழங்கினர். தமிழ் மருத்துவ முறை தொடக்க காலம் முதல் இருந்தாலும் அதற்குரிய பெயர் இன்னது என்று அறிய இயலவில்லை. பிற்காலத்தில் தமிழ் மருத்துவ முறை ஆயுர்வேத மருத்துவத்தோடு இணைத்துப் பேசப்பட்டதாலும், ஆயுர் வேதத்திற்கு இருந்த செல்வாக்கினாலும் அப்பெயரே இதற்கும் நிலைத்து விட்டது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் ஆயுர்வேதம் என்ற (*11:5:44*) சொல்லையே கையாண்டுள்ளார்.

சித்த மருத்துவம் பரமசிவனால் நந்திக்கும், நந்தியிடமிருந்து புலத்தியர் முதலான சித்தர்கட்கும் கூறப்பட்டதாகக் கருதப்படுகின்றது. தமிழ் மருத்துவ முறைகளைச் சிவபெருமான் உமா தேவியார்க்கும் உமையம்மையார் நந்தி தேவருக்கும் நந்தி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அசுவினி தேவர்களுக்கும், தேவர்கள் அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியர் முதலான முனிபுங்கவர்களுக்கும் கற்பித்து இம் மருத்துவ முறையினைப் பரவச் செய்தனர் (அகத்தியர் சௌமிய சாகரம்) என்ற கருத்தும் உண்டு.

**சிவன்**

சிவன் மக்களுக்கு மருத்துவ முறைகளை எடுத்தியம்பினான் என்ற செய்தி,

''சங்கர னருளிச் செய்தான்'' (97)
''சுவாமி உமையாளுக்குச் சொன்னாரிதை'' (105)
''முக்கண்ணனுடைப் பகவனுரைத் ததனைத் தானே
முன்னாளிற் பிறந்தவர்கள் மொழிந்தார் தானே'' (142)

என்று வரும் பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

**வேதவியாசர்**

வேதவியாசர் கூறியதைப் பட்டாளப் புலவர் எடுத்தியம்பினார் என்பதை,

''தொட்டால் போகு மென்றேதான் சொன்னார் வேத வியாசரன்றே
பட்டாளப் புலவர் தாமுரைத்தார் பண்பாம் விரண மத்தனைக்கே'' (276)

என்ற பாடல் சுட்டிக் காட்டுகிறது.

**அகத்தியர்**

அகத்தியர் பெயர் நூலில் நேரிடையாகவும் மறைமுகமாகவும் பல இடங்களில் காணப்படுகிறது.

''அகத்திய முனியுரைத்தபடி அறிந்து கொள்ளே'' (486)
''அகத்திய மாமுனி உரைத்தாராம் புவிக்கே'' (487)
''கூட்டில் மருந்தில் பேரே யகத்தியர் குழம்ப தாகும்'' (505)
''குறுமுனி'' (407)
''கும்ப மாமுனி'' (482)
''மா முனிவன்'' (437, 449)
''பொதிய முனி'' (207)

குறுமுனி, மாமுனி, கும்ப மாமுனி, பொதிய முனி என்று வரும் பெயர்கள் அகத்தியரைக் குறிப்பதாகவே கருதப்படுகிறது. எனவே அகத்தியர் மருத்துவ நூலினை அருளினார் என்பதும் மருத்துவ முறையை மக்களிடம் கூறினார் என்பதும் பெறப்படுகின்றன.

**காக்குன்றி முனிவர், சதுரகிரி முனிவர்**

காக்குன்றி முனிவர், சதுரகிரி முனிவர் போன்றோர் பிறருக்கு உரைத்ததாக அமைந்த செய்திகளை,

''நல்லசிகுட் சையென்று காக்குன்றி
மாமுனிவன் முன்னூல் வளயென் றிருசியர்க்கு
ஆமெனவே சொன்ன திதுவாம்'' (281)
''தாளலுக்குச் சதுர கிரிமா முனிவர்
சாத்திரத்தை நிச்சயமாய்ச் சொன்னார் நினைந்து'' (286)

என வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

**முன்னோர், முனிவர்**

பெயர் குறிப்பிடப்படாமல் பொது நிலையில் முன்னோர் இயம்பினார், முனிவர் அருளினார் என்று வரும் பாடல் அடிகளும் பல இடங்களில் காணப்படுகின்றன.

''தமை உணர்ந்த பெரியோர்கள்.... அறிந்து சாற்றுவரே'' (125)
''பேசினர் முன்னூ லுணர்ந்த பெரியோர் தாமே'' (122)
''முன்னாளிற் பிறந்தவர்கள் மொழிந்தார் காணே'' (142)
''முனிவர் (436, 462, 463, 466, 470, 486, 488, 491, 492, 497)
''முனிவர் அருளினாரே'' (221)
''முனிவர் இயம்பினாரே'' (323)

நூல்கள்

''நவமேவு சத்தவித் தோடந் தன்னைச்
சாருவான் சிந்தாமணியின் தன்மை தானே'' (13)

என்ற அடிகளால், நூலில் சில பகுதிகள் 'வைத்திய சிந்தாமணி' என்ற நூலிலிருந்து தொகுக்கப் பெற்றிருத்தலை அறிய முடிகிறது.

''நவநாத சித்தரச நாடி பாரே'' (152)

என்பதால் நவநாத சித்தரச நாடி என்ற நூலிலுள்ள செய்திகள் குறிப்பிடப்பட்டு இருப்பதுடன் மேலும் விளக்கமறிய வேண்டுமாயின் அந்நூலை எடுத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற குறிப்பும் காணப்பெறுகிறது.

அகத்தியர் குழம்பு, சவுரியர் குழம்பு என்ற பகுதிகள் இந்நூல் வேறு நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட செய்திகளைக் கொண்டது என்பதை வெளிப்படையாகக் காட்டுகின்றன.

'சார சங்கிரகம் முற்றும்' (403)
'சுரகாதல் முற்றும்' (499)
'அரி ஓம் நன்றாக' (409, 433)
'குரு பாதந் துணை
தாண்டவ ஈசுவரர் ரட்சிக்கவும்' (433)
'சுப்பிரமணியர் துணை செய்யவும்;
குமர குருபரன் அமர பயங்கர வள்ளி மனோகர்
விக்கின விநாயகர் துணை செய்யவும்; இரட்சிக்கவும்' (409)
'வேலும் மயிலும் துணை' (432)

என்று பாடல் அடியின் கீழ்க் காணப்படும் தொடர்கள் பிற நூற் பகுதியை எடுத்தாண்டமையைக் காட்டுகின்றன.

'மாதவத்தொரு வாகடரும்' (407) என்று தொடங்கும் பாடல் 'நுதலிப் புகுதல்' என்னும் முறைப்படி நூலினுள் கூறப்போகும் செய்திகளை வரிசைப்படுத்திக் (நோய் வகை, அவற்றிற்கான மருந்து) கூறப்பட்டுள்ளன. இப்பாடல் நூலின் முதலில் இடம் பெற்றிருக்க வேண்டும். நூலில் இடைப் பகுதியில் காணப்படுவதால் பிறிதொரு நூலின் முதற்பகுதி இவ்விடத்தில் காணப்படுகிறது.

அனுபவத்தின் வாயிலாக உணர்ந்து எழுதப்பட்ட செய்திகளும் எடுத்தியம்பப் பட்டுள்ளன. 'மலசலங்கட்டுப்பட்டதற்கு மருந்து' (நூல் தொடக்கம்), 'நம்பியூர் அச்சேயன் மகன் சொன்ன பரங்கிப்பட்டை இரசாயனம்' (282), 'சன்னிக்கு ஒத்தடம்' (398) ஆகிய பகுதிகள் உரைநடையில் அமைந்துள்ளன.

1. வாகடம் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட செய்திகள்

2. வடமொழியிலிருந்து வந்தது என்ற குறிப்புகள்

3. சிவபெருமான் மக்களுக்கு அருளியதால் வழிவழியாக வந்த மருத்துவம்

4. அகத்தியர், காக்குன்றி, சதுரகிரி அருளியது

5. முன்னோர், முனிவர் அருளியது

6. நவநாத சித்தரச நாடி, சிந்தாமணி போன்ற நூல்களிலுள்ள பகுதிகள்

7. நூல் தொடங்குவது முடிவது போன்ற பகுதிகள் இடையில் வருதல்

8. கடவுள் வாழ்த்து இடையில் வருதல்

9. தொடர்புடைய செய்திகள் தொடர்ச்சியாகக் கூறப்படாமை, தொடர்பற்ற செய்திகள் இடையிடையே வருதல்

10. விடுகதை அமைப்பில் இரு பாடல்கள் அமைதல் – என்பன போன்ற இன்னோரன்ன காரணங்களால் இந்நூல் ஒரு தொகுப்பு நூல் என்பதை அறிய முடிகிறது. மேலும், சுவடி எழுதப்பட்டபின் அச்சுவடியைப் பார்த்து எழுதப்பட்ட சுவடியாக இருக்கலாம். ஏனெனில் பிழை மிகுதியாக உள்ளது. இத்தொகுப்பு நூல் பல வழியேடுகளிலிருந்து உருவாகி இருக்கலாம்.

புராணச் செய்திகள்

இந்நூலில் புராணச் செய்திகள் சில இடம் பெற்றுள்ளன.

''அரவமே தக்கன் யாக மஞ்சவே யழித்த போது
வரமுன்ன நெற்றிக் கண்ணிற் பிறந்த துமைக்கண் மாதே'' (79)
''நஞ்சானதை உண்டவர் போல'' (334)
''முப்புறத்தைத் தீயெரித்தான்
முன்னாளில் ஈசனுன் யூணின் பேரும்'' (409)

என்ற இப்பாடல் அடிகள் சைவ சமயத்தைச் சார்ந்ததாக அமைகின்றன.

''இப்புவியில் வெண்ணெய் உண்ட யுக்கன் பேரும்'' (409) என்ற அடியானது வைணவ சமயச் செய்தியாக உள்ளது. காப்புப் பாடல்களிலும் திருமாலைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. ஆயினும், மருத்துவ நூல்களைப் பொருத்தவரை சைவ சமயச் செல்வாக்கே மிகுந்து காணப்படுகிறது.

பூசை விதி

நோய்கள் இறை அருளால் நீங்கும் என்ற நம்பிக்கையும் மருந்துப் பொருட்களை உண்டாலும் நோய் நீங்க இறையருளே காரணம் என்ற கருத்தும் மக்களிடையே நிலவுகின்றன.

மருந்து செய் முறையின் போதும், மருந்துகளை மருத்துவர்கள் அளிக்கும் முன்பும், மருந்து அருந்தும் முன்பும் பூசை செய்வது பொதுவிதியாகக் காணப்படுகிறது. பூசைக்குரிய தெய்வங்களாக விநாயகன், முருகன், சிவன், திருமால், வைரவன், அம்பிகை முதலியோர் குறிக்கப் பெறுவதை இந்நூலுள் பல இடங்களில் காண முடிகிறது.

உலகில் வாழுகின்ற மக்களுக்கு இறை அருளால் எவ்வளவு நோய்கள் தோன்றினாலும் குணமாகிவிடும் என இறை மீது முதலில் நம்பிக்கை வைத்து அதன் பின் நோய்க்கான மருந்து இந்நூலில் கூறப்பெறுதலை,

"... பகவனார் அருளினாலே
பொறுமையாய் உலகில் வாழும் புண்ணிய சனங்களுக்கு
ஒருபல வியாதி வந்தால் உண்மையாய்த் தீருமென்று
பிரபல முனிவன் தானும் பேசிய மருந்து கேளே" (501)

என்ற பாடல் புலப்படுத்துகின்றது.

"மூவர் துணையால் மானிடர் நோய்
போகு மிதுக்கு மலர்ந்து பாரே" (249)
"கடவுள் அருளால் நோய் போகும்" (249)

என வரும் இவ்வடிகள் மேற்கூறிய கருத்தினை வலியுறுத்துகின்றன. வினைத்தளர்ச்சி துன்பம் போக யானைமுகனை வணங்குதல் என்னும் செய்தி நோய் நீங்க இறையை வணங்குவதைக் காட்டுகிறது (431).

மருந்து செய்யும் முன்பு இறைவனை வணங்குவதை,

"மாசிலா னருளைக் கொண்டு மருந்துசெய விரும்பிடாயே" (120)

என்ற அடியின் மூலம் அறிய முடிகிறது. மேலும் சோடசப் பூசை, அகோர மந்திரப் பூசை முதலியன செய்து சுத்தி செய்ய வேண்டும் (185) என்று கூறுதல் சுத்தி செய்கின்ற போதும் பூசை செய்து இறைவனை வணங்கியதைக் காட்டுகிறது.

சிவனது கோயிலுக்குச் சென்று சிவன், குரு, முதலானோரை வணங்கி பூசை செய்து பின் விநாயகரை வேண்டி பஞ்சாட்சர மந்திரத்தை ஓதி இம்மருந்தினைக் கொடுக்க மருந்தின் ஆற்றல் ஓங்கும் (250) என்ற நம்பிக்கை மருந்து உட்கொள்ளும் முன்பு இறைவனை வழிபடுவதைக் காட்டுகிறது.

"கோவிந்த நமாசரமெனக் கொள்ளீர் பூசணி நெய்யிதுவே" (294) என்ற அடி மருந்து அருந்தும் போது வரும் துயர் தீர இறைவனை வணங்கி, பின் மருந்து உண்டனர் என்பதைக் காட்டுகிறது.

**சோதிடம்**

அக்கால மருத்துவ முறைப்படி மருத்துவர் சோதிட அடிப்படையில் நோயின் காரணத்தை அறிந்தனர். நோய் வரின் அது தீரும், தீராது என்பதைச் சோதிடம் பார்த்தும் அறிவர். கோள்களின் தாக்கத்தால் இயங்குவது உடல். ஆதலின் அக்கோள்களின் பெயர்ச்சிகளுக்கு ஏற்ப உடல் நலம் மாறுகிறது. அம்மாறுபாட்டைச் சரி செய்ய மேற்கொள்ளும் முறையே சோதிட மருத்துவமாகிறது. அம் மருத்துவ முறையும் கோள்களின் இயக்கத்தை அறிந்து அக்கோள்களுக்குப் பரிகாரம் செய்கின்ற முறையில் மேற்கொள்ளப்படுகின்றது.

நோயாளியின் பொருட்டு மருத்துவரைக் காண வந்த தூதன் வந்த திசை திரும்பிப் போகும் திசை, வந்தபோது நடக்கும் இராசி

ஆகியனவற்றைக் கொண்டு நோய் தீரும் தீராது எனச் சித்த மருத்துவத்தில் அறியப்பட்டது. மருத்துவம் செய்ய மாதம், நாள், நட்சத்திரம், திதி, இலக்கினம், இராசி இவற்றைப் பார்த்து மருத்துவம் செய்தால் நற்பயன் கிட்டும் என்ற நம்பிக்கையின் காரணமாய் சோதிட முறை மருத்துவத்தில் பயன்படுத்தப் பட்டது. நாடி பார்ப்பதற்கும் கூட நல்ல நாள் நேரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இங்ஙனம் கடைப்பிடிக்கப் பட்டமைக்கான காரணத்தை ஆய்ந்தால் அறிவியல் சார்ந்த உண்மைகள் வெளிப்படுத்தப்பட வாய்ப்புகள் உண்டு. எடுத்துக்காட்டாக, மாதங்களில் சித்திரை, வைகாசி மாதங்கள் மருத்துவம் செய்ய ஏற்புடைய மாதங்களாகக் காணப்படுகின்றன. இம்மாதங்களில் கழிவுகள் உடலிலிருந்து வெளிப்படும் ஆகையால் அக்காலங்களில் மருந்துண்பதால் இயற்கை செயற்கை உதவி கிடைக்கும் என்பது தெரிய வருகிறது.

அசுவனி முதல் இரேவதி வரையுள்ள 27 நட்சத்திரங்களுக்கும் நான்கு கால்கள் சோதிடத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது ஒரு நட்சத்திரத்திற்கு நான்குக் கால்கள் என்ற வகையில் 27 நட்சத்திரங்களுக்கும் தனித்தனியே நான்கு கால்கள் அமைகின்றன. நோய் உண்டான காலத்து என்ன நட்சத்திரம் நடக்கின்றதோ அந்த நட்சத்திரத்தையும், நட்சத்திரக் கால்களையும் கொண்டு நோய் தீரும் நாள், தீராதாயின் கொல்லும் நாள் ஆகியன சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளன.

'புலிப்பாணி வைத்தியம் 500' என்ற நூலில் செய்யுள் வடிவிலுள்ள இச்செய்தி பல நூல்களில் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட நட்சத்திரம் இருக்கும் நாளில் சுரம் வருமானால் இத்தனை நாளில் தீருமெனக் கணக்கிட்டுக் கூறப்பட்ட செய்தி அகத்தியர் காவியம் என்ற நூலுள் (1086-1096) செய்யுள் வடிவில் காணப்படுகின்றது. ஆனால் 27 நட்சத்திரங்களுக்கு மட்டுமே கூறப்பட்டு நட்சத்திரக் கால்களுக்குக் கூறப்படவில்லை.

இந்நூலிலும் ஆசிரியர் இதே செய்தியினை உரைநடையில் தந்துள்ளார். ஆனால் புலிப்பாணி வைத்தியர் கூறிய முறையிலிருந்து சற்று மாறுபடுகின்றது. சுரம் வந்தால் எவ்வளவு நாளில் தீரும் என்ற நாட்கணக்கில் வேறுபாடுகள் இருக்கின்றது. இவ்வேறுபாடுகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| நட்சத்திரம் | நட்சத்திரக்கால் | சுவடி நோய்-தீரும் நாள் | நூல் நோய்-தீரும் நாள் |
|---|---|---|---|
| பரணி | நான்காங்கால் | 12 | 15 |
| கார்த்திகை | முதற்கால் | 6 | 9 |
| | இரண்டாங்கால் | 10 | 10 நாள் பதமேயாகும் |
| ரோகிணி | நான்காங்கால் | 85 | 82 |
| மிருகசீரிடம் | இரண்டாங்கால் | 18 | 28 |
| | நான்காங்கால் | 25 | 35 |

| நட்சத்திரம் | நட்சத்திரக்கால் | சுவடி நோய்-தீரும் நாள் | நூல் நோய்-தீரும் நாள் |
|---|---|---|---|
| திருவாதிரை | மூன்றாங்கால் | 15 | 10 |
| பூசம் | இரண்டாங்கால் | 10 | 12 |
| | மூன்றாங்கால் | 19 | 9 |
| ஆயில்யம் | இரண்டாங்கால் | 20 | 30 |
| | மூன்றாங்கால் | 96 | 90 |
| மகம் | முதற்கால் | பிராணபயம் | மரணம் செய்யும் |
| பூரம் | மூன்றாங்கால் | 29 | 26 |
| உத்திரம் | இரண்டாங்கால் | 20 | 30 |
| அத்தம் | நான்காங்கால் | 52 | 82 |
| சித்திரை | நான்காங்கால் | 49 | 41 |
| சோதி | மூன்றாங்கால் | 8 | 88 |
| விசாகம் | இரண்டாங்கால் | 15 | 3 |
| | மூன்றாங்கால் | 42 | 40 |
| அனுசம் | இரண்டாங்கால் | 21 | 20 |
| | நான்காங்கால் | 42 | 40 |
| கேட்டை | மூன்றாங்கால் | 39 | 31 |
| மூலம் | இரண்டாங்கால் | 9 | 80 |
| | நான்காங்கால் | 7 | 18 |
| பூராடம் | நான்காங்கால் | 5 | 54 |
| உத்திராடம் | மூன்றாங்கால் | 30 | 50 |
| | நான்காங்கால் | 42 | 40 |
| அவிட்டம் | இரண்டாங்கால் | 55 | 15 |
| | மூன்றாங்கால் | 22 | 32 |
| சதயம் | ஒன்றாங்கால் | 11 | 7 |
| | மூன்றாங்கால் | 26 | 4 |
| | நான்காங்கால் | 22 | 5 |
| பூரட்டாதி | மூன்றாங்கால் | 71 | 81 |
| உத்திரட்டாதி | நான்காங்கால் | 28 நாளில் மரணம் | 28 |
| ரேவதி | நான்காங்கால் | 2 | 26 |

★ நூல் சித்த மருத்துவாங்கச் சுருக்கம் ப.116.

மேலும் இந்நூலில் அட்டமி, நவமி, கெட்ட தியாச்சியங்கள், பாட்டிமை, கெட்ட அமாவாசை, கேட்டையடுத்த பௌர்ணமி, இவற்றைத் தவிர்த்து நல்ல கிழமை, நட்சத்திர யோகம் பார்த்து மறையோர்கள் சொல்லக் கேட்டு தைலம் பூச வேண்டும் (281) என்று கூறப்படுவதிலிருந்து மருந்தினைப் பயன்படுத்தும்போது சோதிடம் பின்பற்றப்பட்டதை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும், நாள் நட்சத்திரம் பார்த்து ஞாயிற்றுக் கிழமையில் மருந்துண்ண வேண்டும் (286) என்றும் கூறப்பட்டுள்ளது.

மருத்துவரை அழைக்க வந்தவன் பெயரிலுள்ள முதலெழுத்தையும் நோயாளியின் பெயரிலுள்ள முதலெழுத்தையும் கூட்டி 27 ஆம் நாளினை ஆய்ந்து வளர்பிறையா, தேய்பிறையா என்பதைப் பார்த்துக் கிழமையும் கண்டு 7ஆல் பெருக்கி 8ஐ கழிக்க வேண்டும் என்ற செய்தியும் அதுபோல் வந்தவன் வந்து நின்ற இலக்கினத்தைக் கண்டு சோதிடப் பிரசன்ன முறையில் கணக்கிட்டுப் பார்க்கும்போது எண் 1 வந்தால் பிணி தீராது; 2 எனில் தீரும்; 3, 4 எனில் நோயின் தன்மை கூடும்; 5 எனில் மரணம் என்ற செய்திகளும் காணப்படுகின்றன.

**சகுனம்**

சகுனம் பற்றிய பல நம்பிக்கைகள் மக்களிடையே காணப்படுகின்றது. சமுதாயவியல் ஆய்வுகளுக்குப் பெரிதும் துணை புரியக் கூடிய, இந்நூலில் 'தூது இலட்சணம்' என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ள 'சகுனம்' பற்றிய செய்தி பின்வரும் வகையில் எடுத்தியம்பப் பட்டுள்ளது. மருத்துவரை அழைக்க வந்தவன் கையில் எந்தப் பொருளை வைத்துக் கொண்டிருக்கிறான் என்பதைப் பொருத்தும் (55), கையை உடலின் எந்தப் பாகத்தின் மீது வைத்துக் கொண்டிருக்கிறான் என்பதைப் பொருத்தும் நோயாளி பிழைப்பானா, நோய் தீருமா தீராதா என்று அறியப்பட்டது. மேலும் மருத்துவரை அழைக்க முதலில் ஆண் வர, பின் பெண் வந்தால் முன்பு தீராது என்று கூறிய நோய் தீர்ந்து விடும் என்றும், முதலில் பெண் வந்து, பிறகு ஆண் வந்தால் முன்பு தீருவதாக இருப்பினும் நோய் விரைவாகத் தீர அருள் சேருமென்றும் (61) கூறப்படுவது சகுனம் பற்றிய நம்பிக்கையைக் காட்டுகிறது.

மருத்துவர் நோயாளிக்கு மருத்துவம் பார்க்கச் செல்கையில் குரங்கு, முயல், இழிந்தோர், மூஞ்சூறு, அட்டை, எலி, சாரைப் பாம்பு, கூகை, பருந்து, ஆந்தை, காடை, உடும்பு, கீரி ஆகியன இடப்பக்கம் செல்லக் கண்டால் நோய் தீரும் என்ற நம்பிக்கையும் சகுனத்தின்பால் உள்ள நம்பிக்கையையே புலப்படுத்துகிறது.

**நூல் நயம்**

நூல்நயம் என்ற இப்பகுதியில் நூலினுள்ளே காணப்படும் இலக்கண இலக்கிய நயங்கள் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

**மகடூஉ முன்னிலை**

முன்னிற்போரை விளித்துப் பாடும் நிலையில் பல பாடல்கள் பெண்ணை முன்னிலைப்படுத்தி 'மகடூஉ முன்னிலையாகப்' பாடப்பட்டுள்ளன. விளித்துக் கூறும்பொழுது அவள்தம் அழகு, உறுப்பு நலன் முதலியனவற்றை நயம்படக்கூறும் வகையில் அம்முன்னிலை விளிகள் அமைந்துள்ளன; பெண்ணைப் பொதுப்பட விளிக்கும் தன்மையும் காணப்படுகிறது.

''வள்ளை காது மடமானே'' (9)
''பெண்மை சேர் மானே கேளாய்'' (90)

உயிரற்ற அஃறிணைப் பொருட்களையும் உயிருள்ளவை போல் எண்ணி, அவை, கேட்குந, சொல்லுந போலவும் நயம்படக் கூறுதல்

இலக்கிய மரபு. இத்தன்மையில் அமைந்த பாடல்கள் சில நூலினுள் காணப்படுகின்றன.

''கூப்பிட்டு முறையிட்டுக் குலைந்து போமே'' (99)
''தப்புவ தெப்படி தானென்று
தயங்கி யோடுந் தாழ் குழலே'' (98)
''நிலைகுலைந் தோடும் தோடம்'' (345)

அணி நயம்

அணி நயங்களைக் கொண்டு, சொல்ல வரும் செய்திகளை இனிமையாகச் சொல்லுவது இலக்கிய மரபு. அத்தகைய இயல்பினை இம் மருத்துவ நூலிலும் பரவலாகக் காண முடிகிறது.

உவமை அணி

நாடியின் தன்மையினை விளக்கும் வகையில் அமைந்த உவமைகள் பல காணப்படுகின்றன.

''அத்ததோர் பட்டத் தோடே கயிரறுந் தோடல் போலே'' (40)
''ஆற்றுமீன் பாய்ச்சல் போல'' (38)
''இரண்டு புற்றுப் பாம்பென நடைகண் டாலும்'' (49, 75)
''பட்டந்த னாடி சேதான் பார்க்கின்ற பேர்க ளெல்லாம்
பட்டத்தின் கயிறு தன்னைப் பற்றியே விழுத்தல் போல'' (41)
''பட்டமே விழுந்த போது கயிறது படியல் போல'' (39)
''வளையம் போலத் தொங்கிக் குதித்திட் டாலும்'' (75)

நோயின் குறிகுணம் நாக்கினின்று அறியப்படுகிறது.

''தடம் போல் உலர்ந்த நாவு'' (30)
''வாளி போல் நாக்கு'' (9)

நோயின் துன்புறுத்தும் இயல்பினை,

''அங்கமெல்லா மக்கினியைத் தூவினாற் போல்'' (467)
''அடிவயிற்றில் நெருஞ்சிமுள் கட்டினாற்போல்'' (316)
''ஆமை போலே அகந்திர வாதம்'' (279)
''கடல்போல் இறைச்சலிட்டு'' (427)
''கீழ்வயிற்றில் சுருக்கெனவே கடிக்கு மூறுங்
கிண்டியது பிள்ளைப் பூச்சி போல'' (320)
''சனிபோல மஞ்சனிக்கும்'' (30)
''செங்கழுநீர் போல வீழு நீரும்'' (316)
''தேரை போல்கால்'' (114)
''நஞ்சானதை உண்டவர் போல'' (334)
''நன்னீறிறம் போலச் சிவந்திருக்கும்'' (7)
''பாரந்தன்னைப் பொருத்தவார் போல'' (444)
''பிசாசுபோல் வெறிக்கப் பார்க்கும்'' (456)
''புல்லிய கொழுன னென்ன புணர்ந்தழந் திடுமே யானால்'' (327)
''வாழைக்காய் போல்'' (319)
''விளக்கானது போல வெறியும் பல்சுரமும்'' (298)

என்ற உவமைகள் மூலம் வெளிப்படுத்தி உள்ளமையை அறிய முடிகிறது.

மருந்தின் ஆற்றலை எடுத்தியம்பும் பாடலும் காணப்படுகிறது.

''கந்தன் பதத்தைக் கருதுவார் வினை
சிந்திடும் போலச் சிதறியோ டிடுமே'' (279)

மாத்திரையின் புற அமைப்பினைத் தெளிவுபடுத்தும் முறையில் அமைந்த உவமைகளும் காணப்படுகின்றன.

''உளுந்து போல் மாத்திரை'' (43, 164)
''குன்றிபோல் செய்'' (32, 153)

மேலும், இன்சுவை தரும் இலக்கிய நயஞ் சார்ந்த சில உவமைகளும் காணப்படுகின்றன.

''தவளக்கொடி போலிதழ் மடவாய்'' (330)
''மங்கு லனைய குழல்மடவாய்'' (110)
''மேகப்பதி போலுங் கூந்தல்; குயில்போல் சத்தம்; மலர்போல் நாக்கு'' (148)
''வள்ளியின் கொடிபோல் மின்னாள்'' (327)

உவமை அணி நோய் இன்னது என்றறிய உதவும் வகையிலேயே மிகுதியும் காணப்படுகிறது.

**உருவகம்**

உருவக அணியில் அமைந்த சில தொடர்கள் காணப்படுகின்றன.

''பனைத் தோளாய்'' (148)
''பூமுகம்'' (146)
''மதிவதன விழிவேல்'' (145)
''வள்ளைக் காது'' (9, 39, 40)

**சொற்பொருட் பின்வரு நிலையணி**

ஒரு சொல் பாடலில் திரும்பத் திரும்ப வந்து ஒரே பொருளைத் தருகின்ற தன்மையில் அமைந்தது சொற் பொருட் பின்வரு நிலையணி. இந்த அணியில் அமைந்த சில பாடல்கள் நூலினுள் காணப்படுகின்றன.

''துய்யநல் லுடம்பு தானுந் தொன்னூற்றா றுவிர லங்குலம்
செய்யதோர் சதைகள் தானும் நூற்றொருபத்தொ ருபலம்
செய்யகண் ணிரண்டு தானுஞ் சேர்த்திரு கழஞ்ச தாகும்
நய்யுநா வொன்று தானும் நாற்கழஞ் சாகு மன்றே'' (68)

என்ற பாடலில் ''தானும்'' என்ற சொல் திரும்பத் திரும்ப ஒரே பொருளில் வந்து சொற்பொருட் பின்வருநிலையணியாக அமைந்துள்ளது. இவ்அணி நயத்தினைப் பெற்ற பல பாடல்கள் (73, 74) நூலினுள் காணப்படுகின்றன.

**தொடை நயம்**

எதுகை, மோனை, முரண், இயைபு, அந்தாதி முதலான தொடை நயம் பொருந்திய பல பாடல்கள் காணப்படுகின்றன.

எதுகை

"அங்கை - செங்கை - பங்கை - மங்கை" (71)

மோனை

எதுகை நயம் பல பாடல்களில் காணப்படினும் முதல் எழுத்து ஒன்றி வருவதான மோனை நயம் அருகியே காணப்படுகிறது.

"ஆலம் பூவுஞ்...
ஆலம்படாம லருந்தினரால்..." (335)

முரண்

"சிற்றாமல்லியின் வேர் பேராமல்லியின் வேர்" (279)
"சிற்றேலம் சிறந்த பேரேலம்" (279)
"சிறுநாகப்பூ பெருநாகப்பூ" (281)
"சீதேவி சீரகம் தன்னில் குடித்திட
மூதேவி விசசுர முனைகுழைந் தோடும்" (500)
"பிழைப்பானாகில் வெதும்பிடும் சாவதென்றால் குளிர்ந்திடும்" (44)

இயைபு

ஒரு பாடலின் இறுதி எழுத்து அசை, சீர் ஆகியன ஒன்றி வருதல் இயைபுத் தொடை.

"பைங்கிளி சரீரம் நோகும் சுவாசமே பலவெ டுக்கும்
வீங்குற விருமும் நாக்கு வெளுத்திடும் வயிறு நோகும்
மங்கையே மயிர்க்கூச் சாகும் தாகமா யிருக்கு மாமே
சங்கையில் லாத சேத்து மந்தனை யேசொல்லு வாமே" (86)

முதல் இரு அடிகளில் 'கும்' என்ற அசையும் இறுதி இரண்டடிகளில் ஆமே என்ற அசையும் ஒன்றிக் காணப்படுகின்றன.

அந்தாதி

அந்தம் முதலாகத் தொடுக்கும் அந்தாதி அமைப்பைப் பொதுவாக மருத்துவ நூல்கள் பெற்று விளங்கும். இந்நூலில் இம்முறை அருகியே காணப்படுகிறது *(13-15; 135-166)*

அடுக்குத் தொடர்

அடுக்குத் தொடரில் அமைந்த சொற்றொடர்கள் நூலினுள் காணப்படுகின்றன.

"கண்டு கண்டு" (18)
"சந்து சந்து" (473)
"பையப்பைய" (333)
"பொங்கப் பொங்க" (228)
"வற்ற வற்ற" (76)

இரட்டைக் கிளவி

இரட்டைக்கிளவியாக அமைந்த சொற்கள் நூலில் இடம்பெற்றுள்ளன.

''கிறுகிறுக்கும்'' (320)
''குலைகுலைந்தோடும்'' (500)
''திரிதிரித்து'' (274)
''தொளதொள'' (45)

ஓசை நயம்

ஓசைநயம் மிகுந்த பாக்கள் இந்நூலுள் மிகுந்து காணப்படுகின்றன.

''கண்ணின்நீர் சிந்தி வீழல் கவிழ்ந்துமண் நோக்கி நிற்றல்
மண்ணினைப் பறித்துக் கீறல் வற்றிய மரத்தைச் சாரல்
இன்னினிப் படியே தொட்டால் இடர்பட மொழிந்து நிற்றல்
தின்னென உரைத்தல் செய்தல் திண்ணமாச் சாவென் றென்னே'' (61)

என்ற பாடலில் வல்லின எழுத்துக்கள் மீண்டும் மீண்டும் வந்து இனிய ஓசை நயத்தினை உண்டாக்குகின்றன. வீழல், நிற்றல், கீரல், சாரல், தொட்டால், நிற்றல், உரைத்தல், செய்தல் என்பன போன்ற ஒப்புமையுடைய ஓசைச் சொற்கள் பயின்று வந்து காதுகளுக்கு இன்னோசையைத் தருகின்றன.

உம்மைத் தொகை

''கை கால்'' (357) - கையும் காலும்
''கை வாய்'' (447) - கையும் வாயும்
''வாந்தி மூர்ச்சை'' (463) - வாந்தியும் மூர்ச்சையும்

உம்மை விரி

''கண்ணும் வாயும்'' (115)
''தாகமும் பசியும்'' (112)
''வேலும் மயிலும்'' (499)

உம்மைத் தொகையும் உம்மை விரியும்

''கடுடு ரோகணியும்'' (382) - கடுகும் ரோகணியும்
''தாமரைப்பூவும் விளாம்பட்டை'' (341) - தாமரைப்பூவும் விளாம்பட்டையும்
''நாக்கு மூக்கும்'' (458) - நாக்கும் மூக்கும்

தன்மை

''பொருளுரைக்கின்றேனே'' (70)
''மொழிகின்றேனே'' (414)

முன்னிலை

''அறிந்து பாரே'' (427)
''தெளிந்து நீ தேர்ந்து பாரே'' (417)

படர்க்கை

''கிளத்தினாரே'' (321)
''சாற்றுவாரே'' (325)

முதற்குறை

மூலிகையின் பெயர்களைக் கொண்ட சொற்கள் சுருக்கம், அடியளவு, ஓசைநயம் போன்ற காரணங்களால் முதல், இடை, கடை ஆகியவை நீக்கிக் கூறப்பட்டுள்ளன. சொல்லின் முதலில் எழுத்துக்கள் விட்டிருப்பின் முதல்குறை என்றும், இடையில் விட்டிருப்பின் இடைக்குறை என்றும், இறுதியில் விட்டிருப்பின் கடைக்குறை என்றும் இலக்கண ஆசிரியர்கள் கூறுவர். மேற்கண்ட முக்குறைகளும் இந்நூலுள் பரவலாகக் காணப்படுகின்றன.

முதற்குறை

கழுநீர் (286) - செங்கழுநீர்
கொழுந்து (286) - மரிக்கொழுந்து
கொற்றான் (284) - முடக்கொற்றான்
சொரி (99) - சிறுகாஞ்சொரி (பெருங்காஞ்சொரியைப் பயன்படுத்துவது அரிது)
சோளம் (286) - கச்சோளம்
தாரம் (297) - அரிதாரம்
பிசின் (282) - வேப்பம் பிசின்
வாலி (282) - குதிரை வாலி

இடைக்குறை

ஆயிலெண்ணை (282) - ஆயில் பட்டை எண்ணெய்
எட்டியின் சாறு (259) - எட்டிப்பழச் சாறு
கோரைச் சாறு (213) - கோரைக் கிழங்குச் சாறு
பேர்மல்லி (260) - பேராமல்லி

கடைக்குறை

காவி (99) - காவிக்கல்
சங்கு (284) - சங்கங் குப்பிச் சாறு
சடாஞ்சி (286) - சடா மாஞ்சில்
தான்றி (3) - தான்றிக்காய்
முத்தம் (99) - முத்தக்காசு

காரணப்பெயர்

பொதுவாக மூலிகைகள் பல காரணப் பெயர்களாக அமைந்து வருவதை பல நூல்களின் மூலமாகவும் நடைமுறை வாழ்க்கையில் மக்கள் பயன்படுத்துகின்ற பேச்சு மொழிச் சொற்கள் மூலமாகவும் அறியலாம். இந்நூலில் காணப்படும் சில மூலிகைகளின் காரணப் பெயர்கள் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

ஆடாதோடை (296) என்ற செடியின் இலையை ஆடு தின்னாது. இக்காரணம் பற்றியே ஆடு தொடா இலை ஆடாதோடை என்றானது.

முருங்கை ஊரின் முன்புறம் வளர்க்கப்படும் சிறப்பு உடையதால் ஊர் முருங்கை (279) என்ற பெயர் பெற்றது.

பூனையின் கால்களைப் போன்று இலைகள் அமைந்துள்ள மூலிகை பூனைக்காலி *(23, 242, 252)* என்று பெயர் பெறுகிறது.

முசு என்பது குரங்கு என்ற பொருளை உடையது. இரு குரங்கின் கை போன்று அமைந்திருப்பதால் அந்த மூலிகைக்கு முசுமுசுக்கை *(509)* என்ற பெயர் சுட்டப்பெறுகிறது.

இரண்டு வகை மருந்துப் பொருட்களைக் கூறும்போது இரண்டையும் தனித்தனியே கூறாமல் ஒன்றாக்கிக் கூறும் நிலை இந்நூலில் காணப்படுகிறது. இதே போன்று மூன்று எண்ணிக்கை உடைய மருந்துப் பொருட்களையும் ஒன்றாக்கிக் கூறும் நிலையும் காணப்படுகின்றது.

**இருபெயர்**

இருகனி *(280)* - கடுக்காய், நெல்லிக்காய்
இருகந்தம் *(282)* - சாதாரணகந்தம், நெல்லிகந்தம்
இருசீரகம் *(263)* - பெருஞ்சீரகம், நற்சீரகம்
இருநாகப்பூ *(281)* - சிறுநாகப்பூ, பெருநாகப்பூ
இருவேளை *(283)* - தைவேளை, நாய்வேளை

**முப்பெயர்**

திரிகடுகு *(163)* - சுக்கு, மிளகு, திப்பிலி
திரிகந்தம் *(297)* - சந்தனம், அகில், தேவதாரம்
திரிபலை *(283)* - தான்றிக்காய், கடுக்காய், நெல்லிக்காய்

மருந்து எண்ணிக்கையை ஒன்றாக்கிக் கூறுகின்ற பல பாடல்கள் இந்நூலில் இருப்பினும் பிரித்துக் கூறுகின்ற முறையும் காணப்படுகின்றது.

**சிறுநாகப்பூ, பெருநாகப்பூ (290)**
**துளசி, நாய்த்துளசி (290)**
**துவர்சீகை, வறட்சீகை (283)**

**நிறத்தால் பெயர் பெற்ற மூலிகைகள்**

*சில மூலிகைகளின் பெயர்கள் நிறத்தினைக் கொண்டு அமைந்துள்ளன.*

**செங்கழுநீர் (286) - சிவப்பு**
**நீலி (அவுரி) (295) - நீலம்**
**வெண் ஊமத்தை (242) - வெண்மை**
**வெள்ளை வெங்காயம் (498) - வெண்மை**

**ஓசையால் பெயர் பெற்ற மூலிகை**

கிலுகிலுப்பை *(234, 399)* (வட்டக்கிலுகிலுப்பை - காய்ந்த காய்கள் காற்றில் எழுப்பும் ஓசையால் வந்த பெயர்).

**நீரின் பெயரால் அமைந்த மூலிகைகள்**

**நீர்முள்ளி (108, 396)**
**நீர் ஆம்பல் (506)**

நிலத்தின் பெயரால் அமைந்த மூலிகைகள்

நிலப்பனை (104, 176)
நில வேம்பு (99, 100)

இங்ஙனம் வளர்கின்ற இடத்தினைக் கொண்டும் மூலிகைகள் பெயர் பெற்றுள்ளன.

வடமொழியில் அமைந்த மூலிகைப் பெயர்கள்

அரிதாரம் (296) - தாளகம்
நின்பத்தோல் (170) - வேப்பம்பட்டை
ரேணுகம் (263) - காட்டுமிளகு

மொழிபெயர்ப்புப் பெயர்கள்

வடமொழியில் அமைந்துள்ள மூலிகைப் பெயர்கள் சில தமிழ்ச் சொற்களாக மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

சீதேவி செங்கழுநீர் (390) - இந்திர யுற்பலம்
நாகப்பூ (282) - சர்ப்ப புஷ்பம்

பல பொருள் குறித்து ஒரு சொல்

நிம்பம் (170) - எலும்பிச்சை, வேம்பு
மல்லி (297) - கொத்தமல்லி, சாதி மல்லி
மூலம் (173) - சித்திரமூலம், கொடிவேலி, மூலமுளை நோய்
வேளை (283) - தைவேளை, கடுவேளை

ஒரு பொருள் குறித்த பல சொல்

சதாவேரி (280) - குழிமீட்டான், தண்ணீர் மீட்டான், தண்ணீர் விட்டான், நத்தைச் சூரி

வெட்டி வேர் (95) - இலாமிச்சம், விலாமிச்சம், வெட்டி

ஒரு மூலிகைக்கு ஒன்றுக்கு மேற்பட்டய பெயர்கள் இருப்பினும் பொதுவாக ஓரிடத்தில் ஒரு பெயரைச் சுட்டுதலே இயல்பு. ஆயினும் இந்நூலில் ஓரிடத்தில் ஒரு மூலிகைக்கு உள்ள வேறு பெயரும் சுட்டப் பெறுதலை 'கண்டங்காலி என்ற குவளைப் பாதிரி' *(268)* என்ற அடி காட்டுகிறது.

குப்பைமேனி, கொடிக்கற்பூரவள்ளி, பூநாகம்என்பவை மேனிகுப்பை *(295)*, கற்பூரவள்ளிக் கொடி *(295)*, நாகப்பூ என்று முறைமாறி அமைந்துள்ளன.

பரிபாசை

தமிழ் மருத்துவத்தைப் போற்றி வளர்த்த சித்தர் அவற்றைப் பேணிக் காக்க மேற்கொண்ட வழிமுறைகளுள் குறிப்பிடத்தக்கது பரிபாசை எனும் மறைபொருள் பெயர்நிலை. பரிபாசை என்பது சித்தர் தமது கருத்துக்களைப் பாடல்களாகப் படிக்கும் போது மறை பொருள் நிலையில் சொற்களைக் கையாண்ட ஒரு முறையைக் குறிப்பது. பாடல்களில் இடம்பெறும் சொற்களுக்குரிய நேர்பொருள் ஒன்றாக

இருக்க, அச்சொல் வழி சித்தர் குறிப்பிடும் மறைபொருள் வேறாக இருக்கும்.

அடிமொழி (169) - செருப்படை
அமிர்தம் (291) - சீந்தில் தண்டு
இருவேலி (286, 293) - வெட்டிவேர்
கங்கை (297) - நிலக்கடம்பு
குமரி (284, 286) - சோற்றுக் கற்றாழை
குழிமீட்டான் (293) - நத்தைச் சூரி
குருவேர் (237) - வெட்டி வேர்
கொடுப்பை (286) - பொன்னாங்காணி
கொடி வேலி (263) - சித்திர மூலம்
சிறுமூலம் (263) - சிற்றா முட்டி வேர்
சேவகன் பூண்டு (262) - சிற்றா முட்டி
சோமநாதன் (244) - வேலிப்பருத்தி
பன்றி மீட்டான் (297) - கோரைக் கிழங்கு
பாண்டில் (408) - வாகை வேர்
மான் செவி (245) - மான் செவிக் கள்ளி
வசுவாசி (286) - சாதிபத்திரி
வராகிக் கிழங்கு (297) - கோரைக்கிழங்கு

**மருத்துவரின் இலக்கணம்**

மனிதரின் நோய் போக்கும் மருத்துவர் எப்பொழுதும் நற்குணமும் நற்செயலும் மிக்கவர் ஆகவும் இருக்க வேண்டும் என்பது பொதுவிதி. அது போன்று இந்நூலிலும் மருத்துவர்களின் தன்மைகளை விளக்கும் வகையில் ஓரிரு பாடல்கள் காணப்படுகின்றன. மருத்துவன் புகழ், அறிவு முதலானவற்றை உடையவனாக இருப்பதுடன் மக்கள் பால் தோன்றும் வியாதிகளுக்கு "அன்னை தம் குழவிக்கு அன்போடு பால் தருவது போல்" *(11)* பரிவோடு மருந்து கொடுத்து அவர் தம் உடலைக் காக்க வேண்டும் என்றும், "வியாதிகளுக்குத் துரையாக விளங்கும் எமனுக்கு நிகராக அவனை எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடையவன் மருத்துவன்" *(79)* என்றும், நோய்கள் பலவற்றின் பெயர்களைக் கூறி அவ்வகை நோய்களை நன்றாகக் கற்றுத் தேர்ந்தவரே வைத்தியர் *(139)* என்றும் மருத்துவர்களின் தன்மைகள் எடுத்தியம்பப் பட்டுள்ளன.

**உடலின் அளவு**

உடம்பின் அளவினைப் பற்றிக் கூறும்போது உடம்பு *96* விரல் அங்குலம், சதை *110* பலம், கண் *2* கழஞ்சு, நாக்கு *4* கழஞ்சு, ஈரலும் நுண்ணெலும்பும் *5* பலம், மூக்கு *3* பணம், சிறுகுடல் *32* பலம், இதயம் 5 அங்குலம் *(68, 69)* என உடல் பாகத்தின் அளவுகள் தெளிவாக எடுத்தியம்பப் பட்டுள்ளன.

**ஆயுட்காலம்**

ஒரு மனிதனின் ஆயுட்காலம் *120* ஆண்டுகள் என்று சோதிட நூல்கள் கூறுகின்றன. *1* முதல் *33* வயது வரை அற்ப ஆயுள், *34* முதல்

66 வரை மத்திம ஆயுள், 67 முதல் 99 வரை தீர்க்காயுள், 100 முதல் 120 வரை பூரண ஆயுள் என்றவாறு சோதிட நூல்களில் ஆயுட்காலம் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் மருத்துவ நூல்களில் மனிதனின் ஆயுட்காலம் 100 என்று கணக்கிடப் படுகிறது. இந்நூலில் வளி, அழல், ஐயம் ஆகிய மூன்றும் முறையே 33 ஆண்டுகளும் மீதி நாட்களும் (1 ஆண்டு) கொண்டு மனிதனின் ஆயுட்காலம் 100 ஆண்டுகள் என்று எடுத்தியம்பப் பட்டுள்ளன(414).

மரணம்

நோயுற்றவர்களுக்குத் தக்க வகையில் மருந்து கொடுத்துக் காப்பாற்றப் பல வழிகள் கூறப்பட்டு இருந்தாலும் மரணத்தை எட்டிவிட்ட நிலையில் உள்ள நோயாளிகளுக்குச் சித்த மருத்துவர் வைத்தியம் பார்ப்பது இல்லை. இந்நிலையில் உணவுக் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி நோயாளி விரும்புவதைக் கொடுப்பர். நடைமுறையில் காணும் இம்முறையினை நூலினுள் பல இடங்களில் காண முடிகிறது. சாப்பிணியைப் பற்றிய குறிகுணங்கள் தெளிவாக எடுத்தியம்பப் பட்டுள்ளன.

இறந்து விடுவான் என்று அறிந்த நிலையிலுங் கூட மருந்து கொடுத்து முயற்சிக்கும் நிலையினை,

"நாளிரண் டெட்டு தானும் நலம்பெற வீங்கி னாலும்
சாலவே மலமுந் தீரும் சடக்கென விடுமே யாகில்
கூசிட வேண்டா மிந்தக் குறிகளுண் டான போது
தேறிடு மருந்த றிந்து சிக்கென மருந்து செய்யே" (118)

என்ற பாடல் காட்டுகின்றது. இப்படி முயற்சிக்கும் நிலையையும் கடந்து நோயாளி உறுதியாக இறந்து விடுவான் என்ற நிலை ஏற்படும்போது மருந்து கொடுப்பதைத் தவிர்க்கின்றனர். மரணத்தை உறுதி செய்து மருத்துவம் இவனுக்குத் தேவையில்லை என்பதைப் பல பாடல்கள் வலியுறுத்துகின்றன.

"சாவது திண்ண மென்று சடக்கென விட்டுப் போமே" (114, 116)

ஒருவனுக்கு வாத பித்த சிலேத்தும நாடி பேத மடைந்து அடங்கி காணப்படுமானால் அவன் உறுதியாக இறந்து விடுவான் என்று கூறுவதை "நாதனானை யக்கால் மாளுவரே" (142) என்ற பாடல் வலியுறுத்தக் காணலாம்.

சோதிடத்தின் வழியாகவும் நோயாளியின் மரணத்தைத் தமிழ் மருத்துவர் கண்டறிந்துள்ளனர் என்பதைத் தூதுலட்சணம் என்ற பகுதியிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. சோதிடம் மூலம் மரணத்தை அறியும் முறையினைக் கூடலூர் கிழார் 'கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையின் மரணத்தை ஏழு நாட்களுக்கு முன்னதாகவே கோள்நிலை இயக்கத்தின் வழி அறிந்து பாடியதாகப் புலவரின் பாடல் (புறநானூறு-229) வலியுறுத்தக் காணலாம்.

### நோய்களின் எண்ணிக்கை

உடலில் தோன்றும் நோய்களின் எண்ணிக்கை 4448 என்று கூறுதல் தமிழ் மருத்துவ முறையில் மரபாகக் காணப்படுகிறது. அம்முறையினைப் பின்பற்றி இந்நூலிலும் நோய்களின் எண்ணிக்கை 4448 என்று இருபாடல்களில் (24, 414) கூறப்பட்டுள்ளன.

நோய்களின் எண்ணிக்கை பற்றிப் பல பாடல்களில் (20, 25) கூறப்பட்டுள்ளன.

> ''எண்பது வாதம்'' (273)
> ''சன்னி பதினெட்டு'' (509)
> ''நூற்றுட னெட்ட தாகி நுகர்ந்திடும் வியாதி தன்னில்
> புலர்ந்திடும் முப்பதென்று'' (26)

### நோய் தொகைப்பெயராய் அமைதல்

> ''சாற்றிய நோய்க ளெல்லாம் தலைவனாம் வாத பித்தம்
> சேத்தும மென்று ரைத்துத் திரிவித வியாதி யாமே'' (26)

நோய்களுக்குத் தலைவனாக விளங்குவது வாத பித்த சேத்துமம் என்னும் முத்தோட நோயே என்பதை இப்பாடல் அடிகள் காட்டுகின்றன.

> ''வீதி தன்னில் விடுவது போவதாய்
> மோது கின்றதோர் மூன்று முகங்களே'' (23)
> ''திரிதோட சுரம்'' (363, 364, 365)

என்பன நோய்களின் தொகைப் பெயர்களாய் அமைந்துள்ளன.

நோயின் மருந்துகளின் பெயர்களைக்கூறி அவற்றின் கூட்டு எண்ணிக்கையையும் இறுதியில் தரும் முறை நூலுள் பின்பற்றப்பட்டுள்ளது.

> ''... ஏழு சாத்திய மதாமே'' (136)

சன்னி பதிமூன்றில் ஏழு சன்னி எளிதில் தீராது எனும்போது ஏழின் பெயரும் எண்ணிக்கையும் தரப்பட்டிருக்கிறது.

''...இந்த வகை பதிமூன்று சன்னியென வியம்பினோம்'' (483) பதிமூன்று வகை சன்னியின் பெயர்களும் கூறப்பட்டு, முடிவில் எண்ணிக்கையும் சுட்டப்படுகின்றது. பாடலில் கூறப்பட்ட எண்ணிக்கைக்கேற்ப நோயின் பெயர்கள் இருக்கின்றனவா என்ற தெளிவிற்கு இவ் உத்தி பயன் தருகிறது.

சுவை பற்றிக் கூறும்போது ''...துவர்ப்போடாறும்'' (33) என்று ஆறுசுவை கூறப்பட்டதாக வருகின்றது. ஆனால் பாடலில் ஐந்து சுவைதான் கூறப்பட்டுள்ளது. எனவே ஒரு சுவை விடுபட்டுள்ளமையை அறிய முடிகிறது.

### மருந்துகளின் ஆற்றல்

நோயாளிகள் மருந்தின் மீதும், மருத்துவரின் மீதும் நம்பிக்கை வைக்கும் முறையில், மருந்தின் ஆற்றலைப் பற்றி எடுத்தியம்புவதைக்

காணலாம். அத்தகு தன்மையில் இந்நூலில் மருந்துகளின் ஆற்றலைப் பற்றிப் பல இடங்களில் நம்பிக்கை தரும் வகையில் கூறப்பட்டுள்ளது.

''ஓடும் எண்பது வாதம்'' (273)
''சத்திய மிதுவே தின்னு சாற்றினோம் வேறா காதே'' (304)
''சத்தரவே தீர்ந்து விடுமென்று தங்கள்
''சங்கரனாருக்குச் சாற்றி னாரே'' (100)
''சன்னிசுரம் ஓடுங் காற்றாய்'' (360)
''சன்னிசுரம் ஓடும் தானே'' (98, 99)
''தீரும் நிச்சயமே'' (277)
''நிரந்தரமாகத் தீரும் நிச்சயமென்று பாரே'' (36)
''பூத சுரமாதி யெல்லாம் போமே யோடி'' (165)
''விட்டோடு மப்பால்'' (370)

மருந்து செய்யும் பக்குவங்கள்

மருந்திற்குரிய மூலப் பொருள்களைத் தேவையான அளவு சேர்த்துச் செம்மையாகப் பக்குவப்படுத்தும்போது தான் அவை சிறந்த மருந்துப் பொருட்களாக அமையும். பக்குவப்படுத்தும் முறைகளான காய்ச்சுதல், அரைத்தல், சீலைமண் செய்தல், மூசையிடல், புடம் போடுதல், எரித்தல் போன்றவை நூலில் குறிப்பிடப்படுகின்றன.

காய்ச்சுதல்

''கொதிக்க வைத்து'' (282)
''நாலொன்றாக்கி'' (283)
''எட்டொன்றாகக் காய்ச்சவும்'' (345)

மருந்துப் பொருட்களைத் தயாரிக்கும் பொருட்டு பக்குவ முறையினைக் கடைப்பிடித்தலைப் பல நிலைகளில் காண முடிகிறது.

''கல்வத்தில் போட்டு'' (164)
''குக்குப் புடம் (91, 165, 201, 207, 213)
''கெச புடம்'' (194)
''சீலைமண் செய்தல்'' (165)
''தானியப் புடம்'' (281)
''மூசை வைத்து'' (153, 159, 207, 215, 217)
''வச்சிரக் குகை'' (165, 207)
''வாலு காந்திரத்தில் ஆறு சாமம் எரித்து'' (157, 166)

விறகு

எரித்தலுக்கு இன்னின்ன விறகுகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற குறிப்புக் காணப்படுகிறது.

''ஆவார விறகு'' (285)
''ஊஞ்சல் விறகு'' (285)

**ஊற வைத்தல்**

"ஊற வைத்தல்" (207)
"கோசலத்தில் இட்டு" (182)

**அரைத்தல்**

"கூட்டி அரைத்து" (283)
"சாந்து போல் அரைத்து" (294)
"நேக வரைத்து" (284)
"நைய அரைத்து" (293)
"மாளவரைத்து" (280)

இருமலுக்குப் புகை மருந்து தயாரிக்கும் முறையும், ஒத்தடம் போடுவதற்கான மருந்தினைத் தயாரிக்கும் முறையும் அதில் கையாண்டுள்ள பக்குவ முறைகளை வெளிப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளன.

இங்ஙனம் மருந்துப் பொருட்களைத் தயாரிக்கும் பொழுது மருந்தின் பக்குவ நிலையை அறிய, பல்வேறு முறைகளைக் கையாண்டுள்ளனர். எண்ணெய் வகை மருந்தினைத் தயாரிக்கும் பொழுது 'பரிநாபி' (167) என்ற பொருளை அதனுள் போடுவர். அப்பொருள் மிதந்து வருமாயின் எண்ணெய் பக்குவ நிலையினை அடைந்து விட்டது என்று கருதுவர். கண்பதம் (295) "கடுகு பதம்" (280) என்ற சொற்றொடர்களும் பக்குவ நிலையை அறிய, கடைப்பிடிக்கப்பட்ட முறையை எடுத்தியம்புகிறது.

**துணைமருந்து**

தமிழ் மருத்துவத்தில் மருந்தின் ஒரு கூறாக விளங்கும் 'அனுபானம்' என்ற துணை மருந்தானது மருந்துகளின் ஆற்றலை மிகுவிப்பதோடு மருந்துகளினால் உடலுக்குப் பக்க விளைவுகள் ஏதும் தோன்றாத வகையில் உடலைப் பேணும் தன்மையைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது. பெரும்பாலும் எளிய மருந்துகளுக்குத் துணை மருந்து கொடுக்கப் பெறுவதில்லை. கொடிய நோய்களுக்கு வழங்கப் பெறும் தாது வர்க்க மற்றும் உயிர் வர்க்க பொருட்களால் இயன்ற பற்பம், செந்தூரம் போன்ற ஆற்றல் மிகுந்த மருந்துகளுக்குத் துணை மருந்துகள் மிகுதியும் அளிக்கப் பெறுகின்றன. இவை எலும்பிச்சம் பழச்சாறு (148), இஞ்சிச்சாறு (152, 154, 159, 161, 219, 220), தேன் (169, 219), துளசிச் சாறு (169), இளநீர் (174), தாய்ப்பால் (174, 220), (220) என்ற திரவ அனுபானமாகவும், திப்பிலிச் சூரணம் (219), சுக்கு (220), திப்பிலிப் பொடி (218) என்ற திட அனுபானங்களாகவும் நூலினுள் காணப்படுகின்றன.

அனுபானங்களைப் பற்றிக் கூறும்போது சில இடங்களில் அனுபானத்தின் பெயர் குறிப்பிடப்படாமல் 'தக்கதோர் அனுபானத்தில்' (150) 'நாட்டமுட னனுபானத்தில் இடவே' (158) என்று குறிப்பிடப்படுதலைக் காண முடிகிறது.

துணைமருந்தாகப் பயன்படுத்தப்படும் பொருட்களே மருந்துப் பொருட்களாகப் பயன்படுத்தப் படுதலும் உண்டு. அங்ஙனம் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் மீண்டும் துணை மருந்தாகப் பயன்படுத்தப்படுவதும் உண்டு. சான்றாக 'சுராங்குச மாத்திரை' என்ற தலைப்பில் மருந்துப் பொருட்களைப் பற்றிக் குறிப்பிட்டு முலைப்பால், இளநீர் ஆகியவற்றை ஊற்றி அரைக்கும்படி கூறப்பட்டுள்ளது. பின்பு மீண்டும் துணைமருந்தாக முலைப்பால், இளநீர் ஆகியவற்றில் இட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு மூன்று அனுபானங்களின் பெயர் குறிப்பிடப்பட்டால் ஓர் அனுபானத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும். சான்றாகத் தேன், துளசிச் சாறு (169) என்று இரு அனுபானம் குறிப்பிடப்படும்போது தேன் அல்லது துளிச் சாற்றினை மட்டுமே பயன்படுத்த வேண்டும். மருத்துவர் நோயின் தன்மைக்கும் நோயாளியின் தன்மைக்கும் ஏற்ற வகையில் அனுபானத்தை வழங்குவர். அனுபானத்தைப் பயன்படுத்துவதன் மூலமே மருந்தின் தன்மை மாற்றப்பட்டு வெவ்வேறு நோய்களுக்கு மருந்தாதலும் உண்டு.

### மருந்து உண்ணும் முறையும் அளவும்

சித்த மருத்துவத்தில் பொதுவாக உண்ணும் மருந்துகளுக்கு முறையும் அளவும் குறிப்பிடப் படுவதில்லை. மருந்து உண்ண வேண்டிய நாட் கணக்கு, நேரம், மருந்தின் அளவு ஆகியவற்றைப் பற்றித் தெளிவான சில குறிப்புகள் இந்நூலினுள் காணப்படுகின்றன.

### நாளும் நேரமும்

வாத சுரத்துக்கு 7 நாள், பித்த சுரத்துக்கு 6 நாள், சிலேத்தும சுரத்துக்கு 9 நாள், தொந்த சுரத்துக்கு 10 நாள் (16) என்ற செய்தி இன்னின்ன நோய்களுக்கு இத்தனை நாட்கள் மருந்து உட்கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

''ஏழு நாட்கள் இருவேளை'' (285)

என்பதில் நாளும் நேரமும்

''மூன்று பொழுதில் கொள்ளே'' (106)

என்பதில் நேரமும் கூறப்பட்டுள்ளன.

இங்ஙனமான சில வரையறைகள் மருந்து உண்பதற்குக் குறிப்பிடப்பட்டு இருந்தாலும் பல இடங்களில் இத்தகைய விளக்கங்கள் குறிப்பிடப்படவில்லை. சான்றாகத் ''தக்கோலச் சுரத்திற்கு (306) எந்த வேளையில் மருந்து கொடுக்க வேண்டும் என்ற குறிப்புச் சுட்டப் பெறவில்லை.

### அளவு

மருந்துண்ண வேண்டிய நாட்களும் நேரங்களும் பற்றி ஒரு சில பாடல்களே கூறப்படினும், மருந்துண்ண வேண்டிய அளவு பற்றிப் பல பாடல்கள் கூறப்பெறுகின்றன.

"உளுந்து போல் மாத்திரை" (281)
"ஒருபண எடையளவு உருண்டை" (174)
"காசளவு" (283)
"குன்றி மணியளவு" (153)
"குன்றியளவு உருண்டை" (148)
"தேற்றாங் கொட்டை அளவு" (209)
"நாவால் நக்குகிற அளவு" (263)
"பயறளவு உருண்டை" (149)
"பயறளவு மாத்திரை" (150)
"புன்னைக் காயளவு" (235)
"மிளகளவு குளிகை" (152, 154)
"வன்னியளவு மாத்திரை" (281)

இங்ஙனம் மருந்தின் அளவும், பொழுதும், நாளும் குறிப்பிடப்பட்டு இருந்தாலும் மருத்துவர் நோயாளியின் தன்மைக்கு, நோயின் தன்மைக்கு ஏற்பத் தங்கள் அனுபவ அறிவினைக் கொண்டே மருந்தின் அளவை நிர்ணயிப்பர். மருந்தின் அளவு மருத்துவ நூல்களில் மிகுதியும் சுட்டப்படாமைக்கு இதுவும் ஒரு காரணமாகிறது.

பத்தியம்

பத்தியமென்பது நோயுற்றார், மருந்துண்ணும் காலத்தில் கடைபிடித்தற்குரிய ஓர் ஒழுகலாறு. மருத்துவர், நோயாளி மருந்துண்ணும் காலத்துப் பத்தியம் விதிக்கின்ற நிலையில் நோயாளி வாழும் நிலை, காலம், மற்றும் தட்ப வெப்பம் முதலான பருவச் சூழல் நோயுற்றாரது தொழில் எனும் மூவகைப் புறச் சூழல்களையும் நோயாளியின் உடல் இயல்பு, நோய் இயல்பு அவர் உண்ணும் மருந்தியல்பு என்னும் மூவகை அகச் சூழல்களையும் கருத்தில் கொண்டு பத்தியத்தை நிர்ணயிப்பார். பத்திய நிலையை அதனைக் கடைப்பிடிக்கும் முறைகளைக் கொண்டு இருவகைப்படுத்துவர். அவை இச்சா பத்தியம், கடும் பத்தியம் என்பன. பத்தியம், பட்டினிப் பத்தியம் போல்வன பத்தியத்தின் உட்பிரிவுகளாக விளங்குகின்றன. இச்சா பத்தியம் உணவில் விரும்பியவற்றை விலக்குதல்; கடும்பத்தியம் இவற்றோடு உப்பு, புளி விலக்குதல்.

பத்தியத்தைக் கடைப் பிடித்தற்கு 3 நாள் முதல் ஒரு மண்டலம் வரை காலம் விதிக்கப் பெறும். எனினும், நோயின் நிலைக்கேற்ப பத்தியத்திற்கு உரிய காலம் கூடவோ குறையவோ செய்யும். நோய் முழுமையும் நீங்கா நிலையிலும் நீங்கிய நிலையிலும் உடல் நலம் கருதி பத்தியம் மீண்டும் விதிக்கப் பெறுதல் மறுபத்தியம் எனப் பெறும்.

"...சுரந்தனக்கு முருங்கைக் கஞ்சி
களராதே உப்பொழிந்த கஞ்சி தானே" (220)

என்ற வரிகள் சுரத்திற்குப் பத்தியம் கூறும்போது, கஞ்சியில் முருங்கைக் கீரை கலந்த உப்பில்லாத கஞ்சியினைக் கொடுக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

தோச் சுரத்திற்கு அதிகாலையில் பல் விளக்கி பட்டினி இருந்து வென்னீரினை அருந்தி ஐந்து, ஆறாம் நாட்களில் கஞ்சி கொடுத்து ஏழாம் நாள் கண்டூசம் செய்து (மருந்துப் பொருட்களினால் வாய் கொப்பளிப்பதன் மூலம் வாயினைத் தூய்மை செய்து பேணி) பிறகு 9ஆம் நாள் மருந்து கொடுக்க வேண்டும் (14) என்று கூறப்பட்டுள்ளது.

நாற்பது வகை பித்தம், எண்பது வகை வாதம், இருபது வகை சேத்தும ஆகிய வியாதிகளுக்கு, அரைக்கீரை, அவரைக்காய், மலைத்துவரை, நாரத்தை, ஊறுகாய், இஞ்சி, வெள்ளாட்டுப்பால், முயலின் உப்புக்கண்டம், பால் முதலியவை, பத்தியத்தின்போது உட்கொள்ள வேண்டிய உணவுகளாகும் (240) என்று கூறப்பட்டுள்ளது. மற்றொரு பாடலிலும் உள்ளி, கடுகு, முசலம், தூதுவளங்காய், தண்ணீர், இந்துப்பு, இஞ்சி, வேப்பம்பூ முதலானவை பத்தியத்தின் போது உட்கொள்ளப்பட வேண்டிய உணவுகள் (304) என்று கூறப்பட்டுள்ளது.

சுக்கிலப் பிரமேகம், இரத்தப் பிரமேகம், ஒட்டிய புண், சூலை, கைகால் முடக்கம், கைகால் கறுத்தல் ஆகிய நோய்களுக்கு உப்பு, புளிப்பு கூடாது என்றும், பசுவின் நெய், பால், துவரம் பருப்பு, அரைக்கீரை, சர்க்கரை, பழைய வெல்லம் ஆகியன உப்பில்லாமல் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்றும் கூறப்படுவதைக் காண முடிகிறது.

இங்ஙனம் பத்தியத்தின்போது பட்டினி இருக்க வேண்டிய கால அளவு, சேர்க்க வேண்டிய, சேர்க்கக் கூடாத உணவுப் பொருட்கள் ஆகியன இந்நூலினுள் கூறப்பட்டுள்ளன. பத்திய முறையில் விலக்கப்பட்ட உணவுப் பொருட்களை உண்டால் மருந்து முறிவு உண்டாகும், மருந்தின் ஆற்றல் குறையும்; சில சமயம் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். ஆதலால், பத்திய முறையினைக் கவனமாகப் பின்பற்ற வேண்டும். பத்தியம் சொல்லாதபோது இச்சாபத்தியம் என்று கொள்ள வேண்டும்.

**நூலின் தன்மை**

இந்நூலினுள் ஒரே செய்தி பல இடங்களில் விரவி வருதலைக் காண முடிகிறது. உதாரணமாகச் சன்னி சுரத்தினைப் பற்றிய செய்திகள் 78, 136, 138, 148, 152, 455-459, 485-488 ஆகிய தொடரெண்களை உடைய பாடல்களில் காணப்படுகின்றன. ஒரே வகையான செய்திகள் தொடர்ச்சியாக வருதலையும் காண முடிகிறது. பற்ப வகைகள், சுத்தி முறைகள், எண்ணெய் வகைகள் முதலியன தொடர்ச்சியாக இடம் பெற்றுள்ளன.

140 என்ற எண்ணுடைய பாடலில், முதல் இரண்டு அடிகளில் நோய் தோன்றுவதற்குக் காரணமும், மூன்றாவது அடியில் நோயின் விளைவுகளும், நான்காவது அடியில் நோயின் குறி குணமும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரே பாடலில் செய்திகள் செறிவான முறையில் அமைந்துள்ளது. கர்ப்ப உற்பத்திக் குணம் (327) என்ற

தலைப்பின் கீழ் கர்ப்பத்தினுடைய முதல் மாதத்திலிருந்து பத்தாம் மாதம் வரை பிண்டத்தில் ஏற்படும் மாற்றங்களும், கர்ப்பிணியிடம் தோன்றும் குறிகுணங்களும் அதற்குரிய மருத்துவங்களும் குறிப்பிடப் பட வேண்டும். ஆனால், இடையிடையே செய்திகள் விடுபட்டு முழுமையின்றிக் காணப்படுகிறது.

ஐந்தாம் மாதத்தில் எலும்பு, சீவன், தலைமயிர், நரம்பு ஆகியவை தோன்றுவதாக இந்நூலுள் கூறப்பட்டுள்ளது (411). ஆனால் 7, 8ஆம் மாதங்களில்தான் எலும்பு, நரம்பு, சீவன் முதலானவை உற்பத்தியாகும் (சித்த மருத்துவாங்கச் சுருக்கம், பக்.48, 49).

நோய்களின் எண்ணிக்கைப் பற்றிக் குறிப்பிடப்படும்போது பிற மருத்துவ நூல்களில் காணப்படும் நோய்களின் எண்ணிக்கையிலிருந்து சில பாடல்கள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. நோய்களின் வகைகளும் மாறுபாடுடைய எண்ணிக்கைகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| நோய்கள் | சுவடி எண்ணிக்கை | பிற நூல்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அதிசாரம் | 7 | 8 |
| காமாலை | 9 | 13 |
| கிராணிக் கழிச்சல் | 8 | 11 |
| சூலை | 7 | 15 |
| பாண்டு | 3 | 5 |
| மேகம் | 22 | 20 |
| விப்புருதி | 4 (பா.20-22) | 3 |
| பித்தம் | 30 | 42 |
| கண்ணோய் | 90 (பா.407) | 96 |

சன்னிக்குரிய மாத்திரையின் செய்முறையைக் கூறி மாத்திரையின் பெயர் கூறாமல் விடப்பட்டிருக்கிறது. இச்செய்தி 'நவநாத சித்தரச நாடி' (152) என்ற நூலில் உள்ளதாக நூலினுள் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 'பதினென் சித்தர்கள்' பரம்பரை என்று கூறப்படுவது போல் ஆந்திரத்திலும் அதற்கு வடக்கே உள்ள மாநிலங்களிலும் 'நவநாத சித்தர்கள்' என்ற பரம்பரை இருந்ததாகவும், தமிழகச் சித்தர்களின் இரசவாதக் கலையை வடக்கில் உள்ளவர்களுக்குப் பதினென் சித்தர்கள் பரம்பரையிலிருந்து 'நாகார்ஜுன்' என்பவர் எடுத்துச் சென்று கூறியதாகவும் மருத்துவ நூல்கள் இயம்புகின்றன.

பதிமூன்று வகை சன்னி நோய்களைப் பற்றிக் கூறும்போது தாந்திரிகச் சன்னி என்ற பெயர் இரண்டு முறை இடம் பெற்றுள்ளது. ஆதலால்,

அதனைச் சந்திகச் சன்னி என்று மாற்றிப் பதிப்பிக்கப் பட்டுள்ளது. பதிமூன்று வகைச் சன்னியும் உடலின் மீது வரும்போது அவை உடலில் இருப்பதற்கான நாட்களை சிந்தாமணியின் துணை கொண்டு கூறப்பட்டதாகச் செய்தி காணப்படுகிறது. சன்னிவகை, பதிமூன்றாக இருந்தாலும் கூறப்பட்டுள்ள சன்னிவகைப் பெயர்களின் கூட்டு எண்ணிக்கை பதிமூன்றாகக் காணப்படவில்லை.

சுரம் முப்பத்திரண்டின் குணம் (வாத சுரத்தின் குணம்) என்று தலைப்புக் காணப்படுகிறது. ஆனால் பாடலினுள் இருபத்தி எட்டு சுரங்கள் மட்டுமே குறிப்பிடப் பட்டுள்ளது (434).

'செப்புமதிசாரம் எட்டு விதமாம்' (139) என்ற பாடலில் எட்டுவகை அதிசாரத்தையும் குறிப்பிட முனைந்து முதல் மூன்றும் கூறப்பட்டு எஞ்சியவை குறிப்பிடப்படாமல் விடுபட்டுள்ளன.

'சமான வாயு' நீல நிறம் உடையது. அதன் நிறம் பொன்னிறம் (422) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 'நாக வாயு' என்ற 'கூர்மன் வாயு' பொன்னிறம் உடையது. ஆனால் வெள்ளை நிறம் (423) என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

'கசப்பு மேலும் பொருந்திய கசப்பு மேலும்' (32) என்பது 'கசப்பு மேலும் பொருந்திய இனிப்பு மேலும்' என்று திருத்திப் பதிப்பிக்கப்பட்டு உள்ளது. அதேபோல் 'கப பித்த சிலேத்துமம்' என்பது (32) வாத பித்த சிலேத்துமம் என்று திருத்திப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

மருந்து தயாரிக்கும் முறைபற்றிக் கூறும்போது பல மருந்துகட்கு மருந்துச் சரக்குகளின் அளவு குறிப்பிடப்படவில்லை. ஆயினும், இலகு விசமுட்டித் தைலத்தில் மருந்துப் பொருட்களின் பெயர்களும் அளவுகளும் மயக்கமின்றித் தெளிவான முறையில் எடுத்தியம்பப் பட்டுள்ளது. 254ஆம் பாடலில் ஒவ்வொரு சரக்கின் அளவும் அந்தந்தப் பகுதிகளில் கூறப்படாமல் தொகுப்பாகக் கூறப்பட்டுள்ளது.

49, 75 ஆம் பாடல்களில் சில சொற்கள் மாற்றாகப் பயன்படுத்தப் பட்டிருந்த போதிலும் இரண்டு பாடல்களுக்கும் உரிய பொருள் ஒன்றே. தற்காலத்தில் கூறப்படும் எய்ட்ஸ் என்ற வியாதியின் குறி குணங்கள் இந்நூலில் மகாபூரண சந்திரோதயத் தைலம் (291) என்ற பகுதியில் வரும் குறி குணங்களுடன் ஒத்து இருக்கிறது. அதற்குரிய மருத்துவம் இங்குக் கூறப்படுவதால் அந்த மருந்தினை 'எய்ட்ஸ்' நோய்க்குரிய மருந்தாகப் பயன்படுத்த இயலுமா என்ற ஆய்வு மேற்கொள்ளத்தக்கது.

### மருந்துப் பொருட்கள்

பூசணி நெய் (284, 294) பற்றி இந்நூலில் இரு இடங்களில் வந்துள்ளது. பூசணி என்ற அடிப்படைப் பொருள் ஒன்றாக இருப்பினும் அதனுடன் சேர்க்கக்கூடிய சரக்குகள் சில மாற்றம் பெறுகின்றன. அதாவது, சில சரக்குகள் ஒன்றுபட்டும் ஒருசில மாறுபட்டும் இருக்கும். அத்துடன் ஒன்றில் சரக்கு கூடுதலாகவும், மற்றொன்றில் குறைவாகவும் இருக்கலாம். ஆயினும், மருந்தின் குணம் இவற்றால் தீரக்கூடிய நோய்கள் ஏறக்குறைய ஒரே தன்மையுடையதாக இருக்கும்.

பொதுவாக, இந்நூலில் மருந்து செய்முறைகளின்போது கூறப்படுகின்ற மருந்துச் சரக்குகள் பிற மருத்துவ நூல்கள், நடைமுறை ஆகியவற்றிலிருந்து கூடவோ குறையவோ செய்கின்றன. பூசணி நெய்யின் செய்முறை இரண்டு வகையாக இந்நூலில் கூறப்பட, பிற நூல்களில் சரக்குப் பொருட்களின் எண்ணிக்கைக் கூடுதலாகக் காணப்படுகிறது.

'பூசணி நெய்'க்கு அடிப்படைப் பொருளாகப் பூசணி அமைய, 'அமிர்தக் கலை எண்ணெய்'க்கு (292, 293) அனைத்துச் சரக்குப் பொருட்களும் ஒன்றுபட்டும் வேறுபட்டும் வருகின்றன. எனவே, ஒரே மருந்து பல முறைகளில் பெறப்படுதல் தெளிவாகிறது. வழிவழி அனுபவத்தைக் கைக்கொண்டு மருந்தின் ஆற்றலை அதிகப்படுத்த பலரும் பலவழிகளில் முனைந்ததால் மருந்து செய்முறைகள் நடைமுறையில் வளர்ச்சி மாற்றம் பெற்றிருக்கின்றன.

### சுத்தி முறை

பல வழிகளில் ஒரு மருந்து தயாரிக்கப் பெறுவது போலவே மருந்துப் பொருட்கள் பலவும் பல வழிமுறைகளில் சுத்தி செய்யப்படுகின்றன.

நேர்வாளத்தின் ஓடு நீக்கி பசுஞ்சாணிப் பாலில் வேக வைத்தபின்பு ஆவின் பாலிலும் வேகவைத்து நெய்யில் வறுத்தெடுக்கச் சுத்தியாகும் என்பது 'நேர்வாளச் சுத்தி' (223) பற்றி இந்நூல் தரும் விளக்கம். நடைமுறையில் நேர்வாளச் சுத்தி பின்னுள்ளவாறு செய்யப்படுகிறது. நேர்வாளத்தை ஓட்டுடன் பசுஞ்சாணிப்பால், பசுவின் நீர், எலுமிச்சம்பழச் சாறு இவை மூன்றையும் தனித்தனியே துணியில் முடிந்து போட்டு வேகவைத்து எடுத்து, கழுவி எடுத்து ஓட்டையும், தோலையும் உள்முளை நீக்கி, பசுவின் நெய்விட்டு வறுத்தெடுத்துக் கொள்ள நேர்வாளம் சுத்தியாகும்.

ஒரே பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளில் சுத்தி செய்யப்படுவதையும் இந்நூலுள் காணமுடிகிறது.

### முடிவுரை

இந்நூல் மருத்துவ நூலாக இருப்பினும் புராணச் செய்திகளையும் கணிதம், சோதிடம், சகுனம் முதலான செய்திகளையும் கரு உற்பத்தி, உடலின் அளவு, ஆயுட் காலம் ஆகியவற்றைப் பற்றியும் எடுத்தியம்பும் வகையில் அமைந்துள்ளது. இலக்கிய இலக்கண நயங்களை கனியினுள் சுவை பொதிந்திருப்பதைப் போன்று தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது. மக்களிடம் தோன்றும் வியாதிகளை அதன் குறிகுணங்கள் மூலம் தெள்ளிதின் உணர்ந்து இன்னின்ன பொருள்களைக் கொண்டு, இன்ன வகையில் மருந்து கொடுக்க வேண்டும் என்பன போன்ற செய்திகள் நன்முறையில் எடுத்தியம்பப்பட்டுள்ளன. இக்காலத்தவரும் பிற்காலத்தவரும் பயன்பெறும் வகையில் முன்னோர் தம் அறிவால் தெள்ளிதின் உணர்ந்த மருத்துவச் செய்திகளை எல்லாம் தன்னுள் கொண்டுள்ள இந்நூல் அனைவரும் கற்றுப் பயன்பெறத் தக்க வகையில் அமைந்துள்ளது.

# மூலமும் பொருளும்

## கடவுள் வாழ்த்து

தவழமலை ஆண்டவன் பாதம் துணை
வெற்றிவேல் உற்ற துணை
சொக்கர் துணை
மீனாட்சி அம்மன் பாதமே துணை

### மலசலங் கட்டுப்பட்டதற்கு மருந்து

நல்ல கற்றாழை கொண்டுவந்து ஒரு விளாங்காய் அளவு கற்றாழைச் சோறெடுத்து, நான்கைந்து தரம் கழுவிப் போட்டு, அந்தச் சோற்றில் எலுமிச்சங்காய் அளவு கருப்பட்டி (பனைவெல்லம்), ஒரு சேரை விளக்கெண்ணையும் கூட்டி இதனுடன் சிந்தாமணி மாத்திரையை உரைத்துக் கொடுக்க மலசலம் உடையும்.

### தோடம் அறியும்படி (தோட இயல்பு)

1. தருணச் சுரத்தால் பத்தியத்தால் தணியாத தோட மேதென்னில்
வருண னடுத்தால் சீதளத்தால் வகைமேற் பசும் பரிமளத்தால்
அருணமுகத்து மங்கையரை அணைந்த துக்கம் அதிகோபங்
கருணை புளிப்பு கைப்பினிப்பு கடுகி நடந்தால் வருந்தோடம் 1

(தோடம் உண்டாவதற்கான காரணங்கள்)

தருண சுரத்தாலும், பத்தியத்தைக் கடைப்பிடிக்காததாலும், தணியாத தோடம் உண்டு. தண்ணீரினாலும் குளிர்ச்சி காரணமாகவும், பலவகையான பரிமளத் திரவியங்களைப் பூசி, செம்மை நிறத்தோடு காணப்படும் பெண்களைக் கூடியதாலும், அதிகமான கோபத்தாலும், கருணைக் கிழங்கு, புளிப்பு, கசப்பு, இனிப்பு ஆகிய பண்டங்களின் சுவைகளாலும், அதிவேகமாக நடப்பதாலும் தோடம் உண்டாகும்.

★ 2. பெண்சாதி தொடுகைநெய்ச் சர்க்கரை யெண்ணெய்
பேதிய போசன மெத்தைப்புதுப் புடவை
வெண்சாய கற்பூரம் கஸ்தூரி கந்தம்
வேடியதாம் பூலம் காற்றுவரும் வீடு
தண்சாமம் புடவையுடை தானுமது வாகா
தருணத்தின் விதிப்படியே தான்கண்டு பாரே. 2

மங்கையருடன் அதிகமாகக் கூடுவதாலும், இனிப்புப் பொருட்களை அதிகமாக உண்பதாலும், எண்ணெய், நெய் ஆகியவற்றை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்வதாலும், அவரவர் உடலுக்குப் பொருந்தாத உணவுப் பொருட்களை உண்பதாலும், அவரவர் உடலுக்குப் பொருந்தாத படுக்கையில் படுப்பதாலும், புதிய உடைகளை அணிவதாலும், கற்பூரம், கஸ்தூரி போன்ற மணப்பொருட்களை அதிகமாக நுகர்வதாலும், வாசனைத் திரவியங்களை மிகுதியாகப் பயன்படுத்துவதாலும், வெற்றிலைப் பாக்குத் தாம்பூலத்தை அடிக்கடிப் பயன்படுத்துவதாலும், குளிர்ந்த

காற்று அதிகமாக வீசுகின்ற அமைப்பினை உடைய வீட்டில் வசிப்பதாலும், குளிர்ந்த இரவுப் பொழுதுகளில் தக்க முறையில் உடலைப் பேணாததாலும், அந்தந்தச் செயலுக்கு ஏற்ப தோடம் வரும் என்பதை அனுபவத்தினால் உணர்வாய்.

(அபத்தியத்தினால் வரும் தோட குறிகுணங்கள்)

3. ஆனதோர் பத்தி யத்தில் அருந்துதோ டமது சொல்வேன்
வீணமாய் வாய்ப்பிதற்றி யிதுவலால் மூர்ச்சை யுண்டாம்
மூனமா மந்தா ரத்தின் முகந்ததோர் பிரமை யுண்டாம்
கானமா மார்பு நெற்றி கழுத்தடி வேர்க்குங் காணே. 3

பத்தியம் தவறுதலால் உண்டாகும் தோடத்தின் தன்மை சொல்வேன். வாய் பிதற்றும். மயக்கம் உண்டாகும், சீரணம் கெட்டு வயிறு மந்தமடையும். மனநிலை தடுமாறும். மார்பு, நெற்றி, கழுத்தின் கீழ்ப்பகுதி ஆகிய பகுதிகளில் வியர்வை உண்டாகும்.

(சுரவிடதோடத்தின் குறிகுணங்கள்)

4. காயும் விசதோ டத்துக்குக் கைகால் குளிர்ந்து வயிறெரிக்கும்
பேயும் பிதற்றுந் தாகமுண்டு பேச வரிய வயிறிழியும்
தேயு நாடி குடிலமதாற் றிரிபுர மாகத் தானடக்கும்
மாயுத் தந்திர மிகவுண்டா மறிந்து சொல்வார் மடமாதே. 4

இளமை பொருந்திய பெண்ணே! கைகால்கள் குளிர்ந்து வயிற்றில் எரிச்சல் உண்டாகும்; வாய் பிதற்றும்; தாகம் அதிகம் ஏற்படும். சொல்லவொண்ணாத வயிற்றுக் கழிச்சல் உண்டாகும். பித்தநாடியானது கெட்டு மூன்று பக்கங்களிலும் செல்லும். இத்தகைய குறிகள் கண்டால் இது காய்ச்சலுடன் கூடிய விடதோடம் என்று சான்றோர் அறிந்து சொல்வர்.

(மாதவிலக்குப்புணர்ச்சிதோட சுர குறிகுணங்கள்)

5. சுகசன்னி நடுக்க முற்று சுருட்டியே யெழுந்தி ருக்கும்
அகலது நொந்து நெஞ்சம் அதிகமாய் யெரித்து நிற்கும்
மிகமிகப் பிதற்றுங் கால்கை மிகுதியாய்க் குளிர்ந்தி ருக்கும்
சகமறி விறையுண் டாகுஞ் சாற்றிய வண்ணங் காணே. 5

மாதவிலக்குக் காலத்தில் மங்கையரைப் பொருந்துவதால் உண்டாகின்ற (திரிதோடசுரம் என்னும்) சுகசன்னி தோன்றினால், உடலில் நடுக்கத்தை ஏற்படுத்தும். உடல் சுருண்டு நிமிர்ந்து நெளிகின்ற வகையிலே நெஞ்சில் வலியும் எரிச்சலும் உண்டாகும். வாய் மிகவும் குழறும். கைகால்கள் மிகவும் குளிர்ந்து காணப்படும். உடலில் விறைப்புத் தன்மையும் தோன்றும்.

(விட சீத தோடம்)

6. ஒருமை யாய விசம்சீதம் ஒருக்கா லிருக்கால் நாலுதரம்
பெருமை யாஞ்சு ரம்நடுக்கல் பேணியே விட்டு விட்டேகும்
அருமை யாஞ்சி ரசுநோதல் அதிதா கம்மந் தாரந்தான்
இருமை யாய நாக்குலர்ந்து வெடித்து முன்ப ரந்துநிற்கும் 6

விடசீத தோடம் என்பது ஒருமுறை, இருமுறை, மும்முறை, நான்குமுறை என விட்டு விட்டுத் தோன்றும்போது அதிக சுரமும் நடுக்கமும் ஏற்படும். தலை நோகும். தாகம் அதிகமாக இருக்கும். வயிறு மந்தமடையும். நாக்கு வறட்சியடைந்து உலர்ந்து வெடிப்பு ஏற்பட்டு, நாக்கின் முன்புறமாக முளைகள் தோன்றிப் பரவிக் காணப்படும்.

(மரணக் குறிகள்)

7. நாக்குச் சிவந்து முள்பிறந்து நன்னீரி னிறம்போல் சிவந்திருக்கும்
தேக்கிக் காயுந் தாகமுண்டு தெளிந்தே வேர்வு சிகமென்னே
ஊக்கி உடலும் நொந்திருக்கும் உலகோ ரறிய வுரைத்தோம்நாம்
பாக்குத் தின்னும் துவர்வாய் பரிந்தே நாளும் ஏழென்னே. 7

நாக்கு சிவந்து முளைக்கட்டுகள் முள்போலத் தோன்றி இரத்தம் போலச் சிவந்திருக்கும். காய்ச்சல் குறையாமல் தகிக்கும். தாகம் தோன்றும். உடல் வியர்க்கும். வலி உடல்முழுதும் வேதனை செய்யும். பாக்குத் தின்னும் ருசியைப் போல நாக்கு (வாய்) துவர்ப்புச் சுவை உடையதாய் இருக்கும். இந்தக் குறிகள் கண்டால் ஏழுநாளில் உயிர் துறப்பார் என்பதை உலகிலுள்ளோர் அறிவாராக.

8. சிவேத சிவக்கஞ் சுரமுண்டாம் சிதற வேர்வை மறுமையுண்டு
நீத நாக்கு பசுத்துமுள்ளு நிறைந்தே வெடித்து ரோகமுண்டாம்
ஓதத் தொண்டை நெரிகுரலாம் ஒளிசேர் நாளும் பதினைந்தாம்
நாதப் பண்சொல் மொழிமடவாய் நாடிக் கொள்வாய் நாள்குறியே. 8

உடல் சிவந்து காணும். சுரம் உண்டாகும். வியர்வை பெருகும். நாக்கு நிறம் மாறி முள்போல் முளைகள் நிறைந்து வெடித்துக் காணப்பட்டு அதிக வேதனையை உண்டாக்கும். தொண்டை இறுகிக் குரல் கொடுக்கும். நாதமொழி பேசும் பெண்ணே! இத்தகைய குறிகள் கண்டால் 15 நாளில் மரணம் உறுதியாக ஏற்படும்.

9. முன்னே பரந்து கறுப்பேறி முதிரும் வாளி போல்நாக்கு
முள்ளே தினவும் வேர்வையுண்டாம் முகந்த தாகம் பிறம்பச்சொல்
கொள்ளே உப்பிசந் தானுண்டு கோடா நாளும் பதினைந்தாம்
வள்ளே காது மடமானே வாகடங் கண்டு சொல்வாயே. 9

வள்ளைப் பூப் போன்ற அழகிய செவியுடைய பெண்ணே, சுரசுரப்பாகவும், சுனைகளோடும் முன்புறம் பரந்து கறுப்பு நிறம் அடைந்து நுனிப்பகுதி அம்பின் முனைபோல் விளங்கும், குதிரைவாலி என்ற தானியத்தின் கதிர்போல நாக்கானது முன்புறம் பரந்து கறுப்பு நிறம் அடைந்து காய்ந்திருக்கும். நாக்கில் உள்ளே அரிப்பு உண்டாகும். வியர்வை பெருகும். தாகம் மிகும். சொல் தடுமாறும். சீரணம் கெட்டு வயிறுப்பிசம் உண்டாகும். இத்தகைய குறிகள் தோன்றினால் பதினைந்து நாட்களில் மரணம் என்று வாகட நூலை ஆராய்ந்து கூறுவாயாக.

(நோயின் அசாத்திய குறிகுணங்கள்)

10. கடைக்கண் இரத்த மில்லாமல் காது கேட்க வாராமல்
அடுத்த சுரமுந் திரிபுரமா யல்லா திருக்கிற் புளிகையது
கடுத்த முகமுங் காந்தியற்று கைகால் மூக்கு மார்புதொப்புள்
விடுத்த குளிர்மை வலிப்புவிக்கல் மேனி நாற்ற மெய்ப்பிதற்றும் 10

கடைக்கண்ணிலே இருக்க வேண்டிய குருதியோட்டம் இயல்பாக இருக்காது. காது கேட்காமலும் சிவபெருமான் எரித்த திரிபுரம் போல சுரம் காய்ந்திருக்கும். வயிற்றில் புளித்தன்மை மிக்கிருக்கும். முகம் ஒளியிழந்து கடுகடுப்புடன் காணப்படும். கை, கால், மூக்கு, மார்பு, தொப்புள் ஆகிய உடற்பகுதிகள் குளிர்ந்து காணப்படும். விக்கலும் வலிப்பும் தோன்றும். வாய் பிதற்றும். உடல் நாற்றமெடுக்கத் தொடங்கும். இத்தகு குறிகள் கண்டால் பிழைத்தல் அரிது.

11. பிதற்றுந் தலையு மிகநடுக்கும் பேசுந் தொண்டை சேத்துமந்தான்
நதியா கத்தொட் டுநிற்கு மரிய பேச்சில் கொதிதொனியாம்
கதித்த கண்ணும் விரிந்திருக்கும் கடுகி நாடி மிகநடக்கும்
பதித்த குணங்க ளிவைகண்டால் பார்க்கத் தீரா தென்றுரையே 11

தலையில் நடுக்கம் மிகவுண்டாகும். வாய் பிதற்றும். பேச இயலாதவாறு தொண்டையில் கபம் மிகுதியாகக் கூடிநிற்கும். அரிதாக எழும் பேச்சும் சுரம் காரணமாக குறைந்த தொனியில் கேட்கவியலாதவாறு இருக்கும். கண்கள் அகல விரிந்திருக்கும். நாடி மிக விரைவாக நடக்கும். இத்தகைய குணங்கள் காணப்பெற்றால் பீடிக்கப்பட்ட நோய் தீராது என்று அறியலாம்.

(நாடி பார்க்கக் கூடாதவர்கள்)

12. உறங்கியே யெழுந்தி ளைத்து உபவாசமு மிருந்த போர்க்கும்
கரங்குபோ லடைந்து கஞ்சாக் கனமது உண்ட போர்க்கும்
அறங்கொளா அயச்சு மாறி அதிகோபம் பேய்பி டித்தான்
நிறங்கொளா பெண்பு ணர்ந்த பேர்க்குநிச் சயப்ப டாதுநாடி 12

உறக்கத்திலிருந்து எழுந்தவர்களுக்கும், உடல் இளைத்தவர்களுக்கும், பட்டினி நோன்பு இருந்தோர்க்கும், ஓரிடத்திலே அடைப்பட்டவாறு இருந்து கஞ்சா பயன்படுத்துபவர்களுக்கும், மது உண்டவர்களுக்கும், மிகுந்த கோபம் உடையவர்க்கும், அறங்கொளாது மாறுதல் குணம் உடையவர்க்கும், சிற்றின்பம் செய்தவர்க்கும் நாடி நடை தெளிவாக இருக்காது.

சுரம் வந்தபின் மருத்துவம் செய்யும்
(பக்குவம் (i)

★ 13. சுரம்வந்து சொலிக்க லுற்றால் சொல்லிய நாளுங்
கரமிடல் கீழா வையகி கால்முகம் பல்வி ளக்கி
பரமுட லங்க ளந்தான் பரிந்துநீர் வெந்நீர் கொண்டு
உரம்பெறு வஞ்சு நாளில் உகந்துடன் கஞ்சி வாரே. 13

நாடி பார்த்து மருத்துவர் நாடிநடைத் தெளிவு காரணமாக, உடல்நிலை அறிந்து தெளிவாகச் சொன்ன ஒரு நாளில் இடக்கை கீழாகப் படுக்குமாறு செய்யவும். வைகறைப் பொழுதில் கை, கால், முகம் கழுவி, பல் விளக்கி வெறும் வயிற்றில் பரிவுடன் நோயாளிக்கு வெந்நீர் கொடுக்க வேண்டும். நோய் நீங்கி உடல் வன்மை பெற ஐந்து நாட்களுக்கு மகிழ்வுடன் கஞ்சி கொடுக்க வேண்டும்.

(பக்குவம் (ii)

14. வாராறு நாளுங் கஞ்சி வகைபெற வேழா நாளில்
பேராறுங் கண்டூசம் பண்ணிப் பேணியே மருந்தை யீய
ஓராநா ளொன்ப தாநா ளுகந்துட னீதல் நன்று
வீறான காய்ச்சல் விட்டால் விரோசனக் குளிகை கொள்ளே. 14

ஆறாவது நாளும் கஞ்சி கொடுக்க வேண்டும். ஏழாம் நாளில் வாய் கொப்பளிக்கச் செய்து, பேணிப் பின் மருந்தைக் கொடுக்க வேண்டும். ஒருநாள் தொடங்கி ஒன்பது நாள் மருந்து கொடுத்து, காய்ச்சல் நீங்கிய பிறகு பேதியாவதற்குரிய மாத்திரை கொடுக்க வேண்டும்.

(பக்குவம் (iii)

15. கொள்ளுநீ யவிச தந்தான் கொடுஞ்சுர மத்தி யத்தில்
மெள்ளவே கஞ்சி தானும் மென்பித்த மிரண்டாஞ் சாமம்
தள்ளொன்னா வாத மானால் தாதுக்கு மூன்றாஞ் சாமம்
எள்ளொண்ணாச் சேத்து மத்துக் கோர்பெரு மத்தி யானம் 15

சுரநோய்க்கு மருந்து கொள்ளும்போது, பித்தச் சுரத்திற்கு இரண்டாம் சாமத்திலும், வாதச்சுரத்திற்கு மூன்றாம் சாமத்திலும் சேத்துமச் சுரத்திற்கு மதிய வேளையிலும் பத்தியமாகக் கஞ்சி கொடுத்து மருந்து தர வேண்டும்.

(பக்குவம் (iv)

16. வாதச் சுரத்துக் கேழு நாள் வகுத்த பித்த மாறுனாள்
ஓது மைய மொன்பதுநாள் உகந்த தொந்தம் பத்துநாள்
நீதஞ் சொன்ன வகைகண்டு நில்லாச சுரமும் பக்குவமாம்
பாதம் பெரிய சுரத்துக்குப் பகுத்த நாள றிந்துகொள்ளே 16

சுர நோய்களுக்கு மருந்து கொடுக்கும் நிலையில், வாதச் சுரத்திற்கு ஏழுநாட்களும், பித்தச் சுரத்திற்கு ஆறு நாட்களும், சிலேத்துமச் சுரத்திற்கு ஒன்பது நாட்களும், தொந்தச் சுரத்திற்கு பத்து நாட்களும் பக்குவமறிந்து மருந்து கொடுக்க எல்லாச் சுரங்களும் நீங்கும். யானைக்கால் சுரத்திற்கும் இவ்வாறு பக்குவமறிந்து மருந்து கொடுக்க வேண்டும்.

(நோயாளியின் குறிகுணங்கள்)

17. விருத்தர்க்கும் கர்ப்பி ணிக்கும் வியனுடம் பிளைத்த பேர்க்கும்
வருத்தது சயரோ கிக்கும் வழிநடந் திளைத்த பேர்க்கும்
நிறுத்தது அதிசா ரத்த நேத்திர ரோகி பாலர்
கறுத்தற்கு மலங்க ண்தன் னாகாது கண்டு கொள்ளே 17

வயது முதிர்ந்தோர்க்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும், உடல் இளைத்தவர்க்கும், சய நோயாளர்க்கும், வழி நடந்து வந்ததால் களைத்த வர்க்கும், பேதியானவர்கட்கும், கண்ணோய் உள்ளவர்க்கும், மலம், நாக்கு, காது கறுத்துக் காணப்படும்.

(நோய் வகுப்பு)

(கணபதி வணக்கம்)

18. ஆயுள் வேதந் தன்னி லடவுள வடநூல் தன்னைத்
தாயெனக் கண்டு கண்டு தமிழினால் விரிப்ப தற்கு
மாயன்மால் மருகோன் மிக்க வல்லபை யிடத்தோன் கங்கை
காயமாம் பரமா னந்த கணபதி வணங்கச் செய்வாம். 18

ஆயுர் வேதத்திற்குரிய வடமொழி நூல்களைத் தாயாகக் கொண்டு தமிழில் வழிநூல்களை விரிப்பதற்கு, திருமாலின் மருகனும், வல்லபையின் துணைவனும், கங்கையைத் தலையில் அணிந்த ஈசனாரின் மைந்தரான கணபதியை வணங்கி அவனருளை வேண்டுவாம்.

(மருத்துவர் இலக்கணம்)

19. சீலனா சார னாகில் சிறந்தவிற் பன்ன னாகில்
ஊரலனா னியுமாய் மண்மேல் மக்கள்பால் வியாதி தன்னைக்
கோலமாய்த் தன்பா லுள்ள குணாகுண தோடங் கண்டு
பால்தரு மன்னை போலப் பண்டித னாவ னன்றே. 19

ஒழுக்கம் உடையவனாய், புலமையுடையவனாய், சிறந்த வல்லமையும் ஞானமும் உடையவனாய், நிலவுலகத்திலே வாழ்கின்ற மக்களின் நோய்களை அவர்களிடம் உள்ள குறிகுணங்களைக் கண்டு அறிந்து, பால் கொடுக்கின்ற தாய் போலப் பரிவுடன் மருந்து கொடுத்துக் காப்பவனே மருத்துவன் ஆவான்.

(நோய்-நோய்வகை I)

20. கும்பகா மாலை யொன்பான் குட்டமீ ரொன்பான் மேகம்
பண்பிரு பத்தி ரெண்டு பாண்டுவு மூன்றே யாகும்
துன்பமான குன்ம மெட்டு சூலையு மேழே யாகும்
நின்பநீர்க் கழிச்ச லேழு யெடுத்திடுங் கிராணி யெட்டே. 20

வயிற்றை இடமாகக் கொண்டு தோன்றுகின்ற காமாலை நோய் ஒன்பது வகை ஆகும். குட்ட நோய் பதினெட்டு வகைப்படும். மேக நோய் இருபத்திரண்டு வகை. பாண்டுநோய் மூன்றேயாகும். குன்ம நோய் எட்டு வகையாகவும், சூலைநோய் ஏழுவகையாகவும் உள்ளன. அதிசாரம் எனும் கழிச்சல் எழு வகைப்படும். கிராணிக் கழிச்சல் வகை எட்டு ஆகும்.

குறிப்பு: காமாலை-13, மேகம்-20, பாண்டு-5, சூலை-15, அதிசாரம்-8, கிராணி கழிச்சல்-11 என்ற வகையில் நோய்களின் எண்ணிக்கை பிற மருத்துவ நூல்களில் காணப்படுகின்றது.

(நோய்-நோய்வகை-2)

21. உள்ளழல் மாந்தை மூன்று ஓங்கிய காச மேழும்
தெள்ளிய வண்டத் தேறு சேர்பவுத் திரங்கள் ஐந்து
கள்ளமாம் விழியிற் றோன்றுங் கண்ணில்நோய் தொண்ணூற் றாறு
தெள்ளிய சிரசில் வாயு சிக்கென மூன்றே யாகும். 21

உள்வெப்பத்துடன் கூடிய அழல்மாந்தை மூன்றுவகைப்படும். காசநோய் ஏழு வகை. பவுத்திர நோய் ஐந்து வகை. கண்ணோய்கள் தொண்ணூற்றாறு வகை. வாயு காரணமாக ஏற்படும் நோய் மூன்று ஆகும்.

குறிப்பு: உளமாந்தை-4 வகை; பவுத்திரம்-8 வகை; காசம்-5 வகை; தலையில் தோன்றும் வாதநோய்-10 வகை என்ற வகையில் நோய்களின் எண்ணிக்கை பிற மருத்துவ நூல்களில் காணப்படுகிறது.

(நோய் - நோய்வகை-3)

22. சுரமறு பத்து நாலு தொடுசன்னி பதின்மூன் றாகும்
நிரதவிப் புருதி ரோகம் நிச்சயம் மூன்றே யாகும்
மரமெனச் சேர்த்தி விக்கும் வலுதனுர் வாத மொன்று
கரம்விரி காந்தள் கண்டு கண்டுகொள் வியாதி நோக்கம் 22

சுர நோய்கள் அறுபத்து நான்கு வகையாகும். சன்னிபாத நோய் பதின்மூன்று ஆகும். விப்புருதி நோய் மூன்று வகைப்படும். தனுர்வாத நோய் ஒன்றேயாகும். காந்தள் மலர்களின் இதழ்கள்போல் விரல்களை வைத்து நோய்களைக் கண்டு கொள்ளலாம்.

குறிப்பு: விப்புருதி -4

(நோயின் முக்கியப் பிரிவு)

(வேறு)

23. வாத மெண்பது வன்பித்தம் நாற்பது
ஏத மின்றி யிருபது சேத்துமம்
வீதி தன்னில் விடுவது போவதாய்
மோது கின்றதோர் மூன்று முகங்களே. 23

உலகில் மாந்தருக்கு உண்டாகும் நோய்கள் யாவுமே வாதம், பித்தம், கபம் என்ற இம்மூன்றில் அடங்கும். இம்மூன்றும் நோயின் மூன்று முகங்கள். இம்மூன்றினுள், வாத நோய்கள் எண்பது வகைப்படும். பித்த நோய்களின் எண்ணிக்கை நாற்பது ஆகும். சேத்தும நோய் இருபது வகையினையுடையது. உடம்பு என்னும் வீதியில் வாதம், பித்தம், கபம் இம்மூன்றும் ஒன்றுக்கொன்று கலந்தும், விடுவதும், போவதுமான தொழில்களைச் செய்து பல்வேறு நோய்களைத் தோற்றுவிக்கின்றன எனலாம்.

(வாகடக் கோட்பாடு)

(வேறு)

24. குறியுல கேத்தி தானே குறித்தநா லாயி ரத்தி
நறிவரு நானூற்று நாற்பத் தெட்டென வரைவான மப்ப
பொறிபு லாதி கள்பு ராரிதன் பாதம் போற்றி
நெறியுறு புவியில் தானே நிகழ்த்துவா கடம தன்றே. 24

இவ்வுலகில் தோன்றக்கூடிய நோய்கள் மொத்தம் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு என்று கடவுளை வணங்கி உலகிற்குக் கூறுவது மருத்துவ நூலாகும்.

(நோய்களின் வகைகள்)

25. ஆயிரத் தெட்டு நாவி லடங்காத வல்ல பத்தால்
மாயுறு விசும்பிட் டேறு மலர்யென வகுத்த நோய்கள்
ஏயதோர் வினையால் முந்நூற் றறுபதென் றியம்பு நோயில்
பாய்கதிர் சுரவி யாதி பக்கநூற் றெட்டென் றோதே. 25

வகைப்படுத்தி வகுக்கப்பட்ட நோய்கள் *360*, சுரநோய்கள் *108* ஆகும்.

26. நூற்றுட னெட்ட தாகி நுகர்ந்திடும் வியாதி தன்னில்
போற்றிடு மதின்வி யாதி புலர்ந்திடு முப்ப தென்று
சாற்றிய நோய்க ளெல்லாம் தலைவனாம் வாத பித்தம்
சேற்றும மென்று ரைத்து திரிவித வியாதி யாமே. 26

கொடிய நோய்களாகச் சுட்டப்படுகின்ற நூற்றியெட்டு நோய்களில் முதன்மை பெறுவன முப்பது நோய்களாகும். இவ்வித நோய்கள் யாவற்றுக்கும் தலைவனாக விளங்குவது வாத பித்த சேத்துமம் என்னும் முத்தோட நோயே ஆகும்.

(வாதநோய் - இடமும் வகைகளும்)

27. திரிவித வியாதி தன்னில் செப்புவன் வாத மென்ன
குறியுறு சிரசில் பத்து குலவிய செவியில் நான்கு
நெறியுறு வாயில் பதினேழ் நிகழ்த்தினோம் மூவேழ் கண்ணில்
தெறியுறு காதிற் றோன்றும் செப்புக விரண்டு நோயே. 27

வாத பித்த சிலேத்துமம் என்னும் மூவித நோய்களுள் வாதநோய் இடத்தை ஆய்வோமானால், தலையில் பத்தும், செவியில் நான்கும், வாயில் பதினேழும், கண்ணில் இருபத்தொன்றும், காதில் இரண்டும் என அமையும்.

28. செப்புக மூன்று மூக்கில் சிறந்தகன் னத்தில் நாலு
மெய்ப்பது இரண்டு நெற்றி விளங்கிய பிடரி யொன்று
ஒப்புறு காதி லேழு உரைத்திடும் வாதம் பத்து
தப்பிடு வாத சன்னி தானொரு பத்து மூன்றே. 28

மூக்கில் மூன்றும், கன்னத்தில் நான்கும், நெற்றியில் இரண்டும், பிடரியில் ஒன்றும், காதில் ஏழும், அன்றிப் பொதுவில் பத்துமாக வாதநோய் எண்பது ஆகும். வாதச் சன்னி பதின்மூன்று ஆகும்.

(வாத நாடியின் இயல்பு)

29. புளிமேலும் மோரின் மேலும் பொருந்திய வசன மேலும்
கனிவான தயிரின் மேலும் காடிமே லினிமை யாகி
வலுவான வாத மென்று வையகந் தன்னின் மீதே
தெளிவாக உரைத்தோம் நாடி தன்னைநீ தெரிந்து சொல்லே. 29

புளித்த மோர், உணவு, பொய்யை மெய்யாகப் பேசும் பேச்சு, தயிர், காடி (புளித்த நீராகாரம்) இவற்றின் மேல் விருப்பு ஏற்படுத்துவது வாதத்தின் செயல் என்று அறியலாம்.

(பித்த நாடியின் இயல்பு)

30. வெதும்பிய நீரின் மேலும் மேவிய புளியுப்புமேலும்
கசந்ததோர் பதார்த்த மேலுங் கருத்தது வைக்கு மாகில்
பதம்பெறும் பித்த மென்னப் பாருல கத்தின் மீதே
இதம்பெறச் சொன்னோம் நாடி தன்னைநீ தெளிந்து சொல்லே. 30

காய்ச்சிய நீர், புளி, உப்பு, கசப்புள்ள காய்கறிகள் இவற்றின்மேல் ஆர்வம் உண்டாகுமாயின், பித்தத்தின் செயலென்று தெரிந்து கொள்ளலாம்.

(சிலேத்துமத்தின் இயல்பு)

31. இனிப்புள்ள கறிகாய் மேலும் இனியபண் டத்தின் மேலும்
கனிப்புள்ள பெண்கள் போகங் காண்பதற் கிச்சை யாகி
தொனிப்புள்ள சிலேத்தும மென்று துய்யலோ கத்தின் மீதே
தனிப்புட னுரைத்தோம் நாடி தன்னைநீ யறிந்து சொல்லே. 31

இனிப்பு மிக்க காய்கறிகள், சுவைமிகு தின்பண்டங்கள், மங்கையரோடு கூடிப்பெறும் இன்பம் ஆகியவற்றின் மீது ஆர்வமுண்டானால், அது சிலேத்துமத்தின் செயல் என்று அறியலாம்.

(வாத பித்த கப தொந்த இயல்பு)
(வாத குணம்)

32. புளிப்புமே கசப்பு மேலும் பொருந்திய இனிப்பு மேலுங்
களிப்புட னிச்சை யாகில் வாதபித்த சிலேத்து மமென
கசப்புமே லினிப்பு மேலுங் கருதிய புளிப்பு மேலும்
பழிப்புட னிச்சை யாகில் பயித்தியசி லேத்தும வாதம். 32

புளிப்பு, கசப்பு, இனிப்பு என்று முறையே மூன்றின் மேலும் விருப்பம் வரின் அது வாத பித்த சிலேத்துமத் தொந்தம் ஆகும். கசப்பு, இனிப்பு, புளிப்பு என்றவாறு இச்சை உண்டானால், அது பித்த சிலேத்தும வாதத் தொந்தம் ஆகும்.

(திரிதோடத்தின் இயல்பு)

33. இனிப்புமேல் புளிப்பு மேலும் மிசலிய கசப்பு மேலும்
வனப்புட னிச்சை யாகில் சிலேத்தும வாத பித்தம்
இனிப்புடன் கசப்பு கைப்பு இயல்புளி துவர்ப்போ டாறும்
மனத்தினில் பிரிய முற்றால் மந்தித்துத் தோன்றுங் காணே. 33

இனிப்பு, புளிப்பு, கசப்பு என்று முறையே இச்சை ஏற்படின், சிலேத்தும வாத பித்தத் தொந்தம் ஆகும். இவ்வாறன்றி, இனிப்பு முதலான அறுசுவை மீதும் விருப்பமுண்டாயின், திரிதோடமும் கலந்து நிற்கும்.

(தீரும் சுரநோய்க்குரிய நாடி இயல்பு)

34. சுரமென்றால் வாதம் வேண்டும் பித்தமுஞ் சற்றே வேண்டும்
கரமென்ற அய்யஞ் சற்றே கலந்துட னிருக்க வேண்டும்
திரிகின்ற மூன்றுந் தன்னில் வாதமே அதிக மாகில்
வரவென்ற சுரத்தோர்க் கெல்லாம் மரணமு மில்லை தானே. 34

சுரநோய் வாதம், பித்தம், சிலேத்துமம் என்ற மூன்றுமே தம்முள் கலந்த நிலையில் தோன்றுவது. இம்மூன்றினுள், வாதம் அதிகமாக நிற்பின், அந்நோயாளர்க்கு நோயினால் மரணமில்லை.

(தோட சுரத்தின் நாடி இயல்பு)

35. துலங்கிய தோடந் தன்னைச் சுரத்திலே காண வேண்டி
வலக்கையைப் பிடித்து வாங்கி மருளற விரல்கள் மூன்றில்
நலங்கிளர் இரண்டுங் கெட்டுக் கடைசிமேல் வாத முற்றால்
துலங்கிய தோட மென்றே சிந்தையில் துணிந்து காணே. 35

சுரநோய் உற்றவர் தம் வலக்கையைப் பிடித்து மூன்று விரல்களால் நாடி பார்க்க, பித்தம், சிலேத்துமம் இரண்டு நாடிகளும் கெட்டு வாதம் மேல் நிற்குமாயின், அது தோடச் சுரம் எனத் துணிந்து கூறலாம்.

(சுரத்தின் காலமும் தோடத்தின் தன்மையும்)

36. சுரம்விழீல் மூன்று நாளில் சொல்லிய ஐந்து ஆறில்
பிறந்தொரு தோடம் வந்தால் பார்க்கவும் வேண்டாம் சொன்னோம்
அறந்தரு மேழு நாளில் அப்புறம் வந்த தோடம்
நிரந்தர மாகத் தீரும் நிச்சய மென்று பாரே. 36

சுரத்தில் விழுந்த மூன்றாம் நாள், ஐந்தாம் நாள், ஆறாம் நாள் ஆகிய நாட்களுக்குள் தோடம் தோன்றினால் அவர் பிழைக்க வாய்ப்பில்லை. ஏழாம் நாளிலோ அதற்குப் பின்போ தோடம் தோன்றுமாயின் அத் தோடம் நிச்சயமாகத் தீரக் கூடியது.

(நாடியின் தன்மையும் அசாத்திய இயல்பும்)

★ 37. துடித்திடும் ......வி னையதாஞ் சுத்தமாய் அமர்ந்து நிற்கில்
அடுத்தநாள் தன்னில் மாள்வார் அல்லது அசைவு காட்டில்
தொடுத்தநா ளைந்தில் மாள்வார் சூழ்ந்தநா ளென்று கண்டு
தொடுத்தநாள் மாதம் பாதி சொல்லிடும் பசித்துத் தானே. 37

நாடியின் இயக்கம் முழுமையாய் அடங்குமானால் மறுநாளே மரணமடைவர். ஓரளவே அசைவைக் காட்டி நின்றால், ஐந்து நாட்களில் மரணமடைவர். தோடம் ஏற்பட்ட நாளைக் கண்டு ஆய்ந்து மாதத்தின் பாதி நாளாகிய பதினைந்து நாட்களுக்குள் நோயாளியின் அசாத்திய நிலையைக் கூறவியலும்.

(மூவகை நாடியின் நடை இயல்பு)

38. சேத்தும மதிக மானால் சித்தியிற் துடிப்புக் குன்றி
ஆற்றுமீன் பாய்ச்சல் போலே தவழ்ந்தவை பித்தந் தோன்றி
மேச்சிய வாதம் வந்தால் குணமதா மென்று சொல்லும்
சாத்திர மதுவே யென்று சாற்றினார் செகத்துள் ளோர்க்கே. 38

சேத்துமம் அதிகமானால் நாடியின் துடிப்பு குன்றும். ஆற்றுமீன் போல் துள்ளிப் பாயும் நடை பித்தத்திற்குரியது. அன்றி, வாதநடையை நாடி உணர்த்துமானால், நோய் நீங்கி நோயாளர் குணம் பெறுவர் என்பது மருத்துவ நூற்கருத்து.

(நாடியின் சாத்திய அசாத்தியநிலை)

39. பட்டமே விழுந்த போது கயிறது படியல் போலத்
திட்டமாய் நாடி கண்டால் இரண்டுநாள் மூன்று நாள்பின்
கட்டமா யவுச தங்கள் கண்டபின் கருது மென்று
திட்டமா யுரைத்தோர் மேலோர் சிந்தையி லறிந்து கொள்ளே. 39

பட்டமானது கீழே விழும்போது, அதன் நூல் தரையில் படிவது போல நாடிநடை தோற்றந் தருமானால், இரண்டு மூன்று நாட்கள் சென்றபின் மருந்து கொடுத்துப் பார்த்து அதன்பின்தான் நோயாளரின் சாத்திய அசாத்திய நிலை பற்றியறிய முடியும்.

(நாடியின் சாத்திய நிலை)

40. அற்றதோர் பட்டத் தோடே கயிறுந் தோடல் போலே
மற்றதோர் நாடி கண்டால் மறுவிசம் அஞ்ச னந்தான்
சத்திவேர் உரைத்துப் போட்டால் திரும்பிய சுருக்கில் நிற்கில்
பற்றியே பாரு மென்னப் பகர்ந்தனர் பாருள் ளோரே. 40

பட்டம் அறுந்தவுடன், நூலானது அறுந்து ஓடுவது போல, நாடித்துடிப்பு காணப்பட்டால், சத்திச்சாரணை வேரை அரைத்துக் கண்ணில் மைபோல் இட, உடனடியாக நாடித்துடிப்பு நேராகும். இதனை நாடித் துடிப்பைப் பார்த்து அறிய வேண்டும் என்று உலகிலுள்ளோர் கூறியுள்ளனர்.

(நாடியின் அசாத்திய நிலை)

41. பட்டந்தா னாடிச் சேதான் பார்க்கிற பேர்க ளெல்லாம்
பட்டத்தின் கயிறு தன்னைப் பற்றியே விழுக்கல் போலச்
சட்டமாய் நாடி கண்டால் காலமு முடிந்த தென்று
திட்டமாய்ச் சொன்னோம் நாடி தன்னைநீ தெரிந்து சொல்லே. 41

பட்டம் ஆடும்போது அதனைப் பார்க்கின்றவர்கள் அதன் கயிற்றைப் பிடித்து இழுப்பதைப் போல் நாடித்துடிப்பு இழுபட்டுக் காணுமாயின் மரணம் உறுதியென்று தெளிவாகக் கூறலாம்.

(மூவகை நாடி குணம்)
(வேறு)

42. வாத பித்தமும் சிலேத்துமமு மற்றுப்பின்
போத மாகவே பேதித்து நாடிதான்
பூமிமீ தில்லை யென்றிவை பொங்கிடில்
நாத னாணையக் கால்மா ளுவரே. 42

வாத பித்த சிலேத்தும நாடி அற்றுப்போய் முரண்பட்டு, பூத நாடி எனப்படும், பித்தநாடி, பொங்கிக் காணப்படுமானால், அந்நோயாளர் மாண்டு போவார்.

(நாடியின் சாத்திய அசாத்திய நிலை)

(வேறு)

43. ஓங்கிய பித்த மேலாய் உயர்வாதங் கீழே நோக்கில்
தாங்கியபின் அனேக நாளில் தணியுமே நோவு தானும்
ஓங்கிய வாதம் மேலாய் உயர்பித்தங் கீழே நோக்கில்
பாங்கினில் மரண மென்று பண்புடன் மொழிந்திட் டாரே. 43

பித்த நாடியானது மேலாகவும், வாத நாடியானது கீழாகவும் இருந்தால், பல நாட்களுக்குப் பின் நோய் குணமாகும். வாத நாடியானது மேலாகவும், பித்த நாடியானது கீழாகவும் இருந்தால் மரணம் நேரும்.

44. நாபியி லெழுந்த நாடி நாவினில் மார்பு கண்டம்
தாவிய தந்தம் நெற்றி தருசெவி நாசி யெல்லாம்
மேவியே பிழைப்பா னாகில் வெதும்பிடுஞ் சாவ தென்றால்
கூவிய பல்இறுகி காது குளிர்ந்திடும் நாசி தானும் 44

நாபியிலிருந்து தோன்றிய நாடியானது, நாக்கு, மார்பு, கழுத்து, பல், நெற்றி, காது, மூக்கு முதலான இடங்களில் எல்லாம் பரவி நோய் குணமாகிப் பிழைப்பான் என்றால் மேற்சொன்ன இடங்களில் வெப்பமடைந்து நாடி தெரியும். சாவதென்றால் கூவிய பேச்சு பல்கிட்டி காதும் நாசியும் குளிர்ந்து போகும்.

(நாடி பார்க்க ஏற்ற இடங்கள்)

45. ஆசிலா நாடி பார்க்கு மந்நிலை யுரைக்கக் கேளுமின்
ஓசையால் உபைய நாபி ஒளிதரும் மார்பு முன்கை
வீசிய குறிச்சிக் கட்டு மென்கர நெற்றி உச்சி
காசினி யறியச் சொன்னோங் கண்டுதான் தாது நூலே 45

நாடி பார்க்கின்ற நிலையினைக் கூறக் கேளாய். நாபி, மார்பு, முன்கை, மணிக்கட்டு, நெற்றி, மென்கரம், உச்சந்தலை ஆகியன நாடி தெரியும் இடங்களாகும்.

(நாடியின் அசாத்திய நிலை)

46. நடிக்கும் நாடி மிகப்பதறி நாவும் பல்லும் மிகவரளும்
விடுக்கும் மேனி மிகக்குளிரு மெலிந்தே மூச்சு மிகவுண்டாம்
அடுக்குஞ் சேத்துமம் ஆர்ப்பரிக்கும் அதிக அண்டந் திறந்திளைக்கும்
தொடுக்கு மிவைகள் உண்டாகில் தோற்கு முயிர றிந்துகொள்ளே 46

நாடித்துடிப்பு பதறி நடந்தால், நாக்கு, பல் ஆகியன மிகவும் வறண்டு போகும். மேனி மிகவும் குளிர்ந்து விடும். மூச்சு விடுவதில் ஏற்றதாழ்வு ஏற்படும். சேத்துமம் மிகுந்து காணப்படும். வாய் திறந்து இளைக்கும். இத்தகைய குறிகள் உண்டானால் உயிர் உடலை விட்டு நீங்கும்.

அசாத்திய நாடி (யின் நிலை)

★ 47. செருக்கு மிமைக்குங் கண்சிவக்கும் புதுமை சொல்லும்
பெருக்க வாங்கும் நெஞ்சினுள்ளே பேணிச் சேத்துமங் குடியிருக்கும்
நெருக்கி நீர்தான் பிழியும் நேரே யிருக்க ஒட்டாது
அரிக்குங் குறிக ளிவைகண்டால் அசாத் தியமென் றறிந்து
கொள்ளே 47

விழிகள் செருகுவதோடு இமைக்கின்ற கண்கள் சிவந்து காணப்படும். மிகுதியாக மூச்சு வாங்கும். நெஞ்சில் முழுவதுமாக சிலேத்துமம் பரவிநிற்கும். நெஞ்சு இறுக்கமடைந்து வியர்வை தோன்றும். உடம்பு நேரே யிருக்க மாட்டாது. துன்புறுத்தும், அரிக்கும். இத்தகைய குறிகள் கண்டால் (அசாத்தியம் என்று) நோயாளி பிழைப்பது அரிது என அறியலாம்.

(சிலேத்துமம் மிகுந்தால் மரணக்குறி)

48. மிக்க சேத்துமம் மேல்மூச்சாம் விழிதான் செருகி மெய்நடுக்கல்
மைக்கண் பஞ்சனி மஞ்சனித்தல் வாய்ப்பல் கறுகி மலமடைத்தல்
தக்க நாடிகள் பதைபதைத்தல் தாடை வற்றல் சலமுளைத்தல்
மிக்க நோவா மிதுசாவு வேத விதியின் குணமிதுவே 48

சிலேத்துமம் மிகுந்து நிற்க, மேல்மூச்சு வாங்கும்; விழி சொருகும்; உடல் நடுங்கும்; கண்கள் பஞ்சடைக்கும். மஞ்சள் நிறமாகும். வாய், பல் ஆகியன கறுத்துப் போகும். மலம் தடைப்படும். நாடிகள் பதைத்துத் துடிக்கும். தாடைப் பகுதி உலர்ந்து போகும். உடலில் நோவு ஏற்படும். மரண நிலையின் தன்மை இதுவாகும்.

(கபநாடிமிகு தொய்வினால் ஏற்படும் குறிகள்)

49. அய்யமா நாடி தானும் அதிகம தாக வேதான்
தொய்யவே தவளை போலத் தொங்கியே குதியிட்டாலும்
பையவெ ருண்டு புற்றுப் பாம்பென நடைகண் டாலும்
மையுறு குழலி னாளே மரணமென் றறிந்து கொள்ளே 49

கப நாடியானது, அதிகமாகத் தொய்ந்து போனால், தவளைபோல் தொங்கியவாறு குதியிடுதல், இரண்டு புற்றுப் பாம்புகள் போல் ஊர்ந்து நடத்தல் ஆகிய குறிகள் மரணத்துக்குரிய குறிகள் ஆகும்.

(நாடியின் நடையும் இருப்பிடமும் மாறினால் ஏற்படும் அறிகுறிகள்)

50. காணுமிவ் வாத பித்த மிருப்பிடந் தவறிக் காணில்
நானூறு சேத்து மந்தான் கனுசடத்தை நணுகு மப்பால்
பானுனி கிறுகி றென்று பார்க்கவே விழித்தி ருக்கும்
சேணுறு குழலி னாளே உயிர்திரும் பாதென்று சொல்லே 50

வாதம், பித்தம், சேத்துமம் இவற்றின் நாடி நடையும் இருப்பிடமும் தவறிக் காணப்பட்டால் சேத்துமம் கழுத்துப் பகுதியைச் சேரும். கிறுகிறுப்புடன் கூடியவாறு பார்வை விழித்திருக்கும். இந்நிலை காணப்பட்டால் உயிர் மீளாது நீங்கும்.

(மரணக் குறிகள்)

51. எண்ணிய அவத்தை சொல்வேன் இனியகை மார்பும் மூக்கும்
நண்ணிய செவியி னோடும் நலம்பெறக் குளிர்ந்து காட்டி
திண்ணமா யுச்சி யங்கி யாயிடிச் சிலேத்தும மோடி
மண்ணினிக் கடிகை ஐந்தில் மரணமென் றறிந்து சொல்லே 51

கை, மார்பு, மூக்கு, காது முதலான உறுப்புகள் குளிர்ந்து காணப்படும். உச்சந் தலையில் இடிப்பது போன்று வலி உண்டாகும். சிலேத்தும நாடி தன் அளவில் மிக்கு ஓடும். இவ்வகைக் குறிகள் காணப்பட்டால் இப்புவியில் ஐந்து நாழிகையில் மரணம் நேரும் என்று கொள்வாயாக.

52. அறிந்தபித்த மமர்ந்து வாத சிலேத்தும மதிக மாகில்
நிறைந்ததோர் வார்த்தை தானும் நேர்பட வெடிப்பாய்ப் பேசும்
சிறந்திடு முகம்வெ ளுத்து மார்பது குடில்போல் சென்றால்
மறந்தனர்க்கடி கைதொண்ணூறா மளவிலே மரண மெய்யே. 52

பித்த நாடி அடங்கி, வாத, சிலேத்தும நாடிகள் அதிகரிக்குமானால், நல்ல மொழிகளைப் பேசும் நிலையிலிருந்த அந்நோயாளரின் வார்த்தைகள் சீற்றத்தோடு வெளிப்படும். முகம் வெளுக்கும். மார்பானது குழல்போல் குறுகும். இத்தகு குறிகள் தோன்றில், தொண்ணூறு நாழிகையில் மரணம் ஏற்படுவது உறுதி.

53. மெய்யது பகல்வெ தும்பி இரவுதா னுழலை மேவி
ஐய்யது நாவ றண்டு அதிகதா கங்க ளாகித்
துய்யது வயிறு நொந்து மலங்கட்டித் தலைசு ழன்று
வெய்யகண் பரபர வென்று விழிக்குநா ளிரண்டில் சாவாம். 53

பகல் பொழுதில் உடலில் வெப்பம் அதிகமாகி, இரவில் குரல்வளையில் அடைத்து நாக்கு வறண்டு, அதிக தாகம் எடுக்கும். வயிற்று வலி ஏற்படும். மலம் கட்டும். தலை சுற்றும். கண்கள் பரபரவென்று விழித்துப் பார்க்கும். இத்தகைய குறிகள் கண்டால் இரண்டாம் நாளில் மரணம் உறுதி.

தூது லட்சணம்

54. முன்னே தூதன் வந்துநின்று மொழியும் வார்த்தைப் பாடென்னத்
துன்னு மொருநாள் மேல்நிற்கத் தூணைக் கட்டி யேநிற்கப்
பன்னும் பலசொல் குழறிடவே பார்த்து வாவா வெனவழைக்க
என்னுங் குறியே கண்டாக்கால் எமனிவ னென்று அறிந்துகொள்ளே. 54

மருத்துவரை நோயின்தன்மை கூறி அழைக்க வந்தவன், நோயாளர் படும் துன்பம் மிகுதி என்று வார்த்தைக் கூறி, ஒருகால்மேல் ஒருகால் ஊன்றி, தூணைக் கட்டிக் கொண்டு நின்று, நாக்குழற, மருத்துவரை வாவா என்று அழைப்பானாகில், அவனே எமன் (இது மரணத்தின் அழைப்பு) என்று அறிந்து கொள்ள வேண்டும்.

55. கண்டு குடுவை பிடித்தாலும் தன்கைக் கயிறு கண்டாலும்
மிண்டும் ஏழை மூக்கரையன் மிகவும் குருடன் விரிதலையன்
கொண்ட விறகு கட்டுப்பை கொள்ளி கையிற் கொடியிடமின்
மிண்டு மிவரைக் கண்டாக்கால் எமனிவனென்று அறிந்து
கொள்ளே. 55

அழைக்க வந்தவன், கையில் குடுவை பிடித்திருந்தாலும், கைகளில் கயிற்றைப் பிடித்திருந்தாலும், மிகுந்த ஏழையாகவோ, மூக்கு குறைபட்டவனாகவோ, பார்வையற்றவனாகவோ, பரட்டைத் தலையுடையவனாகவோ இருந்தாலும், தலையில் விறகுக் கட்டு, உப்பு சுமந்து கொண்டோ, கையில் கொள்ளியைப் பிடித்துக் கொண்டோ நின்றாலும், நோயாளியைக் கொண்டு செல்ல வந்த எமன் இவன் என்பதை அறிந்து கொள்வாயாக.

56. முகத்தினில் கையே யேறில் மூண்டிடும் வியாதி தீரா
அகத்தினில் கையே யேறில் அற்பமாம் நோயே யென்னும்
புகத்தருந் தோளில் போடில் புன்மையாம் வியாதி தீரும்
சிகத்தினில் கால்கை தொட்டால் தீருமென் றியம்பி டீரே. 56

அழைக்க வந்தவன், முகத்தினில் கையை வைத்துக் கொண்டிருந்தால், வந்த நோய் தீராது. நெஞ்சில் கை வைத்து நின்றால், வந்த நோய் எளிமையானது. விரைவில் தீரும். தோளில் கை வைத்திருந்தால் நோய் எளிதில் தீரக்கூடியது. தலைமீது காலோ கையோ தொடுமானால், நோய் நீங்கும் என்பதை அறிந்து கொள்வாயாக.

57. சொல்லும் வசன முதலெழுத்தைச் சூட்சக மாக எண்ணிக்கண்டு
மெல்ல விருக்கும் வியாதியவன் பேரெ ழுத்தை யுங்கூட்டி
நல்ல விருபத் தேழாநாள் பக்கம் வாரம் தனைப்பார்த்து
வல்ல தொகையே ழில்பெருக்கி வருந்தா தெட்டில் கழியே. 57

வந்தவன் கூறும் மொழியின் முதல் எழுத்தை அவன் அறியாவண்ணம் மனத்தில் கணக்கிட்டுக் கொண்டு, துன்பம் தரும் நோயில் உழல்பவனின் பெயரிலுள்ள எழுத்துக்களையும் எண்ணிக் கூட்டிக் கொண்டு, இருபத்தேழாம் நாளினை ஆய்ந்து, இது வளர்பிறையா, தேய்பிறையா என்பதைப் பார்த்து, கிழமையையும் கண்டு அதனை ஏழால் பெருக்கி வருத்தமில்லாமல் எட்டில் கழிக்க வேண்டும்.

58. நின்ற லக்கம் தான்கண்டு நேராஞ் சேட்ப வனோத
ஒன்றுபிணி தீரா திரண்டுதிண்ணம் உணர்ந்து மூன்று நாள்சொல்லும்
ஒன்று நாலு வினைபெருகும் இயலா மைந்து மரணம்
மின்று மீது ரைத்தபடி யேழுநன் மையெனச் சொன்னாரே. 58

வந்தவன் வந்துநின்ற இலக்கணத்தைக் கண்டு அதன்படி, பலன் கூறவேண்டுமானால், ஒன்றின் பலன் பிணி தீராது. இரண்டாம் எண்ணுக்கு நிச்சயம் பிணி தீரும். மூன்று நான்கு ஆகிய எண்களுக்கு நோயின் தன்மை பெருகும். ஐந்தாம் எண் வந்தால் மரணம் நிச்சயம் என்று இவ்வாறு உரைத்தபடி நிகழும் என்று கூறியுள்ளனர்.

(மருத்துவம் பார்க்கச் சகுனம்)

59. வானரஞ் சுணங்கு கட்டி வலியுடன் முயலாம் புல்லர்
யானமா மூஞ்சு றட்டை எலியொடு சாரை கூகை
தானமாம் பருந்தோ டாந்தை காடைநல் லுடும்பு கீரி
தானுகந் திடத்தே போகிற் சாலவே கருமம் நன்றாம் 59

நோயாளர்க்கு மருத்துவம் பார்க்கச் செல்லுகின்றபோது, சகுனக் குறிகளாக, குரங்கு, தேமல், கட்டி, வலியுடன், முயல், அறிவற்ற இழிந்த மாக்கள், மூஞ்சூறு, அட்டை, எலி, சாரைப்பாம்பு, கூகை, பருந்து, ஆந்தை, காடை, உடும்பு, கீரி ஆகியன இடப்பக்கமாகச் செல்லக் கண்டால் போகும் காரியம் வெற்றி பெறும். நோயாளர் பிழைப்பர்.

60. முன்னமே ஆணில் வந்து முயன்றபின் பெண்ணில் வந்தால்
முன்னமே கருமந் தீதாய் பின்புநன்றாகு மென்பர்
முன்னமே பெண்ணில் வந்து முயன்றபின் ஆணில் வந்தால்
சொன்னவை முன்பு நன்றாய் அருளது அடுக்கு மன்றே. 60

மருத்துவரை அழைப்பதற்கு முதலில் ஆடவர் ஒருவர் வந்து, அதற்குப் பின் பெண் வந்தால், முதலில் தீராததாகத் தோன்றிய நோய் பின்பு நன்றாகத் தீரும் நிலைபெறும் என்பார். அவ்வாறே முன்னே வந்தவர் பெண்ணாக இருந்து, பிறகு வந்தவர் ஆணாக இருப்பின், முன்பு தீருவதாகத் தெரிந்த நோய், விரைந்து தீர அருள் சேரும் என்பர்.

★ 61. கண்ணின்நீர் சிந்தி வீழல் கவிழ்ந்துமண் நோக்கி நிற்றல்
மண்ணினைப் பறித்துக் கீறல் வற்றிய மரத்தைச் சாரல்
இன்னினிப் படியே தொட்டால் இடர்பட மொழிந்து நிற்றல்
திண்ணென உரைத்தல் செய்தல் செய்திடுங் கருமமெல்லாம்
திண்ணமாய்ச் சாவென் றென்னே. 61

தூதாக வந்தவர், கண்ணிலிருந்து நீர் சிந்தி விழுதல், தரையை நோக்கியவாறு தலை கவிழ்ந்து நிற்றல், காலால் நிலத்தைக் கீறல், காய்ந்துபோன மரத்தைச் சார்ந்து நிற்றல், குறித்த உடல் வலிகள், (மார்பு, இடை, வயிறு, தொப்பூழ், முழந்தாள், புறங்கால், அகங்கை, புறங்கை, பிடரி, மூக்கு, பிரிட்டம், கோசம் முதலியன தொடுதல்), தடுமாற்றத்தோடு தயங்கி சொற்களைப் பேசுதல் முதலிய குறிகளைக் கண்டால் நோயாளி உறுதியாய் மரணமடைவார்.

நாடி விதி

62. அய்யுடன் வாதம் வந்தால் அனேகநாள் செல்லு மென்க
அய்யுடன் பித்தம் வந்தால் அதுவுமப் படியே யாகும்
அய்யுடன் வாத பித்த மடுக்கிலே மரண மென்க
தையல ரையா பித்த மஞ்சரி வார்ச்சாந்த மாமே 1

கப நாடியின் மேல் வாதநாடி சேர்ந்தால், நோய் நீங்கப் பல நாட்கள் ஆகும் என்க. அக் கபநாடி மேல் பித்த நாடி சேர்ந்தாலும் நோய் நீங்கப் பல நாட்கள் ஆகும். கபநாடி மேல் வாதநாடி, பித்தநாடி இரண்டும் சேர்ந்தால் மரணம் உண்டாகும்.

(நாடி நடக்கும் காலமறிதல்)

63. காலமே பத்து நாழி கடுகிய வாத மாகும்
கோலமே பத்து மேலா யிருபது சென்றால் பித்தம்
மாலய சேத்து மமேலா மருவிழுப் பதுமே சென்றால்
நாலாய நூல்வல் லோரே நாடிஇவைத் தெரிந்து பாரே. 2

நாடி நடக்கும் காலமாக, காலையில் பத்து நாழிகை வாதம் நடக்கும் காலமாகவும், இருபதாம் நாழி வரை பித்தம் நடக்கும் காலமாகவும், இருபதுக்கு மேல் முப்பது வரையிலான நாழிகைக் காலம் சேத்துமத்துக்கு உரியது என்றும் நாடி நூல்வல்லோர் வகுத்துள்ளவற்றை ஆராய்ந்து தெரிந்து கொள்வாயாக.

(நாடி பார்க்கும் காலம்)

64. சித்திரை வைகா சிக்குச் செழுங்கதி ருதயந் தன்னில்
அத்தமா மானி யாடி ஐப்பசி கார்த்தி கைக்கும்
மத்தியா னத்திற் பார்க்க மார்கழி தைமா சிக்கு
வித்தகக் கதிரோன் மேற்கு விழுகின்ற நேரந் தானே. 3

சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களில் சூரியன் உதயமாகின்ற அதிகாலைப் பொழுதிலும், ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் மத்தியான வேளையிலும், மார்கழி, தை, மாசி ஆகிய மாதங்களில் கதிரவன் மேற்கில் மறைகின்ற மாலைப் பொழுதிலும் நாடி பார்க்க வேண்டும்.

★ 65. தானெதிர் பங்கு னிக்கும் தனதுநல் லாவ ணிக்கும்
வானம்பேர்ப் புரட்டா சிக்கு மறுத்தராத்திரியிற் பார்க்கத்
தேனெனுங் குழலாய் நாடி தெரிந்துதான் செப்பிடீரே. 4

பங்குனி, ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்களில் இராத்திரிப் பொழுதில் நாடி பார்க்க வேண்டும். தேன் பொருந்திய மலர்களைத் தலையில் சூடிய பெண்ணே! நாடி அறியும் விதத்தை அறிந்து கொள்வாயாக.

(நலமான உடம்பின் நாடி நிலை)

66. ஞாலமீ துடலந் தன்னில் நசையுடன் நோயில் லார்க்குக்
காலமே வாதந் தோன்றுங் கடும்பகல் பித்தந் தோன்றும்
மாலையில் அய்யந் தோன்றும் வகையிதை யறியு மென்ன
சீலமா முனிவர் வேதத் திறமுடன் மொழிந்தா ராங்கே. 5

நோயேதும் அணுகாத, நன்னிலையில் உடலைப் பேணும் மானிடருக்கு, காலையில் வாத நாடியும், மத்தியானப் பொழுதில் பித்த நாடியும், மாலை வேளையில் சேத்தும நாடியும் வெளிப்பட்டுத் தோன்றும். தவத்தில் சிறந்த முனிவர், வேத அறிவுடன் இதனைக் கூறினார்.

(நாடி பரிசோதிக்கும் முறை)

67. பெருவிர லடியி லேதான் பேணிமூன் றங்கு லத்திற்
குருவருள் படியே பாரு குளச்செனப் பருமம் போலத்
தரமுள நாடி தானுஞ் சருவாங்கம் பரந்து நிற்கும்
அரிவையற் கிடக்கை கொள்க ஆடவர் வலக்கை தானே. 6

கையில் மணிக்கட்டின் பெருவிரலின் கீழ் மூன்றங்குலப் பகுதியில் குருவின் அருள் பெற்றுப் பார்க்க, சற்றே பருத்தத் தோற்றத்துடன் வெளிப்படும் நாடியானது உடல் முழுதும் பரந்து விளங்கும். ஆடவர்க்கு வலக்கையிலும் பெண்களுக்கு இடக்கையிலும் நாடி பார்க்க வேண்டும்.

(உடலுறுப்புகளின் எடையும் அளவும்)

68. துய்யநல் லுடம்பு தானுந் தொண்ணூற்றா றுவிர லங்குலம்
செய்யதோர் சதைகள் தானும் நூற்றொரு பத்தொ ருபலம்
செய்யகண் ணிரண்டு தானுஞ் சேர்ந்திரு கழஞ்ச தாகும்
நய்யநா வொன்று தானும் நாற்கழஞ் சாகு மன்றே. 7

மனிதனது உடலானது அவனது விரலளவால் தொண்ணூற்றாறு அங்குலமாகும். நலமான உடலின் சதை நூற்றுப் பதினொரு பலம் நிறையுள்ளது. இரண்டு கண்களும் சேர்ந்து இரு கழஞ்சு அளவின. நாக்கு மட்டுமே நான்கு கழஞ்சு எடை கொண்டது.

★ 69. தோக்குமீ ரலுநுண் ணெலும்பும் ஐம்பலம்
மூக்கு முழஞ்சு மூளையு முப்பலம்
நாக்குமஞ் சிறுகுடல் முப்பத் திருபலம்
ஆக்குந் தாமரை மொட்டும்ஐந் தங்குலம்
அயம்பித் தீரலு நீண்டதுநால் விரலே. 8

கல்ஈரலும், நுண்ணெலும்பும் ஐந்து பலம் எடை கொண்டவை. மூக்கும் மூளையும் மூன்று பலம் எடையுள்ளவை. சிறுகுடல் முப்பத்திரண்டு பலம் கொண்டது. இதயம் (தாமரை மொட்டு) ஐந்து அங்குலம். மண்ணீரல் நீளம் நான்கு விரல்கடை அளவு என்பதாம்.

நாடிக்குறிப்பு

70. விரும்பிய உடல மெங்கும் மேவியே கலந்து நின்ற
நரம்பெனும் நாடி தன்னை நல்லசாத் திரங்க ளாலே
திருந்தவே யோதி யாய்ந்து தெளிந்தவர் சொல்ல வந்த
வருந்தமி ழாய்ந்து யானுமதன்பொரு ளுரைக்கின் றேனே. 9

உடல் முழுவதும் பரந்து கலந்து நிற்கின்ற நரம்பு என்னும் நாடியைப் பற்றிச் சிறந்த சாத்திர நூல்களைக் கொண்டு தெளிவாகக் கற்றுத் தேர்ந்தவர் கூறிவந்த பொருளை நானும் ஆய்வு செய்து கூறுகின்றேன்.

(வாத நாடியின் இயல்பு)

71. அங்கையை முறுக்கி நெட்டை யடைவு டன்கை வாங்கி
செங்கையைப் பிடித்து நாடித் திறத்துடன் பார்க்கும் போது
பங்கையப் பருத்து நாடி பையவே யோடு மாகில்
மங்கையர்க் கரசி யீது வாதமாம் நாடி தானே. 10

பெண்களில் சிறந்தவளே! உள்ளங்கையை முறுக்கி, நீட்டி கையை முறையுடன் பிடித்து, திறமையுடன் நாடியைப் பார்க்கின்றபோது, அங்கே தாமரைத்தண்டு போலப் பருத்து மெதுவாக ஓடினால் அது வாத நாடியாகும்.

பித்த சிலேத்தும நாடி(களின் இயல்பு)

72. உற்றதோர் நாடி தாழ்ந்தே யுயர்ந்தது பதறி யோடி
பித்தமாம் நாடி யென்றே பிசகறத் தெரிந்து கொள்க
மெத்தவே புரண்டொ துங்கி விரலினிற் றெறிக்கு மாகில்
சித்தமே யாதி அய்யஞ் சேத்தும நாடி யென்றே. 11

நாடியானது, தாழ்ந்து, உயர்ந்து, பதறி ஓடினால், பித்த நாடி என்று அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறன்றி புரண்டு ஒதுங்கி, விரலிற் றெறித்தாற் போல் தோன்றுமாயின் பித்த சேத்தும நாடியென்று அறிந்து கொள்க.

(நோயில்லாத உடம்பின் நாடி இயல்பு)

73. பித்தமே வாத நாடி பெருகிய வைய்ய நாடி
உற்றது சரியாய்த் தானே உலாவியே ஓடி நிற்கில்
சுத்தமா முடம்பு தன்னில் சொல்லுக வியாதி யில்லை
முத்தணி முலைநன் மாதே மொழிந்தனர் மறைவல் லோரே. 12

பித்த நாடி, வாத நாடி, கபநாடி ஆகிய மூன்றும் சரியாகத் தாமே நடக்குமானால், உடலில் நோயில்லை என்று, முத்தை மாலையாக அணிந்த பெண்ணே மறைநூல் வல்லோர் கூறியுள்ளனர்.

(நாடி கொண்டு நோயறிதல்)

74. ஆனதோர் வாத நாடி யடர்ந்துறு வலியாய் நிற்கில்
ஊனமா முடம்பு நோய்க ளுலாவியே நிற்கு மென்க
தானமாம் பித்த நாடி தான்வலி பெற்று நிற்கில்
கானமாங் குழலி னாளே காய்ச்சலாம் வெதுப்புண் டென்னே. 13

வாத நாடியானது அடர்ந்து வலிமையோடு நிற்குமானால் உடலில் நோய்கள் பரவிப் பரந்துள்ளன என்க. பித்த நாடி வலிமை பெற்று நிற்குமானால் வெப்பத்துடன் கூடிய சுரநோய் என்று கூறவேண்டும்.

75. அய்யமாஞ் சேத்து மத்தி லாகிலும் நாடி தானும்
தொய்யவே வளையம் போலத் தொங்கியே குதித்திட் டாலும்
பையவே யிரண்டு பற்றுப் பாம்பென நடைகண் டாலும்
மையுறு குழலி னாளே மரணமென் றறிந்து கொள்ளே. 14

கப நாடியானது வளர்ந்து வளையம் போலத் தொங்கிக் குதித்து ஓடினாலும், மெல்ல, புற்றுப் பாம்புகள் இணைந்து செல்வது போன்ற தன்மையைக் கண்டாலும், மரணம் நிச்சயம் என்பதை, கரிய கூந்தலையுடையவளே, அறிந்து கொள்வாயாக! (ஏற்கனவே இப்பாடல் 49-வது பாடலாக வந்துள்ளது.)

(மூன்றுவாத நாடிகளின் நிலையும் வியாதியின் தன்மையும்)

76. வாதமு மய்யந் தானும் வலிபெற நிற்கு மாகில்
ஓதிய வியாதி தீரா துயர்ந்தநாட் செல்லு மென்க
வாதமிலாப் பித்த நாடி யணில்நடை போலே யோடில்
வேதனை யான காய்ச்சல் மீளுமோர் சாமத் தன்றே. 15

வாத நாடியும், கப நாடியும் வலிமை பெற்று நடக்குமானால் நோய் தீராது. அப்படியே தீர்வதென்றாலும் நாட்கள் பலவாகும். வாதமல்லாத பித்தநாடி அணில் போன்று நடக்குமானால் காய்ச்சல் நோய் ஒரு சாமத்தில் அதிகரிக்கும் என்க.

★ (வியாதி அறிவதற்கான எண்வகைத் தேர்வுமுறை)

77. தேடிய வியாதிக் கெல்லாம் தேகத்தில் பரீட்சை யுண்டு
கூடியே நிற்கு மெட்டுப் பரீட்சையாங் கூறக் கேளீர்
நாடியே தொட்டாற் தேகம் மூத்திரம் வார்த்தை கண்கள் நாக்கு
பாடியே மலச லங்கள் பலவண்ணம் பார்த்துக் கொள்ளே. 16

உடலைத் தேடிச் சேரும் வியாதிகளை அறிவதற்கு எட்டு விதமான தேர்வு முறைகள் உள்ளன. நாடி, உடல், வார்த்தை, கண்கள், நாக்கு, மலம், சிறுநீர், நிறம் என்னும் இவ் வெண்வகைத் தேர்வு முறைகளை ஆராய்ந்து நோய்களைக் காணவேண்டும்.

சன்னி பாதம் அறியும்முறை

78. மின்னே கேளாய் சன்னிபாத மிவ்வண்ண மாகத் தானிருக்கும்
பொன்னே கண்தான் சிவந்திருக்கும் போதப் பசித்துத் தானிருக்கும்
மின்னேநா வெடித்துக் கறுத்ததுபோல் மிகவும் வறண்டு நீரில்லை
பின்னை யிதனைச் சன்னிபாத ரோக மென்னப் பேசுவரால். 17

மின்னலைப் போன்ற இடையாளே, கண்கள் சிவந்திருக்கும். பசி மிகுதியாக இருக்கும். நாக்கு வெடித்து, கறுத்தது போன்று, நீரின்றி, வறண்டு காணப்படும். இத்தகு குறிகள் கண்டால் சன்னிபாதம் என்று அறிந்தோர் கூறுவர்.

சுர இலக்கணம்

79. சுரமீது டைய வியாதிக் கெல்லாந்துரை யெனவீற் றிருக்கும்
பிரதாப மிகுத்து வென்னுங் காலற்குச் சரியாய்ப் பேசு
மரனுமே தக்கன் யாக மஞ்சவே யழித்த போது
வரமுள்ள நெற்றிக் கண்ணிற் பிறந்த உமைக்கண் மாதே. 18

நோய்களுக்கெல்லாம் அரசனாக வீற்றிருக்கும் ஆற்றல் மிக்க காலனுக்கு இணையாகப்பேசு. தக்கன் யாகத்தை சிவபெருமான்

அழித்தபோது, அவன் நெற்றிக் கண்ணிலிருந்து உண்டான உமை, விழிகளையொத்த விழி கொண்ட பெண்ணே, அறிவாயாக.

சுரநோய் வகைகள்

80. ஆயதோர் சுரமு மேழு விதமுண்டா மணங்கே கேளாய்
நேயமாம் வாத பித்த சிலேத்துமம் வன்மை யாக
நேயமாந் தொந்தம் பூத மசீரணஞ் சன்னிபாதம்
பாயகல் விழிநல் லாளே பலவிதச் சுரமெ லாமே. 19

பாயுந்தன்மை கொண்ட அகன்ற விழிகளைக் [illegible] பெண்ணே, சுரநோய் ஏழு வகைப்படும். அவை, வாதச் சுரம், பி[illegible]ரம், சேத்துமச் சுரம், தொந்தச் சுரம், பூதச் சுரம், அசீரணச் சுர[illegible]ணிபாதச் சுரம் என்பன.

வாத (சுர) நோய் குணம்

81. பலவித சுரத்துக் கெல்லாங் குணத்தினைப் பகுத்துச் சொல்வாம்
குலமுள்ள வாதந் தானுங் குழிந்திடு மயிர்க்கூச் சாகும்
பலமிகு சரீரம் நொந்து பேணியே தினவுண் டாகும்
நலமுள உதடு லர்ந்து நன்றாகக் கறுக்குந் தானே. 20

வாதச் சுரத்திற்கு, கண்கள் குழிந்திடும். மயிர்க்கால்கள் சிலிர்த்து நிற்கும். உடல் வலிமை கெட்டு வலியுடன் தினவெடுக்கும். உதடு உலர்ந்து போவதோடு கறுத்தும் காணும். இக்குறிகள் யாவும் வாதத்திற்குரியன.

வாத, பித்த (சுர) நோய் குணம்

82. நன்றாக முகம்க றுக்கும் நாடிய திமிருண் டாகும்
பொன்றாக மலமும் பெந்த முற்றதோர் வாதந் தானே
பொன்றாத பித்த மேவு சுரத்தினைப் புகலவோ மாதே
குன்றாத மலச லங்கள் கூறிய விரத்த மாமே. 21

முகம் கறுத்திருக்கும். உடலில் திமிர் ஏற்படும். மலம் கட்டும். இவையும் வாதச் சுரத்துக் குரிய குறிகளாம். பித்தச் சுரத்திற்குரிய குணங்களாவன. மலம், சிறுநீர், இவற்றில் குருதியும் கலந்து வெளிப்படும்.

பித்தச் சுர குணம்

83. கூறிய நாக்கும் கைக்குங் குணம்பல பலப்பி தற்றும்
நாறிடு மலமு மூர்ச்சை நலமுள விக்கல் வாந்தி
ஏறுநித் திரையுந் தாகத் தெழுந்திரிந் தோடும் வாயும்
ஊறிடா துலர்ச்சி தாப முண்டெனிற் பித்த மாமே 22

நாக்கு கசக்கும். வாய் பலப்பலவாறு பிதற்றும். மலம் நாற்றம் வீசும். மூர்ச்சை, விக்கல், வாந்தி, தூக்கம், தாகம் ஆகியன உண்டாகும். வாய்வு உடலில் எழுந்தோடும். வாய் நீரூறாமல் உலர்ந்து போகுமாயின், பித்தச் சுரமாகும்.

கபச் சுர குணம்

84. உண்டது முகம்வெ ளுக்கு முற்றது நாக்கும் வெள்ளை
தொண்டையும் வலிக்கு மாணஞ் சுத்தமா யிருமுந் தாகம்
கண்டது மூச்சி ரைச்சல் கசியுடன் மூச்சில் வாங்கல்
விண்டது தினவெ டுக்குஞ் சேத்துமச் சுரமு மீதே. 23

முகம் வெளுத்திருக்கும். நாக்கில் வெண்மையேறிக் காணப்படும். தொண்டை வலிக்கும். இருமல் உண்டாகும். தாகம் எடுக்கும். மூச்சு இறைக்கும். மூக்கில் நீர் வடியும். உடல் தினவெடுக்கும். இக்குறிகள் யாவும் சேத்துமச்சுரத்தை உணர்த்துவன.

வாத பித்தச் சுரம் (குறிகள்)

85. விதம்பெறு வாத பித்தஞ் சுரத்தினை விளம்பக் கேளாய்
நிறம்பெறு நாக்குக் காறிப் பிரலாபந் தேகம் நோகும்
விதம்பெறத் தூக்கம் பெந்தம் பேனுமலங் கறுப்ப தாகும்
பதம்பெறு வாத சேத்தும குணத்தினைப் பகரவோ மானே. 24

வாத பித்தச் சுரத்தின் தன்மையைச் சொல்லக் கேட்பாயாக. நிறம் மிக்க நாக்கானது கறுத்துப் போகும். பிதற்றலுடன், உடலெங்கும் வலி ஏற்படும். தூக்கம் கெடும். மலம் கறுத்திருக்கும். இவை யாவும் வாதப் பித்தச் சுரத்தின் குறிகளாம்.

சேத்துமச் (கப) சுரம் (குறிகள்)

86. பைங்கிளி சரீரம் நோகும் சுவாசமே பலவெ டுக்கும்
விங்குற விருமும் நாக்கு வெளுத்திடும் வயிறு நோகும்
மங்கையே மயிர்க்கூச் சாகும் தாகமா யிருக்கு மாமே
சங்கையில் லாத சேத்து மந்தனை யேசொல்லு வாமே. 25

கிளி போன்றவளே உடல் நோகும். மூச்சு மிகுதியாக வாங்கும். இருமல் உண்டாகும். நாக்கு வெண்மையுறும். வயிறு வலிக்கும். பெண்ணே, மயிர்க்கால்கள் சிலிர்ப்பேறும். தாகம் மிகும். இக்குறிகள் தோன்றின், சந்தேகமேயில்லாமல் இது சேத்துமச் சுரமே என்று சொல்வாயாக.

(பூதச் சுர குணம்)

87. தன்னையே யுரைக்கில் வேர்வு பிதற்றுதல் தூங்கல் தாகம்
இன்னிய மயிர்க்கூச் செறவலித் திருமுதல் மார்பு நோதல்
கன்னியே யிதன்கு ணங்கள் கனத்ததோர் பூத மான
அன்னதோர் சுரத்தின் கொள்கை யடைவுட னுரைக்கக் கேளாய். 26

கன்னிப் பெண்ணே, வியர்த்தல், பிதற்றுதல், தூக்கம் மிகல், தாகம் எடுத்தல், மயிர்க்கூச்செறிதல், வலியுடன் கூடி இருமுதல், மார்பு நோதல், இக்குணங்கள் காணப்பட்டால் இவை பூதச் சுரத்திற்குரியன எனச் சொல்லக் கேட்பாயாக.

(குமர கண்ட வலி சுர குணம்)

88. அடவுடன் குமர கண்ட மெனவ லிக்குங் கண்டாய்
திடமுட னுருட்டிப் பார்க்குஞ் சிரிக்குதல் பாடல் தூங்கல்
நடனமே புரிதல் சோறும் நண்புகழ் பாலுணா கேட்டால்
கடினமாய் மயிர்க்கூச் செறல் பிரலாபித் தல்கண்ட போதே. 27

குமரகண்டவலி என்னும் நோயின் தன்மைகளாவன, வலிமையோடு கண்களை உருட்டிப் பார்த்தல், சிரித்தல், பாடுதல், தூங்குதல், நடனமாடுதல், சோறும் பாலும் உண்ணாதிருத்தல், மிகுதியாக மயிர்க்கூச்செறிதல், பிதற்றுதல் இவையாகும்.

(அசீரணச் சுரம்)

89. போதெனுஞ் சீர ணத்தின் சுரத்தினைப் புகலக் கேளாய்
சூதென விறைப்ப தாகும் சுத்தமாய் மந்த மாகும்
மீதென விக்க லென்ன புளியேப்ப மெடுக்கு மேதான்
தூதாபோற் றுடைகு ரங்கு சுத்தமாய் நோகுந் தானே. 28

அசீரண சுரத்தினைப் பற்றிக் கூறக் கேட்பாயாக. உடல் விறைப்பேறும். வயிறு முற்றிலும் மந்தமடையும். விக்கல் தோன்றும். புளியேப்பம் உண்டாகும். தொடைப் பகுதியில் வலி மிகுதியாகக் காணப்படும்.

(மாறல் சுரம்)

90. வன்மைசே ருள்ளங் கால்கை யெரிக்குதல் வந்து பின்னை
தகமையாய் போட்ட கால்கை யசையாமல் கிடத்தல் தானும்
உண்மையீ திதன்கு ணத்தை யுகந்தபின் சுரத்தைக் கண்டு
பெண்மைசேர் மானே கேளாய் பேசுவாய் மாற லென்றே. 29

பெண்மை நலமிக்க மான் போன்றவளே, உள்ளங்கால், உள்ளங்கைகளில் எரிச்சல் ஏற்படுதல், கால்கைகள் அசையாமல் கிடத்தல் ஆகிய குணங்களுடன் கூடிய சுரத்தை ஆராய்ந்தால் உண்மையில் இதுவே மாறல் சுரமாகும் என்று பேசுவாயாக.

(மாறல் சுரத்தில் வேறுபட்ட நிலை)

91. பேசிய மாற லான சுரங்களும் பேதித் தேதான்
நெஞ்சிலே காங்கித் தீயு மிரண்டுநா ளையினில் மாறல்
மாசிலா மூன்று நாளும் மாறல்கள் சாமந் தன்னில்
பூசிய பதினைந்துநாள் திங்களோர் போது கூடில். 30

மாறல் சுரத்தில் வேறுபட்ட நிலைகள் உள்ளன. இரண்டுநாள் மாறல் காய்ச்சலில் நெஞ்சில் எரிச்சலுடன் வெப்பம் மிகும். மூன்று நாள் மாறல் சுரமானது இரவுப் பொழுதில் மாறிமாறி வரும். பதினைந்து நாளிலிருந்து ஒரு மாதம் வரையிலான மாறல் சுரம் பகற்பொழுது கூடும். அந்தி சந்திகளில் தொடர்ந்து காணும்.

சுரத்துக்குக் கியாழம் (சுர மருத்துவம்)

92. சுரமது தோன்று மன்று பட்டினி தொடங்க நோக்கிப்
பரிவுட னிரண்டாம் நாளிற் பல்லது விளக்கி நாக்கு
வரிசையாய் வழித்து வெந்நீர் வாங்கியே முகத்துப் பூசி
சிரமிசை வெட்டி கட்டி இடக்கைகீழ் படுத்துச் சேரகம். 31

சுரம் தோன்றிய அன்று பட்டினி தொடங்க வேண்டும். இரண்டாம் நாளில் பல்விளக்கி, நாக்கு வழித்து, வெந்நீர் கொண்டு முகம் கழுவ வேண்டும். முடி வெட்டிக் கொள்ள வேண்டும். இடக்கையைக் கீழே வைத்துப் படுக்க வேண்டும்.

(சுர தோடம் போக்கும் முறை)

★ 93. செய்யுப வாசம் பண்ணிச் சேர்ந்திடு மூன்றா நாளில்
உய்யவே நாவோ ....க உகந்தநீர் சற்றே கொண்டு
பைய்யவே தேற்றாங் கொட்டைப் பாங்குட னொன்று தின்று
தொய்யவே நாலு லங்கனந் தொடங்கவே தோடம் போமே. 32

இரண்டு நாட்கள் பட்டினி இருந்து மூன்றாம் நாளில் நா வழித்து ஆறிய நீரினைப் பருகி தேற்றாங்கொட்டை ஒன்றை மென்று தின்ன வேண்டும். அதன்பின், நான்காம் நாள் மீண்டும் பட்டினி தொடங்க வேண்டும். அவ்வாறு தொடங்கினால் தோடம் போம்.

(சுரதோடம் - மருத்துவம்)

94. தோடமே போகு மஞ்சிற் சுகமுடன் கஞ்சி கொண்டு
தேளெனும் நாட்டு வைக்கில் மூன்றுநாள் மருந்து கொண்டாற்
சூழ்வதாஞ் சுரங்க ளேகும் சுரம்விட்ட பின்ம லங்கள்
வீழவே மருந்து கொண்டு சிவற்றல் விரும்பிக் கொள்ளே. 33

ஐந்தாம் நாள் சுரதோடம் நீங்கும். கஞ்சி உணவை அருந்தல் வேண்டும். மூன்று நாட்கள் மருந்து உட்கொள்ள சுரம் நீங்கும். அதன்பின், மலம் வெளியேற மருந்து கொள்ள வேண்டும்.

(கபச் சுரத்துக்குக்) கசாயம்

95. கொண்ட நாயா பந்தகங் கூறிய பற்ப டாகம்
உண்டன னெண்ணி லங்கே ஓடிடும் பித்த வேகங்
கண்டங்கத் திரிவேர் சின்னக் காஞ்சொரி தன்னில் வேரும்
மிண்டிய சிறுதேக்குச் சுக்கு வெட்டிவேர் சீந்தில் தானே. 34

நாயா பந்தகம், பற்படாகம் உட்கொள்ள பித்தவேகம் நீங்கும். கண்டங்கத்திரி வேர், சிறுகாஞ்சொரி வேர், சிறுதேக்கு, சுக்கு, வெட்டிவேர், சீந்தில்,

96. சீந்திலு மொக்கக் கட்டி செய்வதோ கலயங் காய்ச்சி
வெந்தபின் திப்பி லியை மென்பொடி யாகத் தூவி
ஏந்திழை யாளே கேளாய் யியல்பெற மருந்து கொண்டால்
சேர்ந்திடும் சேத்து மத்தின் சுரங்களும் தீரு மென்றே. 35

ஆகியவற்றை ஒன்றாகக் கட்டி கலயத்தில் இட்டுக் காய்ச்சி, வெந்த பின்பு, திப்பிலியைப் பொடித்து அதன்மீது தூவி, அம்மருந்தை உட்கொண்டால், அணிகளை ஏந்திய பெண்ணே, சேத்தும சுரங்கள் யாவும் தீரும்.

(வாத கபச் சுரத்திற்குக் கசாயம்)

97. சந்தனஞ் சீந்தில் தானும் தக்கதோர் முத்தக் காசும்
அந்தமாஞ் சிறுகாஞ் சொரி அடவுடன் கசாய மிட்டால்
முந்திய வாத மைய்ய முடுகிய சுரங்க ளெல்லாம்
சந்தத மோடு மென்று சங்கர னருளிச் செய்தான். 36

சந்தனம், சீந்தில், முத்தக்காசு, சிறுகாஞ்சொரி ஆகியவற்றைக் கூட்டிக் கசாயமிட்டுக் குடிக்க வாதம், கபம் ஆகியவற்றால் உண்டான சுரங்கள் யாவும் நீங்கும் என சிவபெருமான் அருளிச் செய்தான்.

(கப பித்தச் சுரத்திற்குக் கசாயம்)

98. திப்பிலி கண்டங் கத்திரியுந் திகழும் வட்டத் திருப்பியுடன்
பற்படாகஞ் சீந்தி லிருவேலி பகருமி லாமிச்சம் சுத்திவைதான்
செப்பமாய்க சாயமிட சேத்தும பித்த சுரந்தானும்
தப்புவ தெப்படி தானென்று தயங்கி யோடுந் தாழ்குழலே. 37

திப்பிலி, கண்டங்கத்திரி, வட்டத்திருப்பி, பற்படாகம், சீந்தில், இருவேலி எனும் வெட்டிவேர், இலாமிச்சம் இவற்றைக் கூட்டிக் கசாயமிட்டுக் குடிக்க, நீண்ட கூந்லை உடைய பெண்ணே, சேத்தும பித்தச் சுரம் ஆகியன உடலை விட்டு நீங்கியோடும் என்க.

(அசீரணம், சன்னிபாதம், மாறல் சுரத்துக்குக் கசாயம்)
(வேறு)

99. நிலவேம்பு பற்படா கஞ்சுக்கு தானும்
நேராகச் சிறுதேக்கு கழுநீர் கோட்டம்
நலமுடைய திப்பிலிஆ டாதோடை யீர்க்கு
நன்றாக காஞ்சொரி முத்தஞ் சீந்தில்
பலவுடனே கசாயமிட மாதே கேளாய்
பாங்கான வசீரணங்கள் சன்னி பாதங்
குலமுடைய மாறமுதச் சுரங்க ளெல்லாம்
கூப்பிட்டு முறையிட்டுக் குலைந்து போமே. 38

நிலவேம்பு, பற்படாகம், சுக்கு, சிறுதேக்கு, செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம், திப்பிலி, ஆடாதோடை, யீர்க்கு, சிறுகாஞ்சொரி, முத்தக்காசு, சீந்தில் இவற்றைச் சமயெடை எடுத்துக்கொண்டு கசாயமிட்டுக் குடிக்க, அசீரணம், சன்னிபாதம், மாறல் முதலான சுரங்களெல்லாம் கூப்பிட்டு முறையிட்டுப் புலம்பிச் செல்லும்.

(தொந்தச் சுரத்திற்குக் கசாயம்)

100. சித்தாமுட்டி வெட்பாலை பட்டை சீந்தில்
திகழ்மிச்சை நிலவேம்பு சிறுகாஞ் சொரி
முத்தமொடு பேய்ப்புடோல் பற்படாகங் கூட்டி
முதுகுதம்மை கடுக்காயும் முனிந்து கூட்டி

சத்தமுடன் கசாயமிட்டுக் குடித்தால் மாதே
தொந்தசுர மிகப்பயந்து தொடங்கி யோடி
சத்தறவே தீர்ந்துவிடு மென்று தங்கள்
சங்கர னாருக்குச் சாற்றி னாரே. 39

சிற்றாமுட்டி, வெட்பாலைப் பட்டை, சீந்தில், விலாமிச்சை, நிலவேம்பு, சிறுகாஞ்சொரி, முத்தக்காசு, பேய்ப்புடல், பற்படாகம், கடுக்காய் ஆகியவற்றைக் கூட்டிக் கசாயமிட்டுக் குடிக்க, தொந்தச் சுரங்கள் யாவும் தீரும் என்று சங்கரனார்க்குக் கூறியுள்ளார்.

சருவச் சுரத்திற்கும் கசாயம்

101. பெருமரத்துப் பட்டையுடன் விடையந் தானும்
பேசரிய வில்வமுத்த மாதுளையி னோடு
சரியுடவே தான்கூட்டிக் கசாய மிட்டாற்
சருவசுர மதிசாரந் தானுந் தீரும்
இருவேலி பற்படாகங் கொத்த மல்லி
இலாமிச்சஞ் சீந்தில்சுக்கு சிறுகாஞ் சொரி
வரிசைநில வேம்போடு வட்டத் திருப்பி
வன்மையுடன் சருவசுரம் வாங்குந் தானே. 40

பெருமரப்பட்டை, அதிவிடையம், வில்வம், முத்தக்காசு, மாதுளை ஆகியவற்றைச் சமயெடை கூட்டிக் கசாயமிட்டுக் கொடுக்க, சருவ சுரம், அதிசாரம் ஆகியன நீங்கும். இருவேலி, பற்படாகம், கொத்தமல்லி, இலாமிச்சை, சீந்தில், சுக்கு, சிறுகாஞ்சொரி, நிலவேம்பு, வட்டத்திருப்பி அனைத்தையும் சேர்த்துக் கசாயமிட்டுக் கொடுக்க சருவச் சுரம் தீரும்.

தாப்ச் சுரத்திற்குக் கசாயம்
(வேறு)

★ 102. கடுகொடுஞ் சுக்குஞ் சீந்தில் கண்டங்கத் திரிவேர் தானும்
தொடர்பில் காஞ்சொரி முத்தஞ் சுவரொட்டில் சந்தில் தானும்
புடைய பத்திரி வேர்தானும் சந்தன முங் கூட்டி
சுடுக சாயத் தாற்தாப சுரங்களுந் தீரு மென்றே. 41

கடுக்காய், சுக்கு, சீந்தில், கண்டங்கத்திரி வேர், சிறுகாஞ்சொரி, முத்தக்காசு, சுவரொட்டி, சந்தனம், தாளிச பத்திரி வேர், சந்தனமுங் கூட்டிக் கசாயமிட்டுக் கொடுக்கத் தாபச் சுரங்கள் நீங்கும்.

(சீரணம், அக்கினி, மந்தம், சுவாசம் இவற்றிற்குக் கசாயம்)
(வேறு)

103. கண்டங் கத்திரி சுக்கு சீந்தில்
கொண்டு கசாயங் கூட்டி திப்பிலி
இரண்டு சீரண மக்கினி மாந்தங்
கண்டிடி லோடுஞ் சுவாசமுங் காணே. 42

கண்டங் கத்திரி, சுக்கு, சீந்தில் இவற்றைக் கொண்டு கசாயம் செய்து அதனுடன் இரண்டு திப்பிலியும் சேர்த்துக் கொடுக்க சீரணம், அக்கினி மாந்தம், சுவாசம் ஆகியன தீரும்.

கர்ப்பச் சுரத்துக்குக் கசாயம்
(வேறு)

104. நன்னாரி மாகாளிக் கிழங்கு தானும்
நலமான முத்தமொடு வெட்டி வேருஞ்
சொன்னாலு மதிமதுரஞ் சுக்கு சீந்தில்
துலங்கியதோ ரிலாமிச்சஞ் சிற்றா முட்டி
தின்னாக பேராமுட்டி தேவ தாரஞ்
சிறந்ததொரு நிலப்பனை சந்தனமுங் கூட்டி
அன்னாளி கசாயமிட்டுத் தேனே குத்தில்
அரிவையர்க்குக் கர்ப்பசுர மகலுந் தானே. 43

நன்னாரி, மாகாளிக் கிழங்கு, முத்தக்காசு, வெட்டிவேர், அதிமதுரம், சுக்கு, சீந்தில், இலாமிச்சை, சிற்றாமுட்டி, பேராமுட்டி, தேவதாரம், நிலப்பனை, சந்தனம் ஆகியவற்றைக் கூட்டிக் கசாயமிட்டு அதில் தேனையும் சேர்த்துப் பருகிட, பெண்களுக்கு உண்டான கர்ப்பச்சுரம் அகலும்.

(குழந்தை பிறந்த பின் வரும் சுரத்துக்குக் கசாயம்)

105. சிற்றா முட்டி சீந்திலொடு முத்தக் காசு
திகழெருக்கம் வேர்சுக்கு நிலவேம் போடு
புத்தியுள்ள பேராமுட்டிக் கசாய மிட்டுப்
புகழ்பெறவே திப்பிலிமேற் பொடியுந் தூவி
தத்தையெனு மொழியார்கள் பிள்ளைப் பெற்றுத்
தனியே யிருக்கையிலே சுரமே வந்தால்
சுற்றமொடு தீர்ந்துவிடு மென்று தங்கள்
சுவாமி யுமையாள்தனக் குச்சொன் னாரிதை. 44

சிற்றாமுட்டி, சீந்தில் முத்தக்காசு, எருக்கம்வேர், சுக்கு, நிலவேம்பு, பேராமுட்டி அனைத்தையும் சேர்த்துக் கசாயமாக்கியதில் திப்பிலிப் பொடியை மேலே தூவி, பெண்களுக்குப் பிள்ளை பிறந்தபின் சுரம் வந்தால் கொடுக்க, நோய் தீரும். சிவபெருமான் உமையாளுக்குச் சொன்ன மருந்து இதுவாகும்.

(மாறல் சுரத்துக்குக் கசாயம்)

106. பன்னுசிறு வழுதலையு முத்தக் காசு
பற்படாகஞ் சீந்திலொடு சிறுகாஞ் சொரி
துன்னியகோ ரோசனந் திப்பிலி வேம்பு
சொன்னசிறு தேக்குச் செங்கழுநீர்க் கோட்ட
மன்னுசல நாழி வார்த்துழக்காய்க் காய்ச்சி
வன்மையுடன் மறுகி னால்மறுகுங் காய்ச்சல்
இன்னவிடம் போனதென் றறிய லாலே
இப்படியே மூன்றுபொழு ததிற் கொள்ளே. 45

சிறுவழுதலை, முத்தக்காசு, பற்பாடகம், சீந்தில், சிறுகாஞ்சொரி, கோரோசனை, திப்பிலி, வேம்பு, சிறுதேக்கு, செங்கழுநீர், கோட்டம் ஆகியவற்றோடு நாழியளவு நீர் வார்த்து உழக்காகச் சுண்டக் காய்ச்சி மூன்று பொழுது உட்கொள்ள மாறல் சுரம் நீங்கும்.

(மாந்தச் சுரத்துக்குக் கசாயம்)
(வேறு)

107. சீந்திற் றண்டு கடுக்காயே சிவதை வேரே ரோகணியே
காந்த சுக்குக் களிப்பாக்குங் காருஞ் சிறிய வழுதலையும்
மாந்த முலையா யின்னீரை யெட்டொன் றாக்கிக் கொடுப்பீரால்
மாந்த மான சுரங்களும்போய் வயிறு கழியுங் கண்டீரே. 46

சீந்தில்தண்டு, கடுக்காய், சிவதைவேர், கடுக்காய், சுக்கு, களிப்பாக்கு, சிறுவழுதலை ஆகியவற்றை எட்டுப் பங்கு நீர் சேர்த்து ஒரு பங்காகக் குறுக்கிக் கொடுக்க மாந்தச் சுரங்கள் நீங்கி வயிறு கழியும்.

(சுரத்துடன் கூடிய வீக்கத்துக்குக் கசாயம்)

108. கையாந் தகரை தூதுவளை கடிய நொச்சில் பிரமியுடன்
மெய்யாய் விளங்கு நீர்முள்ளி வீறா கியமல் லிகைத்தண்டு
செய்யார் காந்தப் பேராமுட்டி திகழுஞ் சுக்கு நறுக்கியிட்டு
துய்யதாய்க் காய்ச்சிக் குடிப்பீரேல் சுரமும் வீக்கமு முடன்போமே. 47

கரிசலாங்கண்ணி, தூதுவளை, நொச்சி, பிரமி, நீர்முள்ளி, மல்லிகைத்தண்டு, பேராமுட்டி, சுக்கு ஆகியவற்றை நறுக்கி கசாயமிட்டுக் குடிக்க சுரத்துடன் வீக்கங்களும் நீங்கும்.

(பித்தச் சுரத்துக்குக் கசாயம்)

109. பித்தச் சுரத்தின் விகாரங்கேள் பெருகத் தண்ணீ ரதுவாங்கும்
முத்தக் காசு மாசித்தோல் முழங்கக் காய்ச்சி யதுவாற்றி
மெத்தப் பருகு மதுதண்ணீர் வேண்டும் போது இதுகொள்ளே
பித்தச் சுரமும் வயிற்றழிவும் பேணித் தீரும் கண்டீரே. 48

பித்தச் சுரத்தின்போது அதிக தாகம் எடுக்கும். முத்தக்காசு, மாசிக்காய்த் தோல் ஆகியவற்றைக் காய்ச்சி ஆறவைத்து நாவறளும்போது உட்கொள்ள வேண்டும். பித்தச் சுரமும், வயிற்றழிவும் தீரும்.

(சுரத்துக்குக் கசாயம்)

110. சங்கம் வேர்த்திப் பிலிமூலந் தான்றி நெல்லி சமன்கடுக்காய்
பங்கம் பாளை வேர்சுக்குப் பரந்த முத்தக் காசுடனே
அங்கஞ் சொரியும் அகில்வேரு மளவே காய்ச்சி யதுகொள்ள
மங்கு லணைய குழல்மடவாய் வருந்துஞ் சுரமும் போய்விடுமே. 49

சங்கரன் வேர், திப்பிலி மூலம், தான்றி, நெல்லி இவற்றுடன் சமஅடையளவு கடுக்காய், பங்கம்பாளை வேர், சுக்கு, முத்தக் காசு, அகில்வேர் ஆகியவற்றைக் காய்ச்சி உட்கொள்ள சுரம் நீங்கும்.

வாத பாண்டுவின் குணம்

111. வாதபாண் டுரோக மானால் வந்திடும் பரிசு கேளாய்
தாகமும் பசியுங் கெட்டுத் தன்னிறங் கருகி வாடி
சோபமே மிகவுண் டாகிச் சுரோணிதம் வற்ற வற்ற
ஆதர வான தாது மத்திய மாகுங் கண்டாய். 1

வாதபாண்டு நோயின் குணங்களாவன, தாகமும் பசியும் இல்லாமல் போகும். நிறம் மங்கி, மேனி வாடும், வீக்கம் உண்டாகும். சுரோணிதம் வற்றிப்போய் தாது பலங்குறையும்.

வாதம்காணல்

112. கண்ணொடு உதடு நாக்குஞ் சரீரமு மலமும் நீருந்
தன்னிறங் கெட்டுப் பின்னைச் சலித்திடும் புத்தி தானும்
விம்மிடு மவற்றைப் போக்கும் வீங்கிடும் புறங்கால் தானும்
கம்மிடுங் கைகா லோயும் கதித்திடும் வாதங் கண்டாய். 2

கண், உதடு, நாக்கு, உடல், மலம், நீர், மேனிநிறம் ஆகியவற்றின் தன்மை கெட்டு சலிப்புடன் கூடிய மனநிலை ஏற்படும். புத்தி தடுமாறும். புறங்கால் வீங்கும், கைகால்கள் ஓயும். வாதநாடி எழும்பி நிற்கும்.

(தீராத நிலை மருத்துவம் செய்தல்)

113. பரிசமே அறிந்து கொண்டு பரிந்திடும் போது கேளீர்
மலமொடு சலமு முண்டாய் வாயுவுங் கீழே போகில்
செயமிவை யாகு மென்னத் தீரவே யுணர்ந்து கொண்டு
பயமற விடுவ தென்று பரிந்துநீ மருந்து செய்யே. 3

மலம் தண்ணீராகக் கழிய வாயுவும் கீழ்நோக்கிப் பாயுமானால் நோய் தீராது என்றறிந்து கொண்டு பயத்துடன் விட்டுவிடாமல் பரிந்து அதற்கான மருந்து செய்வாயாக.

மரணக் குறி

114. காலொடு புறங்கை வீங்கிக் கனக்கவே போத வீங்கி
சாலவே கண்சி வந்து தனஞ்செயன் கீழே யானால்
போதவே வயிறு வீங்கும் பொருமியே யுழலை யானால்
சாவது திண்ண மென்று சடக்கென்று விட்டுப் போமே. 4

காலும், புறங்கையும் வீங்கிக் கனக்கும். கண்சிவந்து, வீங்கி, தனஞ்செயனாகிய வாயு கீழ்நோக்கிப் பாயுமானால், வயிறு வீங்கும். வயிற்றில் பொருமலுடன் உளைச்சல் ஏற்படுமானால், மரணம் வருவது உறுதி என்பதை அறிந்து நீங்குவாயாக.

(நோயாளியின் அசாத்திய நிலை அறிதல், மரணக்குறி)

115. முதுகொடு வயிறு வீங்கி மூலமே தாது கெட்டு
செவியோடு கண்ணும் வாயும் செவ்வெனப் பரிசங் குன்றி
முடுகிட வாறு மூன்றும் முதியவன் கீழே யானால்
விதியவன் வசம தென்று விட்டுநீ விரைந்து போகே. 5

முதுகும், வயிறும் வீங்கி, மூலமாகிய தாது கெட்டு, காது, கண், வாய் ஆகியன சிவந்து உற்றறியும் உணர்வு குன்றி, வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றுமே விரைந்து நடக்க, அவற்றில் மூத்ததாகிய வாதநாடி கீழாக நடக்குமானால் நோயாளியின் வாழ்க்கை விதிவசம் என்பதை அறிந்து விரைந்து விட்டுச் செல்க.

★ 116. தேரைபோல் காலுங் கையும் நொந்துடல் வயிறு வீங்கி
ஊசிபோல் முகமுந் தேய்ந்து உடம்பெலா நரம்பு தோன்றி
பாசிபோல் கண்சி வந்து பசியின்றிக் கனத்தி ருக்கும்
கூசிட வேண்டா மிந்தக் குறிகளுண் டான போது
சாவது திண்ண மென்று சடக்கென விட்டுப் போகே. 6

தேரையைப் போல, காலுங் கையும் இளைத்து, வயிறு வீங்கி, ஊசி போல முகம் தேய்ந்து, உடம்பு முழுதும் நரம்பு வெளிப்பட்டுத் தோன்றி, கண் சிவந்து பசியின்றி இருக்கும். இக்குறிகண்டால் மரணம் உறுதி என்பதை உணர்ந்து நீங்குவாயாக.

117. வீங்கிடுங் காலுங் கையும் விம்மிடும் வயிறு போத
வாங்கிடும் தண்ணீர் தானும் வரலிடு நாவும் பல்லும்
தாங்கிடும் மலமும் நீரும் தவறிடுஞ் சொற்கள் மற்றும்
ஏங்கிடும் புலன்க ளைந்து மிதுகண்டால் விட்டுப் போகே. 7

காலும் கையும் வீங்கி, வயிறு விம்மி, தண்ணீர் வற்றி, நாவும் பல்லும் வறண்டு மலமும் நீரும் தடைபடும். சொற்கள் தடுமாறும்; ஐம்புலன்களும் களைத்துப் போகும். இக்குறிகள் கண்டால் மரணம் நிச்சயம்.

(தீவிர நோய் அறிந்து மருத்துவம் செய்தல்)

118. நாலிரண் டெட்டு தானும் நலம்பெற வீங்கி னாலும்
சாலவே மலமுந் நீரும் சடக்கென விடுமே யாகில்
கூசிட வேண்டா மிந்தக் குறிகளுண் டான போது
தேறிடு மருந்த றிந்து சிக்கென மருந்து செய்யே. 8

பதினாறு நாள், உடம்பு வீங்குதல் மலமும் நீரும் திடீரெனக் கட்டுப்படுதல் என இந்த இரண்டு குறிகுணங்கள் கண்டால் உடனே மருத்துவம் செய்வாயாக.

மரணக்குறி

119. நாடிகள் பத்து மூன்றும் மந்த மாகிக் கெட்டு
ஓசையி லேழு மூன்றும் ஒக்கவே யொளியுங் கெட்டு
பாசியும் நீரும் போலே பரந்திருள் மூடு மாகில்
சாவது திண்ண மென்று சடுதியில் விட்டுப் போகே. 9

நாடிகள் பதின்மூன்றும் மந்தனமாகி கெட்டு, ஏழு வகை ஓசை கெட்டு, மூன்று நாடிகளும் ஒடுங்கி கண்ணொளி கெட்டு, பாசியும் நீரும் கலந்தது போன்று கண்கள் இருண்டு வருமானால் இறப்பு உறுதி எனவறிக.

(நோயின் நிலை அறிதலும் - மருத்துவமும்)

120. தாகமும் பசியு முண்டாய்ச் சலமுடன் மலமு முண்டாய்
மேல்வயி றதைப்பும் விட்டு மெத்தெனக் குழைந்தி ருக்கில்
கூசிட வேண்டா மிந்தக் குறிகளுண் டான போது
மாசிலா னருளைக் கொண்டு மருந்துசெய விரும்பு வாயே. 10

தாகமும் பசியும் உண்டாகி, மலம் நீராகக் கழிந்து, வயிறு பெருத்து மெத்தெனக் குழைந்திருக்கும். இக்குறிகள் கண்டால் கூசாது, இறைவன் அருளால் மருந்துகள் செய்வாயாக.

பயித்திய வாயுவின் குணம்

121. பக்க வலிப்பு நரம்புப்பி பாரிசந் தண்ணீ ரிறங்கிட்டு
தொக்க சோறுஞ் செரியாமல் குய்ய குலையில் நோவுண்டாய்
மிக்க யேப்ப முண்டாற்போல் இனிய வயிறு மேல்னோக்கில்
தக்க குரும்பை முலைமானே வரியப் பயித்திய வாய்வீதே. 11

ஒரு பக்கமாக வலிப்பு ஏற்பட்டு, நரம்பு உப்பி வீங்கி, பாரிச வாயு தோன்றி, நீர் இறங்கும். சோறு செரியாமல், குய்யத்திலும் ஈரற் குலையிலும் நோய் உண்டாகி, ஏப்பம் மிகுவதோடு, வயிறு மேல்நோக்கினால் இது பயித்தியவாயு என்று அறியலாம்.

மாங்கிசகதச் சுரத்தின் குணம்
(வேறு)

122. அறிந்தேதீ விரசுரமுந் தாக முள்ளே
ஆறாட்ட மதிப் பிரமை தேக நோவு
தெரிந்தேமூர்ச் சிக்குமாத் தகத சுரத்தின்
செய்திசுரந் தீவிரமா யதிசு வாசம்
முறுந்தேக வேர்வையுத டுலர்ந்து போக
உடம்புநொந்து மயிர்சிலிர்த்து மூர்ச்சை யாக
பிரிந்தேகு மாங்கிசகத சுரமீ தென்றே
பேசினர்முந் நூலுணர்ந்த பெரியோர் தாமே. 1

தீவிர சுரம் உள்ளே இருந்தால், உள்ளமே திக்பிரமை ஏற்பட்டுத் தேகம் வலியெடுத்து, மூர்ச்சை ஏற்படும். மிகுசுரம் ஏற்பட்டு, தீவிரமாகி சுவாசம் மிகும். தேகம் வியர்க்கும். உதடு உலர்ந்து போகும். உடம்பு நொந்து மயிர் சிலிர்த்து மூர்ச்சையாகும். இதுவே ஊண் பற்றிய சுரம் ஆகும்.

தாந்திரிகச் சன்னியின் குணம்

123. பெரியவுரம் நெற்றியுமே வேர்வை யாக
பெருந்தாக மதிப்பிரமை தேகம் நோவு
கரியதலை நோய்சருவாங் கமுந்தா கிக்க
கண்பச்சென் றிருக்கவே சோப மாக
அரியபிராந் தியதாய்வாய் பெற்ற மாகு
முதரமுளைத் தேவிக்க லெடுக்குந் தானே
வருமிருமல் மயிர்சி லிர்த்தக் குணத்தைக் கண்டால்
வந்திடுந்தாந் திரிகச்சன்னி யின்வகையென் றோதே. 2

வலிமை பொருந்திய நெற்றி வேர்க்கும். மிக்கதாகம் ஏற்படும். பிரமை ஏற்படும். உடல் நோவும் தலை நோவும் ஏற்படும். உடல் முழுதும் வெப்பம் உண்டாகும். வாய் பிதற்றும். உதடு வரண்டு விக்கல் எடுக்கும். இருமல் வரும். மயிர்சிலிர்க்கும் இவ்வகையான குணங்கள் கண்டால் அது தாந்திரிகச் சன்னியின் வகையென்று கூறுவாயாக.

இருக்குவாதச் சன்னி(யின் குணம்)

124. ஓதியுடன் மோகிக்கத் தாக மாக
உடல்விருமித் தாறாட்டந் தலைபு ரட்ட
மேதகுதப் பரைபேசல் வாந்தி பண்ணி
விக்கலெடுக் கச்சுரந்தீ விரம தாக
நீதிவிக் குணந்தான் தாகமாஞ் சன்னி
நிலையாக உடல்தனில் நின்ற தன்றே
ஆதியினி ருக்குவாத சன்னி செய்யு
மடைவுதானைப் புகல்வன்மொழி யமிர்தன் னாளே 3

உடல் விறுவிறுத்து, ஆட்டங் கண்டு, தலைபுரட்டித் தப்புத்தப்பாகப் பேசி, வாந்தி பண்ணி, விக்கலெடுத்து, சுரம் வந்து, விக்கலுடன் தாகம் எடுத்து சன்னி உடலில் நிலையாகத் தோன்றும். இதுவே இருக்குவாதச் சன்னி என்று அறிவாயாக.

இருக்குதாகச் சன்னி (யின் குறிகுணம்)

125. அமிர்தமொழி தப்பரை சொல்லத் தாக
மதிகரிக்க வீறுமிக்க நெஞ்சு நோகச்
சுமைதலையுஞ் சுத்தத்தா கிக்கத் தானே
துடியுலர்ந்து இருமல்சாட் டியம தாக
கமையுடல் நடுக்கவெகு பிரலா பிக்க
கழுத்துடன்நெற் றியும்வேர்க்கக் கண்ட போதே
தமையுணர்ந்த பெரியோர்க ளருக்கத்தாக
சன்னியிது யெனவறிந்து சாற்று வாரே. 4

அமுதம் போன்ற இனிய மொழி மாறி தவறாகப் பேசுதல், தாகம் அதிகமாகி, நெஞ்சு நோவெடுத்தல், தலை சுற்றிக் கனத்து இருத்தல், சுரம் வந்து, இடை தளர்ந்து, இருமல் ஏற்படுதல், உடல் நடுங்கி வெகுவாகப் பிரலாபித்து, கழுத்துடன் நெற்றியும் வேர்த்துக் கண்டால் இது இருக்குதாகச் சன்னி ஆகும்.

சித்த(விப்)பிரமைச் சன்னி (யின் குறிகுணம்)

126. சாற்றுசரீ ரமும்வெகுவாய் நோவ தாகுந்
தான்வாத பயித்தியமே பிரகோ பிக்க
ஏத்தவந்த பேருடனே மிகக்கோ பிக்க
இருபுறமும் துடிக்க வாடிக் கிடக்க...
மாற்றமுடன் மோகிக்க வழக்குப் பேசு
வாயிலிட்டே யலறுமிந்த வகையுண் டாகித்
தோற்றியசித் தவிப்பிரமை சன்னி யென்றே
சொல்லிடுறா யுருவேதந் துணிவு தானே. 5

சரீரம் மிகுந்து நோகும். வாத முதிர்ச்சியினால் சித்தம் கலங்க நோயாளி தன் உதவிக்கு வந்தவர்களிடத்து மிகவும் கோபித்துக் கொள்வதும் உடம்பு இருபக்கமும் துடிக்கும் படியாகவும் அதன் காரணமாகச் சோர்வு கொள்ளுதலும் காணலாம். இதற்கு மாறாக விருப்பத்துடன் பேசும். வாய்விட்டு அலறும். இந்த வகை உண்டாகுமானால் சித்த(விப்)பிரமைச் சன்னி ஆகும்.

சீதாங்கச் சன்னி (குணம்)

127. துணிந்துடலங் குளிர்ந்தசீ தளம தாகத்
துலையாதுப் பிசத்தினோடு விக்க லுண்டாய்
அணிந்திடுதே கமும்வெளுத்தே யுடம்பு நோக
யதுவாந்தித் தம்வெகு மூர்ச்சை யாக
திணிந்துவயி றுகழியச் சிரமதாக நடுக்க
செய்திடுங்காண் சீதாங்கச் சன்னி தானே.
பணிந்துவரு காலனினும் வலிதா மிப்பால்
மொழிவளந்தாந்திரீகம் பண்பு தானே 6

உடல் குளிர்ந்து சீதளமாகும். இது மட்டுமன்றி வாந்தியோடு விக்கல் ஏற்படும். தேகம் வெளுக்கும். உடம்பு நோகும். வாந்தியோடு வெகு மூர்ச்சையாகும். இவ்வாறு பல்வேறு உபாதையோடு வயிறு கழிந்து நடுங் க ச் செய்வது சீதாங்கச் சன்னியாகும்.

தாந்திரீகச் சன்னி குணம்

128. பண்பாக கட்டிப்போட் டாற்போ லேதான்
படுக்கையினில் புரண்டுநித் திரைசெய்வார் போல
நண்பாகக் கண்மூடி முள்ளுப் போலே
நாக்கறுத்து விசுழியோடுப் பிசமு மாகி
விண்பாய சரீரத்திற் தினவுண் டாகி
விழிபிரிந்து நெரித்துநீர் பாயுந் தானே
தண்பாய விக்குணங்கள் செய்யுங் கண்டாய்
தாந்திரீகச் சன்னியிதன் தன்மை தானே. 7

நோயாளி கட்டிப்போட்டாற்போல இருப்பார்; படுக்கையில் புரண்டு தூங்குவது போல் இருப்பார்; நாக்கு கறுக்கும். வாய் பிதற்றுவார். உடம்பில் தினவு உண்டாகும். விழி பிரிந்து வீங்கி நீர் பாயும். இக்குணங்கள் கண்டால் தாந்திரிகச் சன்னியாகும்.

கண்டகுச் சன்னி (யின் குறிகுணம்)

129. தன்மையுள சுரத்தினொடு தாக முண்டாந்
தலைகனத்து கண்டத்துள் வேர்வை யாக
தின்மையதாய் மோகிக்கத் திடுக்கிட் டேதான்
திகைத்தெழுந்தாற் போலிருக்கு மூர்ச்சை யாக
பின்மயமாய் விக்கலுட னிருமல் காட்டி
பிடரிக்குள் ளேகுடைந்து பேத மாக
வன்மமதாங் கண்டகு சன்னி செய்யும்
வகையான குணமதனை மதிக்குங் காலே. 8

சுரத்துடன் தாகம் ஏற்பட்டு, தலை கனத்து, கழுத்தில் வேர்க்கும். ஓர் உணர்வுடன் இருக்கும்போது திகைத்து எழுவர். பிறகு மூர்ச்சையாவர். பிணமாய்க் கிடப்பர். இருமலுடன் விக்கல் ஏற்பட்டு, பிடரிக்குள்ளே குடைச்சல் ஏற்படும். இக்குறிகுணங்கள் கண்டால் கண்டகுச் சன்னி என்று கூறலாம்.

கர்ணிகச் சன்னி(யின் குறிகுணம்)

130. மதியாமல் பொய்சொல்லும் வெடித்து நாவும்
வருமுள்ளுப் போல் விக்கலது தானு முண்டாய்
கதியான யிருமலுட னடுக்கத் தோடு
காதுமடல் தண்டதுவுங் கனத்து வீங்கி
அதிலேதிடுக் கெனவெழுந்தே யிருக்கச் செய்யும்
அடைவிதுகர் ணிகச்சன்னி யாகுங் கண்டாய்.
விதியான புக்குநேத் திரகு ணத்தை
விளம்புவன்யா னறிந்தபடி மேதி னிக்கே. 9

மதியாது பல பொய் சொல்லும். நாவு வெடித்து, முள்ளுப்போல் இருக்கும். விக்கல் ஏற்பட்டு இருமலுடன் நடுக்கமும் ஏற்பட்டு, காது மடல் கனத்து வீங்கி, திடீரென உடல் வெளுக்கும். இவ்வாறு குறிகுணங்கள் கண்டால் இதுவே கரணிகச் சன்னி ஆகும்.

நேத்திரச் சன்னி(யின் குறிகுணம்)

131. மேதினியிற் கண்பெருத்து நீர்தான் பாயும்
விழிமுழித்துப் பார்க்கப்போ காதி ருக்க
ஓதுமொழிப் பொய்சொல்லும் பிரமித் தேதான்
உற்றவிழிப் பினில்வலியு முளதாய்ச் செய்யும்
நீதியுடன் புக்குநேத் திரமாஞ் சன்னி
நிச்சயமாய் உடல் தன்னில் நின்று தானே
வாதனைகள் செய்துவிடு மிதனை மாற்ற
வல்லவர்கள் மருத்துவர்தாள் வணங்கி னாரே. 10

கண்கள் வீங்கி, நீர் வடியும். விழிகளைத் திறந்து பார்க்க முடியாது. வார்த்தைகள் பொய்யாய் தோன்றும். திகைப்பைத் தோற்றுவிக்கும். கண்ணைத் திறந்தால் வலி உண்டாகும். உடலில் மிகுந்த வேதனைகளைச் செய்யும். இக்குறிகுணங்கள் கண்டால் நேத்திரச் சன்னியாகும். மருத்துவரை வணங்கி இதனைப் போக்குவதற்கான வழிகளை மேற்கொள்ளலாம்.

இரத்தேட்டிகச் சன்னி(யின் குறிகுணம்)

132. வணங்கியநாக் குதடு வெடித்து ரத்தம்
வடிந்துசுரந் தீவிரமாய்க் காய்ந்து மூர்ச்சை
இணங்கியவா விக்கலது மிகவெ டுத்து
இனிவயி றதுகழியப் பொய்யுஞ் சொல்லும்
குணங்கிருமல் தலைசுற்றி நடுக்கும் நாக்குங்
குறிகறுத்து முள்ளுப்போ லேஇ றுக்குங்
கண்களிலும் வலிதாமத் தேட்டி தன்னைக்
காலனென வறிந்துநீ கருது வாயே. 11

நாவும் உதடும் வெடித்துத் தோன்றும். சுரம் விடாமல் காயும். மூர்ச்சையாவர். விக்கல் மிகுதியாகக் காணும். வயிறு கழியும். நா உளறிப் பொய் மிகும். குத்திருமல் உண்டாகும். தலை சுற்றும். உடல் நடுங்கும். நாக்குக் கறுத்துத் தோன்றும். நாவின் மேல்பரப்பில் முட்கள் போல்

சுனை தோன்றும். கண்களில் வலி ஏற்படும். இக்குறிகள் தோன்றினால், இரத்தேட்டிகச் சன்னி என்று அறியலாம்.

பிரலாபச் சன்னி(யின் குறிகுணம்)

133. கருதியதோர் உடல்நடுக்கிப் பொய்தான் சொல்லுங்
கனத்துடம்பு சிக்கலுட னுடம்பு நோகச்
சுரமதுவுந் தீவிரமாய் பிரலா பிக்கத்
தோன்றுபிர லாபசன்னித் தோட மீதாஞ்
சுருதிமறை முடியுணர்ந்த தூயோர் தானே
சொல்லினர்சிந் தாமணியின் துணிவி தென்றே
வருமதன்ன முடியநிகள் முலையி னாளே
வந்திடுஞ்சிம் மகச்சன்னி யின்வகைசொல் வேனே. 12

உடல் நடுக்கமுடன் கனத்து வலி தோன்றும். சுரம் விடாமல் வேகமாகக் காயும். வாய் அதிகமாகப் பேசிப் பிரலாபிக்கும். இதுவே பிரலாபச் சன்னி ஆகும். இதனைச் சிந்தாமணி நூல் துணைகொண்டு தூயோர் கூறினர். இனி சிம்மகச் சன்னி பற்றிச் சொல்வேன்.

சிம்மகச் சன்னி(யின் குறிகுணம்)

134. வழிமூச்சு தான்கடுக்க கலக விட்டே
வருதாப மதிகமதா யிரும லுண்டாய்
அனிநாக்கு நுனியதுவுந் தித்தித் தேதானான
முள்ளுப்போல் கறுத்து யனல தாக
இழிதான சுரமுந்தீ விரம தாகி
யியலுடம்பு ஊசிகொண்டு குத்து வார்போல்
விழிதாகப் பேச்சற்றே செவிட தாகும்
விரும்மிச்சிம் மகச்சன்னி யின்விசம தாமே. 13

மூச்சு மிகுதியாக வாங்கும். உடல் கடுக்கும். தாகம் மிகும். இருமல் உண்டாகும். நாநுனி இனிப்புச் சுவை காட்டும். நாக்கு முள்ளுப் போல் சுணை தோன்றி, கறுத்து வெப்பமாக இருக்கும். சுரம் விடாமல் வேகமாகக் காணும். உடம்பில் ஊசி கொண்டு குத்துவார் போல வலி காணும். பேசவராது. காது கேட்காது. இக்குறிகள் யாவும் சிம்மகச் சன்னியை உணர்த்தும்.

அபினியாசச் சன்னி (யின் குறிகுணம்)

135. என்னநல வாதபித்த சிலேத்து மந்தான்
இவைகூடி நடக்குமுக மெங்குந் தானே
மின்னியிட நித்திரையு மதிக மாக
மெய்யுடம்பு நொந்துவெகு தாக முண்டாம்
பன்னுபல ரில்லாமல் வேர்வை காட்டும்
பகருமபினிய னாசசன்னி பண்பி தாகுஞ்
சன்னிபதி மூன்றுஞ்சாத் தியமசாத்தி னோடு
தறுகண்சாத் தியமதெனச் சாற்று வேனே. 14

வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்றும் கூடி நடக்கும். முகம் பளபளத்துத் தோன்றும். தூக்கம் அதிகமாகும். உடம்பு வலிக்கும். தாகம் அதிகமாகும். வியர்வை மிகும். இதுவே அபினியாசச் சன்னி ஆகும்.

இனி இப்பதின்மூன்று சன்னிகளில் சாத்திய, அசாத்திய வகை பற்றிக் கூறுவேன்.

**சன்னி பதிமூன்றுஞ் சாத்திய மசாத்தியம் அறிதல்**

136. சாற்றியதோர் சந்திகந் தாந்திரீக மென்னும்
தக்கபிர லாபசித்த விப்பிரமை யோடும்
ஏற்றமுள்ள சிம்மகச் சன்னி கர்ணிக தென்னு
மிவையாறு சன்னியுமா சாத்தியம தாகும்
போற்றிருக்கு வாதமுமந் தகமா சன்னி
புக்குநேத்தி ரங்கண்ட குச்ச மென்னு
மாற்றரத் தேட்டிகசீ தாங்கத்தி னோடு
மபினாச மேழும்சாத் தியம தாமே. 15

சந்திகச் சன்னி, தாந்திரீகச் சன்னி, பிரலாபச் சன்னி, சித்தவிப்பிரமைச் சன்னி, சிம்மகச் சன்னி, கர்ணிகச் சன்னி இவை ஆறும் தீர்க்கக் கூடியனவாம். இருக்குவாதச் சன்னி,மந்தகமாகச்சன்னி, நேத்திரச் சன்னி, கண்டகுச்சச்சன்னி, இரத்தேட்டிகச் சன்னி, சீதாங்கச் சன்னி, அபினியாசச் சன்னி ஆகிய ஏழும் எளிதில் தீராத அசாத்தியச் சன்னி வகைகள் ஆகும்.

**சன்னி பதிமூன்றுக்கு நாள் விதி**

137. தாமேசந் திகமேழு நாளந்த கற்குச்
சாற்றுநாள் பத்துருக்கு தாகந் தானே
நாமேநா லைந்துசித்த விப்பிரமை மூவேழ்
நாள்சீதாங் கத்துக்கு நாள்மூ வைந்தாந்
தேமேவு தாந்திரிக மேழு நாளில்
தீராதே ஐந்தைந்து திவச மாகும்
பூமேவு கண்டகுநாள் பதின்மூன் றாகும்
புகன்றிடுகர் ணிகநாளு நவம தாமே. 16

சந்திகச் சன்னிக்கு ஏழு நாள்; அந்தகத்திற்குப் பத்து நாள்; உருத்தாகச் சன்னிக்கு இருபது நாள்; சித்தவிப்பிரமைக்கு இருபத்தோரு நாள்; சீதாங்கச் சன்னிக்கு பதினைந்துநாள்; தாந்திரீகச் சன்னி ஏழு நாளில் தீராது, இருபத்தைந்து நாட்கள் ஆகும். கண்டகுச் சன்னிக்குப் பதின்மூன்று நாள்; கர்ணிகச் சன்னிக்கு ஒன்பது நாள்.

138. நவமேவு புக்குநேத் திரநா ளெட்டு
நாடுரத் தேட்டிகந்தான் நாள்பத் தாகும்
பவமேவும் பிரலாபம் பதினா லாகும்
பகர்ந்திடும்சிம் மகம்நாளும் பதினா றாகும்
மவமேவு மபினாச திண்மை மூன்றா
மானசன்னி பதின்மூன்றுக் கமைந்த நாளாம்
தவமேவு சத்தவித் தோடந் தன்னைச்
சாருவான்சிந் தாமணியின் தன்மை தானே. 17

நேத்திரச் சன்னிக்கு எட்டு நாள்; இரத்தேட்டிகச் சன்னிக்குப் பத்து நாள். பிரலாபச் சன்னிக்குப் பதினான்கு நாள்; சிம்மகச் சன்னிக்கு நாள் பதினாறு ஆகும். அபினாசச் சன்னிக்கு மூன்று நாள்; ஆக சன்னி

வகை பதின்மூன்றுக்கும் அவை உடலில் இருப்பதற்கான நாட்கள் இவ்வாறாக சிந்தாமணியின் துணைகொண்டு கூறப்பட்டுள்ளன.

அதிசாரம் (வகைகள்)

139. செப்புமதி சாரமெட்டு விதமாம் வாதஞ்
சேர்ந்தபயித் தியத்தினொடு சிலேத்து மந்தான்
ஒப்புடனே அதிசாரந் தோடந் துற்ற
வதிசார மசாத்தி யமாம் ரோகம்
மெப்புறவே சாத்தியமா மதிசா ரத்தில்
மீளாத மகாசாத் தியம தென்னை
இப்படியே யெண்வகையுந் தேர்ந்து நற்தோ
ரிசம்வல்லோர் வயித்தியரென் றெண்ண லாமே. 18

அதிசார நோய் எட்டு வகைப்படும். இவற்றுள் வாதாதிசாரம், பித்தாதிசாரம், சிலேத்துமாதிசாரம், தோடாதிசாரம் ஆகியன அசாத்தியமாம். பிற சாத்தியமாம். இவற்றை ஆய்ந்து கண்டு மருந்தியற்றுவோரை வைத்தியர் என்று கூறலாம்.

வாதாதிசாரம்

140. எண்ணு பொல்லாப் போசனத்தாற் துக்கத் தாலு
யிழைத்தனாற் தூரவழி நடந்த தாலும்
திண்ணவி ரோசனமா னவிச தந்தான்
தின்பதினாற் பிறக்குமதி சார மூலம்
வண்ணமறு சிக்கறுத்துந் தியின்கீழ் நொந்து
வயிறூதி வாடுமூப் பதுவு மாகி
நண்ணுசற்றே இறுகினதோர் மலம தாக
நாற்றமதா மவ்வதி சாரந் தானே. 19

உணவுக் குற்றத்தால், அதிக துக்கத்தால், நெடுந்தூரம் நடந்ததால், பேதி மருந்து உண்பதால் பிறப்பது அதிசாரம் ஆகும். இந்நோய் தோன்றினால் மலம் கறுத்திருக்கும். உந்தியின் கீழ்ப்பகுதியில் வலி மிகும். வயிறு ஊதித் தோன்றும். மலம் இறுகி வெளிப்படும்; நாற்றம் அதிகமாகும். இவை வாதாதி சாரத்தின் பண்புகள்.

பித்தாதிசாரம் குணம்

141. சாருமல மஞ்சனித்து உஷ்ணம தாகத்
தானுரைத்துக் கழியவோர்காற் பச்சை யாக
தீரமுட னேகழிந்து சீதம் வீழத்
திகைத்தாற்போல் வயிறெங்குந் துளைந்து நோக
வாரமுடன் தாகமதி கரிக்க வேர்க்க
வருமுதடு உலருமிந்த வகையைக் கண்டாற்
தாரணியில் பித்தாதி சார மென்றே
சாற்றுவர்வே தாந்தம்வல்ல தக்கோர் தாமே. 20

மலம் நீராக நுரையுடன் கழியும். பச்சை நிறமாகக் கழியும்பொழுது சீதமும் கூடி விழ, வயிறு துளைப்பது போல் வலிக்கும். தாகம் அதிகமாகும். உடல் வேர்க்கும். உதடுலர்ந்து போகும். இக்குறிகள் கண்டால் பித்தாதிசாரம் என்பர் வேதாந்தம் வல்லோர்.

கப அதிசார குணம்

142. தக்கதொரு நுரையுடனே சீதம் விழுஞ்
சாருமலம் வெளிறியே யிரும லுண்டாம்
மிக்கதொரு சுவாச மென்மேல் நோக்கி யன்னம்
மிகவுமரோ சிகம்பிறந்தால் வயிறு சற்றே
ஒக்கவது நோகுமிந்தக் குணத்தைக் கண்டால்
உயர்சிலேத்து மத்திலதி சார மென்றே
முக்கணுடைப் பகவனுரைத் ததனைத் தானே
முதனாளிற் பிறந்தவர்கள் மொழிந்தார் காணே. 21

நுரையுடன் இரத்தம் கலந்து நீராக மலம் வெளியேறும். இருமல் உண்டாகும். மேல் மூச்சு வாங்கும். அன்னத்தின் மீது ஆர்வமில்லாதபடி அருசி தோன்றும். வயிறு வலிக்கும். இக்குணம் கண்டால் சிலேத்தும அதிசாரம் என்று கூறுவர்.

சுர அதிசாரத்தின் குணம்

143. காண்பதுஞ் சிரித்துடன் தாகிக்க நல்ல
கனத்தஉண்டி யதுநொந்து ருசியில் லாமல்
மாண்புடனே வயிறதுதான் கழிந்து நாற
வருசீத ரத்தமா வதுக ழிந்தால்
சேண்பயிலுஞ் சுரஅதி சார மீதாஞ்
செப்பிடுவன் தோடாதி சாரந் தன்னை
நான்பயில்கந் தாம்பூக மனைய மாதே
நாவலர்கள் உரைத்ததனை நாடிப் பாரே. 22

எதைப் பார்த்தாலும் சிரிப்புத் தோன்றும். தாகம் மிகும். வயிறு கனத்து வலிக்கும். வாயில் ருசியின்மை தோன்றும். வயிறு கழிந்து நாற்றம் மிகும். சீதரத்தமாக மலம் வெளியாகும். இவ்வாறு காணின் இது சுரஅதிசாரம் ஆகும்.

தோட அதிசாரத்தின் குணம்

144. பாருமுழலை தாகமுள்ளே வுடலின் மேலே
பண்புடனே குளிர்ந்துகைகால் குளிர்ந்தி ருக்கும்
தீரமுடன் தப்பரையே பேச வாந்தி
திகழ்விக்க லோடு வயிறு போக
வாரமுடன் நடுக்கபிர மிக்கப் பண்டி
வந்துப்ப நித்திரையில் லாமல் வேர்க்க
ஆரமுடன் ரத்தமுஞ்சீ தமுமா வீழும்
அங்கமெங்குங் குத்துந்தோ டாதி சாரம். 23

உடலில் உளைச்சல் ஏற்பட்டுத் தாகமேற்படும். உடல் குளிர்வதுடன் கையும் காலும் குளிர்ந்து இருக்கும். நோயாளியின் நாடி பேதப்பட்டு மருத்துவர்க்கு இன்னது என்று அறியமுடியாத தடுமாற்றத்தைக் கொடுக்கும். வாந்தி ஏற்படும். விக்கல் ஏற்பட்டு வயிறு கழியும். உடலில் நடுக்கம் உண்டாகும். வயிறானது ஊதும். நித்திரையின்றி வியர்க்கும். இரத்தமும் சீதமும் கழியும். உடலெங்கும் குத்தலெடுக்கும். இதுவே தோட அதிசாரம் ஆகும்.

### அசாத்திய அதிசாரம் (குறிகுணம்)

145. அதிசாரம் விளக்கெண்ணெய் கலந்தாற் போலே
அதுகழிய மாங்கிசங்கள் விழுந்தீ மொய்க்கும்
புதிதான குரற்கம்மி நாற்ற முண்டாம்
பொல்லாத வசாத்தியதி சார மென்றே
விதிசாரும் பயிற்றுநூற் பயன்தெ ரிந்து
விளம்பினர்காண் மதிவதன விழிவேல் மேகப்
பதிபோலுங் கூந்தல்பனைத் தோளாய் கேளாய்
பனிமுதுகுன் றிற்கதிபன் பகர்ந்த வாறே. 24

மலம் விளக்கெண்ணெய் கலந்ததுபோல் சதை [illegible] கூடி விழுந்து ஈ மொய்க்கும். நாற்றம் மிகும். குரல் கம்மும். [illegible]வை அசாத்திய அதிசாரம் ஆகும்.

### சாத்திய அதிசாரம் (குறிகுணம்)

146. பகர்ந்தகண் செங்கழுநீர் பூமுகந் திங்கள்
பசுநாடி சமனாகக் குயில்போல் சத்தம்
உகந்திருமத் தும்மலன்னத் திச்சை தேகம்
உற்றலகு வாய்முலையும் மயிரும் பல்லுந்
திகழ்ந்தமலர் போல்நாக்கு மெத்தென் றேதான்
தெரியருசி வாகனையுந் தெரியக் காதும்
அகங்கையங் காலுஷ்ண மாய்நங்கை ரேகை
அதுரத்தம் பரவிற்சாத் தியம தாகும். 25

கண்கள் செங்கழுநீர்ப் பூப்போல் சிவக்கும். முகம் நிலவுபோல் வெளுக்கும். நாடி சமமாய் நடக்கும். இருமலும் தும்மலும் மிகும். வாய், மார்பு, பல், நாக்கு, மயிர் ஆகியன மென்மையாகத் தோன்றும். சுவையின்மை ஏற்படும். உள்ளங்கை, உள்ளங்கால் வெப்பமாயிருக்கும். நகம், கை, ரேகைப் பகுதி ஆகியன இரத்தம் பரவிக் காணும். இக்குறிகள் கண்டால் அதிசாரம் சாத்தியமாகும். அதாவது அதிசாரம் மருத்துவத்தால் குணம் செய்ய இயலும் என அறிக.

### மாத்திரை (வழங்கும்) விதி

147. நடவாத சரீரகுண மெட்டும் நாடி
நடக்கின்ற விதமும்சீ ரணங்கள் நாலும்
அடைவான வெள்சுரந்தொக் கிலித னான்கும்
அத்திகருஞ் சன்னிபதி மூன்ற தாகும்
திடமான தருணசுர மேழுஞ் சேர்ந்த
வதிசார மெட்டின்தி றங்கள் யாவும்
மடமாதே யுரைத்தன்ன மாத்திரைகள் சேர்க்கும்
வகையினையான் அறிந்தபடி வகுப்பன் சீராய். 26

உடலில் எட்டுவித குணங்களும், முத்திறமான நாடிகளின் நடையியல்பும், அசீரண வகை நான்கும் சுரக் கலிதம் நான்கும், சன்னி பதின்மூன்றும், தருணசுரம் ஏழும் சேர்ந்த அதிசார வகை எட்டின் திறமறிந்து மாத்திரை வழங்கும் முறையைக் கூறுவேன்.

ஆனந்த வயிரவன் (மாத்திரை)

148. சீரான சாதிலிங்கம் நாபி யோடு
திரிகடுகு வெண்காரம் சமனாய்க் கூட்டி
நேரான எலுமிச்சம் பழத்தின் சாற்றில்
நேகவரைத் துண்டைகுன்றி நின்று லர்த்தி
ஏரான இஞ்சிச்சாற் றதில்கொ டுத்தால்
யெய்துசன்னி பதின்மூன்றுந் தோட மேழும்
மாறான சுரமதெல்லாம் தீர்க்கத் தக்க
வானந்த வயிரவ னதாகு மின்னே. 27

சாதிலிங்கம், நாபி, திரிகடுகம், வெண்காரம் இவற்றைச் சமஅளவு எடுத்துக் கூட்டி எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் குன்றியளவு உருண்டைகளாக உருட்டி உலர்த்துக் கொள்ள வேண்டும். இம்மாத்திரையை இஞ்சிச் சாற்றில் கொடுக்கப் பதின்மூன்று சன்னியும் ஏழுவகைத் தோடமும் நீங்கும்.

விட்ணுச் சக்கரம் (மாத்திரை)

149. மன்னுரச கந்தகம்வெண் கார நாபி
மென்தாம்பி ரபற்ப மிளகி னோடு
மின்னதுதான் சமனாய்நேர் வாளந் தானு
மிதுக்கெல்லாஞ் சமன்கூட்டி இஞ்சிச் சாற்றில்
பன்னியரைத் துண்டைபயி றளவி தன்பேர்
விட்ணுசக் கரமீ தென்பார் பாரில்
மன்னுவிச சுரந்தோட சுரங்க ளெல்லா
மாறுமனு பானவித வகையிற் செய்யே. 28

பாதரசம், கந்தகம், வெண்காரம், நாபி, தாம்பிர பற்பம், மிளகு (இவை வகைக்கு ஒரு பங்கு), இவற்றுக்குச் சமமாக ஆறுபங்கு நேர்வாளம், இவற்றைக் கூட்டி இவற்றுக்குச் சம எடையாக பன்னிரண்டு பங்கு இஞ்சிச் சாறு கூட்டி அரைத்து எடுத்துப் பயறளவு உருண்டை செய்து உலர்த்திக் கொள்ள இதுவே விட்ணு சக்கரம் என்பதாகும். இதை உட்கொள்ள விச சுரம், தோட சுரம் நீங்கும்.

அளவு: வேளைக்கு 1 மாத்திரை, மூன்று வேளை. துணை மருந்து: இஞ்சிச் சாறு.

அமிர்த சஞ்சீவி (மாத்திரை)

150. வகைரசச் செந்தூர மப்பிரகந் தன்னி
லஞ்சிந்தூ ரம்நாபி யிங்கு லீகந்
திகழ்மனோ சிலையிவைகள் சமனாய்க் கூட்டிச்
சித்திரமூ லிக்கசா யத்தி லூறி
தகைபயறு பிரமாணங் குளிகை யிப்போ
தானமிர்த சஞ்சீவி யென்பார் தக்கோர்
பகரனு பானத்திற் சன்னி தோடம்
பாதாப சுரம்வகைகள் களைப்பா றுமப்பால். 29

இரசச் செந்தூரம், அப்பிரகச் செந்தூரம், நாபி, மனோசிலை இவற்றைச் சமஅளவு எடுத்து, சித்திரமூலிக் கியாழத்தில் அரைத்துப் பயறளவு மாத்திரை செய்து உலர்த்திக் கொள்ள இதுவே அமிர்தச் சஞ்சீவி எனப்படும். இதைத் தக்க அனுபானத்தில் கொடுக்கச் சன்னிதோடம், சுரங்கள் நீங்கும்.

(நவநாத சித்தரச மாத்திரை)
சன்னிக்கு மாத்திரை

151. அப்பிரக மொன்றுமாட் சிகமி ரண்டும்
அயலோக மூன்றுடன்வெண் காரம் நாலுஞ்
செப்பியதோர் சாதிலிங்கம் அஞ்ச தாகுஞ்
சேர்ந்ததா ளகமாறு நாபி யேழு
இப்படியே கந்தகம் எட்ட தாகும்
இவைசித்திர மூலிகசா யத்தி னோடு
மொப்புடைய வெள்ளுள்ளி தைலங் கூட
முற்றயிஞ்சிச் சாறதுவு மொவ்வொன் றாக. 30

அப்பிரகம் ஒரு பங்கு, பொன்னிமிளை 2 பங்கு, அயலோகம் 3 பங்கு, வெண்காரம் 4 பங்கு, சாதிலிங்கம் 5 பங்கு, தாளகம் ஆறு பங்கு, நாபி ஏழு பங்கு, கந்தகம் எட்டு பங்கு இவற்றைச் சித்திரமூலிக் கியாழம் வெள்ளுள்ளித் தைலம், இஞ்சிச் சாறு,

152. ஒவ்வொன்றில் மூன்றுநாள் தான ரைத்து
ஒன்பதுநாள் பின்குளிகை மிளகு போற்செய்
செவ்வையனு பானமிஞ்சிச் சாற்றி லிட்டா
சீதாங்க சன்னிமுத் தோடமூன் றுந்தான்
வவ்வியெழு தோடசுர விசசு ரங்கள்
வருதொந்த சுரமிவையு மாறு மென்றே
நல்விழியார் முன்னோற்பு கன்றா ரிப்போ
நவனாத சித்தரச நாடி பாரே. 31

ஒவ்வொன்றிலும் முறையே மூன்று நாள் அரைத்து ஒன்பது நாட்கள் சென்ற பின் மிளகளவு குளிகைகள் செய்து உலர்த்துக் கொள்க. இஞ்சிச் சாற்றைத் துணை மருந்தாகக் கொண்டு இதனை உட்கொள்ள சீதாங்கச் சன்னி, மூன்று தோடங்களுடன் கூடிய தோடச் சுரம், விசச் சுரம், தொந்தச் சுரம் முதலியன நீங்கும்.

சந்திராசம் (மாத்திரை)

153. பாதரச மப்பிரகம் செம்பு நாடி
பகர்ந்திடுகந் தகஞ்சமனாய் யெருக்கம் வேரில்
ஓதுகசா யத்தொருசா மமும ரைத்து
உருட்டிமாத் திரையெனமு சிகையில் வைத்துப்
போதாறும் வாலுகாந் திரமெ ரித்துப்
புகன்றகசா யத்தரைத்துக் குன்றிபோற்செய்
காதுசன்னி பாதமுதற் தோட மெல்லாம்
கலங்கும்சந் திராசத்தைக் கண்ட போதே. 32

பாதரசம் 1 பங்கு, அப்பிரகம் 1 பங்கு, செம்பு 1 பங்கு, கந்தகம் 1 பங்கு இவற்றை எருக்கம்வேர்க் கியாழத்தில் அரைத்து உருட்டி மாத்திரைகளாக்கி, மூசையிலிட்டு வாலுகா எந்திரத்தில் வைத்து 24 மணிநேரம் எரித்து எடுக்க வேண்டும். ஆறியபின் மூசையைப் பிரித்து மாத்திரைகளை மறுபடியும் எடுத்து எருக்கம்வேர் கியாழத்தில் இட்டு நன்கு அரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். கர்ணிகச் சன்னி முதலான தோடம் யாவும் நீங்கும்.

சண்டேசுரன் (மாத்திரை)

154. கண்டரசங் கந்தகந்தாம் பூரமு நாபி
கருத்துசமன் சமனிதுக்குச் சாதி லிங்கம்
கொண்டநொச்சி புன்முருங்கைப் பட்டை யிஞ்சி
குலவுஞ்சாற் றினில்மூன்று நாள ரைத்து
அண்டிமிள கெனக்குளிகை இஞ்சிச் சாற்றில்
அனுபானத் திடசன்னி பாத மாதி
தண்டவருந் திரிதோட சயசுரங் கள்தான்
தீரும்ராசசண் டேசுரனென் றெண்ண லாமே. 33

இரசம் 1 பங்கு, கந்தகம் 1 பங்கு, பூரம் 1 பங்கு, நாபி 1 பங்கு, சாதிலிங்கம் 4 பங்கு இவற்றை நொச்சிச்சாறு, புன்முருங்கைப் பட்டைச்சாறு, இஞ்சிச் சாறு இவற்றில் முறையே மூன்று நாள் அரைத்து மிளகளவு மாத்திரைகளாக உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும். இதனை இஞ்சிச் சாற்றில் கொடுக்க, திரிதோடச் சுரம், சயச் சுரம் முதலிய சுரங்கள் தீரும்.

பிரதாப லங்கேசுரன் (மாத்திரை)

155. என்றரசங் கந்தகமப் பிரகங் காந்தம்
இனிநாபி ஒவ்வோர்நிறை மிளகு மூன்று
தன்றியலோ கம்நாலு கங்க மெட்டு
தோன்றுங்காட் டெருச்சாம்பல் பதினா றாகும்
நின்றதிரி பலைக்கசா யத்த ரைத்து
நிகர்குன்றி யெனக்குளிகை நீயுஞ் செய்தே
இன்றனுபா னத்தின்செய் யிதன்பேர் தானும்
ஏற்றுபிர தாபலங்கே சுரனா மென்னே. 34

இரசம், கந்தகம், அப்பிரகம், காந்தம், நாபி இவை வகைக்கு ஒரு பங்கு, மிளகு 3 பங்கு, லோகம் நாலு பங்கு, கங்கம் 8 பங்கு, காட்டெருச் சாம்பல் 16 பங்கு இவற்றைத் திரிபலைக் கியாழத்தில் அரைத்துக் குன்றியளவு மாத்திரைகளாக உருட்டி உலர்த்திக் கொண்டு தக்க அனுபானத்தில் தர வேண்டும்.

(பதிமூன்று சன்னிக்கும் மாத்திரை)

156. என்னேபா லந்தசன்னி சூத வாயு
ஏற்பக்கட் டிக்கொடூர மாயி ருக்கும்
சன்னிபாதம் விடாக்கழிச்ச லோடு ஆகும்
அதிசாரக் கிராணி சலரோ கத்தில்

பண்ணிவந்த அதிசாரச் சுரங்க ளெல்லாம்
பாருமனு பானவித பண்பிற் செய்யென்
உன்னியான் பார்வதிக்கு முரைத்தா ரென்றே
ஓதினர்காண் வயித்தியநூ லுண்மை கண்டார். 35

அந்தகச்சன்னி, சூத வாயு, சன்னிபாதம், விடாக் கழிச்சல், அதிசாரக் கிராணி, சயரோகம் மற்றுள்ள அதிசாரச் சுரங்கள் எல்லாவற்றுக்கும் அனுபானமறிந்து சொல்வேன்.

(நவலோக அக்கினி குமாரன் - மாத்திரை)

157. உண்மைரச மீயமது நாகஞ் செம்பு
முத்தலோ கங்காந்த வெண்க லந்தான்
புண்மையுள்கந் தகமப்பி ரகம்பீதாம் பஞ்ச
வர்ணம்பால் வெள்ளியி வைகள் பற்பம்
மண்மையது சமனெருக்க வேர்க சாயத்
தரைத்துவா லுகாந்திரத்தி லாறு சாமம்
உண்மையுட னெரித்தாற்றி நாபி யோடு
வருமிளகு நாலிலொன்றோர் வகையாய்க கூட்டே. 36

இரசம், ஈயம், நாகம், செம்பு, மண்டூரம், காந்தம், வெண்கலம், கந்தகம், அப்பிரகம், பொன், வெள்ளி இவற்றின் பற்பம் ஆகியன சம எடை எடுத்து வேர்க்கியாழமிட்டு அரைத்து, வாலுகா எந்திரத்திலிட்டு ஆறு சாமம் உண்மையாக எரித்து, ஆறவைத்துப் பின் நாபியோடு, மிளகு நாலிலொன்றாகக் கூட்ட வேண்டும்.

*158.* கூட்டியிடு சித்திரமூ லங்க சாயங்
கூறும்ஆய ப்பட்டை இஞ்சிச் சாற்றில்
தேட்டமுட னாலுநா ளரைத்துத் தானே
சேர்குளிகை குன்றிபிர மாணஞ் செய்தே
வாட்டமுறு தோடமது வேழி னோடு
மருவுசன்னி பதின்மூன்று வகையுந் தானே
நாட்டமுட னனுபானத் திடவே தீர்க்கும்
நவலோக வக்கினிகு மாரனாகுந் தானே. 37

சித்திரமூல வேர்க் கியாழம், ஆயப்பட்டை, இஞ்சிச் சாறு இவற்றில் முறையே நான்கு நாள் அரைத்து, குன்றியளவு மாத்திரைகளாக உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும். இதனை முறைப்படி உட்கொள்ள சன்னி *13* வகையும் தீரும்.

மகா வாத ராட்சதன் (மாத்திரை)

159. காந்தங்கந் தகம்நாபி ரசமப் பிரகங்
கருதஞ்சு வர்ணம்லோகஞ் செம்பி னோடு
சேர்ந்தசமன் முதுவள்ளி சித்திர மூலந்
திரிகடுகுநீர் சாறணைச்சா றிவைகள் விட்டு
மாந்தியிட மூன்றுநா ளரைத்துத் தானே
வைத்தமூ சிகையிலொரு புடமே போட்டு
ஏந்தியெடுத் திஞ்சிச்சாற் றரைத்துக் குன்றி
யெனக்குளிகை யனுபானம் இதத்தில் செய்யே. 38

காந்தம், கந்தகம், நாபி, இரசம், அப்பிரகம், பஞ்சலோகம், செம்பு இவை வகைக்கு ஒருபங்கு சமஅளவில் எடுத்துக் கொள்ள வேண்டும். சித்திர மூலச்சாறு, திரிகடுகு கியாழம், சாரணைச்சாறு இவற்றைக் கொண்டு மேற்சுட்டியவற்றை மூன்று நாள் அரைத்து, மூசையிலிட்டு புடம்போட்டு எடுத்து இஞ்சிச் சாற்றில் அரைத்துக் குன்றியளவு மாத்திரைகளாக உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும். தக்க அனுபானத்தில் கொடுக்க வேண்டும்.

**சீதாங்க வயிரவன் (மாத்திரை)**

160. இதமான வாதச்சுரம் வலிய வாயு
யெழுந்தசன்னி பாதமுத லிவைகள் தீரும்
மகமான மகாவாத ராட்ச தன்பேர்
வகுத்தனன்சீ தாங்கவயி ரவனைச் சொல்வேன்
பதமான கந்தகந்தா ளகமுஞ் செம்பு
படுமிரும்பு ரசம்மனோ சிலையோர் பண்பாய்
சதமான யெலுமிச்சஞ் சாறோ டொக்கும்
ஆடாதோ டைமுள்ளிச் சாறு தானே. 39

மகா வாத ராட்சதன் என்னும் பெயர் கொண்ட இம்மாத்திரையினால் வாத சுரம், வாதத்தால் எழுந்த சன்னி முதலியன தீரும். இனி, சீதாங்க வயிரவன் பற்றிக் கூறுகிறேன். கந்தகம், தாளகம், செம்பு, இரும்பு, இரசம், மனோசிலை, இவை வகைக்குச் சமஅளவு ஒரு பங்காய் எடுத்து எலுமிச்சைச் சாறு, ஆடாதோடைச் சாறு, முள்ளிச் சாறு இவற்றால் முறையே அரைத்துக் கொள்ள வேண்டும்.

161. சாறதனி லரைத்துமாத் திரைகள் செய்து
தருகுப்பி தனில்வைத்துச் சாம னாலுங்
கூறியிடும் வாலுகாந் திரத்தெ ரித்துக்
குளிர்ந்தபின்பு யெடுத்திஞ்சிச் சாறு கூட்டி
பேறுடனே மூன்றுநா லரைத்துக் குன்றிப்
பிரமாணங் குளிகையனு பான மிஞ்சி
வீறுடைய சாற்றிலிடச் சன்னி யோடு
விசதோட சுரந்தீரு மெனவி ளம்பே. 40

அவ்வாறு அரைத்து மாத்திரைகள் செய்து குப்பிக்குள் அடைத்து, வாலுகாயந்திரத்தில் இட்டு நான்கு சாமம் எரிக்க வேண்டும். பின்னர் குளிர்ந்த பின் எடுத்து, இஞ்சிச்சாறு கூட்டி மூன்று நாள் அரைத்துக் குன்றியளவு மாத்திரைகளாக உருட்டிக் கொள்ள வேண்டும். இதனை இஞ்சிச் சாற்றைத் துணை மருந்தாகக் கொண்டு உட்கொள்ள சன்னி, விடதோடச் சுரம் ஆகியன தீரும்.

**(சஞ்சீவி ரச மாத்திரை)**

162. விளம்புரசச் செந்தூரம் அப்பிரகச்செந் தூரம்
மேவுமனோ சிலைநாபி விராகனொவ் வொன்று
இளம்பியகந் தகமிரண்டு லிங்கமி ரண்டு
மிவைசித்திர மூலிகசா யத்த ரைத்து

ளங்குளிகை மிளகுப்பிர மாண மாக
தானனுபா னத்திலிடச் சன்னி பாதம்
வளம்பொருந்து குளிர்சுரம்வா தாதி மூன்றும்
மாற்றிடுஞ்சஞ் சீவிரச வகைய தாமே. 41

இரசச் செந்தூரம், அப்பிரகச் செந்தூரம், மனோசிலை, நாபி இவை வகைக்கு ஒரு பங்கு, கந்தகம், லிங்கம் இவை வகைக்கு இரண்டு பங்கு எடுத்துச் சித்திர மூலிக் கியாழமிட்டு அரைத்து, மிளகளவு மாத்திரைகளாக உலர்த்திக் கொள்ள வேண்டும். தக்க அனுபானத்தில் இம்மாத்திரையை உட்கொள்ள, சன்னி, குளிர்ச்சுரம், வாத, பித்த, கப தோடங்கள் நீங்கும்.

மகாகோடா குடி (மாத்திரை)

163. தாமேவு ரசம்நாபி யிருவி யோடு
சாருநிரு விசமுங்கந் தகம்வெண் காரம்
மாமேதா ளகமனோ சிலைபால் துத்தம்
மயில்துத்தம் நவாட்சாரஞ் சாதி லிங்கம்
தேமேவு லோகந்தாம் பிரமண் டூரம்
திரிகடுகு திரிபலைச் சித்திரமூ லந்தான்
தாமேவு செவ்வியங்க டுகுரோக ணியெல்லாஞ்
சரிசமனா மிதற்கெல்லாஞ் சரிநேர் வாளம். 42

இரசம், நாபி, இருவி, நிர்விசம், கந்தகம், வெண்காரம், தாளகம், மனோசிலை, பால்துத்தம், மயில்துத்தம், நவாச்சாரம், சாதிலிங்கம், லோகம் (அயம்), தாம்பிரம், மண்டூரம், திரிகடுகு, திரிபலை, சித்திரமூலம், செவ்வியம், கடுகுரோகணி ஆகியன சம அளவாக வகைக்கு ஒரு பங்கு, இவ்விருபது சரக்குகளுக்கும் சம எடையாக 20 பங்கு நேர்வாளம் ஆகியவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும்.

164. வாளமது கல்வத்துப் போட்டு நொச்சி
வருதுளசி முள்ளிகையாந் தகரை யிஞ்சி
ஈளையிதி லிலைசித்திர மூலங் கண்டங்
கத்திரிமு ருங்கைப்பட்டை யின்சா றெல்லா
மாளவென்றி லொருநாளாய் மூவேழு நாளு
மரைத்துளுந்து போறசெய்ய மகாகோடாகுடி
சுழல்சுரம் மகாவாயு பக்க வாயு
சூலைகுணம் வாயுவெல்லாஞ் சுகமாய்த் தீர்க்கும். 43

நேர்வாளத்தை முதலில் கல்வத்திலிட்டு, நொச்சி, துளசி, முள்ளி, கையாந்தகரை, இஞ்சி, ஈளையிதிலிலை(?), சித்திரமூலம், கண்டங்கத்திரி, முருங்கைப்பட்டை இவற்றின் சாறுகளைக் கூட்டி ஒருநாள் அரைக்க வேண்டும். பின் இதனோடு மேற்படி சரக்குகளையும் ஒவ்வொன்றாகக் கூட்டி முறையே 21 நாள் அரைத்து எடுத்து உளுந்தளவு மாத்திரைகளாகச் செய்து கொள்ள வேண்டும். இதுவே மகாகோடாகுடி மாத்திரை எனப்படும். இதனால் சுழல்சுரம்(மாறல் சுரம்), மகா வாயு, பக்கவாயு, சூலை மற்றுமுள்ள வாய்வு நோய் யாவும் தீரும்.

இலகு அக்கினிக் குமாரன் (மாத்திரை)

165. சுகநாபி ரசமுங்கந் தகவெண் சோளம்
சமனாயெ ருக்கிலைச்சாற் றினில ரைத்துச்
சகமாம்வச் சிரக்குகையில் வைத்துச் சட்டி
தனில்மணல்விட் டதைமூடிச் சீலைமண் செய்து
திகழ்மேவு கசபுடம்போட் டெடுத்தே முற்சாற்
றினிலரைத்துக் குளிகைகுன் றியென வென்னில்
புகழ்மேவு லகுவக்கினி குமாரன் கண்டாய்
பூதசுர மாதியெல்லாம் போமே யோடி. 44

நாபி, இரசம், கந்தகம், வெண்சோளம் வகைக்கு ஒரு பங்கு எடுத்து, இவற்றுக்குச் சமமாக எருக்கிலைச் சாறு நான்கு பங்கு கூட்டி அரைத்து வச்சிரக் குகையில் வைத்துக் கொள்ள வேண்டும். சட்டியில் மணல் இட்டு அதில் வச்சிரக்குகையை வைத்து மேல்சட்டியால் மூடிச் சீலைமண் செய்து கசபுடத்தில் எரிக்க வேண்டும். பின் குகை நீக்கிடச் சரக்கை எடுத்து எருக்கிலைச் சாற்றில் முன்போலவே அரைத்து மாத்திரைகளாக்கிக் கொள்ள வேண்டும். இதனால் பூதச்சுரம் முதலியன நீங்கும்.

திவ்விய அக்கினிக் குமாரன் (மாத்திரை)

166. ஓடுரச மப்பிரகங் காந்தம் நாபி
யுயர்செம்பு சமன்பாதச் சாற ரைத்துக்
கூடுமந்த வாலுகாந் திரத்தில் தானே
கூறியிடு மெவச்சாரம் எரித்தெ டுத்து
தேடுயிஞ்சிச் சாற்றிலரைத் துளுந்தெ னச்செய்
திவ்வியவக் கினிகுமா ரன்பேர் செப்பி
விடுபடு சன்னிபதின் மூன்றி னோடு
மிடரான சுரமிதெல்லாம் மீறா தேகும். 45

இரசம், அப்பிரகம், காந்தம், நாபி, செம்பு வகைக்கு ஒரு பங்கு எடுத்துக் கொண்டு இவற்றுக்குச் சமஅளவாக 5 பங்கு நெருஞ்சிச் சாறு கூட்டி அரைத்து வாலுகாந்திரத்திலிட்டு எவச்சாரம் சேர்த்து எரித்தெடுக்க வேண்டும். பின் குளிர்ந்த பிறகு எடுத்து இஞ்சிச் சாறு விட்டு அரைத்து உளுந்தளவு மாத்திரைகளாகச் செய்ய வேண்டும். இதுவே திவ்விய அக்கினிக் குமாரன் ஆகும். பதின்மூன்று வகைச் சன்னி நோய்கள் மற்றும் துன்பம் தரும் சுர நோய்களும் இதனால் தீரும்.

இரசபூபதி (மாத்திரை)

★167. இரதத்துடனே கந்தகம்செம்பு யியல்பாம்நிறு நாபி
சமமெடுத்துச் செருப்படியின் சாற்றி லிளக
வரைத்தேய துதன்னைப் பரிவாம் வாலு
காந்திரமாம் பாசமதில் வைத்தறு சாமம் பாரா
மிதவைக்கு நாலி லொன்று பருநாபி
சமன்மிளகு பரிவாய்க்கூட் டிக்கொடு வேலி

புகழும் எருக்கு முருங்கை நொச்சி
புகழ்வாஞ் செருப்படி நல்லிஞ்சி
புதுமையாஞ் சாற்றில் ஒவ்வோர் வருநா
ளரைத்து குன்றிமணி மட்டாய்
ரசபூபதி யுண்ண வலிதாஞ் சன்னிதோடம்
நாள்மாறும் மிகநல் வளங்குறே 46

இரதம், கந்தகம், செம்பு, சிறுநாபி, செருப்படை முதலானவற்றை இஞ்சிச் சாற்றில் சேர்த்து இளக அரைத்து இதனை வாலுகாந்திரத்தில் மூன்று மணி நேரம் வைத்து அதன்மேல் நாலிலொரு பாகம் நாபி வைத்து அதற்குச் சமமாக மிளகு வைத்து கொடிவேலி, எருக்கு, முருங்கை, நொச்சி, செருப்படை புதிய இஞ்சிச் சாற்றில் குன்றிமணி அளவில் ரசபூபதியாகச் செய்து உண்ண உடல் வலியும், சன்னிசுரமும் தோடமும் நீங்கும். உடல் நலம் பெற்று விளங்கும்.

நவலோக பூபதி (மாத்திரை)

★168. கூறுரச கந்தகம் நாபி கொள்ளும்
நவலோக பற்பம் கூட்டி எருக்கஞ்
சாறரைத்து குணமாய் வாலுகா எந்திரத்தில்
ஆறு சாம மெரித்து ஆற்றி
அரிதாரம் நாபி நாளில் ஒன்று
மருந்து மிளகு சமமாக வனலிச்சாறு
வெவ்வெறிச் சாற்றிலொரு பொழுது மிகவே
யரைத்து குன்றியனைத்தே குளிகை நவலோகஞ்
சிறப்பாகும் பூபதி உண்ண சேர்ந்தொரு
நோய்சன்னி சுரம்ஒன்பது நான்கும் தீர்ந்திடுமே. 47

இரசம், கந்தகம், நாபி, நவலோக பற்பம் சேர்த்து எருக்கஞ் சாற்றில் அரைத்து நல்ல முறையிலே வாலுகா எந்திரத்தில் பதினெட்டு மணி நேரம் எரித்துப் பின் ஆறவைத்து அரிதாரம் நாலில் ஒரு பங்கு நாபி, சமஅளவில் மிளகும், வனலிச் சாறும், எருக்கும், நொச்சியும், வீரு முருங்கையும் இஞ்சியும் செருப்படையும் சேர்த்துச் சாற்றில் ஒரு பொழுதிற்கும் மேலாக அரைத்து, குன்றி அளவில் மாத்திரை செய்தால் நவலோக பூபதி என்ற பெயர் பெறும். அதனை உண்ண சன்னிநோய் பதிமூன்றும் தீர்ந்து போகும்.

மணி பூபதி (மாத்திரை)

★169. ஒன்பா மணியும் நவலோக முரைக்குங் காந்த மப்பிரகம்
ஓதுரசங் கந்தக நாபி யொன்றாய் முன்பா யெருக்கஞ் சாற்றரைத்து
அன்பாய் வாலு காந்திரத்தி லாறுசாம மெரித்தாற்றி
யாகுநாபி நாலிலொன் றாய்யதற் குச்சம மாக மேவுகொடி
வேலிநொச்சி முருங்கை யாயி லிஞ்சி யடிமொழியு மிதனிற்
தனித்தனியே
முயன்ற ரைத்துக் குன்றியிடை ஒருபோ தின்பார் குளிகைதேன்
துளசிச் சாற்றிலிடத் தொந்தச் சுரங்கள் நோய்சன்னி
தீராவினை யுந்தீர்ந் திடுமே சேரும் மணிபூ பதிதானே. 48

ஒன்பது வகையான மணிகள் (பவளம், வைரம், மரகதம், கோமேதகம், வைடூரியம், முத்து, மாணிக்கம், புட்பராகம், நீலம்), நவலோகம் (பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், வங்கம், நாகம், குருத்துவம், பித்தளை), காந்தம், அப்பிரகம், இரசம், நாபி இவை வகைக்கு ஒரு பங்கு எடுத்து எருக்கஞ் சாற்றினால் அரைத்து வாலுகாந்திரத்திலிட்டு ஆறுசாமம் எரித்து ஆற வைக்க வேண்டும். பின் அதனை எடுத்துக் கால்பங்கு நாபி கூட்டி அதற்குச் சமமாக, சித்திரமூலம், நொச்சி, முருங்கை, ஆயில்பட்டை, இஞ்சி, செருப்படை ஆகியவற்றின் சாற்றில் முறையே ஒவ்வொரு நாள் அரைத்து, குன்றியளவு மாத்திரைகளாக உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும். இதனைத் தேன், துளசிச்சாறு ஆகியவற்றில் கொடுக்கத் தொந்த தோட நோய்கள், சன்னி முதலின நீங்கும். மணி பூபதி என்பது இதன் பெயராகும்.

**கந்தக இரசாயனம்**

★170. நீதியுடன் கந்தகர சாய னத்தை
..... படினமிதில் நிகழ்த்தக் கேண்மின்
சாதியுடன் நின்பத்தோல் சீந்தில் வில்வம்
தண்ணீர்மீட் டான்கிழங்கு பற்படாகந் தானும்
வேதியரே அமுக்கிரா நெருஞ்சில் கோரை
வேர்சிற்றா முட்டியிவை வெந்த நீரில்
சீதமுற மூன்றுநாள் நனைத்த பின்பு
சீக்கிரமாய் எடுத்துநிழ லுலர்த்திக் கொள்ளே. 1

சாதிக்காய், வேப்பம்பட்டை, சீந்தில், வில்வம், தண்ணீர் விட்டான் கிழங்கு, பற்பாடகம், அமுக்கிராக் கிழங்கு, நெருஞ்சில், கோரையின் வேர், சிற்றாமுட்டி இவற்றைச் சமஅளவு வகைக்கு ஒரு பங்கு எடுத்து வேக வைக்க வேண்டும். இவை வெந்தபின் அந்நீரில் கந்தகத்தை மூன்று நாள் ஊறவைத்து எடுத்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

171. கொண்டவுட னேபாலைச் சட்டியில் வார்த்து
குலவியவே டதுவாக்கி மருந்தை வைத்து
வண்டதின்மேற் சட்டியொன்றை மத்தித்து மூடி
வாயதுக்குச் சீலைமண்ணும் வாகாய்ப் பூசி
கொண்டசட்டி மறையவொரு குழியுண் டாக்கிக்
குலவுசட்டி மறையவெரு கொள்ளப் போட்டு
பண்டுமண லிடுமருந்துப் பானைக் கீழாய்
வாகுடனே கழுவிநிழ லுலர்த்திக் கொள்ளே. 2

ஒரு சட்டியில் பால்விட்டு, அதன் வாய்க்குத் துணியால் வேடுகட்டி, அதன்மீது கந்தகம் வைத்து மேல் சட்டியால் மூடி வாய்க்குச் சீலைமண் பூச வேண்டும். பிறகு சட்டியை ஒரு குழியிலிட்டு மேலே எரு வைத்துச் சட்டியை மறையுமாறு செய்து எரிக்க வேண்டும். இதனால் கந்தகம் உருகிடப் பாலில் இறங்கும். பின் அதனை எடுத்துக் கழுவி நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

172. வைத்ததொரு மருந்துதன்னை மத்தி யான
மாமளவுங் கருப்பம்பா லதனி லூறி
இத்தனையு மானபின்பு பலமா றாகும்
இயல்கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக் காயும்
சித்திரமூ லகமேலம் லவங்கப் பட்டை
திரிகடுகு சிறுநாகப் பூல வங்கம்
சத்தியுடன் சேங்கொட்டைப் பருப்புஞ் சேர
சணப்புவிரை தனித்தனியோர் பலமுஞ் சாற்றே. 3

இம்மருந்தைக் கரும்பின் பாலில் காலை முதல் மதியம் வரை ஊறவைத்து எடுக்க வேண்டும். இவ்வாறு சுத்தி செய்த கந்தகம் ஆறு பலம் எடுத்துக் கொள்ள வேண்டும். கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், சித்திரமூலம், ஏலம், இலவங்கப்பட்டை, திரிகடுகு, சிறுநாகப்பூ, இலவங்கம், சேராங்கொட்டைப் பருப்பு, சணப்ப விதை இவை வகைக்கு ஒரு பலம் எடுத்துச் சூரணம் செய்துகொள்ள வேண்டும்.

173. சாற்றியசூ ரணத்தைவத் திரகாயம் செய்து
தானிருபோ தென்னாளுஞ் சோதிப் பீராய்
சோற்றுடனே நாலுபண வெடையுங் கூட்டித்
திறமாகப் புளியுப்புக் கடுகோ டெண்ணெய்
நீத்துவிடப் பதினெட்டுக் குட்டந் தீரும்
நீர்வாயு அட்டகுன்மம் மூலம் வாதம்
மூத்திரரோ கத்துடனே மேகங் குய்ய
முறைத்தெழுந்த பவுத்திரமும் முறிந்து போமே. 4

இச்சூரணத்தை வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொண்டு, கருப்பம்பாலில் ஊறிய கந்தகத்தைக் கூட்டி, கருப்பம்பால் கலந்து சோற்றுடன் 4 பண எடை கூட்டி உள்ளுக்குத் தர வேண்டும். இதற்குப் பத்தியமாக உப்பு, புளி, கடுகு, எண்ணெய் ஆகியவற்றை நீக்க வேண்டும். இதனால் பதினெட்டு வகைக் குட்டம், நீர்வாயு, எட்டுவகைக் குன்மம், மூலம், வாதம், சிறுநீரோடு தொடர்புடைய நோய்கள், மேகம், மூல பௌத்திரம் முதலியன நீங்கும்.

சுராங்குச மாத்திரை

174. சீராகும் நேர்வாளம் நாலு கூறுஞ்
சிறந்ததொரு கந்தகமும் இரண்டு கூறும்
ஓராறு மிரதமுமோ ரிரண்டு கூறு
மெண்கடுகு ரோகணியு மெட்டுக் கூறு
நேரான முலைப்பா லிளநீர் தன்னில்
நேகவரைத்து துண்டைபண வெடையே செய்து
பேரான முலைப்பா லிளநீர் தன்னில்
பேணியிட சுராங்குசம் பேசுங் காலே. 5

நேர்வாளம் 4 பங்கு, கந்தகம் 2 பங்கு, இரசம் 2 பங்கு, கடுகுரோகிணி 8 பங்கு இவற்றைத் தாய்ப்பால், இளநீர் ஆகியவற்றில் மையாக அரைத்து, 1 பண எடை அளவு உருண்டையாக்கிக் கொள்ள வேண்டும். சுராங்குசம் எனும் இம் மாத்திரையைத் தாய்ப்பால், இளநீர் ஆகியவற்றில் உட்கொள்ள வேண்டும்.

### பாதரசச் சுத்தி

175. பாத ரசம்பல நூற்றி ருபது
 பகுத்த விருபத் தஞ்சதில் பாதி
கோதறு யாறு குறைந்தது மூன்று
 கொள்க வோர்பலங் குறையவொன் னாது
தீதறு சோடச பூசையி னாலும்
 திருந்து மகோர மந்திரத் தாலும்
போதனை பூசைகள் செய்து முடித்துப்
 புரிந்துடன் சுத்திகள் செய்குவை பொன்னே. 1

பாதரசத்தை 120 பலம், 12 1/2 பலம், 6 பலம், 3 பலம், 1 பலம் என முறையே கூட்டி 142 1/2 பலம் எடுத்துக் கொள்ள வேண்டும். சோடச பூசை, அகோர மந்திரப் பூசை முதலியன செய்து சுத்தி முறைகள் செய்ய வேண்டும்.

★176. செங்கற்பா லொட்டடை சித்திர மூலம்
 செம்மஞ்சள் திரிபலை தேவ தாரம்
அங்கத்திற் பூத்த சந்தனங் கரிச்சா
 அருங்கோவை வெற்றிலை நிலப்பனை யூமத்தை
முங்கத்துச் சாரணை புரசம்பட்டைச் சாறு
 தனித்தனி யேகேட்பை ரண்டுமத்திச் சாறுசுத்தி. 2

செங்கல் பால், ஒட்டடை, சித்திரமூலம், செம்மஞ்சள், திரிபலை, தேவதாரம், சந்தனம், கரிசாலைச் சாறு, கோவை, வெற்றிலை, நிலப்பனை, ஊமத்தை, சாரணை, புரசம்பட்டைச் சாறு இவற்றைக் கூட்டி இரசத்தை மத்தித்துக் கழுவி எடுக்க இரசம் சுத்தியாகும்.

### கந்தகச் சுத்தி

★177. கந்தகத்தால் கரணமுருங் கைவேர் பாக
 லிலைமஞ்ச னாத்தி இதனில் நெய்மேல் விட்டுக்
 கின்றாமல் உருக்கியே பாலிற் சாய்த்து
 இந்தவிதம் மூன்றுதரங் காய்ச்ச சுத்தி
 இதல்லாமல் பிட்டவியல் பாலில் சுத்தி
 அந்தமுள்ள குழிவெட்டிச் சட்டி வைத்து
 ஆனைப்பாலை விட்டுமேல் வேடு கட்டி
 பந்தமுள்ள கந்தகத்தைப் பரப்பி மூடி
 பருவாளி விட்டெரிக்க பதமாஞ் சுத்தி 3

கந்தகத்தை, முருங்கை வேர்ப்பட்டைச் சாறு, பாகலிலைச் சாறு, நுணாச்சாறு இவற்றோடு நெய் கூட்டி, அடுப்பேற்றி உருக்கிப் பாலில் சாய்க்க வேண்டும். இவ்வாறு மூன்றுமுறைக் காய்ச்சிட உருக்கிச் சாய்க்க சுத்தியாகும். இவ்வாறன்றி பிட்டவியல் செய்து பாலில் வேக வைக்கச் சுத்தியாகும். அன்றியும், குழிவெட்டி, சட்டியில் ஆனைப்பால் விட்டு வேடுகட்டி கந்தகம் வைத்து மேல்சட்டி வைத்துச் சீலைமண் பூசி அதன்மேல் எரு பரப்பி எரித்து எடுக்கக் கந்தகம் சுத்தியாகும்.

(நேர்வாளச் சுத்தி)

178. காடிதனில் நேர்வாளம் பத்து நாள்கி
டக்கவே யூறவைத்துச் சாணாகப் பாலில்
வேடுபட வேகவைத்து நஞ்சு போக்கி
வினியபாலு மரைக்கீரைக் குமரிச் சாற்றில்
வாடுபெற வெவ்வேறு வெந்து லத்தி
வரிசைபெறச் சுத்திதனைச் செய்வாய் நீயும்
ஏடுலவும் பூங்குழலாள் இந்த வண்ணம்
இவ்வுலகில் செய்வார்க ளில்லை கண்டாய்.

நேர்வாளத்தைக் காடிநீரில் 10 நாள் ஊறவைத்துப் பின் சாணப்பாலில் வேகவைத்து நஞ்சைப் போக்க வேண்டும். பின் பால், அரைக்கீரைச் சாறு, கற்றாழைச் சாறு ஆகியவற்றில் முறையே வேகவைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

(கௌரிப் பாடாணம், வெள்ளைப்பாடாண சுத்தி)
(வேறு)

179. கௌரி வெள்ளைப் பாடாணங் கெடவே நறுக்கிச் சீலைகட்டி
பவுரி யாசா ணாளைந்து பசுவின் பாலி லூறவைத்துக்
கௌரி யான சிறுகீரைக் கடிய சாறு மந்நாழி
தவறில் லாமல் நாடோறும் தனிப்பழச் சாறு விடச்சுத்தி. 5

கௌரிப் பாடாணம், வெள்ளைப் பாடாணம் இவற்றைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி, சீலைகட்டிப் பசுவின் பாலில் ஐந்து நாட்கள் ஊறவிட வேண்டும். கௌரிப் பாடாணத்திற்குச் சிறுகீரைச் சாற்றில் ஊறவைத்து நாள்தோறும் பழச்சாறு விட்டெடுக்கச் சுத்தியாகும்.

(தாளகச் சுத்தி)

180. அரிதாரஞ் சீலை கட்டி ஆண்டோ ளாய மாக
குரிதான கோச லத்தில் குலுங்கவே வொருநாள் வெந்து
பரிதான பூச ணிக்காய் பரணியி லொருநாள் வேகக்
கரிதான எலுமிச் சம்பழங் காடியி லொருசாமஞ் சுத்தி. 6

தாளகத்தைச் சீலையில் முடிந்து கோமூத்திரத்தில் ஒருநாள் வேகவைக்க வேண்டும். பிறகு பூசணிக்காயினுள் வைத்து ஒருநாள் வேகவைக்க வேண்டும். பின் எலுமிச்சம்பழக் காடியில் ஒருசாமம் வேகவைத்து எடுக்க வேண்டும். இவ்வாறு செய்ய தாளகம் சுத்தியாகும்.

தொட்டிப்பாடாணச் சுத்தி

★181. தொட்டிப் பாடாணங் கோசலத்தில் தொக்கரிச் சாறு தன்னில்
அட்ட பாக மொருசாமம் ஆன குமரிச் சாறுதன்னில்
மட்ட மாக வொருசாமம் மறுகால் வேகச் சுத்தியாமே. 7

தொட்டிப் பாடாணத்தை முறையே, கோமூத்திரம், ...சாறு, கற்றாழைச் சாறு ஆகியவற்றில் ஒவ்வொரு சாமம் வேகவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

மனோசிலைச் சுத்தி (வேறு)

182. நறுக்கியே மனோசிலையை நற்சீலையில் முடிந்து போட்டு
உருகியனார் மூத்திரத்தி லொருசாமம் வெந்து
வெருக்கொளவி ரண்டுசாமம் வேகவைகோ சலத்தில்
அருகிய சுத்தியாகு மானதோர்மனோ சிலையே. 8

மனோசிலையை நறுக்கி, சீலையில் முடிந்து போட்டு, பெண் வெள்ளாட்டு மூத்திரத்தில் ஒரு சாமமும், பின் கோமூத்திரத்தில் இரண்டு சாமமும் வேகவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

சாதிலிங்கச் சுத்தி, நாபிச் சுத்தி, பெருங்காயச் சுத்தி (வேறு)

183. முலைப்பாலில் சாதிலிங்கம் ஓர்நாள் கந்த
எலுமிச் சம்பழச் சாற்றில் ஓர்நாள்
நிலப்பான சுத்தியா மடங்க ணந்தான்
நெருப்பினி லேயெரிக்கச் சுத்தி யாகும்
நலுப்பான நாபியுங் கோச லத்தில்
நலம்பெறவே வொருநாளிற் சுத்தி யாகும்
கலைப்பான பெருங்காயம் வெற்றிலைச் சாற்றில்
கடியவொரு சாமம்நனைத் துலர்த்தச் சுத்தி 9

சாதிலிங்கத்தைத் தாய்ப்பாலில் ஒருநாள் ஊறவைக்க வேண்டும். பின் எலுமிச்சம் பழச்சாற்றில் ஒருநாள் ஊறவைத்து அவ்வெலுமிச்சம்பழச் சாறு இல்லாமல் ஒருநாள் உலர்த்த வேண்டும். பிறகு அதனை நெருப்பிலிட்டு எரித்து ஆறிய பின் எடுக்கச் சுத்தியாகும். நாபியைக் கோமூத்திரத்தில் ஒருநாள் ஊறவைத்து எடுக்கச் சுத்தியாகும். பெருங்காயத்தை வெற்றிலைச் சாற்றில் ஒருசாமம் ஊறவைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

சத்திச்சாரம், எவட்சாரம், எட்டிக்கொட்டை (சுத்திமுறை)

184. சாலவொரு கனம்கொள்ளு சத்தியவட் சாரம்
சலிக்காடி கோசலத்தில் மூன்று நாளில்
மாலநனைத் துலர்த்தச் சுத்தி யாகுங் கொடிய
யெவட்சா ரந்தான் கரும்புநீர் காடி
வாலயமாய் நனைத்துலர்த்தச் சுத்தி யாகும்
வனத்திலெட்டிக் கொட்டைக்குப்பைக் கீரைச் சாற்றில்
ஏலயமா யொருசாமம் வேக சுத்தி
இயல்பாக இப்படியே வேகச் செய்யே. 10

சத்தியவட்சாரத்தைக் காடி, கோமூத்திரம் ஆகியவற்றில் முறையே மூன்று நாள் ஊறவைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

எவட்சாரத்தைக் கரும்புச்சாறு, காடி ஆகியவற்றில் ஊறவைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

எட்டிக் கொட்டையைக் குப்பைக்கீரைச் சாற்றில் ஒரு சாமம் வேகவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

இந்துப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, அட்டுப்பு (சுத்தி முறை)

185. காந்தி யுள்ள இந்துப்பு காடி கோசம் நனைத்துலர்த்த
ஆந்த முள்ள வெடியுப்பு ஆவின் மூத்திர மெலுமிச்சம்
பேந்த வளைய லுப்புத்தான் புளிமோர் கோச லந்தன்னைச்
சாந்தா ளியிலை யட்டுப்புச் சட்டியில் வறுப்பாய் நல்லுப்பே. 11

இந்துப்பைக் காடி, காசம் ஆகியவற்றில் நனைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

வெடியுப்பை கோமூத்திரம், எலுமிச்சம் பழச்சாறு ஆகியவற்றில் நனைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

வளையலுப்பைப் புளித்த மோர், கோமூத்திரம், தாளியிலைச் சாறு ஆகியவற்றில் நனைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

சமையலுப்பைச் சட்டியிலிட்டு வறுத்தெடுக்கச் சுத்தியாகும்.

ஏரண்டம் விரை, குங்கிலியம், ஊமத்தை, கெசதிப்பிலி (சுத்தி)

186. ஏரண்ட விரைதான் நல்ல விளநீரில் வேகச் சுத்தி
தீரண்ட குங்கி லியந்திரி பனைச்சாற்றில் வேகச் சுத்தி
ஆரண்டை ஊமத் தைவிரை யும்நிம்பச் சாற்றி லாறக்
காரண்டு கெசதிப் பிலிகடு நிம்பப்பழச் சாற்றில் சுத்தி. 12

ஆமணக்கு விதையை இளநீரில் வேகவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

குங்கிலியத்தைத் திரிபனை என்னும் நிலப்பனைச் சாற்றில் வேகவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

ஊமத்தை விதையை எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறவைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

யானைத் திப்பிலியை எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறவைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

இருசீரகம், ஓமம், மிளகு (சுத்தி)

187. சீரக மிருவ கையுஞ் சற்றேவ றுக்கச்சுத்தி யாகும்
சூரக வோமந் தன்னைச் சுண்ணாம்பு நீரிற் சாமம்
ஆரக மூற சுத்தி அழகிய மிளகு மோரில்
ஊறவே மூன்று நாளாம் முகந்துட னூறச் சுத்தி. 13

நற்சீரகம், பெருஞ்சீரகம் இரண்டையும் சிறிது வறுத்தெடுக்கச் சுத்தியாகும்.

ஓமத்தைச் சுண்ணாம்பு நீரில் ஊறவைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

மிளகை மோரில் மூன்றுநாள் ஊறவைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

சுக்கு, திப்பிலி இவை சுத்தி

188. சுக்குச் சீவி தோல்போக்கி சுண்ணாம்பு பூசி வெயிலுலர்த்தி
அக்க சாம மொன்றுசென்றா லழகாய்க் கழுவி யுலர்த்தச் சுத்தி
திக்குந் திப்பிலி கொடுவேலி கசாயந் தன்னி லொருசாமம்
ஒக்க வூறி உலர்த்தச் சுத்தி யுகந்து காண்பாய் மடமயிலே. 14

சுக்கைத் தோல் சீவி, சுண்ணாம்பு பூசி, வெயிலில் உலர்த்தி, ஒரு சாமம் கழிந்தபின் கழுவி எடுக்கச் சுத்தியாகும்.

திப்பிலியைச் சித்திரமூலிக் கியாழத்தில் ஒரு சாமம் ஊறவைத்து உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

பற்ப வகைகள்
(செம்புப் பற்பம்)

189. செம்பைப் பரக்கத் தகடு தட்டிச் சிவக்கக் காய்ச்சிக் காடியிலும்
மும்பக் கரிய கோசலத்து முகந்த வெண்ணெய் காணநீர்
இன்ப மாக மூன்றுதர மிப்படித் தோய்த்துக் கந்தகத்தைத்
தம்ப நிம்பப் பழத்தரைத்துத் தகட்டைப் பத்துப் புடம்போடே. 1

செம்பைத் தகடாகத் தட்டிக் கொண்டு நெருப்பிலிட்டுச் சிவக்குமாறு காய்ச்ச வேண்டும். பின் அத்தகட்டை முறையே காடி, கோமூத்திரம், வெண்ணெய், கொள்ளுக்குடிநீர் ஆகியவற்றில் முறையே மும்மூன்று தடவை தோய்த்து எடுக்க வேண்டும். பிறகு கந்தகத்தை எடுத்து எலுமிச்சம்பழச் சாறு விட்டு அரைத்துத் தகட்டின் மீது பூசி, பத்துப் புடம் போட்டு எடுக்கப் பற்பமாகும்.

லோகப் பற்பம்

190. அரப்பொடி யெண்ணெய் வெந்து அழுக்கறக் கழுவிப் போட்டு
உரைநிரை முப்ப துக்கோர் நிறை சாதி லிங்கம்
பரவிய கோச லத்திற் பத்துறை புடங்கள் மூன்று
பரிவுடன் மருந்து நாவற் பட்டைநீர் புடங்கள் பத்தே. 2

-- இது பற்பமாம் --

இரும்புத்தூளை எண்ணெயிலிட்டுக் கொதிக்கச் செய்து கழுவி எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு கழுவியெடுத்த இரும்புத்தூள் 30 பங்கு எடுத்து அதற்குச் சமமாக சாதிலிங்கம் கூட்டி, கோமூத்திரத்தில் 10 நாள் அரைத்தெடுக்க வேண்டும். பின் மூன்றுமுறை புடமிட்டு எடுத்து நாவற்பட்டைச் சாற்றால் அரைக்க வேண்டும். அதன்பின் மீண்டும் 10 முறை புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

காந்தப் பற்பம்

191. காந்தங் காடி மோர்தன்னைக் கடிதாய் நிம்பப் பழச்சாற்றில்
சேர்ந்த திரண்டு நாழிகையாய் செவ்வே யூறச் சுத்தியாம்
நோந்த கந்தம் பாலிலொன்று நல்ல வெருக்கம் பால்கோரை
போ்ந்த புரசம் பட்டைரசம் போடு குக்குட புடம்மூன்றே. 3

காந்தத்தை காடி, மோர், எலுமிச்சம் பழச்சாறு இவற்றில் தனித்தனியே இரண்டு நாழிகையளவு வேகவைத்து எடுக்கச் சுத்தியாகும். இவ்வாறு சுத்தி செய்த காந்தத்தை பால், எருக்கம்பால், கோரைக் கிழங்கின் சாறு, புரசம்பட்டைக் குடிநீர் இவற்றால் முறையே அரைத்து, மூன்றுமுறை குக்குடப் புடமிட்டு எடுக்கக் காந்தம் பற்பமாகும்.

அப்பிரகப் பற்பம் (செந்தூரம்)

192. கறுத்தஅப் பிரகந் தன்னைக் காட்டிய பத்துக் கொட்டினால்
வெறுக்கப் பிடித்தே மிகக்காய்ச்சி வெள்ளைப் பசுவின் பால்தோய்த்து
இறக்கக் காடியிரண்டு நாழிகையில் இயல்பாய் ஊற வைத்தபின்பு
மறுக்க நிம்பப் பழச்சாற்றில் மதினா லாண்டு ஊறவைய்யே. 4

கறுநிறம் கொண்ட அப்பிரகத்தைப் (பத்துக் கொட்டினால்?) பிடித்துக் காய்ச்சி, வெண்ணிறப் பசுவின் பாலில் தோய்த்துப் பின் காடியில் இரண்டு நாழிகை ஊறவைக்க வேண்டும். பின்னர் அதனையே எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைக்க வேண்டும். மீண்டும் எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்து எடுக்க வேண்டும்.

★193. வைத்திடு நவதா னியந்தான் வகைபத்து நாளு மூறில்
எற்றிடு பாங்காடி ..... இயல்பெறத் திடித்தும் ....
மெற்றிடு கொடியா டைமேல் தாவியே நெல்லுப் போட்டுக்
கொத்திட காலால் தேய்க்கில் நோம்பொடி கீழுந் தீரும். 5

நவதானியங்களை 10 நாள் ஊறச் செய்து பின் இடித்துத் துணியிலிட்டு நெல் கூட்டி, காலால் தேய்க்கப் பொடி கீழ்ப்புறம் சேரும்.

194. உதிர்ந்ததோர் பொடியெ டுத்து ஒள்ளிய யெருக்கம் பாலில்
திரந்திட வரைத்து சட்டி கல்மேல் மூடி பதிட
மதிட்சீலை மண்செய்து பத்து கெசப்புடம் போட்டெ டுத்துக்
கரதீர்ந்த ஆலம் விழுதின் கசாயங்கம் புடமுப்ப தாகும். 6

உதிர்ந்த பொடியை எடுத்து எருக்கம்பாலால் அரைத்துச் சட்டியிலிட்டுச் சீலைமண் பூசி 10 முறை கெசப்புடம் போட்டு எடுத்து ஆலம் விழுதின் கியாழத்தில் ஊறவைத்துக் கழுவியெடுக்க வேண்டும்.

195. ஆதமாஞ் செந்தூ ரத்தை அழகிய விருப்புச் சட்டி
மோகமாம் பாலை வார்த்து மொழிந்தொரு நாளு மூடி
பாகமாம் பின்னெ டுத்துப் பரிவுட னிழலு லர்த்திக்
கூகமா மூங்கி லான குழல்தனி லடைத்துக் கொள்ளே. 7

செந்தூரத்தை இரும்புச் சட்டியிலிட்டுப் பால் விட்டு ஒருநாள் மூடி வைக்க வேண்டும். பின் எடுத்து நிழலிலுலர்த்திக் கொண்டு மூங்கில் குழல்களில் அடைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தங்கப் பற்பம்

196. தங்கக் கட்டி புத்துமண்ணைத் தடவிக் காய்ச்சி மூன்றுதரம்
எங்குமுள்ள காடியிலு மியல்பாம் மாதுளைப் பழச்சாறும்
பொங்கும் நிம்பப் பழச்சாறும் போற்றத் தோய்த்துக் காவிக்கல்
இங்குச் சொன்ன படித்தடவி யியல்பாய் மூன்று தரம்தோயே. 8

தங்கக் கட்டிக்குப் புற்றுமண்ணைத் தடவிக் காய்ச்ச வேண்டும். பிறகு காடி, மாதுளம் பழச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு ஆகியவற்றில் மூன்றுமுறை தோய்த்தெடுக்க வேண்டும். பின் காவிக்கல்லைப் பொடித்துப் பூசி மூன்றுமுறை தோய்த்தெடுக்க வேண்டும்.

★197. தோய்ப்பாய் காவிப்பு மண்தோம்மை ..... நிம்பப் பழச்சாற்றில்
வாய்ப்பா யரைத்து மேற்பூசி வகையாய் மூன்று தரந்தோய்க்கில்
பாயுப் புத்தான் பூசிநிழற் காய்ச்சித் தோய்ந்த பின்பு
காய்ப்பாய் மாதுளை பழச்சாற்றில் காவிக்கல் லரைத்து யூறவையே. 9

தொடர்ந்து காவிக்கல்பொடி,புற்றுமண் பூசி எலுமிச்சம்பழச் சாறு அரைத்துப் பூசி மூன்றுமுறை தோய்த்தெடுக்க வேண்டும். பின்பு, உப்பினைப் பூசி நிழலில் உலர்த்திப் பின் தோய்த்தெடுத்து மாதுளம்பழச் சாற்றில் காவிக்கல்லை அரைத்து அதில் ஊறவைக்க வேண்டும்.

198. ஊறிடு மைந்து நாழி யுகந்துடன் கழுவச் சுத்தி
சாறிடுங் சூதந் தானுஞ் சரிநிறை கூட்டிக் கொண்டு
மாறிடு மாதுளம் பழச்சாற்றில் மர்த்தனை செய்து வைத்து
வீறிடு சரிக்கந் தகந்தான் வியன்பொடி யாக்கிக் கொண்டே. 10

இவ்வாறு ஐந்து நாழிகை ஊறியபின் கழுவி எடுக்க, தங்கம் சுத்தியாகும். இத்தங்கத்துடன் சமஅளவு இரசம் கூட்டி, மாதுளம் பழச்சாறு விட்டு மையாக அரைத்து வைத்துக் கொண்டு பொடி செய்த கந்தகத்தை,

★199. கூட்டிய மூட்சை தன்னில் கந்தகங் கீழ்மேல் வைத்து
வாட்டிய மருந்து தானும் வடிவுடன் நடுவே வைத்து
நீட்டிய சீலை மண்..... நிறைநிறை செய்து கொண்டு
காட்டெரு முப்ப துள்ளே கடும்புடம் போட்டி டாயே. 11

குகையாகச் செய்து, அதில் மேற்படி சரக்கை இட்டு, மேலும் கீழும் கந்தகத்தை வைத்துக் குகையை மூடிச் சீலைமண் பூச வேண்டும். பின் இதனை 30 எருவில் கடுமையாகப் புடம் போடவேண்டும்.

200. போட்டிடு புடந்தா னூறில் புகன்றிட வெடுத்து முன்போல்
சாட்டிய விரதத் தோடுநன் மாதுளம் பழச்சாற்றி லரைத்து
நீட்டிய கந்த கத்தின் நீள்பொடி கீழ்மேல் வைத்து
போட்டிடும் புடம்பதி னைந்து விரும்பிடப் பற்ப மாகும். 12

நூறு புடம் போட்டுப் பின் எடுத்து மீண்டும் அதனோடு இரசம் கூட்டி, மாதுளம்பழச் சாறுவிட்டு அரைத்து, கந்தகப் பொடியால் குகை செய்து அதில் இச்சரக்கை வைத்து மேலும் கீழும் கந்தகம் வைத்துக் குகையை மூடிச் சீலைமண் பூசி, பதினைந்து புடம் போட்டெடுக்க தங்கம் பற்பமாகும்.

வெள்ளீயப் பற்பம்

201. வெள்ளியைத் தகடு தட்டி வெடக்கக் காய்ச்சி நல்லெண்ணெய்
வள்ள மான மோர்காடி வகுத்த கோசலங் கோட்சாறு
உள்ள தொன்றில் நாலுதரம் முகந்தெடுத்துத் தோய்க்கச் சுத்தியாம்.
பள்ள மான தகட்டுக்குப் பத்தி லொன்று தாளகமே. 13

வெள்ளியைத் தகடாகத்தட்டி, தீயில் இட்டுக் காய்ச்சி, நல்லெண்ணெய், மோர், காடி, கோமூத்திரம், கோடகசாலைச் சாறு ஆகியவற்றில் நான்குமுறை தோய்த்தெடுக்கச் சுத்தியாகும். சுத்தியான வெள்ளிக்குப் பத்தில் ஒரு பங்களவு தாளகம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

202. தாளக மரைத்து ஈயத் தகட்டினிற் பூசுங்க சாயம்
நீளக புரசம் பட்டை பூவுட னரைத்துக் காய்ச்சி
கூளக மூட்சை யிட்டுக் குக்குடப் புடந்தான் வைத்து
ஆளகம் பத்தி லொன்று தாளக மரைத்தி டாயே. 14

தாளகத்தை அரைத்து வெள்ளீயத் தகட்டினில் பூச வேண்டும். புரசம்பட்டை, பூ ஆகியவற்றை அரைத்துக் குடிநீராக்கி அதில் மேற்படித் தகட்டைக் காய்ச்ச வேண்டும். பின் குகையில் இச்சரக்கை வைத்து மூடி குக்குடப் புடம் போட்டு எடுக்க வேண்டும். பின்னர் தாளகத்தைப் பத்தில் ஒருபங்கு என்ற அளவில் எடுத்து மறுபடியும் அத்தகட்டில் பூச வேண்டும்.

203. அரைத்திடு அங்கத்து நல்லாப் பதத்துப் பிசறி நன்றாய்
உரைத்திடு தகட்டைப் பூசி ஒருபங்கு புடமொன் றாக
நிரைத்திடு புடமும் நான்கு நீங்காமல் போட்டெ டுத்தால்
வரைதகடு வெள்ளீ யந்தான் வளம்பெறு பற்ப மாகும். 15

தாளகத்தை அரைத்து மேற்படிச் சரக்கில் பூசிட, நன்றாகப் பிசிற வேண்டும். பிற ஒரு பங்குக்கு ஒரு புடம் என்றவாறு 4 முறை புடம் போட்டு எடுக்க வெள்ளீயம் பற்பமாகும்.

(வெள்ளிப் பற்பம்)

204. வெள்ளியைத் தகடு தட்டி வெச்செனக் காய்ச்சிக் கொண்டு
கொள்ளுடன் காடி எண்ணெய் கோசலந் தோய்க்கச் சுத்தி
உள்ளதான் பத்துக் கொன்று உகந்துவெள் ளீயப் பற்பம்
புள்ளிய புரசம் பட்டைப் பூங்கொடி நீர்வார்த் தரையே. 16

வெள்ளியைத் தகடாகத் தட்டி அது மடியும்படியாக காய்ச்சவேண்டும். கொள்ளுக் குடிநீர், காடி, எண்ணெய், கோமூத்திரம், இவற்றில் முறையே தோய்த்தெடுக்க வேண்டும். இவ்வெள்ளிக்குப் பத்தில் ஒரு பங்கு வெள்ளீயப் பற்பம் எடுத்து, புரசம்பட்டைப் பூ ஆகியவற்றின் சாறு விட்டு அரைத்து எடுத்து,

205. அரைத்துடன் மூட்சை யிட்டு அதுசுத்த பேதம் பண்ணி
நிரைந்திடு புடங்கள் தானும் நீள்கொளி யுயர மாகும்
கரைத்திடு வெள்ளி தன்னைக் கடுஞ்சாம்ப லாக்கிப் போகும்
விரைந்திடு மீய பற்பம் விதம்பெறக் காண்பாய் மின்னே. 17

குகையிலிட்டு மூடி, புடங்கள் போட வேண்டும். இவ்வாறு செய்தால் வெள்ளி பற்பமாகும்.

காரீயப் பற்பம்

★206. காரீயத் தகடு தட்டிக் காய்ச்சித் தோய .......
மாரிய சுத்தி செய்த மனோசிலை பத்துக் கொன்று
பேரிய எலுமிச்சம்பழம் பேசவிட் டரைத்துப் பூசி
பாரிய மூட்சை யிட்டுப் பருத்தைந்து புடமாம் பற்பம். 18

காரீயத்தைத் தகடாகத் தட்டி, சுத்தி செய்த மனோசிலை 1/10 பங்கு எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்து, தகட்டின் மீது பூசிக் குகையிலிட்டு 5 புடம் இட்டெடுக்கக் காரீயப் பற்பமாகும்.

(வெண்கலப் பற்பம்)

207. வெண்கலம் பொடியாய்ப் பண்ணி வெச்செனத் தானே காய்ச்சிப்
பொங்கமாங் கானச் சாறு புளியிலைச் சாறுந் தோய்ந்துத்
தங்கமாங் கந்த கத்தைச் சரிநிறை யாலம் பாலில்
பங்கமா யரைத்துப் பூசிப் பகுத்தேழு புடத்திற் பற்பம். 19

வெண்கலத்தைப் பொடி செய்து மடியுமாறு காய்ச்சி, கொள்ளுச்சாறு, புளியிலைச் சாறு ஆகியவற்றில் தோய்த்தெடுக்க வேண்டும். கந்தகத்தைச் சமஅளவு எடுத்து ஆலம் பால் விட்டு அரைத்து மேற்படி பொடியின் மீது பூசி 7 புடம் போட வெண்கலம் பற்பமாகும்.

வெண்கலச் செந்தூரம்

208. பற்பமாம் வெண்க லத்திற் பாதியாஞ் சாதி லிங்கம்
நுட்பமா யதனிற் பாதி நுண்ணிய கந்த கந்தான்
சிற்பமா யதனிற் பாதி சீரிய இரதம் தானும்
கட்பமா யரைத்தெ டுக்குங் கசாயத்தை வகுத்து ரைப்பேன். 20

வெண்கலப் பற்பம் அதற்குப் பாதியளவு சாதிலிங்கம், கால்பங்கு கந்தகம், அரைக்கால் பங்கு இரசம் எடுத்துக் கொண்டு,

209. உரைத்திடு மேவே லரசு ஓங்கிய புரசம் பட்டை
கரைத்திடும் கசாயந் தன்னில் கடியதோ ராலம் பாலில்
செறித்திடு னிம்பச் சாறு செருப்படி தாம ரைவேர்
அரைத்திடு செந்தூர மாமது புடமே ழாகக் காணே. 21

வேம்பு, அரசு, புரசு ஆகியவற்றின் பட்டைகளைக் காய்ச்சிய குடிநீரில் மேற்படிச் சரக்குகளைக் கரைத்துப் பின் ஆலம்பால், எலுமிச்சம்பழச் சாறு, செருப்படைச்சாறு, தாமரை வேர்ச்சாறு ஆகியவற்றால் அரைத்து ஏழு புடம் இட வெண்கலம் செந்தூரமாகும்.

பவழப் பற்பம்

210. பவழ நிம்பப் பழச்சாற்றில் பறிந்தே ஒருநாள் ஊறவைத்து
கவழ வெந்நீர் தனில்கழுவி கடிய வெருக்கம் பால்வார்த்து
தவழ மூன்று நாளரைத்து தாகுத மூட்சை தனில்வைத்து
சவழ மொருகெச புடம்போடச் சந்தக மான பற்பமாம். 22

பவழத்தை எலுமிச்சம்பழச் சாற்றில் ஒருநாள் ஊறவைத்து, வெந்நீரில் கழுவிக் கொள்ள வேண்டும். பின், எருக்கம்பால் விட்டு மூன்றுநாள் அரைத்துக் குகையிலிட்டுக் கெசபுடம் போட்டு எடுக்க பவழம் பற்பமாகும்.

முத்துப் பற்பம்

211. முத்து சங்கம் பவளவ..ச் சாறு முதிய பூவந்தி புளித்தண்ணீர்
இத்தில் நாளு மூன்றூறி யியின்ற முள்ளிப் பழச்சாற்றில்
சத்து வாக மூட்சையிட்டுத் தனித்தனி யொருகெச புடம்போட
வித்தக மான பற்பமாம் விரும்பிச் செய்வாய் மென்குழலே. 23

முத்து, சங்கம் பழச்சாறு.... சாறு, பூவந்திச் சாறு, புளித்தண்ணீர் ஆகியவற்றில் 3 நாள் ஊறவைத்துப் பின் முள்ளிச் சாற்றால் அரைத்து, குகையிலிட்டுக் கெசபுடம் இடப் பற்பமாகும்.

வயிரப் பற்பம்

212. வயிரங் குதிரை மூத்திரத்தில் வழாநாள் மூன்று வெயில்வைத்துத்
துயிரும் பிரண்டைச் சாறரைத்துத் துவள வச்சிர மூட்சையிட்டு
பயிலுஞ் சீலை மண்செய்து பிரய புடமே போட்டெடுத்தால்
இயலும் பற்ப மாகிவிடுமீ தறிந்து கொளவா யதிவேகம். 24

வைரத்தைக் குதிரை மூத்திரத்தில் ஊறவைத்து மூன்றுநாள் வெயிலில் உலர்த்த வேண்டும். பின் பிரண்டைச் சாறுவிட்டு அரைத்து, வச்சிரக் குகையிலிட்டுச் சீலைமண் செய்து புடமிட வைரம் பற்பமாகும்.

மரகதப் பற்பம்

★213. மரகதக் கல்லு தன்னை வட்டம்பேய்க் கொம்மட்டிக் காயில்
புரயற வுள்ளே வரைத்துப் புடமது போட்டெ டுத்து
விரைவுடன் பிரண்டைச் சாறு மிகுகொம்பன் கோரைச் சாறு
பரிவுடன் அரைத்து மூட்சை ப.... முடன் புட்பமாம் பற்பம். 25

மரகதக் கல்லைப் பாவட்டச் சாறு, கொம்மட்டிக்காய்ச் சாறு ஆகியவற்றால் அரைத்து, புடமிட்டு எடுத்து, பிரண்டைச் சாறு, கொம்புப் பாகல் சாறு, கோரைக்கிழங்குச் சாறு ஆகியவற்றால் அரைத்துக் குகையிலிட்டுப் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

நீலப் பற்பம்

214. நீலங் கழுதைக் கத்தத்தில் நிலையாங் குதிரை மூத்திரத்தில்
வாலமோரொரு நாளூற வைத்து வகையும் பிரண்டைச் சாற்றரைத்து
ஏலம் வச்சிர மூட்சையிட்டு இதுவே சீலை மண்செய்து
ஆலங் கடிய கெசபுடத்தி லமர்ந்த பற்ப மாங்காணே. 26

நீலக்கல்லைக் கழுதைமூத்திரம், குதிரைமூத்திரம், மோர் ஆகியவற்றால் முறையே ஒருநாள் ஊறவைத்துப் பிரண்டைச்சாறு விட்டு அரைத்து, வச்சிரக் குகையிலிட்டுச் சீலைமண் செய்து மூடி, கெசபுடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

மாணிக்கப் பற்பம்

★215. மாணிக்கங் குதிரை மூத்திரத்தில் மறுநாள் மூன்று உறைவைத்து
பாணி யெருக்கம் பால்வார்த்துப் பரிவாய் மூன்று நாளரைத்துப்
பூணிக் கம்பி மூட்சையிட்டுப் புதிய சீலை மண்செய்து கொளிப்புடம்
தானிட் டெடுக்கக் ..... குளிர்ந்த பற்ப மாய்விடுமே. 27

மாணிக்கத்தை ஒருநாள் குதிரை மூத்திரத்தில் ஊறவைத்து மறுநாள் மூன்று உறை வைத்துப் பின்னர் எருக்கம்பால் சேர்த்து மூன்று நாள் அரைத்துக் கம்பி மூட்சையிட்டு புதிய சீலைமண் செய்து அதனுள் வைத்து எரித்துப் பின்னர் குளிர்வித்தால் மாணிக்கப் பற்பமாகும்.

புட்பராகப் பற்பம்

216. புருசராகக் கல்லு தன்னைப் போதவாட்டு மூத்திரத்தில்
வரிசை யாக வொருசாமம் வகையாய் யூற வைத்தெடுத்து
புருச மான கொம்பன்கோரைப் புகன்ற கசாயம் விட்டரைத்து
யருச மான மூட்சையிட்டு அடுக்கும் புடத்திற் பற்பமாம். 28

சுத்தி: புட்பராகத்தை வெள்ளாட்டு மூத்திரத்தில் ஒருசாமம் ஊறவைத்து எடுத்து தண்ணீர் விட்டுக் கழுவி எடுக்க வேண்டும்.

பற்பம் செய்யும் முறை: மேற்படி சுத்தி செய்த புட்பராகத்திற்குக் கொம்பன் கோரைக் கிழங்கு கியாழம் விட்டரைத்து வெய்யிலில் வைத்து உலர்த்தி மூட்சையிலிட்டு முறைப்படி சீலைமண் செய்து புடமிடப் பற்பமாகும்.

கோமேதகப் பற்பம்

217. கோமே தகத்தைக் கொண்டுவந்து குதிரை மூத்திரம் நாள்மூன்றும்
சாமத மாக ஊறவைத்து சமமாங் கறுத்த ஊமத்தை
பாத மான சாற்றரைத்து நெடிதாம் வச்சிர மூட்சையிட்டுப்
போத மாக மூன்றுபுடம் போட்டே யெடுக்கப் பற்பமாம். 29

சுத்தி: கோமேதகத்தை குதிரை மூத்திரத்தில் மூன்று நாள் ஊறவைத்து, பின் அதேபோன்று மூன்றுநாள் கறுத்த ஊமத்தைச் சாற்றிலும் ஊறவைத்துக் கழுவி எடுத்துக் கொள்ளவும்.

பற்பம் செய்யும் முறை: சுத்தி செய்த கோமேதகத்திற்கு நெருஞ்சில் சமூலம் சாறுவிட்டு அரைத்துக் காயவைத்து வச்சிர மூட்சையிலிட்டு முறைப்படி மேல்மூடி கொண்டு மூடி சீலைமண் செய்து புடமிடவும். மீண்டும் புடமிட்டப் பற்பத்தை எடுத்து நெருஞ்சி சமூலச் சாறு விட்டரைத்து முன்போலவே மூன்று புடம் இடவும்.

(பற்பம் செய்முறை - வேறு)

★218. இந்தப்படி இரத பற்பமுங் கூட்டி ரத்தின பற்பமுங் கூட்டிக்
கொள்ளவும் - மூட்சையிலே விட்டுப் புடம் போடவும் என்றவாறு
உலை மூடியிலே வைத்து மேலும் மூடிக்கொண்டு மூடி மூன்று சீலைமண்
செய்து எருவடுக்கி நடுவே புடம் போடவும் என்றவாறு. 30

மேற்கண்ட முறைப்படியே இரச பற்பமும் இரத்தினப் பற்பமும் கூட்டி மூசையிலிட்டுப் புடம் போட வேண்டும். பின் முறைப்படி உலைமூடியில் வைத்து மூன்று சீலைமண் செய்து வறட்டி (சாண எரு)களின் நடுவே வைத்துப் புடம் போட வேண்டும்.

(கேச மாத்திரை)
(வேறு)

★ 219. நாபியுடன் மாங்கொட்டை முத்தக் காசு
நல்லபொரி க்ாரமுடன் குடசப் பாலை
காவினிறை சரிபாகங் கூட்டிக் கொண்டு
கஞ்சாவி னிலைச்சாற்றி லரைத்த வுண்டை
மேனியிடும் தேற்றாம் வித்துப் போல
மேன்மையாந் திப்பிலிதே னனுபான மிட்டு
ஆவிபெறல் வயிற்றோடல் மற்றுங்
கண்டால் அதிசார கேசத்தோ. 31

செய்முறை: சுத்தி செய்த நாபி, மாங்கொட்டை, முத்தக்காசு, கோரைக்கிழங்கு, பொரிகாரம் (வெங்காரம்), குடசப்பாலை விதை, காவி (காவிக்கல்) இவை ஒவ்வொன்றும் சரிபாகமாக எடுத்துக் கொண்டு, இடித்துத் தூள் செய்து கஞ்சாவின் இலைச்சாற்றால் நன்கரைத்து மாத்திரை உருட்டும் பக்குவத்தில் எடுத்து தேற்றாங்கொட்டையளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும்.

ஒரு மாத்திரையுடன் தேன், திப்பிலிச் சூரணம் சேர்ந்த துணை மருந்தோடு உண்ண வயிற்றோட்டம், அதிசாரம் போன்ற நோய்கள் தீரும்.

★ 220. துத்தமோ டரிதாரங் கெளரி தானுந்
தூமத்தின் சாற்றிலுண்டை செய்து லர்த்தி
மொத்தியிடும் பயிறளவு இஞ்சி சுக்கு
விரகிமுலைப் பாலதனி லனுபானம் வேகம்
கத்திசெய்யுஞ் சுரந்தனக்கு முருங்கைக் கஞ்சி
கலராதே உப்பொளிந்த கஞ்சி தானே. 32

துத்தம், அரிதாரம், கெளரி இம்மூன்றையும் தூமத்தின் (புளிநரளை) இலைச் சாற்றிலிட்டு அரைத்துப் பயறளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

துணை மருந்து: இஞ்சிச் சாறு அல்லது சுக்குக் குடிநீர் அல்லது தாய்ப்பால்.

தீரும் நோய்: சுரம்

பத்தியம்: முருங்கைக்கீரை கலந்த அரிசிக் கஞ்சியை உப்பில்லாமல் தருக.

(இரசச் சுத்தி - வேறு)

221. பண்ணுதமிழ்ப் புலவோர்க ளப்படியின் மீதில்
பரமான ரசசுத்திப் பகரும் போதில்
மண்ணுசெங்கல் பொடிபோட்டு ரசத்தைத் தானே
மத்தித்து இரண்டு நாழிகை யதான்
துன்னியஅட் டரைபோட்டுத் தேய்தங் காத்தி
சுகமான சாரணைப்பூ வானகு தத்தை
கன்னல்மொழிப் பாய்மஞ் சனாகாக் குங்கமா
சாரங் கனிகொடு வேலி தானே. 33

இரசத்திற்குச் செங்கல்பொடி போட்டு இரண்டு நாழிகை அரைத்துப் பிறகு, ஒட்டடை போட்டு இரண்டு நாழிகை அரைத்து, பிறகும் இதேபோல் வெண்சாரணைப் பூச்சாறு விட்டரைத்து அதன்பின், கொடிவேலிச் சாறுவிட்டு அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

(சுத்திமுறை - வேறு)

222. காணவே கொன்றைவேர் முருங்கைப் பட்டை
கந்தமுறு பருத்திப் படாப ருத்தி
தாணுவாம் வெற்றிலை யோடிவை வெவ்வேறு
சாறுதனி லிரண்டு நாழிகை ஊறி
பூணவே சந்தனஞ் செம்புளிச்சங் கட்டைப்
புறந்தண்ணீர் தனில்தோய்த்த பிறகு தானே
ஆணவே தண்ணீர்விட் டலம்பச் சுத்தி
ஆகுமென முன்னோ ரருளி னாரே. 34

கொன்றை வேர், முருங்கைப் பட்டை, பருத்தியிலை, வெற்றிலை ஆகிய சாறுகளில் முறையே இரண்டு இரண்டு நாழிகை ஊறியபின் சந்தனம், செம்புளிச் சங்கைக் கட்டையின் பட்டைத் தண்ணீரில் தோய்த்து எடுத்த பின் தண்ணீரிலிட்டுக் கழுவி எடுக்கச் சுத்தியாகும்.

(நேர்வாளம், நாபிசுத்தி - வேறு)

223. அருள்பெறு நேர்வாளத் தோடு போக்கி
ஆவின்சர ணாங்கத்தில் வைத்த பின்பு
திருவனைய கற்றாழஞ் சாற்றில் வெந்து
தீர்ந்தபின் பால்நெய்யில் திறமாய் வேக
தருபெரிய நேர்வாளஞ் சுத்தி நாபி
தனதுசுத்திக் கடலைப்போலத் தரிக்க வேண்டும்
பருவனைய சிறுகீரைச் சாற்றில் வேக
வைத்தபின்கோ மூத்திரத்தில் மருவி வையே. 35

நேர்வாளத்தின் ஓடு நீக்கி, பசுஞ்சாணிப் பாலில் வேகவைத்த பின்பு, சோற்றுக் கற்றாழைச் சாற்றிலும் வேகவைத்து மேலும், ஆவின் பாலிலும் வேகவைத்து நெய்யில் வறுத்தெடுக்கச் சுத்தியாகும்.

நாபியைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிச் சிறுகீரைச் சாற்றில் வேகவைத்துப் பின் பசு மூத்திரத்தில் மூன்றுநாள் ஊறவைக்க வேண்டும்.

224. வைத்ததனை மூன்றுநாள் நனைத்தங் காற்றி
மறுபடி வெள்ளாட்டு மூத்தி ரத்தில்
வைத்துய்த்த பொழுதுமூன்று நனைத்த பின்னைச்
சுகமான நாபியது சுத்தியாமே
நெத்தபெருங் காயமதை வெய்யில் வைக்க
நீதியாய் காயமது சுத்தி யாகும்
தொய்த்தயிரு சீரகத்தை வெதுப்பிக் கொள்ள
நேராட்டி வெயில்வைத்து வெதுப்பிக் கொள்ளே. 36

இவ்வாறு மூன்றுநாள் ஊறவைத்து எடுத்தபின் மறுபடியும் வெள்ளாட்டு மூத்திரத்தில் மூன்றுநாள் ஊறவைத்து எடுத்துக் காயவைக்க, நாபி சுத்தியாகும்.

பெருங்காயச் சுத்தி: பெருங்காயத்தை வெய்யிலில் காயவைத்து எடுக்கப் பெருங்காயச் சுத்தியாகும்.

இருசீரகச் சுத்தி: அடுப்பிலிட்டு வெதுப்பிக் கொண்டு பின்னர் வெயிலில் காயவைத்து எடுக்க இருசீரகச் சுத்தியாகும்.

(எட்டி விதைச் சுத்தி - மிளகுச் சுத்தி-வேறு)

225. தப்பாமல் எட்டிவிரை குப்பைக் கீரை
சாறதனில் நனைத்துவைத்துத் தானே பின்னும்
எப்பாசச் சாறதனில் தோழங் கட்டி
எறித்திடவே சுத்தியெட்டி விரையுந் தானே
செப்பான மிளகுதனை நெல்லிச் சாற்றில்
சேர மூன்று நாழிகைதான் யூறச் சுத்தி
நெற்பாசச் சாறுகிட்டாட் டிமொரு மாதம்
நிலையாக முன்னாளில் ஊற வையே. 37

எட்டிவிதைச் சுத்தி: குப்பைக்கீரைச் சாற்றில் ஊறவைத்துப் பின்னும் பாகலிலைச் சாற்றில் விதைகளை ஒரு துணியில் முடிந்து துலா எந்திரமாகக் கட்டி எரித்து எடுக்கச் சுத்தியாகும்.

மிளகுச் சுத்தி: மிளகதனை நெல்லிச்சாற்றில் மூன்று நாழிகை ஊறவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

(கந்தகச் சுத்தி - வேறு)

★ 226. கார்குழலாய் கந்தகத்தைத் தரித்துச் சீந்தில்
தண்ணீர்விட் டான்பறப டாகந் தானும்
நார்சேருங் கோரைவே ரமுக்குரா நெருஞ்சி
நன்றாக வெல்லமதைப் போட்டுக் காய்ந்த
நீரதனில் நனைத்துக்கொள்ள நேர மூன்று
நிசமான பசும்பால் வெள்ளாட்டமுது
சீர்மருவுங் குழல்மானே வெவ்வேறு காய்ச்சி
சிவசிவா நிழலுலர்த்தச் சுத்தி யாமே. 38

கந்தகச் சுத்தி: கந்தகத்தை முறையே சீந்தில் சாறு, தண்ணீர்விட்டான் சாறு, பற்படாகச் சாறு, கோரைவேர்ச்சாறு, அமுக்குராச் சாறு, நெருஞ்சிச் சாறு வெல்லம் போட்டுக் காய்ச்சிய நீர் ஆகியவற்றில் மும்மூன்று நாழிகை ஊறவைத்து எடுக்க வேண்டும். பின் ஆவின்பால், வெள்ளாட்டின் பால் ஆகியவற்றில் முறையே தனித்தனியே காய்ச்சி எடுத்து நிழலில் உலர்த்திக் கொள்ளச் சுத்தியாகும்.

(சாதிலிங்கச் சுத்தி, வெங்காரச் சுத்தி - வேறு)

227. சுத்திசெய்வாய் சாதிலிங்கம் முலைப்பால் தன்னில்
துரிதமுடன் மத்தனஞ்செய் சுத்தி யாகும்
பத்தியுடன் வெண்கார மணலி லிட்டுப்
பழங்காடி தனில்நனையப் பாங்கச் சுத்தி
உத்தியுடன் ஆட்டுப்பா லதனில் காய்ச்ச
புதுமையாம் பாடாணச் சுத்தி கேளு
முத்தியுடன் சுண்ணாம்பு தனிலே மூன்று
பிரகாரஞ் சுத்தியது செய்து கொள்ளே. 39

சாதிலிங்கச் சுத்தி: சாதிலிங்கத்தைத் தாய்ப்பாலிலிட்டு அரைத்தெடுக்கச் சுத்தியாகும்.

வெங்காரச் சுத்தி: வெங்காரத்தைப் பாத்திரத்திலிட்டு, அடுப்பேற்றிப் பொரித்துக் கொண்டு, பழங்காடியில் நனைத்து ஊறவைக்க வேண்டும். மீண்டும் வெள்ளாட்டுப் பாலிட்டுக் காய்ச்சியெடுக்கச் சுத்தியாகும்.

வெள்ளைப் பாடணச் சுத்தி: பாடாணத்தை கற்சுண்ணாம்புக்குள் வைத்து எடுக்க வேண்டும். இவ்வாறு மூன்றுமுறை செய்து எடுக்கச் சுத்தியாகும்.

(வெள்ளைப் பாடாணச் சுத்தி - வேறு)

228. போதவே நெய்யி லிட்டுப் பொங்கப் பொங்கப்
பொழுதொன்றில் ஏழுதரம் பொங்கக் காய்ச்சி
சாதமுடன் எலுமிச்சம் பழச்சா றிட்டுச்
சாந்தமுட னேவெந்தால் தானே சுத்தி
நாதமுடன் எவட்சாரங் கழுநீர் காடி
யாதலிவை தனித்தனியே நனைத்துக் கொள்ள
ஓதினோம் வெற்றிலைச் சாறதனில் காய
ஒருசாமம் நனைத்துவெய்யி லூறச் சுத்தி. 40

வெள்ளைப் பாடாணத்தைப் பசு நெய்யிலிட்டு பொங்கக் காய்ச்சி எடுத்துக் கழுவ வேண்டும். இதுபோல் ஒரு நாளைக்குள் ஏழுமுறை காய்ச்சி எடுக்கச் சுத்தியாகும். சோற்றுக் கற்றாழைச் சாறு, எலுமிச்சம்பழச் சாறு இரண்டிலும் வெள்ளைப் பாடாணத்தை இட்டுக் காய்ச்சி எடுக்க, சுத்தியாம்.

எவட்சாரச் சுத்தி: கழுநீர், காடி இவைகளில் ஊறவைத்து எடுத்துக் கொண்டு வெற்றிலைச் சாற்றில் ஊறவைத்துப் பின் வெயிலில் காய வைத்தெடுக்கச் சுத்தியாகும்.

(எண்ணெய் வகைகள்)
(வேறு)
மகா நாராயணத் தைலம்

229. அன்புடன் தேற்றாங் கொட்டை யானசிற் றேலம் வில்வம்
பின்புள அழிஞ்சில் தானும் முழுதழு தாழை யீர்க்கு
பின்புமா மணக்குக் கள்ளி பட்டையு முருங்கை தானும்
அன்புசேர் கருங்காலி மற்றும் வளஞ்சிற்றா முட்டி யாமே. 1

தேற்றாங் கொட்டை, சிற்றேலம், வில்வவேர், அழிஞ்சில்வேர், தழுதாழை ஈர்க்கு, ஆமணக்கின் வேர், கள்ளிப்பட்டை, முருங்கைப்பட்டை, கருங்காலி மற்றும் சிற்றாமுட்டி,

230. ஆனதோர் பேரா முட்டி யதுவுடன் நெருஞ்சி பிராய்வேர்
போனதோர் தூது வேளை போற்றிடு மெருக்குப் பாவைக்காய்
ஊனதோர் சிறிய தான அதுவழு தலைவேர் கூட்டி
ஆனதோர் துளசி வேரு மாஞ்சத குப்பை தானே. 2

பேராமுட்டி, நெருஞ்சில்முள், பிராய்வேர், தூதுவளை, எருக்கு, பாகற்காய், வழுதலை வேர், துளசிவேர், சதகுப்பை,

231. தானே நொச்சி நன்னாரி தக்க விலங்கம் நாயுருவி
யானைக் கொட்டைப் பாசிலையு மதுவே யனையக் கற்றாழை
பூனைக் காலியுட ருப்பிப் போட்டே காரெள் ளெண்ணையதில்
வினைய தில்லா விட்டுணுகிரந்தி மிகுந்த நீலியெனும்
முருக்கவேர் 3

நொச்சி, நன்னாரி, வாய்விளங்கம், நாயுருவி, யானைக்கொட்டைப் பாசிலை, (பழம்பாசி), சோற்றுக் கற்றாழை, பூனைக்காலி ஆகியவற்றை நறுக்கி எடுத்துக் கொண்டு எள்ளின் எண்ணெயில் விடவும். விட்டுணுகிரந்தி, நீலி(அவுரி), முருக்க வேர்,

232. மானே தேவ தாரிமஞ்சள் மருவும் எருக்கம் வேருடனே
தானே கஞ்சான் விரையுடனே தனுமாம் பட்டைப் பருத்திக்காய்
காணே கண்டு பறங்கியிஞ்சிக் கனமாம் படாகங் கருங்கோரை
ஊனே சித்திரமூலி புன்னையுட னாமணக்கு கூத்தன்
குதம்பையுமே. 4

தேவதாரம், மஞ்சள், எருக்கம்வேர், கஞ்சாவிதை, மாம்பட்டை, பருத்திவிதை, கண்டுபாரங்கி, இஞ்சி, பற்படாகம், கருங்கோரைக் கிழங்கு, சித்திரமூலி வேர், புன்னைவேர், ஆமணக்கு, கூத்தன்குதம்பை,

233. அண்டர் புகழ்கொம்மடி மாதுளை ஆன சேவுகன் செடியாகும்
உண்டே சாரணை யிலாமிச்சம் உகந்த முட்காவளை வேராகும்
கொண்டே சாதிப் பத்திரியாங் கூட்டுஞ் சாரடை பிரண்டை கரந்தை
விண்டே யிலுப்பை யட்டசா மிகுமே னியுமே முசுமுசுக்கை. 5

மாதுளைவேர், சேவுகன்செடி, சாரணை, இலாமிச்சம், முட்காவேளைவேர், சாதிப்பத்திரி, சாரணை வேர், கரந்தை, இலுப்பை வேர், குப்பைமேனி, முசுமுசுக்கை,

234. பொன்னே ரணையாய் நாய்த்துளசி போகுந் திப்பிலி மரமஞ்சள்
அன்னே சங்கம் வேருடனே அனையாய் செங்கழு நீர்க்கோட்டம்
மன்னே திப்பிலி அதிமதுரம் வசம்பு சுக்கு மிளகரணை
சொன்னே னிலைவே ரூமத்தைவேர் துனிவரு முசுட்டை
கிலுகிலுப்பை. 6

நாய்த்துளசி, திப்பிலி, மரமஞ்சள், சங்கம்வேர், செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம், அதிமதுரம், வசம்பு, சுக்கு, மிளகரணை வேர், மருளுமத்தை வேர், முசுட்டை, வட்டக் கிலுகிலுப்பை,

235. தானே மிகுந்த உகாயாகுந் தக்க அழிஞ்சில் கள்ளியுடன்
மானே வேம்பு எருகினுடன் வருமா மஞ்சரக்குஓ ரொருபலமா
யானே வெட்டு மருந்ததுவும் அதைநே ராகி யிருபலமும்
சேனே யாகும் நீரப்பற்றுத் துணியத் தாக விடுகாய்ச்சே 7

உகாய், அழிஞ்சில், கள்ளி, வேம்பு, எருக்கு ஆகியவற்றை வகைக்கு ஒவ்வொரு பலம் எடுத்துக் கொள்ள வேண்டும். இவற்றுள் உலர்ந்த சரக்குகளைப் பத்துத் தூணி நீரிலிட்டுக் காய்ச்சிக் கியாழம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

(வேறு)

236. இனிதான கசாயம் துயிலைச்சா றெல்லாம்
ஏற்கையுடன் காய்ச்சியிதி லெண்ணெய் கேளீர்
புனிதமாங் கொள்ளுக்கட்டு கோசலமுங் குறுணி
கோநெய்முந் நாழிநல் லெண்ணெயிரு நாழி
தனிதாம் விளக்கெண்ணெய் முந்நாழி யாகும்
முதலுளுந்து கசாயமது முக்குறுணிப் பாலு
கனிவான உகாயின்வேர் தோடைக்கிழங்கு நீரும்
குறுணிகலந்து வெந்தபோது விடுகற்கம் கேளாய் 8

இக்கியாழத்துடன் மேற்சொன்ன பசுமையான இலைகளிலிருந்து எடுத்தச் சாற்றையும் சேர்த்துப் பசுநீர் முக்குறுணி, பசுநெய் மூன்று நாழி, நல்லெண்ணெய் இருநாழி, விளக்கெண்ணை மூன்று நாழி, உளுந்து முக்குறுணி, பால் முக்குறுணி, உகாயின்வேர், ஆடாதோடை வேர் இரண்டையும் சேர்த்துத் தண்ணீர் விட்டுக் கொதிக்கவைத்தக் கியாழம் ஒரு குறுணி, இவற்றைக் கலந்துகொண்டு,

237. குருவே ரிலாமிச்ச முத்தமுந் தாமரை
குங்குமம் பஞ்ச லவணம்
சிறிதாகு மேலமுட்டு ணாமமது நாகப்பூ
செல்பரம கேசர மதாகும் உருவான
தக்கோல மிவைசம னாக
யெண்ணெயது நாழிக்குப் பலமாய்
மருவான கற்கமது யிருபலங் கொண்டிடி
மன்னு சூரணஞ் செய்யே. 9

குருவேர் என்கிற வெட்டிவேர், விலாமிச்சம்வேர், முத்தக்காசு, தாமரைக் கிழங்கு, குங்குமப்பூ, நாகப்பூ, தக்கோலம் இவை சமமாக

எடுத்துக் கொண்டு நல்லெண்ணெய் ஒரு நாழிக்கு இருபலமாக (ஒரு நாழி எண்ணெய்க்கு இரு பலம் கற்கச் சரக்கு என்ற அளவில்) எடுத்துக் கொள்ள வேண்டும். மேற்படி எண்ணெயைக் கொதிக்க வைக்க வேண்டும்.

238. ஒன்பதாம் வகையெண்ணெய் வொக்கவே விட்டதி லுயர்கற்க கசாயமுடன்
என்பதாங் கற்கமது பாதியேதான் எக்கையாய் வைத்து நீயும்
முன்பதாம் பாதியது யெண்ணெயில் போட்டபின் முதிர்ந்தபத மாகுமளவில்
இன்பதாங் கற்கந்தனை யெடுத்தே விட்டு ஏற்கையாந் தைலபாகம் 10

ஒன்பது வகை எண்ணெய், கற்கம், கியாழம் ஆகியவற்றைச் சேர்த்துக் கொதிக்க வைக்கும்போது, கற்கவகைச் சரக்குகளில் முதலில் ஒரு பாதியையும், எண்ணெய்ப் பதம் தேர்ந்து வரும் அளவில் மீதியுள்ள பாதி கற்கச் சரக்குகளையும் போட்டுக் கொதிக்க வைக்க வேண்டும்.

(வேறு)

239. தையிலமிதை வடித்திடவே யேகும் போது
தக்கமது விக்கினவி நாயகனார் தம்மை
பயிலமாய் காய்கனிநற் றூப தீபம்
பண்பான சிவபூசை குருமயேசு பூசை
எயிலமதைத் தெள்ளிமையா யுகந்து போற்றி
உரமாகும் பஞ்சாட்சர முச்சரித்தே யேத்தி
நயிலமிலாத் தையிலமிது நாராயணன்தன் பேராய்
நானிலத்தில் நடந்திடநம் முனியுஞ் சொன்னார். 11

இதுவே மகா நாராயணத் தைலமாகும். இதை வடித்தெடுத்து விநாயகர், சிவன், குரு ஆகிய கடவுளர்களை வணங்கிப் பஞ்சாக்கர மந்திரத்தை ஓதி, நாராயணன் பெயரால் இப்பூவுலகில் வழங்குமாறு முனிவர் நமக்கு உரைத்தார்.

240. பயித்தியமாங் குணமுட னேறிகுணம் முதலாய்
பயித்தியமும் நாற்பதுடன் பகர்வாத மெண்பதுவும்
சயித்தியமாஞ் சேத்துமவகை தானுமதி சேரத்
தகர்ந்திடுமென் றேமுனிவர் சாற்றினார்கள் தாமாய்
வையித்தியமாம் பத்தியந்தான் அரைக்கீரை யவரைக்காய்
மலைத்துவரை நாரத்தை ஊறுகா யிஞ்சி
யுயற்றியவெள் ளாட்டுப்பால் முயலுப்புக் கண்டம்
சருவான யினியபால்தா னாகுமென முனிவர்சொன்னார். 12

நாற்பது வகை பித்த நோய்கள், எண்பது வகை வாத நோய்கள், இருபது வகை கப நோய்கள் ஆகிய நோய்கள் நீங்கும் என்று முனிவர்கள் கூறினார்கள்.

அரைக்கீரை, அவரைக்காய், மலைத்துவரை, நாரத்தை, ஊறுகாய், இஞ்சி, வெள்ளாட்டுப்பால், முயல் உப்புக்கண்டம், ஆவின்பால் ஆகிய இவை பத்தியத்திற்கு ஆகும் எனச் சொன்னார் முனிவர்.

ஸ்ரீ நாராயணத் தைலம் - வேறு

241. தழுதான குழலா தண்டை தானமுருங் கையின்மே லிங்கம்
வழுவாத கண்டங் காலி வகைகொடி வேலி வேரும்
மெழுகான வெதுப்ப டக்கி வேருடனே பேரா முட்டி
செழுவான சிறுகாஞ் சொரி யென்னும் சிறுவழுதி
யிலைவேர் கூட்டே 13

ஆதண்டை வேர், முருங்கை வேர், மாவிலங்க வேர், கண்டங் கத்திரிவேர், கொடிவேலி வேர், வெதுப்படக்கி வேர் (தலைச்சுருளி), பேராமுட்டி, சிறுகாஞ்சொரி, சிறுவழுதிலை வேர்,

வேறு

242. முத்தக்காசு அரத்தையுடன் மோதுமமுக் கிரா
பூனைக்காலி நெருஞ்சி வேர்
சித்தசெறு மாதுளை யழிஞ்சில்வேர் சேங்கொட்டை
கொன்றை மருதுகஞ் சாவுடன்
வைத்த யிலுப்பை சீந்தி லிலந்தை கரும்புவெண்
ணூமத்தை கடுக்காயுடன் தான்றியும்
சிற்றா போலும் எருக்கு மிளகரணையும்
சிவந்ததுத்தி வெற்றிலைக் கொடியுடன் 14

முத்தக்காசு, அரத்தை, அமுக்குரா, பூனைக்காலி, நெருஞ்சில் வேர், மாதுளை, அழிஞ்சில் வேர், சேராங்கொட்டை, கொன்றை, மருது, கஞ்சா, இலுப்பை, சீந்தில், இலந்தை, கரும்புவேர், மருளூமத்தை, கடுக்காய், தான்றிக்காய், எருக்கு, மிளகரணை, துத்தி வேர், வெற்றிலைக் கொடி,

243. பெரிய காஞ்சொரி புன்னை வேருடன்
பொருந்து தூதுவளை பெரும்பாலை வேருடன்
சரிய தாங்குமிழ் சேர வேதற்
சமனதான் சரிநிறைப் பவ்வத்துப் பலமதாய்
முரிய வேருகள் தானது கசாயமாய்
முயன்ற தூஉம்இலைச் சாறுகள் தன்னையு
மரிய பூனைக்கா லியிலைச் சாறுடன்
வகைய தாகவே சேர்த்துப்பின் காய்ச்சிடே. 15

பெரிய காஞ்சொரி, புன்னை வேர், தூதுவளை, பெரும்பாலை வேர், குமிழ் இவற்றை ஒவ்வொன்றும் பத்துப் பலம் அளவில் எடுத்து, மேற்சொன்னச் சரக்குகளையெல்லாம் கியாழமாகவும், இலைகளாகவும் எடுத்துச் சாறாகவும், எடுத்துக் கொண்டு பூனைக்காலி இலைச்சாறுடன் சேர்த்துக் காய்ச்ச வேண்டும்.

244. காய்ச்சியே கற்கங் கேளாய் கனசீதக்
காகொளிச் சிறுதேக் குடனும்
வாச்சிய மஞ்சட்டி அதிமதுரம் தானும்
வண்மைகார் போகத் தரிசியோடு

பூச்சிய தேவதார மிலுப்பைப் பருப்புமொக்கப்
புகழுடைய பேய்ப்புடல் தானுங்கூட்டி
வாச்சியே வாலுளுவை சோம நாதன்
வளமாகச் சேர்த்ததனைக் கூட்டிக் கொள்ளே. 16

கற்க வகைகளான கனசீதம், கார்கோளி, கண்டுபாரங்கி, மஞ்சட்டி, அதிமதுரம், கார்போகரிசி, தேவதாரம், இலுப்பைப் பருப்பு, பேய்ப்புடல், வாலுளுவை, சோமநாதன் (வேலிப்பருத்தி) ஆகியவற்றைச் சமமாக சேர்த்தரைத்துக் கற்கமாகச் செய்து மேற்படிச் சரக்கில் கலந்து கொள்ளவும்.

245. திரிகடுகுந் திரிபலையுந் திப்பிலியு மான்செவியு மாக
வெரியான கடுகுடவே வென்றமுத்த காசுச்த குப்பை சேர
செறிவான மஞ்சளிலாம் மிச்சைகூடச் சேர்த்தேலம் இலவங்கம் தானுமாக
அறிவாவி லங்கப் பத்திரியும் ஆனமலை யின்கடு குடனே
சிறுவான செருப்படி வேர்தானுஞ் சிறுபுள்ளடியு மதுரமுஞ் சேர்த்துக்
கொள்ளே. 17

திரிகடுகு, திரிபலை, யானைத் திப்பிலி, மான்செவிக்கள்ளி, கடுகு, முத்தக்காசு, சதகுப்பை, மஞ்சள், விலாமிச்சம், ஏலம், இலவங்கம், இலவங்கப்பத்திரி, மலைக்கடுகு, சிறுசெருப்படி வேர், சிறுபுள்ளடி, அதிமதுரம்,

(வேறு)

★ 246. ஆன முத்தக் காசுடனே அதுசீரக மீசுர மூலிவேர்
மான மன்றிஞ் சடாமாஞ்சி மன்னுஞ் சத்தி யவட்சாரம்
போன மேதை குக்குலமும் போந்தும் இடவகம் இந்துப்பு
வான மாஞ்சில் கோட்டமுடன் வருந்து கற்கடகச் சிங்கியுமே. 18

முத்தக்காசு, சீரகம், ஈசுவரமூலி வேர், சடாமாஞ்சில், யவச்சாரம், சத்திச்சாரம், குக்குலம், இடவகம் என்னும் மாம்பிசின், இந்துப்பு, சடாமாஞ்சில், கோட்டம், கற்கடகச் சிங்கி,

★ 247. குங்குமம் அகிலின் கட்டை கொண்டொரு பலமாய்ச் சேர்த்து
இங்குகஸ் தூரி மஞ்சள் ஏறித்தக் கோலஞ் சாதி
பொங்குகாயும் நெய்ச்சட்டி வேருடன் பொன்வெட்டிவேர் நாகேசுரமதும்
தங்கமான வங்காளப் பச்சையுந் தனுவாய்க் கொட்டைக் கரந்தைவேர்
பலமதாய். 19

குங்குமப்பூ, அகில்கட்டை, இவற்றை ஒவ்வொரு பலம் எடுத்து, கஸ்தூரி மஞ்சள், தக்கோலம், சாதிக்காய், நெய்ச்சட்டிவேர், வெட்டிவேர், நாகேசுரம், வங்காளப்பச்சை, கொட்டைக்கரந்தை இவற்றையும் ஒவ்வொரு பலம் எடுத்து இடித்துக் கொண்டு (சூரணமாக வைத்துக் கொள்க),

(வேறு)

248 இடித்தச் சாறு யியல்புடன் கூட்டியே
வடித்த கற்கமும் வகையுடன் சூரணம்
நடித்த ஒன்பதா மெண்ணெயும் கசாயமும்
பிடித்த பேர்தனிப் பாதிசூரணம் போட்டே. 20

முற்கூறிய சாறு வகைகளுடன் கற்கத்தைக் கூட்டி ஒன்பது வகை எண்ணெயிலிட்டுக் காய்ச்ச வேண்டும். கியாழத்தையும் இவற்றோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். எண்ணெய் காய்கின்ற பருவத்தில் மேற்சொன்ன சூரணத்தில் ஒரு பாதியை இட வேண்டும். எண்ணெய் முதிர்ந்து வரும் பருவத்தில் மீதிப் பாதியையும் இட வேண்டும்.

(வேறு)

249 ஏற்றமுள்ள சிறுகொதியில் இறக்கிவைத்து நலமா
யினிதாக வடித்ததனை யிட்டிடவே நீகேள்
தோற்றமுள்ள வாய்வுபல சூலையது தானும்
தொந்தமுள்ள வாய்வுகுணஞ் சன்னிசேத்தும முளது
நாற்றமுடனே கைகள்கால் முடங்கள் நலமான
நாடிவரும் நோய்கள்பல துளதும் போக
மாற்றுமான னுன்மதியு மயன்மூவர் துணையால்
மானிடர்நோய் போகுமிதுக்கு மலர்ந்து பாரே. 21

சிறுகொதியிலேயே எண்ணெய் பக்குவமானவுடன், இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இந் நாராயணத் தைலத்தால், பலவகைப்பட்ட வாயு நோய்கள், சூலை, சன்னிபாதம், சிலேத்தும நோய்கள், கைகால் முடங்கள் முதலான பல்வேறு நோய்கள் நீங்கும். இதனை உடல் முழுவதும் தேய்த்துக் குளிக்க மேற்கண்ட நோய்கள் தீரும்.

(வேறு)

★ 250. ஏம யக்கியஞ் சிவனாரா லயங்கள்
ஓங்கும் தரிசனம் குருபூசை சிவபூசை
மயேசுரர்க்கு மருவும் பூசை பலமுடித்து
ஓம்பூசை செய்யு முதலே உயருஞ்சித்தி வினாயகனே
நாம நாவில் நவின்றேத்தி நலக்கா பஞ்சாட் சரநீயே. 22

சிவன், குரு, மகேசுவரன் இவர்களை வேண்டி, பூசை செய்து, வினாயகனையும் வேண்டிப் பஞ்சாட்சர மந்திரத்தையும் ஓதி இம்மருந்தைக் கொடுக்க வேண்டும்.

இலகு விசமூட்டித் தைலம்
(வேறு)

251. எட்டிக் கொன்றை தழுதாழை இரவிய நொச்சி யழுஞ்சிகொற்றான்
திட்டி யான உகாய்துத்தி திடம தான மிளகரணை
முஷ்ட்டி யாயில் பட்டையுடன் முசியா துலர்த்தியோ ரொன்றுபலம்
அட்டியாக இருநாழி ஆன தண்ணீ ருடன் கூட்டே. 23

எட்டிக் கொட்டை, கொன்றை, தழுதாழை, நொச்சி, அழிஞ்சில், முடக்கொற்றான், உகாய், துத்தி, மிளகரணை, சிற்றாமுட்டி, ஆயில்பட்டை ஆகியவற்றின் விதைகள், இலைகள், பட்டைகள் முதலியவற்றை உலர்த்திக் கொண்டு, ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம் எடுத்துக் கொள்ள வேண்டும். இரண்டு நாழி தண்ணீர் விட்டு, ஒரு பாத்திரத்திலிட்டுக் கியாழமாக்கிக் கொள்க.

252. கூட்டுஞ் சாறு வகைகேளாய் கொடிய வீழி எருக்குமுதல்
நாட்டும் பெரிய தழுதாழை நன்றாம் நொச்சி வெதுப்[illegible]க்கி
தேட்டும் பூனைக் காலியுடன் திடமா முருக்குத் தூ[illegible]ா
வாட்டும் ம்டிக்கழல் கொடியிலையும் பன்னும் வே[illegible]
[illegible]த்தியிலை. 24

வீழி, எருக்கு, தழுதாழை, நொச்சி, வெதுப்பட[illegible], பூனைக்காலி, முருக்கு, தூதுவளை, கழற்சிக்கொடியிலை, வேலிப்பருத்தியிலை,

253. இலையே கூட்டா முடக்கொற்றா னிலையே ஓரொன்று இலைச்சாறு
நிலையே யாக இருநாழி நெய்க்கூட் டியகசா யத்தில்
மலையக் காய்ச்சி கற்கமதை வகையாம் படியே யறிவீரே
துலையா திதுவுங் கூட்டுதற்குத் துணிந்தே யெண்ணெய்
யளவுகூட்டே. 25

முடக்கொற்றான் இலை ஆகிய இலைகளின் சாறுகளை வகைக்கு ஒரு பலம் எடுத்துக் கொண்டு, இருநாழி பசுநெய் கூட்டி அக்கியாழத்துடன் சேர்த்துக் கொள்ளவும். இக்கற்கத்தோடு எண்ணெயும் சேர்க்க வேண்டும்.

254. ஆனதோ ரெண்ணெய் நாழிக் களவதாங் கற்கந் தன்னை
வானதாம் வகையோ ரொன்று வகைக்கிரு பலமாய்க் கொண்டு
போனதோர் பசுவின் பாலின் பொருந்தவே யரைத்து நீயுந்
தானமாய்க் கலந்து கூட்டிச் சாலினில் கலக்கி வையே, 26

எண்ணெய் ஒரு நாழி அளவிலும், கற்க வகைக்கு இரண்டு பலம் என்ற அளவிலும் கூட்டிப் பசுவின் பாலில் அரைத்துக் கொண்டு கலந்து, பெரியதொரு பாத்திரத்தில் வைக்க வேண்டும்.

255. வைத்த சாதத்தைக் குறுணியதாய் வளமாய்க் காய்ச்சிப் புகமுடனே
பொய்த்த கோவின் நெய்யுடனே புதிய தெங்கின் எண்ணெயுடன் கூட்ட
தைத்த யெண்ணெய் புங்கிலுப்பைத் தனிவேப் பெண்ணெய்
யெள்ளெண்ணெய்
மொத்த கடுகி லெண்ணெய்முதல் முடியா மணக்கி னெண்ணெய்
முதல். 27

சோற்றுக் கற்றாழைச் சோறு ஒரு குறுணி எடுத்து, சாறு எடுத்துக் காய்ச்ச வேண்டும். அவ்வாறு காய்ச்சும்போது, அதனுடன் பசுநெய், புதிய தேங்காயெண்ணெய், புங்கெண்ணெய், இலுப்பை எண்ணெய், வேப்பெண்ணெய், நல்லெண்ணெய், கடுகெண்ணெய், ஆமணக்கு எண்ணெய்,

★ 256. கடிதா யெண்ணெய் தனிச்சேர்த்துக் கொள்ள காய்ச்சும் கசாயமதில்
வடிதாய் காய்ச்சிப் பதம்தன்னில் வடித்தே யெடுத்துப் பணவெடையாய்
குடித்தால் நாற்பது நாள்தனில் குணமா மதுநோய் வகைகேளாய்
எடிதாய் வாதம் எண்பதுடன் எண்ணு மநேக நோயனைத்தும்
கடிதாய்ப் பூசப் புகைகாட்ட உண்ணப் போகும்
பொற்கொடியே. 28

ஆகிய எண்ணெய்களை ஒவ்வொரு நாழி எடுத்துக் கொண்டு, கியாழம், கற்கம், சோற்றுக் கற்றாழைச்சாறு ஆகியவற்றுடன் ஒன்றாகக் கலந்து அடுப்பிலேற்றிக் காய்ச்சி எண்ணெய் முதிரும் பருவத்தில் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். இதனைப் பணவெடை அளவு நாற்பது நாள் உண்ண, வாதநோய்கள் எண்பதும் தீரும். மேலும், இத்தைலத்தை உடம்பில் பூசிப் பிடித்துவிட்டாலும் புகையாகக் காட்டி மூக்கில் நுகர்ந்தாலும் அல்லது இவற்றோடு அருந்தினாலும் பல்வகைப்பட்ட நோய்கள் தீரும்.

(வாதத்திற்குத் தைலம்)

★ 257. ஆயில் பட்டை குறுணிக்குத் தூணித் தண்ணீ ரதுவார்த்து
ஏய்க்கு றுணியாய்க் காய்ச்சியிதில் நல்லெண்ணெய் இருநாழி....
பேய்ச்சிற்றா முட்டியுடன் பெரிய காயம் நன்னாரி
காய்க்கடுக் காய்வாய் விளங்க மத்தி திப்பிலி மாஞ்சிமர மஞ்சள் 29

ஆயில்பட்டைத் தூள் ஒரு குறுணி, தண்ணீர் ஒரு தூணி சேர்த்து, அடுப்பேற்றிக் காய்ச்சி ஒரு குறுணியாக வடித்து எடுக்க வேண்டும். அதில் நல்லெண்ணெய் இரு நாழி, சிற்றாமுட்டி, பெருங்காயம், நன்னாரி, கடுக்காய், வாய்விளங்கம், கண்டந்திப்பிலி, சடாமாஞ்சில், மரமஞ்சள்,

258. மஞ்சார் குழலீ அதிமதுர மணக்குஞ் சந்து சீரகமும்
எஞ்சா ரேலம் தேவதார மிவைதற கமனகொண் டிடித்தெடுத்து
பஞ்சா ரத்தையிதில் பாதி பத்ததி லிடித்துத் தூள்செய்து
விஞ்சா தெண்ணெய் வடித்திட்டு மெய்யில் பூச வாதம்போம் 30

அதிமதுரம், சந்தனம், சீரகம், ஏலம், தேவதாரம் இவற்றைச் சூரணமாக்கி, மேற்படி எண்ணெய் மற்றும் கியாழம் ஆகியவற்றைக் கலந்து கொதிக்க வைக்கும் நிலையில் மேற்படிச் சூரணத்தைத் தூவி, முதிர்பதம் வந்ததும் இறக்கிவைத்து வடித்துக் கொள்ள வேண்டும். இதனை உடல் முழுவதும் தேய்த்துவிட, வாதநோய்கள் தீரும்.

இலகு விசமுட்டித் தைலம் (வேறு)

259. எட்டியின் சாறு நாலு எலுமிச்சங் குறுணி காடி
முட்டவே யெட்டு நாழி முதிர்ந்தகாஞ் சிரையின் கொட்டை
கொட்டிய பொடியும் நாழிக் குறுணியா மணக்கி னெண்ணெய்
மட்டாய் யெள்ளி லெண்ணைய் வடித்திட வாதம் போமே. 31

எட்டிப்பழச் சாறு ஒரு நாழி, எலுமிச்சம்பழச்சாறு ஒரு குறுணி, காடி நீர் எட்டு நாழி, காஞ்சிரையின் கொட்டைப் பொடி ஒரு நாழி,

விளக்கெண்ணெய் ஒரு குறுணி, நல்லெண்ணெய் ஒரு குறுணி, இச்சரக்குகளை ஒன்றாக்கி காய்ச்சி இறக்கி ஆறவைத்துக் கொண்டு வடிகட்டிக் கொள்க. உடம்பில் இவ்வெண்ணெய் பூசிட, வாதநோய்கள் எண்பதும் தீரும்.

மகா அசுனாதித் தைலம்

★ 260. இனிதான வெள்ளுள்ளி இருபத்து நாலுபல
மின்பமா யறிந்ததனில் பதக்கு நீர்விட்டுத்
தனிவாக வேகாஞ்சு நானாழி ஞாமதை
யானபின் கற்கமதை சொல்லக் கேளாய்
முனிவான போராமல்லி சிறுவழுதி யிலைமுன்னை
முதல்கண்டங் காலியுடன் பாதிரி தானும். 32

வெள்ளுள்ளி இருபத்துநான்கு பலம் எடுத்து இடித்துப் பதக்குத் தண்ணீர் விட்டுக் காய்ச்சி நான்கு நாழியாகச் சுருக்கி வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். பேராமல்லி வேர், சிறுவழுதலை வேர், முன்னை, கண்டங்கத்திரி வேர், பாதிரி வேர்,

261. செப்புநெ ருஞ்சி பெருங்குமிழும் சிவதை சேவுகன் முக்குராவும்
உப்பு நாவல் வாளுகாய் உகந்த வசம்பு கடுக்காயும்
ஒப்பு மேரண்டம் வேருடன் உகந்தே யிவைரண் டரைப்பலமாச்
செப்ப மாகப் பதக்குநீர் சேரக் காய்ச்சி நாலொன்றாக்கே. 33

நெருஞ்சி, பெருங்குமிழ் வேர், சிவதை, அமுக்குராக் கிழங்கு, நாவல்பட்டை, வாலுளுவை, வசம்பு, கடுக்காய், ஆமணக்கின் வேர், இவற்றை வகைக்கு இரண்டரைப் பலமாக எடுத்துக் கொண்டு பதக்கு நீர் விட்டு, கற்கமாக அரைத்துப் பதக்கு நீர் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி ஒரு மரக்கால் அளவாகச் சுருக்கிக் கொள்ளவும்.

262. முன்னே கூட்டுங் கசாயத்தில் முனிவர் சேர்த்து மாமணக்கி
என்னே யெண்ணெய் நாழியுரி இனித மாவின் பால்நாழி
பொன்னே கள்ளிப்பால் புகட்டிப் போற்றுங் கசாயத் தேசேர்த்து
வன்னே யான திரிகடுகு வாய்த்த காயம் திப்பிலியே. 34

முன்னே சொன்ன இரண்டு கியாழங்களுடன் ஆமணக்கு எண்ணெய் ஒருநாழி, ஆவின்பால் ஒரு உரி, கள்ளிப்பால் ஒரு நாழி ஆகியவற்றை எடுத்துக் கொண்டு ஏற்கனவே உள்ள கியாழத்தில் சேர்த்து, திரிகடுகு, பெருங்காயம், திப்பிலி,

263. கோட்டம் வசம்பு சிறுமூலங் கொடிய கழலுஞ் சதகுப்பை
வாட்ட மில்லா ரேணுகமும் கிளவா மிந்து வரசீகை
தோட்ட மான திப்பிலியும் இருசீ ரகமுங் கொடிவேலி
நாட்ட மான தேவதாரம் நாடிச் சமனாய்க் கொண்டிடும். 35

கோட்டம், வசம்பு, சிறுமூலம் எனும் சிற்றாமுட்டிவேர், சதகுப்பை, ரேணுகம் என்னும் காட்டு மிளகு, திப்பிலி, இருசீரகம், கொடிவேலிவேர், தேவதாரம் ஆகியவற்றைச் சமமான அளவு எடுத்துக் கொள்ள வேண்டும்.

★ 264. எண்ணெய் நாழிக் கிருபலமாய் ஏற்ற பதத்தில் வடித்திட்டு
திண்ண மாக நக்கு வீராய் தீரும் வாத குணமுடன்
வண்ண மான குடல்வாதம் வகைசேர் பீலிகை சேத்துமமும்
எண்ணமில்லா உதிர மதுயெல்லாம் நடுங்கி யேகிடுமே.... 36

நாழி எண்ணெய்க்கு இருபலம் என்கிற விகிதத்தில் மேற்படிச் சரக்குகளை கூட்டிக் காய்ச்சி முதிர் பருவம் வந்ததும் இறக்கி வைத்துக் கொள்க. இதனை உட்கொள்ள வாதநோய்கள், குடல்வாதம், மண்ணீரல் நோய், சிலேத்தும நோய்கள், உதிரச் சர்க்கரை ஆகியன தீரும்.

(வாதத்திற்குத் தைலம்)

(வேறு)

265. ஆயில்குழ லாதண்டை வக்க ணாத்தியு
மந்திடு வெட்பாலை நொச்சில்சித்திர மூலி
யேயசிற்றா முட்டிபேரா முட்டிமிள கரணை
இசைந்தவாள் முள்ளி கோசிகை மூவையுங்கொல்
தூய கவலைச் சாரணையும் முதிய முருங்கை
சுகமாக நரிப்பயிற்றம் வேரெருக்கு கள்ளியு
மாய்மணத் தக்காளி அவுரியமுக்கிராவும் வகைஒவ்வோர்
வகைகள் பத்துபலம் நிறைகொள் மாதே. 37

ஆயில்பட்டை, ஆதண்டை, வக்கணாத்தி, வெட்பாளை, நொச்சி, சித்திர மூலம், சிற்றாமுட்டி, பேராமுட்டி, மிளகரணை, வாலுளுவை, கோசிகை (மல்லிகை), மூக்கிரட்டை, முருங்கை, நரிப்பயறு, எருக்கு, கள்ளி, மணத்தக்காளி, அவுரி, அமுக்கிரா ஆகிய வேர்கள் வகைக்குப் பத்துப்பலம் எடுத்து நிறுத்திக் கொள்க.

★ 266. மாதேகேள் கலனே தூணித் தண்ணீ ரதுவார்த்து
மட்டாகத் தூணியது காய்ந்து வற்றிவடித்து
ஏதமுடனே யெள்ளெண்ணெய் பதத்தினில் விட்டுக் கலந்து
சிற்றரத்தை சீரகம் வாய்விளங்கமுடன் இவைகொள்
பேதமாகப் பெருங்காயம் குந்திருக்க ரேணுகமும்
பிறவங்கத் திப்பிலிச் சிறகாக கொளிபின்னு
மேதையு மத்தித் திப்பிலி மூல
மேலஞ் செவ்வியங்கொள் மிக்க கரும்பு லவங்கப் பட்டையும்
பத்திரியே. 38

ஒரு தூணி நீரில் (ஆறுபடி நீர்) மேற்கண்ட சரக்குகளைக் கலந்து, ஒன்றுக்குப் பாதியாகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்க. இதில் நல்லெண்ணெய் ஒரு பதக்குக் கலந்து சிற்றரத்தை, சீரகம், வாய்விளங்கம், பெருங்காயம், குங்கிலியம், ரேணுகம், திப்பிலி, ஏலம், செவ்வியம், கருவாப்பட்டை, இலவங்கப்பட்டை, இலவங்க பத்திரி,

267. பத்திரமாம் பேரீச்சம் பழங்கிரந் திகத்தைகாம்
பாங்குடைய நாகேசுரத் துடன்மான மத்தமும்
சித்திரதே வதாரம் மஞ்சள் சடாமாஞ்சில்
செங்கழுநீர்க் கோட்டம் நெல்லிக்காய் கடுக்காய் திறமாய்

குத்திரந்திந் திடுதான்றி கடுகுரோ கணியுங்
கூட்டியொரு பலநிரைகொள் கோதற வேயிடித்து
வஸ்த்திர காயம்பொடி செய்துதிலம் அதிற்கலந்து
வடித்திடல் பூசுஎண்பது வாதத்துயர் மாறிடுமே. 39

பேரீச்சம்பழம், கிரந்திகம், நாகேசுரம், மானமத்தம், தேவதாரம், மஞ்சள், சடாமாஞ்சில், செங்கழுநீர், கோட்டம், நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய், கடுகுரோகணி ஆகியவற்றைக் கூட்டி ஒருபலம் அளவாகும் வகையில் நன்றாக இடித்து வஸ்த்திர காயத்தைப் பொடி செய்து அதனோடு கலந்து வடித்துப் பூசினால் எண்பது வாதநோய்களாலும் வரக்கூடிய துன்பம் நீங்கும்.

எட்டி எண்ணெய்
(வேறு)

268. சேவுகண் பூடுபலம் நூறு திருந்து முக்குறுணி நீரதில்விட்டு
மேவும் பெரிய வாகையுடன் மிகவே முன்னை சிறுமல்லி
ஏவுங் குமிழுடன் கண்டங் காலியென்ற குவளைப் பாதிரியும்
நாவு நெருஞ்சில் சிறுவழுதிலை நன்றாய்க் கூட்டி கசாயமிடே. 40

பூண்டினை நூறுபலம் எடுத்து அதில் முக்குறுணி அளவு நீர் ஊற்றி பெரிய வாகையுடன் முன்னைவேர், சிறுமல்லியினையும் கண்டங்காலி என்று கூறப்படும் குவளைப் பாதிரி, நெருஞ்சில், சிறுவழுதிலை ஆகியவற்றையும் சேர்த்துக் கசாயமிட வேண்டும்.

269. இவைதான் முன்போல் கசாயமிட்டு ஏற்கக் கசாயத்துடன் சேர்த்து
நவயெள் ளெண்ணெய் நானாழி நானா வின்பால் முக்குறுணி
யவையே சேரக் கசாயத்தி லனுவாய்ச் சேர்க்குங் கற்கங்கேள்.
இவையே யான மஞ்சட்டி மினிதாந் தேவ தாரமிதே. 41

ஆகிய சரக்குகளை முன்போல் மீண்டும் கூட்டிக் கியாழம் காய்ச்சுக. புதிய நல்லெண்ணெய் நான்கு நாழி, ஆவின் பால் முக்குறுணி ஆகியவற்றைக் கியாழத்தில் சேர்த்து, மேலும் இதில் சேர்க்கும் கற்கமாக மஞ்சட்டி, தேவதாரம்,

270. மருவிய கோட்டம் நறும்பிசினும் மாதே சீரகங் காக்கோளி
உருவிய சந்தன மிடவகமும் உண்மைய தாகிய தகரமுமே
சருவிய சீவக மெட்டியுடன் தானே யாகுஞ் சதாவேரி
தருமிக வாகும் வசம்பினுடன் தானா மேல மெலுமிச்சமுமே, 42

கோட்டம், நறும்பிசின், சீரகம், கார்கோளி, சந்தனம், இடவகம், தகரை, சீவகம், எட்டி, சதாவேரி, வசம்பு, ஏலம், எலுமிச்சை.

★ 271. மருளக் கிழங்கும் பச்சிலையும் மானே லவங்கம் செவ்வியமும்
கருக்குங் கண்டில் வெண்ணையுடன் காந்தி யான மரமஞ்சள்
சிரும்படி யேசிறு மூலஞ்சேர் கச்சோலம் வெட்பாலை....
மறுக்கு மேதி மகாமேதி மண்ணுங் கடுகு ரோகணியே. 43

மருள்கிழங்கு, பச்சிலை, இலவங்கம், செவ்வியம், கண்டில் வெண்ணெய், மரமஞ்சள், சிற்றாமுட்டி, கச்சோலம், வெட்பாலை, மேதி (எருக்கு), மகாமேதி (வெள்ளெருக்கு), கடுகுரோகணி,

272. இருநாழி யெண்ணெய்க்கு யிம்மருந்தோர் முக்கழஞ்சு
தருவாகத் தான்காய்ச்சித் தனிப்பதத்தில் வடித்திடுக
மருவாகக் கழஞ்சுகொள்ள மாதேநீ தலைவார்த்து
உருவாகத் துவலையிட ஓடுஎண் பதுவாதம். 44

மேற்கண்ட, சரக்குகள் ஒவ்வொன்றும் முக்கழஞ்சு எடுத்து இடித்துக் கற்கமாக்கி மூன்று நாழி எண்ணெய் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி முதிர்பதம் கண்டு இறக்கி ஆறவைத்துக் கொள்க. இதனை உட்கொள்ள அல்லது தலையிலிட அல்லது துவாலையிட எண்பது வாதங்களும் நீங்கும்.

ஆறாத புண்ணுக்கெண்ணெய்

273. இரதங் கந்தக மரிதாரம் இதமாந் துத்தம் சாதிலிங்கம்
விரத மான துருசுடனே வேண்டிக் கூட்டீர் படிகாரம்
புரத மாகவே யோரொன்று போற்று மதற்கே நாற்கழஞ்சாய்
உரத மாகவே பொடிசெய்து ஏறாஞ் சீலையில் பரப்பிடுமே. 45

இரசம், கந்தகம், அரிதாரம், துத்தம் (பால்துத்தம்), சாதிலிங்கம், துருசு இவை ஒவ்வொன்றும் வகைக்கு ஒரு கழஞ்சு, படிகாரம் நான்கு கழஞ்சு எடுத்துப் பொடி செய்து கொண்டு சீலையில் பரப்புக.

274. பரபரத் திரியாய் திரிதிரித்துப் பாங்காய் கள்ளிப் பாலதனில்
உரப்பி யெழுதி ரந்தோய்த்து உயர்கோ மூத்தி ரமதனில்
விரப்பி யெழுதி ரந்தோய்த்து வேண்டுங் காடியி லேழுதரம்
நிரப்பி யாவின் பாலத னில் நிசமா யேழுதிரந் தோயே. 46

அவ்வாறு பரப்பிய அத்துணியைத் திரியாகத் திரித்துக் கள்ளிப் பாலில் ஏழுதரம் தோய்த்து எடுத்துப் பிறகு, பசுமூத்திரத்தில் ஏழுதரம் தோய்க்க வேண்டும். பின்னர் அவ்வாறே காடியில் ஏழுதரமும், ஆவின் பாலில் ஏழுதரமும் தோய்த்தெடுக்க வேண்டும்.

275. ஏழு விடுத்தம் இவைதானும் இதமாய்த் தோய்த்துக் கலந்தபின்பு
நாளும் நன்றாய் வேப்பெண்ணெய் நாடி வெய்யில் தான்தோய்த்து
கேளு பாத்திரக் கீழிட்டு கேளீ ரந்தச் சுடரெண்ணெய்
வாழும் படியே மிகவெடுத்து வைத்தே புண்ணில் தான்போடே. 47

இவ்வாறு தோய்த்தெடுத்தபின், வேப்பெண்ணெயில் மூழ்குமாறு வைத்து வெய்யிலில் ஒருநாள் முழுதும் வைத்து எடுத்துப் பின் வேப்பெண்ணெயில் இட்டு எரியச் செய்து கீழே ஓர் பாத்திரம் வைத்து, சுடரெண்ணெயாகத் திரட்டிக் கொள்க. இவ்வெண்ணெயைப் புண்களுக்கு இடுக.

276. போட்டால் தீரும் விரணங்கள் பொல்லாச் சேட்டை யெனும்விரண
நாட்டம் பெரிய அரையாப்பு நன்றா முலைப்புற் றெனும்நோயும்
தொட்டால் போகு மென்றேதான் சொன்னார் வேத வியாசரன்றே
பட்டாளப் புலவர் தாமுரைத்தார் பண்பாம். விரண மத்தனைக்கே. 48

புண்கள் தீரும். தீராத சேட்டை விரணங்கள், அரையாப்பு, முலைப்புற்றுப்புண் ஆகியன தீரும் என்று அன்றே வேதவியாசர் சொன்ன கருத்தைப் பட்டாளப்புலவர் உரைத்தார்.

(புண் தைலம்)

277. தேவதாளிக் கூட்டும் விற்றும் திருந்தயெண் கழஞ்சு கொண்டு
மீவதான்றி முக்கழஞ்சு வெளிச்சைப் பிசினைங் கழஞ்சிவைதான்
பாலி லிட்டரை
ஆவ தெண்ணெய் நாழியுரி அரைத்தெடுத்து வடித்துப் பூச
பாவ விப்பிரி முதலான விரணந் தீரும் நிச்சயமே. 49

தேவதாளிக் கட்டை, எட்டுக் கழஞ்சு, தான்றிக்காய் மூன்று கழஞ்சு, வெளிச்சைப் பிசின் ஐந்து கழஞ்சு இவற்றை வேண்டிய அளவு பசும்பால் விட்டு அரைத்துப் பின் எண்ணெய் நாற்பத்திரண்டு உரி விட்டு அரைத்து வடித்துப் பூச விப்புருதி முதலான புண்கள் தீரும்.

(புரைகழலைக்குக் கள்ளி எண்ணெய்)

278. துற்றகள்ளி வேர்ப்பட்டை நுணாப்பட்டையும்
துலங்கு நன்னாரி புளியரணை யோடு
உற்றவெள்வேல் கொழுந்து சாரணை சிறுகிளா
உகந்தவெற் றிலைக்காம்புச் சாறுகளிப் பாக்கு
சுத்தவெட் பாலை கடுக்காய் மிளகும்
துரிசுமான குங்கிலியங் காசுக் கட்டி
இத்தயெரி யெண்ணெயில் வடித்துக் கழஞ்சுகொள்ள
இதத்துடனே பூசப் புரைகழலைப் புண்கள். 50

சதுரக்கள்ளி வேர்ப்பட்டை, நுணாப்பட்டை, நன்னாரி, புளியரணை வேர் இவற்றைத் தூளாக்கிக் கொள்க. வெள்வேலங்கொழுந்து, சாரணை, சிறுகளா இலை, வெற்றிலைக் காம்பு இவற்றின் சாறுகள், களிப்பாக்கு, வெட்பாலைஅரிசி, கடுக்காய், மிளகு, துருசு, குங்கிலியம், காசுக்கட்டி இவற்றையும் இடித்து, எடுத்துக் கொண்டு, தேவையான அளவு நல்லெண்ணெய் சேர்த்து முறையாகக் காய்ச்சி ஆறவைத்து வடித்து வைத்துக் கொள்க. இதனைக் கழஞ்சளவு உட்கொள்ளவும், மேலே பூசவும். புரை, கழலைப் புண்கள் தீரும்.

மகா பிரசாரணைத் தைலம்
(வேறு)

279. சீராய் வடிக்குஞ் சேதியைச் சொல்வன்
ஏராற் சிற்றா மல்லி யின்வேர்
எழிலார் பேரா மல்லி யின்வேர்
வீர முன்னைப் பாதிரியும்
விளங்குங் குமுமுங் கூவிளையும்
காரா நெருஞ்சி சிற்றா முட்டி
கண்டங் காலி வழுத லைவேர்
பேராம் பேரா முட்டி யின்வேர்
பெருகி நரைத்த நீர்முள்ளி
ஊரு முருங்கை புன்மு ருங்கை
உலகம் உகந்த முகரசத்தை
கூறார் கொன்றை வீழியின்வேர்

கோலவண்ணக் குறிஞ்சியின்...
வெயிரார் ஆடா தோடை யின்வேர்
பகரு முசுட்டை யுடனெ ரிஞ்சில்
தேரார் திலங்குந் தழுதாழை
தொற்று மிகுந்த வானாகாய்
பேறாங் கஞ்சாங் கோரையுடன்
பெருகு முத்தா மணிய ழிஞ்சில்
ஓரா துகந்த வெட்பாலை
ஏத்தத் தூது வளையின் வேர்...
வேரார் செலுத்தி யவுரி யின்வேர்
விளங்கு செங்க ரளியின் வேர்
நாரா குழலா தண்டையின் வேர்...
நல்ல புங்கு ஆயில் மருது
தூறாய் பட்டைச் செவ்வள்ளி
துலங்குங் கொடியைங் கொல்வித்து
ஏறாம் புங்கம் வித்துடனே
ஓரொன் றொருபல மாய்க்கொண்டு
நீர்தான் பலத்துக் கிருநாழி
நிறைய வார்த்துப் போலெரித்து
நேராம் நீர்நா லொன்றாக்கி
நெடிதாய் நாழி யெண்ணெய் கூட்டே
கூட விளங்குங் கொள்ளிரு நாழி
நாடி தன்னில் கலந்துமுன் னாழி
மூடிக் காய்ச்சி மூன்றொன் றாக்கி
தேடிய கசாய மஞ்சேரக் கூட்டி
முதியார் கூந்தல் முன்புக வெண்ணெய்
அதிலொரு நாழிக் கிருபல மாகப்
பார்த்து நறுக்கிப் பதினைந் துபலம்
வார்க்குந் தண்ணீர் மூன்று மரக்கால்
ஏற்கக் காய்ச்சி யெட்டொன் றாக்கி
மூலக் கசாயம் முகந்துடன் கூட்டி
மேல்மருந் தாக வெள்ளாட் டிறைச்சி
சால வொருபலந் தனக்குத் தண்ணீர்
ஏற்பல ஒன்றுக் கிருநாழி வார்த்து
மூன்றொன் றாக்கி முற்க சாயத்துடன்
அரேனு மசயிலோகு மான கட்டி
பகாரில் விழாப்பண் ணதிவிடையம்
அதிமது ரத்துடன் ஆன குங்குமம்
கதிபெற வேண்டும் கச்சோலம் பச்சிலை
நிதமுறு சிற்றேலஞ் சிறந்தபே ரேலம்
தகைபெறு தேவ தாரம் தக்கோலம்
அரவ மாஞ்சில் அத்தி திப்பிலி
உரமாம் வீழ லுகந்தவெட் பாலை
சாலி லவங்கம் சறலத் தோடுதின்பு
கொல்காற் றொளிகொடு **சீதகார்க்கோளிச் சீவி**

மீள்வர் கபதிரள் மேதை யிந்துப்பு
குக்குலம் நறும்பிசின் கொள்ளும் பச்சிலை
கண்டில் வெண்ணெய் கடுகுரோ கணியும்
மண்டசில் ஏல மரமஞ்சள் தான்றி
காடிறக் கடுக்காய் தன்னுடன் மிளகு
சுக்கு மஞ்சள் தூய நன்னாரி
மிக்க வசம்பு விளங்கு நன்னாரி
தக்க ஆரணைச் சந்திர மூலி
அசுவ கெந்தி விலா மிச்சம்
விசுவமே தண்ணீர் மீட்டான் கிழங்கு
இரளக் கிழங்கு இவைமுத்தக் காசு
நறுக்கி யரத்தை நாவிச் சட்டம்
கஸ்தூரி கற்பூரம் பெற்றது கூட்டி
எள்ளெண்ணெய் நாழிக் கிருநாழி முன்னாழி
வெள்ளாட்டுப் பால் மேம்படக் கூட்டி
அஞ்சு நாளாக ஆறவெந் தெண்ணெய்
பஞ்சாங் கத்துடன் பஞ்சாக் கினியும்
விஞ்சிய திருவெட்டாச் சரமும்
ஏமப்ப உச்சரித்து அந்த மாகிய
ஆதித்த வாரத்து விந்தை பெறவே
வேதம் உரைப்ப பதத்துடன் வடித்துக்
குறுணிக் கேற்ற கோலச் சாந்திரு
கழஞ்சு சேர்த்தபின் சிறந்தநாள் பொருந்தும்
அருந்தும் போது வரும்துயர் தீர
மதகரி முகவனை வாழ்த்தி முன்வணங்கி
நாடிமுக் கழஞ்சு யெண்ணெயும் நக்கி
கூடிய வெண்ணெய் குளிரப் பூசி
வாசி கான பத்தியு மரடித்து
இப்படிச் செய்தால் இருநிலந் தன்னில்
மைப்படி குழலாய் மாறும் வியாதிகேள்
சந்து வாதம் சருவாங்க வாதம்
இந்த வுடம்பி லித்த சுரோணிதம்
முன்னம் போந்து மூத்தக வாகும்
சொன்ன பிடரியில் சகுரிய வாதம்
நன்னெறி யில்லா நரித்தலை வாதம்
ஊமை வாதம் ஒருதலை நோக்காடு
ஆமை போலே அகந்திர வாதம்
நடுக்கு வாதம் குடைச்சல் சன்னி
ஒடுக்க வந்த வுப்பியில் வாதம்
கழுத்துப் புரியில் கண்டச் சாலுகள்
விழுக்கிய வாதம் மெச்சிர சூலை
யோனி சூலை யுள்ளடி வாதம்
மேனி கிரந்தி மிகுகண்ட மாலை
மூத்திரக் கிரிச்சல் முகவாத சூலை
மேல்திகழ் கபம் விக்கல் சத்தி

சுக்கில வாதமந் துயரது மிகுந்து
ஆக்கிரமஞ் செய்யுமதி சாரத்துடன்
சந்து வாதம் தமரக வாதம்
சுந்தர மளிக்குஞ் சோம ரோகம்
கந்தன் பதத்தைக் கருது வார்வினை
சிந்திடும் போலச் சிதறி யோடிடுமே. 51

சிற்றாமல்லி வேர், பேராமல்லி வேர், முன்னை வேர், பாதிரி வேர், குமிழ்வேர், கூவிளம், நெருஞ்சில் வேர், சிற்றாமுட்டி வேர், பேராமுட்டி வேர், கண்டங்காலி, வழுதலை வேர், நீர்முள்ளி, முருங்கவேர், புனல் முருங்கை வேர், அரத்தை, கொன்றைவேர், வீழிவேர், குறிஞ்சிவேர், தழுதாழை வேர், வானாகாய், கஞ்சாங்கோரை வேர், முத்தக்காசு, அழிஞ்சில் வேர், வெட்பாலைவேர், தூதுவளை வேர், அவுரி வேர், செவ்வரளி வேர், ஆதண்டை வேர், புங்கம்வேர், ஆயில், மருதவேர், துராயப் பட்டை, செவ்வள்ளிக் கொடி, உத்திராட்சம், புங்கம் வித்து ஆகியவற்றை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலமாக எடுத்துக்கொண்டு ஒரு பலத்திற்கு இரண்டு நாழி என்ற கணக்கில் நீர் சேர்த்து ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு காய்ச்சி நாலில் ஒன்றாகக் குறுக்கி வடிகட்டி கியாழத்தை ஒரு நாழி நல்லெண்ணெய் சேர்த்துக் கொள்ளவேண்டும். இருநாழி கலந்து மூன்று நாழி நேரம் காய்ச்சி மூன்றில் ஒன்றாகக் குறுக்கி கசாயம் அஞ்சேரம் கூட்டி முதியார் கூந்தல் முன்புக வெண்ணெய் ஒருநாழி சேர்த்து இருபலம் 5 பலம், தண்ணீர் மூன்று மரக்கால் விட்டுக் காய்ச்சி அதை எட்டில் ஒன்றாக்கி இதனுடன் முதலில் செய்த கியாழத்தையும் கூட்டி மேல் மருந்தாக வெள்ளாட்டு இறைச்சி ஒரு பலத்திற்கு இரு நாழி தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி மூன்றில் ஒன்றாகக் குறுக்கி வடிகட்டி முதற் கியாழத்துடன் சேர்த்து அரேனுஜம் மசியலோடு, மஞ்சட்டி, அதிவிடயம் அதிமதுரம், கச்சோலம், பச்சிலை, சிற்றேலம், பேரேலம், தேவதாரம், தக்கோலம், சடாமாஞ்சில், அத்தி, திப்பிலி, வெட்பாலை அரிசி, இலவங்கம், சரள தேவதாரு, கார்கோளி, சீதக்காற்கோளி, இந்துப்பு, குங்கிலியம், பச்சிலை, கண்டில் வெண்ணெய், கடுகுரோகணி, சிற்றேலம், மரமஞ்சள், தான்றி, கடுக்காய், மிளகு, சுக்கு, மஞ்சள், நன்னாரி, வசம்பு, மலை நன்னாரி, சாற்றரணை, சித்திர மூலி, அசுவகெந்தி, விலாமிச்சம் வேர், தண்ணீர்விட்டான் கிழங்கு, இரளக் கிழங்கு இவற்றைப் பொடிப் பொடியாக நறுக்கித் தூள் செய்து மேற்படிக் கியாழத்தில் சேர்க்கவும்.

அரத்தை, நாபி, சட்டம், கஸ்தூரி, கற்பூரம் இவற்றை நன்கு பொடி செய்து சேர்க்கவும். எள்ளெண்ணெய் இரண்டு நாழி, வெள்ளாட்டுப் பால், மூன்று நாழி சேர்த்து ஐந்து நாட்கள் கொதிக்க வைத்து பஞ்சாங்கச் சரக்குகள், பஞ்சாக்கினிச் சரக்குகள், எவா சாரம் இவை ஒவ்வொன்றும் இரண்டு கழஞ்சு சேர்த்து மேற்படி மருந்துச் சரக்குகளுடன் சேர்த்துக் கொதிக்க வைத்து முறைப்படி பதம் வந்ததும் வடித்து இறக்கிக் கொள்ளவும்.

விநாயகரைத் தொழுது மருந்து உட்கொள்ள வேண்டும். அளவு: முக்கழஞ்சு அருந்த வேண்டும். மேலும், உடல் முழுதும் தேய்த்துக் குளிக்கலாம்.

தீரும் நோய்கள்: சந்துவாதம், சருவாங்க வாதம், சுரோணித ரோகம், பிடரி ஆமைக்கட்டையைப் போல் வருகின்ற அகந்திர வாதம், நடுக்கு வாதம், குடைச்சல், சன்னி, சூலைநோய், யோனிச் சூலை, உள் அடிவாதம், கிரந்தி, கண்டமாலை, மூத்திரக் கிரிச்சலம், மூகவாதச் சூலை, கபம், விக்கல், வாந்தி, சுக்கிலவாதம், அதிசாரத்துடன் சந்துவாதம், தமரகவாதம், இதயவலி, சோமரோகம் ஆகிய நோய்கள் தீரும்.

கற்றாழை எண்ணெய்
அகவல்

280. முற்றா முலையாய் மொழிவன் கேளாய்
கற்றாழை யெண்ணெய்க் கணக்கெல்லா மொழிய
கருவேலந் தோலைக் கடுக விடித்து
மருவார் குழலி மடலைப் பிளந்து
பொருவா ரணையாய் நீர்போதக் கொள்ளிரு
வேலி கோட்ட மிலாமிச்சஞ் சந்தன மட்டு
கருகாமல் வெந்த கசாயந் தன்னில்
மேல்மருந் ததனைச் சொல்வன் கேளாய்
இருவேலி கோட்ட மிலாமிச்சஞ் சாதிக்காய்
மருவாத மாஞ்சில் மாசாளஞ் சதாவேரி
அதிகாஞ் சந்தன மான்சட்டம் சயிலேகம்
வேதிகதித்திடுங் கண்டில் வெண்ணெய துடனே
நீதிசேர் சாதிக் கழுநீ ருடனும்
சாதிதா மரையின் தனிக்கிழங் கதுவும்
கோதிலா நெய்தல் கொட்டி சிறுகீரை
பேதமில் லாத நன்னாரி யுடனே
திட்டமா யோரொன்று சிக்கெனத் தூக்கி
மட்டங் கழஞ்சாய் மாள வரைத்து
சேதப் படாமல் சேர்த்துநல் லெண்ணெய்
ஆதிப் பசுவின் பாலுட னடைவே
வெந்து வடித்த எண்ணெய்சாப் பிடவே
முந்தி வினாயகன் முதற்பூசை செய்து
சேர்பித்தஞ் செவிநோய் தலைநோய் கண்ணோய்
தூரப் போமென்று சொல்லினார் முனிவர்கள். 52

கருவேலம் பட்டையை நன்றாக இடித்துத் தூளாக்கிக் கற்றாழை மடலுக்குள் வைத்து இருவேலி (வெட்டிவேர்), கோட்டம், இலாமிச்சம், சந்தனம் ஆகியவற்றைச் சேர்த்துக் கருகா வண்ணம் சிறுதீயில் குடிநீர் காய்ச்ச வேண்டும். இதனோடு இருவேலி, கோட்டம், இலாமிச்சம், சடாமாஞ்சில் மாசாளம் (?), சதாவேரி, சந்தனம், கஸ்தூரி, சயிலேகம், கண்டில் வெண்ணெய், சாதிக்காய், கழுநீர், தாமரைக் கிழங்கு, நெய்தற் கிழங்கு, கொட்டிக் கிழங்கு, சிறுகீரை, நன்னாரி ஆகியவற்றைச் சமமாக ஒரு பங்கு எடுத்து ஒரு கழஞ்சு அளவாக அரைத்து மேல் மருந்தோடு சேர்த்து நல்லெண்ணெய், பசுவின் பால் ஆகியவற்றில் வேகவைத்து வெந்தபின் எடுக்கக் கற்றாழை எண்ணெய் ஆகும். தலைநோய், செவிநோய், கண்ணோய், பித்தம் ஆகியன நீங்கும்.

நவசர்ப கண்டத் தைலம்

281. மண்டலத்தில் மாந்தர் பிணிமாற்று நவசர்ப
கண்டத் தைலத்தைக் கருணையுடன் - தண்டமிழால்
வாகுண்ப தாகமிகு மாமுனிவன் முன்னூல்
ஆகமத்தி னோடுஉரைத்த தாதலால் - பாகுமொழி
மின்னே யிலுப்பையெண்ணெய் வேப்பெண்ணெய் புங்கெண்ணெய்
நன்னோர் குருந்தெண்ணெய் நல்லெண்ணெய் - சொன்னேன்
ஒவ்வோன்று நாநாழி ஒக்கக் கொளும்பெருந்தேன்
இவ்வகையொன் றிற்பாதி ஏற்கக்கொள் - செவ்வைபட
கூட்டு மதிலொன்று குறையாம லின்னமும்வெள்
ளாட்டுநெய் தானு யடவுடன்கொள் - நாட்டமுடன்
வெண்ணெய் வகையேழு மிருகுறுணி யேழுபடி
ஒண்ணுபடக் கொப்பரையி லூற்றிக்கொள் - வன்மையுடன்
எட்டிப் பழச்சாறு இருகுறுணி நாநாழி
மட்டுகட்டிக் கூட வார்த்துக்கொள் - துஷ்ட
கருவிசம் தானக் கருவளை ஐந்துங்
கொடுவிரியன் இரண்டொடு கொம்பேறி - படவாலம்
ஒன்று சுருட்டைப்பாம்பு ஒன்பது சாரைப்பாம்பு
ஒன்றுபெருஞ் செய்யரணி ரொன்பதுவாம் - சென்றதன்றி
நட்டுக் காலியொரு நாற்பதுவும் வெஞ்சினத்தில்
கொட்டுகின்ற தேளுமொரு கூறாகப் - பட்டையில்
நன்றாய்த் தரித்துவைத்து நலப்படுத்தி யேதிறமாய்
ஒன்றாக யெண்ணெய்தனி லொன்றுசெய்து - குன்றாத
ஆட்டுப்பால் நாநாழி யான திருகுகள்ளி
கூட்டுமிதன் பாலுமிந்தக் கூறாகக் - காட்டகத்தில்
பாச்சா னிருநாழிப் பாலெருக்கன் பாலதின்சீ
ராச்சிரச்சா நீரு மறுநாழிக் - கூச்சமறச்
சாராயம் நாநாழி தானுங் கொள்ளுச்
சாறாரும் நாநாழி தானுங்கொள் - நேராகச்
சாறுவகை விபரந் தன்னைக்கேள் - முத்திருக்கன்
சாற்றுட னூமத்தை தழுதாழை - நீற்றில்
எழுநெருப்பு. வகை யெருக்கு முடக்கொற்றான்
முழுநெருப்புப் பாச்சானு முற்கள்ளி - செழுமைபெற்ற
வேலிப் பருத்திகரு வேப்பிலையொவ் வொன்றில்ரசம்
கோளியொரு நாநாழி கூட்டிக்கொள் - வேல்விழியீர்
வெட்டு மருந்து விபரமது சொல்லக்கேள்
எட்டிவேர் எட்டிவிரை யின்னமுங்கேள் - முட்டக்
கொடுவேலி செங்கொட்டை கொங்குக் கருங்காலி
கடுவேளை வேம்புகண்டங் கத்திரியும் - படுபாகல்
ஊர்முருங்கை காட்டு முருங்கை உகாயுடனே
கார்குறிஞ்சி சூரைசிறு காஞ்சொரியும் - பேர்பெரிய
பாதாள மூலியும்வெட் பாலையுடன் மாவிலங்கை
சீதேவி கச்சல்தி ராயுடனே - ஈதலத்து

உள்ளி கடுகு வசம்பொக்க கொளுமிதெல்லாம்
வெள்ளிதன்னி லொவ்வொர்யெடை மேவிக்கொள் - மெள்ளத்
தரித்துத் துவைத்து மிடாதன்னிலிட்டுச் சாரித்
தொருத்துவிடா தேகலநீ றூற்றி - சிறுத்த
விறகிட் டழல்மூட்டி வெந்து பதக்காக
குறைவற்றப் பின்வடித்துக் கொள்ளுங்கா - னுறவுசெய்யும்
கொப்பரையி லெண்ணெயுடன் கூட்டியு மிக்காநாளிலே
லொப்புடனீ றாறுநா ளூறவைத்துச் - செப்பமுடன்
காட்டு மருந்து கடைச்சரக்கு மேல்பொடியாய்
கூட்டுவதுங் கார்கோளி குக்கிலுடன் - கோட்டம்
திரிகடுகு பேரரத்தை சித்தரத்தை சீகாரங்கேள்
மறுவரு மஞ்சளுடன் மரமஞ்சளுடன் - நிருவிசமாம்
நாவிசத குப்பைசிறு நாகப்பூ தக்கோலம்
மேவுபெரு நாகப்பூ வெந்தயமும் - சீவகமும்
மேதை மகாமேதை விரல்சந் தனங்காயம்
சூதமரி தாரமுடன் சொல்லக்கேள் - ஈதுடனே
கந்தகத்தி லிரண்டுங் கெவுரிமனோ சிலையும்
குந்தவகை யொவ்வொன் றியம்பக்கேள் - சுந்தரஞ்சேர்
மானே பதினெட்டு வராகனெடை கூட்டத்
தானே யினுஞ்சிறிது சாற்றக்கேள் - கானகத்தில்
வாய்புள்செங் கொட்டையும்நேர் வாளமுட நீரெட்டி
வேப்பம் விரைகஞ்சா விரையுடனே - கோப்பியமாய்
குந்த வகைகொன் றிரண்டு பலமாக
அந்தம்நிறை மேவுகுழ லாதண்டை - கந்தப் பொடி
போலப்பொடித் தெண்ணெயில் போட்டு கரண்டகத்தில்
சாலவடி பற்றாமல் தான்கிண்டிச் - சீலமுடன்
பன்னிரெண்டும் நாளும் பதினாறும் நாள்வடிக்க
வன்னியளவுக் களவாய் மாத்திகொள் நன்னியமாய்
வெந்து கடுகுபத மீறாம லேவடித்து
முந்திவி னாயகனார் முன்வைத்து - அந்தமுடன்
தவச புடந்தனிலே சாலவொரு நாற்பதுநாள்
அவசமுற வேயிருந்து ஆறியபின் - நவமியுடன்
அட்டமி யாறலுற்றிட நஞ்சவுத்தி மிக்க
கெட்ட தியாச்சியங்கள் கிட்டாமல் - நட்டப்
படுத்துமம் மாவாசை பாட்டிமையுங் கேட்டை
யடுத்த பவுர்ணமை யாகத் - தொடுத்துவிடா
நல்ல கிழமை நட்சத்திர யோகம்
சொல்லுமறை யோர்கள் சொல்லக்கேட்டு - வல்லமையாத்
தைலமொரு காசுதன்னை உள்ளே கொண்டு
மெய்யில் நிரம்பப் பூசிநன்றாய் வேதித்து - செயிலிதற்கு
வாதந் தனில்திமிர் வாதஞ் சருவாங்க
வாதமுடன் கைகால் வராததுவும் - மாதரீர்
பக்கக்குத் துள்குத்துப் பாரிச வாதமுடன்
மிக்க பிறவலிப்பு வேதனையும் - சிக்கெனவாம்

மண்டை வலியுமுக வாதமுடன் வாதசன்னி
கண்டகுச் சன்னிசிரக் கம்பமுடன் - அண்டியே
குத்திப் பிறக்குமிகு குண்டல வாய்வுடன்
பித்தச்சன்னி சித்த பிரமச்சன்னி - மெத்தனவாய்
நாவு குழறல் நடுக்கந் தடுமாற்றம்
மேவுதனுர் வாதமுடன் மெய்வலியும் - நாவுள்ளே
வாங்கி வசனம் வசனிக்க மாட்டாத
நாங்குவித வாதமுட னுள்வலிப்பும் - வீங்கிவரும்
வாத கரப்பான் மகாசன்னி வாதமுடன்
சீதளத்தி லேதுபிணி சேர்ந்திடினு - மீதினுக்கு
ஏற்குமப் படிக்கிரமத் தேயிருந்து செய்துகொள்
தீர்க்குமிது நல்லசிகு ட்சையென்று - காக்குன்றி
மாமுனிவன் முன்னூல் வழியென் றிருஷியர்க்கு
ஆமெனவே சொன்னதிது வாம். 53

இலுப்பை எண்ணெய், வேப்ப எண்ணெய், புங்கை எண்ணெய், குருந்தெண்ணெய், நல்லெண்ணெய் இவற்றில் ஒவ்வொன்றும் நாநாழி தேன் இரண்டு நாழி, வெள்ளாட்டு நெய் ஒரு நாழி இவை அனைத்தையும் கொப்பரையில் இட்டுக் கலந்து அதில் எட்டிப்பழச் சாறு, இருகுறுணி சேர்த்துக் கொள்ளவும்.

கருவளை ஐந்து, விரியன் பதினாறு, கொம்பேரி மூக்கன் ஒன்று, சுருட்டைப்பாம்பு ஒன்பது, சாரைப்பாம்பு ஒன்று, பெரும்செய்யான் ஒன்பது, அரணை ஒன்பது, நட்டுவாக்காலி நாற்பது, தேள் நாற்பது இவற்றினை சிறுசிறு துண்டுகளாக வெட்டி மேற்கண்ட எண்ணெயில் சேர்த்து ஆட்டுப்பால் நான்கு நாழி, திருகுகள்ளிப்பால் நான்கு நாழி கூட்டி எடுத்துக் கொள்ளவும்.

பாச்சான்பால் (கொடிக்கள்ளி), இருநாழி, எருக்கம்பால் இருநாழி, சாராயம் நான்கு நாழி, கொள்ளுக் கியாழம் நான்குநாழி இவற்றை மேற்கண்டதில் சேர்த்துக் கொள்ளவும்.

முத்திருக்கன் செவிச்சாறு, ஊமத்தைச் சாறு, தழுதாலைச் சாறு, எருக்கஞ்சாறு, முடக்கொற்றான் சாறு, முட்கள்ளிச் சாறு, வேலிப் பருத்தியிலைச் சாறு, கருவேப்பிலைச் சாறு இவற்றில் ஒவ்வொன்றிலும் நாநாழி கூட்டிக் கொள்ளவும்.

எட்டிவேர், எட்டிவிதை, கொடிவேலி, சேங்கொட்டை, கோங்கு, கருங்காலி, கடுவேளை (நாய்வேளை), வேம்பு, கண்டங்கத்திரி, பலுபாகல் ஆகியவற்றின் வேரும், முருங்கை, காட்டு முருங்கை ஆகியவற்றின் காயும், கார்போக அரிசி, குறிஞ்சாவேர், நரைவேர், சிறுகாஞ்சொரிவேர், பாதாளமூலி வேர், சீந்திற்கொடி, வெட்பாலை அரிசி, மாவிலிங்கப் பட்டை, சீதேவி செங்கழுநீர்க் கிழங்கு, வெள்ளைப் பூண்டு, கடுகு, வசம்பு இவற்றை ஒரே அளவாக எடுத்துக் கொண்டு நன்கு சிறுசிறு துண்டுகளாக வெட்டி ஒரு பாத்திரத்தில் ஒருகலம் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து நெருப்பு மூட்டிப் பதக்கு நீராக வற்ற வைத்து வடித்துக் கொள்ளவும். இதை மேற்படி எண்ணெயில் சேர்க்கவும்.

கார்கோளி, குங்கிலியம், கோட்டம், திரிகடுகு, பேரரத்தை, சிற்றரத்தை, மரமஞ்சள், மஞ்சள், சதகுப்பை, சிறுநாகப்பூ, தக்கோலம், பெருநாகப்பூ, வெந்தயம், சீரகம், சந்தனம், காயம், சூதம், அரிதாரம், கந்தகம் (சாதாரண கந்தகம், நெல்லி கந்தகம்), கௌரி, மனோசிலை ஆகியவற்றில் ஒவ்வொன்றும் பதினெட்டு வராகன் எடை எடுத்துக் கொண்டு இடித்து மேற்கண்ட தைலத்தில் சேர்க்கவும்.

சேங்கொட்டை, நேர்வாளம், எட்டிவிதை, வேப்பம் விதை, கஞ்சாவிதை இவை ஒவ்வொன்றும் இரண்டு பலம் எடுத்துக் கொண்டு இடித்துச் சேர்க்கவும்.

ஆதண்டையைக் கந்தப்பொடிபோல் இடித்து மேற்படி எண்ணெயில் சேர்த்துக் கொதிக்க வைத்து கடுகுபதம் மீறாமல் வடித்தெடுத்து விநாயகன் முன்வைத்து மண்பாத்திரத்தில் இட்டு வாய் சீலை செய்து தானியப்புடத்தில் நாற்பது நாட்கள் வைத்தெடுத்து ஆறியபின் அட்டமி, நவமி முதலிய நாட்களைத் தவிர்த்து நல்ல நாட்களில் மருந்து உட்கொள்ள வேண்டும்.

**அளவு:** காசு எடை (1 காசு = 10.4 கிராம்)
மேலும் உடல் முழுவதும் பூசி தேய்த்து விடலாம்.

**தீரும் நோய்கள்:** திமிர் வாதம், சருவாங்க வாதம், கைகால் விளங்காத வாதம், பக்க வாதம், வலிப்பு நோய்கள், மண்டைவலி, முகவாதம், வாதசன்னி, கண்டகுச் சன்னி, சிறக்கம்பம், குண்டலவாயு, பித்தச்சன்னி, சித்தப்பிரமைச் சன்னி, நாக்குளரல், உடல் நடுக்கம், தடுமாற்றம், தனுர்வாதம், உடல்வலி, நா உள்ளே இழுத்துக் கொண்டு பேச முடியாத வாதம், வாதத்தோடு வலிப்பு நோய், வாதகரப்பான், மகாசன்னி, வாதத்துடன் சிலேத்துமம் சேர்ந்து வருகின்ற பிணிகள் ஆகிய நோய்கள் தீரும்.

**ஆயிலெண்ணெய்**

282. மாயிரு ஞால மதிக்கக் கேளுமின்
ஆயி லெண்ணெய் அடவுடன் கூறுவன்
ஆயில் பட்டை யதுநூற் றாறுபலம்
தேயத் துத்துஞ் சிற்றா முட்டியும்
வேரா நூற்றாறு பலம்வெட்டித் தரித்து
நீர்தலந் தன்னில் நிலைபெறக் காய்ச்சி
நாலொன் றாக்கி நலம்பெற வடித்தபின்
மேல்நல் லெண்ணெய் விடுமிதில் பதக்கு
பாலும் பதக்குப் பரிவுடன் சேர்த்தபின்
அரைத்துக் கரைக்கும் மருந்துக ளாகும்
அரத்தை சரள மகில்மர மஞ்சள்
பெருக்கு நறும்பிசின் பெரிய குரும்பை
தேவ தாரந் திகழ்மஞ் சட்டி
மேவுந் தாம்விளா லரிசிமாஞ்சி வசம்பு
மருவுங் கோட்டம் மாஞ்சிகைச் சோல
மடவிகச் சோலம் குந்துருக் கம்பிசின்
கூறிய செவ்விய மிந்துப்பு மேலம்

இலவங்கத் தோடு சீரக மிரண்டுந்
திகழ்நா கப்பூ நேர்கடுகு ரோகணி
நீரிலா மிச்சம்புனுகுச் சட்டம்
புகழ்கூகை நீறு....
அழகிய கிழங்கு அமுக்கிரா வேருஞ்
சாரணை வேருந் தன்னி லொக்க
கூறிய மருந்தைக் கூட்டிச் சேர்த்து
வீறுடன் கசாயம் மேல்விட் டரைத்து
பதத்தில் வடித்துப் பண்ணிய யெண்ணெயை
நக்கவும் பூசவும் நசியம் பண்ணவும்
தாரை யிடவும் தலையில் கட்டவும்
வார்தரு முலையாய் வாத விகாரம்
கன்னவா தங்கள் கால்வா தங்கள்
மன்னிய அற்புத வாதத் துடனே
மூக்குநீர்ப் பாய்ச்சல் முயன்றபல வாதமும்
போக்கிடு மிதுவெனப்புகன்றன ரிறையோன் 54

ஆயில்பட்டை நூற்றாறு பலம், சிற்றாமுட்டி வேர் நூற்றாறு பலம் இரண்டையும் நன்கு நறுக்கி ஒரு பாத்திரத்தில் இட்டு ஒரு கலம் தண்ணீர் விட்டுக் கொதிக்கவைத்து நான்கில் ஒன்றாகக் காய்ச்சி வடிகட்டி வேறொரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு நல்லெண்ணெய் ஒரு பதக்கு, பசும்பால் ஒருபதக்குச் சேர்த்துக் கொள்ளவும்.

அரத்தை, அகில், மரமஞ்சள், வேப்பம்பிசின், பெரிய குரும்பை, தேவதாரம், மஞ்சட்டி, விளாவரிசி, சடாமாஞ்சில், வசம்பு, கோட்டம், கச்சோலம், மடவிகச் சோலம், துருக்கும்பிசின், செவ்வியம், இந்துப்பூ, ஏலம், இலவங்கம், நற்சீரகம், பெருஞ்சீரகம், நாகப்பூ, கடுகுரோகணி, விளாமிச்சம்வேர், புனுகுச் சட்டம், கூகைநீர், அமுக்குராவேர், சாரணைவேர் ஆகியவற்றை ஓரளவாக எடுத்துக் கொண்டு மேலே கண்ட கியாழத்தை விட்டு அரைத்துச் சேர்த்து அடுப்பிலிட்டுக் காய்ச்சி இறக்கி வடித்து எடுத்துக் கொள்ளவும்.

பயன்படுத்தும் முறை: உள்ளே கொடுக்கலாம். நசியம் செய்யலாம். தலையில் தாரையாக வார்க்கலாம்.

தீரும் நோய்கள்: வாதநோய்கள் - கன்னவாதம், கால்வாதம், அற்புதவாதம், மூக்குநீர்ப்பாய்ச்சல் ஆகிய நோய்கள் தீரும்.

குக்குலுக் கிருதம் (நெய்)
அகவல்

283. குக்குலுச் சடைச்சியைக் கூறக் கேள்மின்
முற்றிய வேப்பம் பட்டையு முத்தமுஞ்
சித்ர மூலமுஞ் சீந்திற் தண்டும்
மெத்தெனச் சொன்ன வேளை யிரண்டு
ஆடா தோடை யழகிய சடைச்சியும்
கூட்டிய கண்டங் காலியுங் கூட்டி
நாட்டிய மருந்தை நறுக்கிச் சேர்த்து
விளாவ ரிசியும் வெட்பாலை யரிசியும்

தாளச் சீரகம் தானோ ரிரண்டுஞ்
தேவ தாரமுந் திப்பிலி மூலமும்
மேவிய திப்பிலி மேலோ ரிரண்டும்
செவ்வியம் விடையம் சேர்சத குப்பை
வெவ்விய வாலுழுவை யரிசி மஞ்சட்டி
கடுகு ரோகணி கமழ்மர மஞ்சள்
இடுமின் கசாய மிவையோ ரொன்று
அஞ்சுபலங் கொண்டதில் விடுநீர்தான்
மிஞ்சி விடாதே விடுமுக் குறுணியை
நாலொன் றாக்கி நாற்பலங் குறுணி
துவர்சீகை, வறட்சீகை சொல்லச மோதகம்
இவற்றுடன் கோட்ட மிவையிரண்டுங் கூட்டி
குக்குலுந் திரிபலை கூடுந்திரி கடுகு
நற்பெரு மருந்துகள் நாழி முக்கால்
கூட்டி யரைத்துக் கோதற வடித்துநெய்
நாட்டுமிவ் வெடையாய் நாள்முக் கழஞ்சு
கொண்டிடில் பிரமேகம் கூறிய வகையில்
மண்டியே கழியு மதுப்பிர மேகமுஞ்
சுக்கிலப் பிரமியந் துடரெலும் புருக்கியும்
கக்கிடு முவளையும் காணாப் பிரமேகமும்
சிக்கெனப் போமெனச் சொல்லின னிறையோன். 55

முற்றிய வேப்பம்பட்டை, முத்தக்காசு, சித்திரமூலம், சீந்தில் தண்டு, தைவேளை, நாய்வேளை, ஆடாதொடை, சடாமாஞ்சில், கண்டங்கத்திரி இவற்றை நன்கு நறுக்கிச் சேர்த்து, விளாவரிசி, வெட்பாலை அரிசி, சீரகம், தேவதாரம், திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், அதிவிடையம், சதகுப்பை, வாலுழுவையரிசி, மஞ்சட்டி, கடுகுரோகணி, மரமஞ்சள், இவை ஒவ்வொன்றும் ஐந்து பலம் கொண்டு அவற்றை ஒரு பாத்திரத்தில் இட்டு, தண்ணீர் முக்குறுணியளவு சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி நான்கில் ஒன்றாகக் குறுக்கி வடிகட்டி வேறொரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு ஆவின் பால் குறுணியளவு சேர்த்து துவரைச் சீகை, வறட்சீகை, போதகம் இவற்றுடன் கோட்டம், குங்கிலியம், திரிபலை, திரிகடுகு ஆகியவை ஒவ்வொன்றும் முக்கால் நாழி எடுத்துச் சூரணமாக்கி அரைத்துக் கொண்டு மேற்படிச் சரக்குகளுடனே சேர்த்துக் கொதிக்க வைத்து நெய்யாக வடித்து எடுத்துக் கொள்ளவும்.

**அளவு:** முக்கழஞ்சு (ஒரு நாளைக்கு)

**தீரும் நோய்கள்:** பிரமேகம், மதுப்பிரமேகம், சுக்கிலப்பிரமேகம், எலும்புருக்கி, காணாப்பிரமேகம் ஆகிய நோய்கள் தீரும்.

**பூசணி நெய்**

284. பூசணி நெய்யைப் புலப்பட நன்றாய்
காசினி யோர்க்குக் கருத்துடன் கூறுவன்
பூசணிக் காயில் பொலிதரு நீருடன்
மாசறு சீந்தியு மருமிகு தாழையும்

வீசிய விழுதும் வெள்ளரிக் காயும்
கொற்றின் இலைப்பனை கோதறு குமரியும்
பத்தா விரந்துளிர் வல்லாரை தன்னுடன்
முளரியின் வளையமு முத்தியக் கரும்பு
மிளகிய யிளநீர் மிடுதேட் கடையும்
நாகனந் தீயும் நன்கிளி மூக்கியும்
தூகந் தவிடக் குந்தண் ணீர்மீட்டான்
அறுகோடா தண்டையான முற்ற வள்ளியும்
நறுவிய புடோலு நன்சிறு திமிட்டியும்
கதலியின் மூலமுங் கார்கரி காலியும்
இதவிய சங்குட னிச்சதா வேரியும்
போரோ ரொன்று சாறிவைக் குறுணியும்
நீரின் றியேபால் நிறைபதி னாழி
ஆவினெய் தூணி அன்புடன் கூட்டி
ஓவிய மனையா யொருமை யதானபின்
தேவதாரமும் திவ்விய கோட்டமும்
தாவதி மதுரமுந் தருசீ ரகமும்
மஞ்சட் டிவிளால் மருவிய பச்சிலை
துஞ்சத் தமதத் துய்யவ ரேணுகம்
சந்தனஞ் சயிலியஞ் சாதிக் காயும்
முந்திய யிருகனி முதிர்செண் பகமலர்
இலவங் கத்தோ ரிருநா கப்பூ
நலமிகு புதிமுக நற்பலா முகிழு
மேக வாலுக மிசைதரு கழுநீர்
மேலாய் வருமிகு தேற்றான் விரையும்
கண்டங் காலியுங் கடுகுரோ கணியும்
மெண்டிரு மிலுப்பை பூமர மஞ்சளும்
செப்பு நெருஞ்சியும் சித்தமல் லிகையும்
அப்பெருஞ் சிறிய அழகிய நெருஞ்சிலும்
நன்னாரி வேருடன் நாழிலாம் பிச்சையும்
சொன்னதோ ரொன்றிவை துகையோ பலமு
நேக வரைத்து நிறையக் கரைத்து
சாரநற் பதந்தனில் வடித்தே யருந்த
பித்தம் பிரமேக மும்பீனிச நோயும்
மற்றங் காய்போல் மருட்டிய பித்தமுஞ்
சித்தங் கலங்குந் திகழ்வயற் றெரிப்பும்
மாத்திய கற்றுமென் றோதின னிறையோன். 56

பூசணிக் காயில் இருந்து செய்யக்கூடிய கூழ்ப்பாண்ட கிருதத்தை உலகில் உள்ளோருக்குக் கருத்துடன் கூறுவேன்.

வெண்பூசணிச்சாறு, சீந்தில் தண்டுச்சாறு, தாழை விழுதுச்சாறு, வெள்ளரிக்காய்ச் சாறு, முடக்கொற்றான் இலைச்சாறு, பனம்பூச்சாறு, சோற்றுக்கற்றாழைச் சாறு, விலாந்துளிர், வல்லாரைச்சாறு, முளரிவளையச்சாறு, முற்றிய கரும்புச்சாறு, இளநீர், தேட்கடைச்சாறு, நாகநந்திச்சாறு, கிளிமூக்குச்சாறு, தண்ணீர் மீட்டான் சாறு, அருகு

ஆதண்டச் சாறு, வள்ளிச்சாறு, புடல்சாறு, சிறுதீமிட்டிச்சாறு, கதலிவேர்ச் சாறு, கருங்காலிச்சாறு, சங்கங்குப்பிச் சாறு, சதாவேரிச்சாறு இவற்றின் சாறு ஒவ்வொரு குறுணி, பால் பத்து நாழி, பசுநெய் ஒரு தூணி, தேவதாரம், கோட்டம், அதிமதுரம், சீரகம், மஞ்சட்டி, பச்சிலை, ரேணுகம், சந்தனம், சயலியம், சாதிக்காய், முற்றிய இருகனி (கடுக்காய், நெல்லிக்காய்), செண்பகமலர், இலவங்கம், நாகப்பூ, சிறுநாகப்பூ, பலா, செங்கழுநீர், தேற்றாங் கொட்டை, கண்டங்கத்திரி, கடுகுரோகணி, இலுப்பை, இலுப்பைப்பூ, மரமஞ்சள், செப்பு நெருஞ்சில், சிற்றாமல்லி, நெருஞ்சில், நன்னாரி, விலாமிச்சம் இவற்றில் ஒவ்வொன்றும் ஒருபலம் எடுத்து அரைத்து நன்கு சூரணமாக்கிக் கலந்து மேலே கண்ட சாறு, நெய், பால் இவற்றை ஒரு பாத்திரத்தில் இட்டு அடுப்பேற்றிக் கொதிக்கவைத்து நெய் பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

தீரும் நோய்கள்: இதை அளவுடன் உட்கொள்ள பித்தம், பிரமேகம், பீனிசம், சித்தங் கலங்கும் வயிறு எரிச்சல் ஆகிய நோய்கள் தீரும்.

நம்பியூரு அச்சேயன் மகன் சொன்ன
பறங்கிப்பட்டை இரசாயனம்

285. பரங்கிப் பட்டை சேரு ஒண்ணேகால் சீரகம் பலமொன்று யிடித்துச் சூரணஞ் செய்து இதுக்குச் சர்க்கரை யாகுதல் பழைய வெல்லமாகுதல் பலமிரண்டுக்கு நெய்சேரு ஆறு இதுவெல்லாம் ஒருசட்டியில் கலந்து, ஆவாரம் விறகாகில் ஊஞ்சல் விறகாகில் ஒரு வகை விறகாக எரியிட்டு அந்த மருந்து பக்குவம் பார்த்து, கையிட்டுப் பார்த்தால் குளிர்ந்திருக்கும். இது பதமென்று எடுத்துக்கொண்டு ஒரு புன்னைக் காயளவு உட்கொண்டு வரவும். இப்படி ஏழுநாள் கொள்ளவும். இரண்டு நேரமும் உட்கொண்டு வரவும்.

பத்தியம்: உப்பு, புளி ஆகாது. பசுவின் நெய், பால், துவரைப் பருப்பு, அரைக்கீரை இவை உப்பில்லாமல் கூட்டவும். சர்க்கரை பழைய வெல்லங் கூட்டவும். இதுக்குத் தீரும் வியாதி சுக்கிலப் பிரமேகம், இரத்தப் பிரமேகம், ஓட்டிய புண், சூலை, பரங்கிப்புண், கைகால் முடங்கினது, கைகால் கறுப்பு இவையெல்லாம் தீரும். கைகண்டது. 57

மகா சந்தனாதி எண்ணெய்

286. மாதருடமு கம்வருந்தினால் மானிடரே தாதுகெடும்
நீரிழிவு தான்தோன்றும் போதவே காந்தலெடுத்து
கனத்துக் கண்சிவந்து வாந்தியுடல் மெத்த வருந்துமே - பாங்கியரே
நல்லோர்க்கு நல்லபயன் நல்ல சந்தனாதி எண்ணெய்
வல்லோர் வைத்துக்கொள்ள மானிடத்தில் எல்லோர்க்கும்
அம்மையுமை யானை யான்கையி லேத்த
செம்மையுள்ள சந்தனமோடு கோட்டம் சதாவேலி - நன்னாரி
முந்திய பொன்னாங் காணிமுத்தக் காசு
அந்தமுடன் வில்வமுடன் சீந்திவிலா மிச்சம் வெட்டிவேர்
சொல்லிஆ விந்தமுடன் சிற்றா முட்டி - வல்லாரை

ஒன்றுங் குறையாம லோர்பலங் கொண்டுயோகத்தில்
சென்றுமிரு தூணி நீரிலேதான் செலுத்தி
நன்றாய்க் காய்ந்த எண்ணெய்க் கசாயத்தைப்
பதம்வய வாக வாய்ந்த எண்ணெய் பாலிளநீர்
வார்த்தப் பின்பு சேர்ந்ததொரு சந்தனங்க ளெல்லாம்
சதாவேலி கோட்டமுடன் வந்து வசுவாசி
மகரப் பூப்பந் தொடியாள் பச்சிலைச்
சோலம் பருஞ்சடாஞ் சியுடன் நிச்சயமாஞ்
செங்கழுநீர் செண்பகப்பூ அச்சமற ஏலம்
இலவங்கம் இருவேலி சித்தரத்தை தேவதாரம்
செவ்வள்ளி யுடன்கோல முடன்தற் கோலமுங்
கொழுந்து தகரம் வெட்டியசெஞ் சந்தனம்
ஒப்பாய்க் கழஞ்சில் ஓரொன்றாய்த் தப்பாமல்
தாழை கொடுப்பை நல்லசாத் திரவேதி
தாளைவெளி முருக்கு நொச்சிவேர் குமரிச்சாறு - அரைஉழக்கு
குன்றாமல் கலந்து முருந்த ரைத்து
கூட்டும் அதில் தைலம் கூசாமல்
வேகவைத்து வாட்டுமயன் பதம்வந்த தென்றால்
வீட்டிலேட்டி லெடுத்து மகரதாழம் பூப்பரப்பி
காட்டி யிறுக்கி வடித்தபின் கஸ்தூரி கோட்டமுடன்
குங்குமம் கோரோ சனையும் கூட்டியபின்
சட்டமுடன் பயக்கண் மாதே பரிவுசெய்து
நங்கையரே வாய்த்த சந்தனாதி எண்ணெய்
வார்த்து வெந்நீர் முழுக ஏற்ற
பித்தம் வாதம் பகைமீறி வரும்
போத்த வாதம் நீரிழிவு காந்தல்நின மும்உறுக்கி
பாரடல் வாச்சி பலக்குத்து மேகத்தில்
இந்தக் கண்டிக்கு மதநீர் சதையடைப்பு
அந்திமாங் கல்லடைப்பு அகன்று
அந்தியில் முந்திப் பாலி பூச்சடை
பணக்காலுவு சுக்குலவு கண்ணே கழுத்துணையும்
மாயப்பிலி வில்வம் வருந்திநீர்ச் சாயஎட்டா
மண்டைவலி உள்காதில் நின்று குத்தி
தொண்டை இருமல் துரத்திடுமே தண்டமுடன்
பீனிச மயிரை விடநோய்பிற கடுப்புவாய்
நாற்றம் மற்றும் வழுவழுப்பு தேனாத
கர்ப்பமொடு சூலைக்கு இளநீர்க் கடுப்புமுதல்
சற்பெனத் தணியுமே அற்பமென்றே எண்ணாதே
இனிசந்த னாதியெண்ணெய் பண்ணாக வைத்துப்பரிவு
செய்தால் போண்ட மேனி தன்குறி
குந்தநின்ற யேனைப்போல் தனாணி யுடுமே
தாளனுக்குச் சதுர கிரிமா முனிவர்
சாத்திரத்தை நிச்சயமாய்ச் சொன்னார் நினைந்து. 58

மாதரின் முகம் வருந்தினால் தாது கெடும். நீரிழிவு தோன்றும். உடம்பு வெப்பமடைந்து காந்தலெடுத்துக் கனக்கும். கண் சிவக்கும். வாந்தி உண்டாகும். உடல் மிகவும் துன்புறும். நல்லவர்க்கு நல்ல பயன் அளிக்கும் நல்ல சந்தனாதி எண்ணெய் வைத்துக் கொள்ளவும். செஞ்சந்தனம், கோட்டம், சதாவேரி, நன்னாரி, பொன்னாங்கண்ணி, முத்தக்காசு, வில்வம், சீந்தில், விலாமிச்ச வேர், வெட்டிவேர் இவற்றுடன் சிற்றாமுட்டி, வல்லாரை இவற்றை வகைக்கு ஒரு பலம் எடுத்து, இருதூணி தண்ணீர் சேர்த்து, ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு அடுப்பேற்றிக் கொதிக்க வைத்து, கியாழ பக்குவத்தில் இறக்கி வடித்து வேறோர் பாத்திரத்தில் வைத்துக் கொள்க.

இதனோடு எண்ணெய், பால், இளநீர் ஆகியவற்றைச் சேர்க்க வேண்டும். சதாவேரி, கோட்டம், வசுவாசி, மகரப்பூ, பச்சிலை, கச்சோலம், சடாமாஞ்சில், செங்கழுநீர்க்கிழங்கு, செண்பகப்பூ, ஏலம், இலவங்கம், வெட்டிவேர், சிற்றரத்தை, தேவதாரம், செவ்வள்ளிக் கொடி, தக்கோலம், மரிக்கொழுந்து, தகரம், செஞ்சந்தனம் இவற்றை ஒவ்வோர் கழஞ்சு எடுத்துக் கற்க மாக்கி மேற்கண்டவற்றோடு சேர்க்கவும்.

தழுதாழை, கொடுப்பை என்னும் பொன்னாங்கண்ணி, சாத்திரவேதி, வெளி முருக்கு, நொச்சி வேர், கற்றாழைச் சாறு இவற்றைக் கலந்து மருந்தரைத்துக் கொண்டு மேற்கண்டவற்றோடு கூட்டவும். இதில் தைலத்தைக் கூட்டி வடித்துக் கொள்க. வடித்த அத் தைலத்தில் தாழம்பூவின் மகரந்தத்தைப் பரப்பித் திரும்ப வடித்தபின், கஸ்தூரி, கோட்டம், குங்குமப்பூ, கோரோசனை ஆகியவற்றையும் சேர்த்து, அதில் புனுகுச் சட்டத்தையும் கலந்து எடுக்கச் சந்தனாதித் தைலம் ஆகும்.

இதனை உடல் முழுவதும் நன்றாகத் தேய்த்து வெந்நீரில் குளிக்க வேண்டும். இதனால் பித்தம், வாதம், நீரிழிவு, மேகநோய், சதையடைப்பு, கல்லடைப்பு, காதுவலி, மண்டைவலி, பீனிசம், சூலை, உடல் நாற்றம் ஆகியவை நீங்கும்.

**குக்குலாதிக் கிருதம்**
**(வேறு)**

★ 287. மிக்க சீந்தி லாடா தோடை வேம்புபுட லோடு கண்டங்காரி
தக்க யெடையொன் றெனபலங் கொள்தானே தூணிநீரிலிட்டு
ஒக்க வெந்தங் கொருநா ளூறி ஒன்றான தற்பின்னித் துடனே
நக்கும் நெய்யும் நவின்ற கற்கமது கொள்ளே. 59

சீந்தில், ஆடாதோடை, வேம்பு, பேய்ப்புடல், கண்டங்கத்திரி இவை ஒவ்வொன்றும் ஒரு பலம் எடுத்துத் தூணிநீர் விட்டு, ஒருநாள் ஊறவைத்து, மறுநாள் கொதிக்க வைக்கவும். கியாழத்தை அத்துடன் வடித்தெடுத்துக் கொள்ளவும். அத்துடன் நெய் மற்றும் கற்கச் சரக்குகளான,

288. கொள்ளாய் கற்கங் கடுகு ரோகணி கூறுஞ்சுக்கு விலாவிந்துப்பு
விள்ளாய் யதிவிடைய மஞ்சட்டி வெட்பாலை கோட்டம் அசமோதகம்
தள்ளாய் திப்பிலி மூலகமுந் தக்க யேல மிலவங்கம்
கொள்ளாய் கழஞ்சொன் றிவைதான் கொண்டால் குக்குலு முப்பலமே. 60

கடுகுரோகணி, சுக்கு, விலாமிச்சம் வேர், இந்துப்பு, அதிவிடையம், மஞ்சட்டி, வெட்பாலை அரிசி, கோட்டம், அசமோதகம், ஓமம், திப்பிலி மூலம், ஏலம், இலவங்கம் இவற்றைச் சேர்த்து இவற்றோடு குக்குலு மூன்று பலம் சேர்க்கவும்.

289. கொண்ட கற்கமது வரைத்துக் கூறும் பதத்திலது வடித்துநக்க
கண்டத் துள்விப் புருதி கடிய வேகம் விசபாகம்
மண்டை யெழுந்த கண்டா மாலை மற்று முள்ள சிரங்குசொறி
மீண்டு போமொரு நாளிலே விரும்பிச் செய்வீர் விரகுடனே. 61

இக்கற்கத்தை அரைத்து மேற்படி நெய்யில் இட்டு, பதமறிந்து வடித்து வைத்துக் கொள்க. இதுவே குக்கிலாதிக்கிருதம். இந்நெய்யினால், கண்ட விப்புருதி, விசபாகம், மண்டையில் எழுந்த கட்டி, கண்டமாலை, சிரங்கு, சொறி ஆகியவை ஒரு நாளில் நீங்கும்.

### சுரத்துக்கு எண்ணெய்
### (வேறு)

290. எற்று மென்னுமிகு சுரத்துக் கினிநான் சொல்ல வகைகேளாய்
தொற்று நொச்சி பிராய்முட்டித் துலங்குந் தேக்குட னாடாதோடை
ஆற்றுஞ் சாரணை கையாந்தகரை அடுக்குந் தூதுளை கீழாநெல்லி
தேற்று மிங்கு பிரமியொரு செறியுங் கத்தரி சுளலாலை
சாற்றுந் துளசி நாய்த்துளசி தனித்தனி சாறு தானுழக்கு
வேற்று மருந்து வசம்புதிப்பிலி மிளகு கடுகு பெருங்காயம்
மற்றுஞ் சீரகஞ் சிறுதேக்கு மருவுஞ் சாதி பெருங்குரும்பை
சாற்றும் விளாமதி, விடையந் தன்னு மோதகஞ் சீரகமும்
எற்று மேல மிதுவெல்லா யிடையிற் குறையாய் சரிநிறுத்து
ஆர்க்க விடித்துப் பொடிசெய்து அடுக்கக் கலந்து பதத்தில்வடித்து
தாக்க வுள்ளில் கொடுத்திடுக சற்றே நெஞ்சில் தடவிடுக
தோற்றுப் போமே யிந்நோய்கள் சொன்னார் முனிவர்
சொன்னாரே. 62

நொச்சி, பிராய்முட்டி (பேராமுட்டி), ஆடாதோடை, சிறுதேக்கு, சாரணை, கையாந்தகரை, தூதுவளை, கீழ்க்காய் நெல்லி, நீர்ப்பிரம்மி, கண்டங்கத்திரி, சுள்ளாலை, துளசி, நாய்த்துளசி ஆகியவற்றைத் தனித்தனியே வகைக்கு ஒரு உழக்குச் சாறு எடுத்து வைத்துக் கொள்க. வெட்டு மருந்துகளாகிய வசம்பு, திப்பிலி, மிளகு, கடுகு, பெருங்காயம், சீரகம், சிறுதேக்கு, சாதிபத்திரி, பெருங்குரும்பை, விளாம்பட்டை, அதிவிடையம், ஓமம், சீரகம் ஆகியவற்றைக் குறைவின்றிச் சேர்த்து இடித்துப் பொடி செய்து கொள்க. மேற்படிச் சாற்றில் சேர்த்துக் கொதிக்க வைத்து வடிகட்டி அளவுடன் உள்ளே கொடுக்க சுரம் தணியும்.

### அமிர்தக் கலை எண்ணெய்

291. சிற்றா முட்டியீ ராறுபலம் சிறந்த மிர்தமீ றாறுடனே
சுத்த மான நீர்பதக்கு எண்ணெய் நாழி பால்நாழி
ஒத்த கற்கஞ் சொல்லக்கேள் ஓங்கு மரத்தை சதகுப்பை

மற்றுந் தேவ தாரமகிழ மாறுமஞ் சட்டி சிற்றேலம்
சுத்தி ஏல மிலவங்கம் சொல்லு மிருவேலி செண்பகப்பூ
ஒத்த கழுநீர் தாவரிசி ஓங்கு முத்தஞ் சாரணைவேர்
குற்ற மில்லா திதையரைத்துக் கொண்டே எண்ணெய் தனிற்போடே. 63

சிற்றாமுட்டி 12 பலம், சீந்தில் தண்டு 12 பலம், பதக்கு நீர், நல்லெண்ணெய் ஒரு நாழி, பால் ஒரு நாழி ஆகியவற்றைக் கலந்து கொள்ள வேண்டும். அரத்தை, சதகுப்பை, தேவதாரம், மகிழம்பூ, மஞ்சட்டி, சிற்றேலம், இலவங்கம், வெட்டிவேர், செண்பகப்பூ, செங்கழுநீர், கார்போக அரிசி, முத்தக் காசு, சாரணைவேர் ஆகியவற்றை அளவோடு எடுத்து அரைத்துக் கொண்டு மேற்சொன்னவற்றோடு சேர்த்துக் கலக்க வேண்டும்.

292. போட்டுப் பதமாய் வடித்திதனைப் பொருந்த ஊற்றித் தலையிலிட
மாற்று மண்டைச் சூலையெல்லா மருவு கண்ணில் விரணங்கள்
சாற்று மிந்த மதிமந்தந் தனியா மந்தஞ் செவிமந்தம்
ஏற்றும் பீனிச மனாசிமந்த மயிகளு மளவே நாறுமது
மாற்று மலப்போ மிதுதானும் அமிர்த கலையி னெண்ணெயிதே. 64

மேற்கண்ட அனைத்தையும் கொதிக்க வைத்து எண்ணெய்ப் பதத்தில் வடித்துக் கொள்ள வேண்டும். இதனைத் தலையில் தேய்த்துக் குளிக்க, மண்டைச் சூலை, கண்ணில் வரும் புண்கள், மந்தம், செவிமந்தம், பீனிசம் போன்ற நோய்கள் தீரும்.

அமிர்தக் கலையெண்ணெய் (வேறு)

293. கையாந் தகரை குழிமீட்டான் கடிய நொச்சி பொடுதலையு
மையா சிற்றா முட்டியுடன் முறுத வள்ளி யிலாமிச்சம்
மொய்யா வகையிரு வேலி முகரு முத்தம் நன்னாரி
எய்யா பசுவின் பால்குறுணி எண்ணெய் தானு மறுநாழி
மெய்யே சோதி அதிமதுரம் வினைசேர் ஏலம் இலவங்கம்
நைய வரைத்துப் பதம்பார்த்து நன்றாய்க் காய்ச்சி வடித்திதனை
மெய்யா ஆற்றித் தலையிலிட விரணஞ் செவிநோய்க் கண்காச
முய்யா உச்சி வாதமது மூடிடாது வதுதானும்
மெய்யா விட்டுக் கடல்புகுந்து விரையப் போகும் கண்டீரே. 65

கையாந்தகரை, குழிமீட்டான் எனும் நத்தைச்சூரி, நொச்சி, பொடுதலை இவற்றின் இலைகளின் சாறு, சிற்றாமுட்டி, விலாமிச்சம் வேர், வெட்டிவேர், முத்தக்காசு, நன்னாரி இவற்றை இடித்துக் கொள்ள வேண்டும். பசுவின் பால் ஒரு குறுணி, நல்லெண்ணெய் நாழி, அதிமதுரம், ஏலம், இலவங்கம், இவற்றை நைய அரைத்து மேற்கண்டவற்றோடு சேர்த்துக் காய்ச்சி பதத்தில் வடித்தெடுக்க வேண்டும். இதனை உடல் முழுவதும் தேய்த்துக் குளிக்க, செவிநோய்கள், கண்காசம், வாத நோய்கள் தீரும்.

பூசணி நெய் (வேறு)

294. ஆவின் நெய்யு மிளநீரும் அடுக்கும் பூசணிக் காய்ச்சாறு
மேவும் பசுவின் பாலிவைதான் வெவ்வே றோரொன் றிருநாழி
கூவுங் கோட்ட மதிமதுரம் கொள்ளும் பச்சி லைச்சோலம்
பாவும் ஏல மிலவங்கம் பண்ணுங் கழுநீர் புயவளையம்
மாவின் கொட்டை யென்னுமது மரத்தில் பூவுஞ் சாந்தியினி
மேவி யரைத்து கரைத்திதனை வெந்த பதத்தில் வடித்துநக்க
தாப சுரமுந் தலைநோவுந் தனியா யனலு முடல்மெலிவுங்
கோவிந் தநமா சரணமெனக் கொள்ளீர் பூசணி நெய்யிதுவே. 66

ஆவின் நெய், இளநீர், பூசணிக்காய்ச் சாறு, ஆவின் பால், ஒவ்வொன்றும் வகைக்கு இரண்டு நாழி எடுத்துக் கொண்டு கோட்டம், அதிமதுரம், பச்சிலை, கச்சோலம், ஏலம், இலவங்கம், செங்கழுநீர்க் கிழங்கு, தாமரை வளையம், மாங்கொட்டை, மாம்பூ இவற்றை நன்கு சாந்து போல் அரைத்துமேற்கண்டவற்றோடு சேர்த்து அடுப்பேற்றிக் கொதிக்க வைத்து நெய்ப்பதத்தில் இறக்கி ஆறவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். இதை முறைப்படி அருந்த தாபச் சுரம், தலைநோய், உடல் வெப்பம், மெலிவு ஆகியன தீரும்.

நூறு பச்சிலை (பக்குவ மருந்து)

295. வடித்திடவே வேளை நொச்சி கண்முன்னே
எருக்கன்ஒரு வெற்றிலை வன்னி முருக்கிலை - நுகராத
உலத்தியும் மண்ணிலை கள்ளி தாளி
உப்பிலி பன்னி செருப்படி ஊசி
உத்திட மல்லிகை யித்துள் - சுடனாக
சார டைப்புளி பண்ணை பரட்டையும்
மேனிக் குப்பை புளிநரளை தழுதாழை
கரிக்கொன்னை கடப்பிலை தவராத தாதக்கிக்கிசை
சின்னய க்த்திகள் நாய்க்கத்திரி வெள்ளரி யத்தோடு
தாவுமப்பை கள்ளெண்ணை பருத்தியல் - சமனாக
கூறு கத்திரி முன்னை முசுட்டைகள்
பாலைக் கைப்புடல் வள்ளி மணித்தளி
கோவை கத்திரி குன்றி மணித்தலை
குரியான் கோழி யித்தளை கள்ளி
செவிக்கள்ளி பேய்மிரட்டியும் வில்வ மிலுப்பைகள்
கொடிகற் பூரவள்ளி கொடிக்கள்ளி
குரிஞ்சாகம் காறுகத்தரி யாதண்டை குறட்டைகள்
நீலி குப்பையும் நிண்டு மணக்குகள்
காவிமுத்திய அம்மை யிற்கொடு - கரிப்பாகல்
காவ னத்துடன் முண்டி செலுத்தி
யளர்வண் டைகள் வணணக் குறிஞ்சியள்
காசி நித்திலை சங்குமுடக் கொட்கை

நானும்வேர் நிச்சையும் நின்பநிலக் கடம்பே
இனத்திகழ் வஞ்சி சடைச்சியும் வேவிக்கத்
தாழைசெம்பை குறட்டையும் வெருகோடே வீழியித்திலை
தந்தியசக் கொடியோரிலை தருகஞ்ச முறித்தலை
வீசிறுகீரை காஞ்சொரி யித்தளை சவில்காம
சிறுபோ ரத்தனை கஞ்ச முசுக்கையள்
கோழி மூக்கரு நிண்பொடு வித்தலை
நெறுநித்துராய் கம்பம் மலைத்தமை - சீலகாணி
சீதேவி தளைவண்டி தவடசனி மூவிலை
சிவிலங் கைவிடத் திடந்தெடு பஞ்சரி
வெங்கை துடக்கியு மெலியாலும் தூரருப் பவள
வெள்ளருகுத் தழைபேய் தும்மட்டி இலந்தை
நுணாத்தழை தூது பத்திரி தும்பை
துவரைத் தழைசெறி யானும்தொடை செக்குல்
நெருஞ்சி மணத்தழை பேய்பீக் கோடழிஞ்சி
சனாக்கிலை சொரிபச்சிலை சீந்தி கிலுப்பையள் - துதையாகச்
சார ணைப்புளி வஞ்சி யித்துடன்
ஏல மட்டியு மஞ்ச ளரத்தையும் சத குப்பையு மல்லியாக்கும்-தனதாகச்
சாதி கத்திரி மஞ்சள் துவர்சிகை மூலமூப்பன்
அஞ்ச வனத்துடன் தாதுபச்சிலை வங்க வசம்புள்ளி சாளமோடே
தேறு திப்பிலி யிங்கு யாற்றிவைக் காயவைத்திடு கண்ணபதத்திடு
சோவு சகியில் நின்று செவிக்கிடு திடமாக
சீதமெய்திய மெய்யள துடைத்திடு நாடியெற்றிடு
நன்று குடித்திடு சிறுசெப்பிய தென்பது கத்துள்
சினவாத மாறுமிப்புவி தன்னில் மிகுத்தது
மூணு பத்துள் சன்னி யடித்திடும்
மாக முற்றிய அய்யிரு பத்துடனதுபோமே
ஆலை யிக்குக ளுன்னை வளத்திட
சாறு மெத்தவே செய்ய நிரைப்பனை
யாரைப் பட்டடியமர்ந்து நடந்திடும் பெருமாளே. 67

வேளை, நொச்சி, எருக்கு, வெற்றிலை, வன்னி, முருக்கிலை, இலைக்கள்ளி, தாளி, உப்பிலி, செருப்படி, கோரைக்கிழங்கு, ஊசிமல்லிகை, சாரடைப்புளி, பண்ணை, பரட்டை, குப்பைமேனி, புளிநரளை, தழுதாழை, கரிக்கொன்னை, கடப்பிலை, சிற்றகத்தி, நாய்க்கத்திரி, வெள்ளரி, பருத்தி ஆகியவற்றைச் சமனாக எடுத்துக் கொண்டு கத்திரி, முன்னை, முசுட்டை, பாலை, பேய்ப்புடல், வள்ளி, மணத்தக்காளி, கோவை, கத்திரி, குன்றிமணித்தலை, சூரியான் கோழி, மான்செவிக் கள்ளி, பேய்மிரட்டி, வில்வம், இழுப்பை, கற்பூரவள்ளிக்கொடி, கொடிக்கள்ளி, குரிஞ்சா, காறுகத்திரி, ஆதண்டை, குறட்டை, நீலிக்குப்பை, ஆமணக்கு, கரிப்பாகல், வண்டை, குறிஞ்சி, காசி, நித்திலை, சுங்கு, முடக்கொற்றான், நாணல் வேர், நிச்சை, நிலக்கடம்பு, வஞ்சி, சடைச்சி முதலானவற்றை வேகவைக்க வேண்டும்.

தாழை, செம்பை, குறட்டை, வெருகு, வீழி, கஞ்சமுரித்தளை, சிறுகீரை, சிறுகாஞ்சொரி, முசுக்கை, கோழி மூக்கரு, நின்பொடுவித்தழை,

சீலகாணி, சீதேவித்தழை, குப்பைமேனி, சிவிலம், வெங்கை துடக்கி, பவளக்கொடி, வெள்ளருகுத் தழை, பேய்த்தும்மட்டி, இலந்தை, நுணாத்தலை, தூதுவளை, பத்திரி, தும்பை, துவரைத்தலை, செறியான், ஆடாதோடை, நெருஞ்சில், மணத்தழை, பேய்ப்பீர்க்கு, அழிஞ்சில், பீர்க்கு, சாணாக்கிலை, சொரிபச்சிலை, சீந்தில், கிலுகிலுப்பை, சாரணைப்புளி, வஞ்சி, ஏலம், மட்டி, மஞ்சள், அரத்தை, சதகுப்பை, மல்லி, சாதி, கத்தூரி மஞ்சள், அஞ்சவனம், தாது பச்சிலை, இலவங்கம், வசம்பு, உள்ளிப்பூண்டு, சாளம், திப்பிலி, இங்கு இவற்றைக் காயவைத்துக் கண் பதத்தில் அறிந்து செவிக்கிடும் பதமாக எடுத்து, குளிர்ச்சி பொருந்திய உடலைத் துடைத்து, நாடி பார்த்துப் பின்னர் குடித்தால் எண்பது வாத நோய்களும் நீங்கும். மற்றும் பதிமூன்று வகைச் சன்னியும், முற்றிய ஐய நோய்கள் இருபதும் நீங்கும்.

இருமலுக்குப் புகை
(வேறு)

296. ஆடா தோடை நாரத்தை அணிசேர் நொச்சில் திறச்சாற்றில்
நீடரி தாரந் தன்னை நேகவே யரைத்துக் கொண்டு
நாடிய சிலைதனி லூட்டி நன்னிழ லுலர்த்தித் திரியாக்கி
கூடிய புகையை வாயில் கொள்ளவே யிருமல் போமே, 68

ஆடாதோடை, நாரத்தை, நொச்சி ஆகிய இவற்றின் சாற்றைவிட்டு அரிதாரம் எனும் தாளகத்தை நன்கு அரைத்துக் கொண்டு, மனோசிலையையும், அரைத்துத் தூய்மையான துணியில் தடவி நிழலில் உலர்த்தித் திரியாக்கிப் புகையை வாயில் புகைக்க இருமல் தீரும்.

மகா பூரண சந்திரோதயத் தைலம்

297. சீர்குலைந்த மாதர் சேர்ந்த கலவியினால்
வீர ளிந்த ரோக மிகவுண்டாம்
பேரழிந்து காந்தலெரிவு கண்ணெரிவு தான்மயக்கம்
வாந்தி யுடல்நோவு வருத்தமுண்டாய்ச் சேர்ந்ததினால்
நீரிழிவு தோன்றி நினமுருக்கிப் பெரும்பாடு
ஆர வழிந்து போகு மாப்போலே
சீரழிந்து தேக மெல்லாம் நொந்து
நேர்ஆசி தான்குத்தி சோப முண்டாய்
மேலி ளைத்து துக்க முண்டாம்
பாங்குடனே வடமொழியி னாலுள்ள மகாபூரணத்தைலம்
திடமுடனே வைக்கச் செப்பு கின்றேன்
அடவுடனே ஆவாரை நாவலத்தி மாம்பட்டை
சாகாத சீந்தில்தன் கொடியும் வேகம்
சிற்றாமுட்டி வில்லைவேர் திருந்திய விலாமிச்சம்
வித்தகமாம் ஆலம் விதமருதம் மற்றும்
நன்னாரி கோரை நல்கியகை யாந்தகரை
சொன்னார் பொன்னாங்காணி தோயலுடன் இன்னம்
பூலாவி லாண்டும் பொருந்திய
இலவம்பட்டை நேரான நெல்லி நிலப்பனையும்

சீரான பன்னிமீட்டான் கிழங்கும் பருகிய கீழ்க்காய்நெல்லி
தன்னிலுள்ள பட்டை தனித்தனி ஒன்னா ஒன்று குறையாமல்
ஓரொன்று அயம்பலமாய்ச் சென்றுயிடித்துச் செலுத்துநீர் - குன்றாமல்
எட்டு வல்லநீர் விட்டு இரண்டு படியாய்க் காய்ச்சி
தொட்ட சுரசம் சொரியக் கேழ்மட்ட விழுமந்
தாளை விழுது அழிஞ்சியிலை கற்றாழை
வேகம் வெருகன் கிழங்கு வில்லையிலை
ரோகம் பெருக்கும் நெல்லி பொன்னாங்காணி
பெரிய வராகிக் கிழங்கு மருவுவகை
எட்டும் வகைவகையே நிறுவி சென்றுசுரசம்
சேரவே ஒவ்வொன்றில் இரண்டுபடி வாங்கி
முரைசத்தில் விட்டுஅன்றி கோவின்பால் நாலுபடி
கூட்டு மிளநீர் தாவியிடு நாலுபடி தாக்கியே
ஓவியமாய் ஆவின்நெய் கொட்டையெண்ணெய் ஆனதொரு
நல்லெண்ணெய்
பாவனையாய் ஒவ்வொன்று படியிரண்டு தாவியே
ஒன்றாகக் கூட்டி உலையில்வைத்து தான்துலவி
குன்றாமல் வேகும் கொதிப்பதத்தில் நன்றான
ஏலம் இலவங்கம் இருவேலி லாமிச்சம்
கோலம் கொழுந்து கொத்தமல்லி சீலம்
அதிமதுரம் கோட்டம் ஆனசிறு நாகப்பூ
விதமுடைய செண்பகப்பூ மேலரிசி யிதமுள்ள
சாதிக்காய் தாமரைப்பூ தகரம் சடாமாஞ்சில்
நீதமர மஞ்சள் நேர்விடையம் போதவே
கஸ்தூரி மஞ்சள் காராம்பூ சாம்பிராணியுடன்
நிச்சயமாந் தாரம் நிகழ்கிழும் மெச்சபச்சிலை
கச்சோலம் பருனா சீந்தில்தால் மிளகு
அசமரும் நெல்லி யரத்தையுடன் நொச்சிவ சுவாசி
வாய்விளங்கம் வருஞ்செவ் வள்ளியுடன்
பெருக யிரத்தப் பேர்கந்தம் திருவுடைய
செங்கழுநீர்க் கிழங்கு செழுந்தாமரைக் கிழங்கு
எங்கும் பெருகும் இயல்நெய்தல் பெருகு
மல்லிதன் கிழங்கும் கொட்டிக் கிழங்கும்
முருக்குமுண் டகத்தின்முன் வளையம்
ஒருக்க ஒன்றொன் றோர்வகைக்கு
ஓராது தன்கழஞ்சு செவ்வையொரு பலமாந் திரிகந்தம்
நன்மையுடன் ஒன்றாகக் கூட்டி
உரலி லிடித்தே பொடியைச் சென்று
எண்ணெய் தன்னில் செலுத்தியிடு நன்றாகக்
காய்ந்த எண்ணெய் தான்கை வைத்துப்
பதம்பார்த்து ஏந்தியொரு சட்டியில் யிருத்துக்கொல்
பாந்தமுடன் குங்குமங் கஸ்தூரி கோரோசனை
சட்டம் கங்கை இலாமிச்சை தன்கூடன்
நங்கையரே நன்றாகக் கூட்டி நயந்த
எண்ணெ யதனில் விட்டுச்சென்று முருகன்பூசை

திறஞ்செய்து வென்றியுடன் செய்தது
தலைமுழுகத் தீர்வன வியாதி கள்கேள்
ஏற்றமுள்ள பித்தமுடன் இடர்வறட்சி சாற்றும்
நீரிழிவு காந்தள் நினமுருக்கி அசத்திசுரம்
சீரழிவு கண்ணெரிவு சேர்கிருடசம் பேரொளிந்த
கல்லடைப்பு நீரடைப்பு கருங்குட்டம் சலரோகம்
மெல்லவரும் வாந்தி விக்கலுடன் சொல்லரிய
மண்டையினிற் சூலை மகாவெட்டை சலக்கழிச்சல்
கொண்ட பெரும்பாடு கொடிரோகம் பண்டுவினை
மூத்திரத்தில் இரத்தம் முன்பிரமி யமுடனே
படர்ந்தபடர் தாமரையும் பலவகுத்து ஏற்றும்
வாய்வு வயிற்றெரிவு வருகாந்தல் இரத்தமுடன்
போயகலு மென்று பொதியமுனி ஆராய்ந்து
சாத்திரத்தில் கண்டு சகலநூல் தனிலுற்றும்
பார்த்து மனமகிழ்ந்து பரிவுற்றுப் போற்றும்
இவ்வுலகி லென்னை யினிஇயல்புடைய தில்லையென்று
நன்மை யதாய்ச் சொன்னார் நயந்து. 69

சீர்குலைந்த மங்கையுடன் சேர்ந்த புணர்ச்சியால் உடல் வலிமை குன்றி உடல் நோகும். உடல் காந்தல், எரிவு, கண்ணெரிவு, மயக்கம், வாந்தி, உடல் வருத்தம் போன்றன உண்டாகும். நீரிழிவு தோன்றி உடலில் உள்ள கொழுப்பு உருகி பெரும்பாடு என்ற நோய்போல் இரத்தம் அதிகமாக வற்றி உடல் முழுதும் நொந்து சோர்வை உண்டாக்கும். உடல் இளைக்கும்.

ஆவாரை, நாவல், அத்தி, மா ஆகியவைகளின் பட்டைகள், சீந்தில்தண்டு, சிற்றாமுட்டிவேர், விலாமிச்சம்வேர், ஆலம்பட்டை, மருதம்பட்டை, நன்னாரி, கோரைக்கிழங்கு, கையாந்தகரைச் சமூலம், பொன்னாங்காணி, பூலாங்கிழங்கு, இலவம்பட்டை, நெல்லிவற்றல், நிலப்பனங்கிழங்கு, பன்றிமீட்டான் கிழங்கு எனும் கோரைக்கிழங்கு, கீழ்க்காய் நெல்லிச் சமூலம், ஆகியவைகளில் ஒரு வகைக்கு ஒரு பலம் எடுத்துப் பட்டைகளைத் தனியாகவும், மற்றவற்றைத் தனியாகவும் இடித்துத் தூள் செய்து பாத்திரத்திலிட்டு 8 மரக்கால் நீர் கூட்டி எட்டொன்றாய்க் காய்ச்சி இரண்டு படியாகக் குறுக்கி கியாழம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சுரசச் சரக்குகளான தாழை விழுது, அழிஞ்சில் இலை, சோற்றுக்கற்றாழை, மெருகன் கிழங்கு, வில்வ இலை, நெல்லி, பொன்னாங்காணி, பெரிய கோரைக் கிழங்கு ஆகியவற்றை இடித்துச் சாறு எடுத்து முறைப்படி சுரசம் செய்து ஒவ்வொன்றிலும் இரண்டு படி எடுத்து முன்செய்த கியாழத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றுடன் பசும்பால் 4 படி, இளநீர் 4 படி, பசுநெய், ஆமணக்கு எண்ணெய், நல்லெண்ணெய், வகைக்கு 2 படி கூட்டி அடுப்பிலேற்றிக் கொதிக்க வைக்க வேண்டும். நன்றாகக் கொதிக்கும் பதத்தில் ஏலம், இலவங்கம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், தக்கோலம், கொழுந்து, கொத்தமல்லி, சீந்தில் தண்டு, அதிமதுரம், கோட்டம், சிறுநாகப்பூ,

செண்பகப்பூ, ஏலஅரிசி, சாதிக்காய், தாமரைப்பூ, தகரம், சடாமாஞ்சில், மரமஞ்சள், அதிவிடையம், கஸ்தூரிமஞ்சள், கிராம்பு, திப்பிலி, சாம்பிராணி, மந்தாரம் பச்சிலை, கச்சோலம், சீந்தில், மிளகு, நெல்லி, அரத்தை, நொச்சி, வசுவாசி, வாய்விளங்கம், செவ்வள்ளிக் கொடி, கொட்டைக்கரந்தை, செங்கழுநீர்க்கிழங்கு, செந்தாமரைக் கிழங்கு, நெய்தல் கிழங்கு, கொட்டிக் கிழங்கு, முருக்கு, தாமரைக்கிழங்கு இவை ஒவ்வொன்றும் ஒரு கழஞ்சு அளவும், சந்தனம், அகில், தேவதாரம் மூன்றும் சேர்ந்த திரிகந்தகம் ஒரு பலமும் சேர்த்து உரலில் இட்டு இடித்துச் சலித்து மேற்படி எண்ணெயில் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி வடிகட்டி, அதில் குங்குமப்பூ, கஸ்தூரி, கோரோசனை, விலாமிச்சம்வேர், கங்கை என்னும் நிலக்கடம்பு, விலாமிச்சம் வேர், சூடம், இவைகளை இடித்து மேற்படி வடித்த எண்ணெயில் விட்டுக் கலக்கி முருகன் பூசை செய்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதனைத் தேய்த்துக் குளிக்கப் பித்தம், வறட்சி, நீரிழிவு, உடல் காந்தல், அசதிச்சுரம், என்புருக்கி, கண்ணெரிவு, கல்லடைப்பு, நீரடைப்பு, கருங்குட்டம், சலரோகம், வாந்தி, விக்கல், மண்டைச் சூலை, மூத்திரத்தில் இரத்தம் காணல், முன் பிரமியம், படர்தாமரை என்று பொதிய முனியாகிய அகத்தியர் ஆராய்ந்து கண்டு சகல நூல்களையும் பார்த்து, மனம் மகிழ்ந்து பரிவுற்றுப் போற்றி, இதற்கு இணையான எண்ணெய் இல்லை என்று சொன்னார்.

சர்வ வியாதிக்கு எண்ணெய்

298. விளக்கெண்ணெய் வெட்பாலை வாலுளுவை வசம்பு
வெள்ளுள்ளி அரைப்படி மாமிக்க நிறைமாடை
அழகான பசுமஞ்சள் சாறிரண்டு கரண்டி
அழகான குறுஞ்சாவி னிலையும் பலமறையாம்
கிழக்காக வடுப்பேற்றி எண்ணெயுடன் கலந்து
கிண்டியே வடித்துமேற் பூசி உள்ளுங் கொண்டால்
விளக்கா னதுபோல வெறியும் பல்சுரமும்
விண்டுவாய் நடுக்கலுடன் வெப்பும் விட்டேகும். 70

விளக்கெண்ணெய், வெட்பாலை, வாலுளுவை, வசம்பு, வெள்ளுள்ளி ஆகியவற்றை அரைப்படி எடுத்துச் சரக்குகளைப் பொடியாக்கிக் கொண்டு, பசுமஞ்சள் சாறு இரண்டு கரண்டி, சிறுகுறிஞ்சாவிலை அரைப்பலம் எடுத்துக் கொண்டு அடுப்பேற்றிக் காய்ச்சி மேற்குறிப்பிட்ட எண்ணெயையும் சரக்குகளையும் சேர்த்துக் கிண்டி வடித்துக் கொள்ள வேண்டும். இதனை மேலுக்குப் பூசி உள்ளுக்கும் கொடுக்க விளக்கைப் போல எரியும் பல சுரங்களும், நடுக்கலுடன் கூடிய வெப்பச் சுரமும் விட்டு ஓடும்.

சன்னிக்குத் தைலம்

(வேறு)

★ 299. வேலிப் பருத்தி சிற்றாமல்லி விரிசில்கரி புளிப்புமே
ஆலித்தெழுத்த சிற்றாமுட்டி யதனில் சிறிய பேராமுட்டி
வட்டத் துத்தி கொடிவேலி காட்டு முருங்கைச் சாறதனை
முன்னை தழுதாழை முறுத்தெழுந்த நாயுருவி
சுக்கு மிளகு தக்காளி பெருங்குமிழ்வேர். 71

வேலிப்பருத்தி, சிற்றாமல்லி, விரிசில் கரி புளிப்பு, சிற்றாமுட்டி, பேராமுட்டி, வட்டத்துத்தி, கொடிவேலி, காட்டுமுருங்கைச் சாறு, முன்னை, தழுதாழை நாயுருவி, சுக்கு, மிளகு, தக்காளி, பெருங்குமிழ் வேர்,

★ 300. சிவனார் வேம்பு செங்கழுநீர் கோழி யவரை வெண்குன்றிவேர்
நமனா ரஞ்சும் புங்கம்பட்டை நாடிற்கிலுப்பை மேனிமுள்ளி மிக்க
துளசி
சமனா ரம்மி கழிந்த நொச்சில் தக்க தோடை கண்டங்கத்திரி
சமனாய் மூன்று பலங்கொண்டு தண்ணீர் தூணியிற்
காய்ச்சிடுமே. 72

சிவனார் வேம்பு, செங்கழுநீர், கோழியவரை, வெண்குன்றிவேர், புங்கம்பட்டை, வட்டக் கிலுகிலுப்பை, குப்பைமேனி, நீர்முள்ளி, துளசி, நொச்சி, ஆடாதோடை, கண்டங்கத்திரி ஒவ்வொன்றும் மூன்று பலம் எடுத்துக் கொண்டு ஒரு தூணி தண்ணீர் விட்டுக் குறுணியாகக் காய்ச்சி,

301. இடித்துக் குறுணி யாய்காய்ச்சி யதிலே அண்டம் பரிமூன்றும்
வரியாய் யூற்றிக் கலந்தபின்னை வடித்துக் காய்ச்சி நாழிகொண்டு
வரகாய் விளக்கெண்ணெய் நாழிநெய்யுரியாம் வடித்த நல்லெண்ணெய்
தானுரியாம்
வரகாய் எலுமிச்சஞ் சாறுரியாம் தெரித்ததேங் காய்ப்பால் நாழிநெறு
நெரிஞ்சிச் சாறு நாழியாட்டுப் பாலுமதில் நாழியாகச் சேருமருந்து
சொல்வோம். 73

அதில் கோழிமுட்டை மூன்றை உடைத்து ஊற்றி வடித்து, எடுத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் விளக்கெண்ணெய் ஒரு நாழி, நெய் ஒரு உரி, நல்லெண்ணெய் ஒரு உரி, எலுமிச்சம்பழச்சாறு ஒரு உரி தேங்காய்ப்பால் ஒரு உரி, நெருஞ்சில் சாறு ஒரு நாழி, ஆட்டுப்பால் ஒரு நாழி ஆகியவற்றைச் சேர்த்து,

★ 302. வசம்பு மஞ்சள் திப்பிலி மிளகு வாகா யுள்ளி சதகுப்பை மஞ்சள்
அரத்தை குளவிந்தம் சவரங் குக்குலு மிந்துப்பு கடுகு கோட்டம்
ரோகணியும்
அகிலதி மதுரம் தேவதாரம் செவ்வியம் பசுவாய் நிலப்புழு
பூநாகம் திப்பிலி மூலம் கம்பிப் பிசின்
சவரதி லவங்கப் பட்டை நாக மூன்று காசெடையே. 74

கற்க மருந்துகளாகிய வசம்பு, மஞ்சள், திப்பிலி, மிளகு, உள்ளி, சதகுப்பை, மஞ்சள், அரத்தை, குளவிந்தம் எனும் தாமரை, குக்குலு, இந்துப்பு, கடுகு, கோட்டம், கடுகுரோகணி, அகில், அதிமதுரம், தேவதாரம், செவ்வியம், திருநீற்றுப்பச்சை, நிலப்புழு, ....... பூநாகம், திப்பிலி மூலம், கம்பிப் பிசின், இலவங்கப்பட்டை, நாககேசுரம் ஆகியன மூன்று காசெடை,

303. மூன்றுகா செடையாக வெல்லாம் முதிர விடித்துத் தூள்பண்ணி
சான்ற வெண்ணெ யதிற்கலந்து தப்பா தறிந்து பதத்திறக்கி
மூன்று நான்கி லொருசன்னி முடுகிப் போகு மோர்நாளே
கீன்றோ மாரக் கொடுத்திடினும் கிலேசம் பொருந்தும் பாதங்கிசனே. 75

வகைக்கு மூன்று காசெடையாக மேற்சொன்னவற்றை எடுத்து இடித்துத் தூளாக்கி, வெண்ணெயில் கலந்து பதமறிந்து இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இதனைக் கொடுக்கச் சன்னி ஒருநாளில் தீரும்.

304. பத்தி பாகைக் கேளும் பரியஉள்ளி கடுகு முசலம்
ஏத்தியப் பெருத்திடும் தண்ணீர் மிக்க தூதுளங் காயும்
பிற்றனை யுப்பும் இஞ்சிப் பெருத்திடும் வேப்பம் பூவாம்
சத்திய மிதுவே திண்ணு சாற்றினோம் வேறா காதே. 76

இம்மருந்திற்குப் பத்தியமாக உள்ளி, கடுகு, [illegible]ம் (எள்ளு), தண்ணீர், தூதுளங்காய், உப்பு, இஞ்சி, வேப்பம்[illegible]யனவற்றைக் கொள்ள வேண்டும். வேறு உட் கொள்ளக் கூடா[illegible]

பிருங்காமலத் தைலம்
(வேறு)

305. கண்ணோவு தலைநோவு செவிநோவு தீருங்
கரிச்சாவின் சாறுடனே கற்றாழை நெல்லி
தன்னாரு மென்மொழியாய் தனித்தனியே சாறு
தனியாவின் பாலுடனே நாழி கூட்டு
மின்னாழி லிவருடனே அதிமதுரந் தானு
மெடையொன்று பலங்கொள்ள வெண்ணெய்நாட் டுரிவார்
எந்நாளு முனக்கினிநோயென்று மில்லையிது
பிறங்காமல மென்று யியம்பும் வேதம். 77

கண்ணோய், தலைநோய், செவிநோய் ஆகியன தீர்வதற்கு, கரிசலாங்கண்ணிச் சாறு, கற்றாழைச் சாறு, நெல்லிச்சாறு இவற்றை தனித்தனியே எடுத்து ஆவின் பாலில் கூட்டி அதனுடன் அதிமதுரத் தூள் ஒரு பலம், வெண்ணெய் நாழியுரி அளவும் கூட்டி உட்கொள்ள எந்நோயும் நீங்கும் என்று வேதம் கூறும்.

(வேறு)

306. பால்விட் டடிகை செய்யுந் தைலம் பகர்ந்த ராத்திரி இரண்டு நாள்
கோல சுரச மதுகூட்டுந் தைலம் மூன்று நாளாகும்
மாலை விழியார் கசாயத்தில் மதிய மைந்து நாளாகும்
சீலமுடன் மோர்தயிர் காடியில் சேர்க்கு நாளிரண் டெனவோதே. 78

பால் சேர்த்துச் செய்யும் இத் தைலத்தை இரவு நேரத்தில் இரண்டு நாள் உண்டு வரவேண்டும். தக்கோலச் சுரசம் சேர்த்துச் செய்து தைலத்தை மூன்றுநாள் குவளைப்பூ சுரசத்தில் மதிய வேளை ஐந்து நாள் உண்டு வரவேண்டும். இரண்டு நாள் மோர், தயிர், காடி சேர்க்க வேண்டும்.

வாத உற்பத்தி

307. வாத வுற்பத்தியெது வண்டுவா புளிப்பி னாலும்
மேதமாங் கரிப தார்த்தம் இலைபழங் கிழங்கி னாலும்
கீதமின் புணர்ச்சி யாலுங் கிழற்புன லாமன் மாறி
சீதமா மழைநீ ராலுந் திரண்டது வாத மாமே. 1

வாய் புளிப்பினாலும், புளிச்சுவையுடைய கறிகாய்கள் இலை, பழம், கிழங்கு முதலியவற்றாலும், அதிகப் புணர்ச்சியாலும், நாட்பட்ட நீரில் குளிப்பதாலும், குளிர்ச்சி பொருந்திய நீர் மற்றும் மழை நீராலும் வாதம் உற்பத்தியாகும்.

பித்த உற்பத்தி

308. பித்தவுற் பத்தி யதுபிளி யும்வாய் கசப்பி னாலும்
சுற்றமின் னழுக்கி னாலும் துவண்டதோர் மருந்திட் டாலும்
நித்திரை விபரத் தாலும் நேரஞ்சென்று தூங்கை யாலும்
குத்தர மொழியான் தன்னுற் கொள்கையின் மிகுதி யாலும். 2

வாய்க் கசப்பினாலும், சுற்றுப்புறத் தூய்மையின்மையாலும், மருந்தீட்டினாலும், நித்திரையின்மையாலும், சரியான நேரத்தில் உண்ணாததாலும், அதிகக் கோபத்தாலும் பித்தம் உற்பத்தியாகும்.

கப உற்பத்தி

309. சேத்தும உற்பத் தியது தித்திப்புக் காய்ந்த தாலும்
போற்றிய தயிர்நெய் யாலும் புதுபுன லுங்கை யாலும்
மாத்திய பசிநே ரத்தில் வன்றுயில் செய்கை யாலும்
தோத்திய பாரந் தாங்கி சுமைசுமந் தாலு மாமே. 3

இனிப்புப் பொருளை அதிகமாக உண்பதாலும், தயிர், நெய், அதிகம் புசிப்பதாலும் புதுப்புனல் அதிகமாக அருந்துவதாலும், பசிநேரத்தில் அதிக வேலை செய்வதாலும் சேத்துமம் உற்பத்தியாகும்.

வாதச் சரீரத்தின் குணம்
(வேறு)

310. உற்றகாரி யங்கள் சாக்கிரதை பண்ணும்
உழலுவதே தொழிலாகு முரைப்ப தெல்லாம்
சற்றுமனஞ் சலித்து வாய்ஓய்ந்தி ராது
தன்னாலே விரும்புமது தன்னாலே வேண்டும்
வெற்றிபுகழ் கனக்குன்றா யிருக்க வேண்டும்
பொய்யதனை விரவிக் கூறும்
மற்றுடல் தூலமா யிருக்கு மாகில்
வாதத்தின் அங்கமென வகுக்க லாமே. 1

செய்கின்ற செயல்களில் எச்சரிக்கையை உண்டாக்கும். ஓயாமல் உழலுதல், முணுமுணுத்தல், மனம் சலித்தல், வாய் நோதல் ஏற்படும். விரும்புவதையெல்லாம் வேண்டும் மனப்பான்மையை ஏற்படுத்தும். வெற்றி, புகழ் குன்றாது இருக்க விரும்பும். பொய்யினை விரவிக் கூறும். உடல் பருத்திருக்கும். இத்தகைய செயல்பாடுகளும் உடற்கூறுபாடுகளும் வாதச் சரீரத்திற்கு உரியன.

பித்தச் சரீர குணம்

311. நல்லிளமை தனில்நரைத்தல் மெலிதல் வேர்த்தல்
நயனங்கள் கடைசி வற்றல் நாவ சைத்து
சொல்லுமுறை மெத்தென்ன விதமே பேசல்
துடியிடையார் மீதாசை தோன்றி நிற்றல்

வில்லமருங் குழல்மடவாய் விருப்ப மெய்தல்
வியந்துரைத்த கனவுகளை மெய்யாக் காணல்
பல்கலைநூ லாராய்ந்துபயிற்ற லீது
பயித்தியத் தினங்களெனப் பகர லாமே. 2

இளமையில் நரைத்தல் ஏற்படும். உடலில் வியர்த்தல், கண்களில் நீர் வற்றல், நாவில் சொல்கின்ற முறையால் மெத்தெனப் பேசல், பெண்களின் மேல் ஆசை தோன்றி நிற்றல், பெண்கள் விரும்பும்படி தோன்றல், கனவுகளை மெய்போலக் காண்டல், பல்கலை நூல்களை ஆய்ந்து படித்தல், படிப்பித்தல் ஆகிய செயல்கள் பித்தச் சரீரத்துக்குரியன.

★ கபச் சரீரத்தின் குணம்

312. துய்யவுடன் நானிறுகல் மலஞ்சிக் கென்றல்
தோகையர்பா லாசைநிரா தரித்துப் பேசல்
பொய்யினோடு களவில்லா திருத்தல் மிக்கப்
பேருகள்பேசவல்ல பேர்கள் தேடல் விருந்து தேடல்
மய்யனைய தலைமயிர்நின் றிருத்தல் யாரும்
மனம்மகிழ எப்போதும் பகடி பேசல்
செய்யகம லத்திருவின் நுரைவின் மாதே
சேத்துமத்தின் அங்கமெனச் செப்பி னாரே. 3

உடலில் நரம்புகள் இறுகிக் கட்டுடலாகத் தோன்றல், மலச்சிக்கல் ஏற்படல், பெண்ணாசையை நிராகரித்தல், பொய், களவு இல்லாமல் இருத்தல், பலரும் போற்றும் பேர்களைத் தேடிச் செல்லல், விருந்து தேடல், தலைமயிர் நன்றாக தழைத்திருத்தல், யாவரும் மனம் மகிழும்படி நகைச்சுவையாகப் பேசுதல் ஆகியன சேத்துமச் சரீரத்தின் செயல்பாடுகளும் கூறுபாடுகளும் ஆகும்.

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
(வேறு)

313. வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

துதிக்கையை உடைய விநாயகனைப் பூக்களைக் கொண்டு வணங்க, நல்வாக்கும், நல்ல சிந்தனையும், திருமகளின் கடைப்பார்வையும் கிட்டும். உடல் நோய்களால் முடங்காது.

314. மஞ்சள் கலையுடுத்தி மஞ்சள் பணிபூண்டு
மஞ்சள் கமலத்தே வாழ்ந்திருப்பாள் - மஞ்சள்
அரியா சனத்திருக்கும் அரசரோ டென்னை
சரியா யிருத்திவைத் தாய்.

மஞ்சள் புடவையுடுத்தி, மஞ்சள் வீணை ஏந்தி, மஞ்சள்நிறத் தாமரையில் வீற்றிருக்கும் கலைமகள், மஞ்சள் வண்ண மங்கலமான அரியணையில் இருக்கும் அரசர்களுக்கு இணையான சரியாசனத்தில் என்னை வீற்றிருக்கச் செய்யும் தாய் ஆவாள்.

கர்ப்ப (உற்பத்தி)
(வேறு)

315. மாதொடு பிதாவும் கூடி மருவிடப் பாய்ந்த நீர்தான்
ஆதியி னதுக்குள்ளாகி அதுதிரள் வெண்ணெய் போன்று
பேதமாய்ச் சிறங்கை காலாய் பெருத்தொரு கருப்ப மாகும்
ஓதுமிக் கர்ப்பந் தொங்கா சாற்றிடு ரோகஞ் சொல்வாம். 1

ஆணும் பெண்ணும் கூடிக் கலந்திட, ஆணிடத்திலிருந்து பாய்ந்த சுக்கிலமாகிய வெண்ணீர் சுரோணிதத்துடன் கலந்து திரண்டு வெண்ணெய் போன்றாகிப் பின் சின்னாட்களில் கைகால் என உருப்பெறும் வண்ணம் பெருத்துக் கருப்பமாகும். இக்கருப்பத்தில் உற்பத்தியாகும் நோய்களைப் பற்றிக் கூறுவேன்.

கர்ப்பக் கிரந்தி
(வேறு)

316. அடிவயிற்றில் நெருஞ்சிமுள் கட்டி னாற்போல்
அங்கங்கு சுருக்கெனவே குத்திக் காய்ச்சல்
விடியநடுச் சாமத்தில் விட்டுக் காய்ந்து
வெடிக்கவே தலைநோவு குளிரும் தோன்றி
பிடியுறவே சரீரத்தை வாதை யாக்கி
மிகுந்துசெங் கழுநீர்போல் வீழு நீரும்
துடியிடையாய் கருப்பத்தைத் தாங்கவொட் டாத
துயர்செய்யும் கர்ப்பக்கிரந்தி தொழிலி தாமே. 2

அடிவயிற்றில் நெருஞ்சி முள்ளைக் குத்தினாற் போன்று அங்கங்கே குத்தல் தோன்றும். காய்ச்சல் ஏற்படும். நள்ளிரவில் விட்டுவிட்டுக் காய்வதோடு, தலைவலியும், குளிரும் தோன்றும். உடலை மிகுந்த துன்பத்திற்குள்ளாக்கி, செந்நிறக் கழுநீர் போன்று நீர் விழும். கர்ப்பத்தைத் தாங்கவிடாமல் செய்கின்ற கர்ப்பக்கிரந்தி என்ற நோயின் தன்மை இதுவாகும்.

இரத்த விப்புருதி

317. மாதவிடை வருநாளே வந்த தென்றால்
வலித்துமடிவயிறு புண்போல் குத்திநொந்தே
பேதமாய் ரத்தமது மிகுந்து வீழ்ந்து
பிறவிநோய் யெனவயர்ந்து பிரலா பிக்கும்
போதவே விளைந்தரத்த மெல்லாம் போனால்
புண்போல நொந்துதண்ணீர் பொசிவாய் வீழும்
இதுதான் இரத்தவிப் புருதி யென்றே
இயம்பினார் வாகடநூல் இயம்பி னாரே. 3

மாதவிலக்கு ஏற்படும்போது வலித்து, அடிவயிறு புண்போல குத்தி நொந்து, இரத்தம் மிகுந்து பிறவி நோயோ எனுமாறு அயர்ந்து போகச் செய்யும். வாய் பிதற்றும். இரத்தம் வடிந்தபின் தண்ணீர் போன்றும் விழும். இதனையே கர்ப்ப விப்புருதி என்று மருத்துவ நூல்களில் கூறியுள்ளனர்.

கர்ப்ப வாயு (குறிகுணம்)
(வேறு)

318. உந்தியின்கீ ழடிப்புறத்தே உருண்டு திரண்டு வாழைக்காய் போலுண்டாம்
அந்தவகை யாகவது மடக்கவொட்டா அந்தயிடப் புறத்தைவிட்டு வலத்தே
நொந்தா லுடம்பதிக மாய்வ றண்டு உலத்து மீது
கொந்துலவுங் குழல்மடவாய் கர்ப்பவாயு கூறிலொன்றாய்த்
திரண்டதெனக் கூறினாரே. 4

உந்தியின் கீழ் அடிவயிற்றில் வாழைக்காய் போன்று உருட்சியும் திரட்சியுமாகத் தோன்றும். இவ்விடத்தில் மடக்க இயலாது. இடப்புறத்தை விட்டு வலப்புறமாக வலி ஏற்பட்டதனால், உடல் அதிகமாக வறளும். நாக்கும் மேனியும் உலர்ந்து போகும். இதனைக் கர்ப்ப வாயு என்பர்.

(கருப்பையில் வளரும் அழிகரப்பான்)
(வேறு)

★ 319. கர்ப்பையதில் நசுகுனிபோல் புண்ணாய்.....
கிரந்தியோடு போல்நாளும் பன்னீர் பாய்ந்து
பொற்புறுகுய் யத்தலத்தில் தினவு முண்டாய்
போதவே யுடல்வறண்டு காய்ச்சல் தோன்றி
உற்பணமாய்க் கர்ப்பத்தை யழித்தே வீழ்த்தி
யொருபோதும் வலிதோன்றா திருக்கு மென்றே
சொற்பெரிய வாகடநூ லதுகையி றார்கள்
சொற்றனர்க ளழிகரப்பா னெனவிதனைத் துணிந்தே. 5

கர்ப்பப் பையில் நசுகுணி (கொப்புளம்) போன்று புண்ணாகி, சிரங்குநீர் போன்று தோன்றி நாளும் அதிலிருந்து நீர் விழுதல், குறியிடத்தில் அரிப்பு உண்டாகும். உடல் வறட்சியடையும். காய்ச்சல் தோன்றும். கர்ப்பத்தை அழித்து வெளியாக்கிய பின் அவ்வலி நீங்கிவிடும். இதனையே வாகடநூலார் அழிகரப்பான் எனத் துணிந்து கூறுவர்.

கர்ப்பக் கிருமி (குறிகுணம்)

320. கீழ்வயிற்றில் சுறுக்கெனவே கடிக்கு மூறுங்
கிண்டியது பிள்ளைப்பூச்சி போலே மீண்டுஞ்
சூழவே குடல்புரட்டி வாய்நீ ரூறித்
துயரமாய் கிறுகிறுத்தே யமையும் பின்னும்
மாதவிடைப் போதிலது வதிக மாகு
மிக்கநா ளமர்ந்திருந்து விம்ம நாளும்
வாழ்வான கர்ப்பமுறுங் கிருமி யென்றே
வழுத்தினார் வாகடநூல் வல்லோர் தாமே. 6

அடிவயிற்றில் சுருக்கென்று கடிக்கின்ற உணர்வும், பூச்சி ஊர்வது போன்ற உணர்வும், பிள்ளைப்பூச்சி கிண்டுவது போன்ற உணர்வும் தோன்றும். குடல் புரட்டும். வாயில் நீர் ஊறும். துன்பத்தோடு தலை கிறுகிறுக்கும். மாதவிடாய் அதிகமாக வெளியேறும். மிகுதியான நாட்கள்

கருப்பையிலிருந்து குருதியானது மாதவிலக்குக் காலத்தில் வெளியேறுவது போன்று வெளியேறும். இது கர்ப்பக் கிருமியின் செயல் என்றார் வாகடநூல் வல்லார்.

கர்ப்பச் சுரம் (குறிகுணம்)
(வேறு)

321. மூலவாய் வினால்நாளு முறைமுறை மலங்கட் டுண்டு
சாலவே யனல்பெ ருத்து தானுந் திக்கீ ழடங்கு
மேலவே புணர்ச்சி யானா லிருங்கர்ப்பந் தன்னைக் காயும்
சீலமா யிதுவே கர்ப்ப சுரமெனக் கிளத்தி னாரே. 7

மூல வாய்வினால் நாளும் அவ்வப்பொழுது மலம் கட்டிப் போதல். அதனால் வெப்பம் அதிகமாதல், அவ்வெப்பம் கீழ் வயிற்றிலேயே தங்கி நிற்றல், புணர்ச்சி ஏற்படுமாயின் கர்ப்பத்திலும் வெப்பம் சேரும். இதனையே கர்ப்பச் சுரம் என்று கூறினர்.

(கர்ப்பப் பையின் குறிகுணம்)

322. வெப்புடன் குளிரு முண்டாய் மிகவடி வயிறு புண்ணை
ஒப்புடன் வலித்துச் செல்லு முதிரமும் விழுந்து வந்தால்
அப்படி யிருக்க வூடே அன்மஞ்சள் நிறச்செல் வீழ்ந்து
இப்படி யிருக்கச் சேவிப் புருதியென் றியம்ப லாமே. 8

வெப்பம் குளிர் இரண்டும் தோன்றி, அடிவயிற்றில் புண் ஏற்பட்டு வலியுடன் உதிரமும் வெளிப்படும். வெளிப்படும் உதிரத்தோடு இடையே மஞ்சள் நிறமாக நீரும் சேர்ந்து விழுதல் விப்புருதி நோயாகும்.

எலும்புருக்கி (நோயின் குறிகுணம்)

★ 323. காலுங் கையு மிகவீங்கி கடுக்கஞ் சந்து மூட்டேகும்
சேலுங் கடினீர் பொருந்துமதின் தினமு மதிக மாய்வீழ்ந்து
மூலப் பொது முடங்கி நொந்து வருமே.....
..... எலும்புருக்கி என்றே முன்னோர் இயம்பினரே. 9

காலும் கையும் மிக வீங்கி, மூட்டுகள் தோறும் நீர்க்கோத்துக் கொண்டு அதிகமாக வீக்கம் காணும். மூட்டுகள் மிகவும் நொந்து மூலச்சூட்டினால் வலி அதிகமாகக் காணும். இதனை எலும்புருக்கி என்று முன்னோர் கூறினர்.

பெரும்பாடு

324. சுரணிதச் சுரத்தி னாலுந் துணுவுட னதங்க ளாலும்
கரணித புண்ணா யுள்ளே கமலங்கண் டித்த லாலும்
விரணமே யறுத்த வாய்போல் மிகுந்துதா னிரத்தம் வீழில்
பிரளைய மானோர் தாமே பெரும்பாடென் றுரைக்க லாமே. 10

சுரோணிதச் சுரத்தினாலும், சுரோணிதம் கருப்பையில் அதிகமாகத் தங்கினாலும், புண்ணாகியிருந்தாலும், வெட்டுப்பட்ட காயத்திலிருந்து குருதி பீறிட்டுக் கொண்டு வருவது போலும், பிரளய காலத்தில் நீர் பொங்கி வருவது போன்றும் கருப்பையிலிருந்து குருதி வெளிப்பட்டு வரும். இதுவே பெரும்பாடு எனப்படும்.

இதற்கு மருந்து

★ 325. சர்க்கரை யிரண்டு வீசை சாதியப் பரங்கிப் பட்டை
ஒக்கவே வீசை யொன்று யுகமையாய் இடித்துத் தூளாய்
மிக்கநீர் மரக்கா லாறு மிகுந்தது குறுகக் காய்ச்சி
சிக்கென புன்னைக் காய்போல் தின்னவே பெரும்பா டெல்லாம். 11

சர்க்கரை 2 வீசை, சாதிக்காய், பரங்கிப்பட்டை வகைக்கு 1 வீசை சேர்த்துத் தூளாக்கி, நீர் 6 மரக்கால் சேர்த்து வற்றக் காய்ச்சி, இளகப் பதத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இதனைப் புன்னைக்காய் அளவு உண்டால் பெரும்பாடு என்னும் நோய் தீரும்.

மலட்டுப் புழு (குறிகுணம்)

★ 326. கருப்பையின் பயத்துத் தண்ணீர் கசிந்துகண் ணோடு நின்றே
இருப்புடனடி பாய்ந்த சுக்கிலம் மேவி டாது
உருப்பையிற் பிள்ளை யில்லா தூதிடுஞ் சரீரந் தானும்
மருப்பையிற் குழலி னாளே மலட்டுநோய் மாறி டாதே. 12

கருப்பையின் உள்ளே இருந்துகொண்டு பயறு கழுவிய நீர் போன்று ஒருவிதக் கசிவை ஏற்படுத்தும். அக் கசிவானது கருப்பையின் முகத்துவாரத்தில் வந்தடையும். புணர்ச்சிக்குப் பின், கருப்பைத் துவாரத்தை நோக்கி வரும் சுக்கிலத்தைக் கருப்பையின் உள்ளே செல்லவிடாது அழிக்கும். மேலும், பிள்ளைப் பேற்றை உண்டாக்காது. இதுவே மலட்டுப் புழுவின் தன்மையாகும்.

(மாதம் ஒன்றிலிருந்து பத்து வரை வருகின்ற நோய்களும் - மருந்தும்)

கர்ப்ப உற்பத்திக் குணம் (முதல் மாதம்)

327. பலப்பல கர்ப்ப ரோகம் பற்றின மிரண்டு ரண்டாய்
மெல்லிய வயிற்றில் தங்கி மிக்கதோர் கர்ப்பந் தன்னை
புல்லிய கொழுந னென்ன புணர்ந்தெழுந் திடுமே யானால்
வல்லியின் கொடிபோல் மின்னாள் மனோபவ வாயு வாமே. 13

(மனோபவ வாயுவிற்கு மருந்து)

327.(அ). தாமரைப் பூவுஞ் சந்தனமும்
இருவேலி யிலாமிச்ச னிதுமூன்றும்
பசுவின் பாலி லரைத்துக் குடித்திட
ஒன்றாந் திங்கள் வியாதி ஒதுங்கிடுமே. 13(அ)

ஆணும் பெண்ணும் கூடிய கலவியால் விந்தணுவும், கருமுட்டையும் சேர்ந்து கருப்பையில் நீர்க்குமிழி போல் முதல் மாதம் கரு உற்பத்தி ஆகும். தாமரைப்பூ, சந்தனம், இருவேலி, இலாமிச்சம் இவற்றைப் 'பாலிலரைத்துக் குடித்திட ஒன்றாம் மாதம் தோன்றும் மனோபவ வாயு என்ற நோய் நீங்கும்.

(இரண்டாம் மாதம் உற்பத்தியாகும் வால கர்ப்பப் பித்தம் - குறிகுணம்)

328. திங்க ளிரண்டு நிறைந்ததெனில் தெரிவை நுதலில் குறுவேர்வும்
தங்கா தசனந் தனையெடுக்குஞ் சரீரம் வெளிறி மஞ்சனித்து
பொங்குஞ் சுரமுங் குளிருமுண்டாய் போத வருத்த மேயானால்
கங்குல் குழலாய் வாலகர்ப்பப் பித்த மெனவும் கண்டுகொள்ளே. 14

நெற்றியில் வேர்க்கும். வாந்தி உண்டாகும். உடல் வெளிறும். மஞ்சள் நிறத்தில் மேனி காணும். சுரமும் குளிரும் உண்டாகும். இதை வால கர்ப்பப் பித்தம் எனலாம்.

**இதற்கு மருந்து**

★ 329. தாமரைப் பூவும் தம்பலமும்
....................கொட்டிக் கிழங்கு மிதுமூன்றுங்
கோவின் பாலில் குடிப்பீராய்
..............
...........
...... இரண்...... அங்
குலைந்து போகுங் கண்டீரே. 15

பாடல் சிதைந்துள்ளதால் பொருள் காணவியலவில்லை. தாமரைப்பூ, தம்பலம், கொட்டிக் கிழங்கு இவை மூன்றையும் பாலில் அரைத்துக் குடிக்க வேண்டும்.

(மூன்றாம் மாதம் உற்பத்தியாகும் உதிர ரோகம்)

★ 330. மூன்றாந் திங்க ளதுதன்னில் முடுகி யிடுப்புத் தான்கடுத்து
பான்ற வ....... வமர்ந்து பின்னு மடந்தேறி
தோன்றல் உதிரங் கண்டதெனில் தவளக்கொடிபோ லிதழ்மடவாய்
என்ற உதிர .... .... எடுத்து உதிர ரோகமிதே. 16

இடுப்பு வலி உண்டாகும். வாயுவானது கருப்பையில் சேர்ந்து பின்னும் அடர்ந்து காணும். கருப்பையிலிருந்து உதிரக் கசிவு உண்டாகும். இதனை உதிர ரோகம் எனலாம்.

**இதற்கு மருந்து**

★ 331. நல்ல சந்தனம் விலாமிச்சம் நலமாம் புனலில் தானரைத்து
ஒன்றாய்க் கலக்கி கொடுப்பீ ராய் ஒருமூன் றாந்திங்கள் .....
.......................................
வல்ல முகைமுலை மடமானே மசகுந் தலையோ டொதுங்கிடுமே. 17

சந்தனம், விலாமிச்சம் இரண்டையும் நீரிட்டு அரைத்து ஒன்றாகக் கலக்கிக் கொடுக்க வேண்டும்.

(நான்காம் மாதம் - உற்பத்தியாகும் கருவால கரப்பான்)

★ 332. நாலாம் திங்க ளதுதன்னில் நாவும் வறண்டு கண்குளிர்ந்து
மேலும் பசலை நிகழ்ந்ததுதா மிக்க முலைக்கண் பாலோடும்
.................. நிகழ்ந்த நீரு மடிக்கடிபோம்
.................. அரிச்சலுந்தான் அகலுநோ கருவால கரப்பானே. 18

நாக்கு வறண்டு போகும். கண் குளிரும். பசலை தோன்றினாற்போல் உடலில் மாறுபாடு காணும். மார்பகத்தில் பால்கசிவு ஏற்படுவதோடு சிறுநீர் அடிக்கடி போகும். அரிப்பு காணும். இதனைக் கருவால கரப்பான் எனலாம்.

இதற்கு மருந்து

★ 333. நெய்தற் கிழங்கு நெருஞ்சிவேர் நேராய் பசுவின் பாலரைத்து
பைய்யப் பைய்யக் குடிப்பீராய் நாலாந்திங்கள் நோயறுமே. 19

நெய்தற் கிழங்கு, நெருஞ்சி வேர் இரண்டையும் பசுவின் பால் விட்டரைத்துக் குறைந்த அளவாய் இடைவெளி விட்டு அருந்த நோய் நீங்கும்.

(ஐந்தாம் மாதம் உற்பத்தியாகும் கர்ப்பச் சூலை வாத குறிகுணம்)

334. அஞ்சாந் திங்க ளதுதன்னில் லாப தாபம் காய்ச்சல்குளிர்
நஞ்சான தையுண்ட வர்போல நாவுங் கண்ணும் வேதகமாய்
விஞ்ச வயிற்று வலிதோன்ற மிகவே வயிற்றுக் கடுப்புமுறில்
செஞ்சோற் றிருவே கர்ப்பசூலை வாதஞ் செய்யுஞ் செயலாமே. 20

தாகம் மிகும். காய்ச்சலும் குளிரும் தோன்றும். நஞ்சை உண்டதுபோல் நாக்கும் கண்ணும் வெந்து வயிற்றில் வலி தோன்றும். வயிற்றுக் கடுப்பு ஏற்படும். இதுவே கர்ப்பச் சூலை எனப்படும்.

இதற்கு மருந்து

★ 335. ஆலம் பூவுஞ் சந்தனமும் ஆவின் பாலி லரைத்து
ஆலம்படாம லருந்தி னராய் ஐந்தாம் திங்கள் வலிபோமே. 21

ஆலம்பூ, சந்தனம் இரண்டையும் ஆவின்பாலில் அரைத்து, அருந்த நோய் நீங்கும்.

(ஆறாம் திங்கள் உற்பத்தியாகும் கட்டுத் தோடம் - குறிகுணம்)

★ 336. மூவிரு திங்கள் தன்னில் முடுகியே யிடுப்பு நொந்து
காவியங் கண்ணும் வாடிக் கனக்கவே தலைநோ வுண்டாய்
மேவிய யிவற்றை நோவு மிகுந்ததா கமுமுண் டானாற்
ஆவிரு குழலாய் கட்டுத் தோடமாய் புகல லாமே. 22

இடுப்பு வலி ஏற்பட்டு கண் சிவந்து தலைவலி உண்டாகி மிகுந்த தாகம் உண்டாகும். இதனைக் கட்டுத்தோடம் எனலாம்.

இதற்கு மருந்து

337. .............. இலா மிச்சந்தா மரைவளை யத்தினோடு
காராம் பசுவின் பால்வார்த்து அரைத்துக் கரைத்துக் குடிப்பீராய்
.........................................
ஆறாந் திங்கள் வியாதியது அன்றே அகன்று யேகிடுமே. 23

........... இலாமிச்சம், தாமரை வளையம் ஆகியவற்றைக் காராம் பசுவின் பால்விட்டு அரைத்துக் குடிக்க நோய் நீங்கும்.

(ஏழாம் திங்கள் உற்பத்தியாகும் விசூரிவாதம் - குறிகுணம்)

338. ஏழாந் திங்க ளதுதன்னில் இழைப்பு மேல்மூச்சு முண்டாகி
தாழா நீரு மிறங்காமல் தறுகி யெரிப்பு கடுப்புமுண்டாய்
சூழச் சுழல்வித் தேசுரமும் தோன்றித் தலையி லிடிப்புமுண்டாய்
வீழப் பண்ணு மிதுதானே விசூரி வாத மெனலாமே. 24

உடல் இழைப்பு, மேல்மூச்சு வாங்குதல், நீர் இறங்காமல் எரிப்பும் கடுப்பும் உண்டாதல், சுரம் தோன்றி தலைவலி ஏற்படல் இதுவே விசூரிவாதம் எனப்படும்.

இதற்கு மருந்து

★ 339. இந்திர கோப மிலாமிச்ச மிதமாய் பசும்பால் வார்த்தரைத்து
தளமான சீலை வடிகொண்டு தானே யருந்த வல்லீராய்
........................ இதமாம்
ஏழாந் திங்கள் வலிதானும் ஏகிப் போகுங் கண்டீரே. 25

இந்திரகோபப் பூச்சி, இலாமிச்சம் இரண்டையும் பசும்பால் விட்டு அரைத்து, சீலையில் வடிகட்டி அருந்த நோய் நீங்கும்.

(எட்டாம் திங்கள் உற்பத்தியாகும் மாயப்புள்ளின் தோடம் - குறிகுணம்)

340. எட்டாந் திங்க ளதுதன்னில் ஏங்கள் வயிறு கடுப்பெடுத்து
தட்டு மிடுப்புந் துடையிரண்டுந் தரித்தாற் போல வாதமுமாய்
கொட்டா விகளுங் குறுவெற்புங் கொண்டே வயிற்றில் வலிமீறில்
மட்டார் குழலா யிதுதானே மாயப் புள்ளின் தோடமதே. 26

வயிறு கடுப்பெடுக்கும். இடுப்பும் தொடையும் வெட்டுப்பட்டதுபோல் வலி உண்டாகும். கொட்டாவியும், வெப்பும் மிகும். வயிற்றில் வலி அதிகமாகும். இதுவே மாயப்புள்ளின் தோடம்.

இதற்கு மருந்து

341. தாமரைப் பூவும் விளாம்பட்டை தானே பசும்பால் வார்த்தரைத்து
ஏற்க வெட்டிவே ரதில்கொண்டால் எட்டாந் திங்கள் நோயறுமே. 27

தாமரைப்பூ, விளாமரத்துப் பட்டை, இரண்டையும் பசும்பால் விட்டரைத்து வெட்டிவேர்க் குடிநீரில் கொள்ள நோய் நீங்கும்.

(ஒன்பதாம் திங்கள் உற்பத்தியாகும் கறுப்புவாதச் சுரம் - குறிகுணம்)

★ 342. ஒன்பது மாதந் தன்னில் உதரமு மிகவுந் தோன்றி
வம்புநீர்க் கடுத்து வீழ்ந்து வயிற்றினில் வாதை உண்டாம்
துன்புறு யிடுப்பில் வாதை தோன்றிய துயரஞ் செல்ல
வன்புறு கறுப்பு வாத சுரமென வழுத்த லாமே. 28

உதிரம் மிகத் தோன்றி, நீர் கடுத்து வீழ்தல், அடிவயிற்றில் வலி உண்டாகி இடுப்பிலும் வலி ஏற்படுதல் இவை கறுப்புவாதச் சுரம் என்பதன் குறிகளாகும்.

இதற்கு மருந்து

★ 343. கொட்டிக் கிழங்குஞ் சிறுபயறுங் கொடியுந் தாமரைப் பூவுடனே
கூட்டி நாலுஞ் சரிகூடக் கொடிய புனலு மிருநாழி
...................... உழக்கரிய
காய்ச்சி ஆவின்பா லருந்துவீராய் ஒன்பதாந் திங்கள் நோயறுமே. 29

கொட்டிக்கிழங்கு, சிறுபயற்றங்கொடி, தாமரைப்பூ, சிறுபயறு ஆகிய நான்கையும் சமன் எடுத்து நீர் இருநாழி கூட்டிக் காய்ச்சி ....... ஆவின் பாலில் அருந்த நோய் நீங்கும்.

பத்தாம் திங்கள் உற்பத்தியாகும் பகட்டுவாத குறிகுணம்

★ 344. பத்தாந் திங்க ளதுதன்னில் பகருங் கண்ணி லுறக்கமில்லை
சுத்த ராசிய தடம்போல வுலர்ந்த நாவு வறட்சியதாய்
......... வலியுண் பார்க்கு மூர்ச்சை யுறவிட்டுங்
கண்டீர் உலப்ப வாராது ஒடுங்கத் தொடரும் சனிபோல் மஞ்சனிக்கும்
நன்னும் பகட்டு வாதமென்றே மதுதா னென்று நயந்தறியே. 30

வண்டித்தடம் போல் நாக்கு உலர்ந்து வறண்டு போகும். வலிமிகும். மயக்கம் தோன்றும். தூக்கம் வராது. உடல் மஞ்சள் நிறம் காணும். இதுவே பகட்டு வாதம் என்று சொல்வர்.

கர்ப்பிணி சுரத்துக்குக் கியாழம் (முதலாம் திங்கள்)

345. சூல்வயிற் சுரத்திற் தோடந் தோன்றிடிற் றேகுமோர் திங்கள்
சாலவை முத்தக் காசு தளிர்ந்தமா துளைவேர் வித்து
ஏலவே சமபாகஞ் செய்து எட்டி லொன்றாய்க் காய்ச்சி
நீலநேர் விழியார் கொள்ளில் நிலைகுலைந் தோடும் தோடம்.

கர்ப்பம் தோன்றிய முதல் மாதத்தில் சுரம் கண்டால், முத்தக்காசு, துளிர்த்த மாதுளை வேர், வித்து, ஏலம் ஆகியவற்றைச் சமன் அளவு எடுத்து எட்டுப்பாகம் நீர்விட்டு எட்டொன்றாகக் காய்ச்சி வடிகட்டி கொடுக்க சுரத்தோடம் நீங்கும்.

இரண்டாம் திங்களுக்கு (தோடம் - கசாயம்)

346. திப்பிலி மூலஞ் சுக்கு சிறந்தபற் படாகஞ் சந்தோடு
ஒப்பிலா முத்தக் காசு உயர்வெட்டி வேருங் கூட்டி
கொப்பென சமபா கத்தால் குறையாமல் காய்ச்சிக் கொள்ளில்
பிற்போலும் அகலுந் தோட மெழில்பெறுந் திங்களிரண்டில்

இரண்டாந் திங்களில், தோடம் ஏற்பட்டால், திப்பிலி மூலம், சுக்கு, பற்படாகம், சந்தனம், முத்தக்காசு, வெட்டிவேர் சமஎடை எடுத்துக் கூட்டி, நீர் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ள நீங்கும்.

மூன்றாந் திங்களுக்கு (தோடம் - கசாயம்)

347. தாமரைக் கிழங்கு சுக்கு தண்ணீர்விட்டான் கிழங்கு தானும்
காமரு லவங்கப் பட்டை கருதுசெங் கழுநீர் கோட்டம்
மாமவட் டத்தெ ரிப்பு நெய்ச்சட்டி அவனி வேம்பு
தாஞ்சம பாகஞ் செய்து சார்ந்திடுந் திங்கள் மூன்றில்

தாமரைக் கிழங்கு, சுக்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, இலவங்கப் பட்டை, செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம், வட்டத்திருப்பி, நெய்ச்சட்டிக் கிழங்கு,

நிலவேம்பு ஆகியவற்றைச் சமன் எடுத்துக் குடிநீரிட்டுக் கொடுக்க மூன்றாம் மாத தோடம் நீங்கும்.

நான்காம் திங்களுக்கு (சுரம் - கசாயம்)

348. நின்பநா காடா தோடை யின்வேர்செங் கழுநீர் கோட்டம்
இன்பமுந் திரிகைப் பழத்தோ டினாவசம பாகஞ் செய்து
கும்பநேர் முலையார் காய்ச்சிக் கொன்றிலா நாலாந் திங்கள்
துன்பமற் றகன்றே யோடுஞ் சுரத்தினிக் கர்ப்ப தோடம்

வேம்பு, நாகு, ஆடாதோடை வேர், செங்கழுநீர், கோட்டம், முந்திரிகை எனும் திராட்சைப் பழம் இவை சமன் சேர்த்து நீரில் கூட்டிக் காய்ச்சிக் கொள்ள நான்காம் மாதத் தோடம் நீங்கும்.

ஐந்தாந் திங்களுக்கு (தோடம் - கசாயம்)

★ 349. கர்ச்சூர் முந்திரிகைக் கனிநில வேம்பு
சுக்குநெய்ச் சட்டி வேருங் கூட்டி
நிகழ நிகழ சமபாகஞ் செய்தே
அப்பொழு தருந்திடில் தோட மகன்றிடும்
திங்க ளைந்து இதுவே யாகும்.

பேரீஞ்சு, திராட்சை ஆகியவற்றின் கனிகள், நிலவேம்பு, சுக்கு, நெய்ச்சட்டிவேர் ஆகியவற்றைச் சமன் எடுத்து நீர்கூட்டிக் காய்ச்சி அருந்திட ஐந்தாம் மாத தோடம் நீங்கும்.

ஆறாம் திங்களுக்கு (தோடம் - கசாயம்)

350. கிரந்தி கத்தை காஞ்சி தரத்தைக் கிளர்தா மரைக்குள் கேசரமும்
பொருந்துஞ் சந்தனக் கட்டையுடன் போந்த செங்கழு நீர்கோட்டம்
வருந்திச் சொன்னோம் செம்புளிச்சங் கட்டை வகையே சமமென்று
அருந்தக் கசாயந் தனையிட்டு ஆறாந் திங்களுக் கிடுவீரே.

கிரந்தி தகரம், எட்டி, தாமரையின் மகரந்த கேசரம், சந்தனக் கட்டை, செங்கழுநீர், கோட்டம், செம்புளிச்சங்கட்டை ஆகியவற்றைச் சமன் எடுத்து கியாழம் காய்ச்சி அருந்த ஆறாம் மாத தோடம் நீங்கும்.

ஏழாந் திங்களுக்கு (தோடம் - கசாயம்)

351. தடுக்காய் சுக்கு கார்கோலி காணும் வல்ல பாதிரிவேர்
மிடுக்காய் கலவை பூக்கிழங்கு மென்செங் கழுநீர்க் கோட்டமுடன்
தொடுப்பாஞ் சுக்கு வேர்கூட்டி தோன்று முத்தக் காசுடனே
எடுப்பாங் கசாயஞ் சமபாக மேழாந் திங்களுக் கிடுவீரே.

கடுக்காய், சுக்கு, கார்கோளி, பாதிரிவேர், கலவைக்கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம், சுக்குவேர், முத்தக்காசு ஆகியவற்றைக் கூட்டிக் கியாழமிட்டு அருந்த ஏழாம் திங்கள் தோடம் நீங்கும்.

எட்டாந் திங்கள் (தோடம் - கசாயம்)

352. சீந்தில் சுக்கு கற்பூரஞ் சிறந்த தீப திராட்சியுடன்
சாந்த மான குணமயிலே சமமே யாகு மெனவுணர்ந்து
தீர்ந்த கசாயந் தனைக்கொள்ளத் திணறுங் குளிர்சுரம் விடுமென்று
ஆய்ந்து சொன்னோந் திங்களெட்டுக் காமா மென்று அறிந்துகொள்ளே

சீந்தில், சுக்கு, கற்பூரம், திராட்சை, சமன் எடுத்து, கியாழமிட்டுக் கொடுக்க, குளிர்சுரம் விடும். எட்டாம் மாதத்திற்கு இம்மருந்து ஏற்றது.

ஒன்பதாந் திங்களுக்கு (தோடம் - கசாயம்)

353. வில்வ பத்திரிக் காய்வேரும் விநாயக மூர்த்தி மூலமுடன்
நல்ல சுக்கு அதிவிடையம் நாறத் திப்பிலி மூலமுடன்
வல்ல யிலுப்பை வேருடனே வகையே பாகஞ் சமன்செய்து
நல்ல கசாயம் நவமாதம் நன்றா மென்றே நாவலரே.

வில்வ இலை, காய், வேர், அருகம்வேர், சுக்கு, அதிவிடையம், திப்பிலி மூலம், இலுப்பை வேர் ஆகியவற்றைச் சமஅளவு எடுத்துக் கியாழம் இட்டு ஒன்பதாம் திங்கள் கொடுக்க நன்றாம்.

பத்தாந் திங்களுக்கு (தோடம் - கசாயம்)

354. வெள்ளைநல் லருகு சுக்கு நெய்ச்சட்டி வேருங் கூட்டி
தெள்ளிய கடுக்காய் விட்டுணு கிரந்திசெம் புளிச்சங் கொட்டை
கள்ளுபூங் குழலாய் கேளாய் சடமா மிசமே செய்து
தொல்லைபோம் பத்தாந் திங்கள் கசாயமே கொள்ளிற் தோடம்.

வெள்ளெருக்கு, சுக்கு, நெய்ச்சட்டிவேர், கடுக்காய், விட்டுணுகிரந்தி, செம்புளிச்சங்கட்டை, சடாமாஞ்சில் இவற்றைச் சமன் சேர்த்துக் கியாழம் இட்டு அருந்த, பத்தாம் திங்கள் தோடம் நீங்கும்.

கபச்சுர குணம்

355. வானீர் கொளுத்து முடம்புபல வண்ண மாக்கு மலமடைக்கும்
தானே குளிர்ந்து வாய்வெதுப்புந் தரியா திருமல் தானுண்டாய்
தேனே நாவுந் தித்திக்கும் சிறந்த மூக்கு நீர்பாயும்
பானோர் விழியாய் சேத்துமமாய் வந்த சுரத்தின் வகைதானே. 1

உடல் கொதிக்கும். மேனி வண்ணம் மாறும். மலச்சிக்கல் உண்டாகும். வெதும்பும் உடல் தானே குளிரும். வாய் வெப்பமுற்று இருமல் மிகும். நாவு தித்திக்கும். மூக்கில் நீர் பெருகும். இதுவே சேத்துமச் சுரத்தின் தன்மையாகும்.

(கபச் சுரத்துக்குக் கசாயம்)

356. தூதுவளை யிம்புறாவே ராடா தோடை
துய்யசிறு காஞ்சொரி முத்தக் காசு
மேதமிலாக் கற்றாழை கண்டங் காலி
ஒத்தசிறு வழுதிலைசுக் கிடித்துக் கூட்டி
பேதமாய்ப் பன்னிரண்டு கழஞ்சு கொண்டுப்
பெருகுபுன லிருநாழி யுரியாய்க் காய்ச்சி
போதியதிப் பிலிபொடிதே னளாவிக் கொள்ள
ஓடியிடுஞ் சேத்துமத்தின் சுரங்கள் தானே. 2

தூதுவளை, இம்பூறல், ஆடாதோடை, சிறுகாஞ்சொரி, முத்தக்காசு, கற்றாழை, கண்டங்கத்திரி, சிறுவழுதலை, சுக்கு ஆகியவற்றைக் கூட்டி

இடித்து 12 கழஞ்சளவு கொள்க. இதனை இருநாழி தண்ணீரிலிட்டு ஓர் உரியாகச் சுருங்கக் காய்ச்சி திப்பிலிப் பொடி, தேன் இரண்டையும் போட்டுக் கலந்து கொண்டு உள்ளுக்குக் கொடுக்க, சேத்துமச் சுரவகைகள் விலகியோடும்.

(வாத பித்த தோடச் சுரக் குறிகுணங்கள்)

357. கைகால் குளிருந் தலைவலிக்குங் கண்ணது வெள்ளேரக் காழமுண்டாம்
மெய்தான் வெதும்புந் தாகமறும் மிகவு முழலை யுண்டாகும்
பொய்யா விதனங் குத்திருமல் பொருந்துஞ் சிரிக்குஞ் செவிகேளா
கையா வாத பித்தமுநேர் கலந்தே தோட சுரங்களென்றே. 3

கைகால்கள் குளிர்ந்து காணும். தலை வலிக்கும். கண் உட்குழிவாகத் தோன்றும். உடல் வெப்பமாகும். தாகம் அதிகமாகும். உடல் உளையும். குத்திருமல் உண்டாகும். செவி கேட்காது. ஓயாது சிரிக்கும். இவ்வாறு உண்டானால் வாதபித்த தோடச் சுரம் என்பர்.

(வாத பித்த தோடச் சுரத்துக்குக் கசாயம்)

358. கழற்சிச் சிராய் நன்னாரி முத்தக்காசு
காசினியென் பேய்ப்புடோல் பேரா முட்டி
வளமான கூவிளைவேர் குளவிக் கூடு
வாய்த்திடுசெவ் வியக்கொடிசெங் கழுநீர் மூலஞ்
சுழல்பொருந்து நாழிக்குறு கழஞ்சு சுருங்க
உழக்காய்க் காய்ச்சி யிஞ்சிச் சாறும்
உழக்காக வுடன்கூட்டி உகந்து கொள்ள
உடைந்தோடுந் தோடச்சுரம் உரத்தின் சீக்கே. 4

கழற்சிக்காய், நன்னாரி, முத்தக்காசு, காசினிவேர், பேய்ப்புடோல், பேராமுட்டி, வில்வவேர், குளவிக்கூடு, செவ்வியத்தின் கொடி, செங்கழுநீர்க் கிழங்கு ஆகியவற்றை இரு கழஞ்சளவு எடுத்து நாழி நீரிலிட்டு உழக்களவாகச் சுருக்கக் காய்ச்சி உழக்களவு இஞ்சிச்சாறும் கூட்டி, உட்கொள்ள தோடச்சுரம் நீங்கும். மார்பு நோயும் நீங்கும்.

(பித்த கபச்சுரக் குறிகுணம்)

359. சிக்கிக் கழியும் முழலைமிகுஞ் சிறந்த உதிர மிகத்தடிக்கும்
மெய்க்குள் விதனஞ் சிக்காதே வெதும்பும் வயிற்று மொழியுண்டாம்
தக்க தாகப் பரிக்குஞ் சரியாகப் பித்தச் சேத்துமமும்
மைக்கண் மடவாய் வாதங்கால் மண்ணுஞ் சன்னி விதத்தியல்பே. 5

மலச்சிக்கல் ஏற்பட்டுப் பின் கழியும். வயிற்றில் உளைச்சலை உண்டாக்கும். இரத்தம் போகும். உடல் வெப்பமாக இருக்கும். வயிற்றில் சத்தம் உண்டாகும். தாகம் எடுக்கும். இதுவே பித்தசேத்துமச் சுரமாகும்.

சன்னிக்குக் கசாயம்

360. இலந்தையிலை நன்னாரி சீந்தில் தண்டு
இருவேலி யிலாமிச்ச மெழில்பூ நாகம்
கலந்தொரு பேய்ப்புடோல் முத்தக்காசு
கண்கோட்டஞ் சுக்குடனே யாடா தோடை
தலம்புகழு முலைப்பாலு மிஞ்சிச் சாறும்
தற்சமனாய் குடிநீருஞ் சரியாய்க் கூட்டி
உலர்ந்ததொரு திப்பிலிமேற் பொடியே தூவி
உகந்துகொள்ள சன்னிச்சுர மோடுங் காற்றாய். 6

இலந்தையிலை, நன்னாரி, சீந்தில் தண்டு, வெட்டிவேர், இலாமிச்சம், நாகப்பூ, பேய்ப்புடல், முத்தக்காசு, கோட்டம், சுக்கு, ஆடாதோடை, தாய்ப்பால், இஞ்சிச்சாறு இவற்றோடு மேற்படிச் சரக்குகள் கொண்டு செய்த குடிநீர் சமன் கலந்துகொண்டு, அதில் திப்பிலிப் பொடியைத் தூவி உட்கொள்ள சன்னிச்சுரம் நீங்கும்.

(வேறு)

361. கற்றாழை யின்சருகு கருவேப் பிலைத்தண்டு
கண்டங் கத்திரி யதனின்வேர்
உற்றாடுங் கற்கண்டு கடுகுரோகணிநீர்
ஊறும் காராம் பூவுடனே
பெற்றாடு முந்திரி கையின்பலங் கூட்டி
பிசைந்த சாறொரு கூறதாய்
வற்றா முலைப்பாலு முக்கூறு கூட்டிக்கொள்ள
மலமான சன்னி மாறவே. 7

கற்றாழைச் சருகு, கருவேப்பிலைத் தண்டு, கண்டங்கத்திரி வேர், கற்கண்டு, கடுகுரோகணி, இலவங்கப்பூ, திராட்சைப்பழம் அனைத்தையும் பிசைந்து சாறாக்கி ஒரு கூறும், தாய்ப்பால் மூன்று கூறுகளும் என்ற அளவில் கூட்டிக் கொள்ள சன்னி நீங்கும்.

(திரிதோடச் சுரம் - குறிகுணம்)
(வேறு)

362. மலமான துமிருகி யறிவுங் குலைந்துசுர மதுதானு முளதாகியே
தலைமார்பு கண்டமிவை மிகவே வெதும்புமிரு தலைவலியு மிஞ்சியிடவே
பலகா லெழுந்திரும லாயே உளைவின் படிக்கேமி குஞ்சொற்பமாய்
குலவாத ஐசரிப் பித்தமுங் காலுடன் கூடுமதி தோடச்சுரமே. 8

மலமானது இறுகி, அறிவு மங்கி, சுரம் ஏற்பட்டு, தலை மார்பு கழுத்து ஆகியவற்றில் வெப்பம் கூடி, தலைவலி ஏற்படும். இருமல் உடல் உளைச்சல் காணும். இதுவே திரிதோடச் சுரமாகும்.

இதற்குக் கசாயம்

363. அதிமதுர மிருகழஞ்சு லவங்க மிருகழஞ்சு சனியேல முக்கழஞ்சும்
உதவுமொரு யிருவேலி தானுமொரு முக்கழஞ்சு மன்றலார் சந்தனம்
புதுமையா யிருகழஞ் சொருகழஞ் சிடுசுண்டி பொங்குதிப் பிலியதுமாய்
உதவுமொரு கொத்தமல்லி ஆழாக்குக் கூடனியோடுந் திரிதோடச் சுரமே. 9

அதிமதுரம் இருகழஞ்சு, இலவங்கம் இரு கழஞ்சு, ஏலம் 3 கழஞ்சு, வெட்டிவேர் 3 கழஞ்சு, சந்தனம் இரு கழஞ்சு, சுக்கு ஒரு கழஞ்சு, திப்பிலி 1 கழஞ்சு, கொத்தமல்லி ஆழாக்கு இவற்றைக் கூட்டிக் கியாழமிட்டுக் கொடுக்க, திரிதோடச் சுரம் நீங்கும்.

திரிதோடச் சுரம் (வேறு)

364. ஒப்பொடு குளிர்ந்துவர முகம்வேர்வை பலகாலும் முள்சேத்து மமெடுக்கும்
வெற்பொடு முழங்கால் குளிர்ந்திடுந் தலைவலியு மிஞ்சிமல மும்சிக்கிடும்
கைப்புபுளிப்பி னோடுதித் திக்கும் வாயுங் கறுத்திடும் வாதமுடனே
துப்புத் பித்தமுஞ் சேத்தும முற்றியே புதியதிரி தோடச்சுரமே. 10

உடல் குளிரும். முகம் வியர்க்கும். உட்கபம் மிகும். முழங்கால் குளிர்ந்து காணும். தலைவலி உண்டாகும். மலச்சிக்கல் உண்டாகும். கசப்பு, புளிப்பு, இனிப்பு ஆகிய சுவைகளை இணைத்துக் காட்டும். வாயும் கறுத்திருக்கும். வாதபித்த கபமாகிய திரிதோடங்கள் கூடிய சுரம் இதுவாகும்.

(திரிதோடச் சுரம் கசாயம் - வேறு)

★ 365. துய்யசிறு காஞ்சொரி வட்டத் திருப்பிவேரின் வேரினிய கண்டங்காலிவேர்
மெய்வரி நெல்லிமொழி சுக்கொடு கடுக்காயும் மிகுதான்றிக் காய்சீந்தில்
உய்யவே தேனினோடு திப்பிலி யழாவிகொள்ளொடுந் தூதுவளை நன்னாரிவேர்
உய்யுமா டாதோடை சிறிய ....... திரி தோடங்கண்ணே. 11

சிறுகாஞ்சொரி, வட்டத்திருப்பி வேர், கண்டங்கத்திரிவேர், நெல்லிமுள்ளி, சுக்கு, கடுக்காய், தான்றிக்காய், சீந்தில் இவற்றோடு தேனும் திப்பிலியும் கூட்டிக் கலந்து கொண்டு, தூதுவளை, நன்னாரிவேர், ஆடாதோடை .... முதலியவற்றைக் கூட்டிக் கியாழமிட்டருந்த திரிதோட சுரம் நீங்கும்.

(முறைசந்திச் சன்னி குறிகுணம்)

★ 366. கண்ணுஞ் சிவந்தே .... கறுத்தே
யிருந்தே பலகாலு மெழுந்திருக்கும்
மென்னுங் களத்தில் மிகப்பரி வானது
மன்றியெப் பொழுதுமே மூர்ச்சையாய்
நண்ணுந் தலைக்குள் வலியுளதாய்
வெதும்பியிடு நடுமார்பு கச்சைநிலையும்
முன்னே றெழுந்திவை யானகுண
மேசெய்யும் முறைசந்தி சன்னிசொல்லே. 12

கண் சிவந்து, உடல் கறுத்து, படுக்கையில் உடல் நிலைகொள்ளாது எழுந்திருக்கும், மூர்ச்சையுண்டாகும். தலை வலிக்கும். நடுமார்பில் கச்சைகட்டி இறுக்கினாற்போல் வலி காணும். இத்தன்மைகள் கண்டால் முறைசந்திச் சன்னி ஆகும்.

(இதற்குக் கசாயம்)

367. சொற்படர் கின்ற ஆடாதோடை இலையினிய தூதுவளை சிறுவழுதிலை
கற்புடைய நற்சிற்றா முட்டிவேர் சுக்குக் கலந்தமுத்தக் காசுடன்
பற்படாகஞ் சந்தனமிலுப்பை யின்பூ பன்னிரு கழஞ்சுகொண்டே
ஒற்புடைய நீருமிரு நாழிதனில் எட்டோன் பேசிக்கொள சிந்தைகெடுமே. 13

ஆடாதோடையிலை, தூதுவளை, சிறுவழுதிலை, சிற்றாமுட்டி வேர், சுக்கு, முத்தக்காசு, பற்படாகம், சந்தனம், இலுப்பையின்பூ ஆகிய ஒவ்வொன்றும் பன்னிரண்டு கழஞ்சு கொண்டு இருநாழி நீரிலிட்டு எட்டொன்றாகக் காய்ச்சி உட்கொள்ள, சந்திச் சன்னி நீங்கும்.

(கசாயம் - வேறு)

★ 368. சீந்தில் முத்தக்காசு கூவிளையின் வேரினோடு சீர்மருவு
பேய்ப்புடோல்வேர்
வாய்ந்த கொத்தமல்லி சுக்குடனே மிகவும் மருவுசிற்றா முட்டிவேரே
ஆய்ந்த பேராமுட்டி யிலாமிச்சை நன்னாரி யெண்கடுகு ரோகணியுடன்
ஆய்ந்தொரு கழஞ்சு இருநாழி நீருழக்காய் கொள் நடுசந்திச்
சன்னிகெடவே 14

சீந்தில், முத்தக்காசு, வில்வ வேர், பேய்ப்புடோல்வேர், கொத்தமல்லி, சுக்கு, சிற்றாமுட்டி வேர், பேராமுட்டி, இலாமிச்சை, நன்னாரி, கடுகுரோகணி வகைக்கு இரு கழஞ்சு எடுத்து இருநாழி நீரிலிட்டு உழக்களவாய்க் காய்ச்சிக் கொள்ள, சந்திச் சன்னி நீங்கும்.

தாந்திரிகச் சன்னி (குறிகுணம்)
(வேறு)

369. நடுநாவில் நீர்த்துவெஞ் சுரமு மிகுந்தே
நடக்க வனலது வாயினால்
உடலாதி யுண்மையிது பலகுணமு மாகியே
யுற்றதோ ரன்னஞ் செல்லாக்
கொடிதாகி யேமெத்த தாகமிகு தாகங்
குறித்த கால்கை தளர்வாந்
தடமார்பு டம்புங் குளிர்ந்து தவளித்திடுந்
தாந்திரிகச் சன்னி சிறியே. 15

நாவு மிகக் கறுத்து, நீரின்றி வரண்டு, சுரத்துடன் குத்தலும் தோன்றும். உடலில் பலவாக மாறுபாடு ஏற்படும். உணவு செல்லாது. தாகம் மிகும். கைகால்கள் தளரும். மார்பும் உடலும் குளிர்ந்து காணும். இதுவே தாந்திரிகச் சன்னி ஆகும்.

(இதற்குக் கசாயம்)

370. சீந்தில் பற்படாக மோடு வெட்டிவேர்
பேய்ப்புடோல் செய்ய சுக்கு வசம்பு
ஆய்ந்த நீரில் நாழி பன்னிரு
கழஞ்சிட்டு வெள்ளி தாகக் காய்ச்சியே

சேந்த உடனே உழக்கா யிறுத்தே
கொண்டு செய்து பரிகாரஞ் செய்தால்
ஆய்ந்த பாரோர் சொன்ன சன்னி
வகையிற் றனையும் உறுதிவிட் டோடுமப்பால். 16

சீந்தில், பற்படாகம், வெட்டிவேர், பேய்ப்புடோல், சுக்கு, வசம்பு இவற்றை 12 கழஞ்சளவு எடுத்து நாழி நீரிலிட்டு, உழக்களவாய்க் காய்ச்சிக் கொண்டு உட்கொள்ள, சன்னி வகையனைத்தும் நீங்கும்.

இரத்தேட்டிகச் சன்னி குறி குணம்
(வேறு)

371. பல்லடிகள் நாசியிரு கண்களுஞ் செருகியே பலபேத மாகவுடனே
சொல்லிடுங் கிடைகோளா வியல்பாகி யேயுற்ற துயரோடு கூப்பிடலுமாய்
நல்லகுண மானதுவும் மில்லாம லேசற்று நலமிலா வரிவாறுமே
பொல்லாத ரத்தேட் டிகச்சன்னி யென்றிதைப் புகல்வார்நா வலர்பூவிலே. 17

பல் கிட்டும். நாசி அடைக்கும். கண்கள் செருகும். இவ்வாறு பலவாறு உடல் மாறுபட்டு துன்பம் நீங்கும். பிறரை அருகழைக்கும். குணத்திலும் நலம் குன்றி மாற்றம் காணும். இதனை இரத்தேட்டிகச் சன்னி என்று கூறுவர்.

(இதற்குக் கசாயம்)

372. பூசணித் தண்டு முத்தக்கா சுடனே பொற்பான கம்பந்திராய்
மாசருக் குஞ்சிறு வழுதிலை யின்வேர்கொத்த மல்லியொடு பற்படாகம்
பேசுமக் கராகாரம் சுண்டிநன் னாரிபுன லிருநாழி யிற்காய்ச்சியே
வாச முற்றே கொள்ளத் இரத்தேட்டி கண்வலி மாறியிடு மறிதியே. 18

பூசணித்தண்டு, முத்தக்காசு, கம்பந்திராய், எருக்கு, சிறுவழுதலைவேர், கொத்தமல்லி, பற்படாகம், அக்கராகாரம், சுக்கு, நன்னாரி ஆகியவற்றை இருநாழி நீரிலிட்டுக் காய்ச்சி உட்கொள்ள, இரத்தேட்டிகச் சன்னியால் வரும் கண்வலி நீங்கும்.

(அந்தகச் சன்னி - குறிகுணம்)

★ 373. அறிந்துகால் கையுங் குளிர்ந்துநல் வாயதனிற் சிறப்பின்றி யேகறுக்கும்
நிறைந்துநீறு நுதலியும் விசையினொடு தலைமுகம் நிற்றமுற்றேவலிக்கும்
அறியாம லும்வயிறு குளியாமலும் அலத்துகை பாண்டுமென்மேல்செறிந்து
அறைந்தனமென் னந்தகச் சன்னிசுர மான தடைவது கூறுமாவே. 19

கை, கால் குளிர்ந்து, வாய் கறுத்து, வாய்நீர் வடியும். தலை, முகம் நடுக்கலோடு நிற்காமல் வலிக்கும். தன்னை அறியாமல் பிதற்றும். வயிறு எரியும். பல சிந்தை உண்டாகும். இதுவே அந்தகச் சன்னியின் குணமாகும்.

(இதற்குக் கசாயம்)

374. ஓராறு மிருவேலி வேரோடி லாமிச்சை யினியபற் படாகமதுவும்
சீராய் வரும்சுக்கி னுடனே சிறந்ததோர் சிறுதேக்கை யும்கூட்டியே
பாரோ ருரைத்தவிரு நாழிநீர்க் காய்ச்சிப் பதமுழக் காயிறுத்தே
கோரோச னைமுலைப் பால்கூட்ட மாறும் குறித்த நற்சன்னியே. 20

வெட்டிவேர், விலாமிச்சை வேர், பற்படாகம், சுக்கு, சிறுதேக்கு ஆகியவற்றைச் சேர்த்து இடித்துப் பொடித்துக் கொண்டு இருநாழி தண்ணீர் சேர்த்து, ஓர் உழக்காகக் காய்ச்சி வடித்து, கோரோசனையுடன் தாய்ப்பால் கூட்டிக் கொடுக்க அந்தகச் சன்னி தீரும்.

**சீதாங்கச் சன்னி - (குறிகுணம்)**

375. குளிர்ந்துகாய்ச் சல்மிக மாயிருஞ் சிலிர்த்திடுங் குலவுதண் ணீர்தாகமாந்
தளர்ந்துபசி யாமலே தானுமாய் மார்புதனித் தாக்கிளைப் புண்டாக்கியே
வளைந்துதலை வலியுமாய் அனையிற் பொருந்தாது மன்னும்பல குணவிதமாய்
விளைந்தயிவை சீதாங்கச் சன்னியென் றேசொல்வர் மிகவும்நூல் வல்லோர்களே. 21

காய்ச்சல் மிகுந்து, உடல் நொந்து குளிர்ந்து நடுக்கும். மேனி வியர்க்கும். தண்ணீர் தாகம் எடுக்கும். அயர்வு ஏற்பட்டு பசி ஏற்படாது. மார்பில் மூச்சிறைக்கும். உடல் உளைச்சல் ஏற்பட்டுத் தலைவலி உண்டாகும். உடல் ஓரிடத்தில் பொருந்தாது எழுந்து விழுந்து தள்ளாடும், இத்தன்மைகள் தோன்றினால் சீதாங்கச் சன்னி என்று கூறுவர்.

**இதற்குக் கசாயம்**

376. ஏல மிலவங்கநற் சந்தனம் பாரோர்க ளிடுபூசணித் தண்டுடன்
கோலுஞ் சுரைத்தண்டு தூதுவளை வேருடன் குலவுசுக் குங்கலந்தே
சால விருநாழி நீரூறி யுழக்காக வேதான் காய்ச்சியே குடித்தால்
சீலமிகுஞ் சீதாங்கச் சன்னிசுர மோடிடுஞ் செப்பினோம் பலகாலுமே. 22

ஏலம், இலவங்கம், சந்தனம், பூசணித் தண்டு, சுரைத் தண்டு, தூதுவளை வேர், சுக்கு இவை வகைக்கு கால் பலம் எடுத்து இடித்து ஒருபடி தண்ணீர் விட்டு, ஓர் உழக்காகக் காய்ச்சி வைத்துக் கொண்டு கொடுக்க, சீதாங்கச் சன்னி தீரும்.

பிரலாபச் சன்னி - (குறி குணம்)

377. பலகாலு மருள்கொண்டு சொல்லாது சொல்லிப் பயின்றிடும் படுக்கைதனிலே
கலவா தடிக்கடி எழுந்தே யிருந்திடுஞ் கங்குலின் போதுசுரமாங்
குலவாத ளும்பின்னை யுடனே நகைப்புக் கொடுத்திடு முழலையுளதாய்
சிலபிரவ மெண்ணுமிது பிரலாபச் சன்னியின் சேதியிது சீர்சிறுகவே. 23

உடல் படுக்கையில் கிடக்காது அசைந்து புலம்பிக் கொண்டே இருத்தல், உடல் வெப்பமடைந்து புண் போல, உடல் முழுவதும் சுரம் காய்ந்து எவரையும் கண்டபடி நகைப்புறப் பேசல், இக்குணங்கள் கண்டால் பிரலாபச் சன்னியாகும்.

(இதற்குக் கசாயம்)

378. சிறுகாஞ் சொரிசிறு தேக்குச் சிறந்த வட்டத் திருப்பியுடன்
உறவாஞ் சுக்கு நிலவேம்பு முகந்த சிறிய வழுதிலையும்
மறிவா முத்தக் காசுடனே அளந்து நீரு மிருநாழி
குறைவா யுழக்காகக் கொள்வீரேல் குலையும் பிரலாபச் சுரங்களுமே. 24

சிறுகாஞ்சொரி, சிறுதேக்கு, வட்டத்திருப்பி, சுக்கு, நிலவேம்பு, சிறுவழுதிலை, முத்தக்காசு ஆகியவற்றுடன் நீர் இருநாழி கூட்டி, உழக்களவாகக் காய்ச்சிக் கொண்டு உட்கொள்ள பிரலாபச் சுரம் தீரும்.

கண்டச் சன்னி (குறி குணம்)

379. கழுத்தும் பதைக்கும் குமையுந் தூக்க விசைகடுஞ் சுரத்தொடு மிகவாய்
அழுத்தும் மொழித்திற மும்நாவும் வறண்டிடு மனேகவுரு வாகுமிரவில்
செழித்த நீர்மெத்தங் கழிந்திடு மாளா செய்யும்வி தங்கள்பலவாய்
வழுத்திடும் தரணிதனில் கண்டதிரன் சுரம்வந்திடு மரைத்தீரவே. 25

கழுத்துப் பதைபதைக்கும், கள் குடித்தவன் போலத் தூக்கம் வரும். மிகு சுரத்தோடு நா வறண்டு, பேச முடியாமல் இருக்கும். இரவில் அனேக உருவங்களைக் கண்டவாறு பிதற்றும். அதிகமாக நீர் கழியும். இதுவே கண்டச் சன்னி எனப்படும்.

இதற்குக் கசாயம்

380. அரத்தையுந் தேவதாரங் கடுகுரோகணி யணிந்தசிறு தேக்கினுடனே
திரைத்தநில வேம்புடன் சிறியவழு தலையின் வேர்சீராய் விளங்கு சுக்கும்
உரைத்தவிவை பன்னிரு கழஞ்சு மிருநாழி புகட்டிக் காய்ச்சியே
கரைத்துழக் காய்வடித் தேகுடித் தால்மிகு கண்ணகச் சன்னியோடுமே. 26

அரத்தை, தேவதாரம், கடுகுரோகணி, சிறுதேக்கு, நிலவேம்பு, சிறுவழுதலை, சுக்கு இவையாவும் வகைக்கு பன்னிரு கழஞ்சு எடுத்துப் பொடித்து, இருநாழி நீர்விட்டு எட்டொன்றாகக் குறுக்கி வடிகட்டிக் குடித்தால் கண்ணகச் சன்னி நீங்கும்.

கண்குழிவுச் சன்னி சுரம் (குறிகுணம்)
(வேறு)

★ 381. கண்ணும் இனி... யதிக... குளிர்ந்தே
தளர்ந்தே கறுக்கும் நாவும் பல்லுமே
எண்ணுஞ் சுரங்களுக்கு முழலையுண் டாகு
மினிய நித்தி ரையும்வா ராது
உண்ணு படிக்கு அவனையொட் டாது
கொண்டா லுவட்டுக் குணங்கள் செய்யும்
நன்னும் படிக்கு மிவைகள் குழிவுச்
சன்னிசுரம் நன்றா யறிந்த மட்டே. 27

கண்கள் இரண்டும் குளிர்ந்து, தளர்ச்சியடைந்து, நாவும் பல்லும் கறுக்கும். உடல் சுரத்தினால் உளைச்சல் உண்டாகும். அதிகமாக நீர் கழியாது. உண்ணும் உணவை உடலில் ஒட்டவிடாது. இவை கண்குழிவுச் சன்னி சுரம் எனப்படும்.

இதற்குக் கசாயம்

382. மட்டார் காரம் பூவுமிடு கடுகு
ரோகணியும் வன்மைசெய் பற்படாகம்
வெட்டலா மிகுத்த கண்டங் காலிவேர்
சுக்கு வேறாக வேகூட்டியே

கட்டார் மிகுங்காண் மல்லிகைத் தண்டுங்
கலந்து பன்னிரு கழஞ்சிட்டு
எட்டாயிதைக் காய்ச்சியே குடித்தா லோரிமைப்
பதனில் நீரு நீங்கிடுமே. 28

அக்கராகாரம், இலவங்கம், கடுகுரோகணி, பற்படாகம், கண்டங்கத்திரிவேர், சுக்கு, காட்டு மல்லிகைத்தண்டு ஆகியவற்றைக் கலந்து பன்னிரு கழஞ்சளவு கொண்டு நீர் சேர்த்து எட்டொன்றாய்க் காய்ச்சிக் குடிக்க நீர் கழிந்து சுரம், சன்னி தீரும்.

அறமலிச் சன்னி (குறிகுணம்)

383. நீருங் கறுத்தது சாயுமிக வுந்திட நிறைந்த பலமும் வலுவுமாய்
பேருங் கைகாலுந் துணுக்கென மிக்கதளர்வு பின்மு துகுமே நெளிப்பா
யாரு நிற்றந் தலையின் வலிவயிற்று வலியாகும் செறிந்து விதமாய்
சாரும் படிக்கி வைகளுண் டாகில் அறமலிச் சன்னியென் றேபாருமே. 29

சிறுநீர் கறுத்த நிறத்துடன் கழியும். கை கால்கள் வலுவிழந்து வலியை உண்டாக்கும். புறமுதுகில் பொறுக்க முடியாத வலியை உண்டாக்கி உடலை முறுக்கச் செய்யும். தலை நடுக்கத்துடன் வலி, வயிற்றுவலி ஆகிய குறிகுணங்கள் உண்டானால் அறமலிச் சன்னி என்று கூறலாம்.

இதற்குக் கசாயம்

384. பாதிரி முன்னை கூவிளை பெரியவாகை
பார்முழு தென்குமிழ் சுக்குசிற்றா மல்லி
பேதமில் பேராமல்லி யிலாமிச்சம் நன்னாரி
பேருகன் சிற்றாமுட்டி பேரா முட்டி
ஏதமில் கண்டங் காலிவேர் நெருஞ்சி
ஏற்ற திருநாழி நீரெட் டொன்று
ஓதயிஞ் சிச்சாறு யுழக்காய்க் கூட்டி
யுகந்து கொள்ள சன்னிசுரம் ஓடுந்தானே. 30

பாதிரி, முன்னை, வில்வம், பெரியவாகை, நிலக்குமிழ், சுக்கு, சிற்றாமல்லி, பேராமல்லி, விலாமிச்சம் வேர், நன்னாரிவேர், சிற்றாமுட்டி, பேராமுட்டி, கண்டங்கத்திரி வேர், நெருஞ்சில் இவற்றை இடித்துப் பொடித்து இருநாழி நீர் விட்டு எட்டொன்றாகக் குறுக்கிக் காய்ச்சி வடிகட்டி இஞ்சிச்சாறு ஓர் உழக்குக் கூட்டிக் கொள்ள, சன்னிசுரம் நீங்கும்.

அதிகச் சன்னி குறிகுணம்

385. ஒன்றுமரை நாளளவாய் வெதும்பி நிற்ற
முற்றுளவை தாகமிகும் வயிறு சிக்கி
துன்றியநீர் தெளிவாகுஞ் சுரமும் மீறி
துலங்கியவெம் பசியழலுஞ் சொல்லுங் காலே
என்றுமுள பலமழகு மழியுஞ் சன்னி
யின்குணத்தை யடைவாக வியம்பு போது
நன்றிமிகு பண்டிதர்க ளறிந்து சொல்வர்
நாள்தோறு மதிகச்சன்னி யாகுந் தானே. 31

உடல் வெதும்பி, உளைச்சல் ஏற்பட்டு, தாகம் அதிகமாகும். வயிற்றில் மலம் சிக்கும். நீர் மட்டும் பிரியும். சுரம், பசி இருக்காது. உடல் பலமும் அழகும் அழியும். இதுவே அதிகச் சன்னியின் குணம் என்று கூறுவர்.

இதற்குக் கசாயம்

386. நொச்சியிலை பற்படாகம் பேரா முட்டி
நொய்தாக வுலர்த்தியபூ சணியின் தண்டு
பச்சைநிறச் சுக்குடனே திப்பிலியு மிடித்துப்
பரிவாகப் பன்னிரண்டு கழஞ்சு கொண்டு
வைத்த தண்ணீ ரிருநாழி யுழக்காய்க் காய்ச்சி
வாய்மடித்துக் குடித்திடவே மாநி லத்தோர்
மெச்சிடவே யதிகசன்னி சுரந்தா னாளும்
மெய்யைவிட்டே யகலுமென விளம்பு மங்கே. 32

நொச்சியிலை, பற்படாகம், பேராமுட்டி, பூசணித்தண்டு, சுக்கு, திப்பிலி, இவற்றை வகைக்கு 12 கழஞ்சு எடுத்து இடித்து, இருநாழி நீர் விட்டு ஓர் உழக்களவாகக் குறுக்கிக் காய்ச்சி வடிகட்டிக் குடித்திட அதிகச் சன்னி சுரம் தீரும்.

செய்கண்டச் சன்னி குறி குணம்

387. அங்கங்க ளெங்குமிகு புண்போ லிருப்பனவும் அறியுஞ்சந்து களிடமெலாம்
எங்குஞ் செறிந்து தனித்துவயி றானதும் எரித்துக் கடுஞ்சுரமுமாய்
தங்குங்கை காலுந் தளர்ந்துழலை செய்திடுந் தலைவலியு மாகிமிகவே
செங்கணுறங் காதுமரு ளப்பயின் றிடுஞ்செய் கண்டச் சன்னிகெடவே. 33

உடம்பெல்லாம் புண்போல இருக்கும். சந்துகளெல்லாம் தினவெடுத்து, வயிற்றில் எரிச்சல் ஏற்படும். கடுஞ்சுரம் தோன்றி, கை கால் தளர்ந்து உளைச்சல் ஏற்படும். தலைவலி ஏற்பட்டு, காது செந்நிறமாகும். இதுவே செய்கண்டச் சன்னியின் குணமாகும்.

இதற்குக் கசாயம்

388. கடுகு ரோகணி தேவதார வெண்காரவுள்ள காற்குநொச்சி யிலையோடு
அடிபேரா முட்டிகண் டகனுடைந் தோடவே எழில்பூ சணித்தண்டுமே
விடுநீருமிரு நாழிபன் னிருகழஞ் சிட்டு வெந்துநுழக் கித்திப்பிலி
பொடிதூவி இஞ்சியின் சாறுழக்கு கொள்ளு போகாத சுரம்வேறா. 34

கடுகுரோகணி, தேவதாரு, நொச்சியிலை, பேராமுட்டி, கண்டங்கத்திரி, பூசணித்தண்டு வகைக்கு பன்னிரு கழஞ்சு எடுத்து ஓர் உழக்காகக் காய்ச்சி வடித்து திப்பிலிப் பொடி தூவி ஆழாக்கு இஞ்சிச்சாறும் சேர்த்து உட்கொள்ள போகாத சுரம் போகும்.

அசுவமேகச் சன்னி (குறிகுணம்)

★ 389. வேறாதொரு காலு மிகவுஞ் சொலித்திடும் மெத்தவேயசனஞ் செல்லு
மோராத தண்ணீ ரினித்தாக முண்டா யுடம்பிளைத் துரைக்கு மொழிதாக
நேரான கண்ணு நித்திரை மிகுமென்றே நிகழ்த்தினார் வாகடத்
தேராதோர் அசுவமேகச் சன்னிசுர மென்றுசொல்
துப்புநிகர் செண்டலங் கையாய். 35

கால் மிக நொந்து, உடல் வலிக்கும். தாகம் அதிகமாக உண்டாகும். கண்ணிலிருந்து நீர் வடியும். தூக்கம் மிகும். அசுவமேகச் சன்னியின் குணம் இதுவாகும்.

இதற்குக் கசாயம்

390. செண்பகங் கொத்தமல்லி ரோகணி மாஞ்சிலஞ் செங்கழுநீர் கோட்டமும்
ஒண்பாவு சீதேவி செங்கழுநீர் சுக்கு மோரனபற படாகம்
தண்பாவு மிருநாழி நீருழக்கா யிஞ்சிதன் சாறுழக் காய்பின்
பண்பாவு திப்பிலிகள் மேற்பொடிக ளாகக் கொள்பரி
சன்னி கெடமிகவே. 36

செண்பக மொட்டு, கொத்துமல்லிவிதை, கடுகுரோகணி, செங்கழுநீர்க் கிழங்கு, சீதேவி செங்கழுநீர்க் கிழங்கு, பற்பாடகம், இவற்றோடு தண்ணீர் 2 நாழி கூட்டி உழக்களவாகக் காய்ச்சி வடிகட்டி, திப்பிலிச் சூரணம் சேர்த்து அருந்தச் சன்னி போகும்.

செங்கோட்டுச் சன்னி குறி குண்ம்

★ 391. மிகவேவற்றி யழுமறிவு முண்டாகி யேவினவ வந்தார் கள்தனையே
தகவொத்தி யேகைகள் கொடுகுத்தி யேவரு தன்சீலை யைப்பீறிடும்
புகழமூல மிதுதனி லரைத்தண்ணி லேகை பொருத்திடு
மிந்தவகையே
செகமீது ளோரறிய விக்குறிகள் செய்திடுஞ் செங்கோட்டுச்சன்னி
செங்கே. 37

உடல் வற்றும். அழுகை தோன்றும். அறிவு மயங்கும். மேனி இளைக்கும். கண்ணில் நீர் பெருகும். தன்னருகில் வந்தவர்களைக் கைகளால் குத்துவதோடு, தன் ஆடைகளையும் கிழித்துக் கொள்ளும். இத்தகு குறிகுணங்களைக் கண்டால் செங்கோட்டுச் சன்னி என்று அறிந்து கொள்ளலாம்.

இதற்குக் கசாயம்

392. செங்கழுனி யின்கிழங் கதிமதுர நற்சீந்தில்
செய்யதா மரையின் வளையம்
துங்கமிகு பேய்ப்புடோல் வேரி லுப்பைபூத்
துலங்குசிறு தேக்குடனே
தங்கிடு சுக்குமிரு நாழிநீ ரெட்டொன்றாய்க்
காய்ச்சியே யுழக்காய்
மங்கையர் முலைப்பாலு மேற்பொடிகள் திப்பிலி
கொள்வாரது சன்னிசந்தே. 38

செங்கழுநீர்க் கிழங்கு, அதிமதுரம், நற்சீரகம், சீந்தில், தாமரைத் தண்டு, பேய்ப்புடல், இலுப்பை வேர், சிறுதேக்கு, சுக்கு இவற்றோடு தண்ணீர் இருநாழி கூட்டி, உழக்களவாக வற்றச் செய்து திப்பிலிச் சூரணம், தாய்ப்பால் கூட்டிக் கொடுக்கச் சன்னி போம்.

(சன்னிச் சுரம் கசாயம்)

393. சந்தனம் பற்படாக மிருவேலி கொத்தமல்லி தரணியென சுக்கினுடனே
இந்தவகை யானபொடி பன்னிரு கழஞ்சுகொடு மிருநாழி நீரைவார்த்தே
வெந்தபி னுழக்காய் முலைப்பாலுமே கூட்டி மேற் பொடிகள் திப்பிலியுடன்
இந்தவகை கொள்வறட்டு சன்னிவாரா திடைத்தோ டும்பற்றி விடுமே. 39

சந்தனம், பற்படாகம், வெட்டிவேர், கொத்துமல்லி விதை, சுக்கு, இவை வகைக்கு 12 கழஞ்சு சேர்த்துப் பொடி செய்து 2 நாழி தண்ணீர் சேர்த்து உழக்களவாகக் குறுகக் காய்ச்சி வடிகட்டித் தாய்ப்பால், திப்பிலிச் சூரணம் கூட்டிக் கொடுக்கச் சன்னி தீரும்.

394. பற்படாக நன்னாரி யிருவேலி முந்திரிகைப் பழமது பேரீச்சம்பழம்
பொற்புலவு சுக்குமா டாதோடை கூடவே பூசணித் தண்டிடித்தே
நற்பொடிகள் பன்னிரு கழஞ்சுமிரு நாழிநீர் நன்றா ழாக்காக்கியே
உற்பெரு முலைப்பா லுழக்குமேற் பொடிதா னுகந்துதிப் பிலிக்கொளிதே. 40

பற்படாகம், நன்னாரி, வெட்டிவேர், உலர்ந்த முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், சுக்கு, ஆடாதோடை, பூசணித்தண்டு வகைக்கு 12 கழஞ்சு எடுத்து 2 நாழி நீர் விட்டு உழக்களவாகக் குறுகக் காய்ச்சி, தாய்ப்பால், திப்பிலி கூட்டி அருந்தச் சன்னி தீரும்.

(சன்னிச் சுரம் கசாயம் - வேறு)

395. இந்துப்பு வெண்கார வெள்ளுள்ளி சுக்கோடும் பேராமுட்டி யாதளைவேர்
பந்தித்த சீந்தில்நா ரத்தையிலை நொச்சிலும் பலவுமொன் றாயிடித்து
பந்துத்த பன்னிரு கழஞ்சுடன் திப்பிலியு மொன்றரைக் காசெடையதாய்
கொந்துற்ற விருநாழி நீருழக்காய்க் கொள்குலைப் போடுமா றுகையாய். 41

இந்துப்பு, வெண்காரம், வெள்ளுள்ளி, சுக்கு, பேராமுட்டி, ஆதளைவேர், சீந்தில், நாரத்தையிலை, நொச்சியிலை இவற்றைச் சேர்த்து இடித்து 12 கழஞ்சு எடுத்து, ஒன்றரைக் காசெடை திப்பிலிக் கூட்டி 2 நாழிநீர்விட்டு உழக்களவாகக் காய்ச்சி வடிகட்டி அருந்தச் சுரம் நீங்கும்.

396. கையாந் தகரை தூதுவளை கடிய நொச்சி பிரமியுடன்
மெய்யாய் விளங்கு நீர்முள்ளி விராகியமல்லி கைத்தண்டு
செய்யாக் கரந்தை பேராமுட்டித் திகழுஞ் சுக்கு நறுக்கியிட்டுத்
தூயதாய்க் காய்ச்சிக் குடிப்பீராய் சுரவியக் கம்போம் சொல்கமே. 42

கையாந்தகரை இலை, தூதுவளை, நொச்சி, பிரமி, நீர்முள்ளி, மல்லிகைத் தண்டு, கரந்தைச் சமூலம், பேராமுட்டி, சுக்கு இவற்றை நறுக்கி 2 நாழி நீர்விட்டு, காய்ச்சி ஒரு உழக்களவாகக் குறுக்கி, குடிக்கச் சுரம் நீங்கும்.

(வேறு)

397. சுக்கு முத்தக் காசுபே ராமுட்டி
துலங்கியபங் கம்பாளை சிறுகாஞ் சொரி
தக்க வாளச் சுண்டியொடு புளியம்பட்டை
தருமிலந்தைப் பட்டைகாட் டாத்திப் பூவும்

மிக்கபெரு மரப்பட்டை குடசப் பாலை
மேவுமிரு நாழிநீ ருழக்காய்க் காய்ச்சி
ஒக்கவதி விடையமோடு காசுக் கட்டி
யுகந்த பொத்திச் சுரமோடிப் போமே. 43

சுக்கு, முத்தக்காசு, பேராமுட்டி, பங்கம்பாளை, சிறுகாஞ்சொரி, புளியம்பட்டை, இலந்தைப்பட்டை, காட்டாத்திப்பூ, பெருமரப் பட்டை, குடசப்பாலை விதை ஆகியவற்றை இருநாழி தண்ணீர் சேர்த்துக் கொதிக்க வைத்து உழக்களவாக வற்றச் செய்து அதிவிடயம் சேர்த்துக் கொடுக்கச் சுரம் நீங்கும்.

(இதற்குக் கசாயம்)

(வேறு)

398. நறுவிலித் துளிர்மாந் துளிரின் பட்டை
செரிகொள் வட்டத் திருப்பியு முத்தமும்
முறுகொள் சுக்குடன் பேரா முட்டிமேல்
வெரியக் காய்ச்சோ டதிவிடையங் கொள்ளே. 44

நறுவிலி துளிர், மாந்துளிரின் பட்டை, வட்டத்திருப்பி, முத்தக்காசு, சுக்கு, பேராமுட்டி, அதிவிடையம்,

(வேறு)

399. சாரணையின் கிழங்கு கிலுகிலுப்பை தானுமிந்த
தாரணி யென சிற்றா மல்லிபெரு மருந்து
வீறுபூ சணியிற் றண்டு சங்கு
மிஞ்சுநிலக் கண்ணியோடு கோவைத் தண்டு
கூறுமுருங் கைப்பட்டை புங்கம் பட்டை
குலவுமுடி மேல்முடிசெம் முள்ளி செம்பை
தேருகடுக் காயுடன் வெள்ளாட்டு நீருஞ்
செய்யகழுதைச் சாணாகந் தேடிக் கொள்ளே. 45

சாரணைவேர், கிலுகிலுப்பை, சிற்றாமல்லி, பேராமல்லி, பூசணித் தண்டு, சங்கங்குப்பி வேர், நிலக்குமிழ்வேர், கோவைத்தண்டு, முருங்கைப்பட்டை, புங்கம்பட்டை, செம்முள்ளி, செம்பை, கடுக்காய், வெள்ளாட்டு நீர், கழுதைச் சாணம்,

400. செம்பைவிரை செங்கழுநீர்க் கிழங்கு தான்றி
சீருடைய செண்பகப்பூ கடுக்காய் நெல்லி
விம்பவிழும் நன்னாரி தேவ தாரம்
வளர்சிவதை தூதுவளை மருவுஞ் சுக்கு
நம்புமுரு வீழித்தண்டு தான்றி கூட்டி
தாளிநீர்க் கறுகழஞ்சு நாளுங் கொண்டே
கும்பமுலை யார்உழக்காய்க் காய்ச்சிக் கொள்ள
கூறும்விச பாகச்சுரங் குலைந்து போமே. 46

செம்பை விதை, செங்கழுநீர்க் கிழங்கு, தான்றிக்காய், செண்பக மொட்டு, கடுக்காய், நெல்லிவற்றல், நன்னாரி, தேவதாரம், சிவதை,

தான்றிக்காய், தூதுவளை, சுக்கு, வீழித்தண்டு, வகைக்கு ஆறு கழஞ்சு எடுத்து இருநாழி நீர் சேர்த்து உழக்களவாக வற்றக் காய்ச்சிக் குடிக்க விசபாகச் சுரம் நீங்கும்.

(வயிறுவீக்கம் முதலியவற்றிற்குக் கசாயம்)

401. அசமோத கமிளகு கடுகுதிப் பிலிசுக்கு மாளாறக் கழற்பருப்புஞ்
திசைமேவு மிந்துப்பு வெள்ளுள்ளி கருவேம்பு சீராம்வ சம்பினுடனே
பசைமேவு புங்கு முட்கா வளைகொற பகர்கின்ற சாரணை யின்வோ்
திசைமேவு நற்கடுக்காய் தான்றிமோர் குறுணி சேரவில்லை
வெவ்வேறுதான். 47

ஓமம், திப்பிலி, கடுகு, கழற்சிப்பருப்பு, இந்துப்பு, வெள்ளுள்ளி, கருவேம்பு, கிராம்பு, வசம்பு, புங்கு, முட்காவேளை, சாரணை, கடுக்காய், தான்றிக்காய் வகைக்கு ஒரு குறுணி இடித்துப் பொடித்து,

402. ஒன்றங் கழஞ்சு கூட்டிகடு காக்கியே உயர்பரி காரஞ்செய்தால்
நின்றிடும் வயிறு மேற்பொருமல் வீக்கமெனும் நில்லா
விரைச்சலெல்லாந்
துன்றிடு நீரிற் கடுப்பு கைகால் வீக்கமும் சொல்லமு தற்பாரமும்
வென்றிடும் வயிறு கழியாது கொன்னோமின்று மிக்கதோர்
பரிகாரமே. 48

ஒரு கழஞ்சு நீர் கூட்டி எட்டொன்றாகக் குறுக்கி வடித்துக் கொண்டு, வயிற்றுப் பொருமல், வயிறுவீக்கம், வயிறு இரைதல், கடுப்புடன் நீர் இறங்கல், கைகால் வீக்கம், வயிறு கழியாது நின்ற பாரம் ஆகியவற்றுக்குக் கொடுக்கத் தீரும்.

(கசாயம்)

403. தேவ தார மரத்தை சிறுதேக் குச்சிறு காஞ்சொரி
மேவுவெண் காவட்டம் புல்வெள் ளுள்ளி தாழும் நொச்சில்
காவ தார முட்காவளைக் கடிய தோர்நில வேம்பு
மேவு பன்னிரு கழஞ்சுமிகக் கூட்டி நீரிற் கொள்ளே. 49

சார சங்கிரகம் முற்றும்

தேவதாரம், அரத்தை, சிறுதேக்கு, சிறுகாஞ்சொரி, வெள்ளுள்ளி, காவட்டம்புல், நொச்சில், முட்காவேளை, நிலவேம்பு ஆகியவற்றைப் பன்னிரு கழஞ்சு எடுத்துக் குடிநீர்க் காய்ச்சிக் கொள்க.

நீர்ப்பசிரி குணம்

★ 404. உடம்பு மழற்றிக் கொப்பளித்து உடனே யெரியுஞ் சுரமாகும்
மடந்தே நீருந் தான்தளும்பி அதிக மூச்சுத் தானெரியும்
..................................
கடந்த நீரின் பசிரியெனக் கண்ட வுடனே யறிவாயே. 1

உடம்பு உளைந்து, கொப்பளித்து வெப்பம் மிகுந்து சுரம் தோன்றும். நீர் கோத்துக்கொள்ளும். மூச்சு வாங்கும். ......... இக்குணங்கள் கண்டால் நீர்ப்பசிரி என அறியலாம்.

(நீர்ப்பசிரி - கசாயம்)

405. தக்கபுகழ் தாழை விழுதுட நீர்கொண்டு தானரைப் பலவெல்லமும்
ஒக்கநற் சீரக மீருள்ளி தன்னோ டரைப்பல மாகவும்
திக்குளோர் புகழ்கருஞ் சீரகங் கழஞ்சுடன் இதமாக வேகூட்டியே
நிற்குமே நீர்ப்பிசிரி யதுவானது மேகி நிலைகுலைந் தோடுமே. 2

தாழை விழுது எடுத்து நீர் கூட்டி அரைத்து அரைப்பலம் வெல்லம், சீரகம், வெங்காயம் இரண்டும் அரைபலம், கருஞ்சீரகம் ஒரு கழஞ்சு இவற்றைக் கூட்டி உட்கொள்ள நீர்ப்பசிரி நீங்கும்.

(கடவுள் வாழ்த்து)
(வேறு)

406. திருவாக்குஞ் செய்கருமம் கைகூப்பும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடம் பெருக்குமே - உருவாக்கும்
ஆதலால் வானோரே ஆனை முகத்தோனைக்
காதலால் கூப்புவர்தம் கை.
கணபதியே நமஃ

விநாயகரை வணங்கினால், செல்வம், நாவன்மை, செய்யும் தொழில் சூழ்வினைக்கு ஆட்படாது நன்மை பயத்தல், பிறர் நம்மைப் புகழ்ந்து போற்றும் உயர்ந்த மதிப்பீடு, உயர்பதவி இவையாவும் பெருகும் என்பதால் பாரோர் விநாயகரை உளமொன்றி வணங்குவர்.

அரிஓம் நன்றாக (நோயின் வகைகள்)
(வேறு)

407. மாதவத்தொரு வாகடரும் பண்டுல குறுமுனி
மாந்த ராய்ந்து வடமொழி யதனால் திடமுடன்
மந்த வைத்திய சாத்திரந் தன்னை
மகடூஉமுன் னிலையாய் யுகப்பலப் பாவராய்
அருங்கலியுகம் நாலாயிரத் தொண்ணூ ராண்டு
சென்றதற்பின் அறிந்த லக்கண மேல்
சுரலக் கணமான தோடமோ ரேழு
பதின்மூன்று சன்னியும் பதத்தில் கூறும்
இயல்பிலா வாதம் எண்பத்தி நான்கும்
மூவன் பித்தமும் முப்பன் சிலேத்துமம்
சொல்வகைக் கைந்து சுவாச காசமும்
பதினொன்று காமாலை ஐந்து பஞ்சமிப்
பாண்டு பதினெட்டு, குட்டம் இருபது
மேக கவியதிற் பாதி யலந்த
பீனிச மோராறு மூலமோ ரெட்டு
கண்ணில்நோய் தொண்ணூற் றாறும்
பேசக் கற்பம் பிறசத சுலோபம்
சூரணம் லேகியம் கற்கமங் கசாயமங்
கடுத்திடு சுரசம் நசியம் அஞ்சனம்
புகைஅஞ்சுக்கு மாறும் அவிசத சுத்தி

அரிதார பற்பம் மனங்கமல் கிரதம்
வடித்த தைலம் மாத்திரை இந்த
வகையறவே விரித்தென் கடம்பன் மேவிய
கங்கை குலாதி பண்பத மந்திரி
சேகரன்தன் மந்திரி யனையான்
யானை முகவான் அவர்பாதம் போற்றி
பண்டிதந் தன்னைப் பண்புடன் பண்ணுமே.

குரு வாழ்க!

பெருந்தவ வலிமையுடைய வாகட முனிவர் தொன்மையான அகத்திய முனிவர் இயற்றிய மருத்துவ நூல்களை ஆராய்ந்து வடமொழியில் தெளிவாக வைத்திய முறைகளை, பெண்ணை விளித்துக் கூறுகின்ற முறைகளில் பல யுகங்கள் நிலைபெற்று இருக்கும் வகையிலே அரிய கலியுகத்தில் நாலாயிரத்து தொண்ணூறு ஆண்டுகள் சென்ற பின்னர் அறியப்பட்ட அந்த இலக்கணத்தின் மேல் சுரலக்கிண தோடம் ஏழும், சன்னி சுரம் பதிமூன்றும் மூவகையான வாதம் எண்பத்து நான்கு, பித்தம் முப்பது, சிலேத்துமம் ஐந்து, சுவாசகாசம் ஐந்து, காமாலை பதினொன்று, பாண்டு ஐந்து, குட்டம் பதினெட்டு, மேகம் இருபது, தவிசை பத்து, பீனிசம் ஆறு, மூலம் எட்டு, கண்நோய் தொண்ணூறு இவற்றிக்குக் கற்பம், சூரணம், லேகியம், கற்கம், கசாயம், சுரசம், நசியம், அஞ்சனம், ஐந்துபுகை, அவிசத சுத்தி, அரிதாரப் பற்பம், மணக்கும் நெய், வடித்த தைலம், மாத்திரை இந்த வகையினை விரித்துள்ளேன்.

(பாம்புக் கடிக்கு மருந்து)

408. ஆண்டவ ரானா ரோடே அடங்கிய பூண்டின் வேரும்
தாண்டவர் சிரத்தின் மீதில் தரித்தவெண் பூவின் வேரும்
பாண்டவர் மரத்தின் வேரும் பரித்துநீ தின்னத் தின்ன
தீண்டிய அரவஞ் சாகுஞ் செத்தவர் மீள்வ ரன்றே.

சிவனார் வேம்பின் வேர், தும்பைச் செடியின் வேர், வாகை மரத்தின் வேர் இம்மூன்றினையும் கூட்டி உண்ண, பாம்பு தீண்டியதால் மரணத்தின் வாயிலுக்குச் சென்றவரும் மீளவர்; தீண்டிய பாம்பு இறக்கும்.

(மிளகரையான் விளக்கம்)
(வேறு)

409. முப்புரத்தைத் தீயெரித்தான் யிந்தப் பேரும்
முன்னாளில் ஈசனுண் ஊனின் பேரும்
இப்புவியில் வெண்ணெய் உண்ட யுக்கன் பேரும்
இம்மூன்று பேரும்ஒரு பூண்டின் பேரும்
அப்பணியுஞ் சடையனை .... அச்ச னாதா
அம்மையுடன் திருவிளத்தி லறிந்த பிறகு
தப்பாம லிப்பூண்டின் பேரே சொன்னால்
அத்தமிளக் குரையானென்றே சாற்ற லாமே.

முப்புறத்தைத் தீயினால் எரித்தவனுடைய பெயரினையும், ஈசன் உண்ட ஊனின் பெயரினையும், மனித அவதாரத்தால் பூமியில் தோன்றி வெண்ணெய் உண்டவனின் பெயரையும் கொண்ட ஒரு பூண்டினுடைய பெயரினையும் கருத்தில் கொண்டு சடைமுடியினை உடைய சிவபெருமானை உமையாளோடு சேர்த்து வணங்கினால் சிந்தையில் மிளகரையான் என்ற பெயர் தோன்றும்.

அரிஓம் நன்றாக
(கரு உற்பத்தி விளக்கம்)
(வேறு)

410. ஆகுநாள் வித்துண் டாகி ஐந்துநாள் கருப்போ லாகும்
போகமூ வைந்து நாளில் பொருந்திய முட்டை போலாம்
ஏகபா தத்தி ரகமா மிரண்டினி வரைமட் டாகும்
பாகமா மூன்றாந் திங்கள் பகர்ந்திடு மட்டு மாமே. 1

கலவியின் காரணமாகச் சுரோணிதத்துடன் விந்து கலக்கும்போது வித்தாகி, ஐந்து நாளில் கரு உருவாகும். பதினைந்து நாட்களில் முட்டை போன்று வடிவம் பெறும். இரண்டாம் திங்களில் பாதி அளவு வளர்ந்த பாதம், மூன்றாந் திங்களிலும் அந்நிலையிலேயே இருக்கும்.

411. மட்டுடு நாளாந் திங்கள் வளர்ந்திடு பாத மெங்கும்
கட்டுடன் ஐந்தாந் திங்கள் கருதுபூனைமா மாறில்
தட்டுட னெலும்பு சீவன் தலைமயிர் நரம்புபோ லாகும்
எட்டுடன் மூவர் மொன்ப தியல்தசை பிறவி யாமே. 2

நான்காம் மாதத்தில் பாதம் உண்டாகும். எலும்பு, உயிர், தலைமயிர், நரம்பு முதலியன வளரத் தொடங்கி எட்டாம் மாதத்தில் வாத பித்த பாகங்கள் செயல்படலாகும். ஒன்பதாம் மாதத்தில் குழந்தை தன் முழு உருவத்தை அடைந்துவிடும்.

(பிறக்கும் குழந்தையின் பல நோய்க்குரிய காரணங்கள்)

412. வருகாச மாற்ற மாங்கிசம் வளர்கின்ற மேதி வற்றி
கருமிகு பச்சை யோடு கலந்தசுக் கிலந்தா னேழாம்
உருவெனுஞ் சரீர மாகி உயர்ச ரேசமுஞ் செய்து
பருவரை முலையி னாளே பற்பல ரோகந் தானே. 3

காசம் அதிமாங்கிச நோயுடையவர், மேனி வற்றிக் காணப்படுவார். அவரது சுக்கிலம் கரும்பச்சை நிறத்தில் காணப்படும். அவரால் உருவாகிய குழந்தை பல்வேறு நோய்களை உடையதாகக் காணப்படும்,

(வாழ்நாளில் அய்ய, பித்த, வாத காலமுறை)

413. அய்யமுப் பத்து மூன்று வருடமு மதிக நாளுஞ்
செய்யதிங் களுமாப் பிற்றன் சேதியப் படியே சீராய்
உய்யவே வாத மந்தப் படிஅது வயது நூறாய்த்
தையலே வாக டத்தின் சாத்திரப் படிகள் தானே. 4

மனிதனின் வாழ்நாளான நூறு ஆண்டுகளில் அய்யம் முப்பத்து மூன்று ஆண்டுகளும், மேலும் பல நாட்களும் அதிகரித்துக்

காணப்படும். இத்தகைய கால அளவிலேயே பித்தமும் வாதமும் காணப்படும் என்பதை வாகடத்தின் சாத்திரத்தால் அறியலாம்.

(வாழ்நாள் விபரம்)

414. மண்ணின் கூறிருப தாண்டு வழாபுத் தேயு வாயு
விண்ணின்கூ றுடனே நூறு வயதென விளங்கு மப்பால்
எண்ணினா லாயி ரத்து நானூற்று நாற்பத் தெட்டும்
வெண்ணின்மிக் காய மானே பிறிதுநாள் மொழிகின் றேனே. 5

மனித வாழ்வில் மண்ணின் கூறு இருபதாண்டு ஆகும். இவ்வாறே தீ, காற்று, விண் ஆகியவற்றின் கூறுகளையும் கூட்ட நூறாண்டுகளாகும். இந்நூறாண்டு வாழ்க்கையில் உடலுக்குத் தோன்றும் நோய்கள் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு ஆகும்.

பிருதிவியின் கூறு

415. சீர்பிரு திவியு மப்புந் தேயுவும் வாயு தானும்
ஆர்பெரு மாக யத்தோ டைம்பூ தங்க ளாகும்
நேர்பிரு திவியின் கூறு நெடும்பா ரெலும்பு தோலும்
பார்நரம் போடல் லாமல் பாகத்தைத் தன்னோ டைந்தே. 6

மண், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியன ஐம்பூதங்களாகும். இவற்றுள் மனித உடலில் மண்ணின் கூறு, எலும்பு, தோல், நரம்பு மற்றும் அதனோடு இணைந்த பகுதிகளாகிய ஐந்தையும் குறிக்கும்.

அப்புவின் கூறு, தேயுவின் கூறு, வாயுவின் கூறு

416. அப்புவின் கூறு தானு மாடுநீ ருதிரம் வெள்ளை
செப்புமுன் மூளை மச்சைத் தேயுவின் கூறே தென்னில்
ஒப்புமாங் காரந் துஞ்சா லுயர்பயம் போகஞ் சோம்பல்
இப்புவி வாயுவின் கூறே தென்னிலி யம்பு வோமே. 7

நீரின் கூறுகள் உதிரமும், சுக்கிலமும், மூளையும் எலும்பிலுள்ள மச்சையும் ஆகும். தீயின் கூறு ஆங்காரம், அச்சம், கலவி, சோம்பல் ஆகியன. வாயுவின் கூறுகளை இனிச் சொல்வோம்.

வாயுவின் கூறு ஆகாயத்தின் கூறு

417. ஓடலு மிருத்தல் தானும் முயர்பெரு நடத்தல் நிற்றல்
வாடவுங் கிடத்த லஞ்சும் வளருமா காய மென்னில்
நாடமுங் காமம்கு ரோதம் நயம்பெறு மோக லோபம்
திடமுடன் மதமோ டைந்து தெளிந்துநீ தேர்ந்து பாரே. 8

ஓடுதல், ஓரிடத்திருத்தல், நடத்தல், நிற்றல், வாடுதல், கிடத்தல் ஆகிய ஐந்தும் வாயுவின் கூறுகளாகும். நாடுதல், காமம், குரோதம், மோகம், லோபம், மதம் ஆகிய ஐந்தும் ஆகாயத்தின் கூறுகளாகும்.

தசவாயு

418. வந்தந்தப் பிராண னபானன் வளரு மாயா னோடு
தந்தமுன் னுதுரணன் மிக்க சமான மனாகன் கூர்மன்
சிந்தைசேர் கிருக ராதி தேவ தத்த னும்ம
விந்தமா தனஞ்செ யன்கொ லிதுதச வாயு வன்றே. 9

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன் ஆகியன தசவாயு எனப்படும்.

பிராண வாயு

419. பேசுதம் பிராண வாயு பெருகிய நீல வர்ணம்
தேசுநெஞ் சதனுள் நின்று சேரும்ப குட்டா தென்னில்
தூசுகே சாதி யாகி சொல்லுமூச் சுவாச மாகி
மாசுநிச சுவாசம் பண்ணி வளரன்னஞ் செரிக்கு மங்கே. 10

பிராணவாயு நீல வண்ணம் கொண்டது. நெஞ்சிலே தங்கிச் சேரும். தலை முதலாகத் தோன்றி சுவாசமாக நிற்கும். உணவைச் செரிப்பிக்கச் செய்யும்.

அபானன் வாயு, வியான வாயு

420. பரிபெறு அபான வாயு பச்சைவண் ணமுமாய் கய்ய
புரிபெறு தூனஞ் சேர்ந்து புகழ்மலஞ் சலத்தை நீக்கி
வரிபெறு சேனஞ் சுருக்கி வருமன்னா சத்தைச் சேர்க்கும்
தரிபெறு வியான வாயுந் தான்வண்ணம் பசுவின் பாலே. 11

அபான வாயுவின் நிறம் பச்சை வண்ணம். மலவாயை இடமாகக் கொண்டது. மலம், சிறுநீர் இவற்றை வெளியேற்றச் செய்யும். அன்னசாரத்தை உரியவாறு உடலில் சேர்க்கும். வியான வாயுவின் நிறம் வெண்மை.

உதான வாயு

★ 421. சருவசந் தனில்நின்று தானிட்டல் முடக்கல் பண்ணி
பெருமன்ன பானந் தன்னைப் பலப்பட நிறைப்பித் தாங்கே
யுரிதரு முதான வாயு மின்னின் வடிவன் கண்ட
திருதய மிருந்து தும்மல் இருமலுங் கனவு மன்றே. 12

உடலில் உண்ண சந்துகள், மூட்டுப் பொருத்துகள் தோறும் பொருந்தி நின்று, கால்கைகளை நீட்டல், முடக்கல் ஆகியவற்றைச் செய்யும். உதான வாயு மின்னின் நிறம் கொண்டது. இதயத்தை இடமாகக் கொண்டு தும்மல், இருமல், கனவு காணல் ஆகியவற்றை நிகழச் செய்யும்.

சமான வாயு

422. என்னநின் றெழுப்பி வித்து மெடுப்பிற்று நிறுத்தி வித்தும்
மன்னசா ரங்க ளெல்லாம் மத்தந்த தான சேர்க்கும்
சொன்னதோர் சமான வாயு தோன்றிய நீல வண்ணம்
பண்ணிய நாபிச் செந்துப் பாதம்கஞ் சமன்கொண் டாமே. 13

எழுப்பிவிடுதல், குரலெடுத்தல், நிறுத்துவித்தல், அன்னசாரங்களை உடலில் உரிய இடங்களில் சேர்ப்பித்தல் ஆகியவற்றைச் செய்யும். சமான வாயு நீல வண்ணம் கொண்டது. நாபியிலும், பாதங்களிலும் சமமாகப் பரவி ஓடும்.

நாகன் வாயு, கூர்மன் வாயு

423. கொண்டமுன் னனந்தன் னில்கோ ளரசமு ரோமஞ் சேர்க்கும்
கண்டமுன் னாக வாயுக் காரணம் வண்ணம் பொன்னாம்
மண்டரோ மங்க ளாகி யசைவி லாற்படி நிற்கும்
விண்ட கருமன் வண்ணம் வெள்ளையாய் சொல்லு மன்றே. 14

நாக வாயு பொன்னிறம் கொண்டது. உடலின் உரோமங்களை நிமிர்வித்து அசைவிலாதபடி நிற்கச் செய்யும். கூர்மனின் நிறம் வெண்மை.

கிருகரன் வாயு

424. சொல்லிய உதரலாடன் தோன்றிமெய் சுமந்து கொண்டு
வல்விய பலமுண் டாக்கி வரும்படி பண்ணி வாயை
மெல்லியல் பான மூடல் மிகவுமே திறத்தல் பண்ணுங்
கல்லிய கிருக ராதி கறுப்புவண் ணமுமா மென்றே. 15

உதரலாடன் உடலைச் சுமக்கக் கூடிய பலத்தைத் தரும். வாயை திறத்தல் மூடல் முதலியவற்றைச் செய்விக்கும். கிருகரன் வாயுவின் நிறம் கறுப்பு வண்ணம்.

தேவதத்தன் வாயு

425. பன்றிய நாசி நாவில் பசியாதி தனமஞ் சொல்லி
நன்றியே யிருத்தல் போதல் நயம்பெறு தேவ தத்தன்
என்றியே படிவா னன்மி யல்குய்யத் தான மன்றி
கன்றியே கடிதா னத்தில் கலந்துதான் படுப்பிற் றங்கே. 16

மூக்கு, நாசி ஆகியவற்றில் பசி முதலானவற்றை உண்டு பண்ணும். இருத்தல், செல்லுதல் முதலான செயல்களைச் செய்விக்கும். குதம், குய்யம் ஆகிய இடங்களில் இருக்கும். தேவதத்தன் என்ற வாயுவானது குறியிடத்தில் தங்கும். உறக்கம் தோற்றுவிக்கும்.

தனஞ்செயன் வாயு

426. படுத்ததை யெழுப்பி வித்துப் பரிவுடன் னிறக்கப் பண்ணி
எடுத்தோம் பலனைப் போக்கி யல்புட னார வாரந்
தொடுத்தபேச் சுண்டாய் மெத்தத் தோன்றிய தனஞ்செ யன்தான்
விடுத்ததோர் நீல வர்ணம் பிருமாந்தி ரத்தி லாமே. 17

தனஞ்செயன் படுத்தலிலிருந்து எழுப்புவிக்கும். சோம்பலைப் போக்கும். ஆரவாரிக்கும். பேச்சை மிகுதியாக்கும். இத் தனஞ்செயன் நீல வண்ணம் கொண்டது.

தனஞ்செயனின் மரணக் காலம்

427. தந்திர மாகக் கன்னந் தன்னிலே சமுத்திரம் போல
சுந்தரக் கோச மாகித் துலங்கினாள் மரண கால
மந்த நீர்க்கோ சந்தான் மறையவர் முனிவர் சொல்ல
இந்திரத் திசைக்கோர் வாயுவென விதுவறிந்து பாரே. 18

இது தந்திரமாக மூக்கிலிருந்து தடித்து உடம்பு முழுவதும் வீங்கச் செய்யும். காதில் கடல் இரைச்சல் போல் இரைச்சலிட்டு இறந்துவிடின் காற்றெல்லாம் வெளிப்பட்ட பின்னர் மூன்றாவது நாளில் தலை வெடித்த பின்தான் போகும். இந்திர திசையான கிழக்குத் திசைக்குரிய வாயுதான் என்று அறிந்து கொள்வீர்.

தசநாடிகள்
(வேறு)

428. வருமிட பிங்கலை வருமூச் சுழிமுனை
யருவுகாந் தாரித் தானத்தி பிங்கலையோடு
ஒருமலம் புருடனும் புகழ்குரு சங்கினி
திருவளர் வயிரவன் திசைசொல் நாடியே. 19

இடகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, புருடன், கரு, சங்கினி, வயிரவன் ஆகியன தச நாடிகள் ஆகும்.

(தச நாடிகளின் இருப்பிடங்கள்)

429. இடையது சந்திர நாடி யிரவிபிங் கலைக்கு மாகும்
படைபெரு சுழுமுனைக் கும்பாய் கில்மத் திமமே நாம
துடைபெரு காந்தா ரிக்குச் சொல்லிநீ வலது கண்ணா
மடையவே அந்தி பிஞ்ஞக னுக்கிட மிடக்கண்ண தாமே. 20

இடகலை என்பது சந்திர நாடி. பிங்கலை என்பது சூரிய நாடி. சுழுமுனை என்பது மத்திம நாடி.

430. அலமது வலது கன்னம் மாமது புருட னிந்தப்
பலமிடக் கன்ன மாகும் பார்குக நாடிக் காம
சிலமிகு சங்க னிக்கு சேர்குய்ய நாடி யாகும்
நலமிகு வயிர வன்தான் நாடியில் நாடி யாமே. 21

அலம்புடை வலக்கன்னத்தை இடமாகக் கொண்டது. புருடன் இடக் கன்னமாகும். சங்கனி நாடி குய்யத்தை இடமாகக் கொண்டது.

(கடவுள் வாழ்த்து)
(வேறு)

431. வேத மாய்நெறி சேரும் வினைகளும்
தாக கோக விடாத் தளர்ச்சியும்
சோக வாரியில் நால்வரு துன்பமும்
போக வானை முகத்தனைப் போற்றுதும்

வேதநெறி நின்று சேரும் வினைகளும், தளர்ச்சியும் துன்பமும் யானை முகனை வணங்க நீங்கும்.

432. வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்திருக்கு மரசரோ டென்னைச்
சரியா யிருத்திவைத் தாய்.

வேலும் மயிலும் துணை

வெள்ளை ஆடை உடுத்தி, வெண்ணிற வீணை கையிலேந்தி, வெண்டாமரையில் வீற்றிருப்பவளான கலைமகள், என்னை வெண்ணிற அரியாசனத்தில் வீற்றிருக்கும் அரசரோடு சரியாசனத்தில் இருத்தி வைப்பாள்.

433. பட்டுக் கலையுடுத்திப் பட்டுப் பணிபூண்டு
பட்டுக் கமலத்தே பரவிநிற்பாள் - பட்டு
அரியா சனத்திருக்கும் அரசரோ டென்னைச்
சரியா யிருத்திவைத் தாய்.

குருபாதந் துணை
தாண்டவ ஈசுவரன் ரட்சிக்கவும்

பட்டாடை உடுத்தி, பட்டான அணிகள் பூண்டு, பட்டுத் தாமரையில் வீற்றிருக்கும் கலைமகள், பட்டாகிய ஆசனத்தில் வீற்றிருக்கும் அரசரோடு என்னைச் சரியாசனத்தில் இருத்தி வைப்பாள்.

அரிஓம் நன்றாக

(சுரத்தின் வகைகள்)
(வேறு)

★ 434. அறமிருந்த வாதச்சுரம் பித்தச்சுரம் சேத்துமச்சுர மதுவுமொன்றி
பிறவினிய வாதபித்தச் சுரம்வாத சேத்துமசசுர பித்தசேத்துமச்சுரம்
மரமினிய சன்னிவாதச் சுரம்விடச்சுரமென்றபிக் காச்சுாம் தாபச்
சுரமிக்க புராதனைச் சுரம்அக்கினி மந்தச்சுரம்அசீரணம் புக்கசுரம்பூதச்
சுரம்வாத பித்தசேத்துமச் சுரம்பகன்ற னாம்மதக்க
சுரோணித சுரமூஞ்சர் வாக்கினி சுரமுஞ் சாற்றுங் காலே. 1

வாதச் சுரம், பித்தச் சுரம், சேத்துமச் சுரம், வாதபித்தச் சுரம், வாத சேத்துமச் சுரம், பித்தச் சேத்துமச் சுரம், சன்னி பாதச் சுரம், விடச்சுரம், அபிகாதச் சுரம், தாபசுரம், புராணச் சுரம், அக்கினிமந்தச் சுரம், அசீரணச் சுரம், பூதச் சுரம், வாதபித்தச் சேத்துமச் சுரம், சுரோணிதச் சுரம், சர்வாக்கினிச் சுரம்,

★ 435. அந்தர தாகச்சுர முஞ்சீதச் சுரமும்
நாலா மாறல் மூன்றா மாறல்
அந்தருத மேகச்சுரம் சண்டச்சுரம்
தாபாக்கினிச் சுரத்தி னோடு
கந்த கார்ப்பச்சுரமதி சாரச்சுரமும்...
ஈறாத தாமகிழ்ந்த பான்மை
முந்திய முப்பத் திரண்டு சுரமெனவும்
முனிவ னுரைத்த மொழிமுனிந் தன்றே. 2

தாகச் சுரம், சிசுகச் சுரம், நான்காம் மாறல் சுரம், மூன்றாம் மாறல் சுரம், மேகச் சுரம், சண்டச் சுரம், தாபாக்கினிச் சுரம், கர்ப்பச் சுரம், அதிசாரச் சுரம் என சுரம் முப்பத்திரண்டு வகையென முனிவர் கூறினார்.

வாதச் சுரத்தின் குணம்

436. நடுக்குந் தியக்கம் பிறஞ்சாய கழுத்தும் தலையும் மிகநோகும்
கடுக்குங் கைகால் முறிநிமிரும் கண்ணுந் தோளும் கடுத்திடுமே
திடுக்கிட் டுதறு வாய்நீரும் செப்ப வரிய மெல்சுவாசம்
வடுக்கொள் விழியாய் வாய்துவர்க்கும் வாத வெதுப்புக் கொள்குறியே. 3

உடலில் நடுக்கம் தோன்றி, தயக்கம் காணும். தலையும் கழுத்தும் மிகவும் வலிக்கும். கைகால்கள் கடுக்கும். கண்களும் தோளும் கடுத்திருக்கும். உடல் திடுக்கிடும். வாயில் நீர் ஊறும். சுவாசம் மிகும். வாய் துவர்க்கும். இவை வாதச் சுரத்துக்குரிய குறிகளாம்.

இன்னுமொரு வகை

437. மிடரும் புகைந்து நாக்குழறும் மேலாந் தலையை நெரித்தல்
கடிய நெஞ்சுள்ள நாக்குந்தான் கனத்தே யிருக்கும் மஞ்சனிக்கும்
உடைய தித்திப்பு முண்டாகும் ஓதும் வாத சுரத்துக்கு
படியில் மீது முனியுரைத்த படியே பாருமெனச் சொன்னார். 4

கழுத்துப் பகுதியில் புகையும் அளவுக்குக் காய்ச்சல் மிகும். நாக்குக் குழறும். தலைப் பகுதி இறுக்கப் பெறுவது போன்று வலிக்கும். நெஞ்சம், உள்நாக்கு ஆகியன கனத்துத் தோன்றும். தூக்கம் மிகும். இனிப்புச் சுவை தோன்றும். இவை வாதச் சுரத்தின் வகைக்குரிய குறிகளாம்.

பித்தச் சுரத்தின் குணம்

438. பித்தச் சுரத்தின் குணம்கேளிர் பிதற்றும் வெதுப்பு முடம்பளற்றும்
மெத்த தண்ணீர் தான்வேண்டும் மிகவும் வயிறு நாவுலரும்
முத்துச் சிறுநீர் மலந்தானும் முனிந்து அயனுஞ் சிவப்பாகும்
சுத்தப் பிரமை முக்கெடுக்கும் சொல்வாய் மிடரும் புண்ணாமே. 5

வாய் பிதற்றும். உடல் வெப்பத்தோடு உளைச்சலும் பெற்று விளங்கும். நீர்த் தாகம் மிகும். வயிறும், நாவும் உலர்ந்து போகும். மலமும் சிறுநீரும் தடைபடும். கண் சிவக்கும். பிரமை தோன்றும். கழுத்துப் புண்ணாகும். இவை பித்தச் சுரத்தின் குணங்களாகும்.

இன்னமொரு வகை

439. கொடிதா யுள்ளம் கெதிப்பெய்தும் கொண்ட தாக மிகக்காட்டி
கடிதாய் மெய்யுங் கனல்வடிவாய் கண்ணுங் கையுங் கால்தானும்
வடிவாம் மஞ்சள் நிறமாகும் வாயும் நாவுங் கைத்திருக்கும்
பிடியி னிடையின் நடையாளே பித்தச் சுரத்தின் குணம்தானே. 6

உள்ளம் கொதிக்கும். தாகம் மிகும். உடல் மிகவும் வெப்பத்தால் காயும். கைகால், கண்கள் யாவும் மஞ்சள் நிறமாக விளங்கும். வாயும் நாக்கும் கசந்திருக்கும். இவை பித்தச் சுரத்தின் குணங்களாகும்.

இன்னுமொரு வகை

440. உரைத்த பித்தங் கோபித்தால் யுள்ள மழற்றிக் கொதிப்பெய்தும்
நிரைத்த மேனி மஞ்சனிக்கும் நித்திரை யற்றல் நீர்ப்பாய்ச்சல்
விரைத்தலோடு பிதற்றியிடும் மிகவும் மூர்ச்சை சத்தியமாய்
மறுத்த வாயுங் கறுப்பினொடு புளிப்பாமென்று ஓதினரே. 7

பித்தம் அதிகமாகும். உள்ளுக்குள் வெப்பம் மிகும். மேனி மஞ்சள் நிறமாகும். தூக்கம் கெடும். மூக்கில் நீர் ஒழுகும். மேனி விரைப்பாகி வாய் பிதற்றும். மயக்கம் உண்டாகும். வாய் கறுத்துப் போகும்.நாக்குப் புளிக்கும் என்று கூறுவர்.

இன்னுமொரு வகை

441. தலையு முடம்புந் திமிருண்டாய்த் தன்கை யிரண்டும் படிசிறுக்கும்
மலைய வெறுப்பு நீர்த்தேடும் மடங்கிக்கிடவா தேயுழற்றும்
பலகால் பிதற்றும் படிமீதே பாரிலுள்ளோ ரைப்பிணங்கும்
சிலையில் மரும னுதலாளே தெளிந்து கொள்ளும் பித்தமிதே. 8

தலை, உடம்பு ஆகிய பகுதிகளில் மதர்ப்புத் தன்மை தோன்றி, கால் கைகள் உளைச்சலுறும். வெறுப்பு மிகும். தாகம் எடுக்கும். ஓரிடத்தில் உடல் மடங்கிக் கிடக்க முடியாமல் உழலும். வாய் பிதற்றும். மற்றவர் மீது எரிச்சலோடு பகை ஏற்படும். இவை பித்தச் சுரத்தின் குணமாகும்.

இன்னுமொரு வகை

442. பித்தத்தால் வெதுப்பு வந்தால் பேசுமே நெஞ்ச மெல்லாம்
தித்திக்கும் வாயும் கைக்கும் செம்முகம் வெளுத்துக் காட்டும்
சத்திக்கும் வெறிகொண் டாற்போல் தாகமா யுழற்றி விக்கும்
பத்திக்கும் மூர்ச்சை யாகும் பண்டியுங் கழியுங் கண்டீர். 9

பித்தம் மிக்கு அதனால் சுரம் தோன்றினால், மார்புப் பகுதியில் இவ்வெப்பம் கூடியிருக்கும். வாய் தித்திக்கும். கையும் முகமும் வெளுத்திருக்கும். வாந்தி தோன்றும். தாகம் மிகுந்து வாய் உளையும், மூர்ச்சை ஏற்படும். வயிறு கழியும்.

கபசுரத்தின் குணம்

443. மெய்யும் வெளிறிச் சிவந்திருக்கும் வெள்ளோ காழமுள தாகும்
மய்ய லிருமி மிடறிறுக்கும் அறவே கண்ணுந் துயிலாது
நய்யும் நெஞ்சு நோவாகும் நாவும் நீரும் முழற்றிவரும்
செய்ய மலரின் குழலாளே சேத்துமச் சுரத்தின் குணமிதுவே. 10

உடல் வெளிறிப் பின் சிவந்து தோன்றும். இருமல் மிக்கு தொண்டைப் பகுதி இறுகிக் காணும். தூக்கம் கெடும். நெஞ்சு வலிக்கும். நாக்கு தாகத்தால் உழற்சியடையும். இவை சேத்துமச் சுரத்தின் குணங்களாகும்.

இன்னுமொரு வகை

444. சேத்துமத் தாலே வந்த சீரசுரஞ் செப்புங் காலே
காத்துமெய் யிரும லுண்டு தாகமுஞ் சிறிது தோன்றும்
வேறதுநித் திரையும் வாரா வேர்வது பிசின்போ லொட்டும்
போற்றெழும் பாரந் தன்னைப் பொருத்துவார் போலுந் தானே. 11

இருமல் மிகுந்து தாகம் எடுக்கும். தூக்கம் வராது. வியர்வை மிகுதியாகத் தோன்றி பிசின் போல் ஒட்டும். உடல் கனக்கும். இவை சேத்துமத்தாலே ஏற்பட்ட குளிர்ச் சுரத்தின் தன்மைகளாகும்.

**இன்னுமொரு வகை**

445. உண்ணா திருப்ப துவும்வாய்நீர் வருவ துவும்தன்னை யறியாதே
கண்ணால் பலகால் பார்ப்பதுவும் கதிரோன் வெய்யில் கிடப்பதுவும்
தண்ணீர் மூக்கில் வருவதுவும் தப்பாது சேத்துமத் தின்குணமே
நன்றாய் இதனை யாராய்ந்து நயந்து பார்ப்பார் பெரியோரே. 12

பசியின்மையால் உண்ணாமல் இருத்தல், வாயில் நீர் ஊறுவதையும் அறியாதிருத்தல், கண்கள் மிரட்சியோடு பார்த்தல், வெய்யில் தேடிச் சென்று அமர்தல், மூக்கில் நீர் பெருகுதல் இவை யாவும் சேத்துமத்தின் குணமாகும்.

**(வேறு)**

446. அய்ய மெய்யி லணிகிடு மேனிதான்
அய்ய நொந்து நலிந்து குளிர்ந்திடும்
செய்ய வென்றனைக் கைவாய் பிடித்திடும்
மெய்யு ழற்றி மெலிந்திட வெண்ணுமே. 13

சேத்துமம் உடலில் சேர்ந்தால் உடல் நொந்து, மெலிந்து குளிரும். உடலில் உளைச்சல் தோன்றுவதோடு மெலிந்தும் காணும்.

**வாதபித்தச் சுரத்தின் குணம்**
**(வேறு)**

447. வாதபித்த சுரந்தனுக்கு வயிறூதும் பொருமும்
வாள்விணு மொண்டும் மங்க லாகும்
காதடைக்குந் தலைவலிக்கு முடம்பு வேர்க்கும்
கடுப்புண்டாம் சந்துசந்து கடுக்குங் கண்டீர்
போதவே சுரமுண்டாகும் வாந்தி செய்யும்
பொருமுழலை மூர்ச்சையதாம் புகலக் கேளும்
கோதரு பசிதாகந் தானு மில்லை
குணமதனை யறியுமெனக் கூறி னோமே. 14

வயிறு பெருக்கும். பொருமும். கண் மங்கலாகும். காது அடைக்கும். தலை வலிக்கும். உடம்பு வேர்க்கும். உடல் கடுக்கும். கைகால் மூட்டுகள் வலிக்கும். சுரம் உண்டாகும். வாந்தி ஏற்படும். உடல் அழன்று மயக்கம் காணும். பசியோ தாகமோ எடுக்காது. இவை வாத பித்தச் சுரத்தின் குணங்களாகும்.

**வாத கபச் சுரத்தின் குணம்**

448. அடுத்தபசி உண்டாகும் மூர்ச்சை யாகும்
திக்பிரமை யுமாகும் நித்திரையு மில்லை
எடுத்ததலை நோக்காடும் மயிர்க்கூச் சாகும்
இனியவாஞ் சியமுண்டாம் மெய்க்கே சொன்னோம்

படுத்தவர்கள் எழுந்திருப்பார் பதைப தைப்பார்
பலகாலுங் கண்மிரள முழித்துப் பார்ப்பார்
தொடுத்ததோர் வாத சேத்துமச் சுரத்தின்
சுத்திதனை யறியனாம் சொன்னோ மென்றே. 15

பசி மிகும். மயக்கம் தோன்றும். திக்பிரமை ஏற்படும். தூக்கம் இருக்காது. தலை வலிக்கும். மயிர்க்கால்கள் சிலிர்க்கும். இனிய தன்மை நிலவும். படுக்கையிலிருந்து விரைந்து எழுவர். மிரட்சியோடு நோக்குவர். இவை வாத கபச் சுரத்தின் குணங்களாகும்.

பித்த கபச் சுரத்தின் குணம்

449. கரங்காலும் பின்னுதலும் வாய்க சக்கும்
துந்தனைய மோகமாய் இரும லுண்டாம்
மிரங்காம லரோசிகமாம் தாக முண்டாம்
இமைப்போது காயுமிமை போத டங்கும்
பரங்காணும் பித்த சேத்துமச் சுரத்தின்
பரிசதனை விளங்கவே பார்த்துச் சொல்ல
வரங்காணு மனப்பரிட்சை பாகஞ் சொன்னோம்
மாமுனிவ னுரைத்தபடி மனிதற் கென்றே. 16

கால்கள் பின்னும். வாய் கசக்கும். இருமல் உண்டாகும். வாய் ருசியறியாது. தாகம் எடுக்கும். ஒரு நொடி உடல் மிகக் காயும்; மறுநொடியில் குளிரும். இவை யாவும் பித்த சேத்துமச் சுரத்தின் பண்புகளாம்.

கப வாத பயித்தியச் சுரத்தின் குணம்
(வேறு)

450. தலையை வலிக்கும் உடல்வேர்க்கும் தன்னைத் தானே அறிவழிக்கும்
உலையு முடம்பு தான்நடுக்கும் உள்ளே வெதும்பும் உழற்றிவரும்
அலையும் படுக்கை தான்கூடா தழுகுங் கண்ணீர் தான்வடியும்
சிலையும் வாயுங் கோலைவரும் சிலேத்தும வாத பயித்தியமே. 17

தலை வலிக்கும். உடல் வியர்க்கும். அறிவு மங்கும். உடம்பு வலித்து உளைவதோடு நடுக்கமிகும். உள்ளே வெப்பம் மிகும். படுத்திருக்க முடியாது. அழுகை வரும். கண்ணீர் வழியும். சளியின் மிகுதியால் ஏற்படும் கோழையின் காரணமாக வாய் நாற்றமெடுக்கும். இவை சிலேத்தும வாத பித்தச் சுரத்தின் குணங்களாகும்.

வாத பித்த கபச் சுரத்தின் குணம்
(வேறு)

451. அல்ல செய்யு மலற்று முடம்பெலாம்
நல்ல தாகவே நாக்கு குழறிடும்
வில்லை போல்வ ளைத்துடல் மேவிடும்
வல்லல் வாத பயித் தியசிலேத் துமமே. 18

உடம்பிற்குத் துன்பம் மிகும். நாக்கு குழறும். உடல் வில் போல் வளையும். வாத பித்த கபச் சுரத்தின் தன்மையாகும்.

வாத பித்த கபச் சுரத்தின் குணம்
(வேறு)

452. வாதபித்த சேத்துமச் சுரம்வந்து தோன்றி
மகோதரமா யுழற்றுவிக்கும் தாக முண்டாம்
போதவே யுடல்கடுக்கும் பிரமை பேசும்
பொருந்தாது வுண்டிமனம் அறிவி ழக்கும்
சேதமாய் அதிசார மிகவுண் டாகும்
சிறப்பிலா முகங்கறுக்கும் செஞ்சு நோவாந்
மாதவத்து முனியுரைத்த படியி தாகும்
வையகத்தி லுள்ளபிணி வழக்கந் தானே. 19

வயிறு வீங்கும். உளைச்சல் ஏற்படும். தாகம் எடுக்கும். உடல் கடுக்கும். வாய் பிதற்றும். உணவில் நாட்டமிருக்காது. அறிவு நிலை குறையும். வயிற்றுப் போக்கு ஏற்படும். முகம் கறுக்கும். வலி தோன்றும். வாத பித்த சேத்துமச் சுரத்தின் தன்மைகள் இவை யாகும்.

வாதச் சுரத்தின் குணம்
(வேறு)

453. வாதச் சுரத்தின் குணமெல்லாம் வகுத்த வண்ண முரைத்திடவே
சீதச் சுரமாய் வந்திட்டு சிந்தை கலங்கி மெய்அக்குள்
பாதந் தன்னில் வருஞ்சுரமும் பணிந்த சைந்து விழுமாப்போல்
வேதி வந்து களைப்புறு பெருக்கப் பசியும் தோன்றாதே. 20

குளிர் சுரம் உண்டாகும். மனம் கலங்கும். உடல், அக்குள், பாதம் இவற்றில் தோன்றும் இச்சுரத்தால் உடல் நடுங்கி விழுதல் போல் களைப்பு மிகும். பசி எடுக்காது. இவை வாதச் சுரத்தின் குணங்களாகும்.

சன்னிச் சுரத்தின் குணம்
(வேறு)

454. தலையெடுக்க வொட்டாது பாரித் தேதான்
கழுத்துமடங் கிக்கிடக்கும் நெஞ்சு நோகும்
தொலையாத நித்திரையும் பசியு மில்லை
துரிமூக்கு புருவமொடு வேர்வை யாகும்
இலையாக யிளைத்தவளைப் பாரித்தி ருக்கும்
எனுமிட றுடைந்துகாந் திருந்தே வேர்க்கும்
சலமான சன்னிச்சுரம் வாய்க றுத்துச்
சடங்குளிரு மாகுமெனச் சாற்றி னோமே. 21

தலை கனத்து துவண்டு இருக்கும். நெஞ்சு நோகும். தூக்கம், பசி தோன்றாது. மூக்கிலும் புருவத்திலும் வேர்க்கும். உடல் இளைத்து, தொண்டை கட்டும். வெப்பம் மிகும். வாய் கறுக்கும். உடல் குளிரும். இதுவே சன்னிச் சுரம் ஆகும்.

சன்னிவாதச் சுரத்தின் குணம்
(வேறு)

455. பேரு மறந்து மண்டலீகப் பிள்ளையா ரெனவும் பேசலாகும்
யாரு மழைத்தால் வார்த்தைசொல் லானவற்கு முகமோ காட்டார்
வேறு பாக மேசொன்னோம் மிக்கசன்னி வாதசுர மென்றறிந்து
ஊருமுலக மறியானாம் உரைத்த படிதா னுண்மையிதே. 22

தன் பேர் மறந்து, பிறிதொருவர் போலப் பேசுவர். யாரேனும் அழைத்தால் பதில் கூறார். முகத்தைப் பார்க்க மாட்டார் இவை சன்னிவாதச் சுரம் என்று அறியலாம்.

வாதச்சன்னிச் சுரத்தின் குணம்

★ 456. உடம்பு கடுக்குந் தலைநோவாம் உள்ள அறிவு தான்கெடுக்கும்
அடங்கா விசனங் கொண்டோடும் அதுமாங் கையால் கடுப்பதுவும்
படர்ந்த பிசாசு போல் வெறிக்கப் பார்க்கும் பலப்பல விகார மேசெய்யும்
வடிமே புணர்ந்த மார்பகத்தில் வாதச் சன்னிச் சுரந்தானே. 23

உடல் கடுக்கும். தலை வலிக்கும். அறிவு மயங்கும். வெறுப்பு தோன்றும். கை கடுக்கும். பார்வை பிசாசு போன்று வெறித்து நோக்கும். மேலும் பல்வேறு மாறுபாடுகளைச் செய்யும். இவை வாதச் சன்னிச் சுரத்தின் பண்புகளாகும்.

பித்தச் சன்னிச் சுரத்தின் குணம்

457. ஆகங் குளிர்ந்து அதற்குப்பின் அடுத்த சுரமாம் மூக்குநீர்
வேகுங் கைகால் வேர்ப்பதுவும் விடுவ தாக வேயயிக்கில்
தேக மழகாய் தொழதொழப்பாய் செம்பொன் பலகரை கூடுவதும்
போகஞ் சிறந்த உயிர்வெளுக்கும் பித்தச் சன்னிச்சுரந்தானே. 24

உடல் குளிரும். தொடர்ந்து சுரம் ஏற்படும். மூக்கில் நீர் பெருகும். கைகால்கள் வேர்க்கும். பிறகு விட்டுவிடும். உடல் அழகாக செம்பொன் நிறம் போன்று காணும். உயிர் வெளுத்துப் போகும். இவை பித்தச் சன்னியின் குணம் ஆகும்.

கபச்சன்னிச் சுரத்தின் குணம்

★ 458. தலையொடு பிடரி தோள்கள் முதுகு
தன்னோடு கட்டும் ....
துலையிவை கைகா லழிந்த புண்போல்
தோய்ந்து நோகு மதுசொன்னோம்
இலையென இருமல் நாக்கும் மூக்கும்
புண்ணென்று ஆகாரங் கொள்ளாது
சிலவகை செய்யுங் குணமிவை சொன்னோம்
சேத்துமச் சன்னியின் சுரமிதுவே. 25

தலை, பிடரி, தோள்கள், முதுகு ஆகியவை கட்டிப் போட்டாற்போன்று வலிக்கும். கைகால்கள் புண் போன்று வலிக்கும்.

இருமல் மிகும். நாக்கும் மூக்கும் புண்ணாகி உணவு உண்ண முடியாது. இவை கபச் சன்னியின் குணங்களாகும்.

**விசமச் சுரம்**
**(வேறு)**

459. வேர்க்குங் குளிரும் விசிறென்னும் மேல்தான் தண்ணீ ராய்விடுமே
ஆர்த்த பசியா துள்ளமது அதிக மாகக் கொதிப்பெய்தும்
தார்த்த உறக்கந் தானதுவாய் தலையை நடுக்கி மயக்கிவரும்
தீர்க்க மொருபுறம் உடல்காயும் தீயா விசமச் சுரந்தானே. 26

உடல் வியர்க்கும். குளிரும். புழுக்கத்தால் விசிறுமாறு கேட்கும். வியர்த்துப் போகும். பசி தோன்றாது. வெப்பம் மிகும். உறக்கம் மிகுதியாக, தலை நடுங்கி மயங்குவதுபோல் உண்டாகும். மீண்டும் உடல் காயும். இவை விசமச் சுரத்தின் குறிகளாகும்.

**விசமச் சுரத்தின் குணம்**

460. குளிரு மெரியும் சற்றுப்போது கொதிக்குஞ் சுரமு மடங்கிவிடும்
தளிரு மொருகா லிரவுறக்கம் தானே வொருக்கால் பகலுறக்கம்
பொழுதுமிருநாள் மூன்றுநாள் நான்காம் நாளென்ற புணர்மாறல்
மிளிரும் நேர மொருவிதமாம் விசமச் சுரத்தின் குணந்தானே. 27

உடல் குளிரும். எரிச்சல் தோன்றும். சற்று நேரத்தில் உடல் கொதிக்கும். சுரம் தணியும். இரவிலொரு நாளும் பகலிலொரு நாளும் உறங்கத் தோன்றும். இரண்டாம் நாள் மாறல், மூன்றாம் நாள் மாறல், நான்காம் நாள் மாறல் என்றவாறு சுரம் தொடர்வது இவை விசமச் சுரத்தின் குணங்களாகும்.

**விசமசீதச் சுரத்தின் குணம்**

461. மெய்யில் விசம சீதச்சுரம் விட்டு விட்டு வெதும்புங்கால்
கைய்யும் வெதும்பு முடம்பெல்லாம் கனத்தே யிருக்கு முழலையுமாய்
பைய்ய வந்த தம்மையங்கே பயந்தே கட்டிக் கொள்ளென்னும்
அய்யோ பிழையே னானென்றும் அதிக மாகுஞ் சுரந்தானே. 28

சுரம் விட்டு விட்டுக் காயும். கையும் காலும் காயும். உடம்பு கனக்கும். உளைச்சல் காணும். வந்தோரிடம் தம் பயத்தைக் கூறி கட்டிக் கொள்ளுதல், இனி பிழைக்க மாட்டேனா என்று அஞ்சுதல் மிகும்.

**அசத்திச் சுரத்தின் குணம்**

462. அசத்தி சுரமோர் நாளளவில் அகலா திருந்து அசத்தி பற்றி
மெத்த வுடம்பை எழுப்பித்து வேண்டா மன்னமெனச் சொல்லும்
சுத்த மாக மலசலங்கள் தோன்று மெய்யில் சிரங்கதுவாம்
புத்தி யாக வரிந்துசொல்லும் புகன்றார் முனிவ னுரைத்தாரே. 29

உடலில் தோன்றிய சுரம் குறையாது இருந்து நாளடைவில் எலும்பைப் பற்றும். உடம்பைப் படுத்திருக்க விடாமல் எழச் செய்யும். உணவை வெறுக்கும். மல சல வாயிடத்தே சிரங்கு தோன்றும். இவை அசத்திச் சுரத்தின் குணங்கள் ஆகும்.

இன்னமொரு வகை
(வேறு)

463. அசத்தியினி வாதச்சுர மோமீறி மிக்க
கடுத்துகொதிப் பிக்கும் அழற்றி விக்கும்
தக்கதண்ணீர் தாகமுண்டாம் வாந்தி மூர்ச்சை
தானாகுங் கிறுகிறுக்குந் தலையே சுற்றும்
மிக்கமலம் போகாது சலமே போகும்
எனவுரைத்தா ருலகிலுள்ளோ ரிதனைக் கேளும்
துக்கமுண்டாம் குரல்நெரியும் வயிறு மூதும்
தோன்றமுனி யுரைத்தபடி தோற்றுங் காலே. 30

உடல் கடுப்புடன் வெப்பம் மிகும். தாகம் ஏற்படும். வாந்தியும் மயக்கமும் உண்டாகும். தலை சுற்றும். மலம் தடைப்படும் • நீர் தடையின்றி நீங்கும். குரல் இறுகுவதோடு வயிறு ஊதும். இவை அசத்தியில் பற்றிய வாதச்சுரம் ஆகும்.

நான்குநாள் மாறல் சுரம்

★ 464. தங்க மேனி தளருங் கறுகுமே
குங்கு ....லங் குளிருங் கனக்குமே
அங்க மெங்குங் கடுத்துக் குடையுமே
மங்கு நாலு நாள்மாறல் சுரமே. 31

செம்மைநிற உடல் கறுக்கும். தளர்ச்சியடையும். உடல் குளிரும். கனக்கும். மேனியில் குடைச்சல் ஏற்படும். இவை நான்காம் நாள் மாறல் சுரத்தின் குறிகளாகும்.

மூன்றுநாள் மாறல் சுரம்

465. அன்னம் வாயுங் கசக்குஞ் சலந்தீரும்
பொன்னை யொப்பெனக் காய்ந்து பொருக்குமே
அன்ன மீறு முரைக்கமு மாக்குமே
மன்னு மூன்று நாள்மாறல் சுரமே. 32

வாய் கசக்கும். நீர் வற்றும். உடல் காயும். உணவு செல்லாது. உண்டாலும் செரிக்காது. இது மூன்றாம் நாள் மாறல் சுரம் ஆகும்.

தாபச் சுரம் (குறிகுணம்)
(வேறு)

466. மாறாத சுரமாகி அய்யந் தாக
மய்யுழலை யும்படுத்தி மூர்ச்சை யாகும்
பேறான சயித்தியமே பிரிய மாகும்
பெருக்கவே சினந்தாலும் பிரிய மாகும்
தோறாத அழலிக்கை சோப மாகும்
துக்கமிவை உண்டாகும் அய்யோ வென்னும்
பாறாத தாபச்சுரம் சொன்னோம் கண்டீர்
பிரிவுமுனி யுரைத்தபடி பாரு மென்றே. 33

சுரம் ஏற்பட்டு, கபம் சேரும். தாகம் மிகும். உடல் உளையும். மயக்கம் தோன்றும். வாந்தி தோன்றும். கோபம் ஏற்படும். வெப்பம் மிகுந்து வீக்கம் காணும். இதுவே தாபச் சுரம் எனப்படும்.

தாபாக்கினிச் சுரம் (குறிகுணம்)
(வேறு)

467. அங்கமெல்லா மக்கினியைத் தூவினாற் போலாம்
முங்கியதாப முயற்சியு மொழியப் போக
செங்கைகா லெரிந்து பரந்தே யிளைக்கும்
சங்கை யில்லாத தாபக்கினிச் சுரமதாமே. 34

உடல் முழுதும் நெருப்பைத் தூவினாற்போல் மேனி காயும். தாகம் எடுக்கும். கைகால்கள் எரியும். உடல் இளைக்கும். இது தாபாக்கினிச் சுரம் ஆகும்.

அசீரணச் சுரம் (குறிகுணம்)

468. நல்ல வுண்டியல் தான்செரி யாமலே
அல்லல் மேலும் வலித்துக் குடைந்திடும்
வல்ல ரோசிகம் வாந்தியு மாகுமே
சொல்லும் சீரண நற்சுரந் தோன்றிலின். 35

உணவு செரியாது. துன்பம் மிகும். உடல் வலிப்பதோடு குடைச்சலும் இருக்கும். வாய் ருசியிருக்காது. வாந்தி மிகும். இது அசீரணச் சுரத்தின் தன்மையாகும்.

(புராதனச் சுரம் (குறிகுணம்)

469. புன்மை யான புராதன மானசுரம்
நன்மை யன்றி நாடோறும் வந்திடுமே
தம்மை வற்றியே தாகமுண் டாகுமே
உண்மை யில்லா விரிது உண்மையே. 36

நாள்தோறும் சுரம் தோன்றும். உடல் வற்றும். தாகம் உண்டாகும். இவை புராதனச் சுரத்தின் தன்மையாகும்.

அதிசாரச் சுரம் (குறிகுணம்)
(வேறு)

470. அதிசாரச் சுரம்வந்து தோன்று மாகில்
அணுகிடுமோ தாகமது விக்க லுண்டாம்
கதியாய் வயிறுடைந்து கழிந்த போது
கலமசமுந் துறக்கெந்த மாகுங் கண்டீர்
விதிசேரு முடம்பிளைக்கு மெய்யு ழற்றும்
வேரனைய நடுக்கமுமாம் மெலிவுண் டாகும்
பதிச்சாரும் படியிடுதன் பாரில் மீதே
பரிவுமுனி யுரைத்தபடி பாரு மென்றே. 37

தாகம், விக்கல் உண்டாகும். வயிறு கழியும். உடம்பு இளைக்கும். உளைச்சல் தோன்றும். நடுங்கும். இவை அதிசாரச் சுரத்தின் தன்மைகளாகும்.

சுவாலாக்கினிச் சுரம் (குறிகுணம்)
(வேறு)

471. சீறு மக்கினி போலுள்ளங் கால்கையில்
பாரு போலப் பதறிடப் பார்க்குமே
கூறொண் ணாத கொதிப்புங் கடினமே
சோறு மாறு சுவலாக் கினிச்சுரம். 38

சீறுகின்ற நெருப்பைப் போல கைகால்கள் மிகுந்த வெப்பமோடு இருக்கும். பார்வை பதட்டத்தோடு காணும். உடல் வெப்பத்தை சொல்வது அரிது. உணவு ஏற்காது. இவை சுவலாக்கினிச் சுரத்தின் தன்மைகளாகும்.

(அபிகாதச் சுரம்-குறிகுணம்)

472. சரீர மெல்லாங் குடைந்துசுரங் கோபித்து
தாக முண்டாம் துயிலாது நாவறண்டு
அரிய மூர்ச்சை பிரமைமீறி யாதலஞ்சி
அடிக்கடி வெகுண்டல் சலஞ்சி றுத்தல்
பிரியாத வசனம்பா ராட்டல் மீறிப்
பொற்பசியும் சுறுக்கெனவாம் போதக் கண்டீர்
திரிவேத மாமுனிவ னுரைத்த போதம்
செப்பினா ரபிகாத சுரமு மாமே. 39

உடல் குடைச்சலெடுக்கும். சுரம் மிகும். தாகம் ஏற்படும். தூக்கம் ஏற்படாது. நாக்கு வரளும். மயக்கம், பிதற்றல் அதிகமாகும். கோபம் மிகும். நீர் சிறுகச்சிறுகப் போகும். வாய் பிதற்றும். பசி குறையும். இவை அபிகாதச் சுரத்தின் பண்புகளாகும்.

குரோதச் சுரம் (குறிகுணம்)
(வேறு)

473. வந்து வந்து கோப மடிக்கடி
முந்திக் கொப்ப பசியு முடுக்குமே
சந்து சந்து தோறுங் குடையுமே
கொந்து கொல்க குரோதச் சுரங்களே. 40

கோபம் விரைந்து தோன்றும். பசியும் மிகும். உடலில் மூட்டுதோறும் குடைச்சல் ஏற்படும். கொல்வது போல் தோன்றும் குரோதச் சுரம் இதுவாகும்.

ஆகமச் சுரம் (குறிகுணம்)

★ 474. ஆகமச் சுரத்தின் குணஞ்சொல்லில் அதிக மாகுங் கொதிப்பெய்தும்
சாமந் தோறும் வெதுப்பிக்கும் தானே உறக்கம் பண்ணிவிக்கும்
சேம மாக உடம்புதனில் சிரிபோ வெடுக்கும் பசியில்லை
நாமந் தளிரும் சலங்கழியும் நடுங்கி யிருக்கு மதுதானே. 41

சுரம் அதிகமாகும். வெப்பம் மிகும். இரவுதோறும் சுரம் தோன்றும். உறக்கம் உண்டாகும். உடம்பில் ..... எடுக்கும். பசியிருக்காது. நீர் தாராளமாகப் பிரியும். உடல் நடுங்கும். இவை ஆகமச் சுரத்தின் தன்மைகள்.

அக்கினி மாந்தச் சுரம் (குறிகுணம்)
(வேறு)

★ 475. தக்க வறண்டு கடுக்கு முதரந்தனில்
பொக்கு நாளில் ராகங் குறையுமே
மிக்க மே... மெத்தது கடுக்குமே
.... அக்கினி மந்தச் சுரமாகுமே. 42

நாக்கு வரளும். வயிறு கடுக்கும். ஓசை குறையும். உடல் கடுக்கும். இக்குறிகள் அக்கினி மாந்தச் சுரத்துக்குரியன.

பூதச் சுரம் (குறிகுணம்)

476. பூதச் சுரமே விழிகள் பெருத்துருட்டி
பொருந்தி யம்மானை யிதுபோல யாகுமே
பேத வயிறூதும் வாந்தி யாகும்
வெறிக்கப் பார்க்கும் பிழையே னென்றெண்ணும்
சீதமாய் வலிப்புண்டா முடம்பு நோகும்
சிந்தையழன் றேவேறாய் யசனஞ் சொல்லும்
போதகமாய் முனிவனாரைக் கண்டு கொள்ளும்
பூவுலகி லுள்ளோர்கள் பொருந்த வென்றே. 43

விழியை அகலமாக்கிக் கண்ணை உருட்டிப் பார்த்தல், வயிறு ஊதி வாந்தி எடுத்தல், வெறிக்கப் பார்த்தல், உயிர் பிழைக்க மாட்டேன் என்று கூறுதல், குளிர்ச்சி மிகுந்து வலிப்பு ஏற்படுதல், உடம்பு வலித்தல், புத்தி தடுமாறுதல், உணவு கொள்ளுதல் இக்குணங்கள் பூதச் சுரத்துக்குரியன.

(தீதுச் சுரம் - குறிகுணம்)
(வேறு)

477. வற்ற வேலுட னன்ன மிறங்கில்
கற்ற நித்திரை யோவினை யாகையால்
அற்றள மேன்மை யருவுங் கெடுக்கையால்
உற்ற தீதென சுரமென வோதுவாம். 44

மேனி வாடும். உணவு உட்சென்றால், நித்திரை ஏற்படும்...... தீதுச் சுரம் என்பதை அறியலாம்.

கந்த கர்ப்பச் சுரம் (குறிகுணம்)

478. முந்து தாகமும் மூர்ச்சையு மாகுமே
நிந்து நின்றது நின்று சுரம்வரும்
தந்த நாவு லர்த்துமே யழற்றிடும்
கந்த கர்ப்பச் சுரமது கேட்கிலே. 45

தாகம் எடுக்கும். மயக்கம் தோன்றும். சுரம் விட்டுவிட்டுத் தோன்றும். நாக்கு உலரும். பிதற்றும். இவை கந்த கர்ப்பச் சுரம் என்பதன் குறிகளாகும்.

மேதைச் சுரம் (குறிகுணம்)

★ 479. பெருகு ரோகங்கள் மேல்சுரம் பற்றியே
உருகு மேனி உடைந்ததி சாரமாய்
கருகி வான்முகம் ...சிறி தாகுமே
தருகு மேதைச் சுரமது சாற்றுவாம். 46

உடலில் பற்றிய பிற நோய்களின் மேல் சுரம் தோன்றி, மேனி உருகி வயிறு கழியும். முகம் கறுக்கும். இதுவே மேதைச் சுரம் ஆகும்.

சண்டிச் சுரம் (குறிகுணம்)

480. மேரை தப்பியே வரையும் பேசுமே
கோர மாய்க்கொண் டெழுந்துடல் நோகுமே
பார மெய்யும் பசுப்பென வற்றுமே
சார சண்டிச் சுரமெனச் சாற்றுவார் 47

தவறைச் சரியென்று பேசும். மிகக் கோரமாக எழுந்து நிற்கும். உடல் நோகும். மேனி கனக்கும். மேனி வற்றும். இது சண்டிச் சுரம் எனப்படும்.

நிராதச் சுரம் (குறிகுணம்)

481. குன்று போலக் கனத்துக் குலையமே
வென்றி லாத வெறிக்கப் பார்க்குமே
சென்ற மேனி சிவந்து வேர்க்குமே
நின்ற நெய்நி ராத சுரமிதே. 48

உடல் குன்றுபோலக் கனத்திருந்து, இச்சுரநோயால் குலையும். விழிகள் வெறித்து நோக்கும். மேனி சிவக்கும். உடல் வியர்க்கும். இதுவே நிராதச் சுரம் ஆகும்.

482. வின்ப மாக மெலியுஞ் சுரங்களும்
அம்புவி தன்னில் யாரும் பிழைக்கவே
தன்ப மாயிது தான்பர மென்னவே
கும்ப மாமுனி தானுரை கூறுவாம்

குரு பாதந் துணை

இப்புவியில் உடலை மெலியச் செய்யும் சுரங்கள் பற்றினோர் பிழைக்கத் தேவையான முறைகளை அகத்தியர் கூறியவற்றைக் கூறுவோம்.

அரிஓம் நன்றாக
சன்னி வகைகள்

483. தாந்திரிகந் தா்ணாத்திக் கண்டகுச்சம் பிரலாபந் தானுமல்ல
வேந்திரசத் திட்டிசீ தாங்கவேத வேகண் டகுதான்
ஆந்திர கங்கு லியன்ற மழிவு மலிவு அலத்துச்சன்னி அதிகச்சன்னி
இந்தவகை பதிமூன்று சன்னியென வியம்பினோ மியற்கை யென்றே. 1

தாந்திரிகச் சன்னி, அசத்திச் சன்னி, கண்டகுச்சச் சன்னி, பிரலாபச் சன்னி, இரத்தேட்டிகச் சன்னி, சீதாங்கச் சன்னி, வேதச் சன்னி,

கண்டகுச் சன்னி, ஆந்திரச் சன்னி, மலிகச் சன்னி, அலத்துச் சன்னி, அதிகச் சன்னி என்று சன்னி பதின்மூன்று வகைப்படும்.

**சன்னியில் சாத்தியம்**

★ 484. தாந்திரிகம் இருபத்தஞ்சு தானாற்றி யறுபத்தொன்று தக்க தாகும்
மேய்ந்தகண்ட குச்சம்பத்தொன் பதின்மேல் பிரலாப மீரெட்டாகும்
மாந்தரசத் திட்டிகோ மேழரை நாழியில் சாத்திய மென்றறி
சீதாங்க மூவைந் தோய்ந்தபதி வேதனக்கோ பதினாறு மமைத்தபோது
மாந்துயர் மறிக்குமோ பதினெட்டு மலத்துச்சன்னிக் கெட்டொன்பான்
சேர்ந்த சன்னி பதினேழு நாள்தோன்றுஞ் சொன்னோம்
பார்போன்ற சன்னிபதி மூன்றா மிதனைப் பொருத்திப் பாரே. 2

தாந்திரீகம் இருபத்தைந்து நாழிகை, தானாத்தி அறுபத்தோரு நாழிகை, கண்டகுச்சம் ஐம்பத்தொன்பது, பிரலாபச் சன்னி பதினாறு நாழிகை, இரத்தேட்டிகச் சன்னி ஏழரை நாழிகை சாத்தியமாகும். சீதாங்கச் சன்னி பதினைந்து நாழிகை, அசுவேதிச் சன்னி பதினாறு நாழிகை என சாத்தியத்துக்கான காலப் பகுதி குறிப்பிடப்படுகிறது. ஆந்திரிகச் சன்னி பதினெட்டு நாழிகை, அலத்துச் சன்னி எழுபத்திரண்டு நாழிகை, அதிகச் சன்னி 17 நாள் தோன்றும். இப்பதின்மூன்று சன்னி வகைகளையும் இவ்வாறு பொருத்திக் காண்க.

**(தாந்திரீகச் சன்னியின் குணம் - கால அளவு)**

485. மெய்யே நொந்து தாகமுற்று வேண்டாம் நடுக்கு முகம்சிவக்கும்
கைகால் நொந்து நடைகுறைந்து கால்முன் னாளில் உண்டிகெடும்
அய்யோ வென்று அறிவது போலாக மயக்க முண்டாகும்
மெய்யே யிந்தட வுண்டாகில் இருபத் தைந்துதாந் திரிகமதே. 3

உடல் நொந்து, தாகம் ஏற்பட்டு, நீர் வேண்டாது, உடல் நடுங்கும். முகம் சிவக்கும். கைகால்கள் நொந்து நடைவேகம் குறையும். வாயு வயிற்றில் சேர்ந்து உணவு செல்லாது. பிறர் கண்டு வருந்த மயக்கமடைவர். இக்குறிகள் கண்டால் தாந்திரிகச் சன்னியாகும். இந்நோய் கண்டால் இருபத்தைந்து நாட்களில் இறக்கக் கூடும் என்பது நோயின் தன்மையாம்.

**தானந்திச் சன்னியின் குணம் (கால அளவு)**
**(வேறு)**

486. எரிவுடனே யுடல்படவே யெழுந்தி ருக்கும்
இவையன்றிக் கண்சிவக்கும் தலைநோ வாகும்
முரிவெனவே யுடல்வெதும்புங் காந்தி கெட்டு
உடல்நாறுங் கடுப்புண்டாம் உண்மை யாக
சரியநடு முதுகுளையுஞ் சந்திடுப்பு நோகும்
தப்பாது தானந்தி சன்னி தானே
அரியதென யிருபத்தோர் நாளில் தோடம்
அகத்தியமுனி யுரைத்தபடி அறிந்து கொள்ளே. 4

உடல் எரியும். படுக்கவியலாது உடல் எழும். வெப்பம் மிகும். ஒளி கெடும். உடல் நாற்றமெடுக்கும். கடுக்கும். நடுமுதுகில் உளைச்சல் ஏற்படும். இடுப்பும் மூட்டுகளும் வலிக்கும். இவை தானந்திச் சன்னியின் குறிகளாகும். இருபத்தொரு நாட்களில் தோடம் ஏற்படும் என்று அகத்தியர் கூறுகிறார்.

கண்டகுச்சச் சன்னியின் குணம் (காலஅளவு)

487. கண்டகுச்சஞ் சேத்துமமுஞ் சுரமுந் தோன்றி
கழுத்துநரம் பிசித்திருக்கும் வாய்நோ வாகும்
தொண்டையும் மார்புவலிக்கும் பேச்சுந் தப்பும்
சுழிமூக்கு வறண்டுதுணுக் கென்று பார்க்கும்
இன்றியதோர் சலக்கடுப்புப் பெருமூச் சாகும்
வேதனையா மென்றுரைத்தார் விளம்பக் கேளும்
அண்டியது பத்தொன்ப தளவில் தோடம்
அகத்தியமா முனியுரைத்தா ராம்பு விக்கே. 5

கபத்துடன் சுரமும் தோன்றும். நரம்புகள் இழுத்துக் கட்டினாற்போன்று வலிக்கும். வாய் நோகும். மார்பிலும் தொண்டையிலும் வலி ஏற்படும். பேச்சு குழறும். மூக்கு வறண்டு கண்கள் துணுக்கென நோக்கும். நீர்க்கடுப்பும் பெருமூச்சும் உண்டாகும். வேதனை மிகும். இது பத்தொன்பதாம் நாளில் தோடம் உண்டாக்கக் கூடியது என்று அகத்தியர் கூறியுள்ளார்.

பிரலாபச் சன்னியின் குணம் (கால அளவு)

488. பிரலாபச் சன்னிக்குண மேதோர் சொல்லில்
பேய்போலே யெழுந்திருக்கும் உளற்றியெழுஞ் சிரிக்கும்
முரலாபங் கண்கள்தனை மலராய்வீழ்த் துமுடனே
தாதுக்கு மதுசுரமா யுடம்பு வேர்க்கும்
வரவாரி தன்வாய்கேள் குழறி வாயு
மாழமானது போலிருக்கும் மடவே யாகும்
விரவாகும் பதினாறு நாளில் தோடம்
விளங்கு முனியுரை யதனைமேவிப் பாரே. 5

பேய் போன்று எழுவர். கண்களை உருட்டிச் சிரிப்பர். உடல் வியர்க்கும். வாய் ஆழமானது போல் திறந்து புரியாத சொற்களைப் பேசும். பதினாறுநாளில் தோடம் சேரும்.

இரத்தேட்டிகச் சன்னியின் குணம் (கால அளவு)

489. இரத்தேட்டிகக் கண்சிவந்து விக்க லாகும்
எரிச்சலாம் நாசிதொண்டை கையும் நெஞ்சும்
உரத்தெழுந்து வாயும்விம்மிக் கம்மிகூப் பிட்ட
உடனேதான் அறிவுகெடும் வெகுண்டு பார்க்கும்
கரதகண்கள் கொடிதாகி வெறித்துப் பார்க்கும்
கண்குறித்துப் பார்க்குமிந்தப் படியே செய்தால்
உரைத்தபடி ஏழரையிற் சாத்திய மாகும்
உண்மையிது பாருலகி லுள்ள பேரே. 7

கண் சிவக்கும். விக்கல் எடுக்கும். எரிச்சல் மிகும். மூக்கு, தொண்டை, கை, நெஞ்சு, ஆகியன எரிச்சலுடன் வாய் விம்மிக் கூப்பிடும். அறிவு கெடும். பார்வை வெகுண்டு பார்க்கும். ஏழரை நாழிகையில் சாத்தியமாகும்.

சீதாங்கச் சன்னியின் குணம் (கால அளவு)

490. சீதாங்கச் சன்னிக்கு மேல்சீதளங்கை கால்தான்
சீதமிடும் வாதமுண்டாஞ் சிரசு கீழாம்
போதாந்தச் சத்தியுமாயக் கண்சு ழன்று
பெருந்தாக விக்கலுமாய் மலம்வி டாது
தாதாந்தம் வாயிலரும் தாக முண்டாந்
தப்பாது பதினைந்து நாளைத் தோடம்
காதாந்த விழிமடவாய் சொன்னோம் கண்டீர்
கருதுசீ தாங்கச்சன்னி காணு மின்றே. 8

கைகால் குளிர்ந்திருக்கும். கழுத்திற்கு கீழ் வாதம் மிகும். கண் சுழன்று விக்கலும் தோன்றும். மலம் சிக்கும். தாகம் உண்டாகும். பதினைந்து நாளில் தோடம் உண்டாகும், சீதாங்கச் சன்னி இதுவாகும்.

அசுவேதச் சன்னியின் குணம் (கால அளவு)

491. அசுவேதச் சன்னிக்கு ஆகார மிறங்கு
மடவினால் தாகமுண்டாய் யுடம்பிளைக்குஞ் சொன்னோம்
நிசுவேத வேர்வையில்லை நித்திரையும் வருமே
நிச்சயமா யிதனையே நேமித்துப் பாரு
பசுபாச மென்றோர்க்கு யிதுவே யாகும்
பரிந்துமுனி யுரைத்தபடி பாடுஞ் சொன்னோம்
சசுபாசம் பதின்றா நாளில் தோடம்
சாத்தியவா கடமறியும் செகத்துள் ளோரே. 9

ஆகாரம் செல்லும். தாகம் உண்டாகும். உடம்பு இளைக்கும். வியர்வை தோன்றாது. தூக்கம் வரும். பதினாறு நாளில் தோடம் ஏற்படும்.

கண்டகுச் சன்னியின் குணம் (கால அளவு)

492. கண்டகுச் சன்னிகுடல் புண்போல் நோகும்
கடுப்புண்டாய் கடுஞ்சுரம் வெள்ளொக் காளம்
வெற்றதோ ருடம்புநடுக்கும் நழிந்து வேர்வை
இரண்டு கைமுகம் வெளுக்குங் குறியே
பண்டுநா முரைத்தபடி பாரிதனை யடவாய்
பரிகார மிதுவேதான் பாருளோர் தமக்கும்
இண்டிவருங் கண்டகநீ ரேழுநாளைத் தோட
மெனமுனிவ னுரைத்தபடி விரையப் பாரே. 10

குடல் புண் போன்று வலிக்கும். கடுப்பு தோன்றும். சுரம், வாந்தி, உடல் நடுக்கம் ஏற்படும். வியர்வை தோன்றும். கைகளும் முகமும் வெளுக்கும். ஏழு நாளில் தோடம் என்பர்.

ஆந்திரிகச் சன்னியின் குணம் (கால அளவு)

493. ஆந்திரிகச் சன்னியிதன் குணமே தென்னில்
அடல்படவே யெழுந்திருக்கும் தலைநோ வாகும்
காந்திகெடு மறிவுகெடுஞ் சத்துவங்கே டாகுங்
கண்கள்இளகு முடல்வெதும்புங் கணுக்கள் தோறும்
நொந்துநின்று நடுமுதுகு நெளிக்குமெய் யெலும்பும்
நிச்சயமாய் ஆந்திரிகச் சன்னியிது கடவே
போந்தபன் னிரண்டுநாள் தோட மென்றே
புகன்றபடி யேயிதனைப் பொருத்திப் பாரே. 11

உடல் வலியோடு எழும். தலை நோகும். ஒளி கெடும். அறிவும் கெடும். சத்து கேடாகும். கண்கள் இளகும். உடல் வெதும்பும். மூட்டுகளிலும், நடு முதுகிலும் வலி ஏற்படும். பன்னிரண்டு நாள் தோடம் என்று கூறுவர்.

கண்குழிச் சன்னியின் குணம் (கால அளவு)
(வேறு)

494. கண்குழிச் சன்னிக்கு வயிறிறுகும் கண்ணுங் கறுக்குங் குழியாகும்
பகசுர மாகும் மூர்ச்சையதாம் பலவுங் குழறுந் துயிலாது
செஞ்சிறு கஞ்சிதான் கேட்கும் சொல்லத் தழந்து மயக்கமதாம்
என்னிரு நாளைத் தோடமென்று யின்றாங் கண்குழிச் சன்னிக்கே. 12

கண்கள் கறுத்துப் போய் குழிவாகிக் காணும். மயக்கம் தோன்றும். நாக்குழறும். தூக்கம் கெடும். கஞ்சி அகட்டும். மயக்கம் தோன்றும். பதினாறு நாள் தோடம் என்பர்.

அறமளிச் சன்னியின் குணம் (கால அளவு)
(வேறு)

495. அறமளிக்கும் நடைதளர்ந்து பலமே குன்று
மதுவுமன்றிப் புயம்நளிக்குந் தலைபி ரட்டும்
பிரவலிப் புண்ணாய்நோம் மேலே நிற்கும்
பொருத்தமா ரிப்பாரம் பொருந்திப் பாரும்
மாமுனிவ ராயிடினு முலகோ ரேனும்
வகையிதுதா னுரைத்தபடி செய்வீ ராகில்
நாவினிய அரமரிக்கும் பதினெட்டாம்நாள்
நன்றாக நீரிதனை நயந்து பாரே. 13

அறச்சிந்தனை அழிக்கும். நடை தளரும். உடல்பலம் குன்றும். தோள் வலிக்கும். தலை புரட்டும். புண்போல் நோகும். பதினெட்டு நாள் தோடமாகும் என்று முனிவர் கூறியுள்ளார்.

அலத்துச் சன்னியின் குணம் (கால அளவு)

496. அலத்துச்சன்னி கதரிவிழக் கூப்பிட...
அருகிருந்தோர் தனையடிக்கும் இடற மீறும்
பலத்தயுடம் பிளைக்குமிரு கைமூ லத்தில்
வைக்கும்பேத மறிந்தஞ்சன நசியம் பண்ணும்

சொலத்தகுமா யிவ்வகையே அறிந்து பார்க்கில்
துன்னெறி நன்மையதாஞ் சொல்லக் கேளும்
மெலக்கினியாய் அலத்துச் சன்னி கெட்டு நாளென்
றியம்பினா ரியல்பாகப் பாரு மென்றே. 14

கதறி விழுவர். பிறரைக் கூப்பிடுவர். அருகிருப்போரை அடிப்பர். உடம்பு இளைக்கும். இவ்வலத்துச் சன்னி எட்டு நாளென அகத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகச் சன்னியின் குணம் (கால அளவு)

497. அதிகச்சன்னிக் கழகரியும் வெதும்பு மழற்றி
யாமெலிந்த வயிறதுபோல் தண்ணீர் தாகம்
மதிமயக்கம் பலங்குறையு மூர்ச்சை யுண்டா
மனமறியப் பிந்தெழியும் பசியு மில்லை
முதல்நசியஞ் செய்தபின்பு பிரையோ கிக்க
மும்மூன் றெட்டுநாளைத் தோட மாகும்
பதியிதென வறிந்ததோர்கள் பாருஞ் சொன்னோம்.
பகர்ந்தமுனி யுரையிதெனும் பாருள் ளோரே. 15

பாதம் எரியும். உடல் வெப்பத்தால் வெதும்பும். உடல் மெலியும். வயிறு கழியும். தாகம் எடுக்கும். மதி மயங்கும். பலம் குறைவதோடு மயக்கம் உண்டாகும். பசி எடுக்காது. இந்நோய்க்கு இருபத்திரண்டு நாழிகை தோடமென்று கூறியுள்ளனர்.

498. சன்னிக்கு ஒத்தடம் (மருத்துவம்)

வேப்பங்கொட்டை, இலுப்பைக் கொட்டை, கொட்டைமுத்து, தேங்காய், முருங்கைவிரை, அகத்திவிரை, பருத்திக்கொட்டை, கடுகு, மஞ்சள், சப்பை, சீகை, சீனிக்கடுகு, வெள்ளை வெங்காயம் இதுவெல்லாம் இடித்து வேப்பெண்ணெய் குத்தி வறுத்து உடம்பு, கால், தலைக்கு ஒத்தடம் போடவும்.

## நட்சத்திரக் குறிப்பு

499. அசுபதியில்
விழுந்தால் ஒன்பது நாள்
இரண்டாம் கால் பத்து நாள்
மூன்றாங்கால் பதினைந்து நாள்
நான்காம் கால் மரணம்

பரணியில்
முதற்கால் 3 நாள்
இரண்டாம் கால் 7 நாள்
மூன்றாங் கால் 15 நாள்
நான்காம் கால் 12 நாள்

கார்த்திகையில்
முதற்கால் 6 நாள்
இரண்டாம் கால் 10 நாள்
மூன்றாம் கால் 15 நாள்
நான்காம் கால் 48 நாள்

| | |
|---|---|
| ரோகிணி நாள் | முதற்கால் 10 நாள்<br>இரண்டாம் கால் 18 நாள்<br>மூன்றாம் கால் 32 நாள்<br>நான்காம் கால் 85 நாள் |
| மிருக சீரிசம் | முதற்கால் 30 நாள்<br>இரண்டாம் கால் 18 நாள்<br>மூன்றாம் கால் 15 நாள்<br>நான்காம் கால் 25 நாள் |
| திருவாதிரையில் | முதற்கால் 9 நாள்<br>இரண்டாம் கால் மரணம்<br>மூன்றாம் கால் 15 நாள்<br>நான்காம் கால் 25 நாள் |
| புனர்பூசம் | முதற்கால் 7 நாள்<br>இரண்டாம் கால் 10 நாள்<br>மூன்றாம் கால் 18 நாள்<br>நான்காம் கால் மரணம் |
| பூசம் | முதற்கால் 7 நாள்<br>இரண்டாம் கால் 10 நாள்<br>மூன்றாம் கால் 19 நாள்<br>நான்காம் கால் 27 நாள் |
| ஆயிலியம் | முதற்கால் 9 நாள்<br>இரண்டாம் கால் 20 நாள்<br>மூன்றாம் கால் 96 நாள்<br>நான்காம் கால் 39 நாள் |
| மகம் | முதற்கால் பிராணபயம்<br>இரண்டாம் கால் 30 நாள்<br>மூன்றாம் கால் 85 நாள்<br>நான்காம் கால் 5 நாள் |
| பூரம் | முதற்கால் மரணம்<br>இரண்டாம் கால் 25 நாள்<br>மூன்றாம் கால் 29 நாள்<br>நான்காம் கால் 81 நாள் |
| உத்திரம் | முதற்கால் 8 நாள்<br>இரண்டாம் கால் 20 நாள்<br>மூன்றாம் கால் 52 நாள்<br>நான்காம் கால் மரணம் |
| அதீதம் | முதற்கால் 8 நாள்<br>இரண்டாம் கால் 15 நாள்<br>மூன்றாம் கால் 28 நாள்<br>நான்காம் கால் 52 நாள் |

| | |
|---|---|
| சித்திரை | முதற்கால் 9 நாள்<br>இரண்டாம் கால் 15 நாள்<br>மூன்றாம் கால் 12 நாள்<br>நான்காம் கால் 49 நாள் |
| சோதி | முதற்கால் 12 நாள்<br>இரண்டாம் கால் மரணம்<br>மூன்றாம் கால் 8 நாள்<br>நான்காம் கால் 12 நாள் |
| விசாகம் | முதற்கால் 9 நாள்<br>இரண்டாம் கால் 15 நாள்<br>மூன்றாம் கால் 42 நாள்<br>நான்காம் கால் 81 நாள் |
| அனுசம் | முதற்கால் மரணம்<br>இரண்டாம் கால் 21 நாள்<br>மூன்றாம் கால் 90 நாள்<br>நான்காம் கால் 42 நாள் |
| கேட்டை | முதற்கால் மரணம்<br>இரண்டாம் கால் 20 நாள்<br>மூன்றாம் கால் 29 நாள்<br>நான்காம் கால் 82 நாள் |
| மூலம் | முதற்கால் மரணம்<br>இரண்டாம் கால் 9 நாள்<br>மூன்றாம் கால் 10 நாள்<br>நான்காம் கால் 7 நாள் |
| பூராடம் | முதற்கால் 9 நாள்<br>இரண்டாம் கால் மரணம்<br>மூன்றாம் கால் 10 நாள்<br>நான்காம் கால் 5 நாள் |
| உத்திராடம் | முதற்கால் 7 நாள்<br>இரண்டாம் கால் 20 நாள்<br>மூன்றாம் கால் 30 நாள்<br>நான்காம் கால் 42 நாள் |
| திருவோணம் | முதற்கால் 11 நாள்<br>இரண்டாம் கால் 10 நாள்<br>மூன்றாம் கால் 8 நாள்<br>நான்காம் கால் மரணம் |
| அவிட்டம் | முதற்கால் 9 நாள்<br>இரண்டாம் கால் 55 நாள்<br>மூன்றாம் கால் 22 நாள்<br>நான்காம் கால் 39 நாள் |

| | |
|---|---|
| சதையம் | முதற்கால் 11 நாள் |
| | இரண்டாம் கால் 16 நாள் |
| | மூன்றாம் கால் 26 நாள் |
| | நான்காம் கால் 22 நாள் |
| பூரட்டாதி | முதற்கால் மரணம் |
| | இரண்டாம் கால் 16 நாள் |
| | மூன்றாம் கால் 71 நாள் |
| | நான்காம் கால் 41 நாள் |
| உத்திரட்டாதி | முதற்கால் 7 நாள் |
| | இரண்டாம் கால் 18 நாள் |
| | மூன்றாம் கால் 7 நாள் |
| | நான்காம் கால் 28 நாளில் மரணம் |
| ரேவதி | முதற்கால் மரணம் |
| | இரண்டாம் கால் 11 நாள் |
| | மூன்றாம் கால் 18 நாள் |
| | நான்காம் கால் 2 நாளில் மாறும். |

**-சுரகாதல் முற்றும்.**

சுப்பிரமணியர் துணை செய்யவும்
வேலும் மயிலும் துணை செய்யவும்
சிவகாமி இரட்சிக்கவும்
குமரகுருபரன் அமர பயங்கர வள்ளி மனோகர்.
விக்கின விநாயகன் துணை செய்யவும் இரட்சிக்கவும்.

## சவுரியர் குழம்பு பேதி - அகவல்

500. சருவேச பரனாற் சகலமும் படைத்தோன்
அருமறை மொழியான அனைவரும் பிழைக்க
குருபரன் சிஷ்டித்த குழம்புச்சூ ரணத்தை
திருவரு ளென்று சேர்த்த பேருக்கு
உருவினை னானூத் தொன்பதுந் தீருந்
சிறுவனுக் குதவி செய்வீ ரென்றெண்ணி
பெருமை யென்றவிசதப் பேருரைப் பேனே.

கற்பித்த கடுக்காய் கடுகு இந்துப்பு
நற்பெருங் காயம் நல்லவண்காரம்
ஏற்புள்ள சூத மேவு மனோசிலை
திப்பிலி தாரம் சீரகத் துடனே
ஒப்புடன் கடுகு ரோகணி நாபி
அப்படி மருந்துகளது பன்னி ரெண்டும்
இப்படி நேர்வாள மிதுசமன் கொண்டு
உப்பன நஞ்சு உயிர்முளை வாங்கி
நஞ்சது போக்கி நல்லிள வறுப்பாய்
அஞ்சாமற் சூரண மதுபொடி செய்து
கொஞ்சமாய் தென்னங் குடுக்கையின் கரிதாம்

ஐந்து விராகன் கறுப்புக் கட்டி
கொஞ்சியே இதுவும் கூட்டிக் கல்வத்தில்
வஞ்சியே வேலிப் பருத்திச்சா றொருநாள்
துஞ்சிய தேங்காய்ப் பாலினிலொரு நாளரைத்து
இஞ்சிய பதங்கண் டெடுத்தடை சிமிழில்
வைத்து நீகேளு வரும்பிணி நோய்க்கு
உத்தனு பானமு முரைத்திட வேதான்
வெள்ளையக் கரங்கள் விதமேழு தோடம்
கல்லமாய்க் கருத்த அக்கர மேழு
சில்லரைத் தோடம் சினப்புக ளேழு
மூவேழு தோட முறிந்து பின்னோடு
நாவினிப் பணவிடை நன்றாகத் தேய்த்துக்
கூவிய வென்னீர் குடித்திடத் தீரும்
சன்னி தோடங்கள் சகலச் சுரங்களும்
வென்னீறிற் கொள்ள விட்டகன் றோடும்
கடுக்காய்க் கசாயத்தில் காசிடைக் கொள்ள
இடுக்கென வரும்சுர மெல்லாம் தீர்ந்திடும்
முடக்கிய குளிர்ச்சுர முறிந்து விட்டோடும்
அடுக்கும் சுக்குஅது நீரிற் கொள்ள
சீதேவி சீரகம் தன்னில் குடித்திட
மூதேவி விச்சுர முனைகுழைந் தோடும்
எட்டுச் சுரமும் ஏல மிளகுடன்
அசத்திச் சுரமுடன் அகன்று போமென்றே
கொன்னைக் கொழுந்துடன் கூறும் காய்ப்பொடி
எண்ணெயிற் கொள்ள ஏங்கலுப் பிசம்போம்
சன்னை யிருமல் சத்தியுள் மாந்தைக்கு
சொன்ன மோருடன் சுச்சுலுப் பட்டை
இன்னதை இடித்து இதம்பெறக் குடிப்பீர்
கடைகரை யிருமல் கண்டிப்புத் தீரும்
இடரது போக்கு மெண்ணெய் முலைப்பாலுங்
கூடை நோவதுவுங் கூவளை விப்புருதியு
ஆடா தோடை அரத்தை பற்க்கறைபால்
கூட எண்ணெயில் சுகம்பெறக் குடிப்பீர்
ஈழை இருமல் யேங்கலுப் பிசங்கள்
கொள்ளையு மல்லை கூடு விப்புருதியும்
அளைய றிந்து ஆவின் மோருடன்
வேலைக்குக் காசெடை விதமா யருந்திடப்
பள்ளை விப்புருதி பதிமூன்று சயங்களும்
கொள்வீர் வீரதாது பத்திரிச் சாற்றில்
முள்ளிய ஊஞ்சள் சாற்றினில் கொள்ள
சுவாசங் குலைகுலைந் தோடும் சத்தி
குலமங்கள தகரைச் சாற்றில் அஸ்தி
சூலைக்கு ஆமணக் கெண்ணெயில் பித்த
குலமங்கள புளியிலைச் சாற்றில் வாய்வு
குலமங்கள வல்லாரைச் சாற்றில் எரிகுல
மங்களிரு சீரகமும் உள்ளி நெய்பாலில்
ஊத்திக்குடிக் கவும்வெறி வலிகுலவிளக் கெண்ணெய்தனில்
கருவிய குழம்பு களஞ்சிடப் பாகு

பயித்திய குன்மம் பாசி மோரில்
நயத்துடன் குடிக்க நல்லதா மென்று
அண்ட வாதம்போம் ஆட்டுப்பால் வெண்ணெயில்
பண்டிப் பொருமல் பக்க சூலைக்கிரு
ஊன்றிர் பசுநெய் யுழக்குப்பால் சர்க்கரை
குண்டிகை நோவு குலைவலி எரிச்சல்
தீண்டிய பசும்பால் செறுநெய் சர்க்கரை
முதுகுப் பிளவை மூலங்க ளேழு
அறையாப்பு வாளை அதிருஞ் சிலந்தியும்
உளபடு தாமரை ஊத்தைப் புண்ணானதுங்
கோழைப்புண் பச்சைக்கொடி பவுத்திரமு பாதச்
சர்க்கரைப்புண் படுவான் சிலந்தியு மன்றியும்
சிலந்திகள் எண்பத்து நான்கு தீதுகள்
கற்றுச் சீலையில் புகைக்க மூக்கு
நீர்ப்பாய்ச்சல் புகவலி வாதம் நாக்குச்
சிவந்த நல்ல பல்ல ருணையும்
மார்ச் சிலந் திகள்பயக் கருத்து
நோய்களும் மூக்கில் விழுகு
சலமுக வாத சன்னியுந்
தீர்க்குந் திரிப்புகைச் சீலையில்
குறுதி குட்டங்க ளிருபத்
தொன்றுந் தில்லைப்பூ வெல்லாந்
தின்னக் கொடுக்கலா மலமுஞ்
சலமு மாற்றி நிறைய வைக்குந்
தலைமயிர் சுட்ட சாம்பல் தின்னலாம்
காமாலை சோகை கனத்தம கோதரம்
ஆமணக்கு எண்ணெய் ஆட்டுக் கோமியத்தில்
பாண்டு காமாலை பன்னிரு வகைய
ஆண்டு நெய்யினிலும் ஆமணக்கு எண்ணெயும்
வேண்டுங் கடுக்காய் வேரு கடிதூள்
இல்நிறை குழம்பு நிறுத்துக் கழஞ்சிடப்
பூண்ட விடமும் போகுமென் றுரையே

சர்வ வல்லமை படைத்த ஈஸ்வரன் அனைத்தும் படைத்தான். அருமறை மொழியான அனைவரும் பிழைக்க வேண்டும் எனக்கருதி குருபரன் செய்த குழம்புச் சூரணத்தை திருவருள் என்று சேர்ந்த பேர்கட்கு உருவினையால் வந்த 409 நோய்களும் தீருமென, இறைவன் சொன்ன இம்மருந்தைச் சிறியவனான நான் உரைக்கின்றேன்.

கடுக்காய், கடுகு, இந்துப்பு, பெருங்காயம், வெண்காரம், சூதம் (பாதரசம்), மனோசிலை, திப்பிலி, அரிதாரம், சீரகம், கடுகு ரோகணி, நாபி ஆகிய 12 சரக்குகளும் சமன்எடை எடுத்து இவற்றிலுள்ள நச்சுத்தன்மைகளை முறைப்படி நீக்கித் தூய்மை செய்து வறுக்க வேண்டியவற்றை இளவறுப்பாக வறுத்துச் சூரணம் செய்து சிறிது தென்னஞ்சிரட்டையின் கரி சேர்த்து 5 விராகன் எடை கருப்பட்டியும் கலந்து கல்வத்தில் இட்டு வேலிப்பருத்தியிலைச் சாறு ஒரு நாளும், தேங்காய்ப்பால் ஒரு நாளும் தனித்தனியாக விட்டரைத்து பதத்திற்கு வந்ததும் வழித்து எடுத்து சிமிழில் அடைத்து தக்கத் துணைமருந்துடன் வைத்துப் பயன்படுத்தவும்.

| | தீரும் நோய்கள் | துணைமருந்து |
|---|---|---|
| 1. | வெள்ளையக்கரம், ஏழுவிதமான தோடம் கருத்த அக்கரம் ஏழு, சில்லரைத் தோடம், சினப்புகள் ஏழு | - பணவெடை, வெந்நீர் |
| 2. | சன்னித் தோடங்கள், சகலச் சுரங்கள் | - வெண்ணெய் |
| 3. | சுரங்கள் | - கடுக்காய் குடிநீர் |
| 4. | குளிர்ச்சுரம் விசச்சுரம் | - சுக்கு, சீதேவி செங்கழுநீர், சீரகம் சேர்ந்த குடிநீர் |
| 5. | எட்டுவிதமான சுரம் | - ஏலம், மிளகு சூரணம் |
| 6. | அத்திச் சுரம், ஏங்கல் | - கொன்றைக் கொழுந்து |
| 7. | சன்னயிருமல் (குரல் வளையை இறுக்கும் இருமல்) மாந்தம் | - சுக்குப் பொடி + மோர் |
| 8. | கடைகரையிருமல் | - தாய்ப்பால் |
| 9. | குவளை விப்புருதி | - ஆடாதோடை, அரத்தைச் சேர்ந்த குடிநீர் |
| 10. | ஈளை, இருமல், ஏங்கல், உப்பிசம், கூடுவிப்புருதி | - ஆவின் மோர் |
| 11. | பிள்ளை விப்புருதி, 13 சுரங்கள் | - தாளிபத்திரி (அல்லது) சுவர மூலிகைச் சாறு |
| 12. | சுவாசம், சூலை, வாந்தி | - தகரைச் சாறு |
| 13. | அஸ்தி சூலை | - ஆமணக்கு எண்ணெய் |
| 14. | பித்த நோய்கள் | - புளியிலைச் சாறு |
| 15. | வாய்வு | - வல்லாரைச் சாறு |
| 16. | எரிகுன்மம் | - இருசீரகம் (நற்சீரகம், சோம்பு), பூண்டுச் சாறு |
| 17. | வலிகுன்மம் | - விளக்கெண்ணெய் |
| 18. | பயித்திய குன்மம் | - மோர் |
| 19. | அண்ட வாதம் | - ஆட்டுப்பால் வெண்ணெய் |
| 20. | தீராத பொருமல், பக்கசூலை | - பசுநெய் |
| 21. | குண்டிகை நோய், குலைவலி எரிச்சல் (நீரிழிவு நோயில் வரக்கூடிய பிருக்க நோய்க்கு) | - பசும்பால், நெய் |
| 22. | முதுகுப் பிளவை (நீரிழிவு நோயில்), மூலங்கள் ஏழு, அசையாப்பு, தொடை வாழை, சிலந்தி, அழுகிய (சீழ்வடியும் புண்) புண், கோழைப்புண், பவுத்திரம், பாதச்சக்கரம், படுவான் சிலந்தி மற்றும் சிலந்தி 84 | - சவுரியர் குழம்பு மருந்தை துணியில் தடவி எரித்துப் புகைபோட வேண்டும். |
| 23. | நீர்ப்பாய்ச்சல் வலிப்பை உண்டாக்கும் வாதநோய், நாக்கு சிலந்தி, பல்லரணை, மார்பு சிலந்தி, மூக்கிலிருந்து எப்போதும் வடிந்து கொண்டிருக்கும் நீர்வாதச் சன்னி | - சவுரியர் குழம்பைத் திரியாக்கிப் புகைத்து மூக்கில் காட்ட வேண்டும். |

24. குட்ட நோய் - 21 - தில்லைப்பூ + வெல்லம்
25. மலசலம் - தலைமயிர் சுட்ட சாம்பல்
26. காமாலை, சோகை, மகோதரம் - ஆமணக்கு எண்ணெய் + ஆட்டுக் கோமியம்
27. பாண்டு, காமாலை - ஆவின் நெய், ஆமணக்கு எண்ணெய் + கடுக்காய்த் தோல்

அகத்தியர் குழம்பு

501. பருவத மலையினில் வாழும் பகவனார் அருளி னாலே
பொறுமையாய் உலகில் வாழும் புண்ணிய சனங்க ளுக்கு
ஒருபல வியாதி வந்தால் உண்மையாய் தீரு மென்று
பெறபல முனிவன் தானும் பேசிய மருந்து கேளே. 1

இறைவனின் அருளினாலே உலகில் நல்ல வண்ணம் வாழும் நல்லோர்க்கு ஏற்படும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வியாதிகள் பீடிக்குமானால் அவை தீருவதற்கான, தமிழ் கூறும் நல் உலகத்தாரால் அறியப்பெற்ற அகத்தியன் சொன்ன மருந்தைக் கேட்பாயாக.

502. பேசிய மருந்து கேளாய் பெருங்காயம் கடுகிந் துப்பு
வீசிய குரசம்வெண் காரம் மிகமனோ சிலையும் கூட்டி
மாசிலா திப்பிலி யும்அரி தாரந் திகட தாகும்
ஆசினா கருஞ்சீ ரகமவ் வகைவகை கழஞ்சு வாங்கே 2

பெருங்காயம், கடுகு, இந்துப்பு, குரசம் வெண்காரம், மனோசிலை ஆகியவற்றை எடுத்துக் கொண்டு, திப்பிலி, அரிதாரம் கருஞ்சீரகம் ஆகியவற்றை வகைக்கு ஒரு கழஞ்சு அளவில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

503. வாங்கிய சரக்குக் கொப்பாய் வாளமே வறுத்துப் பாதி
தாங்கிய பச்சை பாதி சமன்பெறு முறையே போக்கி
தாங்கிய சரக்கு பத்தும் தீர்க்கமா யரைக்கக் காந்தும்
ஒருங்கிய மோரும் சோறும் உண்டுநீ யரைத்துக் கூட்டே 3

மேலே கூறிய சரக்குகளுக்குச் சரிமுதல் எடை நேர்வாளம் எடுத்துக் கொண்டு முறைப்படி சுத்தி செய்து, பாதியை வறுத்தும், பாதியை நெய்விட்டு வறுக்காமலும் எடுத்துக் கொண்டு மருந்துச் சரக்குகளோடு அரைக்கவும். மருந்தைக் கல்வத்தில் அரைக்கும் போது கை காந்தல் ஏற்படும். எனவே அரைக்கின்றவர் மோரும், சோறும் உண்டு பின் அரைக்கவும்.

(அனுபானமும் தீரும் நோயும்)

504. கூட்டிய மருந்தின் பேரே யகத்தியர் குழம்ப தாகும்
நீட்டிய சுரமே சுக்கு யிருமலே கடுக்காய்ச் சாறு
வாட்டிய குடிசு ரங்கள் வகைசுக்கு மிளகு சொன்னோம்
ஆட்டினி ரத்த மூலம் பசுவின்னெய் மேதைப் பாலே 4

505. பாலினி மொழியே பாண்டு மகோதரம் பெருவயிறு
மேலுநீ ராம்பல் கூகை மிளகுத்தூள் வெள்வெங்காயம்
.... சன்னிக் கெல்லாம் தேனிஞ்சிச் சாற்றி லாகும்

506. இடுங்கண்ணில் கடுகில் பாதி யீகக்கற் றாழஞ் சோறு
வடிபெறு சந்தனங்கள் வற்றுநீர்க் கூடில் மாறும்
படுபெரு பிளவை வாழை பலபல கரப்பான் புண்கள்
விடுபெரு சிலந்திக் கெல்லா மிகஉமி நீரில் பருகே. 6

507. பூசிய முலைகுத் துக்கும் புண்ணுக்கு மிதுவே யாகும்
சூசிகா வாய்வு சூலை குட்டமே நொச்சிச் சாறு
பாசமாம் வாயுவி னாலே பலபல வியாதிக் கெல்லாம்
நேசமாம் நொச்சி சுக்கில் நிச்சயஞ் செய்து பாரே 7

508. பாரிய கபால வலிமுதலா ...ளதும் பசாசு பறக்கும்
தீரிய புகையில் நேரே யெடுத்துநீர் செரிப்பு கல்லடைப்பு
தாழை விழுதினில் செய்வீரால் தீர்க்கும் கிரந்தி பறங்கிமுதல்
தீரா ஆல பலவிசங்கள் தீர்க்குந் திரியைப் புகைபிடியே. 8

509. பிடிக்குந் திரியை அம்மிதனில் புரட்டி உருட்டி திரியதனை
இடிக்கும் வலிக்கும் தனிவாதம் யிளைத்தே யோடும் திரிபுகையில்
கொடுக்கும் கசாயம் வெண்காயம் கொடிக மூற்சி முசுமுசுக்கை நொச்சி
அடிக்குஞ் சன்னி பதினெட்டுக்கும் அனுபானஞ் செய்க முலாவி... 9

(கர்ப்பம் தரிக்க)

510. சொன்னோம் மடவார் தங்களுக்கு சுகமாய் கர்ப்பம் வரும்படிகேள்
மின்னே அரசங் கொழுந்துடனே மிகவே பசும்பால் விட்டரைத்து
முன்னர் குழம்பு பணவெடையை மூட்டி மூன்று நாள்கொள்ள
பொன்னார் புதல்வர் உண்டாகிப் புயிலுடை யோர்க்குரு....டீர் 10

அரசங் கொழுந்தை மிகுந்த பசும்பால் விட்டரைத்து அகத்தியர் குழம்பு பணவெடை எடுத்து இதனுடன் சேர்த்து மூன்றுநாள் கொடுக்க, சுகமாகப் புதல்வர் பிறப்பர்.

பொருள் 504-510

| | தீரும் நோய்கள் | துணை மருந்து |
|---|---|---|
| 1. | சுரம் | - சுக்கு, கடுக்காய், குடிநீர் |
| 2. | இரத்த மூலம் | - பசுநெய் |
| 3. | பாண்டு, மகோதரம், நீராம்பல் | - கூகைநீர் + மிளகுத்தூள் + பூண்டு, சூரணம் |
| 4. | சன்னி நோய் | - இஞ்சி தேனூறல் |
| 5. | விசச்சன்னி | - எருக்கஞ் சாறு, வேப்பிலைச் சாற்றில் அகத்தியர் குழம்பை மத்தித்து கண்ணில் விடவும். எரிச்சல் இருப்பின் கற்றாழைச் சாறு, சந்தனம் ஆகியன இடவும். |
| 6. | பெரும்பிளவை, தொடை வாழை, பல்வேறு கரப்பான், புண்கள் | - அரிசி கழுவிய நீர் (உமிநீர்) |
| 7. | முலைகுத்து, புண் | - அரிசி கழுவிய நீர் |

| | | |
|---|---|---|
| 8. | ஆசிகா வாதம், வாய்வு, சூலை, குட்டம் | - நொச்சிச்சாறு |
| 9. | வாய்வு | - நொச்சி + சுக்குக் குடிநீர் |
| 10. | கபால நோய்கள் பிசாசு, நீர்க்கோவை | - மூக்கில் புகையிடவும் |
| 11. | கல்லடைப்பு | - தாழை விழுதுச்சாறு |
| 12. | கிரந்தி, பரங்கி, புண், விடங்கல் | - தரியாகப் புகைக்க |
| 13. | தலைவலி, வாதநோய், வலிப்பு நோய்கள் | - மூக்கில் திரியைப் புகைக்கவும். |
| 14. | சன்னி-18 | - வெங்காயம், கழற்சி, முசுமுசுக்கை, நொச்சி சேர்ந்தக் குடிநீர் |
| 15. | பிள்ளைப் பேறு உண்டாக | - அரசங் கொழுந்துடனே பசும்பால் விட்டரைத்துக் கொடுக்கவும். |

# பொருள்முறை அட்டவணை

நாடி: *12, 29, 30, 34, 35, 37-53, 62-67, 70-77, 112, 119, 428-430*

தூதுலட்சணம்: *54-61*

தசவாயு: *418-427*

நோய்வகை: *20-23, 25, 26, 80, 156, 240, 407, 414, 434, 435, 483, 484*

நோய்கள்

அதிசாரம்: *139-146*

கர்ப்ப நோய்: *315-322, 326, 328, 330, 332, 334, 336, 338, 340, 342, 344*

கரு உற்பத்தி: *327, 410, 411*

சன்னி: *78, 99, 123, 136, 138, 148, 152, 366, 369, 371, 373, 375, 377, 379, 380, 381, 383, 384, 387, 389, 391, 393, 454-458, 484-497*

சுரநோய்: *15, 16, 34-36, 79, 88-94, 101, 102, 122, 459-483.*

தோடம்: *1-6, 33, 35, 36, 93, 94, 144*

வாதம்: *16, 27, 28, 32, 81, 87, 111, 112, 307, 310, 436, 437, 453*

பித்தம்: *83, 120, 121, 308, 311, 438-442*

கபம்: *31, 84, 86, 95, 96, 309, 312, 355, 443-446*

வாத பித்த கபம்: *15, 32, 33, 82, 85, 97, 98, 100, 357-359, 362, 447-452*

பிற: 323, 324, 404, 412

குறிகுணம்: *3-11, 17, 37, 51-53, 78, 81, 83, 84, 88-91, 109, 111, 114-135, 140-146, 310, 312, 316-332, 334, 336, 338, 340, 342, 344, 355, 357, 359, 362, 364, 366, 369, 371, 373, 375, 377, 379, 381, 383, 385, 387, 389, 391, 404, 436-481, 485-497*

மரணக் குறி: *8-10, 48-53, 75, 114-117, 119*

மருந்து

இரசாயனம்: *170, 171, 285*

கசாயம் : 95-110, 304, 327, 329, 331, 333, 335, 337, 339, 341, 343, 345-354, 356, 358, 360, 361, 363, 365, 367, 368, 370, 372, 374, 376, 378, 380, 382, 384, 386, 388, 390, 392-400, 401-403, 405.

சுத்தி: *172-188, 221-228, 229-239*

தைலம்: *241-282, 286, 291-293*

நெய்: *283, 284, 287, 288, 289, 294*

பற்பம்: *189-218*

மாத்திரை: *147-155, 158-169, 174, 217-220*

பிற: 295, 296, 325, 408, 409, 498, 500 502.

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

(எண் - செய்யுள் எண்)


அங்கங்க ளெங்குமி - 387
அங்கமெல்லா மக்கினியைத் - 467
அங்கையை முறுக்கி - 71
அசத்தியினில் வாதசுரம் - 463
அசத்தி சுரமோர் - 462
அசமோதக மிளகு - 401
அசுபதியில் விழுந்தால் - 499
அசுவேதச் சன்னிக்கு - 491
அஞ்சாந் திங்களது - 334
அடிவயிற்றில் நெருஞ்சிமுள் - 316
அடவுடன் குமரகண்டம் - 88
அடுத்தபசி யுண்டாகும் - 448
அண்டர் புகழ்கொம்மடி - 233
அற்றதோர் பட்டம் - 40
அதிக சன்னி - 497
அதிசாரம் விளக்கெண்ணெய் - 145
அதிசாரச் சுரம்வந்து - 470
அதிமதுர மிருகமஞ்சு - 363
அந்தர தாகச்சுர - 435
அப்பிரக மொன்று - 151
அப்புவின் கூறுதா - 416
அமிர்தமொழி தப்பரை - 125
அய்யமாஞ் சேத்துமம் - 75
அய்யமா நாடி - 49
அய்யமுப் பத்து - 413
அய்ய மெய்யி - 446
அய்யுடன் வாதம் - 62
அரப்பொடி யெண்ணெய் - 190
அரமளிக்கும் நடைதளர்ந்து - 495
அரிதாரஞ் சீலை - 180
அருள்பெறு நேர்வாளத் - 223
அரைத்திடு அங்கத்து - 203
அரைத்துன் மூசை - 204
அல்ல செய்யு - 451
அலத்துச்சன்னி கதிரிவிழக் - 496
அலமது வலது - 430
அறிந்தே தீவிரச்சுரம் - 434
அறிந்துகால்கையுங் - 373
அறமிகுந்த வாதச்சுரம் - 122
அன்புடன் தேற்றாங் - 229
ஆகங் குளிர்ந்து - 457
ஆகமச் சுரத்தின் - 474
ஆசிலா நாடி - 45
ஆடா தோடை - 296
ஆண்டவ ரானா - 41
ஆதமாஞ் செந்தூரத்தை - 195
ஆந்திரிகச் சன்னி - 493
ஆயதோர் சுரமும் - 80
ஆயிரத் தெட்டு - 25
ஆயில்குழ லாதண்டை - 265
ஆயில் பட்டை - 257
ஆயுள் வேதந்தன்னில் - 18
ஆகுனாள் வித்துண் - 410
ஆலம் பூவுஞ் - 335
ஆவின் நெய்யும் - 295
ஆனதோர் பத்தியத்தில் - 3
ஆனதோர் பேரா - 230
ஆன முத்தக் - 246
ஆனதோ ரெண்ணெய் - 254
ஆனதோர் வாதநாடி - 74
இடித்துக் குறுணி - 301
இடித்தச் சாறு - 248
இடுங்கண்ணில் கடுகில் - 506
இடையது சந்திர நாடி - 429
இதமான வாதசுரம் - 160
இந்தப்படி இரத - 217
இந்திர கோப - 339
இந்தப்படி வெண்காரம் - 395
இரத்தே ட்டிகக் கண்சிவந்து - 489
இரதங் கந்தகம் - 273
இரத்துடனே கந்தகம் - 167
இருநாழி யெண்ணெய் - 272
இலந்தையிலை நன்னாரி - 360
இலாமிச்சந் தாமரை - 337
இலையே கூட்டா - 253
இவைதான் முன்போல் - 269
இனிதான கசாயம் - 236
இனிதான வெள்ளுள்ளி - 260

இனிப்பு மேல்புளிப்பு - 33
இனிப்புள்ள கறிகாய் - 31
உடம்பு கடுக்குந் - 456
உடம்பு மழற்றி - 404
உண்டது முகம் வெளுக்கும் - 84
உண்ணா திருப்ப - 445
உண்மை ரசமீய - 157
உற்றதோர் நாடி - 72
உதிர்ந்ததோர் பொடி - 194
உந்தியின் கீழடிப்புறத்தே - 318
உந்து தாகமு - 378
உரைத்த பித்தம் - 440
உரைத்திடு மேஇவ - 208
உள்ளடியில் மாந்தை - 21
உற்ற காரியங்கள் - 310
உறங்கியே யெழுந்திளைத்து - 12
ஊறிடு மைந்துநாழி - 198
எட்டாந் திங்களது - 340
எட்டிக் கொன்றை - 251
எட்டியின் சாறு - 259
எண்ணிய அவத்தை - 51
எண்ணு பொல்லா - 140
எண்ணெய் நாழி - 264
எரண்ட விரைதான் - 186
எரிவுடனே யுடல்படவே - 486
எற்று மென்னுமிக - 290
என்றரசங் கந்தகம் - 155
என்னநல வாத - 135
என்னநின் றெழுப்பி - 422
என்னே பாலந்த - 156
ஏம யக்கியஞ் - 250
ஏல மிலவங்க - 376
ஏழாந் திங்கள் - 338
ஏழு விடுத்தம் - 275
ஏற்றமுள்ள சிறுகொதியில் - 249
ஓங்கிய பித்தம் - 43
ஓடலு மிருத்தல் - 417
ஓடுரச மப்பிரகம் - 166
ஓதியுடன் மோகிக்க - 124
ஓராறு மிருவேலி - 374
ஒப்பொடு குளிர்ந்துவர - 364
ஒருமையாய சிவமசீதம் - 6
ஒவ்வொன்றில் மூன்று - 152
ஒன்பதா வகையெண்ணெய் - 238
ஒன்பது மாதம் - 342
ஒன்றங் கழஞ்சு - 402
ஒன்று மரை நாளைவாய் - 385
கடிதா யெண்ணெய் - 256
கடுக்காய் சுக்கு - 351
கடுகு ரோகணி - 388
கடுகொடுஞ்சுக்கு - 102
கடைக்கண் இரத்தம் - 10
கண்குழி சன்னிக்கு - 494
கண்டகுச்சஞ் சேத்துமம் - 487
கண்டகுச் சன்னிகுடல் - 492
கண்டங் கத்திரி - 103
கண்டரசங் கந்தகம் - 154
கண்டு குடுவை - 55
கண்ணுஞ் சிவந்தே - 366
கண்ணும் இனி... - 381
கண்ணி நீர்சிந்தி - 61
கண்ணோடு உதடு - 112
கண்ணோவு தலைநோவு - 305
கந்தகத்தால் கரணமுருங் - 177
கர்ப்பையதில் நசுகுனிபோல் - 319
கரம்வந்து சொலிக்க - 13
கருதிய தோருடல் - 133
கருப்பையின் பயத்து - 326
கழுத்தும் பதைக்கும் - 379
களச்சிச் சிராய் - 358
கர்ச்சூர் முந்திரிகை - 349
கற்றாழை யின்சருகு - 361
கறுத்த அப்பிரகம் - 192
கன்னம் வாயுங் - 465
காடிதனில் நேர்வாளம் - 178
காண்பதும் சிரித்துடன் - 143
காணவே கொன்றைவேர் - 221
காணுமிவ் வாதம் - 50
காந்தங் காடி - 191
காந்தங் கந்தகம் - 159
காந்தியுள்ள இந்துப்பு - 185
காய்ச்சியே கற்கம் - 244
காயும் விடம் - 4
கார்குழலாய் கந்தகத்தை - 226
காரீயந் தகடு - 205
காலமே பத்து - 63

காலும் கையும் - 323
காலோடு புறங்கை - 114
கிரந்தி கத்தை - 350
கீழ்வயிற்றில் சுருக்கெனவே - 320
குக்குலுச் சடச்சியை - 283
குங்குமம் அகிலின் - 247
குருவே ரிலாமிச்ச - 237
கும்பகாமாலை - 20
குளிர்ந்துகாய்ச் சல்மிக - 375
குளிரு மெரியும் - 460
குறியுல கேத்தி - 24
குன்று போலக் - 481
கூட்டிய மூட்சை - 199
கூட்டியிடு சித்திரமூ - 158
கூட்டிய மருந்தின் - 504
கூட்டுஞ் சாறு - 252
கூறிய நாக்கும் - 83
கூறுரச கந்தகம் - 168
கைகால் குளிரும் - 357
கையாந்தகரை - 293
கையாந்தகரை - 396
கொட்டிக் கிழங்கும் - 343
கொடிதா யுள்ளம் - 439
கொண்ட கற்கமது - 289
கொண்ட நாயா - 95
கொண்டமுன் னைந்தன் - 423
கொண்டவுடனே பாலை - 170
கொள்ளாய் கற்கம் - 288
கோட்டம் வசம்பு - 263
கோமே தகத்தைக் - 216
கௌரிவெள்ளைப்பாடாணம் - 179
ஞாலமீ துடலம் - 66
சங்கம் வேர்திப்பிலி - 110
சந்தனஞ் சீந்தில் - 97
சந்தனம் பற்படாகம் - 393
சர்க்கரை யிரண்டு - 325
சரீர மெல்லாங் - 472
சருவசந் தனில்நின்று - 421
சருவேச பரனாற் - 500
சாரணையின் கிழங்குதானும் - 399
சாரு மலமுஞ்சனித்து - 141
சாலவொரு கனம்கொள்ளு - 184
சாற்றிய சூரணத்தை - 173
சாற்றியதோர் சந்தீகம் - 136
சாற்று சரீரமும் - 126
சாறதனி லரைத்து - 161
சிக்கிக் கழியும் - 359
சித்திரை வைகாசிக்கு - 64
சிவனார் வேம்பு - 300
சிவேத சிவக்கி - 8
சிற்றாமுட்டி சீந்தில் - 105
சிற்றா முட்டி - 291
சிற்றாமுட்டி வெற்பாலை - 100
சிறுகாஞ் சொரிசிறு - 378
சீதாங்கச் சன்னிக்கு - 490
சீந்திற் தண்டு - 107
சீந்தில் சுக்கு - 352
சீந்தில் பற்படாகம் - 370
சீந்தில் முத்தக்காசு - 368
சீந்திலும் ஒக்க - 96
சீரிபிரு திவியும் - 415
சீரிபுனைந்த மாதா - 297
சீரகமிரு வகையும் - 187
சீராய் வடிக்கும் - 279
சீராகும் நேர்வாளம் - 174
சீரான சாதிலிங்கம் - 148
சீலனா சார - 19
சீறு மக்கினி - 471
சுக்கு முத்தக் - 397
சுக்குச் சீவி - 188
சுகசன்னி நடுக்கம் - 5
சுகநாபி ரசம் - 165
சுத்திசெய்வாய் சாதிலிங்கம் - 227
சுரத்தையுந் தேவதாரம் - 380
சுரம்வீழில் மூன்று - 36
சுரமது தோன்றும் - 92
சுரமறு பத்து - 22
சுரமீ துடைய - 79
சுரமென்றால் வாதம் - 34
சுரனித சுரத்தினாலும் - 324
சுழற்சிச் சீராய் - 358
சூல்வயிற் சுரத்தில் - 345
செங்கப்பா லொட்டரை - 176
செங்கழனி யின்கிழங்கு - 392
செண்பகங் கொத்தமல்லி - 390
செப்புக மூன்று - 28

செப்பு மதிசாரம் - 139
செப்பு இஞ்சி - 261
செம்பைவிரை செங்கழுநீர் - 400
செய்யுப வாசம் - 93
செருக்கு மிமைக்குங் - 47
சேத்தும உற்பத்தி - 309
சேத்துமத் தாலே - 444
சேத்தும மதிகம் - 38
சேவுகன் பூடுபலம் - 268
சொல்லிய உதரலாடன் - 424
சொல்லும் வசன - 57
சொற்படர் கின்ற - 367
சொன்னோம் மடவார் - 510
தக்கதொரு நுரையுடனே - 142
தக்கபுகழ் தாழை - 405
தக்க வறண்டு - 475
தங்கக் கட்டி - 196
தங்க மேனி - 464
தண்மையுள சுரத்தினோடு - 129
தந்திர மாகக் - 427
தப்பாம லெட்டிவிரை - 225
தரங்காணும் பின்னுதலும் - 449
தருணச் சுரத்தால் - 1
தலையு முடம்பும் - 441
தலையெடுக்க வொட்டாது - 454
தலையை வலிக்கும் - 450
தலையொடு பிடரி - 458
தழுதான குழலா - 241
தன்னையே யுறைக்கில் - 87
பயித்தியமாங் குணமுடன் - 240
தாகமும் பசியும் - 120
தாந்திரிகந் தாணாத்திக் - 483
தாந்திரிகம் இருபத்தஞ்சு - 484
தாமரைக் கிழங்கு - 347
தாமரைப் பூவும் - 329
தாமரைப் பூவும் - 341
தாமே சந்திக - 137
தாமேவு ரசம்நாபி - 163
தாளக மரைத்து - 202
தானெதிர் பங்குனி - 65
தானே நொச்சி - 231
தானே மிகுந்த - 235
திங்க ளிரண்டு - 328
திப்பிலிக் கண்டம் - 98
திப்பிலி மூலஞ் - 346
திரிகடுகுந் திரிபலையும் - 245
திரிவித வியாதி - 27
திருவாக்குஞ் செய்கருமம் - 406
துடித்திடும் வினையதாம் - 37
துணிந்துடலங் குளிர்ந்த - 127
துத்தமோ டரிதார - 219
துய்ய சிருகாஞ்சொரி - 365
துய்ய நல்லுடம்பு - 68
துய்யவுடல் நானிறுகல் - 312
துலங்கிய தோடம் - 35
துற்றகள்ளி வேர்ப்பட்டை - 278
தூதுவளை யின்புறாவே - 356
தேடிய வியாதி - 77
தேவ தார - 403
தேவதாளிக் கூட்டும் - 277
தேரைபோல் காலும் - 116
தையிலமதை வடித்திடவே - 239
தொட்டிப் பாடாணம் - 180
தொய்ப்பால் காவிப்பு - 196
தோக்கு மீரலும் - 69
தோடமே போகும் - 94
நடவாத சரீரகுணம் - 147
நடிக்குந் தியக்கம் - 436
நடிக்கும் நாடி - 46
நடுநாவில் நீர்த்துவெஞ் - 369
நல்ல சந்தனம் - 331
நல்ல வுண்டியல் - 468
நல்லிளமை தனில்நரைத்தல் - 311
நவமேவு புக்கு - 138
நறுக்கியே மனோசிலை - 182
நறுவிலித் துளிர்மாந் - 398
நன்றாக முகங்கறுக்கும் - 82
நன்னாரி மாகாளி - 104
நாக்குச் சிவந்து - 7
நாடிகள் பத்து - 119
நாபியி லெழுந்த - 44
நாபியுடன் மாங்கொட்டை - 218
நாலாம் திங்கள் - 332
நாலிரண் டெட்டு - 118
நிலவேம்பு பற்பாகம் - 99
நின்பநா கா - 348

நின்ற லக்கம் - 58
நீதியுடன் கந்தகம் - 169
நீருங் கறுத்தது - 383
நீலங் கழுதை - 213
நூற்றுட னெட்ட - 26
நெய்தற் கிழங்கு - 333
நொச்சியிலை பற்படாகம் - 386
பக்க வலிப்பு - 121
பகர்ந்தகண் செங்கழுநீர் - 146
பட்டந்த னாடி - 41
பட்டமே விழுந்த - 39
பட்டுக் கலையுடுத்தி - 433
படுத்ததை யெழுப்பி - 426
பண்ணுதமிழ்ப் புலவோர் - 221
பண்பாகக் கட்டி - 128
பத்தாந் திங்கள் - 344
பத்திரமாம் பேரீச்சம் - 267
பத்திய பாகை - 304
பரங்கிப் பட்டை - 285
பரபரத் திரியாய் - 274
பரிசமே அறிந்து - 113
பரிபெரு அபான - 420
பரு...னில் வாழும் - 501
பல்லடிகள் நாசியிரு - 371
பலகாலு மருள்கொண்டு - 377
பலப்பல கர்ப்ப - 327
பலவித சுரத்துக் - 81
பவழ நிம்பப் - 210
பற்படாக நன்னாரி - 394
பற்பமாம் வெண்க - 207
பற்றிய பாகை - 304
பன்றிய நாசி - 425
பன்னுசிறு வழுதலை - 106
பாத ரசம்பல - 175
பாதரச மப்பிரகம் - 153
பாதரி முன்னை - 384
பாரிய கபால - 508
பாருமுழலை தாகம் - 144
பால்விட் டடிகை - 306
பாலினி மொழியே - 505
பிடிக்குந் திரியை - 509
பித்தச் சுரத்தின் - 109
பித்தச் சுரத்தின் - 438
பித்தத்தால் வெதுப்பு - 442
பிதற்றுந் தலையும் - 11
பித்தமே வாத - 73
பித்த வுற்பத்தி - 308
பிரலாபச் சன்னிக் குணம் - 488
புண்மை யான - 469
புருசராக் கல்லு - 215
புளிப்புமேல் கசப்பு - 32
புளிமேலும் மோரின் - 29
பூசணித் தண்டு - 372
பூசணி நெய்யை - 284
பூசிய முலைக்குத்தும் - 507
பூச்சரமே விழிகண் - 476
பெண்சாதி தொடுகை - 2
பெரிய காஞ்சொரி - 243
பெரியவுரம் நெற்றி - 123
பெருகு ரோகங்கள் - 479
பெருமரத்துப் பட்டை - 101
பெருவிர லடியிலே - 67
பேசிய மருந்து - 502
பேசிய மாற - 91
பேசுதம் பிராண - 419
பேரு மறந்து - 455
பைங்கிளிச் சரீரம் - 86
பொன்னே ரணையாய் - 234
போட்டால் தீரும் - 276
போட்டிடு புடந்தான் - 200
போட்டுப் பதமாய் - 292
போதவே நெய்யி - 228
போதெனுஞ் சீர - 89
மஞ்சள் கலையுடுத்தி - 314
மஞ்சார் குழலீர் - 258
மட்டார் காரம் - 382
மட்டிடு நாலாம் - 411
மண்டலத்தில் மாந்தர் - 281
மண்ணின் கூறிரு - 414
மதியாமல் பொய்சொல்லும் - 130
மரகதக் கல்லு - 212
மருளக் கிழங்கும் - 271
மருவிய கோட்டம் - 270
மலமான துமிருகி - 362
மன்னுரச கந்தகம் - 149
மாறாத சுரமாகி - 466

மாணிக்கங் குதிரை - 214
மாதருடமுகம் வருந்தினால் - 286
மாதவத்தொரு வாகடரும் - 407
மாதவிடை வருநாளே - 317
மாதேகேள் கலனே - 266
மாதொடு பிதாவும் - 315
மாயுறு ஞால - 282
மானே தேவ - 232
மிக்க சீந்தில் - 287
மிக்க சேத்துமம் - 48
மிகவேவற்றி யமுமறிவு - 391
மிடரும் புகைந்து - 437
மின்னே கேளாய் - 78
முகத்தினில் கையே - 56
முத்தக்காசு அரத்தையுடன் - 242
முத்து சங்கம் - 210
முதுகொடு வயிறு - 115
முந்து தாகமு - 478
முப்புரத்தைத் தீயெரித்தான் - 409
முலைப்பாலில் சாதிலிங்கம் - 183
முற்றா முலையாய் - 280
முன்னமே ஆணில் - 60
முன்னே கூட்டும் - 262
முன்னே தூதன் - 54
முன்னே பரந்து - 9
மூலவாய் வினால்நாலு - 321
மூவிரு திங்கள் - 336
மூன்றாந் திங்கள் - 330
மூன்றுகா செடையாக - 303
மெய்யது பகல்வெதும்பி - 53
மெய்யில் விசம - 461
மெய்யும் வெளிறிச் - 443
மெய்யே நொந்து - 485
மேதினியிற் கண்பெருத்து - 131
மேரை தப்பியே - 480
வகைரசச் செந்தூரம் - 150
வசம்பு மஞ்சள் - 302
வடித்திடவே வேளை - 295
வண்மை சேருள்ளம் - 90
வணங்கிய நாக்கு - 132
வந்தந்தப் பிராண - 418
வந்து வந்து - 473
வயிரங் குதிரை - 211
வருகாச மாற்ற - 412
வருமிடை பிங்கலை - 428
வளிமூச்சுத் தான்கடுக்க - 134
வற்ற வேலுட - 477
வாக்குண்டாம் நல்ல - 313
வாங்கிய சரக்குக் - 503
வாதச் சுரத்தின் - 453
வாதச் சுரத்துக்கு - 16
வாதபித்தச் சுரந்தனுக்கு - 447
வாதபித்தச் சேத்தும - 452
வாத பாண்டு - 111
வாத பித்தமும் - 42
வாதமு மைய்யம் - 76
வாத மெண்பது - 23
வாத வுற்பத்தி - 307
வாரரு நாளும் - 14
வாளமது கல்வத்து - 164
வானரஞ் சுணங்கு - 59
வானிர் கொளுத்து - 355
வின்ப மாக - 482
விதம்பெறு வாதம் - 85
விருத்தற்குங் கர்ப்பினி - 17
விரும்பிய வுடல - 70
வில்வ பத்திரி - 353
விளக்கெண்ணெய் வெட்பாலை - 298
விளம்புரசச் செந்தூரம் - 162
வெண்கலம் பொடியாய் - 206
வெதும்பிய நீரின் - 30
வெப்புடன் குளிரும் - 322
வெள்ளியைத் தகடு - 201
வெள்ளியைத் தகடு - 204
வெள்ளைக் கலையுடுத்தி - 432
வெள்ளை நல்லருகு - 354
வேதமாய் நெறிசேரும் - 431
வேப்பங் கொட்டை - 498
வேர்க்குங் குளிரும் - 459
வேறாதொரு காலும் - 389
வேலிப் பருத்தி - 299
வைத்த சாதத்தை - 255
வைத்தொரு மருந்து - 172
வைத்தனை மூன்றுநாள் - 224
வைத்திடு நவதா - 193

# சொல்லடைவு

## அ

அக்கினி 434, 467
அக்கினிக்குமாரன் 158, 165, 166
அக்கினி மந்தச் சுரம் 475
அக்கினி மாதம் 103
அகங்கை 146
அகத்திய மாமுனி 487
அக்த்திய முனி 486
அகத்தியர் 505
அகத்தியர் குழம்பு 501
அகத்தி விரை 498
அகம் 56
அகன்று 337
அகில் 247
அங்கம் 176, 387, 404
அங்கி 51
அசாத்தியம் 47, 136
அசுபதி 499
அசுவேதச் சன்னி 391
அஞ்சனம் 40, 407
அஞ்சி 472
அட்டகுன்மம் 173
அட்டுரை 221
அட்டுப்பு 185
அடவு 88, 97
அடிவயிறு 315, 322
அசீரணம் 434
அண்டவாதம் 500
அத்தம் 499
அத்தி 462
அதிகச்சன்னி 483
அதிசாரச் சுரம் 470
அதிசாரம்139, 140, 142, 143, 145, 147, 150, 219, 452, 479
அதிப்பிரமை 123
அதிமதுரம்104, 143, 234, 244, 258, 392
அகில் 110, 247
அதிவேகம் 211
அதிவிடையம் 353, 397, 398
அந்தகச் சன்னி 122
அந்தரதாகம் 435
அந்தி 51
அப்பம் 24
அப்பிரகம்150, 151, 153, 155, 157, 159, 166, 192, 460
அப்பிரகச் செந்தூரம் 162
அப்பு 415, 416
அபினாசச் சன்னி 135
அம்மானை 476
அம்மை 409
அமிர்தக்கண்ணாள் 124
அமிர்தமொழி 125
அமுக்கிரா 170, 265
அமுது 159
அயலோகம் 151
அயன் 438
அரசங்கொழுந்து 510
அரத்தை 242
அரியது 486
அரவம் 408
அரிதாரப் பற்பம் 407
அரிதாரம் 169, 180, 220, 502
அருங்கோவை 176
அருமறை 500
அருள் 60, 97
அரைக்கீரை 178, 240
அரைத்து 254
அலத்துச் சன்னி 484, 496
அவத்தை 51
அவிட்டம் 499
அவிசதச் சுத்தி 407
அவிசம் 140
அவுசதங்கள் 39
அவுரி 265
அவரைக்காய் 240
அழகு 457
அழுகுங் கண்ணீர் 450
அழுஞ்சி 251, 235
அளந்து 378
அற்பம் 56
அறமலிவுச் சன்னி 383, 384

அறிவு 362, 489, 493
அனலிச்சாறு 169
அனிச்சை 100
அனுசம் 499
அனுபானம்149, 150, 152, 154, 155, 156, 158, 159, 161, 220, 510

## ஆ

ஆகமச்சுரம் 474
ஆகாரம் 458, 491
ஆட்டுப்பால் 227, 500
ஆட்டு மூத்திரம் 215
ஆடவர் வலக்கை 67
ஆடாதோடை 99, 160, 394
ஆடி 64
ஆண் 60
ஆதண்டை 185, 241
ஆதரவு 111
ஆதளை வேர் 395
ஆதி 154, 165, 315
ஆந்திரகச் சன்னி 493
ஆந்தை 59
ஆமணக்கு229, 259, 255, 262, 500
ஆய்ந்து 70
ஆயம்பட்டை 158
ஆயிரத்தெட்டு நாள் 25
ஆயில்குழல் 265
ஆயில்பட்டை 257
ஆயிலியம் 499
ஆயுங்கால் 250
ஆயுள் 18
ஆர்ப்பரிக்கும் 46
ஆலம்பால் 207
ஆலம்விழுது 194
ஆலம்பூ 335
ஆவணி 65
ஆவி 218
ஆவின்பால் 222, 335
ஆவின் மூத்திரம் 185
ஆவின் மோர் 500
ஆற்றுமீன் பாய்ச்சல் 38
ஆனி 64
ஆனைமலை 245

## இ

இங்குலிகம் 150
இச்சை 31, 32
இடக்கை 67, 92
இடவகம் 246
இடுப்பு 330, 336
இஞ்சி154, 164, 167, 169, 220, 261
இஞ்சியின் சாறு148, 149, 152, 156, 158, 159, 161, 166, 167, 358, 360, 384, 388, 390, 506
இணங்கி 132
இந்திரன் 427
இந்துப்பு185, 246, 401, 500, 502
இயம்பு 385
இரட்சி 499
இரண்டாங்கால் 499
இரண்டாஞ் சாமம் 15
இரத்தேட்டிகச் சன்னி 489
இரத்தம் 10, 82, 132
இரத்த மூலம் 505
இரத்த விப்புருதி 317
இரத பற்பம் 218
இரவு 379
இராத்திரி 65
இருக்கை 105
இருகால் 6
இருநாழி 257, 356
இருபத்திரண்டு 20
இருபத்துநான்கு 260
இருபத்தைந்து 485
இருபத்தோர்நாள் 486
இரும்பு 160
இருமல்125, 127, 134, 142, 144, 421, 444, 458, 500
இருமி 443
இருவேலி 98, 101, 360, 393, 394
இலவங்கப்பத்திரி 245
இலங்கணம் 93
இலங்கேசுவரன் 155

இலந்தை 360
இலவங்கம் 245, 376
இலாமிச்சம்98, 101, 104, 233, 237, 245, 339, 360, 368, 374, 384
இலுப்பை233, 242, 244, 353, 498
இலைச்சாறு 243
இலைநொச்சி 395
இலுப்பைப்பூ 367
இளநீர் 174, 186
இளைக்கும் 467
இளைப்பு 338, 375
இறக்கச்சாகும் 81
இறுக்கும் 132
இனிப்பு 31, 32, 33
இனிமை 29
இனிய பண்டம் 31
இனிய பால் 240

ஈ

ஈசன் 409
ஈதல் 14
ஈய 14
ஈருள்ளி 405
ஈளை 500

உ

உகந்து 74, 358, 360
உச்சி 51
உடம்பு68, 73, 74, 116, 122, 130, 133, 134, 447, 450, 451, 470, 476, 488, 491, 492, 496
உடல்124, 133, 144, 450, 452, 459, 486, 493
உடைந்தோடும் 358
உண்டி 452
உண்டியல் 468
உண்மை 90, 157, 486
உணர்ந்து 58
உத்திரட்டாதி 499
உத்திரம் 499
உத்திராடம் 499
உதடு 81, 112, 122, 132, 141
உதிரம் 330, 342, 475
உப்பல் 121
உப்பு 173
உப்புக்கண்டம் 240
உபவாசம் 93
உமைக்கண்மாது 79
உமையாள் 105
உயிர் 9, 457
உரம் 13, 239
உலகு 165
உலரும் 6, 141,
உலாவி 73
உலை 217
உலோகம் 31, 159, 163
உழக்கு370, 376, 378, 380, 384, 394, 400
உழலை 466
உள்ளம் 439, 471
உளுந்து 164, 236
உறங்கி 12
உறக்கம் 459, 474
ஊக்கி 7
ஊசி 116, 134
ஊஞ்சல் 500
ஊதி 150
ஊமத்தை 186, 217, 234
ஊரும் 320
ஊனம் 74

எ

எட்டி 251, 184, 268
எட்டிவிரை 224
எட்டிச்சாறு 259
எண்ணம் 139
எண்ணெய்173, 236, 237, 238, 253, 254
எமன் 54, 55
எவட்சாரம் 228, 246
எரிகுணம் 240
எரிச்சல் 489
எரித்து 5

எரியும் 460
எருக்கஞ்சாறு 169
எருக்கம்பால் 193, 210, 215
எருக்கம்வேர் 105, 153, 157, 232
எருக்கு165, 167, 169, 230, 235, 242, 265, 506
எலி 59
எலும்புருக்கி 323
எலுமிச்சம்பழச்சாறு148, 183, 228
எலுமிச்சம்பழம்160, 180, 185, 205, 259, 270
எழுப்பித்து 462
எள்ளெண்ணெய்231, 255, 259, 266, 269

ஏ

ஏகிடும் 337
ஏதமுடன் 266
ஏந்திழை 96
ஏலம்172, 184, 214, 245, 376, 500, 506
ஏழாநாள் 14, 16
ஏழுதோடசுரம் 152
ஏற்றுதல் 32, 250

ஐ

ஐசரிப்பித்தம் 362
ஐப்பசி 64

ஒ

ஒட்டடை 176
ஒத்தடம் 498
ஒடுங்க 344
ஒருகால் 6
ஒருநாள் 499
ஒன்பது நாள் 16
ஒன்றரைக்காசெடை 395

ஓ

ஓங்கிய 21, 43
ஓசை 119
ஓடி 73
ஓதி 70
ஓதுமொழி 128
ஓமம் 187
ஓயும் 112

க

கங்கம் 155
கங்குளி 483
கங்கை 407
கங்கை ரேகை 146
கசக்கும் 465
கசப்பு 32, 33
கசாயம்95, 97, 98, 99, 100, 101, 103, 104, 105, 150, 153, 157, 158, 162, 188, 194, 202, 208, 209, 216, 238, 243, 248, 253, 256, 345, 350, 351, 352, 353, 354, 363, 401, 510.
கசிந்து 143
கஞ்சா இலைச்சாறு 219
கஞ்சாவிரை 232
கஞ்சா 242
கஞ்சி 14, 15, 94, 494
கட்டம் 39
கட்டுப்பை 55
கடலை 222
கடிக்கும் 320
கடிகை 51
கடிதி 11
கடிய நெஞ்சு 437
கடினம் 88, 471
கடுக்காய்100, 107, 110, 172, 242, 257, 261, 267, 351, 365, 399, 400, 401, 500, 505
கடுக்கும் 456, 475
கடுகெண்ணெய் 255
கடுகு401, 402, 498, 500, 502
கடுகுரோகணி267, 368, 380, 382, 388, 399
கடுஞ்சாம்பல் 205
கடுஞ்சுரம் 387, 492

கடுத்து 330, 342, 463
கடுப்பது 456
கடுப்பு 447, 486, 492
கடுப்பெடுத்து 340
கடும்பகல் 66
கடைக்கண் 10
கண்53, 68, 77, 112, 115, 123, 125, 128, 131, 132, 135, 326, 334, 366, 371, 436, 488, 489, 506
கண்குழிவுச் சன்னி 381, 494
கண்சிவத்தல் 114
கண்டக்கால் 54
கண்டகுச்சச் சன்னி 487
கண்டகுச் சன்னி 492
கண்டங்கத்திரி95, 98, 102, 103, 164, 361, 365, 384
கண்டங்காலி 241, 260, 356
கண்டம் 44
கண்டரசம் 154
கண்ணகச் சன்னி 386
கண்ணில் நோய் 407
கண்வலி 372
கதி 127
கதித்தகண் 11
கதித்திடும் 112
கதிரோன் 445
கந்தகம்151, 153, 155, 157, 159, 160, 165, 167, 169, 170, 174, 177, 198, 199, 200, 207, 208
கந்தம் 2, 155, 470
கபாலவலி 509
கம்மிடும் 112
கமலம் 82, 324
கயிறு 40, 55
கர்ப்பம்172, 316, 319, 326, 327, 334
கர்ப்பக்கிரந்தி 315
கர்ப்பக்கிருமி 320
கர்ப்பச் சுரம் 104, 321, 498
கர்ப்பச் சூலை 334
கர்ப்ப ரோகம் 327
கர்ப்பப் புழு 320
கர்ப்ப வாயு 318
கர்ப்பிணி 17, 345
கரணமுருங்கைவேர் 177
கரந்தங்காடி 191
கரந்தை 233, 396
கரந்தைவேர் 247
கரப்பான் 332, 507
கரம் 34
கரிச்சா 176
கருக்குடம் 201
கருங்காலி 229
கருங்கோரை 232
கருஞ்சீரகம் 405
கருதிய 32
கருணை 1
கருப்பஞ்சாறு 315
கருப்பை 326
கரும்பு 184, 242, 266
கரும்புநீர் 184
கருமம் 59, 60
கருவேப்பிலைத்தண்டு 361
கருவேம்பு 401
கல்லடைப்பு 501
கல்வம் 164, 500
கலக்கி 331
கலந்துகூட்டி 254
கலயம் 96
கழஞ்சு68, 356, 358, 367, 368, 370, 380, 382, 388, 393, 394, 395, 400, 402, 403
கழற்பருப்பு 401
கழுத்தடி 3
கழுத்து 125, 379, 436
கழுத்துமங்கி 454
கழுதை 399
கள்ளி 235, 265
கள்ளிப்பட்டை 229
கள்ளிப்பால் 262
கலப்படி 220
கழிச்சல் 20, 156
களிப்பாக்கு 107
களிப்பு 32
கற்கடகச்சிங்கி 246
கற்கம்236, 237, 238, 254, 255, 260, 407
கற்சூரி 349

கற்பூரம் 2, 352
கற்றாழை 231, 361, 507
கறிகாய் 31
கறுக்கும்81, 82, 192, 217, 366
கறுப்பு 424
கன்னி 87
கன்னம் 465
கன்னல்மொழி 220
கனத்துடம்பு 133
கனல்வடிவு 439
கஸ்தூரி 2
கஸ்தூரிமஞ்சள் 247
காசம் 185
காசெடை 500
காட்டத்திப்பூ 397
காட்டெரு 155, 199
காடி 192, 196, 201, 228
காடி எண்ணெய் 204
காடு 37
காடை 59
காதடைக்கும் 447
காது9, 10, 17, 27, 44, 127, 146, 153, 387
காந்தம் 159, 166
காந்தல் 22
காந்த வெண்கலம் 185
காந்தாளியிலை 185
காந்தி 486
காமாலை 407, 500
காய்கனி 239
காய்ச்சல் 74, 76, 319, 334
காய்ச்சி 255, 356, 358
காய்ந்து 465
கார்த்திகை 64, 499
கார்போக அரிசி 244
காரம் 219
காராம்பசுவின் பால் 337
காராம்பூ 361
காரீயம் 206
கால்56, 90, 112, 114, 116, 117, 144, 402, 439, 456, 457, 471, 490
காலம் 66
காலன் 132
காவிக்கல் 197
காவிக்காய் 196
காவிப்பு 197
காவினிறை 219
காற்பச்சை 141
கிட்டி 156
கிருதம் 208, 407
கிரந்தி 319, 350, 509
கிரந்திகம் 267
கிராணி 20, 156
கிலுகிலுப்பை 234, 399
கிறுகிறுக்கும் 320, 463
கீறல் 61
கீரி 59
கீழ்வயிறு 320
குக்குடப்புடம் 191
குங்கிலியம் 186
குங்குமம் 237, 247
குச்சம் 484
குட்டம்20, 173, 407, 500, 505
குடசப்பாலை 219, 397
குடல் 320
குடல்புண் 492
குடல்வாதம் 264
குடுவை 55
குடை 468, 472, 473
குணாகுணதோடம் 19
குணம்11, 81, 85, 90, 127, 131, 132, 142, 447, 458, 164, 381, 385
குதித்து 75
குதிரை 212, 214, 215, 217
குதிரை மூத்திரம் 214, 215, 217
குப்பி 161
குப்பைக்கீரைச்சாறு 184, 225
குமரிச்சாறு 178, 181
கும்பமாலை 20
குமரக்கண்டம் 88
குமிழ் 47
குய்யம் 319
குயில் 146
குரு 511
குருடன் 55
குருபரன் 500
குருமயேசுரபூசை 239
குருமுனி 407

குருவேர் 237
குரோசம்பட்டை 208
குரோதச்சுரம் 473
குலம் 67
குலவு 154, 375, 376, 399
குலை 331, 362, 378
குவிசமுட்டித் தைலம் 251
குழல் 65, 74, 75, 443
குழறும் 451
குழி 171, 177
குழிந்து 81
குளிகை14, 150, 152, 154, 155, 158, 159, 161, 162, 165, 169
குழம்பு 500, 510
குளவிக்கூடு 358
குளிர்161, 446, 454, 459, 460
குளிர்சுரம் 162
குளிர்ந்து4, 5, 44, 51, 130, 144, 332, 369, 373, 457
குறுணி236, 255, 257, 259, 401
குன்மம் 20
குன்றி145, 155, 158, 159, 161, 165, 167, 169
குன்றிமணி 167
கூகை 59, 506
கூச்சம் 86
கூட்டி 218, 356
கூத்தன்குதம்பை 232
கூந்தல் 145
கூவிளை 358, 368
கெசபுடம் 211, 214
கேசரம் 350
கேட்டை 499
கை4, 10, 55, 56, 71, 90, 112, 116, 117, 144, 402, 441, 442, 446, 456, 457, 458, 471, 485, 489, 490, 492
கைப்பு 33
கைக்குங்குணம் 83
கைப்பு 364
கையாந்தகரை 108, 164, 396
கொட்டாவி 340
கொட்டிக்கிழங்கு 329, 343
கொட்டை 93
கொடி 55, 263, 343, 510
கொடிகழற்சி 510
கொட்டைமுத்து 498
கொடிவேலி188, 221, 241, 263
கொடுஞ்சுரம் 15
கொத்தமல்லி101, 363, 368, 372, 390, 393
கொதி 11, 460, 463, 471
கொதிப்பு 440
கொதிப்பெய்தும்404, 439, 459, 474
கொம்பன் 216
கொழுநன் 237
கொள்ளி 55
கொள்ளு 204, 236
கொற்றான் 216
கொன்றை 22, 242,251
கொன்னைக்கொழுந்து 500
கோசலம்180, 181, 183, 184, 185, 204, 207
கோசிகை 265
கோட்டம்99, 201, 267, 348, 350, 351
கோதரம் 500
கோபி 129
கோமூத்திரம் 422
கோமேதகம் 217
கோரை 170, 213, 226
கோரோசனம் 106
கோவின்பால் 329
கோவினெய் 236, 255
கோவைத்தண்டு 399
கௌரி 179, 220

ச

சகரம் 72
சங்கம் 24
சங்கம் வேர் 110, 234
சங்கை 86
சங்கு 399
சங்கரன் 97
சங்கரனார் 100
சங்கட்டை 222
சஞ்சீவி 150, 162
சட்டி 132, 165, 171

சட்டிவேர் 247
சடம் 424
சடாமாஞ்சில் 246, 247, 286
சடுதி 119
சடை 66
சடையன் 409
சண்டிச்சுரம் 438, 480
சத்தம் 146
சத்திவேர் 40
சத்தியவட்சாரம் 184
சதகுப்பை 230, 245
சதை 68
சந்தகம் 209
சந்ததம் 97
சந்தபேதம் 205
சந்தனம்97, 102, 104, 176, 223, 270, 331, 350, 363, 376, 393, 507
சந்தாபம் 83
சந்திச்சன்னி 368
சப்பை 498
சம்பை 399
சமன்154, 159, 166, 500
சமுத்திரம் 427, 470
சயரோகி 17
சயித்தியம் 466
சர்க்கரை 325, 500
சரக்கு 503
சரீரம்81, 86, 112, 129, 147, 316, 328, 472
சருவச்சுரம் 101
சருவாங்கம் 67, 123
சலக்கடுப்பு 457
சலம் 113, 465, 472, 500
சண்டேசுரன் 154
சன்னி80, 123, 124, 125, 126, 129, 134, 136, 138, 147, 148, 150, 153, 156, 161, 162, 166, 167, 169, 249, 359, 361, 370, 371, 373, 390
சன்னிச்சுரம் 360
சன்னித்தோடம் 500
சன்னி பதினெட்டு 510
சன்னிபாதரோகம் 78
சன்னிவாதம் 78, 99
சனி 344
சாத்தியசாரம் 143
சாத்தியம்135, 139, 146, 409, 491
சாத்திரம் 38, 70, 407
சாதம் 228, 255
சாதிபத்திரி 233
சாதிலிங்கம்148, 151, 154, 163, 183, 190, 228
சாம்பல் 155
சாமம்76, 91, 153, 157, 161, 167, 169, 180, 181, 216
சாயம் 166
சாரசங்கிரகம் 404
சாரணை 176, 399, 401
சாரணைக்கிழங்கு 399
சாரல் 61
சாராங்குசம் 174
சாரை 59
சாரணைப்பூ 221
சாலினி 254
சாவு 53, 119
சாற்றும் 434
சாறு142, 163, 165, 179, 222, 252
சாறுபானம் 138
சிக்கி 385
சிகம் 56
சித்தம் 72
சித்தரசனாடி 152
சித்தவிப்பிரமை 136
சித்தி 38
சித்திரமூலம்64, 158, 159, 162, 163, 164, 172, 176
சித்திரமூலி 150, 151, 232
சித்திரை 499
சித்து 78
சிந்தாமணி 133, 189
சிந்தூரம் 112, 150
சிந்தை 35, 39, 453, 476
சிமிழ் 500
சிரங்கு 462
சிரங்கை 316
சிரசு 6, 27, 490

சிரம் 92
சிரித்து 143
சில்லரைத் தோடம் 500
சிலந்தி 500, 507
சிலிர்த்திடும் 375
சிலேத்துமம்31, 32, 51, 86, 135, 142, 200, 407
சிலேத்துமவாதம் 450
சிவகாமி 499
சிவதைவேர் 107
சிவபூசை 239
சிவரசனை 146
சிவேதம் 8
சிற்றாமல்லி 384, 399
சிற்றாமுட்டி1, 100, 104, 105,170, 229, 257, 384
சிற்றேலம் 229
சிறுகீரை 179, 222
சிறுகாஞ்சொரி97, 100, 106, 241, 356, 365, 378, 397, 403
சிறுகுடல் 69
சிறுதேக்கு 244
சிறுநாகப்பூ 172
சிறுநாபிசம்167
சிறுநீர் 438
சிறுபுள்ளடி 245
சிறுமல்லி 260, 268
சிறுமூலம் 263, 271
சிறுவழுதிலை106, 241, 260, 367, 372, 378, 388
சினப்பு 500
சின்னக் காஞ்சொரி 95
சினம் 466
சீக்கு 358
சீகை 263, 498
சீதச்சுரம் 444
சீதம் 6, 141, 142, 144, 499
சீதரத்தம் 143
சீதரம் 160
சீதளம் 1, 130
சீதாங்கச்சன்னி130, 152, 375, 376, 490
சீதாங்கம் 484
சீதேவி 390, 500
சீந்தில் தண்டு 107, 360
சீந்தில்98, 99, 104, 106, 170, 226, 368, 392, 395
சீந்திலிலந்தை 242
சீரகம்187, 224, 246, 258, 266, 270, 405, 501, 503
சீரணம் 80, 89, 99, 103, 468
சீராய் 380
சீலைமசி 194
சீலைமண்165, 171, 199, 212, 214, 215, 218
சீவகம் 270
சீவன் 411
சீனிக்கடுகு 498
சுக்கிலம் 326
சுக்கு88, 95, 99, 102, 107, 110, 188, 346, 351, 363, 354, 356, 365, 367, 368, 370, 374, 376, 380, 386, 390, 398, 400, 401, 500
சுக்குவேர் 351
சுகசன்னி 5
சுச்சுலுப்பட்டை 500
சுட்டச் சாம்பல் 500
சுடுகசாயம் 102
சுண்டி 363
சுண்ணாம்புநீர் 186
சுண்ணாம்பு 188, 227
சுத்தம் 37, 89, 100
சுத்தப்பிரமை 438
சுத்தி 174, 175, 227
சுப்பிரமணியர் 429
சுமை 125
சுரங்கள் 156, 350
சுரங்கோபித்து 472
சுரட்டை 59
சுரதோடம் 147
சுரம்35, 87, 89, 90, 91, 92, 94, 98, 99, 100, 102, 105, 108, 109, 110, 122, 124, 126, 132, 133, 134, 147, 220, 328, 338, 343, 345, 376, 449, 457
சுரலக்கணம் 407
சுரவியக்கம் 396
சுரவியாதி 25

சுருக்கு 40
சுருங்க 358
சுருதிமறை 133
சுரைத்தண்டு 376
சுரோணிதம் 111
சுவரொட்டி 102
சுவாசம் 103, 122, 142
சுவாமி 103
சுவலாக்கினி சுரம் 471
சுழல்சுரம் 164
சுழிமுனை 428
சூசிகா வாயு 508
சூட்சுமம் 57
சூதஞ்சாறு 198
சூதவாயு 156
சூதம் 221, 500
சூது 89
சூரணம் 173, 237, 248, 500
செகத்துள்ளோர் 38, 49
செங்கல்பொடி 221, 234
செங்கல்பால் 176
செங்கழுநீர்106, 146, 267, 316, 347, 350, 358, 390
செங்கழுநீர்க் கிழங்கு 392, 400
செங்கை 71
செங்கோட்டை 172, 242
செங்கோட்டுச்சன்னி 391
செண்பகப்பூ 400
செந்தூரம் 195, 209
செந்திராசம் 153
செப்பகம் 98
செப்புகவி 27
செப்புவன 27
செம்புளிச்சங்கட்டை 350
செம்புளிச்சங்கொட்டை 354
செம்பு 153, 159, 167
செம்புளி 221
செம்பை விரை 400
செம்பொன் 457
செம்மஞ்சள் 176
செம்முகம் 442
செய்கருமம் 406
செரித்தல் 121
செருப்படி 167, 245
செவ்வியம் 163
செவி 44, 51, 115, 357, 390
செவிடு 134
செழுங்கதிர் 64
சேவுகன்செடி 233
சேட்பவன் 58
சேத்துமச்சன்னியின் சுரம் 458
சேத்துமச்சுரம்84, 355, 434, 443
சேத்துமம்23, 26, 38, 46, 47, 63, 86, 98, 240, 249, 356, 359, 364, 377, 434, 449
சேதி 377
சேமமுள்ளி 399
சேயன் 418
சேர்சணப்பு 172
சொருகி 48, 371
சொற்பம் 362
சோகம் 92
சோதி 499
சோபம் 111, 123
சோவி 389
சோறு 88, 121, 173, 471

## ஞ

ஞாலம் 66

## த

தகடு 201, 203, 204, 206
தகரம் 270
தகைமை 90
தங்கக்கட்டி 196
தங்கம் 207
தங்கமேனி 464
தஞ்சம் 79
தடிக்கும் 359
தண்சாமம் 2
தண்ணீர்109, 117, 222, 257, 326, 375, 438, 497
தண்ணீர் மீட்டான் 226, 347
தணியும் 43
தத்தை 105
தந்தம் 44
தப்பரை 144
தம்பலம் 329
தயிர் 224

தரணி 379
தரிக்க 223
தரிசனம் 250
தருணசுரம் 1
தலை11, 44, 339, 373, 366, 369, 459, 463
தலைகனத்தல் 126
தலை நோய் 123, 316, 336
தலைபுரட்டும் 124, 495
தலைநோக்காடு 448
தலைநோவு 456, 486, 493
தலைமயிர் 411, 500
தலைவலி345, 362, 375, 387, 447
தழுதாழை 252, 257
தவளக்கொடி 330
தனஞ்செயன் 426
தனிப்பலாச்சாறு 179
தனுமாம்பட்டை 232
தனுர்வாதம் 22
தனுவாய்க்கொட்டை 247
தாகம்7, 9, 84, 86, 87, 111, 120, 125, 141, 156, 336, 389, 439, 449, 452, 469, 470, 472, 478, 491, 497
தாகமறும் 357
தாகமுண்டாம் 463
தாடை 48
தாதாந்தம் 490
தாது 111, 115
தாந்திரி 4
தாந்திரீகச் சன்னி131, 369, 485
தாந்திரீகம் 136, 467
தாபச்சுரம் 466
தாபம் 134, 467
தாபாக்கினி 435, 467
தாம்பிரப்பற்பம் 149
தாம்பூலம் 154
தாமரை 237, 337, 500
தாமரைக்கிழங்கு 348
தாமரைப்பூ 329, 341, 343
தாமரை மொட்டு 69
தாமரை வளையம் 392
தாமரை வேர் 208
தாய் 18
தாரம் 500
தாழை 509
தாளகம் 151, 160, 163, 202
தான்றி 172, 242, 400
தானாந்திச் சன்னி 486
திங்கள் 146, 352
திசைச்சொல் 428
திட்டம் 39
திடச்சன்னி 154
திடம் 88
திடுக்கிட்டு 436
திண்ணம் 264
தித்திக்கும் 364
தித்திப்பூ 437
திப்பிலி96, 98, 99, 103, 105, 106, 110, 186, 188, 219, 234, 245, 257, 262, 266, 346, 353, 358, 360, 363, 365, 368, 386, 390, 393, 395, 401, 501, 506
திரிகடுகு102, 148, 159, 163, 172, 245, 262
திரிகின்ற 34
திரிதோடம் 154, 365
திரிதோடசுரம் 363, 364
திரிபலை 155, 163, 176, 245
திரிவித வியாதி 26, 27
திருவருள் 500
திருவாதிரை 499
திருவோணம் 499
திவசம் 137
தின்னத்தின்ன 408
தினவு 319
திட்டி 484
தீது 60
தீபம் 239
தீரா 56, 79
துக்கம் 1, 140, 466
துஞ்சி 500
துடிப்பு 38
துணிந்து 130
துத்தம் 220
துத்திவேர் 242, 251
துயில் 472, 494
துயிலைச்சாறு 236

துரணன் 418
துரிதம் 227
துரை 79
துலங்கி 35
துளசி 164, 230
துவர்வாய் 7
தூக்கம் 85
தூங்கல் 87
தூணி 257, 266
தூதன் 54
தூதுவளைவேர் 376
தூபம் 239
தூயோர் 133
தூவுதல் 360, 467
தூள் 258
தெங்கின் எண்ணெய் 255
தெரிவை 328
தெளிந்தவர் 70
தென்னங்குடுக்கை 500
தேகம் 77, 85, 130, 140
தேகவேர்வை 122
தேங்காய் 497
தேங்காய்ப்பால் 500
தேரை 116
தேவதாரம்104, 176, 232, 244, 258, 263, 267, 269, 389, 388, 400, 403
தேற்றாங்கொட்டை 229
தேன்65, 104, 328, 356, 365, 445, 506
தை 64
தையலர் 62
தைலம் 238, 239
தொக்கரிச்சாறு 181
தொங்கி 75
தொட்டி 181
தொடுகை 2
தொடுசன்னி 22
தொண்டை8, 11, 84, 487, 489
தொந்தச்சுரம் 100, 152
தொப்புள் 10
தொழதொழ 457
தொழில் 316
தோடச்சுரம் 357, 358, 362
தோடம்1, 35, 36, 93, 94, 133, 147, 148, 150, 153, 158, 167, 336, 340, 407, 490, 497
தோடாதி சுரம் 144
தோடுபோக்கி 223
தோடைக்கிழங்கு 236
தோள் 56, 458

## ந

நக்கம் 191
நசியம் 407, 497
நசுகுனி 319
நசை 66
நஞ்சு 178, 334, 500
நட்சத்திரம் 499
நடனம் 88
நடுக்கல் 6
நடுக்கம்11, 459, 470, 485, 492
நடுச்சாமம் 356
நடுமுதுகு 486, 493
நடை 449, 485
நயந்து 445
நரம்பு 70, 116, 121, 411, 487
நரிப்பயிற்றம் வேர் 265
நல்லபொரி 219
நல்லருகு 354
நல்லெண்ணெய்201, 236, 257
நவதானியம் 193
நவமாதம் 353
நவமேவும் 138
நவநாதம் 152
நவச்சாரம் 163
நவிலுதல் 250
நற்சீலை 181
நன்மை 58, 496
நன்னாரி140, 231, 257, 358, 360, 365, 368, 372, 384, 394, 400
நன்னீர் 7
நாக்கு7, 9, 69, 77, 84, 85, 86, 92, 112, 127, 131, 132, 134, 146, 334, 379, 438, 439, 443, 451, 478

நாகப்பூ 237
நாகம் 157
நாகேசுரம் 267
நாசி 44, 371, 489
நாடி4, 8, 11, 29, 30, 31, 39, 40, 41, 44, 45, 63, 65, 67, 71, 72, 73, 74, 75, 82, 119, 143, 146, 147, 153
நாதப்பண் 8
நாதன் 42
நாபி149, 150, 151, 154, 155, 157, 159, 162, 163, 165, 166, 167, 169, 183, 219, 223, 422
நாபி சுத்தி 224
நாய்த்துளசி 234
நாயுருவி 231
நாரத்தை 240, 395
நாராயணர் 239
நாவல் 190, 261
நாவலர் 143
நாவறண்டு 53, 472
நாழி254, 262, 358, 370, 372, 374, 376, 380, 384, 386, 388, 390
நாள் 211
நாற்றம் 10, 140, 145
நான்காம் கால் 499
நிச்சயம் 493
நித்திரை83, 131, 135, 144, 440, 444, 448, 454, 477, 491
நிம்பப்பழச்சாறு19, 185, 196, 197, 209, 210
நிலப்பனை 104, 176
நிலவேம்பு99, 100, 101, 105, 378, 380
நீர் 93, 112, 235, 260, 441
நீர்ச்சாரணை 159
நீர்ச்செரிப்பு 509
நீர்த்தல் 369
நீர்ப்பசரி 401, 405
நீர்ப்பாய்ச்சல் 440
நீர்ப்பித்தம் 83
நீரிப்புடம் 189
நீர்முள்ளி 108, 396
நீராம்பல் 506
நீதி 128, 224
நுகர்ந்திடும் 26
நுண்ணெலும்பு 69
நுதலி 328, 373
நுரை 142
நூல்வல்லோர் 63
நூற்பயன் 145
நெஞ்சம்47, 91, 125, 443, 452, 454, 489
நெட்டை 71
நெரிகுரல் 8
நெரித்தல் 437
நெருஞ்சி170, 226, 230, 242, 260, 268, 315, 333
நெருப்பு 183
நெய்177, 189, 223, 228, 253
நெய்தற்கிழங்கு 333
நெல் 193
நெல்லி110, 172, 225, 267, 400
நெற்றி 3, 44, 123, 125
நெற்றிக்கண் 174
நேத்திரம் 17, 136, 138
நேர்வாளச்சுத்தி 222
நேரம் 64
நொச்சி108, 154, 164, 167, 169, 231, 251, 252, 265, 386, 388, 396, 403, 508, 510
நொந்து 317, 493
நோகும் 458
நோய்25, 43, 56, 66, 74, 121, 249, 452

ப

பக்கவாயு 164
பக்குவம் 16
பகரும் 98
பகுத்து 81
பங்கம்பாளை 397
பங்குனி 65

பச்சிலை 271
பச்சை 504
பச்சைக்கொடி 500
பச்சைவண்ணம் 420
பசலை 332
பசி37, 447, 448, 453, 454, 459, 472, 473, 474, 497
பசு 179
பசுநெய் 500
பசுபாசம் 491
பசும்பால் 254, 339, 341
பசுவாசம் 86
பசுவின் நெய் 505
பசுவின் பால் 192, 333
பஞ்சமி 407
பஞ்சவர்ணம் 157
பஞ்சனி 48
பஞ்சாட்சரம் 239, 250
பட்டம் 39
பட்டினி 92
படியல் 39
படுக்கை 131, 450
படைத்தோன் 500
பண்டிதன் 19, 385
பண்பு 130, 131, 144
பணவெடை173, 174, 256, 500, 510
பத்தியம் 240
பத்திரிவேர் 102
பத்துனாழி 63
பதக்கு 260, 261, 266
பதம் 30, 85
பதரி 471
பதார்த்தம் 30
பதிமூன்றுசன்னி 407
பதை 379
பதைபதைத்து 48, 448
பயறளவு 219
பயித்தியம் 139, 240, 450
பயிற்றும் 145
பரங்கிப்பட்டை 325
பரணி 180, 499
பரம் 482
பரமானந்தக் கணபதி 18
பரிகாரம் 370, 402
பரிசம் 113, 115
பரிட்சை 77
பரிசு 11
பரிமணம் 1
பருத்தி 222, 232, 498
பருந்து 59
பருப்பு 172, 244
பருமம் 67
பருவாளி 177
பல் 46, 117, 146, 381
பலகரை 457
பலம் 99, 172, 254, 361, 495
பலவிதச்சுரம் 80, 81
பவழம் 210
பவுத்திரம் 21, 173, 500
பழங்காடி 227
பழச்சாறு 191
பவளச்சாறு 211
பழிப்பு 32
பற்படாகம்98, 99, 100, 101, 106, 226, 346, 370, 394
பற்பம்157, 169, 189, 200, 203, 206, 207, 208, 211, 212, 213, 214, 216, 217, 218
பறங்கி 232
பன்மை 156
பன்னிருவகை 500
பன்னீர் 310
பன்றி 426
பனைச்சாறு 186
பனைத்தோள் 145
பாக்கு 7
பாகம் 353
பாகலிலை 177
பாகு 500
பாசம் 167
பாடாணம் 180, 227
பாசி 116
பாசிலை 231
பாண்டு 20, 373, 407
பாதம் 32, 80, 152, 154, 156, 162, 166, 407
பாதரசம் 153, 175
பாம்பு 49

பாய் 221
பார்வதி 156
பாரம் 444
பாருலகம் 30
பால்156, 171, 172, 177, 178, 179, 191, 195, 224
பால்கோரை 191
பால்துத்தம் 163
பால்வெள்ளி 157
பாலைக்காய் 230
பாளைவேர் 110
பாறை 146
பானகம் 372
பானம் 162
பிங்கலை 428
பிசரி 203
பிசாசு 456
பிசின் 444
பிடரி 28, 126, 458
பிடி 439
பிணங்கு 441
பிணம் 126
பிணி 452, 500
பித்தசன்னிசுரம் 457
பித்தச்சுரம் 17, 109, 434
பித்தம்33, 34, 38, 58, 62, 66, 72, 73, 74,80, 82, 85, 95, 98, 109, 135, 357, 364, 440, 449
பித்தாதிச்சுரம் 141
பிதற்றல் 87
பிதற்று 438, 441
பிதா 315
பிரண்டை 212, 233
பிரண்டைச்சாறு 213
பிரமாணம் 150, 158, 161, 162
பிரமி 396
பிரமித்து 128
பிரமை 129, 452, 472
பிரலாபச்சன்னி 133, 377, 488
பிரலாபச்சுரங்கள் 378
பிரளயம் 324
பிராந்தி 123
பிராணன் 418
பிள்ளை 105, 326
பிள்ளைப்பூச்சி 321
பிள்ளையார் 455
பீடம் 406
பீனிசம் 407
புக்கு 138
புகழ் 255
புகை 509
புங்கம்பட்டை 399
புங்கிலுப்பை 255
புடம்159, 165, 189, 202, 203, 206, 207, 212, 213, 216, 217, 218
புடலை 2
புண் 317, 387, 458, 495, 500
புண்மை 56, 157
புணர்ந்து 456
புத்தி 1, 112
புதல்வர் 510
புதுமை 47
புயம் 495
புரசம்பட்டைச்சாறு176, 199, 204
புரட்டாசி 65
புரட்டி 510
புராதனம் 469
புருவம் 454
புருசரக்கல் 216
புலர்ந்திடும் 26
புலவு 394
புலாதிகள் 24
புவி 24
புளி 29, 172, 185
புளித்தண்ணீர் 211
புளிப்பு 1, 32, 364, 440
புளியம்பட்டை 397
புளியிலைச்சாறு 207
புளியேப்பம் 89
புறங்கால் 112
புறங்கை 114
புற்று 49, 75
புற்றுப்பாம்பு 75
புற்றுமண் 196

புன்னை 232, 243
புன்னைக்காய் 325
புனர்பூசம் 499
புனல் 33, 343
பூ 202
பூங்குடி 204
பூங்குழலாய் 354
பூசணி180, 372, 376, 386, 388, 394, 399
பூசம் 499
பூசி 91
பூசை 175
பூடு 268
பூண்டு 408, 409
பூதச்சுரம் 476
பூதம் 42, 80, 87, 415
பூதிக்காய்த்தைலம் 257, 265
பூபதி 169
பூமுகம் 146
பூரம் 499
பூராடம் 499
பூவந்தி 210
பூனைக்காலி231, 242, 243, 252
பெண் 31, 60, 488
பெண்சாதி 2
பெண்மை 90
பெரியகாஞ்சொரி 243
பெரியசுரம் 16
பெரியவாகை 384
பெருங்காயம்224, 266, 500, 502
பெருங்குமிழ் 261
பெரும்பாடு 324
பெரும்பாளைவேர் 243
பெருமரத்துப்பட்டை 101
பெருமூச்சு 487
பெருமை 500
பெருவயிறு 506
பெருவிரல் 67
பேச்சு 487, 501
பேதம் 126, 452
பேய்ப்புடோல்244, 358, 360, 368, 370, 392
பேதி 91
பேய் 4
பேய்க்கொம்மட்டிக்காய் 213
பேராமுட்டி105, 108, 230, 241, 258, 368, 384, 388, 395, 397, 398
பேரீச்சம்பழம் 267, 397
பேரெழுத்து 57
பையப்பைய 333
பொங்கப்பொங்க 228
பொசிவாய் 317
பொடி 96, 194, 198, 267
பொய் 127
பொருமல் 402, 447
பொறுமை 501
பொற்கொடி 256
பொன்னார் 511
பொன்னாங்கண்ணி 189
போகம் 31
போசனம் 140

ம

மக்கள் 19
மகம் 499
மகாவாயு 164
மகோதரம் 506
மகோரமந்திரம் 174
மங்கையர் 1, 71
மஞ்சட்டி 244, 269
மஞ்சனாத்தி 177
மஞ்சள் 232, 245, 439, 488
மஞ்சனி 328, 440
மஞ்சி 94
மடமாது 4
மடவாய் 8, 331, 359
மண் 9, 61, 359
மண்டலிகர் 455
மண்தொம்மை 19
மணத்தக்காளி 265
மணல் 165, 171, 227
மத்தித்து 221
மத்தியானம் 15, 64
மதி 1
மதிமயக்கம் 497

மதியாமல் 127
மதிவதனம் 145
மதுரம் 245
மந்தம் 89
மந்தாரம் 3, 6
மந்தித்து 33, 320
மயக்கம் 485
மயக்கு 459
மயிர் 86, 122, 146
மயிர்க்கூச்சு 448
மயிர்சிலிர்த்து 123
மயில்துத்தம் 163
மரகதக்கல் 213
மரணம்43, 49, 51, 52, 58, 75
மருது 242
மரமஞ்சள் 234, 256, 271
மருகால் 181
மருத்துவர் 128
மருந்து14, 94, 113, 118, 120, 169, 171, 172
மருவி 63, 315
மருவு 250
மருவுசன்னி 158
மருள் 35
மல்லி108, 260, 382, 384, 396
மலசலம் 77, 82, 462
மலட்டுநோய் 326
மலட்டுப்புழு 326
மலம்53, 77, 94, 112, 113, 117, 118, 120, 141, 142, 362, 463, 490
மலமடைக்கும் 355
மலர் 25, 146, 443
மலரோசிகம் 449
மலைக்கடுகு 245
மலைத்துவரை 240
மறுவிசம் 40
மறையவர் 427
மறைவல்லோர் 73
மனம் 33
மனோகர் 499
மனோசிலை150, 160, 162, 163, 182, 206, 500, 502
மனோபலவவாயு 327
மகாகோடாகுடி 164
மாகாளிக்கிழங்கு 104
மாங்கிசம் 145, 412
மாங்குணம் 240
மாங்கொட்டை 219
மாசந்தோல் 109
மாசி 64
மாசு 91, 120
மாஞ்சில் 246
மாண்டு 62
மாண்பு 143
மாணிக்கம் 215
மாத்திரை 147, 148, 153, 161
மாதம் 63, 351
மாதவிடை 317, 320
மாதுளம்பழச்சாறு196, 197, 198, 200
மாது 73, 82, 143
மாதுளை 345, 346
மாந்துளிர்ப்பட்டை 398
மாந்தை 21
மாம்பிசின் 195
மாமிசம் 354
மாமுனிவர் 495
மாயன் 18
மார்கழி 64
மார்ச்சிலந்தி 500
மார்ச்சுரம் 464
மார்பகம் 456
மார்பு3, 10, 44, 51, 52, 87, 375, 417
மாரகசுரம் 148
மால்மருகன் 18
மாறல் 435, 460
மாள்வார் 37
மிருகசீரிடம் 499
மிளகரணை242, 257, 265, 408
மிளகு152, 154, 157, 162, 167, 169, 225, 234, 401, 500, 505
மிளகுத்தூள் 506
மின்னுரசம் 149

முக்குறுணி 268, 269
முக்குறுணிப்பால் 236
முகம்23, 52, 56, 84, 92, 116, 135, 373, 452, 479, 490
முசி 153, 251
முசுமுசுக்கை 50, 233
முடக்கொற்றானிலை 253
முட்காவேளைவேர் 233, 403
முடங்கல் 249
முடுகு 330, 336
முத்தக்காசு97, 105, 106, 109, 110, 218, 242, 245, 246, 345, 355, 356, 358, 360, 367, 368, 372, 378, 397, 398
முத்தம் 99, 100
முத்து 210
முதிரும் 9
முதுகு100, 115, 383, 458, 500
முந்திரி 348, 394
முந்திரிகை 361
முப்புரம் 409
முயல் 240
முருக்கவேர் 231
முருங்கை164, 167, 220, 222, 229, 241, 265, 399, 497
முலை 73
முலைக்குத்து 508
முலைப்பால்174, 183, 220, 227, 361, 392, 393, 394
முழங்கால் 364
முழித்து 128, 448
முள் 8
முள்ளி160, 164, 169, 211, 265
முள்ளு 131, 134
முறிவு 486
முறுக்கு 71
முனியுரை 488, 497
முனிவர்45, 262, 427, 435, 501
மூக்கு28, 51, 67, 333, 335, 445, 454, 458, 487, 500
மூக்குநீர் 457
மூங்கில் 195
மூச்சிரைச்சல் 84
மூச்சு 46, 83, 132
மூட்சை153, 159, 199, 200, 202, 206, 211, 216
மூடி 218
மூத்ததோடம் 152
மூத்திரம் 77, 182, 212
மூத்திரரோகம் 173
மூர்ச்சை122, 366, 440, 442, 447, 448, 463, 466, 472, 478, 494, 497
மூலம்140, 173, 353, 358, 376, 407, 486, 499, 500
மூலவாயு 321
மூலிவேர் 246
மூவேழ்கண் 27
மூவேழுதோடம் 500
மூளை 69
மூன்றாங்கால் 499, 500
மூன்றாஞ்சாமம் 15
மூன்றாமாறல் 435
மூன்றெட்டுநாள் 497
மெத்த 379
மெய்28, 48, 439, 444, 446, 453, 470
மெய்நடுக்கம் 48
மெய்யுடம்பு 135
மெலிவு 470, 482
மென்முனிவன் 492
மேகம் 20
மேகசுரம் 435
மேதைச்சுரம் 479
மேதைக் குக்குலம் 246
மேல்சுரம் 479
மேல்முட்டு 237
மேல்மூச்சு 48, 338
மேல்மூடி 218
மேலிங்கம் 241
மேவி 53
மேற்கு 64
மேற்சட்டி 171
மேனி 46, 233, 446, 479

மைக்கண் 48
மையுரு 49
மொண்டு 447
மொத்தி 220
மொய்க்கும் 145
மோது 242
மோர்185, 187, 191, 201, 504
மேனி 481

ய

யானைக்கொட்டை 231
யானைமுகத்தோன் 406

ர

ரசபூபதி 167
ரசம்159, 160, 162, 163, 165, 166, 169, 221
ரசாயனம் 163
ரத்தவிப்புருதி 317
ராகம் 475
ராட்சதன் 160
ருசி 143
ரேணுகம் 263, 266
ரேவதி 499
ரோகம் 315, 331, 479
ரோகிணி 399, 499
ரோசிகம் 468

ல

லக்கணம் 407
லத்தி 129
லவங்கம் 172, 266, 347, 363
லாபதாபம் 334
லிங்கம் 162
லேகியம் 407
லோகம் 157

வ

வக்கணாத்தி 265
வங்காளப்பச்சை 247
வச்சிரம் 212, 216
வச்சிரக்குகை 165
வசம் 115
வசம்பு234, 261, 270, 370, 401
வசனம் 29, 472, 476
வட்டத்திருப்பி98, 365, 378, 398
வட்டம் 213
வடநூல் 18
வடமொழி 407
வண்ணம் 5, 77, 264
வணங்கி 132
வதை 316
வயிரவன் 428
வயிறெரிக்கும் 4
வயிற்றழிவு 109
வயிற்றுக்கடுப்பு 33
வயிற்றுவலி 334
வயிற்றோடல் 219
வயிறு53, 86, 107, 115, 116, 117, 130, 141, 142, 143, 144, 373, 385, 402, 438, 463, 470
வயிறுடைந்து 470
வயிறுவீங்க 114
வயிறூதும் 447, 476
வரம் 134
வரவு 34
வருஞ்சுரம் 453
வருடம் 413
வருணமுகம் 1
வருணி 1
வல்லபத்திரிவேர் 351
வல்லியின்கொடி 327
வலக்கை 35
வலமடைதல் 48
வலி59, 74, 76, 87, 88, 317, 341, 468
வலிக்கும் 373, 510
வலிப்பு 10, 121, 476
வழக்குப்பேச்சு 129
வழாநாள் 212
வழிநடந்திளைத்தபேர் 17
வழுதலைவேர் 230
வள்ளி 159, 499
வளையம் 75
வளையலுப்பு 185
வறட்டுச்சன்னி 398
வறண்டு 78, 332
வறுமை 6
வன்பித்தம் 23
வன்மை 80, 90
வன்மொழி 124

வஸ்திரகாயம் 173
வாகடசாத்திரம் 413
வாகடநூல் 317, 319, 320
வாகடம் 389
வாகடர் 407
வாகை 268
வாட்டம் 158
வாதக்குணம் 264
வாதச்சன்னி 28, 124
வாதச்சன்னிசுரம் 456
வாதச்சிலேத்துமம் 52
வாதச்சுரம்16, 126, 160, 434, 436, 453, 463
வாதப் பயித்திய சிலேத்துமம் 451
வாதப்பயித்தியம் 129
வாதபாண்டுரோகம் 111
வாதபித்த சேத்துமச்சுரம் 452
வாதம்15, 27, 33, 34, 35, 38, 42, 50, 66, 71, 73, 74, 80, 82, 85, 97, 112, 135, 139, 173, 240, 250, 258, 340, 344, 359, 436, 447, 448
வாதம் பத்து 28
வாதாதி 162
வாதை 342
வாந்தி80, 83, 124, 130, 144, 463, 468, 476
வாய்48, 83, 115, 129, 373, 442, 446, 450, 465, 489, 490
வாய்கசக்கும் 449
வாய்கறுத்து 454
வாய்நீர் 320, 445
வாய்நோய் 487
வாயு113, 160, 164, 249, 414, 419, 420, 422, 439, 488, 490
வார்த்தை 77
வாரம் 141, 144
வாலகர்ப்பப் பித்தம் 329
வாலுகாந்திரம்153, 157, 161, 166, 167
வாழ்வான் 320
வாழுளுவை 244
வாழை 507
வாளி 9
வானம் 65
விக்கல்10, 83, 89, 124, 127, 130, 132, 133, 470, 489, 490
விக்கினவிநாயகன் 239, 499
விகாரம் 456
விசகிரந்தி 231
விசசுரங்கள் 152
விசசுரதோடம் 149
விசம் 4, 134, 500
விசமசீதச்சுரம் 461
விசமச்சுரம் 460
விசமுட்டித்தைலம் 259
விசாகம் 499
விட்ணுசக்கரம் 149
வித்தகக்கதிரோன் 64
வித்து 219
விதி 115, 127, 145
விநாயக மூர்த்தி 353
விப்புரதி 322, 500
விம்மிக்கம்மி 489
விம்மிடும் 112
வியன்பால் 177
வியாதி19, 22, 56, 57, 73, 76, 77, 79, 501
விரகி 220
விரல் 35, 72
விரலங்குலம் 68
விராகன் 500
விரிதலையன் 55
விருந்தர் 17
வில்வபத்திரக்காய்வேர் 353
வில்வம் 101, 170, 229
விலாம்மிச்சம் 331
விழல் 61
விழி21, 48, 53, 80, 128, 476, 490
விழிவேல் 145
விளக்கெண்ணெய் 145, 236
விளாம்பட்டை 341
விறகு 85

வினை 477
வீக்கம் 108, 114, 402
வீங்கி 112, 323
வீகை 325
வீரதுது பத்திரி 500
வீழ்த்தும் 488
வீழ்ந்து 342
வீறான காய்ச்சல் 14
வீறு எருக்கு 252
வீறு முருங்கை 169
வெகுண்டல் 472
வெங்கலம் 207
வெங்காயம் 510
வெச்சென 207
வெட்டிவேர்95, 104, 247, 370
வெட்டுமருந்து 235
வெட்பாலை 100, 265, 271
வெடித்து 6, 8
வெடியுப்பு 185
வெண்கலம் 208
வெண்காரம்148, 149, 151, 163, 227, 500, 502
வெண்சாயம் 2
வெண்ணெய் 315, 409
வெண்ணூமத்தை 242
வெதுப்படக்கிவேர் 241
வெதுப்பு 355, 442, 461
வெதுப்புண் 74
வெதும்பிடுஞ்சாவு 44
வெதும்பிய நீர் 30
வெதும்பும்53, 357, 359, 385, 450, 461, 468, 474, 497
வெந்தநீர் 170
வெந்நீர் 92, 113, 210, 500
வெம்பசி 385
வெய்யிலூர் 228
வெயில் 188, 212, 445, 457
வெவ்வெறிச்சாறு 169
வெள்ளாட்டமுது 226
வெள்ளாட்டுநீர் 399
வெள்ளாட்டுப்பால் 240
வெள்ளாட்டு மூத்திரம் 224
வெள்ளி201, 204, 205, 370
வெள்ளீயப்பற்பம் 204
வெள்ளுள்ளி260, 395, 401, 403
வெள்ளுள்ளித்தைலம் 151
வெளுத்து 130, 457
வெளிறி 443
வெள்ளை 202
வெள்ளைப்பாடாணம் 179
வெள்ளைவெங்காயம் 498
வெற்றிலை176, 183, 222, 228, 242
வெறிக்க 456, 476, 489
வேகம் 95
வேடுகட்டி 177
வேதம் 18
வேதாந்தம் 141
வேதவிதி 48
வேப்பெண்ணெய் 255, 478
வேப்பங்கொட்டை 498
வேம்பு 106, 235, 506
வேர் 95
வேர்க்க144, 454, 457, 459, 481, 488
வேர்வை6, 7, 87, 125, 126, 135, 491, 492
வேலரசு 209
வேலிப்பருத்தி 252, 500
வேலுடல் 477
வேலும்மயிலும் 499
வேனாவேர் 93
வைகாசி 64
வைத்தியம் 156, 240
வைத்தியர் 139

# அருஞ்சொற்பொருள்

அசாத்தியம் - தீரா நோய்
அத்திசுரம் - எலும்பைப் பற்றிய சுரம்
அதிசாரம் - பேதி (குடலில் ஏற்படும் புண்களால் வருகின்ற குருதிக் கழிச்சல்)
அந்தகம் - குருடு
அபான வாயு - கீழ் நோக்கும் வாயு
அரப்பொடி - இரும்புப் பொடி
அரிதாரம் - தாளகம்
அரேணுகம் - கடுக்காய் வேர்
அரோசிகம் - ஓக்காளம்
ஆயல் எண்ணெய் - ஆயில் மரப்பட்டை எண்ணெய்
இடவகம் - மாம்பிசின்
இரத்தப் பேர் கந்தம் - கொட்டைக் கரந்தை
இருவேளை - நாய்வேளை, தைவேளை
இருகனி - கடுக்காய், நெல்லிக்காய்
இருசீரகம் - நற்சீரகம், பெருஞ்சீரகம்
இருநாகப்பூ - நாகப்பூ, சிறுநாகப்பூ
இரேணுகம் - காட்டுமிளகு
இலகு விசமுட்டித் தைலம் - குவிச முட்டித் தைலம்
இலாமிச்சம் - வெட்டிவேர்
உகாவேர் - உகாமர வேர்
உருகியனார் மூத்திரம் - வெள்ளாட்டுப் பால்
உள்ளி - வெள்ளை வெங்காயம்
உளமாந்தை - சயநோயின் ஒரு பிரிவு
உளைச்சல் - சீதளத்தால் காணும் உடம்புக் குடைச்சல்
எரிகுன்மம் - தன்ம நோய் வகை
ஒட்டடைத்தூள் - சிலம்பிக்கூடு, புகையுறை
கங்கை - நிலக்கடம்பு
கச்சோலம் - கிச்சிலிக் கிழங்கு, பூலாங்கிழங்கு
கண்டங்காலி - கண்டங்கத்திரி
கடுகுரோகணி - கடகரோகணி
கடுவேளை - நாய்வேளை
கந்தம் - வாசனை
கதலி - வாழை
கர்ணம் - காது
கரிச்சாவின்சாறு - கரிசலாங்கண்ணிச்சாறு
கபம் - ஐயம் (நீர்)
கழிச்சல் - இரத்தத்துடன் கலந்த பேதி
காசம் - ஈளை முதலிய நோய்

| | |
|---|---|
| காராம்பூ | - இலவங்கப்பூ |
| காவி | - காவிக்கல் |
| கிரந்தி | - புண்வகை |
| கிராணி | - வயிற்றுப்போக்கு நோய் |
| கிருதம் | - நெய் |
| கியாழம் | - கசாயம் |
| கிலுப்பை | - வட்டக் கிலுகிலுப்பை |
| குக்குளு | - பூண்டு |
| குவளைப்பாதிரி | - கண்டங்கத்திரி |
| குளவிந்தம் | - தாமரை |
| குழிமீட்டான் | - நத்தைச் சூரி |
| குன்மம் | - அசீரணம், வயிற்றுவலி முதலியன |
| கூழ்ப்பாண்டம் | - பூசணி |
| கூவிந்தம் | - வில்வமரம் |
| கைப்புடல் | - பேய்ப்புடல் |
| கொட்டை எண்ணெய் | - ஆமணக்கு எண்ணெய் |
| கொடுப்பை | - பொன்னாங்காணி |
| கொடுவேலி | - சித்திரமூலி |
| கொம்பன் கோரை | - பெரிய கோரை |
| கொழுந்து | - மரிக்கொழுந்து |
| கோசலம் | - மாட்டு மூத்திரம் |
| கோசிகை | - மல்லிகை |
| சத்தி சாரணை | - வெள்ளைச் சாரணை |
| சடாமாஞ்சில் | - மாஞ்சில் |
| சப்பைக்காய் | - மாங்கொட்டை |
| சமோதகம் | - ஓமம் |
| சன்னி | - மூக்குற்ற நோய் |
| சிங்கணி நாடி | - சங்கணி |
| சித்திர மூலி | - கிச்சிலிக் கிழங்கு |
| சிவதை | - பகன்றை |
| சிறுகாஞ்சொரி | - சொறிபச்சிலை |
| சிறுமூலம் | - சிற்றாமுட்டி |
| சீதேவி | - செங்கழுநீர் |
| சீலை | - துணி |
| சீகை | - சிகைக்காய் விதை |
| சீனிக் கடுகு | - வெண்கடுகு |
| சுக்கிலம் | - விந்தணுக்கள் |
| சுழல்சுரம் | - மாறல் சுரல் |
| சூசிகா வாயு | - சூதகவாயு, மலடிகட்கு சூதகத்தினால் ஏற்படும் குத்தல் நோய் |
| சூதம் | - இரசம் |
| சூலை | - குத்தல் நோய் |
| செங்கழுநீர் | - செங்குவளை |

| | |
|---|---|
| செவிக்கள்ளி | - மான்செவிக் கள்ளி |
| சேவகன் பூடு | - சிற்றாமுட்டி |
| சைத்தியம் | - உடல் குளிர்ச்சி |
| தக்கோலம் | - வால்மிளகு |
| தருண சுரம் | - தொடக்கம் முதல் ஒன்பது நாள் காயும் சுரம் |
| தழுதாழை | - வாதமடக்கி |
| தனுர் | - வில் |
| தனுர்வாதம் | - பெண்களுக்குப் பேறு காலத்திலும் பேற்றின் பிறகும் காணும் ஒரு வாத நோய் |
| தாரம் | - அரிதாரம் |
| தாமரைவளையம் | - தாமரைத் தண்டு |
| தாளி | - தாளிக்கரை |
| தான்றி | - தான்றிக்காய், தாணிக்காய் |
| தானியப் புடம் | - தவசம் |
| திரிகந்தம் | - சந்தனம் + அகில்கட்டை + தேவதாரம் |
| திரிபனை | - நிலப்பனை |
| துத்தம் | - பால்துத்தம் |
| தூமம் | - புளிநரளை |
| தோடச் சுரம் | - கொடிய சுரம் |
| தோடை | - ஆடா தோடை |
| நிம்பப் பழம் | - எலுமிச்சம் பழம் |
| நிலப்புழு | - பூநாகம் |
| நீலி | - அவுரி |
| நுணா | - மஞ்சணாத்தி |
| நேத்திரம் | - கண் |
| பங்கம்பாளை | - ஆடுதீண்டாப் பாளை |
| பவுத்திரம் | - ஒருவகை மலவாயில் புண் |
| பன்னி, பன்னிமீட்டான் கிழங்கு | - கோரைக் கிழங்கு |
| பாசிலை | - பழம்பாசி, யானைக் கொட்டைப் பாசி |
| பாதம் பெரிய சுரம் | - யானைக்கால் நோய் |
| பித்தம் | - அழல் (தீ) |
| பிரமாணம் | - அளவு |
| பிரமி | - நீர்ப்பிரமி |
| பிரலாபச் சன்னி | - அலறு சன்னி |
| பிராய் முட்டி | - பேராமுட்டி |
| பூதச்சுரம் | - வாதச் சுரம் |
| புருஷராக பற்பம் | - புட்பராக பற்பம் |
| பூனைக்காலி | - முசுமுசுக்கை |
| பெரும்பாடு | - பெண்களுக்கு மிதமிஞ்சிக் காணப்படும் சூதக ஒழுக்கு |

| | |
|---|---|
| பெருமரம் | - ஆலமரம் |
| பேய்மிரட்டி | - வெதுப்படக்கி |
| பேய்க்கொம்மட்டி | - திமிட்டி |
| பொரிகாரம் | - வெங்காரம் |
| மகாமேதி | - வெள்ளெருக்கு |
| மதாரம் | - கஸ்தூரி |
| மனோசிலை | - தாளகம் |
| மகாளிக் கிழங்கு | - பெருநன்னாரி |
| மாங்கிசம் | - மாமிசம் |
| முத்தக்காசு | - கோரைக் கிழங்கு |
| முந்திரிகை | - திராட்சைப் பழம் |
| முப்புரத்தை எரித்தான் வேம்பு | - சிவனார் வேம்பு |
| மூக்கிரட்டை | - கவளைச் சாரணை |
| மூலம் | - கொடிவேலி, சமூலம் (திப்பிலிமூலம், செங்கழுநீர் மூலம்) |
| மூவிலை | - குப்பைமேனி |
| ரோகணி | - கடுக்காய் |
| லோகம் | - அயம் |
| வச்சிரம் | - வைரம் |
| வசுவாசி | - சாதிபத்திரி |
| வட்டத்திருப்பி | - பொன்முசுட்டை வேர் |
| வாதம் | - வளி (காற்று), வாயு |
| விப்புருதி | - பிளவை, சிலந்திநோய் |
| வில்லை | - வில்வம் |
| விலாமிச்சம் | - வெட்டிவேர் |
| வாளம் | - நேர்வாளம் |
| விநாயகமூர்த்தி மூலம் | - அருகம்வேர் |
| விளாவரிசி | - வெப்பாலை அரிசி |
| வெதுப்படைக்கி | - தலைச்சுருளி |
| வெதுப்பு | - காய்ச்சல் |
| வெற்றிவேர் | - இருவேலி |
| வேளை யிரண்டு | - தைவேளை, நாய்வேளை |

# விளக்கக் குறிப்பு

**அசுகுணி**

சிறுசிறு கொப்புளங்கள் தோன்றி அதிலிருந்து சீழ் வடிந்து இலேசான துணி போர்த்தியது போன்ற வெண்மை நிறம் படர்தல்

**அதிசாரம்**

இது எட்டு வகைப்படும். அவை

1. வளி, 2. அழல், 3. ஐயம், 4. முக்குற்றம், 5. சுரம், 6. துக்கம், 7. தோடம், 8. குருதி.

கிராணி: நிணக்கழிச்சல், ஊன் கழிச்சல், பலநிறக் கழிச்சல், கொடிய கழிச்சல், நாறும் கழிச்சல் எனும் வேறு பெயர்களையுடையது.

அதிசாரம்: பெருங்கழிச்சல், மிகுகழிச்சல் எனும் வேறு பெயர்களையுடையது.

**இரசாயனம் (சுவைப்பு)**

இது சரக்குகளைச் சூரணம் செய்து சர்க்கரையும் நெய்யும் எடைப்படி சேர்த்து இளகலாகக் குழம்புபோலப் பிசைந்து எடுத்துவைத்துக் கொள்வது

**இளகம் (இலேகியம்)**

குடிநீர் அல்லது சாறுகளுடன் சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி மணம் வரும்போது சூரணங்களைச் சேர்த்துக் கிண்டி, தேனும் விட்டுக் கிளறி எடுத்துக் கொள்வது.

**கல்வம்**

மருந்துப் பொருட்களை அரைப்பதற்குப் பயன்படும் கல்லினால் செய்யப்பட்ட குழியுள்ள அம்மியாகும். பொதுவாக இது கருங்கல்லில் செய்யப்பட்டிருக்கும். பிற நிறக் கற்களிலும் செய்யப்படுவது உண்டு.

**கற்பம்**

சில மூலிகைகள் இரசம் உப்புகள் உபரசங்கள் முதலியவற்றைச் சிறந்த முறையில் மருந்தாக அமைத்து அவற்றுக்குக் கூறப்பட்டுள்ள பத்தியம் நாள் அளவுப்படி ஏற்றியும் இறக்கியும் உடலை அழியாமல் (நன்னிலையில்) பாதுகாக்கும் முறை கற்பம் எனப்படும்.

**கிரந்தி**

கழுத்து, அக்குள், அரை இடுக்கு முதலிய இடங்களில் உள்ள கோளங்களின் தொடர்புடைய வீக்கங்கள். இவை பல்வேறுபட்ட நோய்களால் வரக்கூடியது.

கியாழம்

குடிநீர்க் கசாயம், மருந்துநீர் எனப்படும். உலர்ந்த சரக்குகளையாவது ஈரமாயுள்ள இலைகளையாவது இடித்து, அதற்குச் சொல்லப்பட்ட அளவின்படி தண்ணீர் விட்டு இரண்டுக் கொன்றாகவாவது, நான்குக்கொன்றாகவாவது, ஆறுக்கொன்றாகவாவது, இருபத்து நான்குக்கு ஒன்றாகவாவது காய்ச்சி வடிகட்டி எடுத்துக் கொள்வதாகும்.

குட்டம்

குட்டம் 18 வகை.

1. புண்டரீகக் குட்டம் - படர்தாமரைப் பெருநோய்
2. விசமோடகக் குட்டம் - கொப்புளப் பெருநோய்
3. பர்மா குட்டம் - சிரங்குப் பெருநோய்
4. கசகுட்டம் - ஏகசரும குட்டம், யானைத்தோல் பெருநோய்
5. கர்ண குட்டம் - காதுப் பெருநோய்
6. சர்ம குட்டம் - தோற் பெருநோய்
7. கிருட்ண குட்டம் - கரும்பெரு நோய்
8. அவுதும்பர குட்டம் - அத்திக்காய்ப் பெருநோய்
9. மண்டல குட்டம் - வளையப் பெருநோய்
10. அபரிச குட்டம் - வலிப் பெருநோய்
11. விசர்ச்சிகா குட்டம் - சொறிப்பெருநோய்
12. செங்குட்டம் - விபாதிகா குட்டம் செம்படை
13. கிடீப குட்டம் - பன்றித்தோல் பெருநோய்
14. சர்மதல குட்டம் - தோல்வெடி பெருநோய்
15. தத்துரு குட்டம் - தடிப்புப் பெருநோய்
16. சித்மா குட்டம் - நாப்பெருநோய்
17. சதாரு குட்டம் - புரைப் பெருநோய்
18. சுவேத (வெண்)குட்டம் வெண்படை - வெண்பெருநோய்

குடிநீர்

குறிப்பிட்ட சரக்குகளை ஒன்றிரண்டாக இடித்துக் குறிப்பிட்ட அளவு தண்ணீர் விட்டுக் காய்ச்சி அளவுப்படி குறுக்கி, வடித்து எடுத்துக் கொள்வது.

குழம்பு

மூலிகைச் சாறுகளில் சரக்குப் பொடிகளைக் கலந்து அடுப்பேற்றி குழம்புப் பக்குவத்தில் எடுத்துக் கொள்வது. அல்லது சரக்குகளை நெற்பசையுள்ள பொருட்களைக் கொண்டரைத்து குழம்பு பக்குவத்தில் எடுத்துக் கொள்வது.

குன்மம்

குன்மம் 8.

1. வளி (வாத) குன்மம், 2. அழல் (பித்த) குன்மம், 3. ஐய (சேத்தும) குன்மம், 4. முக்குற்றக் (சன்னி) குன்மம், 5,. களல் (வாயு) குன்மம், 6. எரிகுன்மம், 7. வாந்தி (சத்தி) குன்மம், 8. வலிகுன்மம்.

சட்டி

வாய் அகன்ற வட்டமான ஆழமுள்ள மண் பாத்திரம் குண்டு சட்டி என்று வழங்கப்படும்.

சன்னி

சன்னி 13

1. சந்திக சன்னி, 2. அந்தக சன்னி, 3. ருத்தாக சன்னி, 4. சித்தவிப்பிரம சன்னி, 5. சீதாங்க சன்னி, 6. தாந்திரிக சன்னி, 7. கண்டகுச்ச சன்னி, 8. கர்ன்னிக சன்னி, 9. புக்ன நேத்திர சன்னி, 10. இரத்திட்டீஷச் சன்னி, 11. பிரலாப சன்னி, 12, சிம்மக சன்னி, 13, அபிநியாச சன்னி (சித்த மருத்துவம்)

சாறு

இலை, வேர், பட்டை, பூ, காய் முதலிய உறுப்புகளுள் ஏதாவதொன்றையாவது, ஐந்தையுமாவது இடித்துப் பிழிந்தோ, அரைத்துப் பிழிந்தோ, இடித்துப் பிட்டவித்துப் பிழிந்தோ வந்த சாற்றை எடுத்துக் கொள்வது.

சீலை

சீலை - துணி. சீலை என்பது ஒரு சுத்தமான அழுத்தத் துணியில் மிருதுவாக அரைத்த புற்று மண்ணை ஒரு பக்கத்தில் தடவி ஒட்ட உபயோகித்தல். இதனால் குப்பி அகல் இவைகளைச் சீலை செய்யலாம். மண்ணுக்குப் பதில் கோதுமை மாவையும், உளுந்து மாவையும் உபயோகிக்கலாம். சுண்ணாம்பைத் தனியாகவாவது முட்டையின் வெண்கருவைச் சேர்த்தாவது உபயோகித்து மருந்துக்குத் தக்கவாறு செய்தல் வேண்டும்.

சீலை மண் செய்தல்

சீலை மண் செய்வதென்பது, சுத்தமான அழுத்தமாக இருக்கின்ற துணியில் மிருதுவாக அரைக்கப்பட்ட புற்றுமண், கோதுமை மா, உளுந்துமா, சுண்ணாம்பு இவைகளில் ஏதாகிலும் அல்லது சுண்ணாம்பும் முட்டை வெண்கருவும் சேர்ந்த கலவையை ஒருபுறம் மட்டும் தடவி அகல்களின் விளிம்பை ஏழுமுறை சுற்றி ஒட்டிப் பின்பு நன்றாக உலரவிட்டு என்பதாகும்.

சுத்தி

மூலிகைகளிலும், தாதுப் பொருட்களிலும் உள்ள நச்சுத் தன்மைகளைப் போக்கித் தூய்மையாக்கிய பின்னரே மருந்தாகச் செய்ய வேண்டும். இங்ஙனம் தூய்மை செய்யப் பயன்படும் முறைகளுக்குச் சுத்திமுறை என்று பெயர்.

பற்பம், செந்தூரம் முதலிய தாதுவர்க்கப் பொருட்களுக்கே சுத்திமுறை இன்றியமையாதது எனினும் மூலிகைகட்கும் உரியதாகின்றது.

சுரசம்

மூலிகைகளின் இலை, வேர், பட்டை, பூ, காய் இவற்றை ஒன்றாகவோ, தனித்தனியாகவோ இடித்துச் சாற்றுடன் சில சரக்குகள் கலந்த நீர் விட்டுக் காய்ச்சி அதை மூரித்து எடுப்பது சுரசம்.

சுரம்

சுரம் 64, வாதத்தில் - 20, பித்தத்தில் - 24, கபத்தில் - 20 ஆக - 64. இதில் தன்வழிச் சுரங்கள் 52. பிறவழிச் சுரங்கள் 12.

தன்வழிச் சுரங்கள் 52

1. வாதசுரம், 2. பித்த சுரம், 3. கபசுரம், 4. வாதபித்த சுரம், 5. வாதகப சுரம், 6. பித்தவாத சுரம், 7. பித்தகப சுரம், 8. கபவாத சுரம், 9. கபபித்த சுரம், 10. கலிப்புச் சுரம், 11. மந்தசுரம், 12. நளிர்சுரம், 13. வெஞ்சுரம், 14. மேனிச்சுரம், 15. உள்சுரம், 16. வெளிச்சுரம், 17. விட்டுவரும் சுரம், 18. விடாச்சுரம், 19. சாரச்சுரம். 20. செங்கறைச் சுரம், 21. ஊன்சுரம், 22. கொழுப்புச் சுரம், 23. என்புச் சுரம், 24. மூளைச் சுரம், 25. விந்து சுரம், 26. துன்பச் சுரம், 27. முறைசுரம், 28. மயக்க சுரம், 29. பிதற்றல் சுரம், 30. புழுச்சுரம், 31. மஞ்சட்சுரம், 32. காலைச் சுரம், 33. பகற்சுரம், 35. மாலைச் சுரம், 35. இராச் சுரம், 36. அதிகாலைச் சுரம், 37. தீவறட்சி சுரம், 38. அனல் சுரம், 39. ஏப்ப சுரம், 40. வாந்தி சுரம், 41. கொட்டாவி சுரம், 42. விடவிக்கல் சுரம், 43. வியர்வைச்சுரம், 44. தூங்காச் சுரம், 45. இருமல் சுரம், 46. பழஞ்சுரம், 47. கட்டிச் சுரம், 48. சீழ்ச் சுரம், 49. பல் கொப்புளச் சுரம், 50. நடுக்கல் சுரம், 51. வீக்கச் சுரம், 52. கழிச்சல் சுரம்.

பிறவழிச் சுரங்கள் 12

1. மோது சுரம், 2. சாபசுரம், 3. ஏவல்சுரம், 4. சேர்க்கைச் சுரம், 5. பூதசுரம், 6. மருந்துவேகச் சுரம், 7. நச்சு சுரம், 8. சினச் சுரம், 9. பயச்சுரம், 10. துக்க சுரம், 11. காம சுரம், 12. தெய்வசினச் சுரம் என்பனவாகும்.

சூரணம்

தனிச் சரக்கு அல்லது கூட்டுச் சரக்குகளின் நுணணிய (பொடி) துகள்களே சூரணம் எனப்படும்.

செந்தூரம்

உலோகங்கள், பாடாணாதிகள், இரச உபரச உப்புகள் ஆகியவற்றைச் சில மூலிகைச் சாறுகளிலாவது, புகை நீரிலாவது அரைத்துப் புடமிட்டு அல்லது எரித்தோ வறுத்தோ அரைத்து வெய்யிலில் வைத்துச் சிவக்கும்படி செய்து எடுத்துக் கொள்வதே செந்தூரச் செய்முறையாகும்.

உலோகம், பாடாணம் முதலானவற்றின் நீறு வெண்மையாகவும், செந்தூரம் செம்மையாகவும் இருக்கும்.

தைலம்

குறிப்பிட்ட சரக்குகளின் சாறு, கியாழம், சூரணம், கற்கம் ஆகியவற்றை எண்ணெயுடன் சேர்த்துக் குறிப்பிட்ட அளவுப்படி தீ எரித்து காய்ச்சி வடித்து எடுத்துக் கொள்வது.

நசியம்

இலைச்சாறு, பூச்சாறு, தைலம் இவற்றை மூக்கில் பிழிவதும், சிலவகை மருந்துகளைத் துணியில் முடிந்து முலைப்பால், இலைச்சாறுகளில் ஊறவைத்து மூக்கில் விடுவதும் நசியம் எனப்படும்.

நாடி

நாடி 10

1. இடகலை: வலக்காற் பெருவிரலினின்று கததரிக்கோல் போல இடமூக்கைப் பற்றி நிற்பது.

2. பிங்கலை: இடக்காற் பெருவிரலினின்று கத்திரிக்கோல் போல மாறலாக வலமூக்கைப் பற்றி நிற்பது.

3. சுழுமுனை: மூலாதாரத்தைத் தொடர்ந்து எல்லா நாடிக்கும் ஆதாரமாய் நடு நாடியாய்ச் சிரசளவு முட்டி நிற்பது.

4. சிருவை: உள்நாக்கில் நின்று சோறு தண்ணீர் இவைகளை விழுங்கப் பண்ணுவது.

5. புருடன்: வலக்கண்ணளவாய் நிற்பது

6. காந்தாரி: இடக்கண்ணளவாய் நிற்பது.

7. அத்தி: வலக்காதளவாய் நிற்பது

8. கலம்புடை: இடக்காதளவாய் நிற்பது

9. சங்கினி: குறியினளவாய் நிற்பது

10. குரு: அபானத்தளவாய் நிற்பது

பற்பம்

பற்பம் என்பதனை நீறு என்றும் கூறுவர். உலோகங்கள், பாடாணங்கள், உபரசங்கள், சில மூலிகைச் சாறுகள், உப்புப் புகைநீர், செயநீர் இவற்றில் ஏதேனும் ஒன்றை அரைத்தோ, அரைத்துப்

புடமிட்டோ, எரித்தோ அல்லது ஊதியோ வெண்மையாகும்படி செய்து எடுத்துக் கொள்வது.

பிட்டவித்தல்: ஒரு பாண்டத்தில் நீர் அல்லது நீர்ப்பொருளை விட்டு அதன் வாய்க்கு சீலையால் ஏடுகட்டி, அச்சீலையில் நடுவில் அவிக்கப்பட வேண்டிய பொருளை வைத்து மற்றொரு பாண்டத்தால் மூடி உள்ளிருந்து எழுகின்ற நீராவியானது வெளியே செல்லாமல் ஈரத்துணியால் விளிம்பைச் சுற்றி சிறுதீயால் பாண்டத்திலுள்ள நீர்ப்பங்கு, முக்காற்பங்கு வற்றும்வரை எரிக்க வேண்டும். அஃது ஆறியவுடன் அவித்து, சரக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இதுவே பிட்டவித்தல் எனப்படும்.

புடம்

வரட்டியின் உதவியால் எரிக்கப்படும் எரிப்புத் திட்டம் புடமாகும். இஃது ஏழு வகைப்படும்.

1. காடைப்புடம் - எரு ஒன்று
2. கவுதாரிப்புடம் - எரு மூன்று
3. குக்குடப்புடம் - எரு பத்து (சேவற்புடம்)
4. வராகப் புடம் - எரு ஐம்பது
5. கெஜ புடம் - எரு ஆயிரம்
6. மணல், மறைவு புடம் - எரு தொண்ணூறு
7. பூமிப்புடம் - ஆட்டு எரு அகல நீளம் நான்கு விரற்கடை

தானிய புடம் - இது ஏழு வகையில் அடங்காத புடம். எனினும் உபயோகத்திலிருக்கும் புடம். முடித்த மருந்தை நெல்லுக்குள் குறிப்பிட்ட நாளளவு புதைத்து வைத்திருந்து எடுப்பது தானியப் புடமாகும்.

புறமருந்துகள்

1. கட்டுதல், 2. பற்று, 3. ஒற்றடம், 4. பூச்சு, 5. வேது, 6. பொட்டணம், 7. தொக்கணம், 8. புகை, 9. மை, 10. பொடிதிமிர்த்தல், 11. கலிக்கம், 12. நசியம், 13. ஊதல், 14. நாசிகாபரணம், 15. களிம்பு, 16. சீலை, 17. நீர், 18. வர்த்தி, 19. அட்டிகை, 20. சலாகை, 21. பசை, 22. களி, 23. பொடி, 24. முறிச்சல், 25. கீறல், 26. காரம், 27. அட்டை விடல், 28. அறுவை, 29. கொம்பு கட்டல், 30. உறிஞ்சல், 31. குருதி வாங்கல், 32. பீச்சு.

மாத்திரை

சில சரக்குகளைச் சேர்த்து சில மூலிகைச் சாறுகளிலாவது, குடிநீர்களிலாவது அரைத்து குறிப்பிட்ட அளவுகளாய் உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்து வைத்துக் கொள்வதே மாத்திரையாகும்.

**மூசை**

மூசை - குகை. இது இரண்டு வகைப்படும்.
1. மண் மூசை, 2. வச்சிரக் குகை.
மண்மூசை என்பது மணல், கரி, சாம்பல், களிமண், தேங்காய் நார் இவைகளைச் சேர்த்துச் செய்யப்படுவது.

வச்சிரக்குகை என்பது, களிமண், அயக்கிட்டம், சணல், நார், உமிக்கரி, அடுப்புக்கரி, சுண்ணாம்பு முதலியன சேர்த்துச் செய்யப்படுவது.

**மெழுகு**

எந்த மெழுகு செய்யப்பட வேண்டுமோ அதில் சேரும் மருந்துச் ச்ரக்குகளைத் தூய்மை செய்து அரைத்தோ அல்லது சுருக்குக் கொடுத்தோ எடுத்துவைத்து மெழுகு பதத்தில் எடுப்பது.

**வரட்டி**

பசுஞ்சாணத்தில் செய்யப்படுவது. 30 செ.மீ. விட்டம் அகலமும், 1.25 செ.மீ கனமும் உள்ளதாகச் செய்து காயவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

**வாலுகாயந்திரம்**

**வாலுகம் - மணல்.**
**தேவையான பொருட்கள்:** மட்கடம், மணல், குப்பி, சீலைமண், அடைப்பான், அடுப்பு, தீ.

எரிக்க வேண்டிய சரக்கை ஏழுசீலை செய்த குப்பியிலிட்டு, குப்பிவாயை மருந்திற்குத் தக்கவாறு மாக்கல்லால் அடைத்துச் சீலை செய்துலர்த்தியும், அடைக்காமலே ஒரு சட்டியில் இரண்டு மூன்று விரற்கடை மணற் கொட்டி, அதன்மீது மருந்திட்ட குப்பியை வைத்து மூடியும், அன்றி மூடாமலே கழுத்தளவு மணல் நிரப்பியும் அடுப்பேற்றிக் கூறப்பட்ட கால அளவு, முத்தியால் எரித்து ஆறவிட்டு எடுக்க வேண்டும்.

சித்த மருந்து செய்முறைக் குழுவினரால் ஒப்புக்கொள்ளப்பட்ட பழைய நூல்களிலுள்ள அளவைகட்குச் சமமான மெட்ரிக் அளவைகள்

## நிறைகள் - அளவைகள்

## நிறுத்தலளவை

| | | |
|---|---|---|
| 1 உளுந்து | 1 கிரெயின் (தோராயமாக) | 65 மி.கிராம் |
| 4 யவம் | 1 குன்றி | 130 மி.கிராம் |
| | 2 கிரெயின் (தோராயமாக) | |
| 1 மஞ்சாடி | 4 கிரெயின் (தோராயமாக) | 260 மி.கிராம் |
| 6 குன்றி | 1 மாஷம் | 780 கிராம் |
| 3.75 குன்றி | 1 பணவெடை | 488 கிராம் |
| 32 குன்றி | 1 வராகனெடை | 4.16 கிராம் |
| | (1 டிராம்) | |
| 40 குன்றி | 1 கழஞ்சு | 5.12 கிராம் |
| 10 வராகனெடை | 1 பலம் (பெரிய) | 41.6 கிராம் |
| 0.25 பலம் | 1 கஃசுஅல்லது 1 கைசா | 10.4 கிராம் |
| 1 தோலா | 180 கிரெயின் | 11.7 கிராம் |
| 3 தோலா | 1 பலம் (சின்ன) | 35 கிராம் |
| 8 பலம் | 1 சேர் | 280 கிராம் |
| 40 பலம் | 1 வீசை | 1.4 கி.கிராம் |
| | (3 பவுண்டு 2 அவுன்ஸ்) | |
| 50 பலம் | 1 தூக்கு | 1.750 கி.கிராம் |
| 2 தூக்கு | 1துலாம் | 3.50 கி.கிராம் |

### அ. முகத்தலளவை

| | | |
|---|---|---|
| 360 நெல் | 1 சோடு | 33.6 மி.லிட் |
| 5 சோடு | 1 ஆழாக்கு | 168 மி.லிட் |
| 2 ஆழாக்கு | 1 உழக்கு | 336 மி.லிட் |
| 2 உழக்கு | 1 உரி | 672 மி.லிட் |
| 2 உரி | 1 நாழி (படி) | 1.34 லிட் |
| 4 நாழி | 1 குறுணி (மரக்கால்) | 5.37 லிட் |
| 2 குறுணி | 1 பதக்கு | 10.7 லிட் |
| 3 குறுணி | 1 முக்குறுணி | 16.1 லிட் |
| 2 பதக்கு | 1 தூணி | 21.5 லிட் |
| 3 தூணி | 1 கலம் | 64.5 லிட் |

### ஆ

| | | |
|---|---|---|
| 1 தேக்கரண்டி | 1 டிராம் (சுமார்) | 4 மி.லிட் |
| 1 குப்பி | 24 அவுன்ஸ் (சுமார்) | 700 மி.லிட் |
| 1 தீர்த்தக்கரண்டி | | 1.33 மி.லிட் |
| 1 நெய்க்கரண்டி | | 4 மி.லிட் |
| 1 உச்சிக்கரண்டி | | 16 மி.லிட் |
| 1 பாலாடை | | 30 மி.லிட் |
| 1 எண்ணெய்க்கரண்டி | | 240 மி.லிட் |

காலஅளவை

| | |
|---|---|
| 1 நொடி | 1 செகண்டு |
| 60 நொடி | 1 நிமிடம் |
| 1 நாழிகை | 24 நிமிடம் |
| 2.5 நாழிகை | 60 நிமிடம் (1 மணி) |
| 1 முகூர்த்தம் | 90 நிமிடம் (1.30 மணி) |
| 1 ஜாமம் | 3 மணி |
| 8 ஜாமம் | 1 நாள் |
| 1 பக்ஷம் | 15 நாட்கள் |
| 1 மாதம் | 30 நாட்கள் |
| 1 மண்டலம் | 45 நாட்கள் |
| 1 காலம் (ருது) | 2 மாதங்கள் |
| 1 அயனம் | 6 மாதம் |
| 2 அயனம் | 1 வருடம் |

நீட்டலளவை

| | | |
|---|---|---|
| 1 விரல்கடை | $^{3}/_{4}$ அங்குலம் | 1.95 செ.மீ. |
| 1 சாண் | 9 அங்குலம் | 22.86 செ.மீ. |
| 1 முழம் | 18 அங்குலம் | 45.72 செ.மீ. |
| 1 பாகம் | 72 அங்குலம் | 182.88 செ.மீ. |

குறிப்பு

மண்டலம் என்பது 40, 45, 48 ஆகிய நாட்கள் என உலக வழக்கில் உள்ளது. எனினும் பொதுவாக மண்டலம் என்பதை 45 நாட்கள் என எடுத்துக் கொள்ள வேண்டும்.

மருந்து அளவு அட்டவணை

வயதுக்குத் தக்கபடி மருந்தின் அளவை கிரமப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில், அளவில் அதிகப்பட்டால், மருந்து விடமாதலோடு உடலையும் கெடுக்கும்.

வாலிபருக்கு ஒருவேளைக்கு கொடுக்கின்ற மருந்தின் அளவு 1 வராகனெடை அல்லது 60 உளுந்து நிறையாகில்,

1 ஆண்டுக்குட்பட்டால், 12 பங்கில் 1 பங்கு அல்லது 5 உளுந்து நிறை

2 ஆண்டுக்குட்பட்டால், $^{1}/_{8}$ பங்கு அல்லது 8 உளுந்தெடை

3 ஆண்டுக்குட்பட்டால், 6 பங்கில் 1 பங்கு அல்லது 10 உளுந்தெடை

4 ஆண்டுக்குட்பட்டால், $^{1}/_{4}$ பங்கு அல்லது 15 உளுந்தெடை

7 ஆண்டுக்குட்பட்டால், 3 பங்கில் 1 பங்கு அல்லது 20 உளுந்தெடை

14 ஆண்டுக்குட்பட்டால், $^{1}/_{2}$ பங்கு அல்லது 30 உளுந்தெடை

20 ஆண்டுக்குட்பட்டால், 3 பங்கில் 2 பங்கு அல்லது 40 உளுந்தெடை

21 முதல் 60 வயது வரையில் முழுப்பிரமாணம் அல்லது 60 உளுந்தெடை முறையே கொடுக்க வேண்டும்.

## துணைநூற் பட்டியல்


| | |
|---|---|
| 1. அகத்தியர் வைத்திய காவியம் | வே.இரா. மாதவன், தமிழ்ப் பல்கலைக் கழகம், 1994. தஞ்சாவூர். |
| 2. அறநூல் | சுத்தானந்த பாரதியார், அடையாறு, சென்னை. |
| 3. கடைசிப் பக்கம் | கண்ணதாசன், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை. |
| 4. கம்பராமாயணம் | கம்பன் கழகம், சென்னை. |
| கலைக் களஞ்சியம் | தமிழ் வளர்ச்சிக் கழகம், தொகுதி-4. சென்னை. |
| குணபாடம் | தாது, தீது வகுப்பு (இரண்டாம்-மூன்றாம் பகுதிகள்) டாக்டர் ஆர். தியாகராஜன், L.I.M., சித்த மருத்துவ விரிவுரையாளர், சென்னை. |
| குணவாகடம் | முனைவர் வே.நெடுஞ்செழியன், பதிப்பாசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1995. சென்னை. |
| சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் | உ.வே.சாமிநாத ஐயர், உ.வே.சா. நூல்நிலைய வெளியீடு, சென்னை |
| சித்த மருத்துவ அமுது | டாக்டர் எஸ். சிதம்பர தாணுப்பிள்ளை, சித்த மருத்துவ நூல் ஆராய்ச்சி நிலையம், 1982, சென்னை. |
| சித்த மருத்துவம் | டாக்டர் தே. ஆண்டியப்பன், இரா. குமாரசுவாமி, மாதவி பூதிப்பகம், முதற் பதிப்பு: 1979, மதுரை. |
| சித்த மருத்துவாங்கச் சுருக்கம் | டாக்டர் க.சு.உத்தமராயன், 1983, தமிழ்நாடு அரசு. |
| சிலப்பதிகார மூலமும் அடியார்க்கு நல்லார் உரையும் | டாக்டர் உ.வே.சுவாமிநாதையர், பதிப்பாசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், நிழற்படப் பதிப்பு, 1985, தஞ்சாவூர். |

| | |
|---|---|
| சூதமுனி சூத்திரம் 110 | டாக்டர் ந. சேதுரகுநாதன், அருள்மிகு பழனி தண்டபாணி சுவாமி திருக்கோயில், சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழு, பழனி. |
| திருமந்திரம் | திருமூலம், கழக வெளியீடு, மறு அச்சு: 1969, சென்னை. |
| தேரையர் அந்தாதி | மா. புனிதா, (பதிப்பாசிரியர்) உலகத் தமிழாராயச்சி நிறுவனம், 1995, சென்னை. |
| நூறாண்டு வாழ்வதெப்படி | மறைமலையடிகள், கழக வெளியீடு, சென்னை. |
| பண்டைய மருத்துவமும் பயன்தரு மூலிகைகளும் | த. கோவேந்தம் (பதிப்பாசிரியர்) திருமகள் நிலையம், 1989, சென்னை. |
| பாரதத்தின் சித்த மருந்துகள் செய்முறைக் குறிப்பு நூல் | இந்திய அரசு, மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறை அமைச்சகம், பகுதி-1, 1984. |
| பாரதியார் கவிதைகள் | பாரதியார், பூம்புகார் பதிப்பகம். ஏழாம் பதிப்பு, மார்ச் 1990, சென்னை. |
| பொருந்தும் உணவும் பொருந்தா உணவும் | மறைமலையடிகள், கழக வெளியீடு, சென்னை. |
| மெய்யறிவு | வ.உ. சிதம்பரனார், பாரி நிலையம், சென்னை. |
| Tamil English Dictionary of Medicine, Chemistry, Botony and Allied Science, Vol.3 | T.V.Sambasivam Pillai, The Research Inscriptions of Sidha's Science, Madras, 1931. |
| ,, | T.V. Sambasivam Pillai, G.D. Naidu Charities, Coimbatore, 1979. |
| The Week | Addl, Jan:29-1995 |

'மூலிகைச் சக்கரவர்த்தி' **Dr. A.R. கண்ணப்பர்**
அவர்களின் 75-ஆவது பிறந்த நாள் நினைவாக
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெள்ளிவிழா
வெளியீடாக வெளியிடப்படும்
**'சித்த மருத்துவ மணிகள்'**
என்னும் இந்நூலினை அச்சிட்டு கொடுப்பதில்
பெருமகிழ்வு கொள்கின்றோம்.

மூலிகைமணி
Dr. க. வேங்கடேசன்
க.வே.அபிராமி

நாள்: 9-9-96
சென்னை-17.